சோரட், உனது பெருகும் வெள்ளம்



ஜவேர்சந்த் மேகாணி

சோரட், உனது பெருகும் வெள்ளம்!

(குஜராத்தி நாவல்)

ஜவேர்சந்த் மேகாணீ

தமிழாக்கம் :

எஸ். கிருஷ்ணமூர்த்தி

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புதுடில்லி

Scanned by Muthu_Vijayan

1978 (1899)

© ஜவேர்சந்த் மேகாணீ, 1973
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1976

விலை ரூ. 13-00

Original Title: SOURAT TARA VAHETA PANI (Gujarati)
Tamil Translation: SOURAT, UNADU PERUGUM VELLAM

விநியோகிப்பாளர்கள் :
பாரி நிலையம்
1/59, பிராட்வே, சென்னை-600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA
A-5, GREEN PARK, NEW DELHI-110016 AND PRINTED AT
BHAGAT PRINTERS, 55, STATION ROAD, ALANDUR, MADRAS-600016

முன்னுரை

1921-ஆம் ஆண்டு, பாரதம் எங்கும் ஒத்துழையாமைப் பிரசாரம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. மாணவ மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டு விட்டுத் தேச சேவையில் ஈடுபடத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். காந்தியடிகளின் அழைப்பின் பேரில் பாரத நாட்டு இளைஞர்கள் சிறைகளை மாளிகைகளாகக் கருதி அவற்றில் நுழையத் துடித்துக் கொண்டிருந்தார்கள். நாட்டின் சமூக வாழ்க்கையில் ஒரு புதிய புரட்சி தோன்றியிருந்தது. மற்றப் புரட்சிகளைப் போல் பலாத்காரச் செயலைத் தூண்டும் புரட்சி அல்ல அது; அது ஓர் அஹிம்சைப் புரட்சி. மக்களிடையே ஒரு மகத்தான உணர்ச்சி விழித்துக் கொண்டிருந்தது.

ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற ஒவ்வோர் இந்தியனும் துடித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் இருபத்தைந்து வயது இளைஞர் ஒருவர் கல்கத்தாவில் ஜீவன்லால் அண்டு கம்பெனியின் மானேஜர் பதவியில் அந்தக் காலத்துக் கேற்ற நல்ல ஊதியம் பெற்றுக் கொண்டிருந்தார். ஆனால் தேசத்தின் அழைப்பு அவருடைய ஆத்மாவை விழிப்புறச் செய்தது. அவர் தம் வேலையைத் துறந்து விட்டு, தம் நாடான சௌராஷ்டிரத்துக்குச் சென்று, தேசசேவைக்குத் தம்மை அர்ப்பித்துக் கொண்டார்.

ஸ்ரீ மேகாணீ சர்வகலாசாலைப் பட்டதாரி; கம்பெனி முதலாளி ஸ்ரீ ஜீவன்லாலின் அன்புக்கும் முழு நம்பிக்கைக்கும் பாத்திர மானவர்; அவருடன் இங்கிலாந்துக்கும் சென்று விட்டு வந்தார். அவர் கம்பெனி மானேஜராகத் தொடர்ந்து பதவியில் இருந்திருந் தால் பொருளாதார நோக்கில் அவருக்குப் பல நன்மைகள் கிட்டியிருக்கும். ஆனால் அவருடைய உணர்ச்சி வசப்பட்ட ஆத்மா நாட்டின் அழைப்பை எப்படிப் புறக்கணிக்கும்? அவர் தம் எதிர்கால லௌகிக லாபங்களைத் துறந்து விட்டுத் தம் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட்டார்.

சௌராஷ்டிரம் திரும்பியபோது, தாம் அங்கே என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி ஒருவிதத் திட்டமும் அவரிடம் இல்லை. ஆயினும் சூழ்நிலை அவருக்குப் பிடித்தமான ஒரு வேலையை அவருக்குத் தயாராக வைத்திருந்தது. அப்போது தான் 'சௌராஷ்டிரா' என்ற வாரப் பத்திரிகை துவங்கியிருந்தது. அதன் ஆசிரியர் குழுவில் அவருக்குப் பிடித்தமான ஒரு வேலை கிடைத்தது. அப்புறம் என்ன? அவருள் மறைந்திருந்த இலக்கியத் திறன் கொஞ்சங் கொஞ்சமாக வெளிப்படத் தொடங்கியது.

1631-இல் காந்தியடிகள் வட்டமேஜை மகா நாட்டுக்காக லண்டன் செல்லும் சமயத்தில் மேகாணீ 'சேல்லோ கடோரோ ஜேர்ஞே பீ ஜஜோ பாபூ!' என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதிக் காந்திக்கு அனுப்பினுர். அந்தத் தருணத்தில் காந்தியடிகளின் உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த உணர்ச்சிக் கொந்தளிப்பையும் அவர் பருக நேர்ந்திருந்த விஷத்தையும் அந்தக் கவிதை அப்படியே பிரதிபலித்ததாக மகாதேவ் தேசாய் கூறினுர். இதன் பிறகு மேகாணீ காந்தி யுகத்தின் தேசியக் கவி என அழைக்கப் பட்டார்.

ஆனுல் அவர் வெறுங்கவி மட்டும் அல்ல. அவர் பயம் அறியாத பத்திரிகைக்காரர், திறன் வாய்ந்த நாவலாசிரியர், கலை நயம் வாய்ந்த கதைகளின் படைப்பாளி, நாடோடி இலக்கியத்தைத் தொடுத்துப் பிரசாரம் செய்தவர், இனிய பாடகர், சிறந்த விமரிசகர்; எல்லாவற்றையும் விட மிக முக்கியமாக-மனித தத்துவத்தின் உபாசகர்.

காந்தியின் காலத்துக்கு முந்தைய குஜராத்தி இலக்கியத்தின் மொழியும் நடையும் பண்டிதர்களால் மட்டுமே அநுபவிக்கக் கூடியதாக இருந்தது. ஆனுல் காந்தியோ சாமானிய மனிதனின் மொழியில் எழுதத் தொடங்கினுர். அவருடைய எழுத்தின் அழுத்தமான பாதிப்பால் குஜராத்தி இலக்கியத்திலும் மொழியிலும் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாகக் குஜராத்தி இலக்கியத்திலும் மொழியிலும் காந்தியுகம் பிறந்தது. காந்தீயத்தின் பாதிப்பு, குஜராத்தி இலக்கியத்தை வளப்படுத்திய அநேக கவிகள், கதாசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள் விமரிசகர்கள் ஆகியோரைத் தோற்றுவித்தது. பிரசித்தி பெற்ற குஜராத்திக் கவிகளான உமா சங்கர் ஜோஷியும், சுந்தரமும் காந்தி யுகத்தைச் சேர்ந்தவர்கள். இதே யுகத்தைச் சேர்ந்த மேகாணீயும் தம் படைப்புக்களின் மூலம் தம் வட்டாரத்தின்

விசேஷத தன்மைகள் குஜராத்தி இலக்கியத்திலும் மொழியிலும் பிரதிபலிக்குமாறு செய்தார்.

இந்த யுகத்தில் படைக்கப்பட்ட இலக்கியம் மக்களின் வாழ்க்கையோடு இணைந்ததாக, மக்களின் உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது. அது மத்தியதர வர்க்கத்தின்—குறிப்பாகக் கீழ் மத்தியதர வர்க்கத்தின்—ஆசை, அபிலாஷைகள், வாழ்க்கைப் போராட்டங்கள், வேதனைகள், துன்பங்கள், அன்பு, வீரம், இழிவு ஆகியவற்றுக்கு உருவம் கொடுப்பதாக அமைந்தது.

மேகாணீ 1897-ஆம் ஆண்டு, சௌராஷ்டிரத்தில் சோடீலா பள்ளத்தாக்கில் தாண்ட்டா போலீஸ் தாணுவில் பிறந்தார். இந்தத் தாணு நாகரிகக் குடியிருப்புகளுக்கு வெகு தொலைவில் காட்டுப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் இருந்தது. அவருடைய தந்தை ஒரு தாணுவிலிருந்து மற்றொரு தாணுவுக்கு மாற்றலாகிப் போவதுண்டு. அந்தக் காலத்தில் சௌராஷ்டிரத்தில் கொள்ளைக்காரர்களின் அட்டகாசம் பலமாக இருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களை ஒழிக்க முயன்றது. அவர்களுக்கும் போலீசுக்குமிடையே பல மோதல்கள் நிகழ்ந்தன. இத்தகைய மோதல்களில் மேகாணீயும் பங்கு கொள்வதுண்டு.

அந்தக் காலத்தில் சௌராஷ்டிரக் கிராமத்தில் ஆங்கிலக் கல்வியும் நாகரிகமும் அவ்வளவாகப் பரவவில்லை. கொள்ளைக்காரர்கள் வீரர்களாக இருந்தார்கள்; அத்துடன் அவர்களிடம் ஒரு வித ஒழுக்கம் காணப்பட்டது. சௌராஷ்டிரம் நதிகளும், கால்வாய்களும், மலைகளும் நிறைந்த பிரதேசம். அநேக வீரர்கள், சாதுக்கள், பதிவிரதைகள் ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு பாரம்பரியம் காரணமாக வாழ்க்கையில் பல்வேறு கஷ்டங்களுக்கிடையிலும் ஓர் உயர்ந்த பண்பும் நயமும் அங்கே காணப்பட்டன. இவை பாரம்பரியச் சொத்தாக மேகாணீக்குக் கிடைத்தன. சௌராஷ்டிரத்தின் நாடோடிப் பாடல்களும், சாதுக்களின் பஜனைப் பாடல்களும், சாரணர்களின் பாடல்களும் அவருடைய காதுகளில் விழுந்து பாதிப்புகளை ஏற்படுத்தின. ஆனால் இந்தப் பாதிப்பு இலக்கிய வடிவம் பெறும் காலம் இன்னும் வெகு தொலைவில் இருந்தது. இது பிற்காலத்தில் எப்படி வெளிப்படப் போகிறது என்று அப்போது மேகாணீக்கே தெரியாது. ஒரு சராசரி, பட்டதாரி இளைஞனைப் போல் அவரும் ஜீவனோபாயத்துக்காக வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டார். சிறிது காலம் ஆசிரியராகப் பணி புரிந்தார்; பிறகு கல்கத்தாவில் நல்ல வேலை கிடைத்தது.

ஆனல் விதி அவருக்காக வேமுெரு வித எதிர்காலத்தையல்லவா திட்டமிட்டிருந்தது! கல்கத்தாவிலிருந்து சௌராஷ்டிரத்துக்குத் திரும்பிய பிறகு அவரிடம் முன்பே ஏற்பட்டிருந்த பண்பாட்டுப் பாதிப்புக்கள் விழிப்படையத் தொடங்கின. குழந்தைப் பருவத்திலிருந்தே அவருடைய உள்ளம் இரக்கமும் அநுதாபமும் நிறைந்ததாக இருந்தது. அவர் ஏழைக் குடியானவர்களிடமும் அவர்களுடைய குழந்தைகளிடமும் மிகுந்த அநுதாபமும் பரிவும் காட்டினர். அவர் கல்வியை முன்னிட்டுப் பட்டணத்தில் தங்க நேர்ந்தது. விடுமுறை நாட்களில் ஊருக்கு வருவார். அப்போ தெல்லாம் அவருடைய பெற்றோர்கள் அவருக்காக விதவிதமான தின்பண்டங்கள் தயாரித்துக் கொடுப்பார்கள்.

ஒரு தடவை மேகாணீ விடுமுறை முடிந்து பட்டணம் திரும்பு வதற்கு முன் அவருடைய தந்தை தம் நண்பர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். அதற்குக் கீர் தயார் செய்வதற்காகப் பால் வர வழைக்கப்பட்டது. மேகாணீயின் தந்தை பால் கொண்டு வந்த சிப்பாய்களை, ''எல்லாப் பாலையும் கொண்டு வந்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார். அவர்கள், ''பால் குடிக்கற குழந்தைகளுக்காகக் கூட ஒரு சொட்டுப் பால் விட்டு வைக்கவில்லை!'' என்று பதில் சொன்னர்கள். இந்தப் பதில் மேகாணீயின் காதில் விழுந்தது. விருந்தின்போது விருந்தினர்கள் கோப்பை கோப்பையாகக் கீர் வாங்கிச் சாப்பிட்டார்கள். மேகாணீயோ அதைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

காந்தியுகம் ஆரம்பிப்பதற்கு முன்னுலிருந்த நாவலாசிரியர்களில் எல்லாராலும் மிகவும் விரும்பப்பட்ட நாவலாசிரியர் கன்ஹையாலால் முன்ஷி அவர்கள். அவருடைய சரித்திர நாவல் களுக்கு ஒரு மோகன சக்தி இருந்தது. அவர் கையாண்ட மொழி யும் கவர்ச்சிகரமானதாயும், ஆற்றெழுக்குப் போன்ற நடையுள்ள தாகவும் இருந்தது. ஆனல் அந்த நாவல்கள் அரசர்கள், அரசியல் ஆகியவை பற்றிய கற்பனைகளும் பெருமைகளும் நிறைந்தன வாகவே இருந்தன. அவருடைய சமூக நாவல்கள் கூடச் சமூகத்தின் மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கையை யும் பிரச்னைகளையுமே சித்திரித்தன. வேத காலப் பின்னணியில் அவர் இயற்றிய நாடகங்கள் கூட இத்தகைய போராட்டங்களையும் பிரச்னைகளையும் கருவாகக் கொண்டிருந்தன. தூமகேது, சுனிலால் வர்த்தமான் ஷா, குணவந்த ராம் ஆசார்யா ஆகியோருடைய நாவல்களும் இவ்வகையைச் சேர்ந்தவையே. ரமண்லால் வசந்த ராய் தேசாயும் சமூக நாவல்கள் எழுதினர். ஆனல் அவற்றின்

பாத்திரங்கள் கூட நடுத்தர வர்க்கத்தின் மேல் மட்டத்தைச் சார்ந்தவையாகவே இருந்தன.

இந்த நிலையில் முற்றும் புதிய மாற்றத்தைக் கொண்டு வந்தது காந்தி யுகம். காந்தியடிகள் தரித்திர நாராயணனின் உபாசகர். இந்தச் சூழ்நிலையிலிருந்து உந்துதல் பெற்ற மேகாணீ கீழ் நடுத்தர வர்க்கத்தினரையும் ஏழைகளையும் தம் நூல்களில் நடமாட விட்டார். ஏழைகளிடமும், தாழ்ந்த சாதியினரிடமும் உள்ளுறைந்து கிடந்த மனிதத் தன்மையையும், தியாகம், வீரம் போன்ற உணர்ச்சிகளையும் தம் நூல்களின் மூலம் எடுத்துக் காட்டத் தீர்மானித்த மேகாணீ தம் வாழ்நாள் முழுவதையும் இந்தப் பணிக்கே அர்ப்பித்தார்.

அவர் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை சொற்பமில்லை. நாடோடிக் கதைகள் பற்றி 16 நூல்கள், நாடோடிப் பாடல்கள் பற்றி 10, வெளியூர் வாசம் பற்றி 2, விமரிசனம் 4, சரித்திரம் 6, வாழ்க்கை வரலாறு 8, கதைத் தொகுதிகள் 9, நாடகங்கள் 10, சுயசரிதை 3, நாவல்கள் 14, கட்டுரைத் தொகுதிகள் 5—இவ்வாறு ஏராளமான நூல்கள் இயற்றிக் குஜராத்தி இலக்கியத்தின் பல துறைகளையும் வளப்படுத்தினுர் மேகாணீ. இதைத் தவிரப் பத்திரிகாசிரியர் என்ற முறையிலும் ஏராளமாக எழுதியிருக்கிறுர் அவர்.

மேகாணீயின் சேவைகளுள் மிகச் சிறந்தது நாடோடி இலக்கியத்தைச் சேகரித்துத் தொகுத்து அதைப் பிரசாரம் செய்தது தான். இந்தப் பணி இவ்வளவு ஈடுபாட்டுடன் வேறு எந்த இந்திய மொழியிலும் செய்யப்படவில்லை. இந்தி முதலிய மற்ற இந்திய மொழிகளிலும் நாடோடி இலக்கியத் தொகுப்புக்கள் வெளிவந்திருப்பது உண்மைதான். ஆனுல் மேகாணீ நாடோடி இயக்கியத்தை வகைப்படுத்தி அதில் குடிகொண்டிருந்த மனித உணர்வுகளை வெளிப்படுத்தி அவற்றுக்கு உயர்ந்த இலக்கியத்தில் இடங் கொடுத்த மாதிரி வேறு யாரும் எந்த மொழியிலும் செய்யவில்லை.

நாடோடி இலக்கியம் மக்கள் வாழ்க்கையின் உண்மையான பிரதிபலிப்பாகும். சாதாரண மனிதனிடமும் அன்பு, வீரம், தியாகம், சேவை போன்ற உயர்ந்த உணர்ச்சிகள் இருப்பதையும், அவை உருப்பெற்று வெளிவரும் முறையையும் நாம் அவருடைய நாடோடி இலக்கியத் தொகுப்புகளிலிருந்து அறிகிறோம். குஜராத்தில் கேடா ஜில்லாவைச் சேர்ந்த தாராலா, டாகர்டா ஜாதியினர் தாழ்ந்த ஜாதியினராகவும், காட்டுமிராண்டிகளாக

வும் கருதப்பட்டனர். சர்க்கார் அந்தச் சாதிகளையே குற்ற வாளிகள் ஜாபிதாவில் சேர்த்திருந்தது. அந்தச் சாதியினர் தினந் தோறும் போலீஸ் ஸ்டேஷனில் ஆஜராகும்படி கட்டாயப் படுத்தப்பட்டார்கள். இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்களிடையே கூடச் சமூக சீர்திருத்தவாதியான ரவிசங்கர் மகராஜ் அவர் களுடைய முயற்சியால் சிறந்த பலன் ஏற்பட்டு அந்த மக்களின் உயர்ந்த பண்புகள் வெளிப்பட்டன. இதை மேகாணீ தம் 'மானவ தானா தீயா' என்ற நூலில் சித்திரித்திருக்கிறார். இந்த நூலுக்குக் குஜராத்தி சாகித்ய பரிஷத்தின் சார்பில் மஹிடாப் பரிசு அளிக்கப் பட்டது.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் மேகாணீ தௌராஷ்டிரத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யக் கிளம்பி விடுவார். அங்கங்கே கிடைக்கும் நாடோடிக் கதைகள், பாடல்கள் இவற்றைச் சேகரிப்பார். அவருக்குக் கிடைத்ததெல்லாமே பயனுள்ளதாக அமைந்து விடவில்லை. அவற்றில் தரமானவற்றை அவர் தம் முருகிய உணர்வாலும் இலக்கியத் திறனாலும் பொறுக்கி யெடுத்து அவற்றைத் தம் படைப்புக்களில் பயன்படுத்தினார்.

காந்தீய உணர்வின் விளைவாக இலக்கிய ஈடுபாடு கொண்ட பல இளைஞர்கள் குஜராத் வித்தியாபீடத்தில் உருவானார்கள். அவர்கள் மக்கள் இலக்கியத்தைப் படைக்கத் தொடங்கினார்கள். சுனீலால் மடியா, பன்னாலால் படேல் முதலிய பல குஜராத்தி எழுத்தாளர்களின் படைப்புக்கள் கிராமச் சூழ்நிலையையும் கிராமங்களில் வாழும் ஏழை மக்களின் வாழ்வையும் சித்திரித்தன. மேகாணீ தம் வழியில் சௌராஷ்டிரப் பிரதேசத்தின் சூழ் நிலையையும் சௌராஷ்டிர மக்களின் உணர்ச்சிகளையும் உயிரோ வியங்களாகத் தம் படைப்புக்களில் தீட்டினார். அவர் சௌராஷ் டிரத்தின் கொள்ளைக்காரர்களைப் பற்றிக் கதைகள் எழுதி அவர்களிடங்கூட மக்கள் அநுதாபம் கொள்ளும்படி செய்தார். கொள்ளைக்காரர்கள் கலகம் செய்தார்கள், கொள்ளையடித் தார்கள், கிராமங்களைச் சூறையாடினார்கள்; ஆயினும் அவர்கள் முக்கியமாக எதிர்த்தது ஆளும் வர்க்கத்தைத்தான். அவர்கள் ஏழைகளுக்கு உதவினார்கள். அவர்களிடம் சில உயர்ந்த பண்புகள் இருந்தன. அவர்கள் ஒருபோதும் பெண்களை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை, அவர்களுடைய இந்தப் பண்புகள் நாடோடி இலக் கியத்தில் விவரிக்கப்பட்டிருந்தன. இந்தச் செய்திகளை மேகாணீ தம் படைப்புக்கள் மூலம் பரப்பினார்.

சௌராஷ்டரம் கடல் சூழ்ந்த பிரதேசம். ஆகையால் செராஷ்டிரத்து மாலுமிகள் கடலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். அவர்கள் பல நாடுகள் சுற்றியவர்கள், மேகாணீ அவர்களைப்பற்றி எழுதினுர், உழவர்களைப்பற்றி எழுதினுர், கால்நடை வளர்த்து ஜீவனம் செய்யும் மக்களைப் பற்றியும் எழுதினுர். இவ்வாறு சமூகத்தின் எல்லாப் பகுதிகளும் அவருடைய படைப்புக்களில் இடம் பெற்றன.

அவர் இனிய பாடகர். அவருக்கு நல்ல சாரீரம் வாய்த்திருந்தது. தம் கம்பீரமான குரலில் அவர் தன் சொந்தப் பாடல்களைப் பாடினுல் கேட்பவர்கள் மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் மெய்ம்மறந்து கேட்பதுண்டு.

அவர் இலக்கியப் படைப்பாளி. தம் உள்ளுணர்வால் தூண்டப் [illegible] அவர் எழுதினுர். எழுதுவது அவரது ரத்தத்தில் ஊறிய வழக்கமாகி விட்டது. ஆயினும் சில சமயங்களில், மக்கள் படும் துன்பங்களைக் காணும்போது அவர் குற்ற உணர்வினுல் பீடிக்கப் பட்டார். தம்மையே நிந்தித்துக் கொள்ளத் தோன்றியது அவருக்கு.

''தர்த்தீ நே பக்லே பக்லே மூட்டீ தான் பிஞ நாஞ பால் மரே;
த்யாரே ஹாய்ரே ஹாய் கவிதனே பிருத்வீ அனே பாணீஞ சேணே கீத் கமே.''

(உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் ஒரு பிடி சோறு இல்லாமல் குழந்தைகள் செத்துக் கொண்டிருக்கிறுர்கள்! என்ன பரிதாபம்! கவியே! நீ ஏன் பூமியையும் தண்ணீரையும் புகழ்ந்து கவிதை பாடிக் கொண்டிருக்கிறுய்?)

மேகாணீ தம் இளமைப் பருவத்தில் அநுபவித்த சௌராஷ்டிரச் சூழ்நிலையை இந்த நாவலில் வெற்றிகரமாகச் சித்திரித்திருக்கிறுர். இதுவே இந்நாவலின் சிறப்பாகும்.

அவரே சொல்கிறுர்: ''கதாநாயகன் இல்லை, கதாநாயகி இல்லை, காதல் முக்கோணம் இல்லை! இது சௌராஷ்டிரச் சமூக வாழ்க்கையின் கதை. சமூகம் முழுதுமே இந்தக் கதையின் நாயகன், கடந்த இருபது ஆண்டுக் காலத்தைத் தாண்டிப் போய்ச் சௌராஷ்டிரத்தின் எல்லையில் நின்று கொண்டு நீங்கள் பார்த்தால் எத்தகைய வாழ்க்கை முறை உங்கள் பார்வையில் படுமோ அந்த வாழ்க்கையோட்டத்தை இந்த நாவலில் காணலாம்.''

கதாசிரியர் சொல்கிறுர், இந்நாவலில் கதாநாயகன் இல்லை யென்கிறர். ஆனுல் இது உண்மை அல்ல. இதில் கதாநாயகன் இருக்கிறுன். கதாசிரியரே நாயகனுக இருந்து கொண்டு சமூகத்

தின் சுகதுக்கங்களை, வேதனைகளை, மற்ற உணர்ச்சிகளை, தாமே அறிந்து, அநுபவித்து, அவற்றை இந்த நாவலில் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார். பினுகியின் மூலமாக ஆசிரியரே பேசுகிறார். ஆசிரியரின் ரசனை, விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், ஏமாற்றங் கள் ஆகியவையெல்லாம் பினுகியின் மூலம் வெளிப்படுகின்றன. இந்த நாவலில் நாம், கவி, கதாசிரியன், விமரிசகன், வீரத்தையும் காதலையும் பாடுபவன், எல்லாவற்றுக்கும் மேலாகத் தேச சேவகன், தத்துவஞானி, சரித்திர ஆசிரியன்... இவ்வாறு மலர்ச்சி பெற்ற மேகாணீயின் வளர்ச்சியின் சாயலைக் காண்கிறோம்.

'சோரட், உனது பெருகும் வெள்ளம்!' ஒரு நாவல். அதே சமயத்தில் நாவல் மட்டும் அல்ல. இது சமூக வாழ்க்கையின் மலர்ச்சி, தேசீய உணர்வு, பிரபுத்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு மக்களுரிமையை நோக்கி அடியெடுத்து வைக்கும் முன்னேற்றம் ஆகியவற்றைச் சித்திரிக்கும் சரித்திரங்கூட. பள்ளிகள் கற்பிக்கும் சரித்திரம் உண்மையான சரித்திரம் அல்ல; மக்களின் வாழ்க்கை யுடன் தொடர்பில்லாத அரசர்களின் வாழ்க்கை வரலாறுதான் அது. நமது பண்பாட்டின் மலர்ச்சிகள், மாற்றங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் இவற்றின் வரலாறு புராணங்களில் காணப் பட்டாலும் அவை சித்திரித்த காலம் 'அரசனே காலத்துக்குக் காரணம்' எனக் கருதப்பட்ட காலம். அந்தக் கருத்து இந்தக் காலத்துக்குச் செல்லாது. இது ஜனநாயகத்தின் காலம். இந்தக் காலம் எப்படித் தோன்றியது?

காலத்தில் ஏற்படும் மாறுதல் மிக மிக மெதுவாக ஏற்படுகிறது. காந்தியடிகள் சௌராஷ்டிரத்தில் பிறந்தது தற்செயலாக நிகழ்ந்த சம்பவம் அல்ல; காலத்தில்— அத்துடன் கூடவே, சமூகத்தில்— உள்ளூற நிகழ்ந்து கொண்டிருந்த மாற்றத்தின் விளைவுதான் காந்தியின் தோற்றம். தென்னுப்பிரிக்காவில் விசுரூபமெடுத்த காந்தியடிகளின் சக்தியின் விதை சௌராஷ்டிர மண்ணிலும் சூழ் நிலையிலுந்தான் விதைக்கப்பட்டிருக்க வேண்டும். காலம் தன் தொழிலைச் செய்து கொண்டே போகிறது, சமூகம் அதற்கேற்ப மலருகிறது. அதில் அடங்கியுள்ள மக்களும் மலர்ச்சி பெறுகிறார் கள். இவ்வியக்கம் ஓய்வின்றித் தொடர்கிறது. மேகாணீ காந்திக்குப் பிறகு தோன்றியவர். அவர் தாம் வளர்ந்த சூழ் நிலையை, அந்தச் சூழ்நிலையில் தாம் பெற்ற வளர்ச்சியை இந்த நாவலில் வர்ணித்திருக்கிறார். அவர் கற்பனையைப் பயன்படுத்தி யிருப்பது உண்மையே. ஆனால் அந்தக் கற்பனை சத்தியத்தைப் பிரதி பலிக்கவே உதவியிருக்கிறது. (அக்காலத்தில்) நாவலில் இது ஒரு

புதிய வெளிப்பாடு ஆகும். ஆகவே இந்த நாவல் தனித்தன்மை பெற்றிருக்கிறது.

மேகாணீ கையாண்டுள்ள மொழியைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். காந்தியின் வருகைக்குப் பிறகு, அதற்கு முன் எழுதப்பட்டு வந்த அதிகம் சமஸ்கிருதக் கலப்புள்ள குஜராத்தி நடை மாறி விட்டது. சாதாரணமான, எளிய, ஆனால் உணர்ச்சி மிக்க குஜராத்தி மொழியில் எழுதும் வழக்கம் தொடங்கியது. மக்கள் பேசும் மொழியிலுள்ள நல்ல, பொருட் செறிவுள்ள வார்த்தைகளை எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களில் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டினார்கள். குறிப்பாக, சௌராஷ்டிரத்தில் கதாசிரியர்கள் கிராம மக்களிடையே சாதாரணமாக வழங்கப் பெறும் வார்த்தைகளுக்கு இலக்கியத்தில் இடமளித்து அவற்றுக்குப் புத்துயிர் ஊட்டினார்கள். மேகாணீ நாடோடி இலக்கியத்தின் மூலமாகவும், கிராம மக்களின் மூலமாகவும் தமக்குக் கிடைத்த இத்தகைய நூற்றுக் கணக்கான சொற்களைத் தம் படைப்புகளில் பயன்படுத்தி வலுவான, உணர்ச்சி செறிந்த நடையை உருவாக்கினார். இவ்வாறே அவர் அங்கதத்துக்கும் பழமொழிகளுக்கும் மறுவாழ்வு அளித்தார். அவருடைய சேவையால் மொழி புத்துயிர் பெற்றதோடு, வளமும் கவர்ச்சியும் அடைந்தது.

இந்த நாவல் சுமார் ஐம்பது, ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய சௌராஷ்டிரத்தின் சரித்திரத்தைச் சொல்கிறது. அதற்கு அந்தக் காலத்துச் சூழ்நிலையை உயிரோட்டத்துடன் சித்திரிப்பது இன்றியமையாததாகிறது. மேகாணீ இதில் பெருமளவு வெற்றி பெற்றுள்ளாரென்றே சொல்ல வேண்டும்.

மோகன்லால் பட்

சோரட், உனது பெருகும் வெள்ளம்!

1

'கிர்' காட்டின் ஆரம்பத்தில் போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அதிகாரிகளின் மொழியில் அதற்குப் பெயர் 'அவுட் போஸ்ட்'. அதில் ஐந்து குதிரை வீரர்களும் பதினைந்து சாதாரணச் சிப்பாய் களும் அடங்கிய ஒரு போலீஸ் படை இருந்தது. அங்கிருந்த மாஜிஸ்டிரேட் மூன்றாவது வகுப்புக்குரிய அதிகாரம் பெற்றவர். சிறிய ஆஸ்பத்திரி இருந்தது; அதில் ஒரு டாக்டரும் இருந்தார். ஆனால் அதில் கம்பௌண்டர் இல்லை. மாஜிஸ்டிரேட்டை மக்கள் 'தானேதார் சாகிப்' என்று அழைத்தார்கள். போலீஸ் அதிகாரியை 'ஜமாதார் சாகிப்' என்று அழைத்தார்கள். தானே தாரிடம் நீதி விசாரணையோடு வரி வசூல் செய்யும் அதிகாரமும் இருந்தது.

இவ்வாறு இரட்டையதிகாரம் பெற்றிருந்த தானேதார்தாம் அங்கே சர்வ வல்லமையுள்ள அதிகாரி. இருந்தாலும் போலீசின் பளபளக்கும் உடை, தோட்டா இல்லாத, ஆனால் பளபளப்பான சனியன்களுடன் கூடிய நீண்ட துப்பாக்கிகள், தினம் காலையில் நடைபெறும் அணிவகுப்பின் பரபரப்பு, இரவு பத்து மணி யிலிருந்து காலை நான்கு மணி வரை ஒவ்வொரு தடவையும் மூன்று முறை உரக்கச் சொல்லப்படும் 'ஆல் வெல்' என்ற பாராக்கார னின் குரல், ஒவ்வொரு மணிக்கும் கம்பீரமாக ஒலிக்கும் மணியின் சப்தம், தினம் மாலையில் குதிரை வீரர்கள் செய்யும் நான்கு மைல் சவாரியின் படாடோபம் ஆகியவை காரணமாக மக்களுக்குப் போலீஸ் அதிகாரியிடந்தான் அதிக மதிப்பும் பயமும் இருந்தன. இதன் விளைவாக எப்போதும் தானேதார், ஜமாதார் இருவருக்கு மிடையே ஒரு போட்டி மனப்பான்மை உள்ளூறக் கனிந்து கொண்டே இருந்தது.

அந்த அவுட்போஸ்டுக்கு மாற்றலாகி வரும் ஒவ்வோர் அதி காரியும் தான் நாடு கடத்தப் பட்டதாக நினைத்துக் கொண்டான். அங்கு அனுப்பப்படுவதைத் தவிர்ப்பதற்காக ராஜ்கோட்டிலிருந்த பெரிய அதிகாரிகளுக்குச் சிபாரிசுகள், பழங்கள், ரொக்கப் பணம் ஆகியவற்றைக் காணிக்கையாக அளிப்பான். அவர்களுடைய ஆபீஸ்களில் இருந்த தலைமைக் குமாஸ்தாக்கள் அங்கு வேலை பார்த்த வேறு ஜாதிக்காரர்களைத் தங்கள் விரோதிகளாகப் பாவித்

தார்கள். இந்த ஆபீஸ்களில் எல்லாம் நாகர், பிராமணன், வைசியன் ஆகிய மூன்று ஜாதியினரிடையே எப்போதும் தகராறு நடந்து கொண்டிருந்தது. ஆகையால் வேற்று ஜாதிக்காரன் யாரையாவது திண்டாட வைக்க நினைத்தால் தலைமைக் குமாஸ்தா தன் வெள்ளைக்கார மேலதிகாரியிடம் போய், 'அந்த அவுட் போஸ்ட்டுக்கு நல்ல கண்டிப்பான ஆபீசரை அனுப்பினால் தேவலை. ஏனென்றால் அங்கே இருக்கிற மக்கள் கலகக்காரர்கள். இந்த ஆள் கெட்டிக்காரர், கண்டிப்பானவர்; அந்த அவுட் போஸ்டுக்குப் பொருத்தமாக இருப்பார்' என்று சொல்லுவான்.

அந்தக் காலத்தில் ஆங்கிலேய அதிகாரிகள் அநேகமாக ராணுவத்திலிருந்து வந்தவர்களாக இருப்பார்கள். ஒழுங்கும் கட்டுப்பாடும் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆகவே அவர்கள் தலைமைக் குமாஸ்தாவின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு அவன் குறிப்பிட்ட ஆளையே அந்த அவுட்போஸ்டுக்கு மாற்றிவிடுவார்கள்.

சீதள் ஸ்டேஷனில் இரண்டு மாட்டு வண்டிகள் இரண்டு நாட்களாகக் காத்திருந்தன. வேலையில்லாமல் அலுத்துப் போன மாடுகள் அடிக்கடி நிற்பதும் படுத்துக் கொள்வதுமாக இருந்தன. ஒரு மாட்டின் கழுத்தில் நுகத்தடி உராய்ந்து உராய்ந்து மேல் தோல் உரிந்து போயிருந்தது. ஒரு காக்கை அந்த இடத்தில் உட்கார்ந்து கொத்தியது, அடம் பிடித்துக் காசு பிடுங்கும் பக்கிரியைப் போல. மாடு அதை விரட்ட வாலைத் தூக்கியது, அரை மனத்துடன். காதலில் தோல்வியுற்று மனமுடைந்த காதலனைப் போல மாடும் சலித்துப் போயிருந்தது. இதைக் கண்டு காகத்துக்கும் தைரியம் பிறந்து விட்டது. மாடுகளுக்குப் பக்கத்தில் போட்டிருந்த வைக்கோலைத் தின்ன வந்த பசுவை வண்டிக்காரன், 'ஹோ ஹோ கையாரி!' என்று ஓரிரண்டு தடவை விரட்டி விட்டு ஓய்ந்து விட்டான்.

ஹுக்கா குடிப்பதற்கான புகையிலை தீர்ந்து போய் விட்டது. ஒரு வண்டிக்காரன் ஒரு பீடியைப் பிய்த்து அதைக் கொண்டு தோல் பையில் ஒட்டிக் கொண்டிருந்த புகையிலைக் கறையைத் துடைத்துக் கொண்டிருந்தான். வண்டிகளுடன் கூட வந்த இரண்டு காவல்காரர்களில் ஒருவன் பக்கத்திலிருந்த ஆல மரத்தின் நிழலில் ஒரு சாமியாரிடம் தன் பங்காளியைச் சாக வைக்க

மந்திரம் செய்யும்படி கேட்டுக்கொண் டிருந்தான். இளைஞனை மற்றொரு காவல்காரன் கைக் கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டு தன் நீண்ட தலைமயிரைச் சீப்பால் வாரிக் கொண்டிருந்தான்.

ஸ்டேஷன் கிடங்கிலிருந்து கூலிகள் மிளகாய் மூட்டைகளை குட்ஸ் வண்டிப் பெட்டியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அந்தக் காரம் தாங்காமல் அங்கிருந்தவர்கள் அடிக்கடி தும்மிக் கொண்டிருந்தார்கள்.

ஸ்டேஷன் மாஸ்டரின் மனைவி—கர்ப்பிணி—தன் ஒரு வயதுக் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு வீட்டு வராந்தாவில் நின்று கொண்டிருந்தாள். அவள், ''வண்டிக்காரா! யாரும் சாணியை எடுத்துக்கிட்டுப் போகாமே பார்த்துக்கோ'' என்றாள்.

வண்டிக்காரன், ''சரியம்மா'' என்று சொல்லி விட்டுப் பக்கத்திலிருந்த கூலியிடம் கேலியாகக் கேட்டான், ''ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டு அம்மாளா அது?'' என்று.

''ஆமா. இது கூடத் தெரியாதா உனக்கு?'' என்று பதில் சொன்னான் கூலியாள்.

''அவ ஏன் 'சாணி, சாணி'ன்னு கத்திக்கிட்டு இருக்கா? சாணி திங்கற மசக்கையோ?'' என்று கேட்டுக் கண்ணைச் சிமிட்டினான் வண்டிக்காரன்.

''என்ன பேசிக்கிட்டிருக்கீங்க?'' என்று கேட்டான் தலை சீவிக் கொண்டிருந்த இளைஞன்.

''தம்பி சுரக், இதெல்லாம் இப்ப உனக்குப் புரியாதப்பா.''

ஸ்டேஷனிலேயே படுத்துக் கிடந்த இடுப்பொடிந்த பிச்சைக்காரன் ஒருவனும் இந்த வேடிக்கைப் பேச்சில் கலந்து கொண்டான்.

கூலிக்காரன் பிச்சைக்காரனிடம் சொன்னான். ''நீ சிரிக்கறதுக்கு என்ன? நீ சாதாரண ஆளா? பிச்சை எடுத்தே ரெண்டாயிர ரூபாச் சேத்திட்டியே!''

''நிசமாவா?'' வண்டிக்காரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''நம்பிக்கையில்லேன்னா ஸ்டேஷன் மாஸ்டரையே கேளேன்.''

''அப்படீன்னா எங்கே அப்பா பணத்தை மூட்டை கட்டி வச்சிருக்கே?''

''கசாப்புக் கடை முகமதுகிட்டே. அதுக்கு வட்டி வேறே வருது'' என்றான் கூலியாள்.

''என்னப்பா, நெசந்தானா?''

''என்னயா, இப்பிடி அக்கப்போர் பண்றீங்க?'' என்று சொல்லிக் கொண்டே பிச்சைக்காரன் வெட்டுக்கிளியைப் போல் தத்தித் தத்திக் கொண்டு அங்கிருந்து போய்க் கொஞ்ச தூரத்திலிருந்து கூலிக்காரனை முறைத்துப் பார்த்தான்.

கூலிக்காரன் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு, ''இவன் சாதாரண ஆசாமி இல்லே! இப்போ இவன் என்ன பிளான் பண்ணிக்கிட்டு இருக்கான், தெரியுமா?'' என்முன்.

கேட்பவர்கள் ஆவலுடன் கேட்கத் தொடங்கினர்கள்.

''கல்யாணம் செஞ்சுக்க ஏற்பாடு பண்ணிக்கிட்டு இருக்கான். ஹா ஹா ஹா!''

எல்லோரும் பிழியப்படும் துணியைப் போலச் சுருண்டு சுருண்டு சிரித்தார்கள்.

அவர்களுடைய கேலிச் சிரிப்பு ஸ்டேஷன் மாஸ்டருடைய மனைவியின் சந்தேகத்தைக் கிளப்பி விட்டது. அவள் தூரத்திலிருந்தே கீச்சுக் குரலில், ''ஏய்! அங்கே என்ன 'ஹீ ஹீ'ன்னு சிரிக்கிறீங்க?'' என்று கேட்டாள்.

''ஏதோ ரெண்டு நாளைக்கு இங்கே வந்திருக்கோம். சிரிக்கக் கூடக் கூடாதா?'' என்று ஒரு வண்டிக்காரன் முணுமுணுத்துக் கொண்டே முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''சிரிச்சா என்னம்மா? வீட்டுக்குப் போனப்பறந்தான் அழுகை இருக்கவே இருக்கே!''

''வாயை மூடுடா'' என்முன் மற்றவன்; அதிகப் பிரசங்கி!

''ஏய், பாபுவைக் கொஞ்சங் கூப்பிட்டு இவங்களைக் கவனிக்கச் சொல்லு!''

''இதோ கூப்பிடறேம்மா'' என்று சொன்ன கூலிக்காரன் தன் நண்பர்கள் பக்கம் திரும்பிக் கண்ணைச் சிமிட்டி விட்டு அங்கிருந்து போய் விட்டான்.

ஸ்டேஷன் மாஸ்டர் குரல் கொடுத்தார். போர்ட்டர் வண்டி வருவதை அறிவிக்க மணியை அடித்து விட்டுப் பாயின்ட் அடித்தான். உயிர் இல்லாமலிருந்த ஸ்டேஷனில் பரபரப்புத் தோன்றியது. ரெயில் வந்ததும் கிராமவாசிகள் ஸ்டேஷனின் கம்பி வேலிக்கு வெளியிலிருந்து அதைப் பார்த்துக் கொண்டு நின்ருர்கள், பிஞ்சராபோலின் கம்பி போட்ட வண்டிக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் நாய்களைப் போல.

ரெயில் பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்றது. அதிலிருந்து இறங்கிய பிரயாணிகளில் தாங்கள் எதிர்பார்க்கும் அதிகாரி யார் என்று அந்த நால்வருக்கும் தெரியவில்லை. அவர்கள் அதிகாரி

போல் உடையணிந்திருந்த ஓரிருவருக்குத் தவறுதலாகச் சலாம் கூடப் போட்டார்கள்.

கடைசியில் கம்பீரத் தோற்றமுடைய ஒருவர் ரெயிலிலிருந்து இறங்கினர். அவர் தம் கையிலிருந்த துத்தநாகப் பிடி போட்ட மெல்லிய பிரம்பால் முழங்காலுக்குக் கீழே தட்டிக் கொண்டார். அவருடைய அடர்ந்த, பாதி நரைத்த மீசையைக் கண்டதும் அவர்களுக்குத் தெரிந்து விட்டது, அவர்தாம் தங்களுடைய அதிகாரி என்று.

நால்வரும், ''எசமான்'' என்று சொல்லிக் கொண்டு சலாம் செய்வதற்குக் கையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டது, வயலில் வேலை செய்பவன் வேர்வையைத் தன் கையால் துடைத்துக் கொள்வது போலிருந்தது.

பிரம்பின் ஒரு வீச்சால் அவர்களுடைய சலாமை ஏற்றுக் கொண்ட அதிகாரி அமர்த்தலான குரலில், ''பைரவ்கட்டிலே ருந்து வந்திருக்கிறவங்க நீங்கதானு?'' என்று கேட்டார்.

''ஆமாங்க எசமான்! ரெண்டு நாளாக் காத்துக்கிட்டிருக் கோம்'' என்று பெரிய காவல்காரன் பதில் சொன்னன்.

அதிகாரியின் முகம் இதைக் கேட்டு மலர்ந்தது. அதைக் கண்டு சற்றுத் துணிவு பெற்று ஒரு வண்டிக்காரன், ''ஆமாங்க. உங்க ளுக்குத் திடீர்னு ஏதாவது வேலை வந்திருக்கும், அதனாலேதான் இன்னும் வரல்லேன்னு நினைச்சோம். இல்லாட்டி, கெட்டிக் காரங்க ரெயிலைத் தவற விடுவாங்களா?'' என்று கூறினன்.

''சரி, சாமான்களை எடுங்க!'' என்றார் அதிகாரி.

அவருடைய மனைவி ரெயில் வண்டிக்குள்ளிருந்து சாமான்களை எடுத்துப் பிளாட்பாரத்தில் போட்டுக் கொண்டிருந்தாள். அவ ளுடைய பெரிய பெண் நாற்பது நாட்களே நிரம்பிய தன் குழந் தையுடன் இறங்கி ஓர் ஓரத்தில் நின்றாள். பத்து வயதுப் பையன் ஒருவன் அதிகாரியின் பட்டாக்கத்தியை எடுத்துக் கொண்டு ஒரு பக்கமாக நின்றான்.

சாமான்கள் இறக்கப் பட்டன. அதிகாரியின் குடும்பத்தினர் எல்லாரும் இறங்கினர்கள். பட்டணத்துச் சேட்டின் மனைவி மாதிரி பெருமூச்சு விட்டுக் கொண்டு ரெயில் நகர்ந்தது.

அதிகாரியுடன் வயதான மனிதர் ஒருவரும் இருந்தார். அவர் அதிகாரியின் மனைவியிடம், ''வாம்மா, நாம் எல்லாரும் ஆளுக் கொரு சாமானு எடுத்துக்குவோம்'' என்று கூறினர்.

அங்கிருந்த கூலி வேலை செய்யும் பெண்கள் நிராசையோடு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கைகளில் இருந்த

சும்மாடுகள் பிச்சைக்காரனின் கப்பரையைப் போல் தோற்றம் அளித்தன.

2

“உங்களை யார் சாமானை எடுக்கச் சொன்னது?” என்று பற்களைக் கடித்தவாறே சொல்லிய அதிகாரி தம் தந்தையின் கையிலிருந்து பெட்டியை வாங்கிக் கீழே போட்டார். பிறகு கோபத்துடன், ஆனால் தணிந்த குரலில், “எனக்கு அவமானம் ஏற்படணும்னு உங்களுக்கு ஆசையா?” என்று கேட்டார்.

கிழவர் திகைத்துப் போய் நின்றார்.

அதிகாரியின் மனைவி, நோஞ்சலானவள், தன் மாமனார் இவ்வாறு திரஸ்கரிக்கப்படுவதை விரும்பவில்லை. அவள் தன் முக்காட்டைச் சற்று விலக்கிக்கொண்டு கணவனிடம் சொன்னாள். “அப்பா மேல் ஏன் எரிந்து விழுகிறீர்கள்? அப்பா...”

“நீங்கள் எல்லாரும் என் சத்துருக்கள்” என்று சொல்லிவிட்டு அதிகாரி வேறு பக்கம் திரும்பிக்கொண்டார்.

ஒரு வண்டியில் எல்லாச் சாமான்களும் ஏற்றப்பட்டன. இன்னொன்றில் குடும்பம் முழுதும் உட்கார்ந்து கொண்டது.

அதிகாரி வண்டிக்காரனை, “ஏய், தர்பாரிடமிருந்து குதிரை ஏன் கொண்டு வரவில்லை?” என்று கேட்டார்.

“தர்பார் கிட்டே லாயமே இல்லை, எசமான்!” என்று பதில் வந்தது.

“இங்கே இருந்து பைரவ்கட் எவ்வளவு தூரம்?”

“இருவது மைலுக்குக் குறையாதுங்க.”

“சரியான அந்தமான்தான்! சரி, வழியிலே இரவை எங்கே கழிக்கணும்?”

“தேவகி கிராமத்துலே.”

“ஏற்பாடெல்லாம் ஆயிருக்கா?”

“உம், ரெண்டு எடத்துலே ஏற்பாடு செஞ்சிருக்காங்க.”

“எங்ககெங்கே?”

“தர்பார் அம்ராபட்கர், தம் வீட்டுலே உங்களைத் தங்கச் சொல்லியிருக்கார். ரூக்கட் சேட் தம் வீட்டுலே நீங்க தங்கணுமின்னு சொல்றார்.”

''யாரது ரூக்கட் சேட்?''

''அவர் ஜாதியிலே பனியாதான். இருந்தாலும் காட்டிகளுக்குக் கூடக் குரு அவர்.''

''ஓ அவரா? அவர் நெசமாவே சிறுத்தையைக் கையாலேயே அடிச்சுக் கொன்னுட்டாரா?''

''ஆமாங்க, எஜமான்!''

வண்டி மேடும் பள்ளமுமான சாலையில் அசைந்து குலுங்கிக் கொண்டு சென்றது. அதிகாரியிடமிருந்த மரியாதையால் எல்லாரும் வாயை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். பெண்ணின் சிறிய குழந்தை வெயிலில் சோர்ந்து போயிருந்தான். வண்டியின் மேல் கூரையிலிருந்து தொங்கவிட்டிருந்த தூளியில் குழந்தை கிடத்தப்பட்டிருந்தது. அந்த ஆட்டத்திலும் குலுக்கலிலுங்கூட அது தூங்கத் தொடங்கியிருந்தது. அதிகாரியின் தாய் தந்தையர் ஓர் ஓரத்தில் முடங்கிக் கிடந்தார்கள். அதிகாரியின் பெண் பிரசவித்துச் சில நாட்களே ஆகியிருந்தன; ஆகையால் அவளது தாய் அவளுடைய சௌகரியத்தைப்பற்றி மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டாள்.

சிறுத்தை என்ற வார்த்தையைக் கேட்டதும் பையனுக்கு ஆவல் தோன்றியது.

''தாத்தா! சிறுத்தையா? அவர் அதை என்ன செஞ்சார்?''

காவல்காரன் வண்டிக்கருகில் வந்து கொண்டே சொன்னான்: ''ஆமாப்பா! அந்த ஆண் சிறுத்தையோடே வெறுங் கையாலே குஸ்தி போட்டு அதோட மார் மேலே ஏறி உட்கார்ந்துகிட்டு அதைக் குத்துக் குத்துன்னு குத்தினார். அப்புறம் அதோட தாடை ரெண்டையும் ரெண்டு கையாலேயும் பிடிச்சு, தலையிலேருந்து வால் வரை அப்படியே ரெண்டாக் கிழிச்சிட்டார், நாம பல்குச்சியைப் பல்லாலே கிழிப்போமே அது மாதிரி!''

பையன் இந்த ஆச்சரியமான வரலாற்றை வாயைத் திறந்து கேட்டுக்கொண்டிருந்தான். பக்கத்தில் வரிசையாக நின்று கொண்டிருந்த மலைகளும் அதைத் திறந்த வாயுடன் கேட்டுக் கொண்டிருந்தன.

''அப்படிக் கிழிச்சவர் யாரு?''

''அவரை இன்னி ராத்திரியே நாம பார்க்கலாம், பையா!''

அதிகாரியும் தூங்கி வழிய ஆரம்பித்தார்.

காவல்காரன் வண்டிக்காரனிடம் ஹுக்காவுக்குப் புகையிலை கேட்டான். வண்டிக்காரன் தன் காலிப் பையைக் கவிழ்த்துக் காட்டினன்.

பாம்பாட்டி, விளையாட்டுக்குப் பிறகு பாம்பைத் தன் பெட்டியில் வைத்து மூடுவது போல் இரவும் பகலைச் சுருட்டி மூடிக்கொண்டிருந்தது.

இரண்டு காவல்காரர்களும் வண்டிகளுக்குச் சற்றுப் பின் தங்கி நடக்க ஆரம்பித்தார்கள். பீடி பிடித்தவாறே அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

''ஜமாதார் சாகிப் என்ன ஜாதி?'' என்று இளைஞன் கேட்டான்.

''மகீபத் ராம்னு. பேரைப் பார்த்தா பிராமணன் மாதிரி இருக்குது.''

''இவருக்கு முன்னுலே ஜமாதாரா இருந்தது யாரு?''

''பனியா.''

கலுவத்தில் அரைக்கப்படும் கண் மையைப் போல் இரவு கறுத்துக்கொண்டே வந்தது.

''இதுவரை எவ்வளவு பிராமணனும் பனியாவும் வந்துட்டாங்க?''

''ஆமா, நானுந்தான் பார்க்கறேன், இந்த இருவத்தஞ்சு வருஷத்திலே ஒரு ராஜபுத்திரனையும் ஒரு துலுக்கனையுந் தவிரப் பாக்கி எல்லா ஜமாதாரும் பிராமணன் அல்லது பனியாதான்!''

''நாசமாப் போக!''

''என்ன நாசமாகப் போகணும்?''

''நம்ம ஜாதிதான்.''

''ஏன்?''

''பிராமணனும் பனியாவும் என்ன பலத்துலே இந்த மலைப்பிரதேசத்துக்கு வராங்க? பேனு பிடிக்கிற தைரியத்திலே தானே?''

''இல்லேப்பா, சுரக், இல்லே. அவங்க நெஞ்சிலே தைரியம் இருக்கு. அந்தப் பலத்துலேதான் வராங்க. வெறும் பேனுவோட பலம் மட்டும் இருந்தா, இந்தக் காட்டி, ஜாட் மாதிரி முரட்டு ஜாதிக்காரங்களோட தேசத்திலே வந்து தாக்குப் பிடிக்க முடியுமா? இந்தப் பொட்டல் காட்டிலே அவங்களோட நெஞ்சு வெடிச்சுப் போயிடாதா?''

''என் மனசுலே ஒரு கெட்ட எண்ணம் தோணுது.''

''என்ன?''

''இவங்கிட்டே ஐந்நூறு, ஆயிர ரூவாப் பெறுமான சாமான் இருக்கும்.''

''சீ, பேசாம இரு, சரக். காத்து வண்டி பக்கமாத்தான் வீசறது.''

''இந்த மலேப்பிரதேசத்திலே நாம தப்பிச்சு ஓடறது கஷ்ட மில்லே.''

''இப்படியெல்லாம் ஏன் தோணுது உனக்கு?''

''ஏனு? என்னுேட மாமா வெளிப்படையாய்ச் சொல்லிட்டான்.''

''என்ன சொல்லிட்டான்?''

''நான் உண்மையான காட்டியாயிருந்தா வீரமா, என் ஜாதிக் கேத்த மாதிரி, ஏதாவது காரியம் செய்யணுமாம். அவனுேட பொண்ணு ஆண்மையில்லாத புருசனைக் கட்டிக்க மாட்டாளாம்!''

''அவன் சொல்றதும் வாஸ்தவந்தான். நீ சொல்றது இப்போ எனக்குப் புரியுது.''

''நீ என்ன சொல்றே?''

பெரிய காவல்காரன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். இருளும் அவர்களுடைய சதியாலோசனையில் கலந்து கொண்டது.

''என்ன, பேச்சையே காணும்? தூங்கிப் போயிட்டியா?'' இளைஞன் கேட்டான். ''நீ எவ்வளவு நாள் இந்த மாதிரி அடிமை வேலே செஞ்சுக்கிட்டு இருக்கப்போறே? சர்க்காரோட தபால் மூட்டை தூக்கித் தூக்கியே ஆயுசு பூராக் கழிக்கப் போறியா?''

''சரி, ஏதாவது செய்யலாம்.''

''சரிதானே? நீ கொஞ்சம் பின்னுலே நின்னு வா. இந்தப் பிராமணன் பிரமாதமா மீசை முறுக்கிக்கிட்டு ஆர்ப்பாட்டம் பண்ருன். ஆனு ஓர் அதட்டில்லே பெட்டிப் பாம்பா அடங்கிப் போவான், பாரு!''

''சுரக்! நெசந்தானு நீ சொல்றது? இல்லே சும்மா வேடிக்கை பண்றியா?''

''வேடிக்கையுமில்லே ஒண்ணுமில்லே. நெசமாத்தான் சொல்றேன்.''

''என் பங்கு?''

''ஆளுக்குப் பாதிப் பாதி.''

''சரி, புறப்படு!''

''நீயும் சத்தம் போடணும். ரொம்பப் பேர் வந்திருக்காப்பலே காமிக்கணும்.''

''சரி, என் கையையும் காலேயும் முண்டாசுத் துணியாலே கட்டிப்பிட்டுப் போ.''

சுரக் பெரியவனின் கைகால்களை இறுகக் கட்டினான். பிறகு ஒரு கையில் தடியும் இன்னொரு கையில் உருவிய வாளுமாகத் தன் மாமனின் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும் உரிமையைப் பெறப் புறப்பட்டு விட்டான்.

3

கட்டப்பட்டிருந்தவன் தன் கூட்டாளியிடம், ''சுரக்! வண்டி பைரவ் வாய்க்காலுக்குள் இறங்கட்டும். அதற்குள் அவசரப்பட்டு விடாதே!'' என்று கூறினான்.

இதைக் கேட்டு இளைஞன் சற்று மெதுவாக நடக்கத் தொடங்கினான். ஆனால் தன் மாமன் மகளை அடைவது இவ்வாறு தாமதப் படுவதை அவனால் பொறுத்துக் கொள்வது கஷ்டமாகத்தான் இருந்தது.

முன்னே போய்க்கொண் டிருந்த வண்டியில் எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். விழித்துக் கொண்டிருந்தவர்கள் போலீஸ் அதிகாரியும், பான்ஜா என்று செல்லமாக அழைக்கப்பட்ட அவருடைய பேரப் பையனுந்தான்.

''குழந்தை, தூக்கம் வரவில்லையா?'' என்று அதிகாரி கேட்டார்.

''இல்லே.''

''ஏன்?''

''கதை கேட்கணும்.''

''என்ன கதை? புலி, புலி மாதிரியிருக்கிற மனிசங்க, இவங்களைப் பத்தியா?''

''ஆமா.''

''ஏ சௌக்கீதார்! உன் பேர் என்ன?'' அதிகாரி உரக்கக் குரல் கொடுத்துக் காவல்காரனைக் கூப்பிட்டார்.

பதில் இல்லே. காலடிச் சப்தங்கூடக் கேட்கவில்லை. ''ரெண்டு பேரும் செத்துப் போயிட்டாங்களா?'' என்று எரிச்சலுடன் சொன்னார் அதிகாரி.

''அட மோசக்கார ராஸ்கல்!'' என்று திட்டிக்கொண்டே வண்டிக்காரன் வலப்பக்கத்து மாட்டின் வாலைக் கயிறு முறுக்குவது போல் முறுக்கினான்.

''ஏ முட்டாள்! சௌக்கிதார் ரெண்டு பேரும் எங்கே தொலைஞ்சுட்டாங்க?'' என்று அதிகாரி வண்டிகாரனைக் கேட்டார்.

''எனக்கு என்ன தெரியும், எசமான்? ஏதாவது வேலை வந்திருக்கும்.''

''வேலையா? இந்தப் பொட்டல்லேயா? அதுவும் இந்த இருட்டு வேளையிலே?''

''அவங்கள்ளாம் காட்டிகள்தானே! இந்தப் பொட்டல் காடும் இருட்டு வேளையும் அவங்களுக்கு ரொம்ப ஏத்ததுதான்!''

வண்டிக்காரன் பின்பக்கம் திரும்பாமலேயே மாட்டின்வாலை முறுக்கியவாறே சற்றுத் தெளிவாகவும் தெளிவில்லாமலும் பேசிக் கொண்டே வண்டியோட்டினான்.

அதிகாரி கோபம் கொண்டு வண்டிக்காரனின் காதைப் பிடித்துத் திருகி அவனுடைய முகத்தைத் தன்பக்கம் திருப்பிவிட்டு, ''என்னடா உளர்றே காட்டுமிராண்டி? ரெண்டு உதை கொடுக்கட்டுமா?'' என்று கேட்டார்.

மலைபோல் மதர்த்து வளர்ந்த காளைமாட்டைக் கூட வளர்ப்பு நாயைப்போல் அடக்கிவிடக்கூடிய துணிவு படைத்த அந்தக் குடியானவன் தன்னைவிட உருவத்தில் சிறிய அந்த அதிகாரியின் கர்ஜனையில் அடங்கிப் போய்ப் பணிவுடன், ''இந்த இடம் ரொம்ப ஆபத்தானது, எசமான்! மாசம் அஞ்சு ரூவாச் சம்பளத்துலே காட்டிக்கு வயிறு ரொம்பாது. அதிருஷ்டங் கெட்ட வழிப் போக்கன் யாராவது இவங்ககிட்டே ஆம்பிட்டுக்கிட்டிருப்பான். இவங்க ரெண்டு பேரும் அவனோட சாமானையெல்லாம் கொள்ளை யடிச்சுக்கிட்டு இருப்பாங்க'' என்றான் பதிலுக்கு.

''என்ன தாத்தா! இவன் என்ன சொல்றான்?'' என்று பான்ஜா ஆவலுடன் கேட்டான்.

''நீ சும்மா இரு! இந்தா, என் கத்தியை வச்சுக்கோ!'' என்று சொல்லிவிட்டு அதிகாரி வண்டியிலிருந்து குதித்துப் பின்னால் திரும்பிப் பார்த்தார்.

அப்போது வண்டி 'பைரவ் வாய்க்கால்' என்று அழைக்கப்பட்ட ஒரு குறுகிய நதிப் படுகையில் இறங்கிக் கொண்டிருந்தது.

''உம்...உம்...'' மகிபத்ராவின் மனைவி தன் மாமனாரிடம் இருந்த மரியாதை காரணமாகக் குரலைத் தாழ்த்திக்கொண்டு கணவனைத் தடுத்தாள். ''தனியா எங்கே போறீங்க? நீங்க எந்த இடத்துக்கும் போக வேண்டாம். வண்டியிலே ஏறிக்குங்க!''

''நீ சும்மா இரு!'' வண்டிக்குப் பின்னாலிருந்து அலட்சியமாகப் பதில் சொன்னார் மகிபத்ராம்.

அவருடைய இளம் பெண் பயத்தால் விக்கித்துப் போனாள். அண்மையில்தான் பிரசவ அறையிலிருந்து வெளிவந்திருந்ததால் அவளுடைய குரல் பலவீனமாக ஒலித்தது. ''அப்பா? நீங்க வந்துடுங்க!''

''அடி போடீ பைத்தியக்காரி! எம் பொண்ணு இருந்துகிண்டு இவ்வளவு பயப்படறியே?''

அவர் பேச்சை முடிக்கவில்லை. அதற்குள் தூரத்தில் ஏதோ குரல்கள் கேட்டன.

அதிகாரியின் தந்தை வண்டியிலிருந்து இறங்க முயற்சி செய்து கொண்டே பெண்கள் இருவருக்கும் தைரியம் சொன்னார். ''மகீபத்ராம் என் பையன்னு உங்களுக்குத் தெரியாதா? பயப் படாதீங்க!''

இதற்குள் ஒரு நெட்டையான ஆள் வாய்க்காலின் கரையி லிருந்து ஓடி வந்துகொண்டே, ''கபர்தார்! வண்டி அசைஞ்சுதோ, சுட்டுப்புடுவேன்! எடுங்க எல்லாத்தையும், நகை நட்டு எல்லாத் தையும் எடுத்துக் குடுங்க! ஹோ ஹோ ஹோ!'' என்று பெரிதாகக் கத்தினான்.

இந்த 'ஹோ' சப்தம் நதியிலிருந்த பாறைகளிலும் மலைக்குகை களிலும் பல குரல்களாக எதிரொலித்தது. பத்துப் பதினைந்து பேர் கர்ஜிப்பது போன்ற பிரமையை உண்டாக்கியது. இந்த எதிரொலி ஆற்றின் மற்றக் கரையிலும் எதிரொலித்து ஆட்கள் கூட்டங்கூட்டமாக வருவதுபோன்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

வண்டியையே இரண்டாகப் பிளப்பதைப்போல், ''ஐயோ, அம்மா!'' என்ற பரிதாப ஓலம் வண்டிக்குள்ளிலிருந்து கிளம்பி யது. ஓலமிட்ட பெண்ணைத் தாய் தன் மடியில் வைத்து இறுக்கக் கட்டிக்கொண்டாள்.

முன்னால் நின்றுகொண் டிருந்த மனிதனின் கையில் துப்பாக்கி போல் ஏதோ ஒன்று இருந்தது. அதிலிருந்து தொங்கிக்கொண் டிருந்த கயிறுகள் ஒழுகும் ரத்தத்தைப் போல் பளபளத்தன.

பான்ஜா வண்டிக்காரனின் பக்கத்தில் நின்றுகொண்டு கத்தியை உறையிலிருந்து உருவியவாறே, ''நீ யார்? யார்?'' என்று கத்தினான்.

''நீ யாருடா வாண்டு! நகையையெல்லாம் உடனே கழட்டிக் கொடுக்கச் சொல்லு உன் அம்மாவை!''

இதைச் சொல்லி முடிப்பதற்குள் அந்த ஆளின் கழுத்தில் பின்னு லிருந்து ஒரு சுருக்கு விழுந்தது. சுருக்கு இறுக இறுக மயூராசனம் செய்யும் மனிதனின் கழுத்தைப் போல் அந்த மனிதனின் கழுத்தும்

சுருக்கில் நன்ருக அகப்பட்டுக் கொண்டது. அவனுடைய இடுப் பின்மேல் விழுந்த உதை அவனைக் கீழே தள்ளி அவனை முழுமை யாகவே மயூராசனம் செய்ய வைத்துவிட்டது.

கயிறு இறுகிக் கொண்டிருந்தது. அவனுடைய கழுத்து அப்பள மாவைப்போல் நசுங்கிக் கொண்டிருந்தது. அதை இறுக்கிக் கொண்டிருந்த கட்டை குட்டையான ஆளின் குரல் கேட்டது, ''ஏண்டாப்பா! நாங்க பிராமணங்க. எங்க கிட்டே வேறே நகை ஏது? இந்தப் பூணூல்தான் இருக்கு. உன் கழுத்துக்கு ரொம்ப அழகாத்தான் இருக்கு இது. இந்த நகையைப் போட்டுக்கிண்டா மாப்பிளே மாதிரி இருக்கே நீ!''

வசதிக்காகப் பூணூலை எப்போதும் மாலையாகவே போட்டுக் கொண்டிருந்தார் மகீபத்ராம். அது இந்தச் சமயத்துக்கு மிகச் சௌகரியமாகப் போயிற்று.

''தாத்தா! தாத்தா!'' பான்ஜா அவருடைய குரலை அடை யாளங் கண்டு கொண்டு மகிழ்ச்சியோடு கத்தினுன். உற்சாகத்தில் அவனுடைய குரல் சற்று விரிசல் கண்டதுபோல் காதில் விழுந்தது.

''மகீபத்தா?'' என்று கேட்டுக்கொண்டே கிழவரும் வண்டியி லிருந்து குதித்தார். ''பார்த்தியா மருமகளே! நான் சொன்னே னில்லியா, மகீபத் என் மகன்னு!''

மகீபத்ராம் கீழே விழுந்த ஆளின் மார்பின்மேல் உட்கார்ந்து கொண்டு அவன் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கினுர். ''அட! இவன் என்ன சாமர்த்தியம் பண்ணியிருக்கான், பாருங் கப்பா! வெறும் தடியை எடுத்துத் துப்பாக்கிமாதிரி......!''

''மகீபத்! நீ பூணூல் இல்லாமேயா இருக்கே?'' என்று கிழவர் கேட்டார்.

''ஆமாம் அப்பா! நாற்பத்தஞ்சு வருஷத்துக்கப்பறம் இன்னிக்குத் தான் பூணூலை ஒரு நல்ல காரியத்துக்கு உபயோகிக்க முடிஞ்சுது. முந்தியெல்லாம் பழைய பூணூலை மாத்திப் புதுப் பூணூல் போட்டுக்கறதுக்கு அலுத்துக்குவேன். அதோட உபயோகத் தையும் தெய்வம் இன்னிக்குக் காண்பிச்சுடுத்து.''

''நம்ம ரிஷிகள் எல்லாரும் தீர்க்க திருஷ்டி இல்லாதவங்களா? சரி, நீ அப்படியே உட்கார்ந்திரு. எழுந்திருந்தாலும் வாயைத் திறந்து பேசாதே. பூணூல் இல்லாமே இருக்கறது பாவம்னு தெரியுமோல்லியோ?''

''உங்ககிட்டே இன்னொரு பூணூல் இருக்கா?''

''உம்! இதோ எடுத்துத் தாரேன்'' என்று சொல்லிக் கொண்டே கிழவர் தம் இரண்டு பூணூல்களிலிருந்து ஒன்றை

எடுக்க ஆரம்பித்தார். ''கல்யாணமானப்பறம் ஆண்பிள்ளை பெண்டாட்டிக்காக இன்னொரு பூணூலும் போட்டுக்கணுங்கற ஏற்பாடு எவ்வளவு நல்லதாப் போச்சு, பார்த்தியா?''

கீழே விழுந்து கிடந்த ஆள் திணறிக்கொண்டே சொன்னான், ''நான்... நான்தான்... சௌக்கீதார்?''

''சௌக்கீதாரா நீ?'' நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் இப்போது கொள்ளைக்காரனை அடையாளம் கண்டு கொண்டார் மகீபத்ராம். அவர் அவனை விட்டு எழுந்தார். சுருக்கையும் எடுத்துவிட்டார். குற்றுயிராய்ப் போயிருந்த அவனை நிறுத்தி வைத்துப் பலமாக ஓர் அறை கொடுத்தார். ''முட்டாள்! இந்த அநுபவத்தோட சந்தோஷத்தையே கெடுத்துட்டியே! ஒரு பெரிய கொள்ளைக்காரனை மண்ணைக் கவ்வ வச்சுட்டோம்னு நான் நினைச்சுக்கிண்டிருக்கேன். முட்டாள்! வடிகட்டின முட்டாள்!''

அவர் அவனை வண்டியில் ஏற்றிக் கயிற்றால் கட்டினார். பிறகு வண்டிக்காரனை வண்டியோட்டச் சொன்னார்.

வழியில் கட்டுண்டு கிடந்தவனுடன் பேசிக்கொண்டே வந்தார் மகீபத்ராம். ''அட பைத்தியக்காரா! நீ காட்டிப் பொம்பளை யோட பாலைக் குடிச்சவன், நான் உதவாக்கரைப் பாப்பாத்தி யோட பாலைக் குடிச்சவன்னு நீ தப்புக்கணக்குப் போட்டுட்டே. நாம ரெண்டு பேருமே மலைப்பால் குடிச்சவங்க! நீ கிர் மலையோட பால் குடிச்சவன், நான் இட்ரியாவோட பால் குடிச்சவன். இல்லாட்டா இந்தக் காட்டிகள் ராஜ்யத்திலே போலீஸ் ஜமாதாரா வரமுடியுமா? காட்டிப் பயலே! நாம எல்லோரும் மலையோட குழந்தைகள்; இதிலே பிராமணன், காட்டி, பனியாங்கற வித்தியாசம் கிடையாது!''

4

கிழவனாரின் மடியில் உட்கார்ந்திருந்த பான்ஜா மகீபத்ராமின் கையில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ரோமங்களைக் கையால் தடவிக் கொண்டிருந்தான். மகீபத்ராமின் உடம்பு அப்போது தான் நிறுத்தப்பட்ட ரெயில் இஞ்சின் போல இன்னும் சூடாக இருந்தது.

வண்டிக்காரனின் குரல் அடைத்துக் கிடந்தது. மாடுகளை அதட்டி விரட்டுவதை நிறுத்திவிட்டிருந்தான் அவன். மாடுகளின் நடை மிகவும் மந்தமாகிவிட்டதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

அவனுடைய மௌனத்தை மகீபத்ராமும் கவனித்தார். ''ஏண்டா முட்டாள்! தூங்கிப் போயிட்டியா?'' என்று அவர் கேட்டார்.

''இல்லே, எசமான்.''

''அவன் கொள்ளையடிக்க வந்தபோது நீ என்னடா பண்ணிக் கிட்டிருந்தே?''

''நான் என்ன செய்வேன், எசமான்? இங்கேயே உட்கார்ந்து கிட்டிருந்தேன்.''

''ஏன் உட்கார்ந்திருந்தே?''

வண்டிக்காரன் பதில் சொல்லவில்லை.

''நீயும் கிர் தேசத்துக் குடியானவன்தானே?''

''ஆமாம், எசமான்!''

''இந்த மலையோட பாலை நீ குடிக்கல்லியா? காட்டிகள் மாத்திரந்தான் அதைக் குத்தகை எடுத்திருக்காங்களா? நீயும் வண்டியிலேயிருந்து ஒரு குச்சியைப் பிடுங்கிக்கிட்டு அவனை எதிர்த் திருக்க வேண்டாம்?''

வண்டிக்காரன் கயிறு சுற்றப்படாத பம்பரம் போல் அமைதி யாக இருந்தான். அந்தப் பூணூல் போட்ட பிராமணனின் வீரத்தை நேரே பார்த்தவன் அல்லவா?

மகீபத்ராம் சொன்னார்: ''என்னோட குரு யார் தெரியுமா? அவரும் உங்க ஜாதிக்காரர்தான்.''

''அவர் யாரு, தாத்தா?'' என்று பான்ஜா கேட்டான். இதில் ஒரு புதிய கதை இருக்குமென்று அவனுக்குத் தெரிந்தது.

''அவர்தான் நம்ம பாக்ஜி பௌஜ்தார். ஏஜென்சி போலீஸ் ஏற்படறதுக்கு முன்னாலே இருந்த போலீஸ் அதிகாரி. அவருக்கு ஏர் ஓட்டத் தெரியும். ஆனா நான்தான் அவருக்குக் கையெழுத்துப் போடச் சொல்லிக் கொடுத்தேன். அவரோட கையைப் பிடிச்சுக் கிண்டு, எறும்போட கால் மாதிரி கையெழுத்துப் போடக் கத்துக் கிண்டார் அவர்.''

''அவர் என்ன செஞ்சார், தாத்தா?''

''அவர் செஞ்சது எல்லாத்தையும் சொல்லமுடியாது, பான்ஜா! அவர் எவ்வளவோ சிங்கம் புலிகளை எல்லாம் வேட்டையாடினார். முரட்டு ஜாதிகளைச் சேர்ந்த ஆட்களை—அவங்க காட்டியோ, ஜாகீர் தாரரோ, ஜாட்டோ, மியாணாவோ, குத்தம் செஞ்சவனோ, செய்யா

தவனே, பிடிச்சு அவர்களோட தாடி மீசையை இழுத்து, உதை உதைன்னு உதைச்சுடுவார். அவர்கிட்டே உதை வாங்கிச் செத்தவங்க மாயமா மறைஞ்சுடுவாங்க.''

''ஐயோ, பாவம்!'' பான்ஜாவுக்கு இரக்கமாக இருந்தது.

''ரொம்பப் பரிதாபப்படாதே! பிராமணனுக்கும் வைசியனுக்கும் இந்தச் சோரட் தேசம் சும்மாக் கிடைச்சுடல்லே. நாம இந்தக் கொள்ளைக்கார ராஸ்கலை வண்டியிலே படுக்க வச்சுக் கூட்டிக்கிண்டு போறோமே, என் குரு பாக்ஜி பௌஜ்தார் என்ன செஞ்சிருப்பார், தெரியுமா?''

''ஐயோ, ஐயோ, எசமான்!'' சுரக் ஓலமிட்டான். அவனுக்குப் பயம் பிடித்து விட்டது.

''என்ன செய்வார், தாத்தா?''

''நீ மறுபடி 'பாவம், பாவம்'னு சொல்ல ஆரம்பிச்சுடுவே.''

''சொல்லுங்களேன். என்ன செய்வார் அவர்?''

''வார்த்தையாலே விளக்கறதெல்லாம் தெருப் பாடகங்க, கதா காலட்சேபம் செய்யறவங்க இவங்களாலேதான் முடியும். நீயும் படுச்சுட்டுக் கதை எழுதக் கத்துக்குவே, காரியத்திலே காட்டக் கத்துக்கமாட்டே. பாக்ஜி பௌஜ்தார் இவனை வண்டியின் முன்பக்கத்துக் கட்டையோடே கட்டி இவனோட பாதி உடம்பு தரையிலே உரசிக்கொண்டே வரும்படி ஊருக்கு நடுவிலே வண்டியை ஓட்டிக்கொண்டு போவார். நடுநடுவிலே அவனைச் சாட்டையாலே அடிப்பார். மாடுகளோட உதையும் விழும் அவன் மேலே.''

''போதும், போதும், நிறுத்திக்கோங்கோ!'' மகீபத்ராமின் மனைவி குறுக்கிட்டாள்.

''ஏன், யாராவது வராங்களா?''

''இல்லையில்லை.''

''பின்னே?''

''இங்கே வந்து பாருங்களேன்.''

''என்ன?''

''பாருங்க, ஜில்லுன்னு போயிட்டா.''

''யாரு, நந்துவா?''

''ஆமா.''

அண்மையில் பிரசவித்திருந்த பெண்ணின் உடம்பைத் தொட்டுப் பார்த்தார் மகீபத்ராம். பனிக்கட்டிக்குள் வைத்திருந்த சோடா பாட்டில் போல் சில்லிட்டுப் போயிருந்தது அது.

"இந்தத் தடியனைக் கண்டு பயந்துபோய் இப்படி ஆயிட்டா், வேறொண்ணும் இல்லே. இந்த அயோக்கியப் பயலை உசிரோடே விட்டுட்டேனே நான்!'' மகீபத்ராம் பற்களைக் கடித்துக்கொண்டு சுரக்கின்மேல் உதைகளையும் குத்துக்களையும் பொழியத் தொடங்கினார்.

''ஊஹூம், ஊஹூம், அப்பா! இவரைத் தடுங்கோ! என் மடியிலே குழந்தை படுத்துக்கிண்டிருக்கா'' என்று மகீபத்ராமின் மனைவி தன் மாமனாரை வேண்டிக் கொண்டாள்.

''மகீபத்!'' கிழவனார் சுரக்குக்கு முன்னால் போய் நின்று மகனின் கொடுமையைத் தடுத்தார். "நீ பிராமணன் இல்லையா? இந்த மாதிரி சூரத்தனம் பிராமணனுக்கு அழகில்லே. இவன் இப்போ நம்மை அண்டியிருக்கிறவன். இவன் மேலே கையை வச்சாத் தெரியும் சேதி.''

''ஐயோ, என் பெண்ணே!'' மகீபத்ராமின் குரல் வறுத்த பாக்கைப்போல் உடைந்து போயிருந்தது.

அவருடைய மனைவி விம்மிக்கொண்டே சொன்னாள். "இவனைக் குத்தஞ் சொல்லி என்ன பிரயோசனம்? நம்மை இந்த அத்துவானத்துக்கு விரட்டினது வேறே யாரோன்னு!''

''யாரையும் நொந்துக்காதே, அம்மா!'' கிழவனார் சிரித்துக் கொண்டே சொன்னார். "நாம க்ஷத்திரியர்கள் மாதிரி வாழ ஆரம்பிச்சுட்டோம். தோளிலே துப்பாக்கியை வச்சுக்கிண்ட அப்பறம் கொல்றதுக்கோ, சாகறதுக்கோ, சமுத்திரத்திலே முழுகறதுக்கோ பயப்படலாமா? ராஜபுத்திரனோட வாழ்க்கை இப்படித்தான் இருக்கும். பயப்படாதே, தைரியமாயிரு! இதோ கொஞ்ச நேரத்துலே கிராமம் வந்துடும். அங்கே இவளுக்கு ஏதாவது சிகிச்சை செய்யலாம்.''

அவர்களுடைய பேச்சு பான்ஜாவுக்குத் தெளிவாகப் புரியவில்லை. அவர்களைக் கேட்கவும் தைரியம் வரவில்லை அவனுக்கு.

இப்போது வண்டிச் சக்கரங்களுக்குக் கீழே கற்கள் நொறுங்கும் ஒலி கேட்கவில்லை. மெத்தென்றிருக்கும் தாயின் உடம்பின்மேல் விளையாடும் குழந்தையைப் போல் சக்கரங்கள் பொடி மண் நிறைந்த பாதையில் அரவமின்றி ஓட ஆரம்பித்தன. கிராமம் நெருங்கிக்கொண் டிருந்தது.

5

கிராமத்துக்குச் செல்லும் வழியின் இரு பக்கங்களிலும் வயல்கள் இருந்தன. வயல்களுக்கு வேலியாக உயரமான கள்ளி மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றுக்கு நடுவே ஒட்டகம் சென்றால் அதன் தலை மட்டுமே வெளியே தெரியுமளவுக்கு உயரமாக இருந்தன அந்த மரங்கள். துப்பாக்கியின் குழாய்போல் வழி குறுகலாக இருந்தது. முன்னிரவின் இருட்டில் தெளிவின்றிக் காணப் பட்ட சப்பாத்திக் கள்ளியின் இலைகள் ஏராளமான மனிதர்கள் கூடி உட்கார்ந்துகொண்டு மௌனமாகத் தங்கள் கைகளை விரித்துக் காட்டிக்கொண் டிருப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கின.

''ஹோ-ஹோ-ஹோ!'' எதிர்ப்புறத்திலிருந்து பல குரல்கள் கேட்டன.

அந்தப் பக்கத்திலிருந்து சில வண்டிகள் வந்து கொண்டிருந்தன. எதிர் எதிராக வந்துகொண் டிருந்த வண்டிகள் ஒன்றையொன்று கடக்க ஏற்றவாறு வழி அகலமாக இல்லை.

மகீபத்ராமின் வண்டிக்காரன் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கிக் கொஞ்சம் முன்னால் போய்ப் பார்த்தான். சற்று நேரத்துக்குப் பின் அவன் திரும்பி வந்து, ''பஞ்சு மூட்டை ஏத்திக்கிட்டு இருபத் தஞ்சு வண்டி வந்துக்கிட்டிருக்கு. அதுகளை அப்படியே திருப்பணு மின்னா மாடுகளை அவுத்து விட்டிட்டு வண்டிகளைப் பின்னாலே தள்ளிக்கிட்டுப் போகணும். நாம நம்ம வண்டிகளைப் பின்னாலே தள்ளிக்கிட்டுப் போகலாமா, எசமான்?'' என்று கேட்டான்.

''ஊஹூம், அதெல்லாம் முடியாது. இது போலீஸ் அதிகாரி யோட வண்டீன்னு சொல்லி அவங்களைப் பின்னாலே போகச் சொல்லு!''

''போலீஸ் அதிகாரியோட வண்டீன்னா அதுக்கு ரெக்கை முளைச் சிருக்கோ?'' எதிர்ப்புறத்திலிருந்து கட்டைக் குரலில் ஒரு கேள்வி வந்தது.

''பேசறது யாரு?'' மகீபத்ராம் வண்டிக்காரனைக் கேட்டார்.

''கிரிலே இருக்கற மக்ராணி அவர். அவரோட சாமான்தான் ஸ்டேஷனுக்குப் போய்க்கிட்டிருக்கு.''

மக்ராணி என்ற பெயரைக் கேட்டதும் சற்று அடங்கிப் போய் விட்டார் மகீபத்ராம். இதற்குள் அவருக்குப் பின்பக்கம் ஏதோ அரவம் கேட்டது, கோயில் மணியின் ஒலியைப்போல் கம்பீரமான, இனிய மனிதக் குரல்.

''ஏம்பா, வழியிலே வண்டிகளை நிறுத்தி வச்சிருக்கீங்க? பசுமாடு களுக்கு வழியை விடுங்க! அதுகளோட கன்றுகள் வீட்டிலே காத்துக்கிட்டிருக்கும்.''

''யாரு? லக்ஷ்மண்பாயியா?'' வண்டிக்காரன் குரலை அடை யாளம் கண்டு கொண்டான்.

''ஆமா, ஏன் வண்டியை நிறுத்திவச்சிருக்கீங்க?'': லக்ஷ்மண்பாயி தலையில் தலைப்பாகைக்குப் பதிலாக ஒரு சிறு துணியைச் சுற்றிக் கொண்டிருந்தான். இடுப்புக்குமேல் அவன் துணியேதும் அணியவில்லை. அவனுடைய மார்பில் அகலவட்ட வடிவத்தில் கறுப்பாக ஏதோ இருந்தது. அவன் வண்டிக்கருகில் வந்தபோது அது அவனது மார்பில் அடர்த்தியாக வளர்ந்திருந்த ரோமந்தா னென்று பான்ஜாவுக்குப் புரிந்தது. அவன் இடுப்பில் அகலக் கட்டையான துண்டை அணிந்திருந்தான். அவனுடைய மெலிந்த உடல் கோயிலிலுள்ள தெய்வத்தின் சிலைபோல் தோற்றம் அளித்தது. அவனுடைய முகத்தில் மீசை தாடியின் சாயல் தெரிந்தது. அவனுடைய கையில் கோடரியும் தோளில் ஒரு கயிறும் பையும் தொங்கிக்கொண் டிருந்தன. அவன் கழுத்தில் துளசிமாலை அணிந்திருந்தான்.

''இந்தப் பக்கத்து வண்டியில் பைரவ்கட்டின் போலீஸ் ஜமாதார் வந்துக்கிட்டு இருக்கார்; அந்தப் பக்கம் மக்ராணியோட இருவத் தஞ்சு வண்டிகள்'' என்றான் வண்டிக்காரன்.

''அப்ப நம்ம ரெண்டுவண்டியையும் திருப்பவேண்டியதுதான்.''

உள்ளேயிருந்து கிழவனார், ''ஆனா, இங்கே ஒரு பொண்ணு உசிருக்கு மன்றாடிக்கிட்டு இருக்கா, அப்பா!'' என்றார்.

இந்தச் செய்தி பான்ஜாவின் காதுகளில் உருக்கிய ஈயமாக விழுந்தது.

''அப்படியா? கொஞ்சம் இருங்க!'' என்று சொல்லிய லக்ஷ்மண் பாயி மறுபக்கத்து வண்டிகளை நோக்கி நடந்தான்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு அந்தப் பக்கத்திலிருந்து அவ னுடைய கம்பீரமான குரல் கேட்டது. ''இது ரொம்ப இக்கட் டான நிலைமை. இந்தச் சமயத்திலே எவ்வளவுதான் கஷ்டமாயிருந் தாலும் நம்ம வண்டிகளை ஒருபக்கமா ஒதுக்கறதுதான் நல்லது. இருங்க!'' லக்ஷ்மண்பாயி கயிற்றையும் பையையும் தோளிலிருந்து

இறக்கிக் கீழேவைத்தான். பிறகு தன் கையில் இருந்த கோடரியால் தன் இடப்பக்கத்திலிருந்த சப்பாத்திக் கள்ளிகளை வெட்டத் தொடங்கினான். உள்மூச்சு வெளிமூச்சைப் போல் நிதானமாக வேகத்துடன் கோடரி வீச்சுக்கள் விழுந்தன. சற்று நேரத்தில் பாதையோரத்தில் வண்டிகள் ஒதுங்குவதற்கான வழி உண்டாகி விட்டது.

"சரி, இப்போ வண்டிகளை ஒதுக்கிக்கிட்டு வாங்க!'' என்று சொல்லிக்கொண்டே லக்ஷ்மண்பாயி வண்டிகளின் சக்கரங்களில் கைகளைக் கொடுத்துத் தள்ள ஆரம்பித்தான். விரைவில் இருபத்தைந்து வண்டிகளும் ஒதுங்கி மகீபத்ராமின் வண்டிகளைக் கடந்து விட்டன.

"சரி, இப்போ உங்க வண்டிகள் போகலாம்'' என்று சொன்னான் லக்ஷ்மண்பாயி.

''ரொம்ப நன்றி'' என்று பதில் வந்தது.

மகீபத்ராமின் வண்டிகள் முன்னேறின. அவற்றுக்குப் பின்னால் அந்த இளைஞன் தன் பசுக்களை ஓட்டிக்கொண்டு வந்தான். அவற்றுக்குத்தான் அவனிடம் எவ்வளவு அன்பு!

"நீ யாரப்பா?'' என்று மகீபத்ராம் கேட்டார்.

"நான் ஓர் இடையன். சரி, வரேங்க'' என்று சுருக்கமாகப் பதில் சொல்லிவிட்டு அவன் மாடுகளை ஓட்டிக்கொண்டு போய் விட்டான்.

''சாதாரண இடையனாத் தெரியல்லியே?'' என்று மகீபத்ராமின் தந்தை சொன்னார்.

''இடையனாவும் இருக்கலாம்.''

''வண்டிக்காரனுக்குத் தெரிஞ்சிருக்குமே!''

''ஏண்டா ஊமை! சொல்லேண்டா!'' மகீபத்ராம் வண்டிக் காரனை அதட்டினார்.

''பெரிய மனிசங்க பேசிக்கிட்டிருக்கறப்போ நான் இடையிலே பேசலாங்களா?''

''ஆகா, என்ன அடக்கம்! சரி சரி, இந்த ஆள் யாரு, சொல்லு!''

''இவுரு அம்ரா பட்கரோட பிள்ளை லக்ஷ்மண்பாயி. வெறுங் காலோடே பசுமாடு மேய்க்கற விரதம் எடுத்துக்கிட்டிருக்கார். தினம் அறுபது மாடுகளுக்குக் குடிக்கத் தண்ணி கிணத்திலேருந்து இழுத்துக் கொடுக்கிறார். சிவபக்தர். இவுருக்கும் இவரோட அப்பாவுக்கும் ஒத்துக்கல்லே. எப்படி ஒத்துக்கும்? அவன் ஊர் பூராக் களவுபோன சாமான்களையெல்லாம் வாங்கி ஒளிச்சு

வைக்கறுன். மால்வா வரையிலே பொறத்தியான் வீட்டு மாடு களைத் திருடி ஓட்டிக்கிட்டுப் போறுன். கொலை பண்ணக்கூட அஞ்ச றதில்லே. இன்னும்...'' பேசக்கூடாத விஷயங்களைப் பேசிவிட்ட தாக வண்டிக்காரனுக்குத் தோன்றவே அவன் தன் பேச்சை முடிக்கவில்லை. பாம்பு எலியை விழுங்குவதுபோல் அவன் தான் பேசவந்த வார்த்தைகளை விழுங்கிவிட்டு வண்டியோட்டத் தொடங்கினுன்.

இதற்குள் கிராமமும் நெருங்கிவிட்டது.

இருட்டில் புகையுடன் சற்று ஒளியையும் பரப்பும் ஒரு விளக்கு தென்பட்டது. அதற்கருகில் சில மனிதர்கள் நின்றுகொண்டிருப் பதும் தெரிந்தது. அவர்களுடைய தலைவனின் கையில் புதிய ஹுக்கா இருந்தது. அவன் ஹுக்காவின் வெள்ளி நுனியை வாயின் ஓரத்தில் வைத்துக்கொண்டிருந்தான். அவன் தன் தலையில் மடிப்புக்குமேல் மடிப்பாக அணிந்துகொண்டிருந்த தலைப் பாகை தலையைவிட ஐந்துமடங்கு பெரிதாக இருந்தது. அவன் தன் மீசையில் தடவியிருந்த நாவற்பழம்போல் கறுத்த சாயம் சில இடங்களில் கரைந்துபோயிருந்ததால் அவனுடைய மீசை நரைத்துவிட்ட விஷயம் பகிரங்கமாகத் தெரிந்தது. இருட்டில் ரெயிலின் இஞ்சினிலிருந்து கிளம்பும் நெருப்பு ஜ்வாலையைப்போல் அவனுடைய கண்கள் பளபளத்தன.

''வாங்க!'' என்று ஒரு வார்த்தையாலேயே அவன் தன்னை மகீபத்ராமுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டான். மகீபத்ராம் கீழே இறங்கி வந்தார். அவன் தன் வலக்கையை அவருடைய தோளின்மேல் வைத்து அன்புடன் சொன்னுன்: ''வாங்க, வாங்க! சௌக்கியந்தானே? பிரயாணம் வசதியா இருந்ததா? ஏய், யாரது? உடனே மாகன் காமோட்கிட்டே ஓடிப்போய்த் தொட்டி யிலே தண்ணி ரொப்பச் சொல்லு! அப்பறம் சமையல் ஆரம் பிக்கச் சொல்லு! லட்டுவே தயார் பண்ணட்டும்! புரிஞ்சுதா?''

தொட்டியில் இனிமேல்தான் தண்ணீர் நிரப்பப் போகிறுர்கள் என்று மகீபத்ராம் புரிந்துகொண்டார். ''அதெல்லாம் அப்பறம் ஆகட்டும், தர்பார்! முதல்லே பெண்ணுக்குச் சிகிச்சை செய்யணும். அவளுக்கு மூச்சு திணர்றது! சமையலுக்கு இப்போ ஒண்ணும் அவசரமில்லே'' என்ருர் மகீபத்ராம்.

6

சற்றுத் தொலைவில் நின்றுகொண் டிருந்த ஒருவன் இப்போது அவர்களை அணுகினான். அவன் தலைப்பாகையும் இடுப்பில் பெல்ட்டும் அணிந்திருந்தான். அவனுடைய மார்பு திறந்திருந்தது. தோளில் உள்நாட்டுத் துப்பாக்கி ஒன்று இருந்தது.

அவன் மகீபத்ராமுக்கு வணக்கம் தெரிவித்தான்.

மகீபத்ராமால் 'தர்பார்' என்று அழைக்கப்பட்ட அம்ரா பட்கர், ''பொண்ணுக்கு ரொம்ப ஆபத்தா? அப்போ என்ன பண்றது?'' என்று கேட்டு யோசனையில் ஆழ்ந்தான்.

புதிதாக வந்தவன் பரஸ்பர அறிமுகத்துக்குக் காத்திராமல் கேட்டான், ''யாருக்கு உடம்பு சரியில்லை?'' என்று.

வண்டிக்காரன் அவனிடம் போய் விஷயத்தை விளக்கினான்.

பட்கர் யோசனை செய்துகொண் டிருந்தான், டாக்டரைக் கூட்டிக்கொண்டு வரக் குதிரை அனுப்புவதானால் எந்தக் குதிரையை அனுப்புவது என்று.

துப்பாக்கிக்காரன், ''வண்டிகளை நம்ம வீட்டுக்கு ஓட்டிக்கிட்டுப் போங்களேன்'' என்று சொன்னான்.

''ஏன்? நீங்க யாரு?'' என்று மகீபத்ராம் கேட்டார்.

''அவர் சேட்ஜி. இந்த ஊர்தான்.'' தர்பார் பதில் சொன்னான்.

''அறிமுகமெல்லாம் அப்பறம் ஆகட்டும். முதல்லே பொண்ணோட சிகிச்சைக்கு ஏற்பாடு பண்ணுவோம். ஏய், வண்டிகளைத் திருப்புங்க.''

''அச்சா!'' பட்கர் சொன்னான். ''அவர் வீடு நம்ம வீடுதான். அவருக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் இல்லே.''

''வித்தியாசம் இருக்கு. ஆனாக் கடைசீலே எல்லாரும் ஒண்ணாத் தானே ஆகப் போறோம்'' என்று சொல்லிவிட்டுச் சேட் வண்டிக் காரர்களுக்கு வழியைக் காட்டிக்கொண்டு முன்னே நடந்தார். ''வேகமா ஓட்டுங்கடா!'' என்றார்.

சேட்டின் வீட்டுக்கு எதிரில் ஒரு திறந்தவெளி இருந்தது. வீட்டின் முன்புறம் உயரமான வராந்தா ஒன்று இருந்தது. வாயிற் பக்கம் ஒரு பள்ளம் இருந்தது.

வண்டி பள்ளத்தை நெருங்கியதும் சேட், ''நீங்க இங்கேயே இறங்கிடுங்க'' என்று சொல்லி மகீபத்ராமின் தந்தையைக் கையைப் பிடித்து மெதுவாக இறக்கிவிட்டார்.

''இன்னும் ஒரு ஆள் வண்டிக்குள்ளே இருக்கான்'' என்று வண்டிக்காரன் சொன்னான்.

''யாரது?'' என்று சேட் கேட்டார்.

''சௌக்கீதார்.''

''ஏன்?''

கிழவர் சட்டென்று பதில் சொன்னார். ''அவனுக்கு ஜுரமா யிருந்தது, பாவம்! அதனாலே வண்டியிலே உட்கார்த்திக் கூட்டிக் கிண்டு வந்தோம்.''

அவனைப் பையைத் தூக்குவதுபோல் தூக்கி வராந்தாவில் படுக்க வைத்தார்கள். வண்டி வீட்டின் வாயிலைத் தாண்டி உள்ளே சென்றது.

சேட் முற்றத்தில் இருந்துகொண்டு கூப்பிட்டார்: ''ஏய், எங்கே இருக்கே?''

உள்ளேயிருந்து ஒரு ஸ்திரீ வந்தாள். அவள் பார்ப்பதற்குச் சேட்டின் மனைவி மாதிரி இல்லை என்பதைப் பான்ஜா கவனித்தான். அரிக்கேன் விளக்கின் வெளிச்சத்தில் சாலமரம் போல் நேராகவும் உயரமாகவும் காணப்பட்ட அவள், சுருக்கங்கள் வைத்துத் தைக்கப்பட்ட பெரிய பாவாடை அணிந்திருந்தாள். அவளுடைய கைகளிலிருந்த கண்ணாடி வளையல்கள் கலகலவென்று ஒலியெழுப்பின. வளையல்கள் தடிமனாக இருந்தன. அவற்றில் ஒட்டக வடிவத்தில் கற்கள் சுற்றிப் பதிக்கப்பட்டிருந்தன. இந்தக் கற்களுக்கு 'நக்' என்று பெயர். ஆகையால் இவ்வகை வளையல் களுக்கே 'நக்' என்ற பெயர் ஏற்பட்டது.

நல்ல துணியாலான ரவிக்கை, மிக மெல்லிய மேலாடை, மடிப்புகள் வைத்துத் தைக்கப்பட்ட பாவாடை, இவற்றுக் கிடையே கோதுமை நிறத்தில் ஓர் அழகிய முகம். ஈத் பண்டிகை கொண்டாடிவிட்டு வரும் ஒரு முஸ்லீம் ஸ்திரீ போலக் காட்சி யளித்தாள் அவள்.

சேட் அவளிடம் சென்று ஏதோ சுருக்கமாகச் சொன்னான்.

அவள் விருந்தாளிகளை வரவேற்க முன்னேறி வந்தாள். அவள் இறங்கி வரும்போது அவளுடைய பாவாடையும் மேலாடையும் காற்றில் அலையலையாகப் படபடத்தன.

''ஸஜ்ஜோ, இங்கே வா!'' அவள் வீட்டுக்குள்ளே இருந்த இன்னொரு ஸ்திரீயைக் கூப்பிட்டாள். சற்று நேரத்தில் மகீபத் ராமின் மனைவி தன் பெண்ணையும் பேரன், பேத்தியையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்துவிட்டாள்.

ஒரு கட்டிலின்மேல் மெத்தை விரிக்கப்பட்டது. அதன்மேல் மகீபத்ராமின் பெண்ணைப் படுக்க வைத்தார்கள். அந்த ஸ்திரீ ஒரு சிறிய அலமாறியைத் திறந்து அதிலிருந்து ஒரு பாட்டிலை எடுத்தாள். அதன் மூடியைத் திறந்ததுமே போதை கலந்த வாசனை காற்றில் மிதந்து வந்தது.

"இவளோட ஆடையைத் தளர்த்துங்க" என்று அந்த ஸ்திரீ சொன்னாள்.

திரவத்தின் காரமான மணத்தை மகீபத்ராமின் மனைவியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

"இது என்ன?" என்று கேட்டாள் அவள்.

"மருந்து" என்று அந்தப் பெண் பதில் சொன்னாள்.

"என்ன மருந்து?"

"அதைத் தெரிஞ்சுக்கிட்டு நீங்க என்ன பண்ணப் போறீங்க, அம்மா?" என்று கேட்டுக்கொண்டே அந்த ஸ்திரீ திரவத்தைக் கையிலெடுத்து அதைப் படுக்கையில் கிடந்த பெண்ணின் உடலில் பூசித் தேய்க்கத் தொடங்கினாள்.

பான்ஜா, அந்த ஸ்திரீ தன் தாய்க்குச் சிகிச்சை செய்வதைப் பார்த்துக்கொண் டிருந்தான்.

"அடீ ஸஜூ!" அந்த ஸ்திரீ மற்றவளிடம் போய், "ஓடிப் போய்க் கிணத்திலேயிருந்து ஒரு குடம் நல்ல தண்ணி கொண்டுவா!" என்று கூறினாள்.

தண்ணீர் வந்தது. ஒரு கோப்பைத் தண்ணீரில் பாட்டில் திரவத்திலிருந்து சில துளிகளை ஊற்றி அந்த ஸ்திரீ கோப்பையை மயங்கிக் கிடந்த பெண்ணின் வாயில் வைத்தாள்.

"ஊஹூம், ஊஹூம்!" என்று சொல்லிக்கொண்டே மகீபத்ராமின் மனைவி அவளுடைய கையைப் பிடித்தாள்.

"என்ன?"

"கள்ளை என் பெண்ணுக்குக் கொடுத்து அவளைப் பிரஷ்டம் செய்து விடாதே!"

"நீங்க சும்மா இருங்கம்மா! அவ இப்போ மயக்கமாக் கிடக்கா. முதல்லே அவளைக் காப்பாத்த முயற்சி பண்ணணும். பின்னாலே வேணுமின்னா தீர்த்த யாத்திரை பண்ணிப் பிராயச்சித்தம் செஞ்சுடுங்க."

தலைமுறை தலைமுறையாகக் கள் குடிப்பது பாவம் என்றும் அதைத் தொட்டாலே நரகவாசம் கிட்டுமென்றும் நம்பி வந்திருந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணின் தாய் மௌனமானாள்.

கொஞ்சங் கொஞ்சமாக அந்தப் பெண்ணின் உடலில் உஷ்ணமான இரத்தம் பரவத் தொடங்கியது. இவற்றையெல்லாம் பான்ஜா ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய தாய் மயக்கமாகக் கிடந்தாள். ஆனால் தன்னைச் சுற்றிலும் இனிய இசையின் ஒலி பரவியிருந்ததாக அவன் உணர்ந்தான். அந்த ஸ்திரீயின் அழகும் அவள் அணிந்திருந்த உடைகளின் நிறங்களும் அவனிடம் ஓர் இனிய உணர்ச்சியைத் தோற்றுவித்தன. பிராந்தியின் தீவிரமான மணத்திலும் முற்றத்திலிருந்து வந்த குதிரை லத்தியின் நாற்றத்திலுங்கூட ஏதோ ஓர் இனம் புரியாத கவர்ச்சி இருந்தது.

பத்துப் பதினொன்று வயதே நிரம்பியிருந்த பான்ஜாவுக்கு ஒன்று மட்டும் புரிந்தது. அவன் இதுவரை பார்த்திருந்த பெண்கள் எல்லாரும் உடைகள் அணிந்த, உயிருள்ள மூட்டைகளைப் போலிருந்தார்கள். ஆனால் இந்த ஸ்திரீ அணிந்திருந்த உடையோ அவளுடைய உடலைச் சும்மா மறைத்துக்கொண் டிருக்கவில்லை. மாறாக, அவளுடைய ஒவ்வோர் அங்கத்தின் அழகின் இசையையும் வெளிப்படுத்திக்கொண் டிருந்தது.

இத்தகைய ஜீவன் ததும்பும் உலகத்தில் அவனுடைய தாய் மயக்கம் தெளிந்து கண் விழித்ததில் வியப்பு என்ன? அவளது மயக்கம் தெளியாமல் இருந்தால்தான் ஆச்சரியமாயிருக்கும்.

பான்ஜா வெளியே ஓடி வந்தான். உயரமான வராந்தாவின் செங்குத்தான படிகளில் இறங்குவது அவனுக்குச் சற்றுக் கஷ்டமாக இருந்தது. பம்பாயில் வசித்தவனாதலால் உயரம் குறைந்த படிகளில் ஏறி இறங்கித்தான் அவனுக்குப் பழக்கம்.

ஒரே பாய்ச்சலில் அவன் வெளியே வந்தான். குதிரையின் பின்புறத்தில் கட்டப்படும் கயிறு வழியில் கிடந்தது. பான்ஜா அதில் தடுக்கி விழுந்தான். பக்கத்தில் கட்டப்பட்டிருந்த கன்றுக்குட்டிகளைத் தவிர வேறு யாருக்கும் அவனுடைய அழுகை கேட்கவில்லை.

அவன் வாசலுக்கு வந்து, ''அம்மா எழுந்துவிட்டாள்'' என்று யாவரிடமும் கூறினான்.

கெட்ட செய்தியை எதிர்பார்த்துத் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவனுடைய தாத்தாவுக்கு எமனே சுடுகாட்டிலிருந்து தன் பெண்ணைத் திருப்பியழைத்துக்கொண்டு வந்துவிட்டது போல் தோன்றியது.

பக்கத்தில் ஒரு பலகையின் மேல் உட்கார்ந்திருந்த சேட் இப்போது எழுந்து வேலைக்காரர்களைக் கூப்பிடத் தொடங்கினார். ''என்னடா, குதிரைகளுக்கு உடம்பு தேய்ச்சிவிட்டீங்களா?

தோட்டி ஒட்டகத்துக்குப் புல் வெட்டிக்கிட்டு வந்தானு? ஒட்டகம் ஏன் இன்னும் வரல்லே? போய்ப் பாருங்கடா! எங்கேயாவது வேப்ப இலேயைத் தின்னுக்கிட்டு இருக்கப் போகுது.''

மகீபத்ராமின் தந்தை ருத்ராக்ஷ மாலேயைக் கைகளால் உருட்டிக்கொண்டே சிவ தாண்டவ ஸ்தோத்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். ஸ்தோத்திரத்தின் ஒவ்வொரு வார்த்தையும் அந்தப் பிராமணனின் தொண்டையிலிருந்து ஆடி மாதத்து இடிபோல் கம்பீரமாக ஒலித்தது.

மகீபத்ராம் பான்ஜாவிடம், ''பான்ஜா, இது யார் தெரியுமா?'' என்று கேட்டார்.

''யார்?''

''இவர்தாம் புலியை ரெண்டாக் கிழிச்சுப் போட்ட ரூக்கட் சேட்!''

பான்ஜா சேட்டை இப்போது ஒரு புதிய பார்வையுடன் பார்த்தான். எப்போதும் அவனுடைய பார்வை முதல் முதலில் அவருடைய உடம்பில் வளர்ந்திருந்த அடர்ந்த ரோமங்களில்தான் சென்று நிலேத்தது. கிழவனுரின் கைகளிலும் மாடு மேய்க்கும் இளேஞன் லக்ஷ்மண்பாயியின் மார்பிலும் வளர்ந்திருந்ததைவிட அடர்த்தியான ரோமங்கள் சேட்டின் உடம்பில் வளர்ந்திருந்தன.

பான்ஜா கிழவனுரிடம் சொன்னுன், ''பெரிய தாத்தா! வீட்டுக் குள்ளே இருக்கறது யாரு தெரியுமா?''

''யாரு?''

''அம்மாவுக்கு வைத்தியம் பண்ணினுங்களே, அந்த அம்மா ரொம்ப நல்லவங்க. அவங்க கட்டிக்கற மாதிரி நல்ல துணியெல்லாம் என்னேட அம்மா ஏன் கட்டிக்கறதில்லே? கட்டிக் கிண்டா என்னேட அம்மாவும் எவ்வளவு அழகா இருப்பாங்க, தெரியுமா? அந்த அம்மா நமக்கு ரொம்பத் தெரிஞ்சவங்க மாதிரி சிரிச்சுச் சிரிச்சுப் பேசருங்க, பெரிய தாத்தா!''

இதைக் கேட்டபோது ரூக்கட் சேட்டுக்கு ஏற்பட்ட சங்கோசத்தை அவருடைய அடர்ந்த மீசையும், தாடியும் மறைத்து விட்டன. அவருக்கு இப்போது வயது முப்பதுதான் இருக்கும். ஆனுல் பத்து வருடங்களுக்கு முன்னிருந்தே அவருடைய தோற் றத்தில் நாற்பது வயதானவரின் கம்பீரம் குடிகொண்டுவிட்டது.

''காங்க்லீயைக் கறந்தாச்சா?'' என்று கேட்டுக்கொண்டே அவர் அங்கிருந்து மாட்டுக் கொட்டகையை நோக்கி நடந்தார். அங்கிருந்து நகர்வதற்கு ஒரு சாக்குத்தான் அந்தக் கேள்வி.

ஒக்காவில் செய்யப்பட்ட அவருடைய செருப்புகள், கொத்தனர் திமிசு கொண்டு தளத்தைச் சமப்படுத்தும்போது உண்டாகும் 'கட்...கட்' ஒலியை எழுப்பின.

''அந்த அம்மாள் யார்?'' என்று மகீபத்ராம் தம் பக்கத்திலிருந்த ஆளைக் கேட்டார்.

அந்த ஆள் மெல்லிய குரலில், ''அவ ஒரு சிபாரண் (சிப்பாயின் மனைவி). சேட்டின் வீட்டிலேயே இருக்கா, சின்ன வயசுதான்'' என்று பதில் அளித்தான்.

7

தூணலி நதியின் கரையில் மேட்டுப்பாங்கான இடத்தில் ஒரே மாதிரியாகக் கட்டப்பட்ட, சுண்ணும்பு பூசிய வீடுகள் காணப்பட்டன. அவற்றைக் கண்டதும் பான்ஜாவின் மனம் முதல் முதலில் மேகத்தைப் பார்க்கும் மயிலைப் போலக் குதிக்கத் தொடங்கியது.

அதுதான் 'அவுட்போஸ்ட்'-பைரவ்கட் போலீஸ் ஸ்டேஷன்.

மூன்று மைல் தூரத்திலிருந்தே வீடுகள் சிரித்துக் கொண்டிருப்பதுபோன்ற தோற்றம் அளித்தன. நதியின் ஒரு கரை தங்கத் தட்டைப்போல் அழகிய மைதானமாக இருந்தது. மறுகரை, பொம்மை வீடுகள் நிறைந்த மலைப்பிரதேசம். வண்டிகள் தூணலி நதியை நெருங்குவதற்கு முன்பே ஒட்டகத்தின் கனைப்பு ஒலியைப் போல, நதிப்பிரவாகத்தின் கம்பீரமான ஒலி கேட்கத் தொடங்கி விட்டது. ஆற்று நீரின் வேகத்தால் படுகை, கற்கள் நிறைந்து மேடுபள்ளமுமாய் இருந்தது. படுகையைக் கடக்க ஒவ்வொரு வண்டியிலும் இரண்டு ஜோடி மாடுகளைக் கட்டவேண்டியிருந்தது.

மகீபத்ராமின் கோஷ்டி அங்கே வந்து சேர்ந்தபோது ஒரு நொண்டி ஒட்டகம் அங்கே படுத்திருந்தது. சில காக்கைகள் அதன் மூக்கிலிருந்து பூச்சிகளைப் பொறுக்கிப் பொறுக்கித் தின்றன.

அந்த அநாதை ஒட்டகத்தைப்போல அந்தப் பிரதேசத்துக்கும் சொந்தக்காரன் எவனும் இல்லையோ என்று தோன்றியது.

சரக்கு ஏற்றப்பட்ட ஐந்தாறு வண்டிகள் ஆற்றின் மறுகரையிலிருந்து ஆற்றைக் கடக்க வசதியான பாதையைத் தேடிக்கொண்

டிருந்தன. மாடுகள் தொடை மட்டத்துத் தண்ணீரில் ஆற்றைக் கடந்தன. தண்ணீருக்குள் கிடந்த பாறைகளில் மாடுகளின் குளம்புகளும் சக்கரங்களும் சிக்கிக் கொண்டன.

''நான் அதிகாரியாக ஆகும்போது இந்த நதியில் உயரமான பாலம் கட்டப் போறேன்'' என்று சொல்லிக் கொண்டான் பான்ஜா.

''யாரு? புது சாகிப்பா? உங்க குழந்தைகுட்டிகள் எல்லாம் சௌக்கியந்தானே?''

கரைமேட்டில், கோவணம் மட்டும் அணிந்து நின்றிருந்த ஒரு சாது கேட்டார். அவருக்குப் பின்னால் ஒரு குடிசை இருந்தது. அங்கே ஒரு கன்றுக்குட்டி முக்காரமிட்டுக்கொண்டிருந்தது. குடிசைக்கு நாற்புறமும் ஒரு முள்வேலி காணப்பட்டது. அங்கு வேப்பமரத்தின் அடர்ந்த நிழல் பரவியிருந்தது. குடிசையின் உச்சியில் ஒரு சிவப்புக் கொடி பறந்துகொண் டிருந்தது.

''ஆமா, உங்களுக்குச் சேவைசெய்ய வந்திருக்கோம்.'' மகீபத்ராம் பணிவுடன் பதில் அளித்தார்.

அதிகாரிகளைக்கூடக் 'குழந்தை' என்று அழைக்கும் உரிமை இந்தச் சாமியார்களுக்கு உண்டு என்று பான்ஜாவுக்குப் புரிந்தது.

''அநுமார் ஒன்னெக் காப்பாத்துவார், கொழந்தே! தேங்காய் உடைக்கறதாப் பிரார்த்தனை பண்ணிக்கிட்டுப் போ! ஒன் ஆசையெல்லாம் நிறைவேறும்'' என்று ஆசீர்வாதம் செய்துவிட்டுச் சாமியார் ஹூக்கா குடிக்கத் தொடங்கினார்.

வண்டிகள் கிராமத்து மேட்டில் ஏற ஆரம்பித்தன.

மகீபத்ராம் தம் தந்தையிடம், ''இவங்கள்ளாம் முன்னாலே சாமியாராயில்லே அம்பத்தேழாம் வருஷத்துக் கலகத்தின்போது இவங்க வட இந்தியாவிலேருந்து இங்கே ஓடி வந்து ஒளிஞ்சுகிட்டாங்க. அதுக்கப்பறம் வங்காளத்திலேருந்து சில புரட்சிக்காரங்க இங்கே வந்து சேர்ந்தாங்க. அவங்கதான் இப்போ சாமியாராயிட்டாங்க!'' என்று கூறினார்.

''இவங்களையெல்லாம் பிடிக்கச் சொல்லிச் சர்க்கார் உத்தரவு போடல்லியா?'' என்று கிழவனார் தணிந்த குரலில் கேட்டார்.

''போட்டிருக்காங்க. ஆனா, சாமியார்களைப் பிடிச்சுட்டு அந்தப் பாவத்தை யார் சுமப்பா? அதைத் தவிர இவங்கள்ளாம் தேசத்துக்காகப் போராடினவங்கதானே!''

''உண்மைதான். இவங்கதான் தேசத்தோட உண்மையான பிள்ளைகள்!''

மகீபத்ராம் இடிந்து போன பழைய கோயில், கள்ளுக்கடை, கொல்லுப் பட்டறைகள் ஐந்து, வேப்பமரத்தடி அநுமார் கோயில், பத்துப் பதினைந்து இடிந்த மனைகள் இவற்றைக் கடந்து போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார். அங்கே ஒரு நாயக்கும் மூன்று சிப்பாய்களும் கொண்ட ஒரு போலீஸ் கோஷ்டி 'அட்டென்ஷ'னில் நின்று அவருக்கு வரவேற்பு அளித்தது.

மூன்றும் நாளே தேவகி கிராமத்தில் பீதி நிலைமை பரவியிருப்பதாகச் செய்தி கிடைத்தது.

நடந்தது இதுதான்.

முதல் நாள் ரூப்கட்டின் ராஜா மோட்டாரில் ரூக்கட் சேட்டின் வீட்டுக்கு வந்து அவரை வேட்டைக்குக் கூப்பிட்டார். அவர்கள் கிராமத்துத் தலைவனை குயவன் கானுபாயியையும் அழைத்துக் கொண்டு வேட்டையாடக் காம்பா மலைக்குச் சென்றார்கள். கானுபாயிக்கும் வேட்டையில் பிரியம் உண்டு. குறி வைத்துச் சுடுவதிலும் அவன் கெட்டிக்காரன்.

பபூதியா என்ற பெயருள்ள ஒரு சிங்கத்தை ராஜா தம் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தி விட்டார். காயம்பட்ட சிங்கம் எங்கோ ஒளிந்து கொண்டு விட்டது. மாலை வரையில் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மாலையில் அவர்கள் திரும்பிச் செல்லும்போது வழிலில் ஒளிந்திருந்த அது அவர்கள் மேல் பாய்ந்தது. ரூக்கட் சேட் துப்பாக்கியோடு தன் கையைச் சிங்கத்தின் வாய்க்குள் விட்டிருக்காவிட்டால் அது ராஜாவைக் கொன்றிருக்கும். சரியான நேரத்தில் ரூக்கட் சேட் சிங்கத்தைத் தரையில் தள்ளினார். உடனே ராஜாவின் குண்டு அதைத் துளைத்துக் கொன்று விட்டது. ராஜா மகிழ்ச்சியுடன் ரூக்கட் சேட்டின் முதுகைத் தடவிக் கொடுத்தார். ஆயிரத்தெண்ணூறு கிராமங்களின் அதிபதியான அவரிடமிருந்து பாராட்டு வார்த்தைகள் வெளி வந்தன, ''சபாஷ், சேட்ஜி! உங்க அம்மா கொடுத்து வச்சவதான்!'' என்று.

இதற்குள் கானுபாயி ராஜாவிடம் சொன்னான், "தர்பார்! இந்த ஆண்மையின் விதை.........''

அவன் தன் பேச்சை முடிப்பதற்குள் ரூக்கட் சேட் சிங்கத்தால் கடிக்கப்பட்ட தம் கையை மற்றொரு கையால் தாங்கிக் கொண்டு

மோட்டாரில் ஏறி நின்றவாறே சொன்னுர்: ''காஞ படேல்! நான் வைசியனல்ல, காட்டிக்குப் பிறந்தவன் என்று நீ சொல்லு கிருய்! நான் இன்னும் ஆறு மாதத்துக்குள் உன்னைக் கொன்று நான் வைசியனுக்குப் பிறந்தவன்தான் என்று நிரூபிக்கப் போகி றேன்! மகாராஜா, உங்களுக்கும் சொல்லி வைக்கறேன். இன்னும் ஆறு மாசத்துக்குள்ளே எங்க இரண்டு பேரில் யாராவது கொல்லப் பட்டால் கொலை செஞ்சவனை நீங்க தேடப் போக வேண்டாம். எங்களிலே உசிரோட இருக்கறவன்தான் கொன்னவன்னு நிச்சயமா நம்பலாம்.''

ராஜா வேட்டைக்காகக் கூட வந்தவர்களுக்குக் கால் கால் ரூபாய் இனும் கொடுத்து அனுப்பி விட்டார். ஆனுல் காஞ படே லுக்கும் ரூக்கட் சேட்டுக்குமிடையே கடுமையான விரோதம் ஏற்பட்டு விட்டது. காஞவை அவனுடைய ஐந்து பிள்ளைகளும் காவல் காக்கத் தொடங்கினுர்கள். அவன் தூங்கும் இடம் ஒவ் வோர் இரவிலும் ஐந்தாறு தடவைகள் மாற்றப்பட்டது.

இந்தச் சமயத்தில் தான் பான்ஜா பிஞகி அங்கிருந்து சுமார் இருபது மைல் தூரத்திலிருந்த பட்டினத்துக்கு ஆங்கிலம் படிக்க அனுப்பப்பட்டான்.

8

ஆறு மாதங்களுக்குப் பிறகு பிஞகி, தீபாவளி விடுமுறைக்கு வீடு திரும்பியபோது முதல் பத்து மைல் பிரயாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் வண்டி மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அதிகாரியின் மகனுக்கென்று வண்டிகள் கட்டாய முறையில் வர வழைக்கப்பட்டன, ஒரு கிராமத்து வண்டி அவனை மறு கிராமம் வரையில் கொண்டு வந்துவிடும். வண்டி ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந்ததும் அவ்வூர்ப் போலீஸ் தலைவன் சௌக்கீதாரைக் கிராமத் தலைவனிடம் அனுப்புவான். கிராமத் தலைவன் ரிகார்டுகளைப் புரட்டிக் கட்டாய வேலைக்கு யாருடைய முறை என்று பார்ப்பான். யாருடைய முறையோ அந்தக் குடியானவனுக்குச் செய்தி அனுப்பப்படும். அவன் இரண்டு மைல் தூரத்திலுள்ள தன் வயலுக்கு ஓடி ஏரில் கட்டப்பட்டுள்ள மாடுகளை அவிழ்த்துக் கொண்டு வருவான்.

இவ்விதம் பிஞகியின் பிரயாணம் தொடர்ந்தது.

மகீடா கிராமத்திலிருந்து பிரயாணம் செய்யப் பிஞகிக்கு ஒரு பெண் குதிரை கிடைத்தது. குதிரை நடுத்தர உயரம், ஆரஞ்சு நிறம், அதன் கழுத்தில் நீளமான பழுப்புநிறப் பிடரிமயிர் தொங்கிக் கொண்டிருந்தது. அது தன் காதுகளை விறைத்துக் கொண்டு நின்றபோது பிஞகியின் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி தோன்றியது. அதன் லத்தி, சிறுநீர் ஆகியவற்றின் நாற்றங்கூட அவனுக்குப் பிடித்திருந்தது.

குதிரையின் முதுகு பலகைபோல் அகலமாக இருந்தது. அதன் மேல் சேணமும், சேணத்தின் மேல் மிருதுவான மெத்தையும் போடப்பட்டிருந்தன. சிறுவஞகிய பிஞவை அது விளையாட்டுப் போல் தன்முதுகில் ஏற்றிக்கொண்டது. சலனமில்லாத தண்ணீர்ப் பரப்பில் படகு வழுக்கிக்கொண்டு செல்வதைப்போல் மிகவும் அநாயாசமாகச் சென்றது அக்குதிரை. கூடவந்த சௌக்கீதாரைப் பின்தங்க வைத்துவிட்டு அது ஒரு மணி நேரத்துக்குள் பக்கத்துக் கிராமத்தில் கொண்டுவந்து சேர்த்து விட்டது. ஒரு தாய் தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடப்பதுபோல் அந்தக் குதிரை பிஞகியைத் தூக்கிக்கொண்டு தூஞலி நதியைக் கடந்தது.

வழியில் குதிரையைப் பார்த்தவர்கள் திகைத்துப் போய் விட்டார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர், "எல்லாம் காலத்தோட கோலம்! முந்தி இந்தக் குதிரை தன் எஜமானைத் தவிர வேறே ஒருத்தரையும் தன் கிட்டே அண்ட விடாது. அந்த மீசைக்கார சேட் மட்டுந்தான் அது மேலே ஏறுவான். இப்போ இந்த உதவாக்கரைக் குதிரை கட்டாய வேலைக்குச் சுமை தூக்க ஆரம்பிச்சிருக்கு! நன்னி கெட்ட ஜன்மம்!" என்று சொல்லிக் கொண்டார்கள்.

ஆற்றங்கரைச் சாமியார் ஹுக்கா பிடித்துக் கொண்டே ஏளனமாகச் சிரித்தார். "அடே, இந்தக் கழிசடை எங்கே இருந்து வந்தது?"

"சீ கழுதை!" என்று திட்டிஞன் கள்ளுக்கடை ரங்கலால்.

அநுமார் கோயில் பூசாரியும் ஜமால்ஷா சமாதியில் சேவை செய்து வந்த பக்கிரியுங்கூட அந்தக் குதிரையைத் திட்டிஞர்கள்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் வரும்போதே அது தனக்கு மிகவும் பரிசயமான ஏதோ ஒன்றை மோப்பம் பிடித்தது போல் மூக்கை விடைத்துக்கொண்டு மிகவும் வேதனையுடன் கனைக்கத் தொடங்கியது.

அதன் கனைப்பொலியைக் கேட்டதும் 'லாக்அப்' அறையிலிருந்து ஒரு குரல் வந்தது, ''கேஸர்! நீயா அம்மா! நான் இங்கேதான் இருக்கேன்!'' என்று.

பாராவில் இருந்த சிப்பாய் திகைத்துப் போய் நின்றுவிட்டான். சற்றுத் தூரத்தில் படுத்துக் கொண்டிருந்த நாயக்கும் மற்ற இரண்டு சிப்பாய்களும் எழுந்திருந்து பெல்ட்டை இறுகக் கட்டிக் கொண்டே 'லாக்அப்' அறையை நோக்கி ஓடிவந்தார்கள்.

'லாக்அப்'பில் இருந்தவனை நாயக் அதட்டினுன். "என்ன ஐயா சேட்! ஜெயில்லே இருந்துகிட்டு இப்படியெல்லாம் குரல் கொடுக்கலாமா? அதிகாரிகள் காதிலே விழுந்தா எங்கப்பாடு திண்டாட்டம்.''

குதிரை தொடர்ந்து கனைத்துக் கொண்டே இருந்தது. தன் காலடியில் தரையில் நெருப்புப்பற்றிக் கொண்டது போல் அது தன் குளம்புகளால் தரையைப் பலமாக உதைத்தது. அதன் குரலில் வேதனை நிரம்பியிருந்தது, கண்களிலிருந்து நீர் வழிந்தது, உடலெல்லாம் வேர்வையால் நனைந்தது.

நிறைய மக்கள் அங்கே கூடிவிட்டார்கள். பிணுகியைக் குதிரையிலிருந்து இறக்கிவிட்டு அவர்கள் அதைச் சமாதானப்படுத்த முயன்ருர்கள். சிலர் அதன் முதுகைத் தடவிக் கொடுத்தார்கள், சிலர் நெற்றியைத் தடவினுர்கள், சிலர் அதன் பிடரியைச் சொறிந்தார்கள்.

தேனீக்கு மலர்களை மோப்பம் பிடிக்கத் தெரியுமோ தெரியாதோ, குதிரைக்கு மனிதர்களை மோப்பம் பிடிக்கத் தெரியும். 'கேஸர்' என்ற பெயருள் அந்தக் குதிரை தன்னைப் பிடித்துக்கொண் டிருந்த நான்கு முரட்டுச் சிப்பாய்களையும் கூடவே இழுத்துக்கொண்டு 'லாக்அப்' அறையை நோக்கி நடந்தது.

தானேதாரின் வீடு கச்சேரியின் இடதுபக்கம் இருந்தது. வலது பக்கம் கஜாணுவும் 'லாக்அப்'பும் இருந்தன. அருகிலேயே சிறைக் கைதிகளுக்குச் சமையல் செய்வதற்கெனக் குடிசையும் இருந்தது.

தானேதாரின் வீட்டுக் கதவு சற்றுத் திறந்தது. அந்த இடைவெளியில் தானேதாரின் நீண்ட உருவத்தின் ஒரு பகுதி மாத்திரம் வெளியே வராமலேயே, ''என்ன சத்தம் இது?'' என்று அவர் கேட்டார்.

"கொலைக் குற்றம் செய்த கைதியோட குதிரை அமர்க்களம் பண்றதுங்க" என்ருன் நாயக்.

''ஏன்?''

''அதுக்குத் தன் எசமானைப் பார்க்கணுமாம்!''

''நல்லாயிருக்கே இது! இது என்ன கடைத் தெருவா? இது கன்டோன்மெண்டாக்கும், கன்டோன்மெண்ட்!'' இப்படி உறுமி விட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு விட்டார் தானேதார்.

ஆனால் அவருடைய மூன்று பெண்களும் வேடிக்கை பார்க்க வெளியே வந்து விட்டார்கள். பிஞகியும் காவல் அறையின் வெளியே நின்றுகொண்டு ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். கைதியைப் பார்க்க அவனுக்கு ஆவல்.

''ஜமாதார் சாகிப் வந்து விட்டார்!'' நாயக்கும் சிப்பாய்களும் அட்டென்ஷனில் நின்றார்கள்.

சாலையின் புழுதி, மாவைப் போல் மகீபத்ராமின் முகத்தில் படிந்தது.

''என்ன சமாசாரம்?''

நாயக் விஷயத்தைத் தெரிவித்தான். கைதியின் குதிரையைச் சமாளிக்க முடியவில்லை. குதிரை, தன்னைப் பிடித்துக் கொண்டிருந்தவர்களின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டிருந்தது.

குப்பையை வாரிச் சேர்த்து அதற்கு நெருப்பு வைக்கும் தோட்டி போலக் குளிர் காலத்துச் சூரியன் இலேசான மேகத் துண்டுகளைச் சிவப்பாக்கிக் கொண்டு வானத்தில் ஏறிக் கொண்டிருந்தான்.

''இதிலே என்ன வந்தது? குதிரையை 'லாக் அப்' கதவு வரை கொண்டு போய் விடுங்களேன்!'' என்றார் மகீபத்ராம்.

''தானேதார் சாகிப் தான்......''

''சரி சரி, சட்டமெல்லாம் எங்கிட்டே பேசாதே! குதிரையைக் கொண்டு போ!''

''அப்படியே எசமான்!'' நாயக் சலாம் செய்தான். மற்றச் சிப்பாய்களுக்கும் சந்தோஷந்தான்.

அவன் எப்போது உள்ளே போனான் என்றோ, எப்போது தன்னுடைய கைக்காப்பு தானேதாரின் இரண்டாவது பெண் புஷ்பாவின் கையுடன் உரசியது என்றோ பிஞகிக்கே தெரியவில்லை.

குழந்தைகளும் சிப்பாய்களும் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். குதிரை 'ஹீங், ஹீங்' என்று கனைத்துக் கொண்டே வராந்தாவின் மேல் ஏறியது. பைராகியின் கையில் உடுக்கை ஒலிப்பது போல் அதன் குளம்புகள் வராந்தாவின் தளத்தில் சப்தித்தன. அதன் உதடுகள் 'லாக் அப்'புக் கதவின் கம்பிகளை நக்கத் தொடங்கின.

கைதி வாயிற்பக்கம் முதுகைத் திருப்பிக் கொண்டு நின்று கொண்டிருந்தான்.

"சேட், இப்போ உன் குதிரையைப் பார்த்துக்கோ!''

புஷ்பாவையும் இழுத்துக் கொண்டு பிஞகி முன்ஞல் போஞன்.

தன் பக்கம் முகத்தைத் திருப்பிய கைதியை அடையாளங் கண்டு கொண்டான் பிஞகி. தன் தாய்க்கு உயிரைக் கொடுத்த ரூக்கட் சேட் தான் அவர்!

அவர் குதிரையைக் கொஞ்சிஞர், "கேஸர், சௌக்கியமா இருக்கியா?'' என்று.

அவர் அப்போது தான் தம் கண்களைத் துடைத்திருந்தார். ஆஞல் அவருடைய கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் இன்னும் முத்துப் போல் பளபளத்தன. அவருடைய விரல்கள் குதிரையின் பிடரி மயிரை அன்புடன் அளைந்தன. குதிரையின் நெற்றியில் வெள்ளைத் திலகம் போல் வளர்ந்திருந்த மயிர்க் கற்றையிலிருந்து அவர் ஓர் உண்ணியை எடுத்து வெளியே எறிந்தார்.

"இது ராஜ்கோட்டிலேருந்து வருதா?'' என்று நாயக் கேட்டான்.

"ஆமா, நான் அங்கே போயிருந்தேன், கோர்ட்டிலே ஆஜராக!'' தழுதழுத்த குரலில் சேட்டிடமிருந்து பதில் வந்தது.

அவர் குதிரையுடன் பேச ஆரம்பித்தார்: "அம்மா கேஸர், இப்போ நீ சமத்தா வீட்டுக்குப் போகணும். ஜாக்கிரதையா இரு. பின்காலைக் கயத்தாலே கட்டறபோது உதைக்கக் கூடாது. காட்டிலே மேயப் போறபோது மட்டக் குதிரைகளை உங்கிட்டே அண்ட விடக்கூடாது, புரிஞ்சதா?'' குதிரைக்கு மட்டுமே கேட்கும்படியாக அவ்வளவு மெல்லிய குரலில் பேசிஞர் அவர்.

அங்கே கூடியிருந்த மற்றவர்களும் ஏதோ ஒரு தேவதையின் அவதாரத்தைத் தரிசிப்பதுபோல் பயபக்தியுடன் மௌனமாக இந்தக் காட்சியைப் பார்த்தார்கள்.

குதிரை தலையைக் குனிந்து கொண்டது. சேட் கடைசித் தடவையாக அதன் தலையைத் தடவிக் கொடுத்து விட்டுச் சொன்ஞர்: "சரி, போயிட்டு வா, குழந்தே! இதைக் கூட்டிக்கிட்டுப் போங்கய்யா!''

அருகில் நின்றவர்கள் குதிரையின் பட்டுப்போல் மிருதுவான வாலைத் தடவிக் கொடுத்தார்கள். பிறகு எல்லோரும் ஒவ்வொருவராக நகர்ந்தார்கள்.

பிஞகி புஷ்பாவின் கையுடன் கைகோத்துக் கொண்டு இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் கதவருகில் போய் நின்று கொண்டு கைதியுடன் பேசத் தொடங்கிஞன். "சிங்கத் தோடே சண்டை போட்டது நீங்கதானே?''

''அட, நம்ம பான்ஜாவா! நீ ரொம்பப் பெரியவனுயிட்டியே!'' என்று கூறி ஆச்சரியப்பட்டார் சேட்.

இப்போது தான் புஷ்பாவும் திரும்பிப் பிஞகியைக் கவனமாகப் பார்த்தாள். இந்த ஆறேழு மாதங்களுக்குள் பிஞகி ரொம்பவும் வளர்ந்திருக்கிருன் என்று அவளுக்கும் தோன்றியது.

''நான்தான் உங்க குதிரையிலே ஏறி வந்தேன்.''

''ரொம்ப நல்லது பான்ஜா.''

''எனக்கு உங்க குதிரை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''நான் வெளியே இருந்தேன்ஞ உன்னைக் குதிரைமேலே ஏத்தி நல்லா சவாரி பண்ண வச்சிருப்பேன்.''

''சரி, நீங்க வெளியிலே வந்தப்பறம்......''

''நான் வெளியிலே வரமாட்டேனே.''

''ஏன்?''

''நான் ஒரு கொலை பண்ணிட்டேன். எனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும்.''

பிஞகிக்கு இப்போது ஞாபகம் வந்து விட்டது. ''ஓ! நீங்க காட்டிக்குப் பொறந்தவன்னு சொன்ஞனே ஒரு ஆள், அவனைக் கொன்னுட்டீங்களா?''

''ஆமா! அவன் என்னை என்ன சொன்ஞலும் பொறுத்துக் கிட்டிருந்திருப்பேன். செத்துப் போயிட்ட என் அம்மாவைப் பத்தின்ஞ அவன் கெடுதலாப் பேசிட்டான். அந்தப் பேச்சை என்ஞலே பொறுத்துக்க முடியுமா?''

சேட் சோல்லியதன் கருத்தைப் பிஞகியால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் அவருடைய குதிரையைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். அதன் மேல் சவாரி செய்த பெருமையை அவன் தானறியாமலேயே புஷ்பாவின் முன் வெளிப் படுத்திக் கொண்டிருந்தான்.

''நான் உங்க குதிரைக்குத் தீனி போட ஏற்பாடு பண்ணப் போறேன். அதுக்குக் கம்பு தானியங்கூடக் கொடுக்கிறேன்'' என்று சொல்லி விட்டுப் பிஞகி கிளம்பிஞன்.

''நீ எப்போ வந்தே?'' என்று புஷ்பா அவனைக் கேட்டாள்.

''அப்புறம் வந்து செல்றேன். இப்போ குதிரையைக் கவனிக் கணும்'' என்று சொல்லிக் கொண்டே ஓடிஞன் பிஞகி.

இதற்கிடையில் தானேதாரின் வீட்டுப் பக்கத்திலிருந்து, ''இங்கே பெரிய அதிகாரி யாரு? நாஞ, அவஞ? கொலைகாரங் களையும் குத்தவாளிகளையும் தலைமேலே வச்சுக்கிண்டு கூத்தாட ருன், ஊம்!'' என்று உரத்த குரலில் பேசும் சத்தம் கேட்டது.

பக்கத்திலிருந்த ஜமாதாரின் ஆபீசில் தானேதாரின் பேச்சு தெளிவாகக் கேட்டது. இதற்குப் பதில் சொல்வதுபோல் மகீபத் ராம் தம் அருகில் இருந்தவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''பார்த்தீங்களா? இவன்தான் மாஜிஸ்டிரேட்டாம், மாஜிஸ்டிரேட்டு! இப்போ என்ன நடந்துடுத்து? சர்க்காரோட சிம்மாசனம் கவுந்து போயிடுத்தா?''

வீட்டுக்குள் பிஞகி தன் பாட்டிக்குத் தெரியாமல் கம்பு வைத்திருந்த டப்பாவிலிருந்து கம்பை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டிருந்தான், குதிரைக்குப் போடுவதற்காக.

9

தீபடியா அருவி, போலீஸ் ஸ்டேஷன் இருந்த மேட்டு நிலத்தை ஒட்டியவாறு ஓடியது. அது பிரவகித்த பாதை மிகவும் குறுகலாக இருந்தது ; கரைகள் உயரமாகவும் செங்குத்தாகவும் இருந்தன. பிறந்தபின் நான்கைந்து தடவைகளே தாய்ப் பால் குடித்திருக்கும் மான் குட்டிகள்கூட அவற்றின் மேல் ஏறிக் குதித்து விளையாட ஆசைப்படும்.

மேலேயிருந்து விழும் அருவி நீரில் காலைச் சூரியனின் சாய்ந்த கிரணங்கள் பிரதிபலித்து அவ்விடத்தில் ஒரு வானவில்லைத் தோற்றுவித்தன.

போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுவதற்கு முன்னால் புலி, சிறுத்தை முதலிய காட்டு மிருகங்கள் இரவில் வேட்டையாடித் தங்கள் பசியைத் தீர்த்துக் கொண்ட பிறகு பின்னிரவில் அங்கேதான் வந்து தண்ணீர் குடிப்பது வழக்கம். அதனால்தான் அந்த அருவிக்குத் 'தீபடியா' என்ற பெயர் ஏற்பட்டது.

இரவில் அருவியிலிருந்து எழும்பிய ஒலி ஒரு பைத்தியக்கார இடையனின் அழுகையொலியை ஒத்திருந்தது.

எதிர்க்கரையில் நரிகளின் கூட்டம் சில சமயங்களில் ஓலமிடும். போலீஸ் ஹவில்தார் அல்லது நாயக்கின் கோழிகள் அடிக்கடி காணாமற் போய்விடும். பைத்தியம் பிடித்த நரி ஒன்று கொஞ்ச காலம் அந்தக் காட்டுப் பிரதேசத்தில் அமளி செய்து கொண்டிருந்தது.

அருவியின் அழுகைக் குரல் வெகு தூரத்துக்குக் கேட்கும். இரவில் மூன்றுமணிக்கொரு தடவை பாரா மாறும்போது பாராக்காரர்கள் சொல்லும் 'ஆல் வெல்' என்ற கோஷத்தைக் கேட்டு நாய்கள் குரைக்கத் தொடங்கும்.

அங்கு வசித்த சுமார் நூறு மனிதர்களில் அந்தப் பயங்கர இரவுகளை விரும்பி ரசித்தவன் பிஞகி ஒருவன்தான்.

ஒரு நாள் அவன் காலையில் பல் துலக்குவதற்கு வராந்தாவில் வந்து உட்கார்ந்தபோது கச்சேரி வாசலில் ஒரு பெரிய வண்டி, மாடுகள் பூட்டப்பட்டுத் தயாராக இருப்பதைக் கண்டான். ரூக்கட் சேட் ஒரு முரட்டுத் துணியைப் போர்த்துக்கொண்டு வண்டிக்குள் உட்கார்ந்திருந்தார். அவருடைய தலையில் ஒரு கறுப்புத் தலைப் பாகை இருந்தது. பல நாட்களாகச் சலவை செய்யப்படாததால் அது அழுக்காயிருந்தது. இருந்தாலும் கூடியமட்டில் அழுக்கில்லாத பகுதிகள் மட்டுமே வெளியே தெரியும் முறையில் தலையின் மூன்று பக்கங்களிலும் மடிப்பு மடிப்பாக வரும்படி தலைப்பாகையைக் கட்டிக் கொண்டிருந்தார், அக்கலையில் தேர்ந்த ரூக்கட்சேட். கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த அவரது நீண்ட முடி எதிரிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க அவர் அணிந்து கொண்ட கவசத்தைப் போலத் தோன்றியது.

''சேட்டை எங்கே கூட்டிக்கிண்டு போகப் போறுங்க?'' என்று பிஞகி தாத்தாவைக் கேட்டான்.

"ராஜ்கோட்'' என்று பதில் வந்தது.

ரூக்கட்சேட் தம்முடைய காவல்காரனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்: ''நான் உன்னிடம் ஏதாவது கடுமையாய்ப் பேசியிருந்தா என்னை மன்னிச்சுடுங்க!''

காவல்காரர்களிடமிருந்து பதில் வந்தது. ''நாம எல்லோரும் ஒரு நாள் அங்கே போகத்தானே போறோம்! ஒருத்தன் முன்னாலே போவான், இன்னொருத்தன் பின்னாலே போவான்: அவ்வளவுதான்.'' அவர்கள் கையால் ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினார்கள்.

சேட் வண்டியில் உட்கார்ந்தபடியே மகீபத்ராமுக்கும் பிஞகிக்கும் வணக்கம் தெரிவித்தார். பல் தேய்த்துக் கொண்டிருந்த அவ்விருவரும் அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

நாயக் மூன்று சிப்பாய்களுடன் மகீபத்ராமுக்கு முன்னால் அட்டென்ஷனில் நின்று கொண்டு சொன்னான். ''ஒரு கைதியையும் ஒரு காகிதக் கட்டையும் பெற்றுக்கொண்டு விட்டேன். எல்லாம் சரியாக இருக்கிறது.''

''சரி, கிளம்புங்க! ஜாக்கிரதையா இருங்க! வழியிலே தகராறு ஒண்ணும் இருக்காதே?''

''அதெல்லாம் ஒண்ணும் இருக்காதுங்க.''

''சரி, கிராமத்துக்குள்ளே போறபோது கைதியோட கட்டுகளை அவுத்து விட்டுட்டுக் கூட்டிக்கிட்டுப் போங்க.''

''சரிங்க. நாங்களும் இந்த விஷயத்தைப் பத்தித்தான் கவலைப் பட்டுக்கிட்டிருந்தோம்.''

வண்டி புறப்பட்டது. நாயக்கின் தலைமையில் போலீஸ் படையும் அவன் பின்னே சென்றது.

பாராக்காரன் கச்சேரி வாசலில் தொங்கிக் கொண்டிருந்த உலோகத் தகட்டில் ஒன்பது அடி அடித்தான்.

''பாவம்!'' என்றார் மகீபத்ராமின் தந்தை.

''என்ன?'' என்று பிநாகி கேட்டான்.

''இது ஒரு சகுனம். சாவுமணி இது! ரூக்கட் சேட்டுக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கப் போகிறது.''

''ராஜ்கோட்டிலே என்ன நடக்கும்?''

''கேஸ் நடக்கும்.''

''யார் நடத்துவாங்க?''

''செஷன்ஸ் ஜட்ஜ்.''

''ரூக்கட்சேட் மேலே என்ன குத்தம்? அந்தப் படேல்தானே சேட்டின் அம்மாவைத் திட்டினான்.''

''இந்தப் பான்ஜா ஜட்ஜாத்தான் ஆகப்போறான்'' என்று மகீபத்ராம் கேலி செய்தார்.

''ஆமா, ஆமா! அவன் ஜட்ஜா ஆறபோது சட்டத்துக்கு அவசியமே இருக்காது'' என்று சொல்லிச் சிரித்தார் கிழவர். மகீபத்ராமும் கூடச் சேர்ந்து சிரித்தார்.

அவர்கள் வேடிக்கை செய்வது பிநாகிக்குப் பிடிக்கவில்லை. அவன் மௌனமாகப் பல் துலக்கத் தொடங்கினான்.

மகீபத்ராம் பல்குச்சியை இரண்டாகக் கிழித்துக்கொண்டு அந்தத் துண்டுகளால் நாக்கை அடித்தொண்டை வரையில் வழித்துக் காறித் துப்பினார். பிறகு பல்குச்சிகளைக் கீழே எறிந்தார். அவை ஒன்றன்மேல் ஒன்றாக விழுந்து ஒரு ஸ்வஸ்திக் வடிவத்தில் அமைந்தது.

அதைக் கவனித்த மகீபத்ராம், ''இன்னிக்கு நல்ல சகுனம். நிறைய ஸ்வீட் கிடைக்கப்போறது இன்னிக்கு'' என்று கூறினார்.

பிநாகி சோர்ந்த குரலில், ''நான் இன்னிக்கு ஸ்வீட் சாப்பிடவே மாட்டேன்'' என்றான்.

''உன்னைப்பத்தி யார் சொன்னு? நான் என்னைப்பத்தின்னு பேசிக்கிண்டிருக்கேன்'' என்றார் மகீபத்ராம்.

சற்று நேரத்தில் மஞ்சள் கால் சராயும் கறுப்புக் கோட்டும் தொப்பியும் அணிந்த ஒரு சிப்பாய் நான்கு மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்திலிருந்து குதிரையில் வந்து இறங்கினான். குதிரை பனை மாதிரி உயரமாக இருந்தது. ஆனால் மிகவும் மெலிந்திருந்தது. அவன் மகீபத்ராமிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

கடிதத்தைப் பிரித்துப் படித்த அவர் சிரித்துக்கொண்டார்.

''எங்கேயாவது கலகமா?'' என்று அவருடைய தந்தை கேட்டார்.

''ஆமா, நல்ல லட்டு விருந்து இன்னிக்கு!''

''எங்கே?''

''ருத்ரேசுவர் மகாதேவ் கோயில்லே.''

''அங்கே யார் வந்திருக்காங்க?''

''காயக்வாடோட பெரிய பௌஜ்தாரும் இன்ஸ்பெக்டரும் அந்தப் பீமாவாலாக் கொள்ளையைப்பத்தி விசாரணை செய்ய வந்திருக்காங்க.''

''சரிதான், ஜமாய்! சகுனம் பலிச்சுப் போச்சு உனக்கு!''

ஒரு மணி நேரத்தில் மகீபத்ராம் குதிரைமேல் ஏறிக்கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அந்தக் காலத்தில் கொள்ளைக்கும் லட்டுவுக்கும் அதிக வித்தியாசம் இல்லை.

10

பிஞுகியின் தாய் பம்பாய் போய்விட்டாள்.

அம்மாவைப் பிஞுகிக்கு மிகவும் பிடித்துத்தான் இருந்தது. ஆனால் அவள் கோதுமை அல்லது கம்பு ரொட்டியில் நெய் விழுதைத் தடவி ''சாப்பிடு, சாப்பிடு'' என்று வற்புறுத்துவது அவனுக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. குளிர்கால விடுமுறை நாட்களில் அவள் அவனுக்குச் சாலம்பாக் அல்லது முசலீபாக் லட்டுவைக் கொடுத்துச் சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்துவாள். பேரீச்சம்பழத்தைக் கொண்டு செய்யப்படும் இன்பண்டமும்

அவனுக்குப் பிடிப்பதில்லை. இம்மாதிரி தின்பண்டங்களைச் சாப்பிடுவதற்கு அவனைக் கூப்பிடவரும் புஷ்பாகூட அந்தத் தின் பண்டங்களைப் போலவே அவனுக்குப் பிடிக்காதவளாகப் போய் விட்டாள்.

அவள் குஞ்சம் வைத்த சீட்டிப் பாவாடை கட்டிக்கொண்டி ருப்பது எவ்வளவு அவலட்சணமாக இருக்கிறது! ராஜ்கோட் பள்ளிக்கூடத்தில் அவள் கற்றுக்கொண் டிருக்கிருளே அந்த நடை நன்ருகவா இருக்கிறது! அவள் காதில் அணிந்துகொண் டிருக்கும் வளையங்கள் காதுத் தோலை இழுத்துக்கொண்டு தொங்குகின்றன.

பிளுகி ரூக்கட் சேட்டின் குதிரையைச் சில நாட்களுக்குத் தன்னி டமே வைத்துக்கொண் டிருந்தான். தினம் காலையிலும் மாலை யிலும் அவன் அதற்குத் தண்ணீர் காட்டுவதற்குக் கங்கோத்ரி ஊற்றுக்கு அதை அழைத்துப் போவான்.

கங்கோத்ரி ஊற்றிலிருந்துதான் கிராமம் முழுதுக்கும் குடி தண்ணீர் கிடைத்தது. அங்கு மூன்று நதிகள் ஓடிக்கொண் டிருந் தாலும் அவற்றுள் ஒன்றின் தண்ணீர் கூடக் குடிப்பதற்கு லாயக் கில்லை. ஏனென்ருல் கிர்க் காட்டின், செடிகொடிகளின் குப் பையும் அழுக்கும் பாசியும் இந்த ஆறுகளில் எப்போதும் கலந் திருந்தன.

கங்கோத்ரி ஊற்றுக்கரையில் எப்போதும் பிற்பகலில் மிகவும் கலகலப்பாக இருக்கும். அதன் சுற்றுச் சுவரின் மேல் பாகத்தில் கயிறுகளின் சுவடுகள் ஆழமாகப் பதிந்திருந்தன. ஊரின் எல்லா வீடுகளிலிருந்தும் பெண்கள் தண்ணீர் எடுக்க அங்கே வருவார்கள். ஊற்று இருந்த மாந்தோப்புக்கும் கிராமத்துக்கு மிடையில் தாமிரக் குடங்களும் பித்தளைக் குடங்களும் ஊர்வலம் வந்து கொண்டே இருக்கும்.

'புஷ்பாவும் தலையில் ஒரு குடத்தை எடுத்து வைத்துக்கொண்டு தண்ணீர் எடுக்க ஏன் வரக் கூடாது? அதிகாரியின் பெண்ணுக இருப்பதால் இம்மாதிரி இன்பங்களைத் துறக்க வேண்டுமா?' என்று நினைப்பான் பிளுகி.

அன்று பிற்பகலில் ஊற்றுக்கரையில் துணி துவைப்பவர்களின் பெருங் கூட்டம் கூடியிருந்தது.

சந்தேகத்துக்குரிய கோலீ—குர்மீ ஆட்களுக்கும் போலீஸ் உடுப்புக்களுக்கும் ஓர் ஒற்றுமை இருந்தது. இரண்டும் தடியடி யில்லாமல் திருந்துவதில்லை.

துணி துவைப்பவர்கள் துவைத்துக்கொண்டே வம்பளப்பார்கள்.

''தம்பி, தாது சிப்பாய் இருக்கானே, அவனோட பொண்டாட்டிக்கு நல்ல பலம்.''

''ஏன் அப்படிச் சொல்றே?''

''அவ அன்னிக்கு ஒரு முதலையைத் தனியாச் சமாளிச்சுட்டா!''

''அதெப்படி?''

''அவ தன் ஆட்டுக்குட்டியைக் கூட்டிக்கிட்டுத் துணி தோய்க்க வந்திருந்தா. அவ துணி தோய்ச்சுக்கிட்டிருந்தப்போ ஆட்டுக் குட்டி 'மே மே'ன்னு கத்த ஆரம்பிச்சது. திரும்பிப் பாத்தா, குட்டியோட பின்னங்கால் முதலையோட வாயிலே இருந்தது! அவ அங்கே ஓடிப் போய் 'எனக்காச்சு உனக்காச்சு'ன்னு ஆட்டுக்குட்டியோட காலைப் பிடிச்சுக்கிட்டு இழுக்க ஆரம்பிச்சா. கஜேந்திரனுக்கும் முதலைக்கும் நடந்ததே, அந்தமாதிரி யுத்தந்தான். போ! கடைசியிலே முதலை களைச்சுப் போய் ஆட்டுக்குட்டியை விட்டுட்டு ஓடிப் போயிடுச்சு. தாதுவோட பொண்டாட்டிக்கு எவ்வளவு பலம், பாரு!''

துணிகளைக் கசக்கிக் கசக்கித் துவைத்துக்கொண்டே ஒரு பள்ளி ஆசிரியர் சொன்னார்: ''எங்க அஞ்சாங் கிளாஸ் புஸ்தகத்திலேகூட இந்த மாதிரி ஒரு கதை இருக்கு.''

போலீஸ் ஸ்டேஷன் சப்ராஸி துளஜா ராம் சொன்னான்: ''என்ன வாத்தியாரையா, கொழந்தைகளோட துணிகளைத். தோய்க்கறீங்க, அது சரிதான். ஆனா சம்சாரத்தோட துணிகளைக் கூடவா தோய்க்கணும்?''

போலீஸ் ஜமாதாரின் ஆர்டர்லி பதில் சொன்னான். "தோய்க்காம என்னப்பா செய்வார்? சம்சாரம் ஓர் அதட்டுப் போட்டா ...''

"சரி, சரி, நிறுத்துங்கப்பா!'' எரிச்சலுடன் உறுமினார் ஆசிரியர்.

''பாக்ஜீ பௌஜ்தார் சமாசாரம் தெரியுமா?''

''தெரியாதே! என்ன விஷயம்?''

''பட்வான் ஜங்ஷன்லே அவனுக்கும் லோமாபூர் ராஜாவுக்கும் பெரிய சண்டை.''

''என்ன, ஜாலம்சிங்ஜீயோடயா? அவங்க ரெண்டு பேரும் ரொம்ப நெருங்கின சிநேகிதர்களாச்சே!''

''அந்தச் சிநேகந்தான் இப்போ இந்தச் சண்டைக்குக் காரணமாயிடுச்சு.''

''ஏன்?''

''பௌஜ்தாருக்கு விதவிதமா அலங்காரம் பண்ணிக்கற ஆசை. ஒரு நாள் பட்டாணிமாதிரி டிரஸ் பண்ணிக்குவான்; ஒரு நாள்

சந்நியாசி மாதிரி வேஷம் போட்டுக்குவான். வெள்ளைக்காரப் பிராந்த் சாகேப், சூபரிண்டண்ட் சாகேப் இவங்கள்ளாம் வந்தால், இந்தமாதிரி வேஷம் போட்டுக்கிட்டு அவங்களைப் பார்க்கப் போவான். அவங்க சந்தோஷப்படுவாங்க. ராஜாக்கள் சில பேர் அவன் வீட்டுக்கு வர ஆரம்பிச்சாங்க. ஜாலம்சிங்ஜீ அடிக்கடி வந்துக்கிட்டு இருந்தார். வீட்டிலே பௌஜ்தாரோட குமரிப் பொண்ணு இருந்தா. வீட்டிலே பர்தா வழக்கம் இல்லே. ஜாலம்சிங்ஜீ சான்ஸ் கிடைச்சா விடுவாரா?''

''அப்படிச் சொல்லு! ஜாகீர்தார் இல்லையா அவர்!''

''ஜாகீர்தார், கீகீர்தார்ன்னு பேசாதே, ஆமா!'' என்று கண்களை உருட்டினான் ஒரு ராஜபுத்திர ஜாதியைச் சேர்ந்த சிப்பாய்.

''அப்பறம் என்ன நடந்தது?''

''அப்பறம் என்ன? ஜாலம்சிங் பௌஜ்தாரோட பெண்ணைக் கூட்டிக்கிட்டு ஓடிட்டார். 'நான் கச்சேரிக்குப் போய்க் கேஸ்கீஸ் போடமாட்டேன். என் கையிலே பலம் இருந்தால் நானே இதுக்குப் பழிவாங்குவேன்'னு பாக்ஜீ சொன்னான். முந்தா நாள் ஜாலம்சிங் ராஜ்கோட் போய்க்கிட்டிருந்தார். பாக் பட்வான் வந்துக்கிட்டிருந்தார். ரெண்டு பேரும் ஸ்டேஷன்லே சந்திச்சாங்க. கையிலே ஆயுதம் இல்லாமயே பாக் அவர் மேலே பாய்ஞ்சுட்டான். ஜாலம்சிங் ஓடிப் போய்க் கக்கூசுக்குள்ளே நுழைஞ்சுட்டார்.''

''கக்கூசுக்குள்ளேயா?'' ராஜபுத்திரச் சிப்பாய் ஆச்சரியத்தோடு கேட்டான்.

''ஆமா, தர்பார்!'' கதை சொல்லிக்கொண்டிருந்தவன் கேலிக் குரலில் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான். ''கக்கூசுக்கு ரெண்டு பக்கமும் கதவு இருந்தது. பாக் லேசுப்பட்டவனா? அவன் சுவர் மேலே ஏறிக் கக்கூசுக்குள்ளே குதிச்சான். மக்கள் ஒரே கூட்டமாக் கூடிட்டாங்க. ரெயில் ஸ்டேஷன்லேயே நின்றுபோச்சு. பாக் ஜாலம்சிங் மேலே குதிச்சான். அவர் கையிலே கத்தி இருந்தது. பாக் அதைப் பிடிச்சு இழுத்தபோது அவன் கைவிரல் வெண்டைக்காய் மாதிரி அறுந்துபோச்சு. அவன் சமாளிச்சுக்கறதுக்குள்ளே ஜாலம்சிங் மாயமா மறைஞ்சுட்டார்.''

''எங்கே ஓடிப்போனார்?''

''அதுதான் தெரியல்லே.''

ரெயில் பாதையிலிருந்து நாற்பது மைல் தூரத்திலிருந்த அந்தப் பட்டிக்காட்டுக்குத் தகவல்கள் எப்படியோ விரல் சொடுக்கும் நேரத்துக்குள் எட்டிவிடும்.

இந்த மாதிரி ஊர்வம்புகள் அங்கே எப்போதும் அடிபடும். பிஞகி தினம் ஸ்நானம் செய்ய ஊற்றுக்குப் போவான். அங்கு நடக்கும் பேச்சுக்கள் அவன் காதில் விழும்.

இரவில் அவன் சிப்பாய்களுக்கு அருகில் தன் சிறிய கட்டிலைப் போட்டுக் கொண்டு படுத்துக்கொள்வான். அவர்களுடைய உரையாடலைக் கேட்டுக் கொண்டே தூங்கிவிடுவான்.

மறுநாள் மாலை ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்து விட்டது.

சௌக்கீதார் கிராமத்திலிருந்து இரண்டு பாத்திரங்கள் நிறையப் பால் எடுத்துக்கொண்டு பிஞகியின் வீட்டுக்கு வந்தான்-

''உள்ளே கொண்டுபோய் வை!'' என்றுர் மகீபத்ராம்.

அவன் வைத்துவிட்டு வெளியே வந்ததும், ''எல்லா வீட்டிலேயிருந்தும் கறந்தியா?'' என்று கேட்டார்.

''ஆமா, எசமான்! எல்லா வீட்டிலேருந்தும் கறந்துக்கிட்டு வந்துட்டேன். பால் குடிக்கற கொழந்தைகளுக்குக்கூடப் பால் விட்டு வைக்கலே!''

''சரி, போயிட்டு வா!''

சௌக்கீதார் சொல்லியது பிஞகியின் காதுகளில் விழுந்தது. அவன் வராந்தாவில் போய் நின்றுன்.

தேனடையின் மேல் மொய்க்கும் வண்ணத்துப் பூச்சிகளின் இறக்கைகள் படபடப்பதுபோல் வானத்தில் நக்ஷத்திரங்கள் மினுமினுத்தன.

11

இராச் சாப்பாட்டுக்குப் பிறகு கல்லடுப்பின் மேல் பால் சட்டி ஏற்றி வைக்கப்பட்டது.

மகீபத்ராம் மிகவும் பிடிவாதக்காரர். தானேதாருடன் போட்டி போடுவதற்கான எந்த வாய்ப்பையும் அவர் நழுவ விடுவதில்லை. ஒருவாரம் முன்னுல் தானேதாரின் வீட்டில் ஒரு விருந்து நடந்தது. அதற்குப் போட்டியாக அதைவிடப் பெரிய விருந்து ஒன்று நடத்தத் தீர்மானித்தார் மகீபத்ராம்.

அதற்குச் சாக்காகக் கிடைத்தான் பிஞகி.

அவன் அப்போதுதான் நான்காம் வகுப்புக்கு வந்திருந்தான். பாவம், ஹாஸ்டலில் வெந்ததும் வேகாததுமாய்ப் பருப்பும்

ரொட்டியும் சாப்பிட்டுவிட்டு வந்திருந்தான். அவனுக்கு ஒரு நாள் நல்ல சாப்பாடு போட வேண்டும் என்று நினைத்தார் மகீபத்ராம்.

அழைப்பு அனுப்பப்பட வேண்டியவர்களின் லிஸ்ட் தயார் செய்வதற்காக அவர் தம் குமாஸ்தாவிடம், ''நோட் பண்ணிக் கொண்டா!'' என்று கூறினார்.

குமாஸ்தா நிறைய வெள்ளைக் காகிதத்தை எடுத்து ஒரு நோட் புக்காகத் தைத்து எடுத்துக்கொண்டு வந்தான்.

''இதென்ன?'' என்று மகீபத்ராம் கேட்டார்.

''நீங்க நோட் பண்ணிக்கொண்டு வரச் சொன்னீங்களே, அது தான்!''

''அடமுட்டாள்? நான் இதுமாதிரி நோட்புக்கா கொண்டு வரச் சொன்னேன்? கஷ்டம், கஷ்டம்! இந்தக் கழுதையை இங்கே யிருந்து மாத்தித் தொலைங்கன்னு பெரிய ஆபீசுக்குப் பத்துத் தடவை லெட்டர் எழுதிப்பிட்டேன், அந்தக் கடங்காரங்க...!'' என்று சொல்லித் தலையிலடித்துக் கொண்டார் மகீபத்ராம்.

தாமே ஜாபிதா தயார் செய்யத் தொடங்கினார் அவர். அந்தச் சமயத்தில் அவருடைய மனைவி உள்ளேயிருந்து வந்து கதவருகில் நின்றாள். அவள் தன் முக்காட்டைச் சற்று முன்னால் இழுத்துக் கொண்டு மெல்லிய குரலில் சொன்னாள்: ''கேளுங்களேன்!''

''என்ன?''

''அவரையும் சாப்பாட்டுக்குக் கூப்பிடுங்க!''

''யாரை?''

''அவுரைத்தான்!'' அவள் தன் கைகளால் ஒரு பருமனான ஆளைக் குறிப்பிட்டு ஜாடை காட்டினாள்.

''அந்தக் கிறுக்கனையா? சீ, பைத்தியம்! நீ உன் காரியத்தைப் பாரு!''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க! அவரையும் கூப்பிடத்தான் வேணும்!''

''உம், உம், கூப்பிடுவோம், உன் அப்பாவோட சிராத்தத் துக்கு!''

''நீங்க பண்றது ஒண்ணும் சரியில்லே. உங்களுக்கும் அவருக்கும் தகராறுன்னா அதை வெளியிலேயே வச்சுக்குங்க. வீட்டுக்குள்ளே கொண்டுவர வேண்டாம். வீட்டு நிர்வாகத்தை எங்கிட்டே விட்டுடுங்க. வீடு என்னுது!''

''பின்னே என்னுது என்ன?''

''காடுதான் உங்களுது. குதிரையிலே ஏறிக்கிண்டு காட்டிலே எங்கே வேணும்னாலும் சுத்துங்க.''

தருணம் பார்த்து இப்போது குறுக்கிட்டார் கிழவர்: ''ஆமா! நாட்டுப் பெண் சொல்வது ரொம்பச் சரி. வீட்டுப் பொறுப்பு நம்முது இல்லே, குழந்தே! அது பெண்களைச் சேர்ந்தது.''

கிழவர் எப்போதும் நடைமுறைக்கு உசிதமான கருத்தைத்தான் சொல்லுவார்.

பிணகி புத்தகத்துக்குப் பின்னே தன் முகத்தை மறைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். வீடு தன்னைச் சேர்ந்தது என்று பாட்டி சொல்வதும், கிழவனூர் எப்போதும் பாட்டியை ஆதரித்துப் பேசுவதும், அவர் மகீபத்ராமைக் 'குழந்தை மகீபத்' என்றெல்லாம் சுவாதீனத்தோடு அழைப்பதும் பிணகிக்கு மிகவும் பிடித்திருந்தன.

மகீபத்ராமின் நெற்றியில் தோன்றிய சுருக்கங்கள் கொல்லுப் பட்டறையின் தீயில் உருகிய செம்புபோல் இளகி மறைந்து விட்டன.

''சரி, அவர் பேரையும் எழுதிக்கறேன்'' என்றார் அவர்.

அவருடைய மனைவி தன் முக்காட்டுக்குள்ளிருந்து தன் மாமனாரை நன்றியுடன் பார்த்துவிட்டு, மகீபத்ராமிடம் மெல்லிய குரலில் சொன்னாள். ''உங்க அப்பா இருக்கற வரையிலே எனக்கு நல்ல காலம். அப்புறம்...''

''அதுக்கென்ன! அவரோட உன்னையும் பாடையிலே வச்சுட றேன், அவ்வளவுதானே?''

மகீபத்ராமின் இவ்வார்த்தைகளில் மறைந்திருந்த அன்பை அவருடைய மனைவியும் தந்தையுந்தான் உணர முடியும். சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களின் காதல் பேச்சுக்களை அந்த மிருகங்களின் காவற்காரர்களே அறிவார்கள். மற்றவர்களுக்கு அவை பயங்கரமான கர்ஜனையாகத்தான் தோன்றும்.

துரதிருஷ்டவசமாகச் சில மனிதர்களால் தங்கள் அன்பைக் கூடப் பயமுறுத்தும் வார்த்தைகளில்தான் வெளிப்படுத்த முடிகிறது.

கிழவனும் இத்தப் பேச்சில் சிரித்துக் கொண்டே கலந்து கொண்டார். ''நாட்டுப் பெண்ணே, நீ ஏன் கவலைப்படறே? எனக்கு இப்போத்தான் பன்னண்டு வயசாறது. உனக்கு எல்லா ஏற்பாடும் பண்ணிட்டுத்தான் போவேன், கவலைப்படாதே!''

''ஆமாமா. வர்ற எமனைக்கூடத் திருப்பியனுப்பிச்சுடுவார் எங்கப்பா'' என்று சொல்லிச் சிரித்தார் மகீபத்ராம்.

''தெரியுமாப்பா, சில சமயம் செத்துப் போனவங்க கூட மசானத்திலேருந்து திரும்பி வந்திருக்காங்க!''

''அப்படியானு நாட்டுப் பொண்ணைப் பாடையிலே வச்சப்பறந் தான் நீங்க போவீங்க, இல்லையா?''

''இதை விட எனக்கு வேறே என்ன பாக்கியம் வேணும்?'' என்ருள் மகீபத்ராமின் மனைவி. அவளுடைய கண்களில் நீர் தளிர்த்திருந்தது; குரல் தழுதழுத்தது.

''இல்லேம்மா!'' கிழவனுருக்குத் தொண்டையில் ஏதோ அடைத்துக் கொண்டாற்போல் அவர் திணறிக் கொண்டே பேசினுர். ''நாம் எல்லாரும் கௌரவத்தோடே போகணும்னு பகவானைப் பிரார்த்தனை பண்ணிக்கோ, அது போதும்! பகவான் சங்கரன் நம்மைக் கைவிட மாட்டான்.''

''நம்ம பான்ஜா பெரியவனுகணும், அது ஒண்ணு தான் என்னுடே ஆசை!'' என்ருர் மகீபத்ராம்.

டீர் தயார் செய்த பிறகு அந்தப் பாத்திரத்தை நன்ருக மூடித் தண்ணீருக்குள் குளிர்ச்சிக்காக வைத்து விட்டு மகீபத்ராமின் மனைவி படுத்துக் கொள்ள வந்த போது இரவு ஒரு மணியைக் குறிக்கும் 'ஆல்வெல்' சப்தம் கேட்டது.

நாற்பது வயது நிரம்பிய அந்த ஸ்திரீ உருவத்தில் பருமனுக இல்லை; ஆனுல் எந்தக் கஷ்டத்தையும் சகித்துக் கொள்ளக் கூடிய மனேதிடம் அவளுக்கு இருந்தது. கணவனுடன் நீண்ட காலம் வெளியூர்களில் வாசம் செய்ததில் அவளுடைய தலை வகிட்டின் இருபுறங்களிலும் அடி மயிர் நறைத்துப் போயிருந்தது. ஆகையால் அந்த வகிடு கறுத்த வானத்தில் பிரவகிக்கும் வெண்மையான ஆகாய கங்கைபோலத் தோற்றம் அளித்தது.

தன் பெரிய பிள்ளை இறந்தபிறகு அவள் அழுத்தமான நிறங்களிலேயே புடைவைகளை அணியத் தொடங்கியிருந்தாள். மூக்குத்தியும் கால்களில் காப்பும் அணிவதை விட்டு விட்டிருந்தாள்.

ஒரு வருஷத்துக்குப் பிறகு இன்று தான் முதல் தடவையாக அவள் தன் கணவனின் கட்டிலுக்கு வந்திருந்தாள். அவள் முதலில் பான்ஜாவின் அறைக்குச் சென்று அவனைப் போர்வையால் போர்த்திவிட்டு வந்தாள். பின்னிரவு மிகவும் குளிராக இருந்ததால் கணவர் எப்படித் தூங்குகிருர் என்று பார்க்கத்தான் அவள் அவருடைய அறைக்கு வந்தாள்.

அவளுடைய கையின் ஸ்பரிசம் பட்டதுமே மகீபத்ராம் விழித்துக் கொண்டார். போலீசில் வேலை பார்ப்பவர் அல்லவா?

''யாரது?''

''வேறு யாரும் இல்லை. நான்தான்.''

''வா, உட்காரேன்!'' மகீபத்ராம் சற்று நகர்ந்து கொண்டு அவளுக்கு உட்கார இடம் கொடுத்தார்.

அவள் அவருடைய உடம்பைத் தடவிப் பார்த்தாள், ஏறக் குறைய ஆறு மாதங்களுக்குப் பிறகு.

''எவ்வளவு இளைச்சுப் போயிட்டீங்க?''

''என் உடம்பிலே உன் கை படறதே இல்லே. அதனாலேதான்.''

''நீங்க எத்தனை ராத்திரி வீட்டுலே படுக்கறீங்க? சொல்லுங்க!''

''வீட்டிலே எப்படித் தூங்கறது? மாசத்திலே இருபது நாள் டூர்லே இருக்கணும்னு உத்தரவாச்சே!''

''அது தெரியும்.''

''பாக்கிப் பத்து நாளிலேயும் ஏதாவது கொள்ளை, சண்டை என்று வேறே நடக்கிறது.''

''இன்னிக்கு அப்படி ஒண்ணும் நடக்காது.''

''நடக்காதா? நிஜமாவா?'' அவர் மனைவியைத் தன்னிடம் இழுத்துக் கொண்டு தம் மார்புடன் அணைத்துக் கொண்டார். நிறையப் பழங்கள் பழுத்துக் குலுங்கும் மரக்கிளை சிறு குழந்தைகள் பிடித்து இழுத்தால்கூடக் குனிந்து கொடுப்பது போல் அவளும் அவருடைய பிடியில் அடங்கி அவர் மேல் சாய்ந்தாள். பிறகு அவரது மார்பிலிருந்து விலகி அவருக்கருகில் படுத்துக் கொண்டாள். மகீபத்ராமின் பக்கத்திலிருந்த காலியிடம் அவளுடைய வெப்பமான மூச்சுக்களால் நிறைந்தது.

''ஏன்?'' என்று மகீபத்ராம் கேட்டார்.

''ஒன்றுமில்லை.''

''அதெல்லாம் இல்லை! சொல்லித்தான் ஆகணும்! என் மேல் ஆணை!''

''ஒண்ணுமில்லே மாட்டுப் பொண்ணோட நினைவு வந்துடுத்து.''

''அந்தக் குடிகேடியோட பேச்சையே எடுக்காதே!''

''அவமேலே என்ன குத்தம்? நம்ம பையன் செத்துப் போனபோது அவளுக்கு வயசு இருபது தான். அந்த வயசுலே கெட்டுப் போக எவ்வளவு நேரம் ஆகும்?''

''சரி, சரி, அவ பேச்சை விட்டுத் தள்ளு!''

ஒரு பயங்கரப் படுகுழியைக் கடக்க ஓர் உளுத்துப் போன மரப் பாலத்தில் போய்க் கொண்டிருப்பது போன்ற உணர்வும் அந்த உணர்வில் பிறந்த பயமும் மகீபத்ராமை ஆட்கொண்டன. இந்த ஆபத்தான நிலையில் தன்னைக் காப்பாற்றக் கூடிய ஒரே ஆதாரம் போல் தம் மனைவியை அவர் மார்புடன் இறுகத் தழுவிக் கொண்டார்.

அப்போது வெளியிலிருந்து ஏதோ சப்தம் கேட்டது.

''சாமி!''

''யாரு?''

''பொணம் வந்திருக்கு!''

''எங்கேருந்து?''

''காலெளலேருந்து.''

''யாரோட பொணம்?''

''ஒரு கோலியோடது.''

''சரி, குமாஸ்தாவைக் கூப்பிடு! ஆபீ சுலே விளக்கேத்து!''

அவர் எழுந்து உடையணிந்து கொள்ளத் தொடங்கினர்.

12

அவர் ஆபீசை அடைந்தபோது அங்கே ஒரு குதிரையைப் பிடித்துக்கொண்டு நின்ற ஒரு ஆள், ''சாமி! நான்தான்!'' என்று குரல் கொடுத்தான்.

அவனுடைய உச்சரிப்பைக் கொண்டே மகீபத்ராம் அவனை அடையாளம் கண்டு கொண்டுவிட்டார். நரகத்தில்கூட அவர் அந்த உச்சரிப்பை அடையாளங் கண்டு கொள்வார்.

''யாரு? மோட்பா தர்பாரா?''

''ஆமா, ஆமா!''

''நீங்க எங்கே இந்த நேரத்துலே?''

''காலெளலேருந்து வரேன்.''

''ஏன்?''

''உங்களைப் பார்க்கத்தான். உம், இந்த ராம்லா கோலி விஷத்தைத் தின்னு செத்துப்போய்ட்டான்.''

''சரி, அதுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

''இல்லே, ஒண்ணுமில்லே. ஆனா, அந்த முட்டாள் தற்கொலை பண்ணிக்கிட்டிருக்கான். விஷமக்காரன் யாராவது உங்ககிட்டே வேறே விதமாச் சொல்லிட்டான்னா செத்துப் போனவனோட பெண்டாட்டிக்குச் சங்கடம். அதனாலேதான்...''

இருட்டிலேயே மோட்பா தர்பார் அவருடைய கையில் ஒரு பையை வைத்தான். சிறிய பைதான். ஆனால் நல்ல கனமாக இருந்தது. அதில் சுமார் ஐந்நூறு ரூபாய்கள் இருந்தன.

''சரிதான், மோட்பா தர்பார்!'' மகீபத்ராம் தணிந்த குரலில் கூறினார். ''நீங்க இந்தச் சுமையை எடுத்துக்கிண்டு உடனே காலேஜ்லேயேப் பார்க்கப் புறப்படுங்க.''

''இல்லே இல்லே!''

''ஊஹூம்! இந்தச் சுமையைத் தூக்க எனக்குச் சக்தி இல்லே.''

''இது சும்மா ஒரு பிரியத்துக்காகக் கொடுத்தது.''

''சரி, சரி! தர்பார்வாள்! இந்தப் பிரியம் கிரியம் எல்லாம் எனக்குத் தெரியும். லஞ்சம் வாங்கவும் தெரியும். நான் ரொம்பச் சத்தியசந்தன்னு சொல்லிக்கல்லே. எனக்கு லஞ்சம் வாங்கணும்னு இருந்தால் குத்தஞ் செய்யாத ஆளைக்கூட மிரட்டி உதைச்சு லஞ்சம் வாங்கிடுவேன். ஆனா, மோட்பா தர்பார்! நீங்க கொடுக்கற இந்தக் காசு எனக்குப் பசுமாட்டோட ரத்தம் மாதிரி! உம்...நீங்க உடனே திரும்பிப் போயிடுங்க.''

''ஆனா...''

''ஆனா கீனா வெல்லாம் இப்பச் சொல்லி என்ன பிரயோசனம், தர்பார்? நீங்க எல்லாம் வீட்டிலே லக்ஷ்மி மாதிரி இருக்கற சொந்தப் பொண்டாட்டிகளை விட்டுப்பிட்டு வெறிபிடிச்ச நாய்கள் மாதிரி அந்தக் கோலிப் பொம்பளைகளைத் துரத்திக்கிண்டு அலையறீங்க! அதனாலேதான், பாவம், அந்தப் பொம்பளையோட புருஷன் விஷத்தைத் தின்னு உயிரை விட்டிருக்கான். உங்களோட இந்தமாதிரி காரியத்தை மூடி மறைக்கிறதுக்காக எனக்கு லஞ்சம் கொடுக்கறீங்க! நான் பிராமணனாக்கும்!''

மோட்பா மௌனமானான்.

''போயிட்டு வாங்க, தர்பார்! எனக்குச் சாப்பிட ஒண்ணும் இல்லேன்னா நான் ஒரு லோட்டாவை எடுத்துக்கிண்டு ஈடர்க் கடைத் தெருவிலே சுத்தியலையத் தயார். நீங்க போயிடுங்க. இல்லேன்னா ஸ்டேஷன்லே எல்லாருக்கும் உங்க குட்டு வெளிப் பட்டுப் போயிடும்.''

மோட்பா போய்விட்டான்.

ஸ்டேஷனுக்கு வெளியே ஒரு வண்டி நின்றுகொண் டிருந்தது. அதில் கிடந்த சவத்தின்மேல் ஒரு வெள்ளைத் துணி போர்த்தி யிருந்தது. காலராத்திரியின் பல்வரிசையைப் போல் இருட்டில் பளபளத்தது அந்தத் துணி.

ஆபீசில் சவத்தைப்பற்றிய ரிபோர்ட் எழுதுவதும், டாக்டருக்கு அனுப்பப்பட வேண்டிய கடிதத்தைத் தயார் செய்வதுமாக ஒரே பரபரப்பாக இருந்தது. காலை ஐந்து மணிக்கு மகீபத்ராம் தம் குமாஸ்தாவைக் கூப்பிட்டுச் சொன்னூர்: ''இந்தச் சீட்டையும் பொணத்தையும் டாக்டர்கிட்டே அனுப்பு. அவன் அதை நறுக் கிக் கிழிக்கட்டும். அவனுக்கும் பிழைக்க வேண்டாமா? சரி, புறப்படு! ஆபீசைப் பூட்டிப்பிட்டுப் போய் எல்லாரையும் விருந் துக்கு அழைச்சுட்டுவா!''

காலையில் தகவல் கிடைத்தது, கிராமத்தில் எங்கும் காய்கறிகள் கிடைக்கவில்லையென்று. கிராமத்தில் ஒரு வீட்டிலும் காய்கறித் தோட்டம் இல்லை. போலீஸ் இலாக்கா உயிருள்ள பனியைப் போல இருந்தது. அது போன இடமெல்லாம் பயிர் பச்சைகள் கருகிப் போய்விடும்.

டேட் ஜாதியைச் சேர்ந்த பாணியா ஐந்து வருஷங்களுக்கு முன் ஆற்றுப் படுகையில் கர்பூஜா பயிர் செய்திருந்தான். ஜமாதார் அல்லது தானேதாரின் பெயரைச் சொல்லிச் சிப்பாய்களும் சப்ராசிகளுமாக எல்லாக் கர்பூஜாப் பழங்களையும் பறித்துக் கொண்டு போய் விட்டார்கள். பாவம், பாணியா கடைசியில் தான் வாங்கிய கடனை அடைக்கத் தன் பெண்டாட்டியை விற்க நேர்ந்தது.

போலீஸ் ஸ்டேஷன் இருக்குமிடத்தில் தச்சன், கொல்லன், சக்கிலியன் போன்ற எந்தத் தொழிலாளியும் தொழில் செய்து பிழைக்க முடியாது. ஏனென்ருல் கூலியில்லாமல் கட்டாய வேலை செய்யத்தான் அவர்களுக்கு நேரம் இருக்கும்.

''இந்தத் தானேதார்ச் சண்டாளன் ஊரிலே காய்கறிகளைக் கூட விட்டுவைக்க மாட்டேங்கருன்!'' என்று திட்டினூர் மகீ பத்ராம். ''ஆனு, நான்மட்டும் லேசுப்பட்டவனு? என்னுலேயும் எல்லாம் முடியும்னு இந்த முட்டாளுக்குக் காண்பிச்சுட்டுத்தான் மறுகாரியம்!'' என்று அவர் நான்கு மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்திலிருந்து காய்கறிகள் வாங்கி வருவதற்காக ஓர் ஆளைக் குதிரையுடன் அனுப்பினூர்.

டாக்டர், சட்டத்தில் ஏதோ ஒரு குறையைச் சுட்டிக் காட்டிப் பிணத்தைத் திருப்பியனுப்பிவிட்டார். இதனுல் அவருக்கும்

மகீபத்ராமுக்கும் தகராறு ஏற்பட்டுவிட்டது. சாயங்காலம் வரையில் பிணம் போவதும் வருவதுமாக ஒரே அமளியாக இருந்தது.

இந்த அமளிக்கிடையில் விருந்துக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்தன.

மகீபத்ராம் தம்முடைய நண்பர்களுடன் பேசுவதுபோல் தானேதாரின் காதுகளில் படும்படி அவரைத் திட்டிக்கொண் டிருந்தார். இடையிடையில் விருந்துக்கான ஏற்பாடுகளையும் கவனித்துக்கொண்டார்.

''ஏய், நாற்பது ஆசனம் போட்டிருக்கியா? சரி, இன்னும் அஞ்சு போட்டு வை! கூட யாராவது வந்தாலும் வரலாமே! நாற்பது பேரைக் கூப்பிட்டிருந்தால்கூட அதிகமா நாலஞ்சு ஆசனம் போடறதுதான் நல்லது.''

விருந்து முக்கால்வாசி முடிந்தபோது யாரோ பான்ஜாவைக் கவனித்தார்.

''அடே! இவனுடை கப் அப்படியே நிறைஞ்சு இருக்கே! இவன் கீர் சாப்பிடவே இல்லையா?''

''என்ன பான்ஜா! இது மூணுவது கப் இல்லையா?''

பரிமாறுபவன், ''இல்லே, இதுதான் முதல் கப்'' என்றான்.

''ஏம்பா, தொடக்கூட இல்லே?''

''பான்ஜா! என்ன சமாசாரம்?''

''ஒண்ணுமில்லே, எனக்குப் பசியில்லே.''

''பொய். உண்மையைச் சொல்லு! என்ன விஷயம்?''

''அப்பறம் சொல்றேன்.''

''அப்பறம் என்ன? இப்பவே சொல்லு!'' மகீபத்ராம் சொன்னார். ''இங்கே யாருக்காகச் சங்கோஜப்படறே? நான் ஆபீஸ் தபாலைக் கூடப் பகிரங்கமாப் பிரிச்சுப் படிக்கறேன். சர்க்காரைப் பத்தின விஷயங்களைவிட வேறென்ன பெரிய ரகசியம் இருக்கு?''

''எனக்குச் சாப்பிடப் பிடிக்கல்லே.''

''ஏன்?''

''அவன் சொன்னானில்லியா?''

''யாரு? என்ன சொன்னான்?''

''நேத்து ராத்திரி பால் கொண்டு வந்த சௌக்கீதார் சொன்னுனே, பால் குடிக்கற குழந்தைகளுக்குக்கூடப் பால் விட்டு வைக்காம, எல்லாப் பாலேயும் கொண்டு வந்துட்டேன்னு! அதுதான்.'' இதைச் சொல்வதற்குள் ப்ரான்ஜாவின் முகம் குப்பென்று சிவந்துவிட்டது, கோடைக்காலத்தில் நடுப் பகலின் வெப்பத்தில் வெள்ளரிக்காய் சிவப்பும் மஞ்சளுமாய் நிறம் மாறிவிடுவதைப்போல.

சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் கணநேரம் மௌனமாக இருந்தார்கள்.

மகீபத்ராமின் நண்பனெருவன், பெரிய மீசைக்காரன் சொன்ஞன்: ''அட பைத்தியமே! இந்தச் சௌக்கீதார்ப் பயல்களெல்லாம் அண்டப் புளுகனுங்க. அவங்களேப் போய் நம்பறியே?''

''நம்ம மகிழ்ச்சியெல்லாம் மண்ணுப் போச்சு!'' சமயம் பார்த்துத் தானேதார் மகீபத்ராமைக் கோட்டா செய்தார்.

உண்மைதான். அதற்குப் பிறகு பரிமாறப்பட்ட மோர்க் குழம்பை ஒருவரும் ருசித்துச் சாப்பிடவில்லே.

மகீபத்ராமின் முகத்தில் ஈயாடவில்லே.

13

பினுகியின் விடுமுறை முடிந்துவிட்டது. மறுநாளே அவன் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு புறப்படவேண்டும். வேலேக்காரன் அவனுடைய பெட்டியைத் தூக்கிக்கொண்டு அவனேடு வருவான்.

அன்றிரவு அவனுடைய பாட்டி அவனுக்காகவே பேடா பண்ணிஞள். இந்தத் தடவை அதற்குத் தேவையான பாலேக் காசு கொடுத்து வாங்கிஞர் மகீபத்ராம். பினுகிக்கு முன்னுலேயே பணத்தை எடுத்துக் கொடுத்தார் அவர். கீர் விவகாரத்தை அவன் எப்படியாவது மறந்துவிடவேண்டுமென்று அவர் விரும்பினர். ''நான் எவ்வளவோ பேரைக் கொடுமைப்படுத்தியிருக்கேன்; எவ்வளவோ பேர்கிட்டே லஞ்சம் வாங்கியிருக்கேன். ஆனு கீருக்காகப் பால் சேர்த்த இந்தச் சின்ன விஷயம் என் மனசை ரொம்ப உறுத்தறது'' என்று அவர் தம் மனேவியிடம் சொன்னுர்.

பிஞகி போவதில் அவருக்கும் அவருடைய மனைவிக்கும் மிகவும் துக்கமாக இருந்தது. பிஞகியின் பாட்டி பேடா செய்யும் மும்முரத்தில் தன் வேதனையை மறைக்க முயன்றாள். தனக்கு அழுகை வந்துவிடுமோ என்ற பயத்தில் உரத்த குரலில் பிஞகிக்குப் புத்தி மதி சொல்லிக் கொண்டிருந்தாள். "ஒரு நாளைக்கு ஒரு பேடாவுக்கு மேலே சாப்பிடாதே! சிநேகிதங்கள் எல்லாரையும் கூட்டி வச்சுண்டு அவங்களுக்குக் கொடுத்துக் காலி பண்ணிடாதே!"

நன்றாக மூடப்பட்டிருந்த பிஞகியின் பெட்டியை மகீபத்ராம் திறந்து அதிலிருந்த சாமான்களையெல்லாம் எடுத்துப் பார்த்து விட்டுத் திருப்பி அதில் வைத்தார்.

தூஞலி நதியின் மறுகரையில் ஏறிய பிஞகி பின்பக்கம் திரும்பிப் பார்த்தான். வெள்ளை நிற வீடுகள் தூரத்தில் கண்ணுக்குத் தெரிந்தன.

''பாட்டிக்கு ஒரு வேலையும் செய்யப் பிடிக்காது. சாமி பகவானே, பெரிய தாத்தாவுக்கு நெறைய ஆயுசைக் கொடு! இல்லாட்டாப் பாட்டி தாத்தாகிட்டே ரொம்பத் திண்டாடுவா'' என்று அவன் நினைத்துக்கொண்டான்.

தூஞலி நதியிலிருந்து வீசிய குளிர்ந்த காற்று அவனுடைய கண்ணீரைத் துடைத்தது.

அவன் முதல் கிராமத்தைத் தாண்டியாகிவிட்டது. சௌக்கீதார் அவனுடைய பெட்டியைத் தூக்கும் ஆளை மாற்றுவதற்காகப் பின் தங்கினான். பிஞகி அவர்களுக்காகத் தன் குதிரையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டான்.

இந்தத் தடவை பெட்டியைத் தூக்கிவர ஒரு பெண் கிடைத்தாள். அவளுக்கும் சௌக்கீதாருக்குமிடையே ஏதோ வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அதுபோல் பாதையின் இருபுறங்களிலும் இருந்த காபர்ப் பறவைகளும் தங்களுக்குள் ஏதோ தர்க்கம் செய்து கொண்டிருந்தன.

ஒரு நாடோடிக் கதை உண்டு. ஒரு சகோதரிகளுக்கு ஒரே ஒரு சகோதரனும். எங்கேயோ போயிருந்த அவன் வெகு காலத்துக்குப் பிறகு திரும்பி வந்தானும். ஒவ்வொருத்தியும் அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போக விரும்பினுளாம். அவர்கள் ஆளுக்

கொரு பக்கமாக அவனைப் பிடித்து இழுத்ததில் அவன் செத்துப் போய்விட்டானும். அதன்பிறகு அவர்கள், 'நீதான் அவனைக் கொன்னுட்டே! நீதான் அவனைக் கொன்னுட்டே!' என்று ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு காபர்ப் பறவைகளாக மாறிவிட்டார்களாம்.

பறவைகளின் சலசலப்பு இந்த நாடோடிக் கதையை நினைவுறுத்தியது.

'இந்தச் சௌக்கீதாரும் பெட்டியைத் தூக்கிவரும் பெண்ணும் அந்த மாதிரிதான் பிறக்கப் போருங்க' என்று நினைத்துச் சிரித்துக்கொண்டான் பினுகி.

பாதையின் இரு புறங்களிலும் வளர்ந்திருந்த கரீல் செடிகளின் சின்னஞ்சிறு ரோஜா நிறப் பூக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன. காட்டிகளுடைய வயல்களின் ஓரங்களில் புதராக மண்டிக் கிடந்த இலந்தைச் செடிகளின் சின்னஞ்சிறிய பழங்கள் அவனை விளையாட அழைத்தன.

தன் தாத்தாவுக்கும் பாட்டிக்கும் தெரியாமல் அவன் இலந்தைப் பழம் பறிக்கத் தீபடியா அருவியின் மறுகரைக்கு ஓடின நாட்கள் அவனுக்கு நினைவு வந்தது.

அவன் யாரோடு அப்படி ஓடுவான்?

ஆம், இப்போது ஞாபகம் வந்தது. ஹவில்தார் தான்சிங்கின் பெண் தேவல்பாவுடன்தான் அவன் போவது வழக்கம். இந்தத் தடவை விடுமுறைக்கு அவன் வந்திருந்தபோது அவள் மிகவும் வளர்ந்துவிட்டிருப்பதைக் கவனித்தான். அவளுடைய அறையை ஒட்டிய வராந்தா இப்போது சாக்குப் படுதாவால் மறைக்கப் பட்டிருந்தது. அவன் ஒரு தடவை அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தான். தான்சிங்கின் மருமகளை அவன் 'அண்ணி' என்று கூப்பிட்டதில் தான்சிங்கின் மனைவிக்குக் கோபம் வந்து விட்டது, 'அண்ணி' என்று கூப்பிடும் வழக்கம் அவர்களிடம் இல்லையாம். சொந்த மைத்துனன் கூட அப்படிக் கூப்பிட மாட்டானும். அண்ணன் மனைவியை 'அக்கா' என்றுதான் அழைக்கவேண்டுமாம்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பினுகிக்கு அங்கே போகப் பிடிக்கவில்லை. ஆனுல் அவனுல் தேவல்பாவை மறக்க முடியவில்லை. தான்சிங்கும் அவரது மனைவியும் பெண்ணின் போட்டோவை எடுத்துக்கொண்டு விக்ரம்பூருக்குப் போய்விட்டு வந்ததாகக் கேள்விப்பட்டான் பினுகி. விஷயம் என்னவாக இருக்கும்?

இரண்டு வருஷங்களுக்குமுன் அவன் தேவல்பாவுடனும் அவளுடைய பெற்றோர்களுடனும் நாகநாத் கோயில் திருவிழா

வுக்குப் போயிருந்தான். அது பூர்ணிமை இரவு. அவர்கள் பிரயாணம் செய்த வண்டி பல்லக்குப்போல் ஆடி அசைந்து கொண்டு சென்றது. அவன் அரைத் தூக்கம் தூங்கிக் கொண்டே தேவல்பாவின் அம்மா பாடிய பாட்டைக் கேட்டுக் கொண்டிருந் தான். தான்சிங் அவளுடைய பாட்டை நிறுத்தப் பார்த்தார். ஆனல் அவள் நிறுத்த வில்லே. ''என்ஞல் இன்றைக்குப் பாடாமல் இருக்கமுடியாது'' என்று சொல்லிவிட்டு அவள் உரக்கப் பாடத் தொடங்கினுள். அவளுடைய குரல் காட்டில் எதிரொலித்தது.

''சாந்தா பூனம் ராத்
அகர் சந்தரண் ராத்
அணசாம்யா அஜவாடா
க்யாந்த்தீ ஊபரே?''

(அழகிய பௌர்ணமி இரவு - பிரகாசமான நிலா வெளிச்சம் - எங்கிருந்து வருகிறது இது?)

வானமாகிய கோயிலில் தொங்கும் மணியைப் போல் காணப் பட்ட சந்திரனைப் பார்த்தபோது அதைக் கொட்டாப்புளியால் அடிக்கத் தோன்றியது பினுகிக்கு.

நாகநாத் போய்ச் சேர்ந்த பிறகு அந்த இரவு அவனும் தேவல் பாவும் வண்டிக்குக் கீழேயே ஒன்ருகப் படுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு அவன், இலந்தைப் பழங்கள் கிளறிவிட்ட இரண் டாண்டுகளுக்கு முந்தைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தபோது சௌக்கீதாரும், பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்த ஸ்திரீயும் அங்கு வந்து சேர்ந்துவிட்டார்கள்.

14

அந்த ஸ்திரீயின் இடுப்பில் ஒரு பத்துமாதக் குழந்தை உட்கார்ந்திருந்தது; இல்லே, தொங்கிக்கொண் டிருந்தது. அது இடியால் அடிபட்டுக் கிடக்கும் சிறு குருவியைப் போல் உலர்ந்து வற்றிக் கிடந்த தாயின் ஸ்தனத்தைச் சப்பிக்கொண் டிருந்தது. அந்த ஸ்திரீ தன் சும்மாட்டுக்கு மேலிருந்த சுமையை மற்ருெரு கையால் பிடித்துக்கொண் டிருந்தாள். அவளுடைய மற்ருெரு ஸ்தனம் தனக்கும் அவளுடைய உடலுக்கும் ஒரு சம்பந்தமும்

இல்லாதது மாதிரி அழுக்குப் பையைப்போல் தொங்கிக் கொண் டிருந்தது. பல இடங்களில் காரை உதிர்ந்து, எலிப்பொந்துகள் நிறைந்த, பைரவ்கட் போலீஸ் ஸ்டேஷனின் சுவரைப்போல அவளுடைய ரவிக்கை பல இடங்களில் கிழிந்திருந்தது. அந்தக் கிழிசல்கள் நாக்கை நீட்டிக்கொண்டு சொல்வது போலிருந்தது: 'நாங்களும் ஒரு காலத்தில் சூரத் பட்டணத்துத் தையற்காரர் கள் தயாரித்த உயர்ந்த ரக உடுப்பாகத்தான் இருந்தோம். இப் போதுதான் எங்கள் காலம் மாறிவிட்டது!'

ஸ்திரீயின் பாவாடை நுனி அவள் வேகமாக நடப்பதற்குத் தடையாக இருந்தது. அவள் பாவாடையைத் தன் முழங்கால் களுக்கு மேலே தூக்கிக் கட்டிக்கொண்டு நடந்தாள். தன் மேலாடை விலகிக் கிடப்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை.

அந்தப் பாவாடையின் சுற்றளவு பதினெட்டு முழம் இருக்கும். நாகநாத் திருவிழாவில் ராஸலீலைப் பாட்டுப் பாடிக்கொண்டு நடனமாடுபவர்களின் பாவாடை, கடலின் அலைகள்போல் நாற் புறமும் பரவும்.

மூட்டையைத் தூக்கிக்கொண்டு செல்லும் இந்த ஸ்திரீ ஒரு காலத்தில் நாகநாத் திருவிழாவில்,

"தேதா ஜாஜோரே தமே தேதா ஜாஜோ;
மாரீ ஸகீ நணதீனு வீரா!
ருமால் மாரோ தேதா ஜாஜோ!"

(என் கணவனை எனக்குக் கொடு! என் நாத்தனாரின் சகோதரனை எனக்குக் கொடு!)

என்றெல்லாம் பாடிப் புராண்பூர்த் திவானின் படுக்கையை அலங்கரிக்கும் தகுதி பெற்றவளாயிருந்தாள் என்பதை இப்போது திறமை வாய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூட ஊகித்து அறிந்து கொள்ள முடியாது.

இப்போது பழைய செளக்கீதாருக்குப் பதிலாக வேறொருவன் வந்திருந்தான். இவன் தன் கத்தியைத் தோளின் மேல் தொங்க விட்டுக்கொண் டிருக்கவில்லை; தன் போர்வையில் சுற்றிக் கட்கத்தில் இடுக்கி வைத்துக்கொண் டிருந்தான்.

அவன் பேசியது பிஞுகியின் காதில் தெளிவாகக் கேட்டது. "டேர் ஜாதிக்காரங்களுக்கு இப்ப எல்லாம் ரொம்பத் திமிர் ஜாஸ்தியாயிடுச்சு. உங்களையெல்லாம் அடிச்சு உதைச்சு முதுகுத் தோலை உரிக்கணும்."

''நல்ல காரியந்தான். அப்படியே செஞ்சுடு, அண்ணே! எங்க துணியும் கிழிஞ்சி போச்சு, மனசும் உடைஞ்சு போச்சு; தோல்தான் பாக்கியிருக்கு, அதையும் உரிச்சுடு!''

வேகமாக நடந்ததால் மூச்சுத் திணறிக்கொண்டே அந்த ஸ்திரீ பேசிய பேச்சு கூரிய கட்டாரிபோல் காட்டைத் துளைத்தது.

சௌக்கீதார் செருப்புக்களைத் தரையில் தேய்த்தவாறே நடந்து கொண்டு உறுமினான். "ஆமா, உரிக்கத்தான் உரிக்கணும்! வீட்டுக் குள்ளேயே இருந்துக்கிட்டு வெளியிலே வரமாட்டேங்கறியா?''

''என்ன பண்ணுவேன், அண்ணே? வீட்டிலே வேலைக்கு வேறே ஆளு இல்லையே! உங்கிட்டே சொல்லி என்ன பிரயோசனம்?''

''நீங்க—டேர் ஜாதிக்காரங்க—யாருக்கும் அடங்கறதில்லே. அதுக்காகத்தான், உங்களை அடக்கறதுக்குத்தான், சர்க்கார் எங்களுக்குச் சௌக்கீதார் வேலை கொடுத்திருக்கு.''

"ஆப்பா அலேக், உனக்குத்தான் எல்லாந் தெரியுமே!'' ஸ்திரீ அவனுடன் வாக்குவாதம் செய்வதைவிட்டு விட்டுப் பணிவுடன் பேசத் தொடங்கினாள். ''இந்தக் குழந்தை என் வயத்துலே எட்டாம் மாசம் இருந்தபோதுகூட நான் என் முறைப்படி 'பேகார்' (கட்டாய வேலை) செஞ்சேனுக்கும்! நான் கோமதி மாதிரி பொய்யும் புளுகும் சொல்லிக் கழுப்பிணித்தனம் பண்றவ இல்லே! அவ வயத்துலே குழந்தைக்கு நாலு மாசமாயிருக்கற போதே வேலை செய்யறதை விட்டுட்டா. ஒரு தடவை ஒரு அரபிக்காரன் மாத்தலாகிப் போய்க்கிட்டிருந்தான். கோமதிக்கு அவனோட மூட்டையைத் தூக்கிக்கிட்டுப் போற முறை. அவ தான் போகாமே தன்னோட பத்து வயசுப் பொண்ணை வேலைக்கு அனுப் பிச்சுட்டா. பொண்ணு ரொம்ப நோஞ்சான். அவளாலே நாலு மைல் தூரம் மூட்டையைத் தூக்கிக்கிட்டு நடக்க முடியுமா? அந்த நாசமாப் போன அரபிக்காரன் வழியிலே அந்தப் பொண்ணை என்னதான் செஞ்சானோ? பாவம், அவளாலே இன்னும் எழுந் திருந்து உட்காரக் கூட முடியல்லே!''

''உன் மாதிரி டேர் ஜாதிக்காரங்க அரபிக்காரங்க கிட்டே தான் ஒழுங்கா நடந்துக்கறீங்க. அவங்களோட துப்பாக்கியைப் பார்த் ததும் பசுவா ஆயிடுவீங்க நீங்க.'' சௌக்கீதார், பிணுகியின் காதில் விழாதபடி தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தான்: ''நீங்க எல்லாம் என்மாதிரி நல்ல ஆளுகளோட பேச்சை எங்கே கேக்கறீங்க?''

அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. ''சரி, சரி! கழுதை மேய்க்கப் போ. ஆப்பா!''

பிஞகிக்குத் தான் கிராம வாழ்க்கையை ஒரு கயிற்ருல் கட்டித் தன்னுடன் இழுத்துப் போவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

புத்தகங்கள், துணிமணிகள், இரண்டு மூன்று சேர் பேடா இவற்றின் சுமையைத் தூக்கிக் கொண்டு வரும் எலும்புந் தோலுமான உருவம் சிரித்ததும், வேடிக்கையாகப் பேசியதும், குழந்தைக்குப் பால் கொடுத்ததும், காட்டி ஜாதிக்காரச் சௌக்கீதாரைத் தன் எலும்பாலும் தோலாலுமே மயக்கிக் கொண்டிருந்ததும் ஆச்சரியந்தான்!

அடுத்த கிராமத்தின் சேரிப் பகுதியை அடைந்ததும் அவள் ஒரு மேடான இடத்தில் பெட்டியை இறக்கி வைத்து விட்டுத் தன் குழந்தையுடன் ஊருக்குத் திரும்பிப் போய் விட்டாள்.

அவள் கிளம்புவதற்குமுன் அங்கே ஒரு குடிசையிலிருந்து, ''நந்து, ரொட்டி சாப்பிட்டுட்டுப் போயேன்'' என்று குரல் கேட்டது.

''வேண்டாம்மா, நான் இப்பவே புறப்படணும். பேகாருக்காக இப்படி வர்றதும் போறதும் தினம் நடக்கற சமாசாரந்தானே?'' என்று சொல்லிக் கொண்டே கிளம்பிவிட்டாள் அந்த ஸ்திரீ. சௌக்கீதாரோடு கிராமத்துக்குத் திரும்ப அவளுக்குப் பயமாக இருந்தது.

பிஞகி ஏறி வந்த குதிரை அங்கேயே நின்று விட்டது. அந்தக் கிராமத்தின் சௌக்கீதார் ஒரு குடியானவனையும் இரண்டு எருதுகளையும் கூட்டிக் கொண்டு வந்தான்.

இரண்டு சௌக்கீதார்களும் சந்தித்துக் கொண்டார்கள்.

''ராம் ராம்! ஆப்பா அலேக்!''

''ராம் ராம்! என்ன சமாசாரம்?''

''அதை ஏன் கேக்கறே, போ! இந்த மூணு மாடுகளையும் காவல் காத்துக்கிட்டு உட்கார்ந்துக்கிட்டிருக்கேன்!'' புதிய சௌக்கீதார் குடியானவனையும் இரண்டு மாடுகளையும் சுட்டிக் காட்டினன். ''தானேதார் வராராம். அவருக்காகத் தான் இந்த மாடு.''

''எப்ப வராராம்?''

''கடவுளுக்குத் தான் தெரியும்! சில சமயம் சாயங்காலந்தான் கிளம்புவாரு.''

''ஆமாமா, அவரு தன் சௌகரியத்துக்குப் புறப்படுவாரு.''

''இதெல்லாம் இந்தக் கழுதைக்குப் புரியுதா? காலம்பற தான் இவனே மாட்டோட கொண்டு வந்து நிறுத்தினேன். அதுக்குள்ளே களைச்சுப் போயிட்டான்.''

''நூர் அண்ணே, அதெல்லாம் ஒண்ணுமில்லேங்க! என் வயல்லே பயிரெல்லாம் காஞ்சு போவுது. அதுக்காகத்தான்'' என்று குடியானவன் சொன்னான்.

''ஆமா, பெரீய்ய சங்கா ராஜாவோல்லியோ! போடா வேலே யத்தவனே! ஒண்ணு, பேகார் வேலைக்காகத் தனியா ஒரு ஜோடி மாடு வாங்கி வச்சிருக்கணும், அல்லது சர்க்காருக்கு மனுப் போட்டுப் பேகாரையே நிறுத்திடணும். அப்படிச் செய்யாமே...''

''வாஸ்தவந்தான்'' என்று சொல்லிக் கொண்டே ஆப்பா அலேக் தன் முண்டாசுத் துணியை எடுத்து அதற்குள் பீடி இருக்கிறதா என்று தேடத் தொடங்கினான். 'சனியன் எங்கே தொலைஞ்சு போச்சு? இங்கேதானே இருந்துது!'

இப்போது பெட்டியைத் தூக்கிவர ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாலியா அங்கு வந்து சேர்ந்தான்.

புதிய சௌக்கீதார் ஆப்பா அலேக்கிடம் சொன்னான்: ''அட ஏம்பா வேஷம் போடறே, ஏதோ பீடி இருந்த மாதிரியும் அது தொலைஞ்சுபோன மாதிரியும்? மாலியா கிட்டே பீடி இருக்குமே! வாங்கிக் கோயேன். ஏய், ஒரு பீடி இருந்தா எடுத்துக் கீழே போடு. அதுமேலே தண்ணி தெளிச்சுட்டு எடுத்துக்கறோம்.''

மாலியா ஒரு பீடியைக் கீழே வைத்தான். பக்கத்தில் மாடுகள் தண்ணீர் குடிப்பதற்கான தொட்டி இருந்தது. சௌக்கீதார் அதிலிருந்து ஒரு கை தண்ணீரை எடுத்துப் பீடியின் மேல் தெளித்தான். பீடியில் இரண்டு மூன்று இழுப்பு இழுத்துவிட்டு ஆப்பா அலேக் தன் கிராமத்துக்குத் திரும்பினான்.

பிணிக்குத் துணையாகப் போவதற்காக ஒரு புதிய சௌக்கீதார் ஏற்பாடு செய்யப்பட்டான்.

15

பத்ராபூர் கிராமத்தின் காட்டி தர்பார் கோதட்வாலா தன் இரண்டு மனைவிகளைக் கொலை செய்து விட்டான். மூன்றும் மனைவி ஒரு பெட்டிக்குள் ஒளிந்து கொண்டதால் உயிர் தப்பிவிட்டாள். கள் போதையில் மயங்கியிருந்த கோதட்வாலாவுக்கு அவள் உயிரோடிருப்பதுகூடத் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்தைப் பற்றிய புலன் விசாரணைக்கான பொறுப்பை ஆங்கிலேயப் போலீஸ் அதிகாரி தானே ஏற்றுக் கொண்டான். புலன் விசாரணை ஆரம்பமாவதற்குமுன் தன் ஆபீசிலிருந்த நாகர் ஜாதியைச் சேர்ந்த தலைமைக் குமாஸ்தாவை வேறு இடத்துக்கு மாற்றிவிட்டு அவனுடைய இடத்தில் ஒரு புதிய ஆளை நியமித்தார்.

அந்த ஊரில் இத்தகைய மாற்றங்கள்கூட ஒரு தேசத்தின் மந்திரி சபை மாறுதல்களைப் போல் பரபரப்பை உண்டாக்கின.

புதிய தலைமைக் குமாஸ்தா பிராமணன். ''கோதட்வாலா கேசைப் புலன்விசாரணை செய்ய நல்ல கெட்டிக்கார ஆட்கள் மூணு பேர் வேணும். உன்னாலே அப்படிப்பட்ட பேர்களைத் தேர்ந்தெடுக்க முடியுமா?'' என்று அதிகாரி அவனைக் கேட்டான்.

தலைமைக் குமாஸ்தா தேர்ந்தெடுத்தவர்களில் மகீபத்ராமும் ஒருவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மூவரையும் அதிகாரி கூப்பிட்டான். அங்கிருந்த வெள்ளைக்கார அதிகாரிகளில் அவன் தான் முதல் முதலில் ஹிந்துஸ்தானி கற்றுக்கொண்டவன். அவன் பெரிய மீசை வைத்திருந்தான். குதிரையின் மேல் ஏறிக்கொண்டு கத்தியவார் முழுதும் சுற்றுவான். காட்டில் குடியானவர்களுடன் சேர்ந்து கொண்டு அவர்களுடைய ரொட்டியைச் சாப்பிடுவான். அவர்களுடைய குவளையிலிருந்து தண்ணீர் குடிப்பான். தனக்குச் சாப்பாடு போட்ட குடியானவர்களின் மனைவி அல்லது பெண்ணின் கையில் ஒரு பத்து ரூபாய் நோட்டை வைத்துவிட்டுப் போய் விடுவான்.

அவன் இந்த மூவரிடமும், ''இதோ பாருங்க! நீங்களும் குழந்தை குட்டிக்காரங்க, நானும் குழந்தை குட்டிக்காரன்தான். எனக்கு ரெண்டு பிள்ளைக்குழந்தை இருக்கு. இன்னொன்று பொறக்கப் போவது, புரிஞ்சுதா?'' என்று கேட்டான்.

அவன் பேசிய ஹிந்தியைக் கேட்டதும் அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. அவர்கள் கஷ்டப்பட்டுத் தங்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

''நீங்க ஏழைகள்தான். இருந்தாலும் ஒருபோதும் லஞ்சம் வாங்கக் கூடாது. நானும் லஞ்சம் வாங்க மாட்டேன். எப்போதும் உண்மையா உழைக்கணும். தர்பாரோட ஆட்கள் ரொம்பப் போக்கிரிகள்; புரிஞ்சுதா?''

''சரி சாகேப்!''

''நீங்க ஜாக்கிரதையா இருக்கணும். ஆமா! நீங்க ஒழுங்கா இருந்தா சர்க்கார் உங்களுக்கு இனும் கொடுக்கும். புரிஞ்சுதா?''

''சரிங்க.''

''அப்போ, போய் வேலையை ஆரம்பிங்க. எபௌட்டர்ன்; க்விக் மார்ச்! டிஸ்மிஸ்!''

மகீபத்ராம் பைரவ்கட்டிலிருந்து மாற்றலாகி ராஜ்கோட்டுக்கு வந்து சேர்ந்தார். அவர் பைரவ்கட்டிலிருந்து புறப்படும்போது சில சம்பவங்கள் நிகழ்ந்தன.

முதலாவது, ஊரின் பால்காரன், காய்கறி விற்பவன், கடைக்காரன் எல்லோரும் ஒரு வருஷத்துக்குமுன் அவர் வாங்கிய சாமான்களுக்கெல்லாம் விலையைக் கணக்குப் பார்த்துக் கூட்டி அவரிடம் காசு கேட்க வந்தார்கள்.

முன்பெல்லாம் கடைக்காரன், ''உங்ககிட்டே எல்லாம் காசு வாங்குவேனு, எஜமான்? காசு என்ன பிரமாதம்?'' என்று சொல்வான்.

இரண்டாவது நிகழ்ச்சி, மகீபத்ராம் கிராமத்தார்களில் சுமார் நூறு பேர்களுக்குத் தேனீர் விருந்து வைத்தார். விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் எல்லாரும் ஆளுக்கொரு பரிசு தருவார்களென்று எதிர்பார்த்தார் அவர். ஆனால் நாலைந்து கற்கண்டுப் பொட்டலங்களையும் இரண்டு மூன்று தேங்காய்களையும் தவிர வேறொன்றும் அவருக்குக் கிடைக்கவில்லை.

மூன்றாவது, மகீபத்ராம் ஊரைவிட்டுக் கிளம்பிய அதே நாள் மாலையில் தானேதார் ருத்ரேசுவரில் தன் நண்பர்களுக்கு ஒரு பெரிய பாட்டுக் கச்சேரி வைத்தான்.

மகீபத்ராம் இந்தச் சம்பவங்களால் தமக் கேற்பட்ட கோபத்தைத் தம் வயதான தந்தையின் மேலும் மனைவியின் மேலும் காட்டியிருப்பார். ஆனால் இந்த மாறுதலால் அவருக்குப் பதவி உயர்வு கிடைக்க வழி இருந்ததால் அவர் தம் கோபத்தை அடக்கிக் கொண்டார்.

பிஞகியும் ராஜ்கோட் வந்து சேர்ந்தான்.

* * * * *

ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன.

மறுநாள் ரூக்கட்கேட் தூக்கிலிடப்பட இருந்தார்.

அன்றிரவு ராஜ்கோட் நகரில் மிகவும் பரபரப்பு காணப்பட்டது.

அந்தக் காலத்தில் பொதுமக்கள் முன்னிலேயில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றினுர்கள். அதைப் பார்ப்பதற்குத் திருவிழாக் கூட்டம் கூடிவிடும்.

வெற்றிலே விற்பவன், சாந்த்மியானுக்கு மசாலாபீடா மடித்துக் கொடுத்துக்கொண்டே, "தண்டோரா கேட்டியா?" என்று கேட்டான்.

அவன் தன் காதில் அத்தரில் நனேத்த பஞ்சை வைத்துக்கொண்டிருந்தான். அதன் வாசனே வெற்றிலே ரசிகர்களே அவனுடைய கடைக்கு அழைத்துக் கொண்டிருந்தது.

சாந்த்மியான், "ஆமா, கேட்டேன், கடைசித் தடவையா இதையும் பார்த்துடலாம்!" என்றான்.

"ஏன் 'கடைசித் தடவை'ன்னு சொல்றே?"

"இனிமேல் ஜெயிலுக்குள்ளேயேதான் தூக்குப் போடப்போறுங்களாம்."

"அப்படியா? தூக்குப் போடறதைப் பார்த்து ரொம்பப் பேர் பயத்திலே மயக்கமாயிடறுங்க."

"இந்தமாதிரி கோழைப்பசங்க ஏன் இதைப் பார்க்க வராங்க? பகிரங்கமாகத் தூக்குப் போட்டாத்தான் மனிசனேட ஆண்மை வெளிப்படும்!" என்று சொல்லிவிட்டுச் சாந்த்மியான் வேடிக்கை பார்க்கத் தன் தோழர்களே அழைப்பதற்காகப் போய்விட்டான்.

சிறுவர்கள்கூட மறுநாள் விடியற்காலேயில் எழுந்திருந்து மற்றவர்களேயும் எழுப்பிவிடத் திட்டமிட்டார்கள். தூக்குப் போடப்படும் இடத்துக்குக் கால்நடையாகப் போக முடியாதவர்கள் வண்டிகளே ஏற்பாடு செய்தார்கள்.

மகீபத்ராம், "பான்ஜாவை வெளியே போக விடாதே!" என்று மனேவியை எச்சரித்துவிட்டுப் பத்ராபூர் வழக்கின் புலன் விசாரணேக்காகப் போய்விட்டார்.

ஆனுல் பினகி ஒருவருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுக் கிளம்பி வேடிக்கைப் பார்க்கச் செல்பவர்களின் கூட்டத்தோடு சேர்ந்து கொண்டான்.

நான்கு பக்கங்களிலும் போலீஸ்காரர்கள் நடந்து சென்றுர்கள். அவர்களுடைய துப்பாக்கிகளின் சனியன்கள் பளபளத்தன. குதிரைமேல் ஏறிக்கொண்டு முன்னே சென்ற போலீஸ் அதிகாரிகள் அவர்களுக்கு உத்தரவு கொடுத்துக் கொண்டிருந்தனர். முன்னுல்

ஓடிவரும் ஜனக்கூட்டத்தைச் சமாளிக்கப் போலீசார் தங்கள் தடிகளைச் சுழற்றினார்கள்.

போலீஸ்காரர்கள் சுற்றிலும் நடக்க, மழைத் தண்ணீரால் கழுவிவிடப்பட்ட கற்களின்மேல் ஏறி இறங்கிக்கொண்டு ஒரு வண்டி சென்றது.

வண்டியில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய கைகளிலும் கால்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டிருந்தன.

பிணுகியோடுகூடப் போய்க்கொண் டிருந்த ஒரு பையன், ''சபாஷ்! நம்ம சுமாரியாவைப் பாரு! எத்தனை ஜோரா மீசையை முறுக்கிவிட்டுக்கிட்டிருக்கான்!'' என்றான்.

கைதிகளில் ஒருவன், விலங்கணிந்த தன் கையால் நீண்ட மீசையைக் காதுவரை முறுக்கி இழுத்துவிட்டுக்கொண் டிருந்தான். இதைப் பார்த்த பிணுகிக்குத் தன் பெரிய தாத்தா சுவாமிக்குத் தீபாராதனை செய்வதற்குப் பஞ்சை நீளமாகச் சுருட்டித் திரி செய்வது நினைவு வந்தது.

''இன்னிக்கு மட்டும்னு இல்லே. தினம் வண்டியிலே உட்கார்ந்துக் கிட்டுக் கோர்ட்டுக்குப் போறபோது நம்ம சுமாரியா இது மாதிரியே மீசையை முறுக்கிவிட்டுக்குவான். இன்னிக்குச் சாகப் போற சமயத்திலேகூட மீசையை முறுக்கிக்கறான், பாரு!'' என்றான் அந்தப் பையன்.

''உன்னோட சுமாரியாவா?'' என்று பிணுகி கேட்டான்.

கைதிகளை நன்றாகப் பார்ப்பதற்காக அவன் போலீஸ்காரர்களுக்கு வெகு அருகில் போய்விட்டான். கூட்டம் அவனை நசுக்கியது.

பையன் சொன்னான்: ''நாங்க தினம் வண்டிக்குப் பின்னாலேயே போவோம். அவன் எங்களுக்குச் சலாம் போடுவான். நாங்க என்ன படிக்கிறோம்னு கேட்பான், ஏதாவது கவிதையைப் பாடச் சொல்லுவான். அவன் ஏன் மீசையை முறுக்கிவிட்டுக்கறான்னு நாங்க கேட்டால், 'என் கையைக் கட்டிப் போட்டிருக்கு, வேறே என்னதான் செய்ய முடியும்? மீசையை முறுக்கிவிட்டுக் கறதுதான் ஆம்பிளைக்கு லட்சணம்' என்று அவன் கூறுவான்.''

அப்போது, ''இன்னொரு கைதி இருக்காரே, அவர் எங்களுக்கட்சேட்'' என்று பிணுகி சொன்னான்.

''உங்க எப்படி?''

''நான் அவர் வீட்டிலே ஒரு ராத்திரி தங்கியிருந்தேன். அவரோட குதிரையிலே நான் சவாரி பண்ணியிருக்கேன். அவர் எனக்கு

நன்னுக் குதிரைச் சவாரி செய்யக் கத்துக்குடுக்கறேன்னு சொல்லி யிருந்தாராக்கும்!''

பிஞகி சற்று உரக்கப் பேசினுன். அவனுடைய பேச்சைக் கேட்டு ரூக்கட்சேட் தலையை நிமிர்த்திப் பார்த்தார். பிஞகியைப் பார்த்துப் புன்சிரிப்பு சிரித்தார். விலங்கிடப்பட்ட கைகளைக் கூப்பி அவனுக்கு வணக்கம் தெரிவித்தார். பிஞகி போலீஸ்காரர்களைக் கவனிக்காமல் ரூக்கட்சேட்டுடன் பேச முன்னுலே வந்தான். போலீஸ் காரர்கள் அவனைப் பின்னுல் தள்ளினுர்கள். பின்னுலிருந்த யாரோ அவனைப் பிடித்துக் கொண்டிராவிட்டால் அவன் கூட்டத்தில் மிதிபட்டு நசுங்கிப் போயிருப்பான்.

கீழே விழுந்த தன் தொப்பியை எடுப்பதற்காகக் குனிந்த அவனுடைய பார்வை தன்னைப் பிடித்துக் கொண்டிருந்த ஆளின் கைகளில் விழுந்தது. அவற்றில் நிறைய வளையல்கள் இருந்தன. மாடிப்படி ஏறுவதுபோல் அந்த வளையல்களின் மீது ஏறிவந்த அவனுடைய பார்வை கைகளுக்குச் சொந்தக்காரியின் முகத்தில் விழுந்த அதே சமயத்தில், "அட, பான்ஜாவா? நீ எப்படி இங்கே?'' என்றுள் அவளும்.

குரலுக்குரியவள் ரூக்கட்சேட்டின் மனைவி சிபாரண்தான். அவளைப் பார்த்துத் திகைத்துவிட்டான் பிஞகி. புதிய உடை அணிந்திருந்தாள் அவள். அவளுடைய உடலிலிருந்து அத்தரின் வாசனை வந்து கொண்டிருந்தது.

கணவன் தூக்கில் சாகப்போகும் நேரத்தில் கூட இவள் ஏன் இப்படி அலங்காரம் செய்துகொண் டிருக்கிறுள்?

அவள் பிஞகியின் தோளின்மேல் கையை வைத்தவாறு நடந்தாள். அடிக்கடி கணவனைக் கூப்பிட்டுச் சொல்லிக்கொண் டிருந்தாள். "ஜாக்கிரதையாயிருங்க! சாமியை நினைச்சுக்குங்க!''

அவளுடைய இந்த வேண்டுகோள் தொழுகை நேரத்தில் மசூதியிலிருந்து எழுப்பப்படும் அழைப்பு ஒலியைப் போலக் கேட்டது. கூட்டம் மௌனமாக நடந்தது. ஜனங்கள் மரியாதையோடு அவளுக்கு வழி விட்டார்கள். போலீஸ்காரர்களுக்குக் கூட மனம் இளகிவிட்டது. தாங்கள் ஏதோ தப்புக் காரியம் செய்கின்றவர்கள் போல் அவர்கள் தலையைக் குனிந்து கொண்டு நடந்தார்கள்.

சுமாரியா மீசையை முறுக்கிக் கொண்டே போனுன். கூட்டத்திலிருந்து குரல்கள் எழுந்தன. "சபாஷ், சுமாரியா! நீ மிகவும் தைரியசாலிதான்!'' அவற்றைக் கேட்டுச் சுமாரியாவின் உற்சாகம் அதிகரித்தது. அவன் இன்னும் கம்பீரமாக மீசையை

முறுக்கத் தொடங்கினான். அவனுடைய இந்தச் சேஷ்டைகளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார் ரூக்கட் சேட்.

ஊரின் ஒரு புறத்தில் 'கப்பர் டேக்' என்று அழைக்கப்பட்ட ஒரு மேடான நிலம் இருந்தது. அங்கேதான் தூக்குமேடை கட்டப் பட்டிருந்தது. மேடையின் நான்கு பக்கங்களிலும் ஏழு வரிசை களில் குதிரை வீரர்களும் காலாட்களுமாகச் சிப்பாய்கள் நின்றார் கள். அவர்களைச் சுற்றிலும் வேடிக்கை பார்ப்பவர்கள் நிறைந்தி ருந்தார்கள். பக்கத்திலிருந்த மரங்களிலெல்லாம் மக்கள் இலை களைப் போல் தொங்கிக் கொண்டிருந்தார்கள்.

கடைசி வரையில் சிபாரணுக்குப் பக்கத்திலேயே நின்று கொண் டிருந்ததால் பினுகிக்குத் தூக்கு மேடையில் நடப்பதெல்லாம் நன்றாகத் தெரிந்தது.

சர்க்கார் அதிகாரி ரூக்கட் சேட்டை, "உன் கடைசி ஆசை என்ன?" என்று கேட்டார்.

"என் பெண்டாட்டியோடு கொஞ்சம் பேசணும்."

அநுமதி கிடைத்தது. சிபாரண் அவர் அருகில் சென்றாள். ரூக்கட் அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தார். "நன்னாப் பார்த்துக்கோ! ஆசை தீரப் பார்த்துக்கோ!" என்றாள் அவள்.

ரூக்கட் தம் நெஞ்சின் மேல் கையை வைத்துக் கொண்டு, "இப்போ திருப்தியாயிடுச்சு!" என்றார்.

"தைரியத்தைக் கைவிடாதே!" என்று சிபாரண் புத்திமதி சொன்னாள்.

ரூக்கட் சேட் இரண்டடி முன்னால் வந்தார்; தணிந்த குரலில் சொன்னார். "நீ...நீ..."

"சொல்லு, என்ன விஷயம்?"

"நீ வருத்தப்படாதே!"

"அப்படீன்னா?"

"உனக்கு எங்கே இருக்கப் பிடிக்குமோ அங்கே..."

சிபாரணின் கண்களில் முதல் தடவையாகக் கண்ணீர் தோன்றி யது. அவள் தன் கண்களை மூடிக் கொண்டு இரு கைகளாலும் தன் நெஞ்சை அமுக்கிக் கொண்டாள்.

"நான் உன்னைக் கஷ்டப்படுத்தியிருந்தால் என்னை மன்னிச்சுடு!" என்று சொல்லி விட்டு அவர் திரும்பிப் போய் விட்டார்.

"சுமாரியா, உனக்கு ஏதாவது ஆசை இருக்கா?" என்று அதிகாரி கேட்டார்.

"ஆமாங்க" என்று சொல்லிய சுபாரியா தூக்குமேடையின் மேல் ஏறிக் கொண்டு உரத்த குரலில் பாடத் தொடங்கினான்.

"அரேசும் மானவனும் அபிமான்!
பக்மாம் படீ ஜசே ரே!"

(மனிதனுக்கு ஏன் இவ்வளவு கர்வம்? அது ஒரு நிமிஷத்தில் விழுந்து உடைந்து விடும்.)

வெகு காலத்துக்கு முன் பிரபலமாக இருந்த 'வீணுவேலி' நாடகத்தில் வரும் பாட்டு இது. பத்துப் பேரைக் கொலை செய்த சுமாரியா அதைப் பாடியது தூரத்தில் நின்று கொண்டிருந்த கூட்டத்துக்குக் கூடத் தெளிவாகக் கேட்டது.

பாட்டு முடிந்ததும் அவன் சொன்னான்: "சரி, கொண்டாங்க குல்லாவை!"

அவனுடைய தலையில் கறுப்புக் குல்லாய் வைக்கப் பட்டது. கழுத்தில் கயிறு கட்டப்பட்டது. பலகை இழுக்கப் படுவதற்குள் சுமாரியா தானே பலகையிலிருந்து கீழே குதித்து விட்டான்.

ரூக்கட் சேட்டுக்கும் கறுப்புக் குல்லாய் அணிவிக்கப் பட்டது. அவருக்கடியிலிருந்த பலகை இழுக்கப்படும் வரையில், "ஜாக்கிரதையாயிரு! ஜாக்கிரதையாயிரு!" என்ற பெண் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது.

சற்று நேரத்தில் இரண்டு பிணங்களும் கயிற்றில் ஊசலாடத் தொடங்கின. இதைத் தூரத்திலிருந்து பார்த்த சிலர் பயத்தால் மூர்ச்சை யடைந்தார்கள்.

பிணங்களுக்கு ஈமச் சடங்குகள் செய்யப்பட்டன. சுமாரியாவின் உடல் புதைக்கப் பட்டது. ரூக்கட் சேட்டின் உடலுக்கு நெருப்பு வைக்கப்பட்டது.

சிபாரண் தான் அணிந்திருந்த அலங்கார உடையையும் ஆபரணங்களையும் சிதையில் எரிந்தாள். தலையிலிருந்து கால்வரை கறுப்பு உடை தரித்திருந்த அவள் சற்றுத் தொலைவில் உட்கார்ந்து கொண்டு சிதையில் தன் கணவனின் உடலும் தன் ஆடை ஆபரணங்களும் எரிவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

16

ஆடி— ஆவணியில் தோன்றும் மேகங்களின் வேகத்தில் பல சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக நிகழ்ந்தன.

பத்ராபூர் தர்பார் கோதட் தன் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டு விட்டான். யாராலும் கோட்டைக்குள் நுழைந்து அவனைப் பிடிக்க முடியவில்லை. அவனை உயிருடன் பிடித்து அவன் மேல் வழக்குத் தொடுக்கும்படி சர்க்கார் உத்தரவிட்டிருந்தது.

அது ஏஜென்ஸி ஆட்சியின் ஆரம்பக் காலம். அது ராஜாக்களை 'ஒரு வெட்டு, இரண்டு துண்டு' என்று தீர்த்துக் கட்டி விட விரும்பவில்லை. வோகர்துரை ராஜாக்களுடன் பல சிக்கலான உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்தார். அவை ஏஜென்ஸி அதிகாரிகளுக்குப் பலவிதங்களில் இடைஞ்சலாக இருந்தன.

யார் தன் கோட்டைக்குள் நுழைய முற்பட்டாலும் அவனைத் துப்பாக்கியால் சுட்டு விடுவது என்று தீர்மானித்திருந்தான் கோதட். உயிரைக் கொடுத்தாவது அவனைப் பிடிக்கக் கூடிய ஒரு தைரியசாலி தேவைப்பட்டான், வெள்ளைக்காரப் போலிஸ் துரைக்கு. அந்த நேரத்தில் தான் பாவர் ஜாதியைச் சேர்ந்த ஓர் இளைஞன் ஏழு வருடச் சிறைவாசத்துக்குப் பிறகு வெளியே வந்திருந்தான். கிர்நாரின் போரியா பள்ளத்தாக்கில் அவனைச் சந்திக்க ஏற்பாடு செய்திருந்தான் துரை. கூடவே மகிபத்ராமும் இருந்தார்.

பாவர் ஒரு பச்சை நிறப் பைஜாமாவும் சட்டையும் அணிந்து கொண்டு ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருந்தான். அவனுடைய கண்கள் சிங்கத்தின் கண்களைப் போல் சிவந்திருந்தன.

''ஏழு வயிஷத்துக்கு முன்னாலே காந்தட் ஊர்க்காரக் காம்தாரைக் கொன்னது யாரு?'' என்று துரை கேட்டார்.

''நாங்கதான்.''

"தர்பாரும் இந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டிருந்தாரா இல்லையா?''

"சம்பந்தப்பட்டிருந்தார். 'இல்லை'ன்னு நான் கோர்ட்டிலே சொன்னது பொய்."

''நீங்க மூணு பேரும் கொலைக்கான முழுப் பொறுப்பையும் ஏத்துக்கிட்டீங்களே, ஏன்?"

''தர்பாரைக் காப்பாத்த.''

"அதுக்குப் பதிலா உங்களுக்கு என்ன கிடைக்கும்?''

''எங்களுக்குத் தூக்குத் தண்டனை கிடைச்சா எங்க குழந்தை குட்டிகளைக் காப்பாத்தறதா தர்பார் வாக்குக் கொடுத்திருந்தார்.''

''அவர் எப்படிக் காப்பாத்தினர், பார்த்தியா?''

பாவர் பதில் ஏதும் சொல்லவில்லை. ஆனால் அவனுடைய கண்கள் மேலும் சிவந்தன. பிறகு அவற்றில் நீர் நிரம்பியது.

அந்த நீர்த் திரை வழியே அவனுடைய கடந்த காலம் அவன் கண் முன் வந்தது.

சுமார் இருபத்தைந்து வயது நிரம்பிய அவனுடைய மனைவி ஜுலேகா இனிப்புப் புலாவ் தயார் செய்து கொண்டிருக்கிறாள். பாவரின் தாய் தந்தையர் தங்கள் குடும்பத்தைப் பராமரித்து வரும் தர்பாரை விருந்துக்கு அழைத்திருக்கிறார்கள். தர்பார் புலாவைச் சாப்பிட்டுக்கொண்டே அதன் நேர்த்தியைப் பாராட்டு கின்றார். "இதெல்லாம் உன் பொண்ணோட சாமர்த்தியம்" என்று அவர்கள் ஜுலேகாவைச் சுட்டிக் காட்டுகிறார்கள். அவருடைய பார்வை அவள்மேல் விழுகிறது. அவர் அவளை இழுத்துக் கொண்டு போய் விடுகிறார். பாவரின் தாய் தந்தையர் புலாவ் தயார் செய்த சட்டியை அங்கேயே உடைத்துப் போட்டு விட்டுத் தர்பாரின் ராஜ்யத்திலிருந்து வெளியேறி விடுகிறார்கள். சிறையில் இருக்கும்போதே இந்தச் செய்தி பாவரின் காதில் விழுகிறது. வெளியில் வந்ததும் தர்பாரைப் பழிவாங்கத் தீர்மானிக்கிறான் பாவர்.

"நீ கோழை மாதிரி அழுதுகிட்டு இருக்கப் போறியா, இல்லே, தர்பாரைப் பழிவாங்கப் போறியா?" என்று மகீபத்ராம் கேட்டார். "நீ பழிவாங்கினா உன்னைச் சர்க்கார் ஒண்ணும் செய்யாது. துரை வாக்குக் கொடுத்திருக்கார்."

இந்த வாக்கை உறுதிப்படுத்தும் முறையில் துரை பாவரிடம் கையை நீட்டினான்.

"அது இப்போ முடியாதுங்க. காலம் கடந்து போச்சு. தர்பார் மேலே இப்ப எனக்கு ஒரு புகாருமில்லே."

"அதெப்படி?"

"இன்னிக்குக் காலையிலே தர்பார் ஒரு ஆளைப் பணத்தோடே அனுப்பிச்சார்."

"எவ்வளவு பணம்?"

"எனக்குத் தெரியாதுங்க. நான் அந்தப் பணத்துக்கு ஆசைப் படல்லே."

"நீ பணத்தை வாங்கிக்கல்லியா?"

"இல்லே. அவர் எங்கிட்டே மன்னிப்புக் கேட்டார். நடந்தது என்னவோ நடந்து போயிடுச்சு. நானும் மன்னிச்சுட்டேன் அவரை."

"அவர் உன் பெண்டாட்டியை வச்சுக்கிட்டிருக்காரே, அதுக்கு என்ன சொல்றே?"

''எனக்கு எல்லாந் தெரியுங்க! அவளுக்குப் பிடிச்சுது, அவரோடே ஓடிப்போனு. இப்போ அவளுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லே.''

''அப்படியானு உனக்குத் தர்பார் மேலே கோபம் இல்லையா?''

''அவரைக் கொல்றதுக்காக ஒரு துப்பாக்கியைத் திருடிக் கொண்டு வந்திருந்தேன். இன்னிக்கு மத்தியானம் அதைப் பாடியாக் கிணத்துலே எறிஞ்சுட்டேன்.''

''இப்போ என்ன செய்யப்போறே?''

''அம்மா அப்பாவோடே விவசாயம் செய்வேன். மரம் வெட்டிப் பொழைப்பேன். ஏதோ வேலை செய்வேன்.''

துரை அவனிடம் எதையோ நீட்டினுர். ''இந்தா, இதை வச்சுக்கிட்டு ஏதாவது வியாபாரம் பண்ணு!''

துரையின் கையில் ஒரு பொட்டலம் இருந்தது. அதற்குள் கொஞ்சம் பணம் இருந்தது.

''எனக்கு வேண்டாம். என்னை மன்னிச்சுடுங்க.''

''ஏன்?''

''ஏதோ உசிரை வச்சுக்கறதுக்காகத்தான் வேலை செய்யப் போறேன். பணக்காரனு ஆகறதுக்காக இல்லே.''

''வாங்கிக்கோடா, முட்டாள்!'' என்று துரை வற்புறுத்தினுர்.

''உங்களுக்கு ரொம்ப நன்றிங்க. ஆனு நான் காசு வாங்கிக்க மாட்டேன். நான் இப்பத்தான் சாப்பிட்டிருக்கேன்; எனக்குப் பசி இல்லே.'' பாவர் தன் போர்வையால் கண்களைத் துடைத்துக் கொண்டே புறப்பட்டான். மகீபத்ராமும் அவனுடன் சற்றுத் தூரம் சென்முர்.

பாவர் அவரிடம், ''எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?'' என்று கேட்டான்.

மகீபத்ராம் பரிவுடன் அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்தார். ''இதோ பாரப்பா, நாம எல்லோரும் ஒண்ணுதான். நான் பிராமணனுயிருந்தாலும் இப்போ வெறும் சிப்பாய்தான். அந்தக் காலத்திலிருந்தே பூணூல் மட்டும் போட்டுக்கிட்டிருக்கேன். அதைத் தவிர உனக்கும் எனக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. நாம ரெண்டு பேருமே சிப்பாய்கள்தான். உனக்கு என்ன வேணுமோ, தயங்காமக் கேளு!''

''ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நீங்க தர்பாரைப் பிடிக்கத் தான் போறீங்க. அப்போ ஜுலேகாகிட்டே அவ சுகமா இருக்காளான்னு மட்டும் கேளுங்க. அவகிட்டே என் பேரைக்கூடச் சொல்ல வேண்டாம்!''

மகீபத்ராம் சிரித்தார். ''நீ கொஞ்ச நேரத்துக்கு முன்னுலே தானே சொன்னே 'எனக்கும் அவளுக்கும் ஒரு சம்பந்தமு மில்லே'ன்னு?''

''சொன்னது வாஸ்தவந்தாங்க. ஆனு நம்ம வயத்துக்குள்ளே வாயு உண்டாகிற மாதிரி, சில சமயம் அந்த நினைவு தானு வந்துடுதுங்க.''

''சரி, அவ சௌக்கியமா இருக்காளான்னு தானே உனக்குத் தெரியணும்? இன்னிக்குச் சரியா எட்டாம் நாள் வா. நானே அங்கே போயிட்டு வந்து உனக்கு விவரம் சொல்லல்லேன்னு நான் பிராமணனுடை பிள்ளையில்லே.''

மகீபத்ராம் அவனுக்குத் தம் விலாசத்தைக் கொடுத்தார். பாவர் அவருடைய கால்களில் விழுந்தான்.

மகீபத்ராம் அவனைத் தூக்கி நிறுத்தினர். ''சரி, நீ ஆம்பிளையா லட்சணமா இரு. விவசாயமும் வேண்டாம், வேறே வேலே வெட்டி யும் வேண்டாம் உனக்கு. நான் சொல்றதைக் கேளு. பேசாமே போய்க் காயக்வாட் பட்டாளத்திலே சேர்ந்துடு. இல்லேன்னு இந்தப் பத்ராபூர் மலையும் இந்த மரங்களும் ராப்பகலா அவளே ஞாபகப்படுத்தும், உன்னைப் பைத்தியமா அடிச்சுடும், புரிஞ்சுதா?''

17

மகீபத்ராம், பாவருக்கு விடை கொடுத்தனுப்பி விட்டுத் துரை யுடன் திரும்பிவிட்டார்.

ஆகாயத்தில் சூரியன் தன் குதிரைகளின் லகானைத் தளர்த்தி விட்டிருந்தான். அவனுடைய தேரின் சக்கரங்களும் குதிரைகளின் கால்களும் நிதானமாகச் சென்று கொண்டிருந்தன. ரைவத மலையின் கழுத்தில் மேகங்கள் போர்வை போலப் படிந்திருந்தன. சௌராஷ்டிர பூமியாகிய மெத்தையின் மேல் உட்கார்ந்திருக்கும் ஒரு பருமனுன சேட்டைப் போலத் தோற்றமளித்தது ரைவத மலை.

குதிரையின் மேல் சவாரி செய்து கொண்டிருந்த துரை தனக்குப் பின்னுல் வந்து கொண்டிருந்த மகீபத்ராமைக் கூப்பிட்டான்.

மகீபத்ராம் தம் குதிரையை அவனுக்கருகில் ஓட்டிக்கொண்டு போய் ''என்னங்க?'' என்று கேட்டார்.

"நான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன்."

"சொல்லுங்க."

"இந்தக் கத்தியவார் மக்கள் ரொம்ப அதிசயமான ஆட்கள். இந்தப் பாவர் இளைஞனைப்பத்தி நினைக்க நினைக்க ஆச்சரியமா இருக்கு எனக்கு. அந்தச் சுமாரியாவும் ரூக்கட் சேட்டும் அபூர்வப் பிறவிகள். அந்த மாதிரி பண்பும் வீரமும் எவ்வளவு சீக்கிரம் மறைஞ்சு போய்க்கிண்டிருக்கு!"

துரை ஆங்கிலத்தில் பேசினார். மகீபத்ராமுக்கு ஆங்கிலம் தெரியாதென்பதை அவன் மறந்துவிட்டான். அவனுடைய சிகரெட்டின் புகை அவன் வயிற்றுக்குள் சென்ற அளவுகூட ஆங்கில மொழி ஞானம் மகீபத்ராமுக்கு இல்லை.

"நீ ஏன் பேசமாட்டேங்கறே?"

"சாகேப், ஐ டோண்ட நோ இங்கிலீஷ்."

"ஓ! நான் மறந்துபோயிட்டேன். ஐ பெக் யுவர் பார்டன்."

துரை இப்போது தன் நினைவுகளை ஹிந்தியில் மொழிபெயர்த்துச் சொன்னான். "இவங்க மாதிரி உண்மையான வீரர்களை இப்போ ஜாஸ்தி பார்க்க முடிகிறதில்லே. நான் மட்டும் இந்தத் தேசத்தோட கமாண்டர்-இன்-சீஃப்பா இருந்தா ஒரு தனி சோரட் ரெஜிமென்ட் உண்டாக்கி யிருப்பேன்."

"நீங்க நிச்சயம் ஒரு நாள் கமாண்டர்-இன்-சீஃப்பா ஆயிடுவீங்க!" என்றார் மகீபத்ராம்.

"நிசமாவா?" துரைக்கு ரொம்பச் சந்தோஷம்

"ஆமா! என்னோட அப்பா ஒரு பெரிய ஜோசியர். அவர்தாம் சொல்லியிருக்கார், உங்களுக்குப் பெரிய பதவி கிடைக்கும்னு!"

துரைக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. அவன் குதிரைக்கு இருபுறமும் தொங்கிக்கொண் டிருந்த கால் தாங்கல்களில் கால்களை உதைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். குதிரை வேகமாக ஓடத் தொடங்கியது. யாரோ ஒரு ஜாகீர்தாரிடமிருந்து இரவல் வாங்கிய குதிரையின்மேல் வந்துகொண் டிருந்த மகீபத்ராம் துரையின் குதிரையின் வேகத்துக்கு ஈடுகட்ட முடியாமல் திண்டாடினார்.

ஏஜென்ஸி போலீஸ் ஸ்டேஷனுக்கு:உட்பட்ட ஒரு கிராமத்தின் தோப்பில் துரையின் கூடாரம் அடித்திருந்தது. அந்த நாட்களில் எல்லாருடைய கவனமும் அந்தக் கூடாரத்திலேயே நிலைத்திருந்தது.

துரை கூடாரத்தை அடைந்தபோது சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருப்பதைக் கண்டான். அவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டார்கள்.

தூப்பில்லாவைச் சேர்ந்த பாபாஜி துரையிடம் விண்ணப்பித் தார்: ''எங்க இடத்துக்கு நாலு பக்கமும் இருபது மைல் தூரத் துக்குள் வேட்டையாடக் கூடாது. ஆகையால் நீங்க நேத்து ராத்திரி ஒரு மானைக் கொன்றதுக்காகப் பிராயச்சித்தம் பண்ணுங்க. பகவான் உங்க குழந்தை குட்டிகளுக்கு நீண்ட ஆயுளைக் கொடுப்பார்.''

கிராமத்துச் சேட் கைகளைக் கூப்பிக்கொண்டு துரையிடம், ''போலீஸ்காரங்க நாய்களுக்கு விஷம் கொடுத்ததாலே எங்க ளோட கௌரவமே போயிடுத்து'' என்றார்.

''நாயா? நாயைக் கொல்லத்தான் வேணும், கொல்லத்தான் போறேன்! அதுகளுக்கு வெறி பிடிச்சு எல்லாரையும் கடிச்சா அப்ப நீங்க என்ன பண்ணுவீங்க? உம்!''

''நீங்க சொல்றது சரிதான்.'' மோதிரம் அணிந்த பத்து விரல் களையும் விரித்துக்கொண்டு, ''ஆனா இது எங்கள் மதத்துக்கு விரோதம்'' என்று கூறினார்.

''அதெல்லாம் இல்லை! நீ போகலாம்'' என்று சொல்லித் தொப்பியால் தரையில் அடித்தான் துரை. பிறகு தூப்பில்லா பாபாஜியிடம் சொன்னான். ''எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு, இனிமேல் வேட்டையாடமாட்டேன்!''

பாபாஜி, ''உங்க குழந்தை குட்டிகள் நன்னாயிருக்கணும். உங்க ராஜ்யம் நிலைச்சு இருக்கணும்!'' என்று ஆசீர்வாதம் செய்து விட்டுத் தாம் கொண்டு வந்திருந்த சாம்பிராணிச் சட்டியில் கொஞ்சம் சாம்பிராணியைப் போட்டுத் துரைக்கு முன்னால் நீட்டினார். தூபத்தைக் கண்களில் ஒற்றிக்கொள்ளும் வழக்கம் அறியாத துரை சற்றுப் பயந்துபோய்விட்டான். மகீபத்ராம் மட்டும் முன்னால் வந்து தூபத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டு பாபாஜியை அனுப்பிவைத்தார்.

''வெள்ளைக்கார ராஜ்யம் நல்லா நடக்கட்டும்!'' என்று உரத்த குரலில் ஆசீர்வாதம் செய்து கொண்டே பாபாஜி அங்கிருந்து புறப்பட்டார். அவர் ஊரின் எல்லையைத் தாண்டும் வரையில் அவருடைய குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

தன்னைப் பார்க்க வந்தவர்களை அனுப்பிய பிறகு துரை சற்றுத் தொலைவில் கறுப்பு உடையணிந்த ஒரு ஸ்திரீ நின்றி ருப்பதைக் கண்டான். அவள் முகத்தை முக்காட்டால் மறைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் ஒரு பதினைந்து வயதுப் பையன் நின்று கொண்டிருந்தான்,

''யாரது? இங்கே வா!'' என்று துரை கூப்பிட்டான்.

அவர்கள் அருகில் வந்தபோது மகீபத்ராம் கவனித்தார். பையன் வேறு யாருமில்லை, பிஞகிதான்!

மகீபத்ராம் தணிந்த குரலில், "நீ இங்கே எங்கே வந்தே? அந்த அம்மாளோட கையிலே என்ன, மனுவா? என்ன மனு?'' என்று அவனைக் கேட்டார்.

பிஞகி அந்த ஸ்திரீயின் கையிலிருந்த மனுவை எடுத்துத் தலைமைக் குமாஸ்தாவின் கையில் கொடுத்தான்.

தலைமைக் குமாஸ்தா மனுவைப் பிரித்துப் படித்தான். தப்புந் தவறுமான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது அது. அதனடியில் கைரேகை பதிக்கப்பட்டிருந்தது. அதற்குக் கீழே ஆங்கிலத்தில் எழுதியிருந்தது, 'தூக்கிலிடப்பட்ட ரூக்கட் சேட்டின் விதவை ஃபாதிமா பாயி' என்று.

18

'ரூக்கட் சேட்டின் விதவை'—இந்தச் சொற்ருெடர் தலைமைக் குமாஸ்தாவைச் சிந்தனைக்குள்ளாக்கியது என்பதை அவருடைய நெற்றியில் விழுந்த சுருக்கங்களிலிருந்தே பிஞகி ஊகித்தறிந்து கொண்டான். மனுவின் சாராம்சம் இதுதான்: "நான் ரூக்கட் சேட்டின் மனைவி. பத்து வருஷங்கள் அவருடன் குடும்பத்தை நடத்தினேன். அவருடைய சொத்து எனக்கு ஏன் கொடுக்கப் படவில்லை?''

''இவ ரூக்கடோட கம்மனுட்டிதானே?''
தலைமைக் குமாஸ்தா ஏளனமாக மகீபத்ராமைக் கேட்டான்.

'கம்மனுட்டி' என்ற கொச்சையான வார்த்தையை அடிக்கடி உபயோகிப்பவர்தாம் மகீபத்ராமும். அவர் "ஆமாம்'' என்று பதில் சொன்னுர்.

அதைக் கேட்டதும் பிஞகிக்கு ரொம்பக் கோபம் வந்தது. அவனுடைய கண்கள் சிவந்தன, உதடுகள் துடித்தன.

''என்ன தாத்தா! நீங்ககூட...''

''வாயை மூடுடா!'' மகீபத்ராம் அதட்டினுர். "இவளை நீயா கூட்டிக்கிண்டு வந்தே?''

"ஆமாம்.''

'உதவாக்கரை!'' மகீபத்ராம் கண்களை உருட்டினார். ''படிச்சா மட்டும் போதுமா? உனக்குப் புத்தி வேண்டாம்? பிறத்தி யாருக்கு உபகாரம் பண்ணக் கிளம்பிட்டியாக்கும்!''

தலைமைக் குமாஸ்தா துரையின் கூடாரத்துக்குள் போய் மனுவைத் துரையிடம் கொடுத்தான்.

கொலைகார சேட்டின் மனைவி என்று சொல்லிக் கொள்ளும் ஸ்திரீயைப் பார்க்கும் ஆவல் ஏற்பட்டது துரைக்கு.

''துரை! இது போலீஸ் விவகாரம் இல்லேங்க, ரெவின்யூ விவகாரம். ஆகையாலே இந்த விஷயத்திலே நமக்குச் சம்பந்தம் இல்லே'' என்றார் தலைமைக் குமாஸ்தா.

''இருந்தாலும் நான் அவளைப் பார்க்கறேனே'' என்று கூறியபடி துரை கூடாரத்திலிருந்து வெளியே வந்தான்.: கறுப்பு ஆடையால் தன் உடலை மறைத்துக் கொண்டிருந்த அவளுடைய நெடிய தோற்றத்தைக் கவனித்தான்.

அன்றுதான் மகீபத்ராமும் அவளை முதல் தடவையாக நன்றாகப் பார்த்தார். தம் புதல்வி மரணத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட அந்தக் கவலை நிறைந்த இரவு அவரது நினைவுக்கு வந்தது. நினைவு வந்ததும் அவரது முகத்திலும் ஓர் இளக்கம் தோன்றியது.

அந்த ஸ்திரீ விதவைக்கோலம் பூண்டிருந்தாள். வளையல்கள் அற்ற கைகள் மெலிந்திருந்தன. துணியைப் போர்த்தி நிறுத்தி வைக்கப்பட்ட பிணத்தைப்போல் ஜீவனற்றுக் காட்சியத்தாள் அவள்.

''அவ ஏன் பேசாம இருக்கா? ஏன் முகத்தை மூடிக்கிட்டு இருக்கா?'' என்று துரை கேட்டான்.

''அவ பெரிய பதிவிரதைமாதிரி வேஷம் போடறா'' என்று தலைமைக் குமாஸ்தா பதில் சொன்னான்.

''அவளை ஜில்லா அதிகாரி கிட்டே போகச் சொல்லு.''

''நான் யார் கிட்டே போவேன்? எனக்கு யாரையும் தெரியாது. எல்லாரும் என்னைக் கேலி செய்யறாங்க. இந்தப் பையன் கூட்டிக்கிட்டு வந்ததனாலே தான் இங்கே வந்தேன்'' என்றாள் அந்த மங்கை.

''இந்தப் பையன் யாரு?'' என்று துரை கேட்டான்.

மகீபத்ராம் பதில் சொல்ல முடியாமல் தவித்தார். பிறகியே ''ஒரு மாணவன்!'' என்று பதில் சொன்னான்.

''உனக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்?''

''சாக இருந்த என் அம்மாவை இவதான் காப்பாத்தினா.''

பிறகு துரைக்கு எல்லா விவரமும் தெரிந்து விட்டது.

துரை பொலிடிகல் ஏஜண்டுக்கு ஒரு கடிதம் எழுதினன்.

அது கடிதங்களின் காலம். அவற்றுக்கு முன்னல் சட்டத்தை யும் நியாயத்தையும் கேட்பார் கிடையாது.

தூரத்தில் ஒரு மரநிழலில் ஆள் குதிரையுடன் நின்று கொண்டிருந்தான். குதிரையின் கனைப்பு உறவினர்களின் குரலைப் போல் காதுக்கு இனிமையாக இருந்தது.

''பான்ஜா? உன்னோட ஆசை இன்னும் பூர்த்தியாகல்லியே?'' என்று அந்தப் பெண் கேட்டாள்.

''என்ன ஆசை, மாமி?''

பிஞகி அவளுடன் ஒரு புதிய உறவை ஸ்தாபித்துக் கொண்டு விட்டான்.

''சேட்டோட குதிரைமேலே சவாரி பண்ணற ஆசை.''

''ஆமா.''

''குதிரை அதோ நிக்குது.''

''எங்கே இருந்து வந்தது?''

''நான் அதை த்வஜதாரி அநுமார் கோயிலுக்கு அனுப்பியிருந் தேன். இங்கே கொண்டு வரச்சொல்லி ஆளை அனுப்பிச்சேன்.''

''இதை நீ எங்கே வச்சுக்குவே? ''

''எங்கிட்டேய வச்சுக்குவேன். இது மேலே ஏறிக்கிட்டு ஊர் ஊராச் சுத்துவேன்.''

அவள் குதிரையை ஓர் இடத்தில் நிறுத்திப் பிஞகியை அதன் மேல் ஏறச் சொன்னுள். குதிரையை நெருங்கிய அவன் திடீரென்று கத்திக் கொண்டு வேறு பக்கம் ஓடினன்.

''ஏன், என்ன ஆச்சு?'' என்று அவள் கேட்டாள்.

''வேண்டாம் மாமி! நான் அதுமேலே ஏறமாட்டேன்.''

''ஏன்?''

''அது மேலே யாரோ ஏறிக்கிண்டிருக்காப்பலே இருக்கு!''

''அந்த ஆள் எப்படி இருந்தார்?''

''எனக்குச் சொல்லத் தெரியாது.''

''என்ன மாதிரி துணி உடுத்தியிருந்தார்?''

''தலையிலே கறுப்புக் குல்லா, கழுத்திலே சுருக்கு, குல்லாவை எடுத்து எறிய முயற்சி பண்ணிக்கிண்டிருந்தார்!''

சொல்லும்போதே மயக்கமாக வந்தது பிஞகிக்கு. அவன் மரத்தைப் பிடித்துக் கொண்டு சாய்ந்தான்.

''பயப்படாதே? அவர் தான் உன்னோட மாமா!''

''நிசமாவா?''

''ஆமா! இனிமே இந்தக் குதிரையை ஒத்தரும் எங்கிட்டே இருந்து பிடுங்கிக்க முடியாது. என்னோடெ சொத்து எல்லாம் போயிட்டாலும் இந்தக் குதிரை மட்டும் எங்கிட்டேயே இருக்கும்'' என்று கூறி அவள் திரும்பத் திரும்பக் குதிரையை வணங்கினாள். ''தாயே! உன்மேலே என்னோடெ சாமியோட நிழல் விழுந்திருக்கு. அவர் உன் முதுகுமேலே சவாரி செய்யறார். நீ அவரோட கழுத்துச் சுருக்கை எடுத்துடு. நான் உன் மேலே சேட்டுக்காக ஒரு பட்டாக் கத்தியைக் கட்டி வைக்கறேன். உனக்கு ஒரு பச்சைக் கொடி தயார் செஞ்சு தரேன். என் சாமி! ரணுஜாவிலே இருக்கற ராம்தே பீர் மாதிரி நீங்களும் ஒரு பீராயிடுங்க. யாருக்குக் கஷ்டம் ஏற்பட்டாலும் அதைத் தீர்த்து வையுங்க. ஜெயிலுக்கும் தூக்கு மேடைகளுக்கும் நீங்க போய் மக்களுக்கு உதவி செய்யுங்க! ஜெயில் பூட்டை உடையுங்க, சுவரை இடியுங்க!''

இப்படிச் சொல்லிக்கொண்டே அவள் குதிரையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள்.

''சரி வா, பான்ஜா! நாம குதிரையை நடத்திக்கிட்டே போவோம். உன்னை ஸ்டேஷன்லே விட்டுட்டு நான் போறேன்.''

''அப்புறம் எப்போ வருவே?''

''வரேன் ஒரு நாள்.''

பிஞகியை ஸ்டேஷனில் விட்டு விட்டு அவள் குதிரையுடன் த்வஜதாரி அனுமார் கோயில் பக்கமாகப் போனாள்.

19

ரெயில் வண்டியின் நாலைந்து பெட்டிகள் அசோக மரத்து இலைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தான் பிஞகி. அவற்றுக்குள் யார் இருக்கிறார்கள் என்று அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்பட்டது அவனுக்கு.

ரெயில் பெட்டிகளுக்கு எதிரில் சிப்பாய்கள் கைகளில் துப்பாக்கிகளுடன் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள்.

எதிரிலிருந்த பிளாட்பாரத்தில் இன்னொரு ரெயில் வண்டி நின்று கொண்டிருந்தது. மோர்விப் பாணியில் மடிப்புகள் அமைந்த, உருண்டையான அழகிய தலைப்பாகை அணிந்த, ஆஜானுபாகுவாகத் தோற்றமளித்த சிலர் அதிலிருந்து இறங்கினார்கள்.

அவர்களுடைய தாடிகள் நடுவில் வகிடு எடுக்கப்பட்டு இருபுறமும் சிப்பால் சீவப்பட்டிருந்தன. அவர்கள் கோட்டுகளும் பெல்ட்டுகளும் அணிந்திருத்தார்கள். அவர்கள் இறுக்கமாக அணிந்திருந்த சூரீதார் பைஜாமாக்கள் கால்களின் ஆடுசதையை நன்றாக எடுத்துக் காட்டின. அவர்களுடைய பாதங்களில் ராணி மார்க் தோலால் செய்யப்பட்ட உயர்ந்தரகப் பூட்சுகள் இருந்தன.

மச்சு நதிக்கரையைச் சேர்ந்த ஜாடேஜா ராஜபுத்திர இனத்தினர் காலத்துக்கேற்ற புதுமையான வழக்கங்களைப் பின்பற்றுவதற்குப் பெயர் போனவர்கள்.

நீலச்சாயை கலந்த பால் போன்ற வெண்ணிற ஆடையுடுத்தியிருந்த அவர்கள் தங்களைச் சுற்றிலும் இனிய மணத்தைப் பரப்பிக்கொண்டே அடுத்த பிளாட்பாரத்துக்குப் போனார்கள். அதன் பிறகு ரெயில் பெட்டிக்கு முன்னால் பல திரைகளாலான ஒரு கூடாரம் போடப்பட்டது. ஐந்தாறு ஆட்கள் திரைகளைச் சிரமப்பட்டுப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். மடிப்பு மடிப்பாகத் தைக்கப்பட்ட பாவாடைகள் அணிந்த சில பெண்கள் திரைகளைச் சரிப்படுத்திக்கொண்டும் ஆட்களை அழைத்து ஏதோ கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டும் யாரையோ பெட்டியிலிருந்து இறக்கிக் கொண்டும் இருந்தார்கள்.

பிஞ்சுகி இதற்கு முன் இத்தகைய காட்சியைக் கண்டதில்லை. இதைப் பார்த்தபோது அவனுக்குப் பெரிய பெரிய மீன்களைப் பிடிக்கும் வலையர்களும் ஒரு கொடிய மிருகத்தை வலையில் சிக்க வைக்கும் வேடர்களும் நினைவுக்கு வந்தார்கள்.

கடைசிப் பேர்வழி பெட்டியிலிருந்து இறக்கப்பட்டுவிட்டார். இப்போது கூடாரம் நகர்ந்து போய் அலங்கரிக்கப்பட்ட ரெயில் பெட்டிகளுக்கு முன்னால் நின்றது. இப்போது கூடாரம் காலி செய்யப்பட்டு அதிலிருந்தவர் ரெயில் பெட்டிக்குள் ஏற்றப்பட்டார். இரண்டு ரெயில் வண்டிகளுக்குமிடையே நிறையக் கூட்டம் இருந்தபோதிலும் அவர்களில் யாராலும் ரெயில் பெட்டிக்குள் ஏற்றப்பட்டவரைப் பார்க்க முடியவில்லை. இந்தச் சாதனையைச் செய்து முடித்துவிட்ட பெருமை அந்தப் பெண்களின் முகங்களில் பிரதிபலித்தது.

அங்கு எண்ணற்ற மடிப்புகளுள்ள தலைப்பாகைகளும், கால் வரை தொங்கும் பெல்ட்டுகளும், சூரீதார் பைஜாமாக்களும் நிறைந்த ஒரு கண்காட்சி ஏற்பாடாகியிருந்தது போலத் தோன்றியது. அடர்ந்த தாடிக்காரர்கள், அடர்த்தியற்ற

தாடிக்காரர்கள், வகிடு எடுத்த தாடி கொண்டவர்கள், வகிடு எடுக்காமல் சீவப்பட்ட தாடிக்காரர்கள், பெரிய பெரிய மீசைக்காரர்கள், இறுக்கமான கோட்டு அணிந்தவர்கள், தொள தொளக் கோட்டுக்காரர்கள், பூட்ஸ், ஸ்லிப்பர், பீல்க்காவில் செய்த ஓக்காப்பாணி செருப்புகள் ஆகிய விதவிதக் காலணிகள் அணிந்தவர்கள், உடைவாள் அணிந்தவர்கள், மெல்லிய பிரம்பு களைக் கையில் வைத்திருந்தார்கள் என்று பலர் அங்கே குழுமி யிருந்தார்கள்.

அவர்கள் எல்லாரும் தங்கள் நடுவில் நின்று கொண்டிருந்த யாரோ ஒருவருக்கு வணக்கம் செலுத்திக்கொண் டிருந்தார்கள்.

திடீரென்று ஒரு பூகம்பம் ஏற்பட்டு அதன் காரணமாக ஒரு சமவெளிப் பிரதேசம் உப்பி ஒரு குன்ருக ஆகிவிட்டால் எப்படி இருக்கும்? அவ்வாறு திடீரென்று உருவெடுத்து உயரக் கிளம்பிய பாறையின் கரடுமுரடான தன்மை அந்த மனிதரிடம் இருந்தது. ஒரு புதிய சூழ்நிலையில் தாம் இருப்பது காரணமாக அவர் சற்றுக் குழம்பியிருந்தது அவரது முகத்தில் தெரிந்தது. அவரைப் பார்த்தால் மலைப்பிரதேசத்து மனிதராகத் தெரியவில்லை.

அவரை முன்பு எங்கோ பார்த்திருந்ததாகத் தோன்றியது பிஞகிக்கு. அவருடைய அலங்காரத் தோற்றந்தான் அவனுடைய நினைவை மறைத்தது.

அவனுக்கு அருகில் இரண்டு பேர் பேசிக்கொண் டிருந்தார்கள்.

''அதிருஷ்டம் வந்தாக் கூரையைப் பொத்துக்கிட்டு வரும், தெரியுமா?''

''ஆமாமா! தான்சிங் அவளை எனக்குக் கல்யாணம் செஞ்சு வைக்க என்னேட அக்காகிட்டே எவ்வளவு தடவை கெஞ்சியிருக்கார், தெரியுமா?'' பேசியவன் அநாவசியமாகக் கண்களைச் சிமிட்டினன்.

''அவ என்ன பிரமாத அழகு, ராவல்ஜியே மயங்கிப் போகும்படி?''

''அவ அழகா இல்லேன்னுதானே என்னேட அக்கா அவளை எனக்குக் கல்யாணம் செஞ்சுவைக்க மாட்டேன்னுட்டா!'' என்று கூறி அந்த ஆள் மறுபடி கண்ணைச் சிமிட்டினன்.

''அவ நேத்து வரையிலே ஏஜென்ஸி போலீஸ் லயன்லே பொம்மை வச்சு விளையாடிக்கிட்டிருந்தா, ஊர் சுத்திக் கிட்டிருந்தா!''

''இன்னிக்கு அவ விக்ரம்பூர் ராணியாயிட்டா!''

''ராவல்ஜி அவகிட்டே எப்படி மயங்கினர்?''

''அவ போட்டோவைப் பார்த்து! நிசமா அழகா இல்லாதவங்க கூடப் போட்டோவிலே அழகாத் தெரிவாங்க.''

''ஆனு என்னோட அக்கா என்னைப் போட்டோ எடுத்தாளே, அதிலே என் அழகு சரியாவே வரல்லே. இந்தப் போட்டோகாரங்களோட சாமர்த்தியமே சாமர்த்தியம்! அவங்க அழகை அவலட்சணமாகப் பண்ணிடறுங்க, அவலட்சணத்தை அழகாகக் காட்டிடறுங்க!''

பிஞகிக்கு இப்போது ஞாபகம் வந்தது. கூட்டத்துக்கு நடுவில் நின்று கொண்டிருந்தவர் தான்சிங்தான்!

அவரை அடையாளம் கண்டு கொண்டதும் அவனுக்கு ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. 'இவங்க யாரைப்பற்றிப் பேசிக்கிண்டிருக் காங்க இப்போ? தேவுவைப் பற்றியா? அப்படியானுல் தேவு விக்ரம்பூர் ராஜாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்காளா? அதுக்காகத்தான் தான்சிங் அவளைப் போட்டோ எடுத்து விக்ரம்பூருக்கு அனுப்பிக்கிண்டிருந்தாரா? அதனுலேதான் கடைசித் தடவை ஊருக்குப் போயிருந்தபோது அவன் தேவுபாவைச் சந்திக்க முடியாம செஞ்சுட்டாரா?'

பிஞகி அந்தக் கூட்டத்துக்குள் எப்படியோ நுழைந்து அவரை நெருங்கி அவருடைய கையைப் பிடித்துக் கொண்டான். ''தான் சிங் பெரியப்பா! என்னைத் தெரியறதா?'' என்று கேட்டான்.

தான்சிங் தம் கையை இழுத்துக் கொண்டார். அவன் பக்கம் திரும்பிச் சில வார்த்தைகள்தான் சொன்னுர். ''நீயா? உன் தாத்தா எங்கே இருக்கார்? இங்கே எப்படி வந்தே? இன்னெரு நாள் சாவகாசமா வா'' என்றுர் பதிலுக்கு.

அவர் பேசிய விதம் பிஞகிக்கு ஏமாற்றம் அளித்தது. இருந் தாலும் அவன், ''தேவுபா அக்கா இங்கே இருக்காங்களா? அவங்களுக்கு என்னை ஞாபகம் இருக்கா? நீங்க எங்கே போறீங்க?'' என்று கேட்டான்.

அவனுடைய கேள்விகளில் சிரிக்க என்ன இருந்ததோ தெரிய வில்லை. ஆனுல் கூட இருந்தவர்கள் கடகடவென்று சிரிக்கத் தொடங்கினுர்கள். அவர்களில் ஒருவன் அவன் கைகளைப் பிடித்து வெளியே கூட்டிக் கொண்டு வந்து, ''முட்டாள்பயலே, விக்ரம்பூர் ராணி என்ன உங்க ஊர் கோலிப் பொம்பளைன்னு நினைச்சுக் கிட்டியா? போ, ஓடிப் போ!'' என்றுன்.

ஆனுல் பிஞகிக்கு அங்கிருந்து ஓடிப்போவது அவ்வளவு எளிதாக இல்லை. அந்தக் கம்பி போட்ட ஆகாயநிற ரெயில் பெட்டிக்குள் தேவுபா இருப்பது அவனுக்குத் தெரியும். அவள் அவனுடைய

தேவுபா. ஏனென்றால் அவர்கள் இருவரும் சேர்ந்து தீபடியா அருவியின் மறுகரைக்குப் போய் இலந்தைப் பழங்கள் பொறுக்கியிருக்கிறார்கள், கருவேல மரநிழலில் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு அவற்றைத் தின்றிருக்கிறார்கள். நல்ல சாறுள்ள பழம் கிடைத்தால் பிஞுகி அதை எடுத்துத் தேவுபாவின் வாயில் போடுவான்.

தாத்தா ஊரில் இல்லாதபோது பிஞுகியும் மற்றச் சிறுவர் சிறுமியரும் 'ராகேங்கார் ராணக்தேவி' நாடகம் நடத்துவார்கள். மேஜைதான் நாடகத்தில் கோட்டை; ஜன்னல்தான் கிர்னார்க் குன்று. கேங்காரின் பாத்திரத்தைப் பிஞுகி எடுத்துக்கொள்வான், தேவுபா ராணக் தேவியாக நடிப்பாள். வேறொரு பையன் ராகேங்காராக நடிக்க விரும்பியபோது தேவுபா உறுதியாகச் சொல்லிவிட்டாள், ''நான் பிஞுகியைத் தவர வேறு யாருக்கும் ராணக் தேவியாக இருக்கமாட்டேன்!'' என்று. கேங்கார் வேடம் போட்ட பிஞுகி சண்டையில் இறந்து பிணமாக நடித்தபோது தேவுபா அவனுடைய தலையை மடியில் வைத்துக்கொண்டு, 'கோஜாரா கித்நார்' என்று பிலாக்கணம் பாடுவாள். அந்தச் சமயத்தில் அவள் நிஜமாகவே அழத் தொடங்கி விடுவாள்.

பிஞுகி தன் வேடத்துக்காக இலுப்பச் சட்டியிலிருந்து கரியை எடுத்து அதைக்கொண்டு மீசை போட்டுக் கொள்வான். ஒரு தடவை ராணக் தேவியின் பாத்திரத்தில் தேவுபா அழுது கொண்டே பிஞுகியின் முகத்தோடு தன் முகத்தைத் தேய்த்துக் கொண்டபோது பிஞுகியின் கரிமீசை அவளுடைய முகத்திலும் ஒட்டிக் கொண்டது. அப்போது எல்லாரும் எப்படிச் சிரித்தார்கள்!

'இதெல்லாம் ஒரு விளையாட்டுத்தான், இதற்கும் ஒரு முடிவு உண்டு' என்று அவர்கள் அப்போது நினைத்ததே இல்லை. விடுமுறை முடிந்து பிஞுகி பட்டணத்துக்குத் திரும்புகிற நாள் தேவுபா சாப்பிடவே மாட்டாள். அவள் அழுவாள்; ஆனால் அழுகையின் காரணத்தைத் தெளிவாகச் சொல்லத் தெரியாது அவளுக்கு. பிஞுகி போகும்போது அவனைத் தூனுலி நதியின் பாறைகள் வரையில்கூட வழியனுப்பப் போகமுடியாது அவளால். கேங்காரின் நினைவு அவளுடைய நெஞ்சில் ஒலிக்கும், உதடுகள்வரை வரும். ஆனால் ரோஜாவின் முள்ளில் அகப்பட்டுக் கொண்ட வண்ணத்துப் பூச்சிபோல் உதடுகளிலேயே சிக்கிக்கொண்டு விடும்.

பதின்மூன்றுக்கும் பதினாறுக்கும் இடைப்பட்ட பிராயத்தைச் சேர்ந்த பிஞுகியின் அப்போதைய விசித்திரமான மனநிலையை வர்ணிப்பது எளிதல்ல. ஒருவன் 'தன்னுடையது' என்று கருதி

வந்த ஒரு மாம்பழத்தை இன்னொருவன் கடித்துத் தின்ன ஆரம்பித்தால் முன்னவனின் மனநிலை எவ்வாறு இருக்கும்? ஏறக்குறைய இத்தகைய மனநிலையில்தான் பிஞுகி அந்த ரெயில் பெட்டியைப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

மறு பிளாட்பாரத்தில் நின்றிருந்த அவன் போகவேண்டிய ரெயிலின் விசில் சப்தம் அவனைத் தன் நிலைக்குக் கொண்டுவந்தது. ஆனால் அதை அடைவதற்குள் ரெயில் புறப்பட்டுவிட்டது. தேவுபா உட்கார்ந்திருந்த அலங்கரிக்கப்பட்ட ரெயிலும் விரைவில் கிளம்பிவிட்டது. அப்போது அவனது நிலை எப்படி இருக்கும்!

சித்திரை வைகாசி மாதங்களில் வீட்டு நிழலில் சிட்டுக்குருவிகள் கட்டியிருக்கும் கூட்டை வீட்டுக்காரன் தடியால் பிய்த்து எறிந்து விட்டால் அந்தக் குருவிகள் எவ்வளவு ஆத்திரத்துடன் அந்தத் தடியைக் கொத்தும்? அதேமாதிரி ஆத்திரந்தான் பிஞுகிக்கும் ஏற்பட்டது.

பிஞுகி தன் ரெயிலுக்காக நள்ளிரவுவரையில் காத்திருக்க வேண்டியதாயிற்று. உட்கார்ந்துகொண்டே அவன் பல விசித்திரக் கற்பனைகளில் மூழ்கினுன்.

'மாமியின் குதிரையின்மேல் ஏறிக்கொண்டு அவன் ஒரு நாள் விக்ரம்பூர் போவான். நாடோடிக் கதைகளில் வர்ணிப்பார்களே, அந்த மாதிரி உடும்பு ஒன்று கிடைத்தால் அதைப் பிடித்துக் கொண்டு ராவல்ஜியின் அரண்மனைச் சுவர்மேல் ஏறிக் குதிப்பது என்ன கஷ்டம்? கோடைக்கால இரவு:மிகவும் இருட்டாக இருக்கும். ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு ராவல்ஜியும் தேவுபாவும் தூங்கிக்கொண் டிருப்பார்கள். அவன் ராவல்ஜியின் உடைவாளை உருவி எடுத்துக்கொண்டு அவருடைய மார்பின்மேல் ஏறி உட்கார்ந்து கொள்வான். அதற்குள் தேவுபா விழித்துக்கொண்டு விடுவாள். "நீ சௌக்கியமா இருக்கியா? இந்தக் கிழவன் உன்னைக் கஷ்டப்படுத்தாமே இருக்கானு? மூணு பொண்டாட்டி இருக்கறபோது நாலாவதா உன்னைக் கல்யாணம் பண்ணிண்டிருக்கற இவன்மேலே உனக்கு ஆசையிருக்கா? ராணக்தேவி அவளுடைய கேங்காரை மறந்துபோயிட்டாளா?" என்றெல்லாம் அவன் அவளைக் கேட்பான்.

'அவன் தேவுபாவுக்கு ஏதாவது பரிசு கொடுப்பான். அந்த அயோக்கிய ராவல்ஜியிடம், "இவள் என்னோடெ அக்காவாக்கும்! இவ கஷ்டப்படறுன்னு எனக்குச் செய்தி கிடைச்சா என்னோடெ குதிரைக்கு இறக்கை முளைச்சுடும்! நான் நேரே இங்கே வந்து உன் நெஞ்சிலே கத்தியைச் சொருகிடுவேன்" என்று கூறுவான்.'

'டப்'பென்று ஒரு சப்தம் கேட்டது. பிருகியின் கற்பனை தடைப்பட்டு அவன் தன்னிலைக்கு வந்தான். ராவல்ஜியின் நெஞ்சில் கத்தியைச் செருகும் நினைவில் அவன் தன் கையிலிருந்த பென்சிலைப் பெஞ்சியில் வைத்து அழுத்தியிருக்கிறான். பென்சிலின் முனை உடைந்த சப்தந்தான் அவன் கேட்டது.

20

''என் வீட்டு விஷயத்திலே தலையிட சர்க்காருக்கு என்ன உரிமை இருக்கு? நான் என் பெண்டாட்டிகளை எப்படி வச்சுக்கறேன், எப்படி வச்சுக்கல்லேங்கறதைப் பத்திச் சர்க்காருக்கு என்ன கவலை? நான் அவங்களைக் காப்பாத்துவேன், அல்லது அடிச்சுக் கொல்லுவேன், சர்க்காருக்கு என்ன?'' என்று உறுமினார் கோதட் தர்பார், பட்லாமேடியிலிருந்த தம் கோட்டையிலிருந்துகொண்டு.

அவருடைய திவான், வைசிய இனத்தைச் சேர்ந்தவன், அவரைச் சமாதானப்படுத்திக்கொண் டிருந்தான்; ''அவங்களை யாரோ கொன்னுட்டதாக நாம் ஏன் சொல்லணும்?''

''ஏன் சொல்லக்கூடாது? நான் என் கையாலேயே அவங்களைக் கொன்னேன். ஏன் அதைச் சொல்லிக்கக் கூடாது? நான் என்ன கோழையா?''

தர்பார் போதையில் உளறுகிறாரென்று திவானுக்குப் புரிந்தது. ''நீங்க சொன்னது வாஸ்தவந்தான். ஆனால் நீங்க காட்டிய இந்த வீரத்தை நீங்களே தம்பட்டம் அடிச்சுக்கறது உங்களுக்கு அழகா? சுத்த வீரன் தன் பெருமையைத் தானே சொல்லிக்குவானா?'' என்று கூறினான்.

''சபாஷ்!'' தர்பார் திவானின் முதுகைத் தட்டிக் கொடுப்பதாக நினைத்துக்கொண்டு வெட்டவெளியில் கையை ஆட்டினார். உண்மையில் திவான் அந்தப் பக்கத்துக்கு மறுபக்கத்தில் உட்கார்ந் திருந்தான். ''நான் சும்மாவா உன்னைத் திவானா நியமிச்சிருக்கேன்! நீ நவநகர் ராஜ்யத்துக்குக் கூடத் திவானா இருக்க லாயக்கானவன். ஆனா மகாராஜா பவசிங்ஜி கேட்டுக்கிட்டாக்கூட நான் உன்னை எங்கிட்டேயிருந்து போகவிடமாட்டேன்.''

''சரி, நாம் சொல்லுவோம், ரெண்டு பொம்பளைகளும் தங்களுக்குள் சண்டை போட்டுக்கிட்டுச் செத்துப் போயிட்டாங்கன்னு.''

''ரொம்பச் சரி! உன் யோசனை ஒரு லக்ஷ ரூபாய் பெறும். இதுக்குப் பதிலா நான் உனக்கு ராஜ்வடாக் கிராமத்தை இனாமாக் கொடுக்கிறேன். நீயும் உன் குடும்பமும் அதைத் தலைமுறை தலைமுறையா அநுபவிக்கலாம்!''

''இதைப்பத்தி அப்பறம் பேசிக்கலாமே'' என்றான் திவான்.

இப்போது போதையில் பேசிக்கொண்டிருக்கும் தர்பாரும் நாளைக் காலையில் தோன்றப் போகும் தர்பாரும் ஒரே உடலில் குடியிருக்கும் வெவ்வேறு பிராணிகள் என்ற விஷயம் திவானுக்குத் தெரியும்.

பட்லாமேடி அரண்மனைக்குள் நுழைந்தான் ஒரு பக்கிரி. அரண்மனை வாயிலில் காவலிருந்த அராபியர்கள் அதுவரை இவ்வளவு கிழட்டுப் பக்கிரியைப் பார்த்ததே இல்லை. பக்கிரியின் தாடிமயிர் வெள்ளையாகவும் பளபளப்பாகவும் இருந்தது. பொக்கை வாய். கன்னங்கள் ஒட்டிப் போயிருந்தன. உடல் எலும்புந் தோலுமாக இருந்தது. இடுப்பு வளைந்து போயிருந்தது. அவனுடைய ஒரு கையில் சாம்பராணித் தட்டும் இன்னொரு கையில் மயில் தோகை விசிறியும் இருந்தன.

அராபியர்கள் பக்கிரிக்குச் சலாம் வைத்தார்கள். ''நீங்க நல்லா இருக்கணும்'' என்று அவர்களை ஆசீர்வதித்து விட்டு ஒவ்வொரு வாயிலாகக் கடக்கத் தொடங்கினான் பக்கிரி.

அவன் அரண்மனைக்குள் நுழைந்தான். அவனுக்குப் பின்னாலேயே அரண்மனை வேலைக்காரி ஒருத்தி வந்து கொண்டிருந்தாள். புதிய ராணிதான் பக்கிரியை அழைத்திருக்கிறாளென்று காவல்காரர்கள் நினைத்தார்கள்.

தர்பாரின் தலைமேல் அரசாங்கக் குற்றச்சாட்டு கத்தி போலத் தொங்கிக் கொண்டிருந்தது. ஆகையால் புதிய ராணி தர்பாரைக் காப்பாற்றுவதற்காகப் பூஜை, தானம், விரதம் முதலியவற்றில் ஈடுபட்டிருந்தாள்.

புது ராணி ஜுலேகாவுக்கு வயது இருபது இருக்கும். பலர் அவளை ஒழுக்கம் கெட்டவளாகக் கருதினார்கள். ஆனாலும் அரண்மனையிலிருந்த எண்பது வயதுக் கிழவர்கள் கூட அவளை 'அம்மா' என்று மரியாதையாக அழைத்தார்கள்.

அரண்மனையின் மூன்ருவது உள் வாயிலில் ஐயீஃப் என்ற பெயருள்ள அராபியக் கிழவன் காவல் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வயது நூறு இருக்கும். அவன் பக்கிரியைச் சரியாகக் கவனிப்பதற்குள் பக்கிரி, "நீ நல்லா இருக்கணும்! சாமி உன்னைக் காப்பாத்தணும்!" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து விட்டான். உள்ளே அவன் கண்ட காட்சி அவனை வியப்பில் ஆழ்த்தியது. வராந்தாவில் ஒரு மரப்பீடத்தின் மேல் கத்தியவார்ப் பாணியில் உடையணிந்து ஜுலேகா உட்கார்ந்திருந்தாள். அவளுடைய தோற்றத்தில் புனிதம் தவழ்ந்தது. அவளுக்கு முன்ஞல் சூரிதார் பைஜாமாவும் குர்த்தாவும் அணிந்த மூன்று சிறுவர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய தலைகளில் ஜரிகை வேலைப்பாடமைந்த குல்லாய்கள் இருந்தன. தலைமயிர் கொண்டையாகச் சுற்றப்பட்டிருந்தது. அவர்கள், கைகளில் வளையல்களும், கால்களில் சதங்கை வைத்த கொலுசுகளும், மூக்குத்திகளும், காதுகளில் குண்டலங்களும் அணிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் கோதட் தர்பாரின் பெண்கள்; இறந்து போன மனைவிகளுக்குப் பிறந்தவர்கள். அவர்களுடைய வயது முறையே ஆறு, எட்டு, ஒன்பது. ஒரு பிராமண ஸ்திரீ அவர்களுக்கு எதிரில் உட்கார்ந்து கொண்டு மகாபாரதம் வாசித்துக் கொண்டிருந்தாள்.

இந்தக் காட்சி விளைவித்த ஆச்சரியத்தில் பக்கிரி தன் வேஷத்தைக்கூட மறந்து விட்டான். அவனுடைய கைகளிலிருந்த மயிலிறகு விசிறியும் சாம்பராணித் தட்டும் அசைவற்று நின்றன. அவன் கேள்விப்பட்டது உண்மைதான். அந்தப் புத்திசாலிப் பெண் தன் சக்களத்திகளின் பெண்களுக்குக் கல்வி கற்பித்துக் கொண்டிருந்தாள். தங்கள் தாய்மார்கள் உயிரோடிருந்த காலத்தில் கூட அந்தக் குழந்தைகள் புதிய ராணியுடன் தான் எப்போதும் இருக்க விரும்பின.

பிராமண விதவையின் தலை மொட்டையடிக்கப் பட்டிருந்தது. அவளுடைய சோகங் கலந்த, ஆனல் கம்பீரமான, முகத்தில் வெண்ணிறத் துணியால் முக்காடு போட்டிருந்தது. அதுவும் அழகாகத்தான் இருந்தது. சித்திரை வைகாசி மாதங்களில் சிவலிங்கத்தின் மேலிருந்து அபிஷேக நீர் வழிவது போல் அவளிடமிருந்து மகாபாரதத்தின் சுலோகங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றை ரசித்து அநுபவித்துக் கொண்டிருந்த பாவர் ராணியின் கண்கள் இமை கொட்டாமல் நிலைத்திருந்தன.

திரௌபதி ராஜ சபையில் அவமானப்படுத்தப் பட்டபோது, அவள் கிருஷ்ணனை அழைக்கும் கட்டம் அப்போது வாசிக்கப் பட்டுக் கொண்டிருந்தது. ராணி ஆண் வேடம் பூண்ட அந்தப் பெண்களை நோக்கிப் புன்முறுவல் பூத்தாள்.

சற்று நேரத்துக்குப் பிறகு தான் அவள் பக்கிரியைக் கவனித் தாள். ஒரு முஸ்லீம் சந்நியாசி இந்து மதப் புராணத்தைக் கேட் பதில் இவ்வளவு ஆர்வம் காட்டுவது அவளுக்கு வியப்பை அளித் தது. அவள் மகாபாரதம் படிக்கும் ஸ்திரீக்கு ஜாடை காட்டினாள். ஸ்வரப் பெட்டியின் நாதம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து ஓய்வதுபோல் சுலோகங்களின் ஒலியும் ஓய்ந்து நின்றது.

ஜுலேகா கைகளைக் குவித்துப் பக்கிரிக்கு வணக்கம் செலுத்தி னாள். ''வாங்க, வாங்க, பாபுஜி!''

''ஆண்டவன் உன்னைக் காப்பாத்துவார்!'' பக்கிரி அவளை நேருக்கு நேர் பார்க்காமலேயே கையைத் தூக்கி ஆசீர்வாதம் செய்தான்.

''நீங்க எங்கே இருந்து வரீங்க?''

''தாத்தார் மலையிலேயிருந்து. ஆண்டவன் கட்டளையிட்டார்; வந்தேன்.''

பக்கிரியின் கண்கள் தரையை நோக்கிக் கொண்டிருந்தன. இவ்வளவு வயதான பிறகும் மிகுந்த பணிவுடன் காணப்பட்ட பக்கிரியிடம் ஜுலேகாவுக்கு மிகுந்த பக்தியும் மரியாதையும் தோன்றின.

''தங்கள் உத்தரவு என்ன, பாபுஜி?''

பக்கிரி மௌனமாக இருந்தான். அவனுடைய உதடுகள் மட்டும் சற்று அசைந்தன.

குறிப்புணர்ந்த ஜுலேகா மற்றவர்களை அங்கிருந்து அனுப்பினாள்.

சிறுமிகள் கைகூப்பிக் கொண்டு விடை பெற்றுக்கொண்டார்கள். ''ராம் ராம், அம்மா!''

''ராம் ராம்! மாலுபா! நீ போய்க் குதிரையைக் கொண்டுவரச் சொல்லி அதற்குச் சேணம் போடச் சொல்லு!'' என்று சொல்லிய வாறே ஜுலேகா பெரிய பெண்ணின் முகத்தைத் தடவிக் கொடுத்தாள்.

''ஜசுபா, இங்கே வா!'' என்று சொல்லிக் கொண்டே ஜுலேகா சிறிய பெண்ணை அணைத்துக் கொள்ளக் கைகளை நீட்டினாள். சிறுமியோ அவளுடைய பிடிக்கு அகப்படாமல் வேகமாக ஓடி விட்டாள்.

ஜுலேகா பெரிய பெண்ணை எச்சரித்தாள். ''மாலுபா! குதிரையைக் குதி முள்ளால் குத்தி விடாதே! குத்தினுல் அது துள்ளிக் குதித்து உன்னைக் கீழே தள்ளி விடும்.''

''சரி, அம்மா!''

''பாலு!'' ஜுலேகா இரண்டாவது பெண்ணை அழைத்துக் கூறினுள். ''நீ வந்து குதிரை மேலே மூட்டை மாதிரி உட்காரக் கூடாது. நல்லா விறைப்பா உட்காரணும்!''

''சரி அம்மா!'' பணிவுடன் சொன்னுள் இரண்டாவது பெண்.

''ஜசு இன்னிக்கு மான் வண்டி ஓட்டட்டும்! ஆனு ரொம்ப வேகமா ஓட்ட வேண்டாம்!''

அந்தக் காலத்தில் கத்தியவார்ப் பிரதேசத்து ராஜ்யங்களில் ஆடு, மான், நாய் முதலிய பிராணிகள் இழுக்கும் சிறு வண்டிகளில் சிறுவர்கள் சவாரி செய்வதுண்டு.

எல்லாரும் விடைபெற்றுக் கொண்டு சென்ற பிறகு ஜுலேகா தன் கழுத்துக்குக் கீழே, மார்புக்குச் சற்று மேலே இருந்த கறுப்பு மச்சத்தைப் புடைவைத் தலைப்பால் மூடிக் கொண்டு பக்கிரிக்கு அருகில் வந்து உட்கார்ந்தாள்.

பீடத்தின் மேல் உட்கார மறுத்து விட்டான் பக்கிரி: ''வேண்டாம் அம்மா! தரை விரிப்புத்தான் பக்கிரிக்குப் பொருத்தமாயிருக்கும்.''

இப்போது தான் பக்கிரி தலை நிமிர்ந்து ஜுலேகாவை உற்றுப் பார்த்தான். புதிதாக எண்ணெய் விடப்பட்ட விளக்குகள்போல அவனுடைய கண்கள் பளபளத்தன.

''நான் ஒரு கேள்வி கேக்கறேன், பதில் சொல்லுவியா?''

அவள் பதில் சொல்வதற்குள் பக்கிரியே தொடர்ந்தான். ''நீ சுகமா இருக்கியா?'' இந்தக் கேள்வி சுத்தமான இந்தியில் கேட்கப் பட்டது. சாதாரணமாகப் பக்கிரிகள் பேசும் உர்தூ கலந்த மொழியில் அல்ல.

திடீரென்று பயந்த மானைப் போல ஜுலேகாவின் செவிகள் கூர்மையாகி விட்டன.

''ஒரு ஆள் என்னை விசாரிக்கச் சொன்னுன்.'' பக்கிரி விளக்கினுன்.

ஜுலேகா புருவத்தைச் சுளுக்கிக் கொண்டாள். ''பாபுஜி, நீங்கள் சாமியாரா, அல்லது தரகரா?''

''நான் ஒரு சிப்பாய்!'' என்று சொல்லிக் கொண்டே பக்கிரி தன் வேடத்தைக் கலைத்தான். முன்பு பொக்கையாகத் தோன்றிய அவனுடைய முகத்தில் இப்போது முப்பத்திரண்டு பற்கள் பள

பளத்தன; ஒட்டியுலர்ந்திருந்த கன்னங்களின் குழிகள் மறைந்து போய் விட்டன.

ஜுலேகா திகைப்பிலிருந்து விடுபட்டு ஏதாவது பேசுவதற்குள் அவனே தொடர்ந்து, ''நான் அந்தச் சிப்பாய் கிட்டேயிருந்து உனக்கு ஒரு செய்தி கொண்டு வந்திருக்கேன். அவனோட நெஞ்சு எரிஞ்சுக்கிட்டு இருக்கு. ஆனா அவன் தன்னை மோசம் பண்ணின வளைக் கூட மன்னிச்சுட்டான்!'' என்று கூறினான்.

ஜுலேகாவின் முகம் உலர்ந்து விட்டது. ரத்தம் வடிந்துபோனாற் போல் வெளிறிப் போய்விட்டது.

பக்கிரி வேடதாரி, ''நான் உன்னை எதிலேயும் மாட்டி வைக்க வரல்லே. ஆனா, நீ சௌக்கியமா இருக்கியான்னு மாத்திரம் தெரிஞ்சுக்க ஆசைப்படறான்'' என்றான்.

ஜுலேகா கேலியாகச் சிரித்தபடி; ''அந்தக் கோழையா கேட்கறான்?'' என்று கேட்டாள்.

''கோழையா? உன்னையே மன்னிச்சுட்ட அவனா கோழை?''

கேலியாகவே பதில் சொன்னாள் ஜுலேகா. ''சாமியாரே, உங்களுக்கு இதெல்லாம் எப்படிப் புரியும்? என் புருசன் எப்போ வந்து என்னையும் தர்பாரையும் சுட்டுக் கொல்லுவான்னு நான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். அவன் இப்படிப்பட்ட கோழைன்னு எனக்குத் தெரியாது.''

பக்கிரி மௌனமாக இருந்தான்.

''பிரமாதமாகத் தன்னோட தாராள மனசைக் காண்பிச்சுக்க றானே, அவன் எப்படி இருக்கான், அந்தச் சுத்த வீரன்?'' ஜுலேகா குத்திக் காட்டினாள். அவளுடைய குரல் சித்தாரின் கம்பியைப் போல் நடுங்கியது.

''என் சுகதுக்கத்தைப் பத்தித் தெரிஞ்சுக்கிட்டு அவன் என்ன செய்யப் போறான்?''

''நீ சுகமா இருக்கறதாகத் தெரிஞ்சா மனசுக்குள்ளேயே தன் துக்கத்தைப் பொருத்துக்கிட்டுச் சும்மா இருப்பான். நீ கஷ்டப் படறது தெரிஞ்சா, தர்பாரைக் கொன்று உனக்கு விடுதலை கொடுப்பான்.''

''பாபுஜி, அவனையும் பக்கிரியாப் போயிடச் சொல்லுங்க! அவன் தான் பிறந்த ஜாதிக்கே அவமானம் செஞ்சுட்டான்.''

''நான் அவனைச் சிப்பாயாக்கப் போறேன்.''

''சிப்பாய்? ஹா ஹா ஹா!'' சிரித்துவிட்டு அவள் பெரிதாக மூச்சு விட்டாள். அந்த மூச்சு ஒரு பெரிய மண்குவியல் கீழே சரிந்து விழுவதுபோல் புஸ்ஸ் என்று ஒலியெழுப்பியது.

''நீங்க அவங்கிட்டே சொல்லிடுங்க, எனக்கும் சுகதுக்கத்துக்கும் சம்பந்தமே இல்லேன்னு. நான் இனிப்பு, கசப்பு ரெண்டையும் மறந்திட்டேன்.''

''சபாஷ்!'' '' என்று சொல்லிக் கொண்டே பக்கிரி எழுந்தான்.

''அப்போ நான் வரேன், அம்மா!''

அவன் வெறும் வேஷதாரிப் பக்கிரிதான். இருந்தாலும் அவன் ஏன் இவ்வளவு பரிவுடன் அவளை அழைக்கிறான்?

''நீங்க யாரு?''

''நான் உன் நல்ல காலத்தின் தூதன்!''

''அப்படியா?''

''ஆமாம்!'' பக்கிரி தன் மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு சொன்னான்: ''இந்தச் சாம்ராஜ்யத்தின் சக்தி முழுதும் எனக்குப் பின்னால் இருக்கும். எனக்குச் சற்றுக் கெடுதல் செஞ்சா, தர்பாரை நாடு கடத்தக்கூட மாட்டாங்க, துண்டுத் துண்டா நறுக்கிப் போட்டுடுவாங்க!''

பக்கிரி தன் வேடத்தை மறுபடியும் அணிந்து கொண்டு இடுப்பைக் குனிந்தவாறே வெளியே நடந்தான்.

வராந்தாவின் ஒரு தூணின்மேல் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்த ஜுலேகா அத்தூணில் செதுக்கிய சிற்பம் போல் அசையாமல் இருந்தாள். உரக்கக் கூப்பாடு போட அவள் துடித்தாள். ஆனால் 'இந்தச் சாம்ராஜ்யத்தின் சக்தி எனக்குப் பின்னால் இருக்கு!' என்ற பக்கிரியின் எச்சரிக்கை அவளைத் தடுத்தது.

'எனக்குப் பின்னாலே இந்தச் சாம்ராஜ்யமே இருக்கு' என்ற வீராப்புப் பேச்சு அந்தக் காலத்தில்தான் பிறந்தது. முதல் முதலில் சர்க்கார் வேலையில் நுழைந்த பிராமண, வைசிய அதிகாரிகளுக்கு இந்தக் கர்வம் ஏற்பட்டது. சௌராஷ்டிரத்தின் சிறிதும் பெரிதுமான ராஜ்யங்களில் பிறந்த இவர்கள் தாம் முதலில் தங்கள் தங்கள் சுதேச ராஜாக்களை 'அன்னதாதா' என்று அழைக்கும் வழக்கத்தைக் கைவிட்டவர்கள். பிரிட்டிஷ் ஏஜென்ஸியின் கீழ் வேலை பார்ப்பவர்கள் இந்த இந்தத் தர்பார்களின் கைகளில் எப்போது விலங்கு பூட்டுவது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ராஜ்கோட் சிவில் ஸ்டேஷனில் வேலை பார்க்கும் சிப்பாய்கள், தாங்கள் கையை உயர்த்தினால் ஜாம் நகர், பவநகர், ஜாடேஜா ராஜாக்களுடைய எட்டுக் குதிரை பூட்டிய வண்டிகள் கூட நின்றுவிடும் என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் இரவில் ரோந்து வரும்போது யாரையாவது ''ஹால்ட்!

ஹுகம்ஸ்தேர்?'' என்று அதட்டினுல் அந்த ஆள் எவ்வளவு பெரியவனுக இருந்தாலும் அவன் பணிவுடன் 'ரையத்' என்று பதில் சொல்லவேண்டும்.

ஜுபிலி பார்க் ஹாலில் கவர்னர் தர்பார் நடக்கும்போது குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு ஒரு நிமிடம் தாமதமாக வருபவர்களையும் உள்ளே விடக் கூடாதென்று போலீசுக்கு உத்தரவு இடப்பட்டது. அதன்படி ஒருதடவை பாராவிலிருந்த போலீஸ்காரர்கள் தாஜீகட்டின் ராஜாவையே திருப்பியனுப்பி விட்டார்கள்.

இந்த மாதிரி பெருமைகளைச் சொல்லிக்கொண்டே போலீஸ்காரர்களின் குழந்தைகள் வளர்ந்தார்கள். இந்தப் பெருமைக்கு ஆசைப்பட்டுத்தான் பட்வாண், லீம்படீயைச் சேர்ந்த பிராமண இளைஞர்கள், தாரீ, அம்ரேலிப் பக்கத்து வைசியர்கள், மற்றக் கிராமங்களைச் சேர்ந்த வேறு ஜாதி இளைஞர்கள் ஆகிய எல்லாரும் ராஜ்கோட்டுக்குச் சேன்று பத்துச் சேர் கனமுள்ள துப்பாக்கிகளைச் சுமந்தார்கள். டிரில் செய்யும்போது மேலதிகாரியின் அறைகளையும் குத்துக்களையும் பொறுமையோடு சகித்துக் கொண்டார்கள். கவர்னரின் தர்பாருக்கு வரும் ராஜாவைத் திருப்பியனுப்பும் வெறி அவ்வளவு தூரம் பரவியிருந்தது. இது காரணமாக அந்தக் காலத்தில் பிராமண வைசியர்களுக்கும் வேறுஜாதியினருக்கு மிடையே இருந்த வேற்றுமைகள் கூட மறைந்து விட்டன.

இந்தப் பெருமையின் போதை மகீபத்ராமுக்கும் இருந்தது. அவர் பட்லாமேடியைக் கடந்து போய் இரவு இரண்டாம் ஜாமத்தில் ஒரு கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். அங்கு ஒரு வீட்டின் கதவைத் தட்டினுர். உள்ளே நுழைந்ததும் அவர், தம் பக்கிரி வேடத்தைக் களைந்துவிட்டுப் போலீஸ் உடையை அணிந்து கொண்டார். பாவர் இளைஞன் அவருடைய கால்களில் காக்கி நாடாவைச் சுற்றத் தொடங்கினுன். மகீபத்ராம் ஜுலேகாவிடமிருந்து என்ன செய்தி கொண்டு வந்திருப்பார் என்பதை அறியத் துடித்தது அவனுடைய மனம்.

மகீபத்ராம் கேட்டார் : ''ஏம்பா, உன் குடும்பத்திலே யாராவது சாமியாராப் போயிருக்காங்களா?''

''ஆமா, என்னோட தாத்தா சந்நியாசியாப் போயிட்டாரு'' என்றுன் இளைஞன்.

''ஏன்?''

''சின்ன வயசிலே என்னோட பாட்டி ஒரு தப்புப் பண்ணிட்டா, அதனுலே.''

''சரிதான்! இப்போ எனக்குப் புரிஞ்சுடுத்து!''

''என்ன, சாமி?''

''இன்னிக்கு நான் தோத்துப் போன காரணம்.''.

''தோத்தீங்களா? யார்கிட்டே?''

''உன் பொண்டாட்டிகிட்டேதான்.''

''எனக்குப் புரியல்லீங்களே!''

''நான் உன்னை வீரன்னு புகழ்ந்தபோது அவள் உன்னைக் கோழைன்னு ஏசினு.''

பாவர் ஒரு பெருமூச்சு விட்டான்.

மகீபத்ராம் தொடர்ந்தார். ''எனக்கு இதுவும் புரியறது.''

''என்ன?''

''உனக்கு ஏன் ரோசமே வரல்லேன்னு...''

மகீபத்ராம் தன்னை ஆழம் பார்க்கிருரென்று இளைஞனுக்குப் புரிந்தது.

''இப்போ அவளுக்குச் சுகதுக்கம் பத்திக் கவலேயே இல்லே. அவ தர்பாரோட பெண்களுக்குப் பாடஞ் சொல்லித்தரா. கதை, புராணம் கேட்டுக்கிண்டு பொழுதுபோக்கரு. நீ இனிமேல் அவளைப் பத்திக் கவலைப்படவேண்டாம். மீராதாதாருக்கோ வேறே எங்கேயோ போய்ப் பக்கிரியாயிடு நீ.''

''தர்பாரைப் பார்த்தீங்களா?''

''இல்லே, விலங்கை எடுத்துக்கிண்டு போய்த்தான் தர்பாரைச் சந்திப்பேன்.''

''அந்தப் பொண்ணு ஒரு நாகப்பாம்பு. அவகிட்டே ஜாக்கிரதையா இருங்க.''

''அதைப்பத்திக் கவலைப்படாதே! நான் அவளோட பல்லைப் பிடுங்கிப்பிட்டேன்.''

குதிரையில் ஏறிப் போய்க் கொண்டிருந்தபோது மகீபத்ராம் நினைத்தார். அவர் ஜுலேகாவிடம் ஒரு விஷயம் சொல்ல மறந்து போய்விட்டார்: ''நான் உன்னுடை தர்பாருக்குக் கையிலே விலங்கு போட்டுப் பத்ராபூர்க் கடைத் தெருவிலே கூட்டிக்கிண்டு போகல்லேன்னு நான் பிராமணன் இல்லே!'' என்று.

பலர் இது மாதிரிதான் தக்க சமயத்தில் சொல்ல வேண்டிய வார்த்தைகளைச் சொல்லாமலிருந்து விட்டுப் பிற்பாடு அதற்காகப் பச்சாத்தாபப்படுவார்கள்.

21

''கதவைத் திற!''

த்வஜாதாரி ஹநுமான் கோயில் வெளிவாயிலில் பின்னிரவு வேளையில் யாரோ குரல் கொடுத்தார்கள்.

மலைக்காற்று சுழல்போல் சுருண்டு சுருண்டு அடித்துக் கொண்டிருந்தது.

''கதவைச் சீக்கிரம் திற, பாபு! குளிர்லே பல்லு கிட்டிச்சுப் போச்சு!''

ஆற்றுத் தண்ணீரில் கொக்குகள் 'ச.. ப.. ச.. ப' என்று ஒலியெழுப்பிக்கொண் டிருந்தன. வேறு சில நீர்ப் பறவைகளின் ஒலி குழந்தைகளின் மழலையைப்போல் 'த்யா . . த்யா ...' என்று கேட்டது.

மூன்று பேர் கதவைத் தட்டிக்கொண் டிருந்தார்கள்.

''என் பையன் எங்கே தூங்கறானோ?'' என்று ஒருவன் சொன்னான்.

''நீ இப்படிப் பேசறப்போ எனக்குப் பயமா இருக்கு'' என்று இன்னொருவன் சொன்னான்.

''ஏன்?''

''புள்ளை ஞாபகம் வந்திடுச்சுன்னா நீ எங்களோடே இருக்க மாட்டே. எங்களைக் காட்டிக் குடுத்திட்டு ஊருக்குத் திரும்பிப் போயிடுவே!''

''பார்த்தீங்களா, லக்ஷ்மண்பாயி.'' முதல்வன் மூன்றாமவனிடம் சொன்னான். ''நான்-வாசியாங்-உங்களைக் காட்டிக் குடுப்பேனா? இந்தப் பூனாபாயி என்ன சொல்றார், பாருங்க!''

பதிலுக்கு ஓர் இனிமையான சிரிப்பு ஒலித்தது. இருட்டிலும் வைரத்தின் தரத்தை அறிய முடியும். அதுபோல் அந்த இருட்டில் சிரிப்பின் ஒலியைக் கொண்டே சிரித்தவனின் முகம் அழகாக இருக்கும் என்று அனுமானிக்க முடியும்.

''ஏன் சிரிக்கறீங்க, லக்ஷ்மண்பாயி? சீபரிப் பட்சி கத்தறது பாருங்க!'' வாசியாங் வருத்தத்துடன் சொன்னான். சீபரியின் குரல் அபசகுனமாகப் பட்டது அவனுக்கு.

''வாசல் கதவைத் திற, பாபு!'' லக்ஷ்மண்பாயியின் குரலில் வருத்தமோ, பயமோ இல்லை. ''நரி எலும்பை நக்கறமாதிரி குளிரு எங்க உடம்பை நக்குது.''

''திற!... திற!... ஓஓஓ . . .! பூனுபாயி'' மனிதன், நரி, பூனை ஆகிய மூன்று ஜந்துக்களின் குரலிலும் கத்தினுன். அந்த ஒலி குளிர்காற்றின் அலைகளில் உயர்ந்தும் தாழ்ந்தும் வெகுதூரம் ஒலித்தது.

''யாரு?'' என்று உள்ளே இருந்து ஒரு மென்மையான குரல் கேட்டது.

வேடிக்கையாகப் பேசும் வழக்கமுள்ள பூனு பதில் சொன்னுன்: ''திருடங்கதான்! சௌகாருங்கல்லாம் கிராமத்துலே நல்லாத் தூங்கிக்கிட்டிருக்காங்க.''

''கோயிலுக்கு அவமரியாதை செய்யறீங்களா?'' என்று உள்ளேயிருந்து மீண்டும் கோபக் குரல் கேட்டது.

''உள்ளே யாரு? பாபா இங்கே யாராவது பொம்பளையை வச்சிருக்காரா?'' பூனு தணிந்த குரலில் வாசியாங்கைக் கேட்டான்.

''சீ, பேசாமே இரு!'' லக்ஷ்மண்பாயி அவனை அதட்டினுன். பிறகு உள்ளிருந்து கேட்ட குரலுக்குப் பதில் சொன்னுன். ''தங்கச்சி, இங்கே ரொம்பக் குளுருது. போர்த்திக்கக் கம்பளிகூட இல்லே. குளிரை மறக்கறதுக்காகச் சிரிச்சுப் பேசிக்கிட்டே நடந்து வந்திருக்கோம். தயவு பண்ணிக் கதவைத் திற. கோயில்லே தானே எங்க மாதிரி ஆட்களுக்கு இடம் கிடைக்கும். இல்லாட்டி வெளியிலே கணப்பு எரிய விட்டுக்கிட்டு ராத்திரிபூரா உட்கார்ந்துகிட்டு இருக்கணும்.''

''ஆமா, நாலஞ்சு கட்டையாவது வெளியிலே எறிஞ்சுடம்மா! சந்நியாசியாப் போயிட்டாத் தூபம் போட வேண்டாமா?'' என்று பூனு சொன்னுன்.

வாயிலின் சிறிய கதவைச் சற்றுத் திறந்து ஒரு ஸ்திரீ அவர்களை உற்றுப் பார்த்தாள். அவர்கள் தலைப்பாகை அணிந்திருந்தார்கள். அவர்களுடைய தோள்களில் தோல் வாரால் கட்டப்பட்ட துப்பாக்கிகள் தொங்கிக்கொண்டிருந்தன. அவர்கள் சூரிதார் பைஜாமாவும் சிறிய கோட்டும் அணிந்திருந்தார்கள்.

''ஜய் த்வஜதாரி!'' என்று அவர்கள் கோயில் சிகரத்தில் பறந்து கொண்டிருந்த கொடியை வணங்கினுர்கள்.

ஓர் ஏழையின் வீட்டில் எரியும் எண்ணெய் வற்றிய விளக்குப் போல, க்ஷயரோகியின் கடைசி மூச்சைப் போல, பால் மரத்துப் போன பசுவிலிருந்து கறக்கப்பட்ட சிறிதளவு பாலைக் கொண்ட சிறு கிண்ணம் போல—கிருஷ்ணபட்சத்துத் திரயோதசிச் சந்திரன் வானத்தில் சற்றுநேரம் வெளிவந்திருந்தான். அந்த வெளிச்சத்தில் விருந்தாளிகளின் முகங்கள் தெளிவாகத் தெரிந்தன.

பூனு பார்ப்பதற்குச் சிவன் கோயில் நந்தி உயிர் பெற்று வந்தாற் போல் காணப்பட்டான். நந்தியின் கொம்புகள் போல் அவனுடைய தலைப்பாகையின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு முனைகள் நீட்டிக் கொண்டிருந்தன. அவனுடைய கழுத்து இயந்திரம் மாதிரி உருண்டையாக இருந்தது. கதவைத் திறந்த மங்கையை அவன் கோணல் பார்வையுடன் பார்த்தான். உலகத்தையே கோணல் பார்வையுடன் பார்ப்பவர்களில் அவனும் ஒருவன் போலும். அவனுடைய முகத்தில் அன்பின் அடையாளமே இல்லை. அவனுடைய இருபக்கத்து மீசையும் முகத்தில் ஒட்டிக்கொண்டிருந்த இரண்டு தேள்கள் போலக் காட்சியளித்தது.

வாசியாங் பூனுவைவிடச் சிறியவன்; அவனுக்கு வயது இருபத்திரண்டு இருக்கும். அவனைப் பார்த்ததும் அந்தப் பெண் சொன்னாள்: "நீ இப்பத்தான் இவங்களோடே சேர்ந்துக்கிட்டிருக்கே, இல்லையா!" அவன் அந்த வாழ்க்கைக்குப் புதியவன் என்பது அவன் நடந்துகொண்ட முறையிலிருந்தே தெரிந்தது.

"இந்தக் கையகல வெளிச்சத்திலேகூடக் கண்டுபிடிச்சுட்டியே!" என்று ஆச்சரியப்பட்டான் பூனு. அந்தப் பெண் அவன் பக்கம் திரும்பிப் பார்ப்பதற்குள் அவன் ஹநுமான் சிலைக்கெதிரில் போய் நின்றுகொண்டு பாடத் தொடங்கிவிட்டான்.

"அஞ்சனீனு லலா!
ஹந்தம் பாலா!
தோட பகாடா!
சமதர் டப்வாடா ஸ்வாமி!
வஜர் கசோடா வாடா ஸ்வாமி!
ஜே ஜசநாமி! வரதானி!"

(அஞ்சனையின் புதல்வா! நித்ய பிரும்மசாரி! ஒன்றரைக் கால் உடையவனே! சமுத்திரத்தைத் தாண்டிய சாமி! வஜ்ரத்தைக் கச்சையாகக் கட்டிய சாமி! புகழ்பெற்றவனே! உனக்கு ஜயம்! வரமளிப்பவனே, உனக்கு ஜயம்!)

ஹநுமானை இவ்வாறு துதித்துக்கொண்டே அவன் தன் பக்கத்தில் நின்ற மங்கையை ஓரப் பார்வை பார்த்தான்.

"இங்கே ஏன் ஆண்பிள்ளை யாரையும் காணோம்?" கேள்வி கேட்ட லக்ஷ்மண்பாயியை ஸ்திரீ உற்றுக் கவனித்தாள். மரத்தின் அடித்தண்டு போல் ஆஜானுபாகுவாக நிமிர்ந்து நின்ற இளைஞன் அழகன் என்பதை அந்த இருட்டிலும் அவளால் ஊகித்துக்கொள்ள முடிந்தது.

அவன் வேஷ்டியைக் கச்சமாகக் கட்டிக்கொண்டு அதன்மேல் ஒரு பெல்டை இறுக்கிக் கட்டியிருந்தான். பித்தான் போடப் படாத ஒரு வெள்ளைக் கோட்டு அவனுடைய இடுப்பு வரையில் உடலை மூடியிருந்தது. அவன் தன் தலைப்பாகையைக் கையில் வைத்துக்கொண் டிருந்தான். அவனுடைய தலையில் அரைவட்ட வடிவத்திலிருந்த வழுக்கை வழவழப்பான கல்லைப் போல் பளபளத்தது. வழுக்கை அவனுடைய தோற்றத்துக்கு ஒரு கண்ணியத்தை அளித்தது. தண்ணீரில் விளையாடும் மீனைப்போல் அவனுடைய நெற்றியில் சந்திரன் பிரதிபலித்தது. பின்புறம் நீண்ட கேசம் தொங்கியது.

''ஏன்? ஆம்பிளை இல்லாட்டா உலகம் அழிஞ்சி போயிடும்னு பயப்படறியா?'' என்று அந்தப் பெண் கேட்டாள்.

''அப்படியில்லே, தங்கச்சி!'' கேலியாக அவள் பேசினாலும் லக்ஷ்மண்பாயி சாதாரணமாகவே, ''மனிதன் பக்கத்திலே இல்லாட்டி சாமிக்குக்கூடச் சோபை குறைஞ்சு போயிடும்'' என்று பதில் அளித்தான்.

''நீ யாரைப்பத்திச் சொல்றே?''

''பாபா பிரதாப் கர்ஜீயைப் பத்தித்தான் கேக்கறேன்.''

''அவர் போயிட்டாரே?''

''ஏன்?''

''ஏனா? திருடங்கள்ளாம் இங்கே வரப்போறாங்களேன்னு பயந்துகிட்டுத்தான்.''

''என்ன பயம்?''

''சர்க்கார் அவரை ரொம்பத் தொந்தரவு செய்யுது.''

''எப்போப் போனார் அவர்?''

''நேத்துச் சாயங்காலம்.''

''நீ இங்கே தனியா இருக்கியா?''

''நான் உலகத்திலேயே தனியாகத்தான் இருக்கேன்.''

''நீ இங்கே ஏன் இருக்கே?''

''திருடங்களைச் சந்திக்கத்தான்!''

''உன் குரல் எங்கேயோ கேட்டமாதிரி இருக்கே!''

''உன் குரலுந்தான் எனக்குப் பழைய நினைவையெல்லாம் கிளறி விடறது. நீ என்னை முன்னாலே பார்த்திருக்கலாம்.''

''இல்லையே, பார்த்த மாதிரி இல்லையே.''

''உனக்குத் தேவகி கிராமந்தானே?''

''ஆமா, உனக்கு எப்படித் தெரிஞ்சது?''

''நீ லக்ஷ்மண்பாயி பட்கர் இல்லே?''

''இருக்கலாம்.'' லக்ஷ்மண்பாயி சற்று ஜாக்கிரதையானுன். அந்தப் பெண் ஓர் உளவாளியா? ''கொஞ்சம் மெதுவாப் பேசு, தங்கச்சி!''

''நீ சாமிகிட்டே ரொம்பப் பக்தியுள்ளவன், பாவத்துக்குப் பயப்படறவன், பசுக்களுக்குச் சேவை செய்யறவன் — தானேதாரைக் கொன்னுட்டியாமே?''

''ஆனு இவன் காட்டி ஜாதியைச் சேர்ந்த பக்தன்தானே?'' என்றுன் பூனு.

''அப்பாவைக்கூடக் கொன்னுட்டியே நீ?'' என்றுள் அவள்.

''எல்லாம் தலைவிதி! சரி, உனக்குப் பயமா இல்லையா?''

''என்ன பயம்?''

''இந்த நேரத்துலே, இந்த இடத்துலே தனியா இருக்கப் பயமா இருக்குமே?''

''நான் அதைவிடப் பயங்கரமானவளாக்கும்!''

''நீ யாரு? ஏன் இப்படியெல்லாம் பேசறே?''

''நீ யாரோட மேய்ச்சல் நிலத்துக்காகச் சண்டை போட்டே?''

''தூக்கிலே செத்துப் போனுரே, ரூக்கட்சேட், அவரோட பெண்ஜாதி, அவரோட சொத்து தனக்குத் தான்னு நினைச்சு இருநூறு பீகாநிலம் பசுக்கள் மேயறதுக்காகத் தானமாக் கொடுத்தா. நான் அந்த நிலத்திலே மாடு மேய்ச்சுக்கிட்டிருந்தேன். சையதோட பையனும் அங்கே மாடு மேய்க்க வருவான். ரூக்கட் சேட்டோட மற்றப் பங்காளிக்காரங்க தானேதாரிடம் புகார் கொடுத்துத் தானம் செஞ்சது செல்லாதுன்னு உத்தரவு வாங்கிட்டாங்க. தானேதார் வந்து எங்களை நிலத்தைக் காலி பண்ணச் சொன்னுன். தானேதாரோட பௌஜ்தார் ஒரு முஸ்லீம். அவன் சையதோட மாட்டை ஈயப்பிடி போட்ட கம்பாலே அடிச்சான். அது அங்கேயே விழுந்து செத்துப் போச்சு. சையதோட பையன் ஒரு கல்லை எடுத்து அதாலே தன்னுடை மண்டையை உடைச்சுக்கிட்டான். இந்தக் கண்றுவியை என்னுலே பார்க்க முடியல்லே, தங்கச்சி? இப்போ ராத்திரி கழிஞ்சுட்டுது, பொழுது புலர்ற நேரமாயிட்டுது, இந்தப் பிராம்ம முகூர்த்தத்திலே நான் பொய் சொல்லமாட்டேன், தங்கச்சி! முதல்லே தாக்கினது நான் இல்லே!''

''அந்தப் பெண் என்ன ஆனு?''

''ஊரையே விட்டுட்டுப் போயிட்டாளாம்.''

இப்போது ஒரு குதிரையின் கனைப்பு கேட்டது. அதைக் கேட்டதும் லக்ஷ்மண்பாயிக்கு ஏதோ நினைவு வந்தது. "அதுவும் இப்படித்தான் கனைக்கும்'' என்றான் அவன்.

"எது?''

"அவளோட குதிரை.''

"நீ அவளைப் பார்த்ததில்லையா?''

"இல்லை. ரூக்கட் சேட் தூக்கிலே ஏறினபோது அவ அந்த இடத்திலேயே வளையை உடைக்கிற சடங்கைச் செஞ்சா. அதைப் பார்க்க ஊரே திரண்டு போச்சு. ஆனா நான் போகல்லே.''

"ஏன்?''

"எனக்கு இந்த மாதிரி சடங்கைப் பார்க்க பிடிக்கறதில்லே.''

"பின்னே கொள்ளை மட்டும் அடிக்கப் பிடிக்குமா?''

"பிடிபட்டு விடலாமான்னு எனக்கு ஒவ்வொரு சமயம் தோணறது. நான் என் மனசைத் திறந்து உன்கிட்டே பேசறேன்.''

"தூக்கிலே ஏறுவியா?''

"தயார்தான்! நான் அப்படிச் செய்தாலும் யாரும் வளையை உடைச்சுக்கமாட்டா.''

"இந்த உலகம், மேலுலகம் ரெண்டையும் இழக்க ஆசைப் படறியா?''

"எப்பவோ இழந்தாச்சே!''

"ஆனா உன்கூட இப்போ ரெண்டு கூட்டாளி இருக்காங்களே, அவங்களையும் நாசம் பண்ணப் போறியா?''

"அவங்களுக்கு மன்னிப்பு வாங்கித் தந்துடுவேன்.''

"இப்ப சர்க்கார் ரொம்பக் கடுமையா இருக்கு. மன்னிப்புக் கிடைக்காது.''

"எனக்கு மன்னிப்பு வேண்டாம். நான் கோதட்வாலா தர்பாரோட மூக்கை நறுக்கப்போறேன்'' என்றான் வாசியாங்.

"ஏன்?''

"ஏன்னா, அவன் ஒரு பாவரோட குடும்பத்தை நாசம் பண்ணிட்டான்.''

"பிறத்தியான் தகராறிலே நீ ஏன் தலையிடறே?''

"பிறத்தியான் விவகாரமா? ஒருத்தனோட பெண்டாட்டியை இழுத்துக்கிட்டுப் போறவன் எல்லாருக்குந்தான் எதிரி. அவன் கடவுளுக்கும் துரோகி.''

"சபாஷ்! அப்போ உங்க மூணு பேரோட என்னையும் நாலாவதா எண்ணிக்குங்க.''

"உன்னையா?'' வாசியாங் திடுக்கிட்டான்.

''நீ யாரு?'' என்று லக்ஷ்மண் பாயி கேட்டான்.

இத்தக் கேள்விக்குப் பதிலாகப் பொழுதுபுலரத் தொடங்கியது. மலைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண் டிருந்த இளஞ்சூரியன் தன் காவிநிறப் பீச்சாங்குழலால் தண்ணீரைப் பாய்ச்சித் தன் அண்ணியாகிய வானத்தின் ஆடையை ஒளிப்பெருக்கில் மூழ்கடிக்கத் தொடங்கினான். தன் வேலை முடிந்து வானத்தில் கீழே இறங்கிக் கொண்டிருந்த சந்திரன் ஒளி குன்றிக் காணப்பட்டான்.

அதிகாலையின் ஒளியில் மூவரும் அந்தப் பெண்ணைப் பார்த்தார்கள். இருட்டில் அவர்கள் கேட்ட குரல் சற்றுக் கனமாக இருந்தது. அதைக் கொண்டு அவளுடைய தோற்றத்தை அவர்கள் ஓரளவு அனுமானம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த அனுமானம் தவறுகிவிட்டது. அந்த மங்கையின் வெளுத்த முகத்தில் இன்னும் அழகின் அடையாளங்கள் எஞ்சியிருந்தன. பாம்பிடம் தன் முட்டைகளைப் பறிகொடுத்துவிட்டுத் தான் வெறுமையாகிவிட்ட கூட்டில் உட்கார்ந்திருக்கும் சிட்டுக்குருவியின் சோகம் அவள் முகத்தில் நிழலாடியது.

அவளுடைய மேலாடைக்குக் கீழே, இடது பக்கத்தில், இடுப்புக்கு மேல் ஏதோ நீட்டிக்கொண் டிருந்ததை மூவரும் கவனித்தார்கள். தங்கள் பார்வை பண்புக் குறைவானது என்ற நினைப்பில் அவர்கள் அடுத்த கணமே பார்வையைத் திருப்பிக் கொண்டார்கள்.

''பயப்படாதீங்க!'' என்று சொல்லிக் கொண்டே அவள் தன் இடுப்பில் கையை வைத்தாள். வீட்டில் வளர்த்த ராஜாளிப் பறவைபோல ஒரு சிறு துப்பாக்கி அவளுடைய கையில் விளையாடியது. அதை அவள் அலட்சியமாக உயரத் தூக்கிப் பிடித்துக்கொண்டே புன்சிரிப்புடன் சொன்னாள். ''இதிலே நிறையத் தோட்டா போட்டு வச்சிருக்கேன். இந்த மாதிரி ஒரு தம்பி கூட இருந்தாத் தனியா இருக்கவோ, கொள்ளைக்காரங்களுக்கோ ஏன் பயப்படணும்?''[1]

அப்போதே துப்பாக்கியிலிருந்து குண்டு வெளிப்பட்டு விடுமோ என்ற பயத்தில் பூனை அங்கிருந்து நகரப் பார்த்தான்.

போது நன்றாகப் புலர்ந்து விட்டது. அதை வரவேற்பது போல் குதிரை கனைத்தது.

லக்ஷ்மண் தூரத்தில் கட்டியிருந்த குதிரையைப் பார்த்தான். பார்த்ததும் திகைத்தான். ''நீ...நீயா?''

''ஆமா! நான்தான் உன் தங்கச்சி! உன்னை உன் குரல்லேருந்தே கண்டுக்கிட்டேன் நான். முன்னாலேயே ஒரு நாள் உன் குரலைக் கேட்டிருக்கேன்.''

''எப்போ?''

''மகிபத்ராம் ஜமாதார் முதல் முதல்லே வந்தபோது எங்க வீட்டிலே ஒரு ராத்திரி தங்கியிருந்தாரே, அதுக்கு மறுநாள் நீ சேட்டுக்கிட்டே வந்து வண்டிப் பாதை ஓரத்திலே இருந்த அவரோட நிலத்து வேலியை வெட்டினதுக்குக் காரணம் சொல்லி விட்டுப் போனபோது.''

''தங்கச்சியைச் சந்திச்சது நல்ல சகுனந்தான்'' என்று சொல்லிக்கொண்டே லக்ஷ்மண் பாயி தன் துப்பாக்கியின்மேல் கையை வைத்தான்.

''இதோடு நிச்சயம் பண்ணிக்கோ, இனி மேல் போலீஸ்கிட்டே ஆம்பிட்டுக்கக் கூடாதுன்னு! போலீஸ்காரங்க ரொம்ப மோசடிப் பேர்வழிங்க.''

''சட்டந்தான் நம்மை நாசம் பண்ணிடுச்சே!'' என்முன் பூனு. அவன் உட்கார்ந்து மாலையை உருட்டி ஜபம் செய்யத் தொடங்கியிருந்தான்.

''சட்டமாம் சட்டம்! நான் உன்னோட அம்மாவைப் பத்தி அவதூறுப் பேசறேன். நீ எனக்குப் பகிரங்கமா எச்சரிக்கை கொடுத்துட்டு என்னைக் கொல்லறே. இதிலே சட்டத்துக்கென்ன வந்தது?''

''நிசந்தான்!'' லக்ஷ்மண் பாயி சொன்னான். ''நீ உன் புருஷனோட சொத்திலேருந்து நிலத்தைத் தானம் பண்ணியிருக்கே. அதைத் தடுக்க சட்டத்துக்கு என்ன அதிகாரம்? அதனாலே சட்டத்தோட அப்பாவை யாராவது கொன்னுட்டாங்கன்னு அர்த்தமா?''

''ஆமா! சட்டத்தோட அப்பா தானேதார். நீ தானேதாரைக் கொன்னுட்டே!'' என்று வாசியாங் வாதித்தான்.

''கொல்லும்படி தானேதார்தான் என்னை நிர்ப்பந்தப்படுத் திட்டான். ஒரு பசு செத்துப் போச்சு, சையதோட பையன் தற்கொலை பண்ணிக்கத் துணிஞ்சுட்டான், மேய்ச்சல் நிலம் பறி போனப்பறமும் கொல்லலேன்னு வேறே எப்போ, எதுக்காகக் கொல்ல முடியும்?''

இதுதான் லக்ஷ்மண்பாயின் வாதம். பண்டைய ஸௌராஷ்டிரத்தில் மக்களின் மனப்போக்கும் இப்படித்தான் இருந்தது.

''தானேதாரின் பிள்ளை வேண்டுமானால் என்னைப் பழி வாங்கிக் கட்டும்! கணக்குச் சரியாய்ப் போயிடும். இதுக்கு நடுவிலே சட்டத்தைக் கொண்டுவந்து நிறுத்துவானேன்?''

''சட்டங்கறது ஒரு மாயவலை, ஒரு சூழ்ச்சி! உண்மையான சட்டப்படி யார் நடக்கறாங்க? சர்க்கார் பாகேராக்களை அடக்கப்

போனபோது சர்க்கார்க் கப்பல்லேருந்து தர்பூஜா அளவு பெரிய பெரிய குண்டுகளை அவங்க மேலே எறிஞ்சாங்க. பாகேராக்களோட குண்டுகள் எவ்வளவு பெரிசு தெரியுமா? கொட்டைப்பாக்கு அளவு! இதுக்கு யுத்தம்னு பேரு? இதுவா சட்டம்? இதுவா நியாயம்?''

''சரி, சரி, இத்த விவாதமெல்லாம் வேண்டாம். முதல்லே பத்திரமா ஒளிஞ்சுக்க இடம் யார்ப்போம், அண்ணே! ஜூனுகாட் பட்டாளம் இதோ வந்துடும் நம்மளைப் பிடிக்க!'' என்று பூனு சொன்னான்.

''வந்தால் வரட்டுமே! நாம இங்கேயே ஒளிஞ்சுக்கிட்டா நம்மை யாராலும் பிடிக்க முடியாது'' என்றான் லக்ஷ்மண்.

''வாங்க, நான் உங்களுக்கு ஒளிஞ்சுக்க இடம் காண்பிக்கறேன்'' என்று சொல்லி, அந்தப் பெண் அவர்களை உள்ளே அழைத்துப் போனாள்.

அவள் அனுமார் சிலைக்குப் பின்னால் ஒரு மூலையிலிருந்த கல்லை அழுத்தியதும் அது நகர்ந்து கொண்டது. கீழே ஒரு சுரங்கம் தென்பட்டது.

''நான் உங்களை மாட்டிவிடப் போறேன்னு பயப்படறீங்களா?'' என்று புன்சிரிப்புடன் கேட்டுக்கொண்டே அவள் சுரங்கத்துக்குள் இறங்கிக் கீழேயிருந்த கல்லை முன்னிருந்த இடத்துக்கு நகர்த்தி விட்டாள்.

இப்போது தரை முன்பு போலவே ஆகிவிட்டது.

சற்று நேரத்துக்குப் பிறகு அவள் சுரங்கத்திலிருந்து வெளியே வந்தாள்.

''சரி, வாங்க!''

''எங்கே?''

''அனுமாருக்கு முன்னாலே!''

''எதுக்கு?''

''நம்மள்ளே யாருக்கு என்ன நேர்ந்தாலும், உயிருக்கே ஆபத்து வந்தாலும் மத்தவங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம்னு சபதம் செய்ய! சபதத்தை மீறினா சாமி அவனைத் தண்டிக்கும். நாம உசிரோட இருக்கறவரைக்கும் கொள்ளையடிப்போம். கொடுமைக்கு ஆளானவங்க யாராவது நம்மோட சேர்ந்துக்க விரும்பினா அவங்களை நல்லாச் சோதிச்சுட்டுப் பிறகு சேர்த்துக்கு வோம். நாம எல்லோரும் சேர்ந்து நம்ம விரோதிகளை அழிப்போம்!''

பேசும்போது அவளுடைய வளையலற்ற கை சூனியத்தைக் கிழித்துக்கொண்டு மேலும் கீழும் அசைந்தது. அதன் பலம் கை முஷ்டியில் பிரதிபலித்தது. முஷ்டியாகிய சம்மட்டியால் அவள் சூனிய வெளியாகிய பட்டறைக் கல்லில் எதையோ அடித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. குண்டலமின்றி, வெறும் துளை மட்டும் கொண்டிருந்த காதுகள் சந்நியாசியின் காதுகளைப் போல் தொங்கிக் கொண்டிருந்தன.

மூன்று ஆண்களும் அவளுக்கு முன்னால் சீடர்களைப்போல் பணிவுடன் மௌனமாக நின்றார்கள். பிறகு நால்வரும் சபதம் செய்தார்கள். சபதம் செய்யும்போது அவர்கள் தங்கள் ஆயுதங்களை முன்னால் வைத்தார்கள்; சபதம் செய்து முடித்தபின் அவற்றைக் கண்களில் ஒத்திக் கொண்டார்கள்.

சற்று நேரத்துக்குப் பின் காட்டில் வசிக்கும் இரண்டு பெண்கள் சூடான ரொட்டிகள், புதிய மோர், வெண்ணெய், காய்கறிகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு அங்கே வந்து, ''சாப்பாடு எடுத்துக்கங்கம்மா!'' என்றார்கள்.

அந்த மங்கை அங்கு வந்து சேர்ந்த சில நாட்களில் அந்தப் பக்கம் வசித்து வந்த குடியானவர்களுக்கும் இடையர்களுக்கும் 'அம்மா'வாகி விட்டாள்.

''நாளையிலேருந்து நான் மட்டுந்தான் வருவேன். இவ போயிடுவா.''

''எங்கே?''

''மாமியார் வீட்டுக்கு.''

''மாமியார் வீடு உனக்கு ரொம்பப் பிடிக்கும், இல்லையா, ஹீராபாயி?''

ஹீராபாயி வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஆனா இங்கே மாதிரி அங்கேயெல்லாம் ஓடி விளையாட முடியாது.''

ஹீராபாயியின் கண்களில் நீர் நிறைந்தது.

''மாமியார் வீடு எங்கே இருக்கு?''

''தோண்கட்டா.''

பெயரைக் கேட்டு அதிர்ச்சி ஏற்பட்டது ஸ்திரீக்கு. ''அடிக்கடி வந்துக்கிட்டு இரு, அம்மா!'' என்று அவள் கூறினாள்.

அவர்களை அனுப்பிய பிறகு வாயிற்கதவைத் தாளிட்டுவிட்டு மூவருக்கும் ரொட்டி பரிமாறினாள்.

பூனு வாயிற்பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண் டிருந் தான். வாசியாங்கின் நாக்கு ஏதோ கேட்கத் துடித்தது. லக்ஷ்மண் பாயி கேட்டே விட்டான், ''இந்தப் பெண்கள் யாரு?'' என்று.

''இவங்கள்ளாம் காட்டுமான்கள். கள்ளங்கபடில்லாத இந்தப் பெண்கள் விஷயத்திலே நீங்க ஜாக்கிரதையா இருக்கணும். காட்டிலே ஓடற ஆறுகளையும் ஓடைகளையும் எண்ணி மாளாது. அதுமாதிரி காட்டிலே இருக்கற இந்தமாதிரி பெண்களையும் எண்ண முடியாது. அவங்களோட முகத்தழகு சாயங்கால நேரத்து மேகத்திலேருந்து இறங்கி வந்தது மாதிரி இருக்கும். மக்ராணி ஜாதிக்காரங்க இவங்களுக்கு எமன்மாதிரி. அப்படியும் இவங்க விளக்குமேலே ஆசைப்பட்டுப் போய் எரிஞ்சுபோற விட்டில் மாதிரி மக்ராணிகள்கிட்டே மயங்கிப் போயிடறாங்க. இவங்களைக் காப்பாத்தறதுக்கு ஆள் இல்லே.''

இதைக் கேட்ட மூவருக்கும் இத்தகைய அநாதைகளைக் காப் பாற்ற வேண்டுமென்ற உணர்வு ஏற்பட்டது.

''இந்தப் பெண்களில் ஒருத்தி ரொம்ப நாள் உசிரோடு இருக்க மாட்டாள்'' என்று அவள் சொல்லியதைக் கேட்டு மூவரும் திடுக்கிட்டார்கள்.

''ஏன்?'' என்று லக்ஷ்மண் கேட்டான்.

''மான் புலியோட குகைக்குப் போறது.''

''எங்கே?''

''தோண்கட்டா. மக்ராணி இவளோட தேகத்தைக் குதறி எடுத்துடுவாங்க. இன்னும் ஏழெட்டு நாளிலே நமக்குச் செய்தி கிடைக்கும்.''

''அப்படியானு, செய்திக்காகச் சும்மாக் காத்துக்கிட்டிருக்க வேண்டியதுதானு?'' என்று வாசியாங் கோபத்துடன் கேட்டான்.

''ஓ, நம்ம பாபாஜி வந்துட்டார்! சாதுலாவோட குரல் கேக்கறது'' என்றாள் ஸ்திரீ. குரைப்பொலியிலிருந்தே பாபாஜி யின் நாயை அடையாளம் கண்டுகொண்டாள் அவள்.

''இப்ப எனக்குக் கவலைவிட்டது'' என்று லக்ஷ்மண்பாயி தன் சகாக்களிடம் சொன்னான். மூவரும் தங்கள் ஆயுதங்களைச் சுவரி லிருந்த ஆணிகளில் மாட்டினார்கள்.

கதவுகளின் சங்கிலிகளையும் தாழ்ப்பாள்களையும் திறந்து கொண்டே அந்த ஸ்திரீ சொன்னாள்: ''சாதுலா! ஏன் இப்படிக் கத்தறே? ஏன் பாபாஜியோட குரலே கேக்கல்லே? அவர் நடுராத் திரியிலே வந்தாலும் 'ஆதேஸ், ஆதேஸ்'னு ஜபிச்சுக்கிட்டுத்தானே வருவார்!''

'ஆதேஸ்' என்ருல் நல்வரவு என்று பொருள். சந்நியாசிகளில் ஒரு குழுவினர் உபயோகிக்கும் வார்த்தை அது.

அவள் கடைசித் தாழ்ப்பாளை அகற்றி வாயிலின் சிறிய கதவைத் திறந்தபோது அங்கே இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியொன்று நின்றுகொண் டிருந்தது. வண்டியோட்டுபவனின் இடத்தில் வேட்டையுடுப்பு அணிந்த ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் கையில் லகான் இருந்தது. ஒரு வேலைக்காரன் குதிரைக்கருகில் நின்றுகொண்டு அதன் பிடரியைத் தடவிக் கொடுத்துக் கொண்டி ருந்தான். வண்டியின் பின்பக்கத்திலிருந்து குதித்த நான்கு பேர் வாயிலின் பெரிய கதவைப் பலவந்தமாகத் திறக்க முயற்சி செய்யத் தொடங்கினுர்கள். நாய் வெறி பிடித்ததுபோல் அவர்களுக்கு முன்னுல் ஓடி உரக்கக் குரைத்தது. அதன் கடிபட்டு இரண்டு ஆட்களின் ஆடுசதையிலிருந்து ரத்தம் ஒழுகிக்கொண் டிருந்தது.

நாய் கடைசியாக வண்டியோட்டுபவன்மேல் பாய்ந்தது. ஆனுல் அது அவனை நெருங்குவதற்குள் அவன் அதன் தலையில் துப்பாக்கியின் அடிக்கட்டையால் பலமாக அடித்தான். நாய் சுருண்டு தரையில் விழுந்தது.

''நீ யாரு?'' என்று கத்திக்கொண்டே ஸ்திரீ வெளியே ஓடி வந்தாள். கோயில் வாயிலை நெருங்கிக் கொண்டிருந்த குதிரைகளை அவள் பின்னுக்குத் தள்ளினுள். ''நீ யாரு? கோயிலைச் சேர்ந்த நாயை நீ ஏன் கொன்னே?''

''ஓ, நீதான் புது சிஷ்யையா?'' ஸ்வரப் பெட்டியிலிருந்து குறைந்த ஸ்தாயியில் எழும் ஒலிபோல் வேட்டையுடை அணிந் தவன் தணிந்த குரலில் கேலியாகக் கேட்டான். பேசும்போது அவனுடைய கண்கள் பாதி மூடியிருந்ததால் அவன் போதையி லிருந்தானே என்று தோன்றியது. அவன் தன் தலையில் கோண லாக வைத்துக்கொண் டிருந்த தொப்பியை இன்னும் கோண லாகச் சாய்த்து வைத்துக்கொண்டான்.

அவள் கண்கள் தரையில் துடித்துக்கொண் டிருந்த நாயின்மேல் பதிந்திருந்தன. நாய் அடிக்கடி தன் கண்களை உயர்த்திக் கோயி லின்மேல் பறந்துகொண் டிருந்த கொடியைப் பார்த்தது. கொஞ்சங் கொஞ்சமாகக் கண்களின் அசைவு குறைந்தது; கடைசியில் அவை நிலைகுத்திப் போயின. அதன் வாயிலிருந்து நுரை தள்ளியது.

உலகத்துடன் அதனுடைய உறவு முடிந்துவிட்டது. அந்தப் பெண் உள்ளமுடைந்து கதறினுள், ''இந்தக் கொடியோட நிழல்லே ஒரு ஜீவனைக் கொன்னுட்டியே!'' என்று.

வண்டியில் இருந்தவன் தன்னை நோக்கி முன்னேறும் ஸ்திரீயைத் தடுக்கும்படி வேலைக்காரர்களுக்கு ஜாடை காட்டினான். அவர்கள் அவளைத் தடுத்து நிறுத்தினார்கள்.

''நில்லு, நில்லு!'' அவன் அவளைப் பார்த்துத் தன் பாதி மூடிய கண்களைச் சிமிட்டினான். ''இதோ பாரு, இன்னொரு ஜீவனும் இங்கே செத்துக் கிடக்கு'' என்று சொல்லிக்கொண்டே அவன் தன் காலடிப்பக்கம் குனிந்தான். சட்டென்று அவனுடைய கண்களில் அதிர்ச்சி தோன்றியது. அவனுடைய நாக்கு சற்று வெளியே வந்து தொங்கியது.

தங்கள் எஜமானனின் இந்த அதிர்ச்சி வேலைக்காரர்களுக்குப் புதுமையாக இருந்தது. அவர்கள் அருகில் வந்தார்கள்; ஸ்திரீக்கும் வியப்பு ஏற்பட்டது.

வண்டியிலிருந்தவன் தன் காலடியில் கிடந்த பிராணியைப் பார்க்க விரும்பாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டான். அவன் தன் இடப்பக்கத்து வானத்தைப் பார்த்தவாறு இருந்தான். குளிர்காலத்தின் இதமான வெயிலில் சாண் நீள மயிருள்ள ஆயிரக் கணக்கான ஆடுகள் மேய்வதைப்போல் ஆகாயத்தில் வெண்ணிற மேகங்கள் ஒன்றோடொன்று உரசிக்கொண் டிருந்தன. ஒரு பெரிய மேகம் ஆடுகளை மேய்க்கும் இடைச்சியின் உருவங் கொண்டு சற்றுத் தூரத்தில் காணப்பட்டது.

மறுபடியும் அவனுடைய பார்வை தன் காலடிப் பக்கம் திரும்பியது. அங்கே கூடியிருந்தவர்களிடமிருந்து தனக்கேற்பட்ட அதிர்ச்சியை மறைப்பதற்காக அவன் தன் கண்கள் சூரிய வெளிச்சத்தைப் பார்க்கக் கூசுவதாகப் பாவனை செய்தான்.

''இதைக் கீழே இறக்கு!'' என்று அவன் கட்டளையிட்டான்.

வேலைக்காரர்கள் அந்தப் பிராணியை வண்டியிலிருந்து இறக்கிக் கீழே வைத்தார்கள்.

அது ஒரு பெண் முயல். அதன் வயிறு வெள்ளரிப் பழம்போல் பிளந்திருந்தது. பிளந்து கிடந்த கர்ப்பப் பையில் இரண்டு முயல் குட்டிகள் உயிரின்றிக் கிடந்தன.

பெரிய முயலைக் கொன்று வண்டியில் போட்டவன் அந்தச் சமயத்தில் இந்தக் காட்சியைப் பார்க்கவில்லை.

அவன் வண்டியிலிருந்து இறங்கியபோது அவனுடைய கால்கள் ஆடிக்கொண் டிருந்தன. அவன் தன் துப்பாக்கியின் குழாயைப் பிடித்துக்கொண்டு கீழேயிருந்த ஒரு பெரிய கல்லின்மேல் அடித்தான். அந்த அடியின் வேகத்தில் துப்பாக்கி இரண்டாக உடைந்து விட்டது.

வேட்டைக்காரன் வேலைக்காரர்களில் ஒருவனைப் பார்த்து, ''பக்கத்தில் என்ன ஊர் இருக்கு?'' என்று கேட்டான்.

''நம்ம ஊர்தாங்க.''

"சரி, இந்தா பத்து ரூபா! சாயங்காலத்துக்குள்ளே ரெண்டு துணி வாங்கிக்கிட்டு வந்து இங்கே கொடுத்திட்டுப்போ!'' என்று அவனிடம் கூறிவிட்டுப் பிறகு அவன் ஸ்திரீயைக் கேட்டான்: ''நீ இந்தப் பிராணிகளைப் புதைச்சுடறியா?''

ஸ்திரீ மௌனமாகச் சம்மதம் தெரிவித்தாள்.

அவன் இன்னொர் ஆளிடம் ஐந்து ரூபாய் கொடுத்தான். "போ, இதை அநுமாருக்குக் காணிக்கையாப் போட்டுட்டு வா!''

அவனுடைய பார்வை அடிக்கடி முயலின் பிளந்து கிடந்த கர்ப்பப் பையின் பக்கம் திரும்பியது. "இந்த மாதிரி... இந்த மாதிரி...... ஒருபோதும் நடந்ததில்லே!'' அவன் திரும்பத் திரும்ப முணுமுணுத்தான்.

வண்டி திரும்பிவிட்டது. திரும்பும்போது அவன் லகானை வேறொருவன் கையில் கொடுத்துவிட்டுத் தான் உள்ளே உட்கார்ந்துகொண்டான்.

போகும்போது அவன் வண்டிச் சக்கரத்துக்குக் கீழே உற்றுப் பார்த்தான்.

''என்னங்க வேணும்?'' என்று வண்டியோட்டி கேட்டான்.

''இல்லே. சக்கரம் எதையோ அரைச்சுக்கிட்டுப் போற மாதிரி இருந்தது.''

''அது ஒண்ணுமில்லே, ஆத்து மணல் தான்.''

வாயிற் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு ஸ்திரீ உள்ளே வந்தபோது விருந்தாளிகளை அங்கே காணோம். 'சத்தத்தைக் கேட்டு ஓடிப்போயிட்டாங்களோ?' என்று நினைத்துக் கொண்டே அவள் கோயிலுக்குள் நுழைந்தாள்.

அது பெயருக்குத்தான் கோயில். உண்மையில் ஒரு பழைய வீடு அது. நீண்ட காலத்தின் சரித்திரம் அதன் நெஞ்சுக்குள் உறைந்து போயிருந்தது. யாரோ ஒரு சந்நியாசி அதைச் சுத்தம் செய்து உள்ளே ஒரு கல்லை நிறுத்தி வைத்து, மேலே ஒரு சிவப்புக் கொடியைப் பறக்கவிட்டிருந்தான்.

உள்ளே நுழைந்த ஸ்திரீ வாசியாங்கின் தோள்மேல் பூனுவும், பூனுவின் தோள்மேல் லக்ஷ்மணும் சுவரோரமாக நின்று கொண்டிருப்பதைக் கண்டாள். லக்ஷ்மண் பாயியின் கையில் துப்பாக்கி இருந்தது. அவன் சுவரிலிருந்த ஒரு துவாரத்தின் வழியே

துப்பாக்கியின் குழாயை வெளியே நீட்டி, ஒரு கம்பி வலை வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தான்.

"போயிட்டாங்க" என்று சொல்லிவிட்டு அவன் பூனுவின் கையில் துப்பாக்கியைக் கொடுத்தான். பூனு அதை வாசியாங்கிடம் கொடுத்தான். மூன்று உயிருள்ள மனிதர்களாலான ஏணி சிதைந்தது.

''அவ்வளவு உசரம் ஏறிக்கிட்டு என்ன பண்ணிக்கிட்டிருந்தே?''

"குறி வச்சுக்கிட்டிருந்தேன்'' என்று லக்ஷ்மண் சொன்னான். ''நீ ஏன் எங்களுக்குக் குரல் கொடுக்கல்லே?''

"நீங்க இங்கே ஒளிஞ்சுக்கிட்டு இருக்கறது அவங்களுக்குத் தெரிய வேண்டாம்னுதான்! அவங்களாலே என்னை என்ன செய்ய முடியும்? என் தம்பி தான் என்கிட்டயே இருக்கானே!'' என்று சொல்லிக் கொண்டே அவள் தன் இடுப்பிலிருந்த துப்பாக்கியைத் தொட்டாள்.

''இவங்க யாரு தெரியுமா?'' என்று லக்ஷ்மண் கேட்டான்.

"யாரு?''

"என்னோட தங்கை புருஷன் - ராம்கட் இளவரசன்!''

"நிசமாவா?''

"ஆமாம். தங்கச்சியோட மாங்கல்யத்துக்காகப் பார்த்தேன். இல்லாட்டா இங்கேயிருந்து உசிரோட திரும்பிப் போக விட்டிருப்பேனா?''

"திரும்பிப் போனது நல்லதுதான். ஏன்னா போறபோது கொஞ்சம் மனுஷத்தனத்தைக் கத்துக்கிட்டுப் போயிருக்கான்.''

''என்ன?''

"அவன் பூரண கர்ப்பிணியான ஒரு முயலை வேட்டையாடிக் கொன்னிருக்கான். அதோட வயிறு வெடிச்சு அதுக்குள்ளே ரெண்டு முயல் குட்டி செத்துக் கிடக்கிறதைப் பார்த்து அவனுடைய மனசு எப்படியோ ஆயிடுச்சு!''

''ஆ...மா!'' பூனு ஏளனமாகச் சொன்னான். "ராஜ்கோட்டிலே வெள்ளைக்காரன் பள்ளிக்கூடத்திலே படிச்ச இளவரசனுக்குக் கர்ப்பமான முயலைப் பார்த்து மனசு இளகிப் போயிடுமாக்கும். அப்படியெல்லாம் ஆச்சுன்னா அவனுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்த துரைமார்களோட மதிப்பு என்ன ஆகும்?''

"இந்த இடத்தோட மகிமையாகவும் இருக்கலாம்'' என்றான் லக்ஷ்மண்.

வாசியாங், ஸ்திரீயின் பக்கம் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே சொன்னான். ''தங்கச்சியோட தெய்வீக சக்தியும் அவன் மனசை மாத்தியிருக்கலாம்.''

"ஆமா, தங்கச்சியோட மகிமையாலே தான் நாம தப்பிச்சோம். 'இப்போ சண்டை நடக்கப் போறது, நாம எல்லாரும் சாகத் தான் போருேம்'னு நான் கூட நினேச்சேன்.''

"ஏன்?"

''அநுமாருக்குக் காணிக்கை செலுத்த வந்தானே, அவன் வெளியே இருந்தே காசை எறிஞ்சுட்டுப் போயிட்டான். அவன் உள்ளே நுழைஞ்சிருந்தான்ஞ அவனேக் கொன்னுப் போட்டிருப் போம். அப்புறம் சண்டை வந்திருக்கும்.''

இந்த நேரத்தில் கோயிலின் ஒரு பாழடைந்த பகுதியிலிருந்து ஆந்தையின் ஓலம் கேட்டது. பீரங்கிக் குண்டைக் கூடத் தைரியமாக மார்பில் ஏற்றுக்கொள்ளும் துணிவு பெற்ற இவர்கள் இந்த அபசகுனமான ஒலியைக் கேட்டுப் பயந்துவிட்டார்கள். அந்த ஒலி தங்களுடைய சாவை அறிவிப்பதாகத் தோன்றியது அவர்களுக்கு.

அவர்களுடைய பயத்தை அவள் கவனித்தாள். "நீங்க இன்னி ராத்திரிக்கே ஒளிஞ்சுக்க வேறே இடம் பாருங்க. சாப்பாடு கொண்டு வந்த பெண்களுக்கும், வேட்டையாடிக்கிட்டு வந்த ஜனங்களுக்கும் உங்களேப்பத்தி ஏதாவது சந்தேகம் ஏற்பட் டிருந்தா உங்களுக்கு ஆபத்துத்தான்!''

''நாங்களும் ஒரு நாள் தங்கலாம்னுதான் இங்கே வந்தோம். எங்க காலடித் தடம் எதிர்ப்பக்கம் போற மாதிரி போக்குக் காட்டிப்பிட்டுத்தான் வந்திருக்கோம். ஆகையாலே சர்க்கார்ப் பட்டாளம் எங்களேத் தேடிக்கிட்டு இங்கே வராது. நாங்க இன்னிக்கே கிளம்பிடறுேம்.''

"நீங்க வேறே இடத்துக்குப் போய்ச் சேர்ந்தப்புறம் எனக்குத் தகவல் அனுப்புங்க. நானும் அங்கே வந்திடறேன்.''

"நாம ஆம்பிட்டுக்கிட்டா?''

"ஜெயில்லே சந்திப்போம். ஜெயில்லியே ஒரு தடவை நம்ம கொடியைப் பறக்கவிட்டுட்டுச் சாவோம்."

''ஆனு சாகறதுக்கு முன்னுலே செய்ய வேண்டிய ஒரு காரியம் பாக்கியிருக்கு.''

''என்ன தங்கச்சி?''

"மாணேக்வாடாவோட வெள்ளேக்காரப் பொலிடிகல் ஏஜண்ட் கிட்டே கடனேத் தீர்க்கணும்.''

''என்ன கடன்?

"பின்னுலே சொல்றேன். நீங்க முதல்லே ஒரு பத்திரமான இடத்துக்குப் போய்ச் சேருங்க!''

இரவில் மூவரும் புறப்படத் தயாரானார்கள். லக்ஷ்மணும் பூனுவும் வெடி மருந்தையும் குண்டுகளையும் எடுத்துவைத்துக் கொண்டார்கள். வாசியாங் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வாயிற்கதவு நன்றாகத் தாழ்ப்பாள் போடப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்காக அவள், கையில் ஒரு பழைய மோஸ்தர் விளக்கை எடுத்துக்கொண்டு போனாள். அப்போது துப்பாக்கியைத் தன் தலைமேல் சாய்த்துச் கொண்டிருந்த வாசியாங்கைப் பார்த்து, ''உனக்குக் குழந்தை குட்டிகள் இருக்காங்களா?'' என்று கேட்டாள்.

அவன் தலையையாட்டினான். அவன் முகம் பார்க்கப் பரிதாப மாக இருந்தது.

''இப்போ அவங்களை எல்லாம் மறக்க வேண்டியதுதான்!'' என்று அவள் சொன்னாள்.

அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''நீ என்னை உன்னோடே இங்கேயே தங்க விடுவியா?'' வாசியாங்கின் கண்களில் நீர் நிறைந்து அவனுடைய முகத்துக்கு ஓர் அழகைக் கொடுத்தது.

''ஏன்?''

''உனக்காக என் உசிரையே கொடுக்க ஆசைப்படறேன், அதனால்தான்.''

''அவசியம் இல்லாமேயா?''

''சாகத்தான் போறேன். சாகிற சந்தர்ப்பத்தைக் கொஞ்சம் இன்பமா செஞ்சுக்கலாமே!'' அவனுடைய கண்களில் ஓர் ஆசை தெரிந்தது.

''நீ மோகத்திலே சிக்கிக்கிட்டிருக்கே, தம்பி! இந்த மாதிரி சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படும். அதிலெல்லாம் ஏமாந்து போகாமே ஜாக்கிரதையா இருக்கணும்! இல்லாட்டா நாசமாப் போயிடுவே!''

''ஒரு தடவை—ஒரே ஒரு தடவை—எங்கிட்டே ஆசையா இருப்பியா?''

''தம்பி, சும்மாயிரு! என் மனசுக்குள்ளே இருக்கற பாம்பைக் கிளப்பிவிடாதே! மனசு பாம்புப் புத்து மாதிரி; அதை ஏன் அநாவசியமாகக் கிளறிவிடணும்?''

அவள் உள்ளே போய்விட்டாள்.

பின்னாலிருந்து துப்பாக்கிக் குண்டின் சப்தம் கேட்டது. கோயில் கட்டிடமே அதிர்ந்தது. பறவைகள் உறக்கத்திலிருந்து எழுந்து கீச்சுக்கீச்சென்று கத்தத் தொடங்கின.

மூவரும் ஓடிவந்து பார்த்தார்கள்.

வாசியாங் தலையில் குண்டுபட்டுக் கீழே கிடந்தான். தன்னைத் தானே சுட்டுக் கொண்டிருந்தான் அவன்.

''இதென்ன?'' லக்ஷ்மண் திகைத்தான்.

''இதோட காரணம் எனக்குத் தெரியும்'' என்று அந்தப் பெண் சொன்னாள். ''நீங்க இரண்டு பேரும் உடனே இங்கேயிருந்து கிளம்பிடுங்க. துப்பாக்கிச் சத்தம் கேட்டு இங்கே கூட்டம் கூடிட்டா உங்களாலே தப்பியோட முடியாது. உம், ஓடிப் போங்க!''

''இவன் பிணத்தை...''

''அதெல்லாம் நான் கவனிச்சுக்கறேன். நீங்க போங்க!''

வாசியாங்கின் துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு லக்ஷ்மணும் பூனாவும் கட்டிடத்தின் பின்பக்கமாக வெளியே ஓடினார்கள். அந்த மங்கை கோயிலுக்குள் ஓடினாள்.

அநுமாரின் சிலை இருந்த அறையில் கந்தைத் துணிகளில் முடிந்து வைக்கப்பட்ட சில பொட்டலங்கள் ஆணிகளில் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு பொட்டலத்தில் காயங்களுக்குப் போடுவதற்கான மூலிகைகள் இருந்தன. அவள் அந்த மூலிகைகளை எடுத்து நெருப்பில் எரித்து அந்தச் சாம்பலை வாசியாங்கின் காயத்தில் வைத்துக் கட்டினாள். காயம் உடலின் ஒரு பக்கத்தில் தான் இருந்தது.

நினைவிழந்து கிடந்த அவனைப் பார்த்தவாறே அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்: ''கடைசியிலே நீ நினைச்சபடியே செஞ்சுட்டே! சரி, நீ என்கிட்டயே இரு!'' அவள் தன் நெஞ்சின் மேல் கைவைத்துக் கொண்டாள்.

சற்று நேரம் அவளுடைய கை அப்படியே அசைவற்று இருந்தது. பிறகு அது மெதுவாக திருடனைப்போல், காயமடைந்தவனின் மார்பைத் தடவத் தொடங்கியது. அவனுடைய நெஞ்சுத் துடிப்பைக் கவனித்து அவள் திடுக்கிட்டாள். ''இவன் பிழைச்சுடு வான் போலேயிருக்கு! ஐயோ, இன்னும் என்னென்ன நடக்கப்போறதோ?''

'வாசியாங் பிழைத்துவிட்டால் அவள் ஏன் பயப்பட வேண்டும்?' தன்னுடைய நெஞ்சின் ஆழத்தில் இதற்கான விடையை அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

22

அதன் பிறகு மாசி மாதத்து த்விதீயை, த்ருதீயை, சதுர்த்தி... பூர்ணிமை—சுக்லபட்சத்துப் பதினைந்து திதிகள்—இவை பல பரபரப்பான நிகழ்ச்சிகளைக் கண்டன.

பத்ராபூரின் தர்பார் ஆத்திரங் கொண்ட புலியைப் போல் வெளிப்படையாகச் சண்டைக்கு வந்தான். அவனுடைய பக்கத்திலிருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்து வந்தன. அவற்றுக்கு முன்னால் மகீபத்ராமின் பட்டாளம் பஞ்சு மூட்டைகளைக் கொண்டு ஒரு சுவரை எழுப்பியது. குண்டு பட்டு எரியும் மூட்டைகளின் மேல் தண்ணீரைக் கொட்டிக் கொண்டு, மூட்டைகளை முன்னுக்கு நகர்த்தி நகர்த்தி அவற்றுக்குப் பின்னாலிருந்து சுட்டுக்கொண்டே பட்டாளம் கோதட்வாலாவின் சைனியத்துக்கு அருகில் வந்துவிட்டது.

மகீபத்ராம் கத்தினார். "கோதட்வாலா! நீ சரணடைந்து விடு! சரணடைந்தால் நான் உன்னைக் காப்பாத்தறேன்! நான் பிராமணன், என் வார்த்தையை நம்பு!"

கோதட்வாலா ஒரு நீண்ட கழியின்மேல் ஒரு வெள்ளைத் தலைப்பாகையைச் சுற்றி அதை ஆட்டினான். அவன் தன் துப்பாக்கியை எறிந்துவிட்டுக் கோட்டைக்கு வெளியே வந்தான். மகீபத்ராம் தாம் இருந்த பாதுகாப்பான இடத்திலிருந்து அவனைச் சந்திக்க வெளியே வந்தார். சிப்பாய்கள் அவரைத் தடுத்தார்கள். "இந்தக் காட்டியை நம்பலாமா? நீங்க போகாதீங்க, சாகேப்! அவன் உங்களை ஏமாத்திக் கொன்னுடுவான்."

"அவன் ஏமாத்துவானேன்னு பயந்துகிட்டு நான் பொய்யனா ஆகலாமா? ஏமாந்து சாகக்கூட நான் தயார்!"

மகீபத்ராம் கோதட்வாலாவைச் சந்தித்தார். இருவரும் கை குலுக்கினார்கள். மகீபத்ராம் கோதட்வாலாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தார். "சபாஷ்! நீங்க நல்ல காரியம் செஞ்சீங்க! நீங்க கூச்சப்பட மாட்டீங்களே?"

"என்ன?"

"உங்களுக்குக் கைவிலங்கு பூட்டிக்கிட்டு வரச்சொல்லி உத்தரவாயிருக்கு."

"இப்போ நான் உங்க கையிலே இருக்கேன். என்ன வேணும்னாலும் செஞ்சுக்கங்க."

"நான் உங்க தோழனாயிருக்கேன், கவலைப்படாதீங்க!"

"அப்படீன்னா?"

"காண்பிக்கறேன், பாருங்க."

மகீபத்ராம் தம் வலது கையையும் கோதட்வாலாவின் இடது கையையும் சேர்த்து விலங்கால் பிணைத்துக் கொண்டார். தங்கள் இருவருடைய தோல்களையும் சேர்த்துக் கயிற்றால் கட்டும்படி தம் சிப்பாய்களுக்கு உத்தரவிட்டார்.

"இப்ப நாம ரெண்டு பேரும் சிநேகிதங்கன்னு உங்க ஜனங்களுக்குத் தெரியட்டும்!"

இருவரும் பத்ராபூரின் கடை வீதிவழியே நடந்தார்கள். அவர்களைக் கட்டியிருந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டு பின்னால் ஹவில்தார் நடந்தான். அவர்களுக்கும் பின்னால் பதினைந்து சிப்பாய்கள் அணிவகுத்து நடந்தார்கள். அவர்களுடைய துப்பாக்கிகளின் சனியன்கள் பளபளத்தன. இந்த விசித்திரமான காட்சியின் மர்மத்தை அவ்வூர் மக்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. கத்தியவாரின் ராஜா ஒருவனுக்குக் கைவிலங்கு பூட்டப்பட்டு அவன் இவ்வாறு தன் மக்களுக்கு முன்னால் கொண்டு செல்லப்படுவது அதுதான் முதல் தடவை. ஒரு கணத்துக்கு முன்னால் அவர்களுக்கு எஜமானனாக, படியளப்பவனாக இருந்தவன், இப்போது எவ்வளவு நாதியற்றவனாக ஆகிவிட்டான்! பூணூல் போட்ட ஒரு பிராமணன் அவனை இழுத்துக்கொண்டு போய்க் கொண்டிருந்தான்!

பத்ராபூர் மக்களின் கண்களுக்கு மகீபத்ராம் புதிய யுகத்தின் பரசுராமனாகக் காட்சியளித்தார். தாங்கள் வீரத்துக்குப் பெயர் போன ஜாதிகள் என்று மீசையை முறுக்கிக் கொண்டு தர்பாருடைய ஆதரவில் வாழ்ந்து வந்த சிந்தி, மியாணா, காண்ட், கதயி, சபாயி, மக்ராணி ஆகிய இனத்தவர் தங்கள் தங்கள் வீட்டு வாசலில், திண்ணைகளில், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவு விடுதிகளின் வாயில்களில் சிலையாக நின்று கொண்டு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து இரும்புக் கழிகளும் வாள்களுங்கூட அசையவில்லை.

தர்பாரைக் கண்டதும் அவருக்குத் தலைகுனிந்து சலாம் செய்யும் மக்கள் இன்று அப்படிச் செய்ய மறந்து விட்டார்கள். அவர்கள் இப்போது சலாம் போட்டது மகீபத்ராமுக்கு.

ராஜ்கோட் போலீஸ் தலைமைக் காரியாலயத்தில் ஒரு பெரிய விழா நடந்தது. அதில் ஏஜென்சியின் சார்பில் மகீபத்ராமுக்கு ஒரு தங்கப் பிச்சுவா பரிசளிக்கப்பட்டது. விழாவில் மூன்று வெள்ளை அதிகாரிகளும் பல போலீஸ் அதிகாரிகளும் சொற்பொழிவாற்றி மகீபத்ராமைப் பாராட்டினார்கள். அவர்களுடைய பாராட்டுக்குப் பதில் சொல்ல எழுந்தார் மகீபத்ராம். ஆனால் அவருக்குப் பேச வரவில்லை. "நான் தர்பாரோட உசிரைக் காப்பாத்தறதா அவருக்கு வாக்குக் கொடுத்திருக்கேன். சர்க்கார் என் வாக்கைக் காப்பாத்தணும்னு மட்டும் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லி விட்டு உட்கார்ந்தார் அவர்.

பிறகு அதிகாரிகள் சிப்பாய்களையும் ஏதாவது சொல்லச் சொன்னார்கள். ஒருவன் தான் இரண்டாம் வகுப்பில் படித்த கவிதை ஒன்றை ஒப்பித்தான், இன்னொருவன் பர்த்ருஹரி நாடகத்தில் வரும் பாட்டு ஒன்றைப் பாடினான். ஒரு பிராமணச் சிப்பாய் ஒன்றிரண்டு சம்ஸ்கிருத சுலோகங்களைச் சொன்னான். அந்த நேரத்தில் பத்து ரூபாய் மாதச் சம்பளம் வாங்கும் சாதாரணச் சிப்பாய்க்கும் வெள்ளைக்கார அதிகாரிக்குமிடையே எவ்வித வித்தியாசமும் இல்லை. சிப்பாய்களுக்குப் பரம சந்தோஷம்.

மகீபத்ராம் பௌஜ்தாராக நியமிக்கப்பட்டார். புது வருஷ ஆரம்பத்தில் அவருக்கு 'ராவ் சாகேப்' பட்டமும் கிடைத்தது.

ஒரு சாதாரண ஜமாதார்—பௌஜ்தார் 'ராவ் சாகேப்' பட்டம் பெறுவது சௌராஷ்டிரத்தில் மிகவும் அதிசயமான நிகழ்ச்சி. இந்தப் பட்டத்தைப் பெற்றவரே தம் உயிரைப் பணயமாக வைத்து யுத்தம் செய்து அதைப் பெற்றிருந்தார்.

மகீபத்ராமைத் தங்கள் மேஜைக்கு முன் நிற்க வைத்து அவருக்கு உத்தரவு கொடுக்கும் அதிகாரிகள் கூட அவருடைய வீட்டுக்குச் சென்று அவரைப் பாராட்டி விட்டு வந்தார்கள். பௌஜ்தார் பதவிக்கான உடுப்புக்குத் துணி எங்கே வாங்குவது, எந்தத் தையற்காரனிடம் தைப்பது, எவ்வளவு கால் சட்டைகள், கோட்டுகள் தைத்துக் கொள்வது என்றெல்லாம் யோசித்தார்.

இந்தப் பெருமைகளும் பாராட்டுகளும் அவரைத் திணறச் செய்தன. ஆனாலும் அவர் இவற்றையெல்லாம்விடத் தம் வாக்கையே பெரிதாக மதித்தார்,

அவர் வெள்ளைக்கார அதிகார அதிகாரியிடம் சென்றார்.

"என்ன, ராவ்சாகேப் சோர்ந்திருக்கீங்களே?"

"ஒரு விண்ணப்பம், சார்!"

"சொல்லுங்க."

''உங்களை நம்பித்தான் நான் தர்பாருக்கு வாக்குக் கொடுத்தேன். நீங்க அதைக் காப்பாத்தணும்.''

''ஏன் என்னை நம்பினீங்க?''

இதைக் கேட்டபோது வெள்ளைக்கார அதிகாரியின் மனத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆரம்ப காலத்திலிருந்து நிகழ்ந்த நம்பிக்கைத் துரோகங்கள் சித்திரங்களாகப் பதிந்தன. கிளைவ் காலந் தொடங்கிச் சிப்பாய்க் கலகம் வரை செய்யப்பட்ட பித்தலாட்டங்கள், மோசடிகள் முதலியன உருவெடுத்து அவனுடைய கற்பனையில் வந்து நின்றன.

''நீங்க ஏன் அவனை அங்கேயே கொன்னுடல்லே?''

''கொன்னிருந்தேன்னு, அந்தப் பாவி செத்துப்போனப்பறம் பெரிய வீரனு ஆயிடுவான். அவனோட ஜனங்கள் அவனை ஒரு சாமியாக் கொண்டாட ஆரம்பிச்சுடுவாங்க. அவன் கையிலே விலங்கைப் போட்டு நடுத்தெருவிலே அவனோட ஜனங்களுக்கு முன்னாலே நடத்திக் கூட்டிக்கிட்டு வந்ததாலே அவங்களுக்கு அவன்கிட்டே மரியாதை இல்லாமப் போயிடுத்து. அதுமட்டும் இல்லே, எல்லா ராஜாக்களுக்குமே அவமானமாயிடுத்து. இப்போ கோதட்வாலா ஒரு துரும்பா ஆயிட்டான்.''

''சரி, நீங்க என்ன சொல்றீங்க?''

''அவனை உசிரோட இருக்கவிடுங்க. அவன் சர்க்கார் தயவிலே உசிரை வச்சுக்கிட்டு இருக்கட்டும். அவனைப் பார்த்து மற்ற ராஜாக்களும் அடங்கி இருப்பாங்க.''

''நான் உங்ககிட்டே புத்திமதி கேக்கல்லே.'' துரை புருவத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னான். ''ஆனா, ஒரு விஷயம் நீங்க என்னை நம்பி வாக்குக் கொடுத்தீங்க. சரி, நான் கவனிக்கறேன்!''

மகீபத்ராமுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவருடைய நெஞ்சு பூரித்தது.

''நீங்க மாறுதலுக்குத் தயாராயிருங்க'' என்றுதுரைசொன்னான்.

''ஒரு கேள்வி கேக்கலாமா?''

''கேளுங்க.''

''எங்கே மாத்தப் போறீங்க?''

''பாஞ்சாலுக்கு. தானேதாரைக் கொன்னவங்க டாங்கா மலையிலே ஒளிஞ்சுக்கிட்டு இருக்காங்க. அவங்களை நீங்கதான் பிடிக்கணும்.''

மகீபத்ராம் மௌனமாக நின்றார்.

''ஏன் பேசாம இருக்கீங்க? பயந்துட்டீங்களா?''

துரையின் கேள்வி அவருக்குக் கோபத்தை உண்டாக்கியது. அவருக்கா பயம்? அவர் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னார்: "இல்லே, என் பேரன் ஹைஸ்கூல்லே படிக்கறான். மாத்தலாகிப் போனால் அவன் படிப்பு கெட்டுப் போகும்.''

''அவ்வளவுதானே? அதுக்காகக் கவலைப்படாதீங்க! விக்ரம்பூர் தர்பார் இங்கே வரப் போறார். அவர்கிட்டே சொல்லி உங்க பேரனுக்கு ஸ்காலர்ஷிப் வாங்கித் தரேன். கவலைப்படாதீங்க, ராவ் சகேப்!''

23

மகீபத்ராம் வீட்டுக்கு வந்து மனைவியிடம் விஷயத்தைச் சொன்னார். அவள் பிநாகியிடம் செய்தியைத் தெரிவித்தாள்.

"எந்த ஊர் டாகுர்?'' என்று பிநாகி கேட்டான்.

"விக்ரம்பூரின் டாகுர்தான்! உனக்குத் தெரியாதா? பைரவ் கட்டிலே நம்ம வீட்டுக்குப் பக்கத்திலே இருந்தாரே தான்சிங் பெரியப்பா? அவரோட பெண் தேவுபாவைத் தான் டாகுர் கல்யாணம் பண்ணிக்கிண்டிருக்கார்.''

''எனக்கு ஒண்ணும் இந்த ஸ்காலர்ஷிப் வேண்டாம்'' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே பிநாகி அங்கிருந்து போய் விட்டான்.

மறுநாள் இரவு பதினொரு மணிக்குப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மகீபத்ராமின் வீட்டுக்கு வந்தார். பிநாகி தூங்கிக் கொண்டிருந்தான். அவனை எழுப்பினார்கள்.

தலைமை ஆசிரியர் கேட்டார்: "போன ஆண்டு விழாவிலே நாடகம் நடிச்சீங்களே, அதிலே அலெக்சாந்தர்—கொள்ளைக்காரன் உரையாடல் ஞாபகமிருக்கா?''

"கொஞ்சம் மனப்பாடம் செய்யணும். ஏன்?''

''இன்னி ராத்திரிக்குள்ளேயே மனப்பாடம் பண்ண முடியுமா உன்னாலே?''

''ஓ!''

"சரி, மனப்பாடம் பண்ணிடு! நாளைக்கு விக்ரம்பூர் டாகுர் நம்ம ஸ்கூலுக்கு வரார். அவரை வரவேற்க ஒரு விழா நடத்தப் போறோம். அதுக்காகத்தான்!''

பிஞகியின் உற்சாகம் மறைந்து விட்டது. அவன் கொட்டாவி விட்டான்.

"சரி, நீ போ! பாட்டியை டீ போட்டுக் குடுக்கச் சொல்லிக் குடுச்சுட்டு மனப்பாடம் பண்ண உக்காரு! உரையாடல்லே உனக்குக் கொள்ளைக்காரன் பாத்திரம். நீ நன்ஞ நடிச்சா உனக்கு ராணி கையாலே பரிசு கிடைக்கும்."

கடைசி வாக்கியத்தைக் கேட்டதும் பிஞகியின் சோர்வும் தூக்கமும் பறந்து போய்விட்டன. யாரோ தன் முகத்தில் அறைந்ததுபோல் இருந்தது அவனுக்கு.

"நான் உன்னைத்தான் நம்பிக்கிட்டிருக்கேன்" என்று தலைமை ஆசிரியர் சொன்னார்.

அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது பிஞகிக்கு.

அவர் மிகவும் கண்டிப்பானவர். கண்டிப்பில் ஜெயில் வார்டர் கூட அவரிடம் தோற்றுப் போய் விடுவான். மாணவர்கள் அவரைக் கண்டால் புலியைக் கண்டதுபோல் நடுங்குவார்கள். அவர்களுடைய முதுகுகளில் அடித்து அடித்து எவ்வளவோ பிரம்புகளை முறித்திருந்தார் அவர். மாணவர்களுக்கு அவரை நிமிர்ந்து பார்க்கக் கூடப் பயம். பதினேரு மணிக்குப் பிறகு எந்த மாணவனும் பள்ளி எல்லைக்குள் கால் வைக்க முடியாது. அவருடைய சட்டம் ராணுவச் சட்டம் மாதிரி கடுமையாக இருக்கும்.

பள்ளியின் எல்லைக்குள் மட்டும் அல்ல, அதன் அருகில்கூட யாரும் வேலையில்லாமல் சுற்றமுடியாது. பள்ளியின் காம்பவுண்டுக்கு வெளியிலிருந்து சீட்டியடித்துக் கொண்டு சென்ற மூன்று சோதாக்களை அவர் ஒரு தடவை பிரம்பால் நன்ருக உதைத்து விட்டார். போலீசாரும் அவரை மிகவும் மதித்தார்கள்.

அப்படிப்பட்ட தலைமை ஆசிரியரே இரவு வேளையில் தன்னைத் தேடி வந்ததில் பிஞகிக்குப் பெருமையாக இருந்தது. அவருடைய கௌரவம் இப்போது அவனுடைய கையில் இருந்தது.

அவன் விளக்கைப் பெரிதாக்கிக் கொண்டு உரையாடலிலுள்ள தன் பாகத்தை மனப்பாடம் செய்ய உட்கார்ந்தான்.

மகீபத்ராமுக்கும் அவருடைய மனைவிக்கும் மிகுந்த உற்சாகம், 'நாளைக்குப் பிஞகி பிரமாதமாக நடிக்கப் போகிருன். அவனுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கப் போகிறது' என்று.

இந்த உற்சாகத்தில் அவர்களுக்குத் தூக்கம் வரவில்லை. அவர்கள் தணிந்த குரலில் தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்கள்.

“பான்ஜா எவ்வளவு நன்ளு இங்கிலீஷ் பேசருன்! அவன் பாரிஸ்டராவான்!”

“இல்லே, இல்லே! நான் அவனை டாக்டராக்கப் போறேன்.”

“பான்ஜாவுக்குப் பொணத்தை அறுக்கற வேலை வேண்டாம்.”

“பாரிஸ்டர் ஆனு பான்ஜா மனுஷாளை உசிரோடேயே முழுங்கிடுவான்.”

“நாளைக்குத் தேவுபா அவனைப் பார்த்து அடையாளங் கண்டு கிண்டு அவனுக்குத் தன் ராஜ்யத்திலேயே ஒரு பெரிய வேலை கொடுத்தாலும் கொடுக்கலாம்.”

“அடி போடி பைத்தியமே! அந்தத் தேவுபா வேறே, இந்த தேவுபா வேறே!”

“நீங்க ஒண்ணு! அவளும் இவனும் ஒண்ணு விளையாடினதை மறந்துடுவாளா?”

“ஆமாமா! இந்த மாதிரி எவ்வளவோ குழந்தைகள் சேர்ந்து விளையாடருங்க.”

“அப்படியில்லே, அவளுக்குப் பான்ஜாகிட்டே ரொம்பப் பிரியம்.”

இந்த உரையாடல் தன் காதுகளில் விழாமலிருக்கும் பொருட்டுப் பிளுகி தன் பாகத்தை உரக்க உரக்கச் சொல்லிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய குரல் சுவரில் பட்டு எதிரொலித்தது. அவன் தன் பாகத்தை நடித்துப் பார்த்தபோது விலங்கு போட்ட அவனுடைய கைகளின் அபிநயம், சவால் விடும் முகம், பூரித்து விரிந்த நெஞ்சு இவையெல்லாம் சுவரில் நிழலாக விழுந்தன. பாதி திறந்திருந்த கதவின் இடுக்கு வழியே இதைப் பார்த்தவாறே மகீபத்ராமும் அவருடைய மனைவியும் தூங்கி விட்டார்கள்.

வெகு நேரம் வரையில் பிளுகி தன் பாகத்தைத் தயார் செய்து கொண்டிருந்தான். பிறகு படுக்கப் போனன். ஆனல் அப்போதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

மறுநாள் அவன் பள்ளிக்குச் செல்லுமுன் பாட்டி அவனுடைய சுருட்டை மயிரை வாரிவிட்டுக் கொண்டே சொன்னுள்: “பான்ஜா, ராணியம்மா உன்னேட பேசினு, ‘பாட்டி உங்களை எப்போதும் நினைச்சுக்கிண்டிருக்கா. அவ உங்களைப் பார்க்கணுமாம். எப்போ வரலாம்? நீங்க ஒரு தடவை எங்க வீட்டுக்கு விஜயம் பண்ணினு எங்களுக்கு மிகவும் சந்தோஷமா இருக்கும்’னு சொல்றியா? எல்லாம் இப்போ உன் கையிலே இருக்கு, புரிஞ்சுதா?

''ஆமா, அவனை வீட்டுக்குக் கூப்பிடணுமாக்கும்!'' என்று முணு முணுத்துக்கொண்டே பிஞகி சைக்கிளில் புறப்பட்டான். பாட்டி வீட்டு வராந்தாவிலிருந்து அவன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்ருள். கறுப்புநிறக் குதிரை வண்டிகளுக்கு நடுவில் வெள்ளை நிறக் கோட்டும் கால்சராயும் அணிந்துகொண்டு அவன் லாகவ மாகச் சைக்கிளை ஓட்டிக்கொண்டு போஞன். ராஜ்கோட் நகரத்தில் புழக்கத்திலிருந்த அந்த உடுப்பு அவனுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

ஜூபிலி பார்க் ஓரத்தில் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரர்கள் பிஞகிக்குச் சலாம் வைத்தார்கள். அவர்களுக்கு ராவ் சாகேப் மகீபத்ராமிடம் மிகவும் மரியாதை இருந்தது. ''பான்ஜா தன் தாத்தாவை மிஞ்சிவிடுவான்; அவன் பரீட்சை பாஸ் செய்துவிட்டு நேரே பௌஜ்தாராக ஆகிவிடுவான்'' என்றெல்லாம் அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

''இந்த ஆறு மாசத்திலே பையன் வாட்டசாட்டமா வளர்ந்துவிட்டான்.''

''அவனுக்கு அநுக்கிரகம் இருக்கு.''

''யாரோட அநுக்கிரகம்?''

''ரூக்கட் தேவதையோட...''

''ரூக்கட் தேவதையா?''

''தூக்கிலே செத்துப் போஞரே, ரூக்கட்சேட்? அவர் இப்போ தேவதையாயிட்டார். அவருக்கு இந்தப் பையன் மேலே மிகவும் பிரியம். அவர் தினம் தன்னுடை குதிரையைக் கூட்டிக் கிட்டு ஆலமரத்தடிக்கு வராராம், இவனுக்குக் குதிரைச் சவாரி கத்துக் கொடுக்கருராம்.''

''அதெல்லாம் வெறும் வதந்திதான். ரூக்கட் சேட்டோட பெண்சாதி ரெண்டு மூணு தடவை இவனைப் பார்க்க வந்தா; இவனை எங்கேயோ கூட்டிகிட்டுப்போனு; அவ்வளவுதான்!''

''அவ இப்பக் கொள்ளையடிக்க ஆரம்பிச்சுட்டாளாமே?''

''ஆமா! அவ பெரிய துரைக்கே எச்சரிக்கை கொடுக்கரு, 'ஜாக்கிரதை! உன் நெஞ்சு மேலே ஏறி உக்காந்து உன்னைக் கொல்லப்போறேன்'னு!''

''துரைக்கு நல்லா வேணும்.''

''ஏன், அவ கிட்டேயும் வாலாட்டினுனு?''

''அப்படித்தான் கேள்வி. நம்ம சூப்பரண்டுகிட்டேயிருந்து ஒரு கடிதம் வாங்கிக்கிட்டு அவ தொரையைப் பார்க்கப் போனுளாம். தொரை அவளோட அழகிலே மயங்கிப் போய், அவளைத் தனியா

வரச்சொல்லி, அவளைக் கெடுக்கப் பார்த்தானும். அவ அவனைப் பழிவாங்க சமயம் பார்த்துக்கிட்டு இருக்காளாம்.''

''வெள்ளைக்காரங்களுக்குக் கெட்ட காலம் வந்துடுத்து. பிசாசு விடுதியிலே கும்மாளம் போடறுங்க! அது போதாதுன்னு ஊர்மேலேயும் மேயறுங்க.''

''உஸ்! பேசாதே!''

'பிசாசு விடுதி' என்பது அந்தக் காலத்தில் ராஜ்கோட்டில் ஒரு பயங்கரமான, மர்மம் நிறைந்த வார்த்தை. ஜனங்கள் 'ஃப்ரீ மேஸன் லாட்ஜை'த்தான் 'பிசாசுவிடுதி' என்று அழைத்தார்கள். அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு லாட்ஜ் கத்தியவாரில் இருந் திருக்கலாம். அங்கு என்ன நடக்கிறதென்று வெளியிலுள்ளவர் களுக்குத் தெரியாது. அதன் நடவடிக்கைகள் அவ்வளவு ரகசிய மாக இருந்தன. ஏஜென்சியைச் சேர்ந்த பெரிய பெரிய அதிகாரிகள், துரைமார்கள், ராஜாக்கள் முதலியோர் அதில் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நாளில் அங்கே கூடுவார்கள். லாட்ஜுக்கு வெளியே கடுமையான காவல் இருக்கும். அப்போதெல்லாம் காவலிருப்பவர்களின் மனத்தில் உள்ளே நடக்கும் மர்மங்களைப் பற்றிப் பல பயங்கரக் கற்பனைகள் உதிக்கும். பிசாசு விடுதியில் பல ஆபாசமான காரியங் கள் நடப்பதாகவும் அவற்றை வெளிப்படுத்துபவர் யாராயிருந் தாலும் அவருடைய தலை வெட்டப்படுமென்றும் சொல்லிக் கொண்டார்கள்.

ஆகவே பிசாசு விடுதியைப் பற்றிப் பேசவே எல்லாரும் பயப் பட்டார்கள்.

அப்போது குதிரை வண்டியின் அரவம் கேட்கவே பேசிக் கொண்டிருந்த சிப்பாய்கள் உஷாரானுர்கள். நான்கு குதிரை களும் ரப்பர்ச் சக்கரங்களும் பூட்டிய வண்டி வந்து கொண்டி ருந்தது. சாலையில் குதிரைக் குளம்புகள் மிருதங்கம் வாசித்தன. வண்டிக்கு முன்னும் பின்னும் அணிவகுத்துச் சென்ற குதிரை வீரர்களின் பல நிறச் சீருடைகள், இடுப்பில் தொங்கிய பிச்சுவாக் கள், அவர்களுடைய கைகளில் பளபளத்த ஈட்டிகள், குதிரை களின் இருபக்கங்களிலும் தொங்கிய இரும்பாலான கால்பிடிகள் ஆகியவையெல்லாம் அழகான காட்சியாக இருந்தன.

வண்டி போன பிறகு சிப்பாய்கள் ஒன்றுகூடிப் பேசத் தொடங் கினர்கள்.

''விக்ரம்பூர் டாகுர்!''

''புது ராணி!''

"புது ராணி பர்தா போட்டுக்கறதில்லே!"

"தேவு பாவோட தோற்றமே மாறிப்போச்சு!"

"இதுக்குத்தான் ராஜபோகம்னு பேரு!"

"ராஜா கிழவனுயிருந்தா என்ன, ராஜபோகம் கிழடு இல்லேயே?"

"இவளேப் பார்த்தா மனுஷி மாதிரியா இருக்கா? தேவலோகத்து ரம்பை மாதிரின்னு இருக்கா? முன்னுலே கோதுமை நிறமா இருந்தா. இப்போ என்னடான்னு கன்னமெல்லாம் ரோஜாப்பூ மாதிரி இருக்கு! ஹா ஹா ஹா..." என்று சிரித்தான் ஒரு சிப்பாய்.

"அது சரி, நீ ஏன் இப்படிப் பெருமூச்சு விடறே?"

"எல்லாம் அவனவன் அதிர்ஷ்டம்!" என்று சொல்லித் தலேயில் கையை வைத்துக் கொண்டான் முன்னுல் பேசியவன்.

ராஜாவின் பரிவாரம் ஹைஸ்கூல் மைதானத்தை நோக்கித் திரும்பியது.

இந்தச் சமயத்தில் ஒப்பனே யறையில் உட்கார்ந்திருந்த பினுகியின் உள்ளத்தில் ஒரு பூகம்பம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

24

பள்ளியின் நடு ஹாலில் ஓர் ஓரத்தில் மேடை அமைக்கப்பட்டது. நகரத்திலிருந்த ஒரு நாடக சபையிலிருந்து இரவல் வாங்கப்பட்ட திரை ஒன்று அதன்மேல் தொங்கவிடப்பட்டது.

ஹாலின் வலப்பக்கத்தில் மேடைக்கருகில் விசேஷ விருந்தினர்களுக்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

நடுவில் இரண்டு பெரிய அலங்கார நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. விக்ரம்பூர் டாகுரும் ராணியும் வந்து அவற்றில் உட்கார்ந்து கொண்டார்கள்.

இதைப் பார்த்துத் தலேமையாசிரியருக்குக் கவலே ஏற்பட்டுவிட்டது. அவர் அவை ஒன்றில் பெரிய துரையை உட்கார வைக்க நினேத்திருந்தார்.

அவர் சற்றுத் தயங்கிவிட்டு மெதுவாக டாகுர் சாகேபிடம் சென்று கிசுகிசுத்தார், "பெரிய துரையும் வரப்போகிருர்" என்று.

''அப்படியா!'' என்று சொல்லிவிட்டு டாகுர் உடனே எழுந்து போய் ராணியின் மறுபக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். பெரிய துரையின் பெயரைக் கேட்டு அவர் மகிழ்ந்தார். பெரிய துரையின் பெயரைக் கேட்டு அவர் மகிழ்ந்தாரா அல்லது பயப் பட்டாரா என்று தெரியவில்லை. அடர்ந்த தாடியையும் அழகான மீசையையும் கையால் கம்பீரமாக நீவி விட்டுக் கொண்டிருந்த அந்த ராஜபுத்திர வீரர் பெரிய துரையின் பெயரைக் கேட்டதுமே சற்றுக் களையிழந்துவிட்டார்.

பின் பக்கத்து வரிசையில் உட்கார்ந்திருந்த ஒருவர் டாகுரிடம் ஏற்பட்ட இம்மாறுதலைக் கவனித்துச் சிரித்துக் கொண்டார். அவர் முரட்டுத் துணியாலான வெள்ளையுடுப்பும், உயரமான வெண்ணிறத் தொப்பியும், ஒக்காப் பாணியில் செய்யப்பட்ட மிருதுவான செருப்பும் அணிந்திருந்தார். அவருடைய ரோஜா நிறமுகத்தில் வெயிலிலும் குளிரிலும் உழைத்த அடையாளம் தெளிவாகத் தெரிந்தது.

அவர் சற்றுப் பலமாகவே சிரித்துவிட்டுக் கூடவே ஓர் ஆழ்ந்த பெருமூச்சும் விட்டார். ஆழ்ந்த கிணற்றிலிருந்து கமலையில் எடுக்கப்பட்ட தண்ணீர் தரையில் விழும்போது ஏற்படுத்தும் ஒலியை ஒத்திருந்தது அந்தப் பெருமூச்சின் ஒலி.

டாகுர் சாகேப் பின்பக்கம் திரும்பிப் பார்த்தார். பின்னுலிருந் தவர் எழுந்து நின்று கை கூப்பினுர்.

''ஓ!'' டாகுர் சாகேப் அவரை நினைவு படுத்திக் கொள்ள முயற்சி செய்தார். ''நீங்க சுரேந்திரதேவ்ஜி இல்லே?''

''ஆமா, சுரேந்திரதேவ்தான்.''

டாகுர் சாகேப் அவருடன் கைகுலுக்கினுர். அப்போது அவ்விரு வருடைய நடையுடை பாவனைகளிலிருந்த வேற்றுமை தெளிவாகத் தெரிந்தது.

டாகுர் சாகேப் பட்டாலான, பளபளக்கும் உடையும், தோளில் பூணூலைப் போல் ஜரிகை அங்கவஸ்திரமும், கால்களில் பாலிஷ் செய்த ராணிமார்க் பூட்சும், தலையில் ஜரிகைக் கரை போட்ட ரோஜா நிறத் தலைப்பாகையும் அணிந்திருந்தார். அவருடைய வெள்ளைத் தாடி இந்த அலங்காரத்துக்குப் பொருத்தமாக இல்லாததால் அவர் தாடிக்குச் சாயம் தடவியிருந்தார்.

டாகுர் சற்று ஏளனமாகக் கேட்டார். ''சுரேந்திர தேவ்ஜி! என்ன இப்படி ஒரேயடியா மாறிட்டீங்களே! சந்நியாசம் வாங்கிக்கப் போறீங்களா?''

"இல்லே, டாகுர் சாகேப்! இப்பத்தானே இளமையை அனுபவிச்சுக்கிட்டிருக்கேன்."

இதைக் கேட்டு ராணி திரும்பிப் பார்த்தாள். டாகுர் சாகேப் அவளுக்குச் சுரேந்திரதேவை அறிமுகப்படுத்தி வைத்தார். "இவர் தான் கடீபேடியோட ராஜா சுரேந்திர தேவ்ஜி!"

"அப்படியா, ரொம்பச் சந்தோஷம்!" என்று சொல்லிவிட்டு ராணி தன் புடைவைத் தலைப்பையும், தலையில் வகிட்டுக்கு இரு புறமும் இருந்த மயிரையும் கையால் சரி செய்து கொண்டாள்.

"எனக்கு இவங்களைத் தெரியும்" என்று சுரேந்திரதேவ் சொல்லியதைக் கேட்டு டாகுர் சாகேப் திடுக்கிட்டார்.

"எப்படித் தெரியும்?"

"இவங்களோட அப்பா பைரவ் கட்டிலே போலீஸ் ஹவில்தாரா இருந்தார். அவரை அங்கேயிருந்து மாத்தினபோது அவருக்கு நம்ம ரங்க்பூர் கிராமத்திலிருந்து சில வண்டிகள் தேவைப்பட்டன. ஆனா அவர் மாமூல்படி அதுக்குக் காசு கொடுக்க இஷ்டப்படல்லே. அந்தச் சமயம் ஒரேயடியா மழையும் கொட்டிக்கிட்டு இருந்தது. ஆகையாலே அவர் நம்ம விருந்தாளி விடுதியிலே மூணு நாள் தங்க வேண்டியதாய்ப் போச்சு."

ராணி வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

டாகுர் சாகேபுக்கு இந்தப் பேச்சு மிகவும் சங்கடமாக இருந்தது. அவர் பேச்சை மாற்ற முயற்சி செய்தார்.

இதற்குள் அங்கே கூடியிருந்த மக்கள் எல்லாரும் ஒருவரோடொருவர் குசுகுசுவென்று பேசிக்கொள்வது கேட்டது.

துரையின் கம்பீரமான தேகம் படிகளில் ஏறி வந்துகொண்டிருந்தது. மேஜர் பதவி பெற்றிருந்த அவனுடைய வருகை பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே வந்து கொண்டிருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது. அவனுடைய பாதித் தலை வழுக்கையாக இருந்தது.

அவனைப் பார்த்ததும் டாகுர் சாகேப் எழுந்து நின்று அவனுடன் கை குலுக்கினார். அவர் இடுப்புவரை குனிந்துகொண்டு நின்றார்; துரையோ நிமிர்ந்தே நின்றான்.

"ஹலோ, யுவர் ஹைனஸ் ராணி சாகேபா! நீங்க பர்தா வழக்கத்தை விட்டுட்டீங்கன்னு கேள்விப்பட்டேன். ரொம்பச் சந்தோஷம்!" என்று சொல்லிக்கொண்டே துரை தேவ்பாவுடன் கைகுலுக்கினான். ராணி வேறு வழியில்லாமல் தன்னுடைய கையை அவனுடைய கையில் வைத்தாள்.

துரை அவளுக்கு மறுபக்கம் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அவனுக்கும் டாகுருக்குமிடையே இருந்த வித்தியாசம் நன்ருகத் தெரிந்தது. இருவரும் நல்ல ஆஜானுபாகுவாகவே இருந்தார்கள். ஆனுல் டாகுர் பட்டு ஜரிகைத் துணியாலான ஒரு மூட்டை போலக் காணப்பட்டார். துரையோ அதிகாரத்தின் தங்கத் தூண்போல் கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்திருந்தான்.

துரை ஓரக்கண்ணுல் பின்பக்கம் பார்த்தான். சுரேந்திரதேவைக் கண்டதும் அவனுடைய முகத்தில் சுருக்கங்கள் தோன்றின.

நாடக மேடையின் திரை விலகியது. முதலில் குஜராத்தின் மகாகவியால் இயற்றப்பட்ட 'ராஜேந்திர தேவ்' என்ற பாட்டுப் பாடப்பட்டது. டாகுர் சாகேபின் கைகள் தாமாகவே கூப்பிக் கொண்டன.

இந்தப் பிரார்த்தனைப் பாட்டு நடந்து கொண்டிருந்தபோது துரையும் சுரேந்திரதேவும் ஏதோ பேசிக்கொண்டார்கள். துரையின் முகத்தில் கோபத்தை உணர்த்தும் ரேகைகள் தோன்றின. துருத்தியை அமுக்கினுல் உலையிலிருந்து தீப்பொறிகள் பறப்பதைப் போல் அவர்களுடைய பேச்சில் 'கேக்டஸ்' என்ற வார்த்தை நிறைய அடிபட்டது.

சப்பாத்திக் கள்ளிக்கு ஆங்கிலத்தில் 'கேக்டஸ்' என்று பெயர்.

அந்தக் காலத்தில் சௌராஷ்டிரத்தில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டிருந்தது. புல்லோ, வேறு தீனியோ இல்லாமல் பட்டினி கிடந்த கால்நடைகளுக்குச் சப்பாத்திக் கள்ளியைத் துண்டு துண்டாக்கிக் கொடுக்கலாம் என்று யாரோ துரைக்கு யோசனை சொல்லியிருந்தார்கள்.

துரை சுரேந்திரதேவிடம் பிடிவாதமாகச் சொல்லிக்கொண்டிருந்தான்: "நீங்க கால்நடைகளுக்குக் கேக்டஸ் போட்டாலும் போடாவிட்டாலும் போட்டதாக ரிப்போர்ட் கொடுக்கத்தான் வேணும்!"

"நான் ஏன் பொய் ரிப்போர்ட் கொடுக்கணும்?"

"முட்டாள்...!" போன்ற வசவுகள் துரையின் பேச்சினிடையிடையில் வந்து விழுந்தன, நிறுத்துக் குறிகள் போல.

சுரேந்திர தேவும் அடங்கிப் போகவில்லை. அவருடைய முகத்தில் எதிர்ப்பும் கோபமும் பிரதிபலித்தன.

துரை இப்போது சப்பாத்திக்கள்ளியை விட்டுவிட்டு வேறொரு விஷயத்தைப் பிடித்துக்கொண்டான்.

"உங்க பையன் எங்கே படிக்கிருன்?"

"கிராமத்துப் பள்ளிக்கூடத்திலே."

''ராஜாக்களோட பிள்ளைகள் படிக்கிற பள்ளிக்கூடத்துக்கு அவனை ஏன் அனுப்பல்லே?''

''அவ்வளவு வயசாகலியே என் பையனுக்கு'' என்று பதில் சொன்னார் சுரேந்திரதேவ். இந்தப் பதிலில் ஏளனம் தொனித்தது.

''இருக்கட்டும், கவனிச்சுக்கறேன்!'' என்று பல்லைக் கடித்துக் கொண்டான் துரை.

அவர்களிடையே என்ன தகராறு என்று ராணிக்குப் புரியவில்லை.

திடீரென்று துரையின் காதில் விழுந்தது—

''ஐ ஏம் எ த்ரேஷியன் அண்ட் எ சோல்ஜர்...''

துரை திகைத்துப் போய்த் தலைநிமிர்ந்து பார்த்தான்.

நாடக மேடையிலிருந்து வந்து கொண்டிருந்த வார்த்தைகள் அவை. நல்லவேளை, நிஜசம்பவம் அல்ல!

மேடையில் அலெக்சாந்தர்—கொள்ளைக்காரன் உரையாடல் நடந்து கொண்டிருந்தது.

அலெக்சாந்தர் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறான். பின்னால் தொங்கிக் கொண்டிருந்த அவனுடைய நீண்ட மேலாடையைத் தூக்கிக்கொண்டு எட்டுப் பையன்கள் நிற்கிறார்கள். சிம்மாசனத்துக்கு முன்னால் கிழிந்த உடையணிந்த ஓர் இளைஞன் சங்கிலிகளால் கட்டப்பட்டு நிற்கிறான். அவன் தன் ஒரு காலை முன்னால் வைத்திருக்கிறான். அவனுடைய விசாலமான மார்பும் முன்னேறத் துடிக்கிறது.

''நீதானா அந்தக் கொள்ளைக்காரன்?'' அலெக்சாந்தர் கேட்கிறான்.

''நான் த்ரேஸ் நாட்டின் குடிமகன், நான் ஒரு சிப்பாய்!'' என்று பதில் கம்பீரமாக வருகிறது.

நடிகர்கள் தங்கள் நடிப்பால் சபையிலிருந்தவர்களைக் கவர்ந்தார்கள். நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் எல்லோருடைய சுயமரியாதை உணர்வும் மேடைமேல் உருவெடுத்து நிற்பதாகவும் தங்கள் உள்ளங்களில் உறங்கிக் கிடந்த உணர்ச்சிகள் அந்தச் சிப்பாயின் வாயிலிருந்து வெளிப்படுவதாகவும் நினைத்தார்கள்.

துரைக்கு ரொம்ப மகிழ்ச்சி. அவன் கேட்டுக்கொண்டிருந்த உரையாடலில் ஆங்கில மொழியின் துறுதுறுப்பையும் உயிரோட்டத்தையும் கண்டான். 'இந்த அடிமை நாட்டு மக்களுக்குக்கூட எவ்வளவு உணர்ச்சி உண்டாக்கிவிட்டது நம்ம பாஷை! செத்துப் போனவங்களுக்குக்கூட இங்கிலீஷ் உயிர்

கொடுத்துவிடும்! ஆகா, நம்ம பாஷையே பாஷை! நம்ம இலக்கியமே இலக்கியம்!'

ஆனால் கொஞ்ச நேரத்திலேயே அவனுடைய இந்த மகிழ்ச்சி மறைந்துவிட்டது. அவனுக்கு நாடகம் பிடிக்கவில்லை. கொள்ளைக் காரன் பாத்திரம் வெளிப்படுத்திய உணர்ச்சிப் பெருக்கு அவனைப் பயப்படச் செய்தது. 'இப்போது இத்தகைய உணர்ச்சிகளை நாடகத்தில் வெளிப்படுத்தும் மக்கள் ஒரு நாள் நிஜ வாழ்க்கையிலேயே வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டால்? நாம் ஊட்டிய வெறியே பிற்காலத்தில் நமக்கெதிராகச் செயற் படுமோ?' இத்தகைய எண்ணங்கள் துரையின் மனத்தில் தோன்றின. அவனுக்கு இப்போது கொள்ளைக்காரனின் தைரியம் பிடிக்கவில்லை.

அவன் வெறும் ராணுவ அதிகாரியாக மட்டும் இருந்திருந்தால் அவனுக்கு இந்தப் பயம் தோன்றியிருக்காது. அரசாங்க நிர்வாக அதிகாரியாகவும் இருந்ததால் அவனால் இப்படியெல்லாம் நினைக்காமல் இருக்க முடியவில்லை. எதிர்காலத்தைப் பற்றிய கவலை அவனைப் பிடித்துக்கொண்டது. நாடகத்தை அப்படியே நிறுத்திவிட்டு எழுந்து போய்விடலாமா என்றுகூடத் தோன்றியது அவனுக்கு.

ஆனால் எப்படி நிறுத்த முடியும்? முன்னால் இருந்த பொலிடிகல் ஏஜெண்டுகளாக இருந்த வெள்ளைக்காரர்கள்தாமே இந்த மாதிரி நாடகங்கள் நடத்தும் வழக்கத்தை ஆரம்பித்தவர்கள்! அவர்கள் தாம், தாங்கள் அறியாமலேயே இந்த நாட்டுமக்களுக்குச் சுதந்தர போதையை ஊட்டிவிட்டார்கள்! இதை எப்படி நிறுத்துவது?

இவ்வாறு நாடகத்தின் இடையிலேயே எழுந்து போக நினைத்துக் கொண்டிருந்த துரையிடம் ஒருவன் வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு போனான். அதைப் படித்ததும் அவனுடைய முகத்தோற்றம் மாறிவிட்டது. அவனிடம் சற்றுமுன் தோன்றிய எரிச்சலும் பயமும் மறைந்துவிட்டன. அவன் அடிக்கடி பின்பக்கம் திரும்பிச் சுரேந்திரதேவுடன் மிகவும் சௌஜன்யமாகப் பேசினான். டாகுர் சாகேபிடமும் அவன் மிகவும் பிரியமாக நடந்து கொண்டான். அவனுடைய முகம் கிரகணத்திலிருந்து விடுபட்ட சூரியன்போல் ஒளிவீசியது.

அவனிடம் ஏற்பட்ட இத்தத் திடீர் மாறுதலுக்குக் காரணம் டாகுர் சாகேபுக்கும் சுரேந்திரதேவுக்கும் புரியவில்லை. ராணியோ இதையெல்லாம் கவனிக்கவேயில்லை. அவளுடைய பார்வை மேடையின்மேலேயே நிலைத்திருந்தது. கொள்ளைக்காரனாக நடித்த

பையனின் தோற்றமும் அவன் பேசிய உணர்ச்சிகரமான பேச்சும் அந்த ராஜபுத்திர அழகியைக் கவர்ந்தன.

"என்னை மன்னிக்கணும், டாகுர் சாகேப்! ஒரு அவசர வேலையாப் போக வேண்டியிருக்கு. நான் வரேன்" என்று சொல்லிக் கொண்டே துரை எழுந்தான். சுரேந்திர தேவைப் பார்த்து, "அப்புறம் சந்திக்கலாம்" என்றான்.

டாகுரும் சுரேந்திரதேவும் எழுந்து நின்று அவனுக்கு விடை கொடுத்தார்கள்.

பிறகு பரிசுகள் வழங்கப் பட்டன. பரிசு வாங்கிக் கொள்பவர்கள் ராணியின் கையிலிருந்து அதைப் பெறுவதற்கு முன்னும் பின்னும் ராணிக்கு வணக்கம் செலுத்த வேண்டுமென்றும் அப்படிச் செய்யாதவர்களுக்குப் பிரம்படி கிடைக்குமென்றும் தலைமை ஆசிரியர் முன்னதாகவே எச்சரிக்கை செய்திருந்தார்.

பிஞகி தான் முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுப்பட்டான். அவன் உற்சாகமில்லாமல் ராணி சாகேபாவுக்கு முன்னால் வந்து அவளுக்கு வணக்கம் செலுத்தாமல் மரம்போல் நின்றான். குண்டூசியால் அட்டையின் மேல் குத்தி வைக்கப்பட்ட வண்ணத்துப் பூச்சிபோல் அவனுடைய பார்வை அவளுடைய முகத்தில் பதிந்திருந்தது.

அவனுக்குப் பரிசு கொடுப்பதற்காக இரண்டு அழகிய கரங்கள் முன்னே நீண்டன. அவற்றைத் தன்னையறியாமல் தொட்டுவிடுவோமோ என்ற பயத்தில் பிஞகி பரிசை வாங்கிக் கொள்ளாமலேயே திரும்பி விட்டான்.

விழாவின் குதூகலம் கெட்டுப் போய்விட்டது. தலைமை ஆசிரியரின் கையில் பிரம்பு படபடத்தது.

எல்லாப் பரிசுகளும் வழங்கப்பட்ட பிறகு சுரேந்திரதேவ்ஜி சொற்பொழிவாற்ற அழைக்கப் பட்டார்.

"மாணவர்களே! இப்போது சக்கரவர்த்திக்கும் கொள்ளைக்காரனுக்குமிடையே நிகழ்ந்த சம்பாஷணையைக் கேட்டீர்கள். இதிலிருந்து கிடைக்கும் படிப்பினையை நீங்கள் மறந்து விடக் கூடாது. சக்கரவர்த்திகள் எப்போதும் இப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் செய்யும் கொடுமைகளே சாதாரண மனிதர்களையும் கொள்ளைக்காரர்களாக மாறத் தூண்டுகின்றன. ராஜாக்களாகிய நாங்கள்—சிறியவர்களானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி—இந்த அலெக்சாந்தரின் வெவ்வேறு அவதாரங்கள்தான். ஆகவே இந்த மாதிரி வாய்ப்பு ஏதாவது ஏற்பட்டால் நீங்களும் தலை நிமிர்ந்து சொல்ல வேண்டும், "நாங்கள் கொள்ளைக்காரர்கள் அல்ல! நாங்கள் இந்தியர்கள்! உண்மையான சிப்பாய்கள்" என்று.

மாணவர்கள் கையொலி எழுப்பி அவர் பேச்சை வர வேற்ருர்கள்.

தலைமை ஆசிரியரின் முகம் கோபத்தில் சிவந்து போய்விட்டது.

விக்ரம்பூர் டாகுர் சொற்பொழிவாற்ற இசையவில்லை. கூட்டம் ஒரு வழியாக முடிந்து விட்டது.

தலைமை ஆசிரியர் ராணியிடம் சென்று பையனின் பணி வின்மைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். "பையன் பயந்து போய் விட்டான்" என்று விளக்கம் சொன்னுர் அவர்.

"அந்தப் பையன் யார்?" என்று ராணி கேட்டாள். தன்னுடைய காணுமற் போன ஜோடியைத் தேடும் பெண் புருவின் மன நிலையில் இருந்தாள் அவள்.

"அவன் ஒரு போலீஸ் அதிகாரியின் பேரன். மற்றப்படி மிகவும் கெட்டிக்காரன்."

ராணி வேறெதுவும் கேட்காமல் வண்டியை ஓட்டச் சொன்னுள். பள்ளியின் குறுகலான வாயிலிலிருந்து கிளம்பிய குதிரைகள் தண்ணீரின் ஓரத்தில் வண்டியை இழுத்துச் செல்வதைக்கூட அவள் கவனிக்கவில்லை. டாகுர் சாகேப் ஏதோ சொல்லிக் கொண்டிருந் ததும் அவள் காதில் விழவில்லை.

தலைமை ஆசிரியர் தரையைப் பலமாக உதைத்துக் கொண்டே பள்ளிக்குள் நுழைந்தார். நுழைந்ததுமே சற்றும் தாமதிக்காமல் பினுகியின் மேல் பிரம்படிகளைப் பொழியத் தொடங்கினுர்.

25

தலைமை ஆசிரியருக்கு முதலில் இருந்த தயக்கமும் பிரம்பால் சில அடிகள் அடித்த பிறகு பறந்தோடி விட்டது. அவர் சற்றும் தளராமல் அவனை அடித்துக் கொண்டே இருந்தார். ஓடுகிற ரெயில் வண்டியின் வேகம் தாஞகவே அதிகரிப்பதுபோல் அவ ருடைய அடிகளும் பலத்துக் கொண்டே போயின. அடிக்கும் ஆவேசத்தில் எந்த இடத்தில் அடிக்கிறேமென்ற உணர்வு கூட இல்லை அவருக்கு.

பினுகி முதலில் அடி வாங்கும்போது சற்றுப் பின் வாங்கினுன். அடியைத் தன் கையால் தடுத்துக் கொள்ளக்கூட விரும்பினுன். ஆனல் மறுகணமே அவனிடம் எஃகின் உறுதி பிறந்து விட்டது.

அவன் நன்ருக நிமிர்ந்து கொண்டு அடிகளை வாங்கிக் கொள்ளத் தொடங்கினுன். தன்னுல் எவ்வளவு அடிகளைத் தாங்கிக்கொள்ள முடியும் என்று சோதித்துக் கொள்ள விரும்பியவன் போல அடிகளை ஏற்றுக் கொண்டான் அவன்.

மாணவர்கள் அங்கே கூட்டங் கூடி விட்டார்கள். கூட்டத்தைப் பார்த்ததும் தலைமை ஆசிரியருக்கு வெறி அதிகமாகி விட்டது. மாணவர்களுக்குப் பிஞகியிடம் அநுதாபம் ஏற்பட்டது. தலைமை ஆசிரியரிடம் ஏற்பட்ட கோபத்தில் அவர்களுடைய முகங்கள் சிவந்தன. அந்தப் பிஞ்சு உள்ளங்களில் தலைமையாசிரியரைத் துண்டுத் துண்டாக வெட்டி விட வேண்டுமென்ற ஆத்திரம் ஏற்பட்டது. அடிகளைப் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த பிஞகி அவர்களுடைய கண்களுக்கு ஒரு யோகியாகத் தென்பட்டான்.

அப்போது ஒரு குரல் கேட்டது, "சபாஷ்!" என்று.

தலைமையாசிரியர் திரும்பினுர்: "சபாஷ் சொன்னது யாரு?"

"நான்!" என்று ஹிப்பி ஒருவன் முன்னே வந்தான்.

"நான்தான்!" என்ருன் இன்னொருவன்.

மூன்ருமவன், "இல்லே, நான்தான்!" என்ருன்.

இவ்வாறு 'நான், நான்' என்ற ஒலிகள் ஹால் முழுவதும் சில் வண்டின் ரீங்காரத்தைப் போல் ஒலித்தன.

"போக்கிரிப் பயல்களா!" என்று கத்திக் கொண்டே கூட்டத்தின் மேல் பாய்ந்தார் தலைமையாசிரியர்.

இதைப் பிஞகியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லே. அவன் உடனே அவருக்கும் கூட்டத்துக்கும் நடுவில் தூண் போல் வந்து நின்று கொண்டு கூட்டத்தின் மேல் விழவிருந்த பிரம்பைத் தன் கையால் பிடித்துக் கொண்டான்.

தலைமை ஆசிரியர் அவனைத் தள்ளிவிட்டுச் சட்டென்று பிரம்பை இழுத்துக் கொண்டார்.

அவர் இழுத்த இழுப்பில் அவனுடைய உள்ளங்கையின் தோல் கிழிந்து அதிலிருந்து ரத்தம் வர ஆரம்பித்து விட்டது. பிஞகி உடனே மற்ருெரு கையால் பிரம்பைப் பிடுங்கி அதைப் பல் குச்சியைக் கிழிப்பது போல் இரண்டாகக் கிழித்தெறிந்து விட்டு மார்பின்மேல் கைகளைக் கட்டிக் கொண்டு தலைமையாசிரியருக்கு எதிரே நின்ருன்.

மாணவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். சில ஆசிரியர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். ஒரு போக்கிரிப் பையன்

அவர்களை எச்சரித்தான். ''உங்க மரியாதையைக் காப்பாத்திக் கணும்ணு விலகியே இருங்க! கிட்டே வராதிங்க!''

நானூறு மாணவர்களை அடக்கத் தேவையான மனோபலம் அந்த ஆசிரியர்களுக்கு இருந்தால்தானே? அவர்கள் கூலிக்கு மாரடிப் பவர்கள், டியூஷனுக்காக ஆலாய்ப் பறப்பவர்கள். சிலர் தலைமை ஆசிரியருக்குப் பின்னால் நின்று கொண்டு அவரை அவமானப்படுத் தும்படி மாணவர்களைத் தூண்டிக் கொண்டிருந்தார்கள்.

தலைமையாசிரியர் இப்போது வெறுங்கையாலேயே பிணுகியைக் கன்னத்தில் அறையத் தொடங்கினார். பிணுகி அந்த அறைகளை அமைதியுடன் பொருத்துக் கொண்டு சொன்னான். "என்னை மட்டும் உங்க இஷ்டப்படி அடியுங்க, ஸார்!''

இதைக் கேட்டதும் தலைமையாசிரியருடைய முகம் அவமானத் தால் குன்றிப் போய் விட்டது. பூனை பாத்திரத்திலிருக்கும் நெய்யை நக்கிச் சாப்பிட்டு விடுவதைப்போல் அவருடைய நீசத் தனம் அவருடைய பெருமைகளையெல்லாம் அழித்துவிட்டது. அவர் தலை குனிந்து கொண்டு தம் ஆபீசை நோக்கி நடந்தார். ஒரு பிண ஊர்வலத்தில் செல்பவர்களைப்போல் மற்ற ஆசிரியர்கள் அவரைப் பின் தொடர்ந்து சென்றார்கள்.

பிணுகி தன் மனோபலத்தால் கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு தள்ளாடியவாறே வெளியே வந்தான். சில மாணவர்கள் அவனுடைய கோட்டின் காலரைச் சரிசெய்தார்கள்; வேறு சிலர் அவனுடைய முதுகையும் தோளையும் தட்டிக் கொடுத்தார்கள்.

"உனக்கு என்ன வந்துடுத்து? நீ ஏன் அப்படி அங்கே போய் நின்னுட்டே?'' என்று ஒருவன் கேட்டான்.

"எனக்கே தெரியல்லே'' என்று பதில் சொன்னான் பிணுகி.

''நீ ஹெட்மாஸ்டர் மேலே கேஸ் போடு! உன்னோட தாத்தா தான் பௌஜ்தார் ஆச்சே! ரெண்டு போலீஸ்காரங்களை விட்டு அவரை நன்னா உதைக்கச் சொல்லு!''

"அவரைப் பழிவாங்கணும்!"

''நீ ஏன் பதில் பேசாமே பிரம்படி வாங்கிக்கிட்டே இருந்தே? 'ஏன் என்னை அடிக்கிறீங்க'ன்னு கேட்கக் கூடாதா?''

''கேட்டு என்ன பிரயோசனம்?''

"நான் மட்டும் ஜட்ஜாயிருந்தா இந்த ஹெட்மாஸ்டர்களை யெல்லாம் ஜெயில்லே போட்டுடுவேன்.''

''நானாயிருந்தா அவங்கமேலே வெல்லத் தண்ணியைத் தெளிச்சு எறும்புகளை ஏவிவிட்டுடுவேன்!"

எழுதத் தகுந்ததும் தகாததுமான பல வார்த்தைகளை உபயோகித்துப் பேசிக்கொண்டே பையன்கள் சாலையில் நடந்தார்கள்.

சுரேந்திரதேவ் சாலை ஓரத்தில் யாருடனோ பேசிக்கொண்டிருந்தார்.

அவர் மாணவர்களிடம் சொன்னார், ''பையன்களா, சண்டை ஆரம்பிச்சுடுத்து!''

''எங்கே?''

''குரங்குகளோட தேசத்திலே.''

பையன்களுக்குப் புரியவில்லை. அவர் விளக்கினார், ''ஐரோப்பாவில்'' என்று.

''அப்படியானா எங்களுக்கு லீவு கொடுப்பாங்களா?'' என்று ஒரு பையன் கேட்டான்.

மாணவர்கள் எந்த நிகழ்ச்சியின் மதிப்பையும் அதனால் தங்களுக்குக் கிடைக்கும் விடுமுறையைக் கொண்டே அளவிடுகிறார்கள்!

''இங்கிலாந்தோட பெரிய குரங்கு ஏதாவது செத்துப் போனாத்தான் லீவு கிடைக்கும்.''

சுரேந்திரதேவுக்கு அருகில் நின்று கொண்டிருந்தவன் சொன்னான்; ''இன்னும் கொஞ்ச நாளிலே இங்கே ரூபாயிலே ஜெர்மன் கெய்சரோட முத்திரை அடிச்சிருக்கும்!''

''சீ, நீங்க என்ன சொல்றீங்க?'' சுரேந்திரதேவ் ஏளனமாகக் கேட்டார். ''உங்களுக்கு நம்ம ரூபாயிலே வேறே தேசத்து ராஜாவோட மீசைதான் அச்சடிச்சிருக்கணுமா? பாரதமாதாவோட உருவமோ, பசுவோட உருவமோ அச்சடிச்சிருக்கக் கூடாதா?''

''சரி, சரி, வாங்க போகலாம். அநாவசியமா ஏன் வம்பை விலைக்கு வாங்கிக்கணும்?''

சுரேந்திரதேவ் தம் கூட்டாளியுடன் பேசிக்கொண்டே போனார். ''எங்கிட்டே எரிஞ்சு விழுந்துக்கிட்டிருந்த அந்தக் குரங்கு திடீர்னு மாறிப் போய் ரொம்பச் சுமுகமாப் பேச ஆரம்பிச்சுட்டானே, இது என்னடா மர்மம்னு யோசனை பண்ணிக்கிட்டிருந்தேன். இப்பத்தான் அதுக்குக் காரணம் புரிஞ்சுது. நடுவிலே அவனுக்கு ஒரு கடிதம் வந்ததே, அதிலே சண்டை ஆரம்பமான சமாசாரம் இருந்திருக்கும், அவன் உடனே ஜாக்கிரதையாயிட்டான். சண்டைக்காக நிறைய நிதி சேர்க்கணுமே! அதுக்காக இனிமேல்

அவன் நமக்கு முன்னாலே நாய் மாதிரி வாலை யாட்டுவான்! முந்தி யெல்லாம் நாம அவனைப் பார்க்கப் போனா, மணிக் கணக்கிலே நம்மைக் காக்க வைப்பான். இனிமேல் பாருங்க, காம்பவுண்டு வரைக்கும் வந்து நம்மை வரவேத்து உள்ளே அழைச்சுக்கிட்டுப் போவான். நம்ம மேலே அன்பைப் பொழிவான்!

26

ஒவ்வொன்றாக மறையும் நட்சத்திரங்களைப் போல் சிறுவர்கள் ஒவ்வொருவராகத் தங்கள் வீடு சென்று விட்டார்கள்.

பிஞ்ஞகி மட்டும் தனியாக இருந்துவிட்டான். அவனால் சைக்கிளில் ஏறி ஓட்ட முடியவில்லை. இளைப்பாறுவதற்காக வழியில் நிற்கவும் வெட்கமாக இருந்தது அவனுக்கு. அவன் சைக்கிளை எப்படியோ தள்ளிக் கொண்டு தானும் தள்ளாடியவாறு நடந்தான்.

அந்தச் சாலையில் ஒரு சிறிய பங்களா இருந்தது. அதன் முன் முற்றத்தில் ஒரு நீரூற்று இருந்தது. மாலை நேரத்தின் காவி நிற மேகங்கள் அதன் நீரில் அழகாகப் பிரதிபலித்தன. இரண்டு மூன்று சிறுமிகள் நீரூற்றின் மேடையின்மேல் உட்கார்ந்து கொண்டு தங்கள் கால்களால் தண்ணீரை அளைந்து கொண்டிருந்தார்கள்.

பிஞ்ஞகிக்கு அவர்களைத் தெரியும். போலீஸ் 'டெபுடி'யின் பெண்கள் அவர்கள். ஆனால் இன்று பிஞ்ஞகி அவர்கள் பக்கம் திரும்பக் கூட இல்லை.

சில இடையர்கள் வாய்க்காலுக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த மேடையின் மேல் உட்கார்ந்து கொண்டு சதுரங்கம் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"இந்த ஆட்டத்திலே உன்னோட ஜெர்மன்காரனை வெட்டிட்டேன்!"

"இதோ உன்னோட இங்கிலீஷ்காரன் போயிட்டான்!"

ஐரோப்பிய யுத்தத்தில் பங்கு கொண்டிருக்கும் கட்சிகளின் பெயர்கள் சதுரங்க ஆட்டத்தின் கட்சிகளுக்கு வைக்கப்பட்டிருப்பதைப் பிஞ்ஞகி கவனித்தான்.

அவன் கடைத்தெருப் பக்கம் போனான். அங்கு மிகவும் பரபரப்பாக இருந்தது. வியாபாரிகள் மிகவும் உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''பாரேன், இன்னும் ஆறு மாசத்திலே ஜெர்மன்காரன் இங்கி லீஷ்காரனை நசுக்கிப்பிடுவான், நசுக்கி!''

''நம்ம துருக்கி சுல்தான் இங்கிலீஷ்காரனை ஓட ஓட விரட்டப் போறான், பாரேன்!''

''இல்லேயில்லே, நம்ம இங்கிலீஷ்காரன் கெய்சரோட மீசையை நறுக்கிப்பிடப் போறான்!''

பிஞகி சைக்கிளை வீட்டில் வைத்துவிட்டு வெளியே கிளம்பினான். தாத்தாவுக்குத் தன் மேல் கோபம் வந்து விடுமோ என்று பயந் தான் அவன். தலைமையாசிரியர் தனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழி வாங்குவதற்காக அவனைப் பற்றித் தாத்தாவிடம் என்னென்ன கோள் சொல்வாரோ? தேவுபாவிடம் அவன் நடந்துகொண்ட முறை தாத்தாவுக்குப் பிடிக்காவிட்டால் அவருக்கு அளவில்லாத கோபம் ஏற்பட்டு விடும். அவனை நன்றாக உதைப்பார் அவர். அவன் பேசாமல் அடியை வாங்கிக் கொண்டு நின்றால் அவருடைய கோபம் அதிகமாகி விடலாம். அவர் துப்பாக்கியைக் கூட எடுத்தாலும் எடுத்துவிடுவார்.

இப்படி ஏதேதோ நினைத்துக் கொண்டே பிஞகி ரெயில்வே ஸ்டேஷன் வரை வந்து சேர்ந்து விட்டான். டிக்கெட் கொடுக்கு மிடத்தில் போய் நின்றான். கௌண்டரிலிருந்தவர் அவனை, ''எங்கே போகணும்?'' என்று கேட்டபோது அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

டிக்கெட் விற்பனை செய்யும் குமாஸ்தாவுக்கு எரிச்சல் வந்தது. ''மிஸ்டர்! எங்கே போகணும்னு முன்னாலேயே தீர்மானம் பண்ணிக்கிட்டு வரக்கூடாது? சரி, சரி! ஜன்னலை விட்டு நகரு!''

பிஞகி தன் நினைவுக்கு வந்த ஏதோ ஒரு ஸ்டேஷனின் பெயரைச் சொல்லி அதற்கு டிக்கெட் வாங்கிக் கொண்டான்.

ரெயில் ஒவ்வொரு ஸ்டேஷனாகக் கடந்து சென்று கொண் டிருந்தது. பிஞகி ஏதோ ஓர் அதிசய லட்சியத்தை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். வீட்டைவிட்டு வந்ததால் அவனுக்குத் துக்கம் ஏற்படவில்லை.

இரவில் பிரயாணிகளிடையே பலவிதமான உரையாடல்கள் நிகழ்ந்தன. ஜேத்பூரைச் சேர்ந்த இரண்டு மேமன்கள் எருமை அசைபோடுவது போல் வெற்றிலையை மென்று கொண்டே கான்ஸ்டான்டிநோபிளையும் ஆட்ரியானோபிளையும் பற்றிப் புரிந்து கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார்கள்.

''சண்டையிலே துருக்கி என்ன செய்யப் போகுது? பேப்பர்லே ஏதாவது வந்திருக்கா?''

''உம். விஷயம் என்னன்ஞ துருக்கியிலே 'கனஸ்டி', 'ஆண்ட்ரியா'ன்னு ரெண்டு 'புல்' (பாலம்) இருக்கு. ரஷ்யா தனக்கு ஒண்ணு வேணும்னு கேட்கிறது; இங்கிலாந்து தனக்கு இன்னொண்ணு வேணும்னு கேட்கிறது. நம்ம துருக்கி என்ன சொல்றதுன்ஞ...''

பிறகு அவ்விருவரும் தங்களுடைய தாய்மொழியான ஜாடேஜி பாஷையில் பேச ஆரம்பித்து விட்டார்கள். அந்தப் பேச்சை எழுத்தில் வடிப்பது யாராலும் இயலாத காரியம்.

உலகத்தின் இருண்ட மூலையொன்றில் வாழ்ந்து வந்த இந்த மேமண் இனத்தவர்கள்கூட எங்கேயோ தூரத்திலிருந்த துருக்கி நாட்டை, 'நம்ம துருக்கி' என்று குறிப்பிடுவதும், துருக்கிக்கு உதவுவதற்காகத் தங்களிடையே நிதி சேர்ப்பதும் பிஞகிக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

அவன் ஜேதல்சர் ஸ்டேஷன் வரையில்தான் டிக்கெட் வாங்கியிருந்தான். அந்த ஸ்டேஷன் வந்ததும் அவன் இறங்கிவிட்டான். பல சிந்தனைகள் அவனைக் குழப்பத் தொடங்கின. 'எங்கே போவது? வீடு திரும்பி விடலாமா? தாத்தாவும் பாட்டியும் இரவு முழுவதும் எனக்காக எவ்வளவு கவலைப்பட்டுக்கொண் டிருப்பார்கள்? நான் எதிரில் இருந்தால் அவர்களுக்கு என்மேல் கோபமாயிருக்கும்; இல்லாததால் எனக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்ற கவலையில் அவர்கள் எவ்வளவு தளர்ந்து போயிருப்பார்கள்? திரும்பிவிடவேண்டியதுதான்!'

காலை வேளையில் அவன் பிளாட்பாரத்தில் நடந்து கொண்டிருந்த போது பக்கத்திலிருந்த ஹோட்டலில் யாரோ பாடிக்கொண் டிருந்தது அவனுக்குக் கேட்டது.

'அங்க்ரேஜ்நே ஜர்மன் ஆபடே
படியா ஜோத்தா பே
ஏக் த்ரிஜும் லக்ஷ்மண் தேம்
கடமாம் ரண் ககடாவியும்.'

(ஆங்கிலேயர்களும் ஜெர்மன்காரர்களும் சண்டை போட்டுக் கொண்டிருக்கிருர்கள். அவர்கள் சிறந்த வீரர்கள். லக்ஷ்மண்! நீயும் அவர்களைப் போல் கிர்ப் பள்ளதாக்கில் கர்ஜித்துக் கொண்டிருக்கிருய்.)

ஒரு நாட்டுப் பாடகன் சிதாரை வைத்துக்கொண்டு பாடிக் கொண்டிருந்தான்:

''தாண் தார் தத்ரீ கியா
லலஞ வேவசே லபாய்

ராஜீநாமா ஜாய்
லாகும் மோடே லக்ஷ்மணு.
லக்ஷ்மணியா பேட பேட
பக்னீ பக்வே வேஷ்
பீராணீனு பக் லகீ
(ஜேனு) ஜுலே ஜோகண்-கேஷ்.''

(தானேதார் பெண்வேடம் போட்டுக் கொண்டு ஓடி ஒளிந்து கொண்டான்; வேலையை விட்டே ராஜீநாமா செய்து விட்டான். லக்ஷ்மண் பெயர் லக்ஷக்கணக்கான மக்களின் வாயில் அடிபடுகிறது. லக்ஷ்மணுடன் சேர்ந்து கொண்டிருக்கிறாள் காவியுடை அணிந்த சகோதரி. தெய்வ அநுக்கிரம் பெற்ற குதிரையின்மேல் அவள் சவாரி செய்கிறாள். அந்த யோகினியின் கேசம் கீழே தொங்குகிறது.)

பிணுகி கூர்ந்து கவனித்துக் கேட்டான். தெய்வ அநுக்கிரகம் பெற்ற குதிரை, யோகினி, சகோதரி போன்ற வார்த்தைகள் எதையோ அவனுக்கு நினைவுறுத்தின.

அவனுக்கு மாமியின் நினைவு வந்தது. ஆம், இந்தப் பாட்டு மாமியைத்தான் குறிக்கிறது. அவள்தான் கொள்ளைக்காரர்களுடன் சேர்ந்து கொண்டிருக்கிறாள்.

அவன் கண்ணுக்கெதிரில் சூரியோதயம் ஆகிக்கொண்டிருந்தது. உயரமான ரெயில்வே பாலத்திலிருந்து பார்க்கும்போது தோராஜி கிராமத்தின் அடிவானத்திலிருந்து சூரியன் கிளம்பிக் கொண்டிருந்தான். அவனுடன் மாமியும் தன் குதிரைமேல் ஏறி வந்துகொண் டிருப்பதாகவும், சூரியனின் ஏழு குதிரைகள், மாமியின் குதிரை, ஆக எட்டுக் குதிரைகளின் நடனம் ஆகாயத்தில் நிகழ்வதாகவும் பிணுகிக்குத் தோன்றியது.

நாடோடிப் பாடகன் இன்னொரு பாட்டைத் தொடங்கினான்.

''தூ பீஜோ லக்ஷமண் ஜதி
பட! ரம்ஜே பாராத்,
ஜதி சதீனு சாத்
சர் கா பர் சோபா வஜீ''

(வீரனே! நீ இரண்டாவது லக்ஷ்மணன்! சந்நியாசி வீரன்! சந்நியாசியான நீயும் சதியான அவளும் சொர்க்கத்தில் வீற்றிருப்பீர்கள்.)

''சபாஷ், சபாஷ்!'' பாட்டைக் கேட்டவர்கள் பாராட்டினார்கள். ''கிழவா! இந்தப் பாட்டெல்லாம் பாடிக்கிட்டுக் கிர்ப் பள்ளத்துக்குப் போ! உன் காரியம் நிறைவேறும்'' என்றார்கள்.

''அதெல்லாம் எதுக்கய்யா?'' பாடகன் தலையை ஆட்டினன். "திர்ப் பள்ளத்துக்குப் போய் என்ன ஆகணும் எனக்கு? எனக்கு வேண்டியது லக்ஷ்மணேட கிருபைதான். இந்தப் பாட்டெல்லாம் முதலைமாதிரி எனக்குள்ளே குத்திக் குதறிக்கிட்டிருந்தது. அதுக்காக உங்க முன்னலே பாடினேன், அவ்வளவுதான்!''

பிஞகி அவனருகில் சென்று அவன் கையில் எட்டணவை வைத்தான்.

கிழப் பாடகன் கேட்டான், "யாரப்பா நீ?'' என்று.

"ஒரு மாணவன்.''

பாடகனுக்குப் புரியவில்லை. அருகிலிருந்தவர்கள் விளக்கிஞர்கள், ''பள்ளிக்கூடத்திலே படிக்கற பையன்'' என்று.

"நீ படிக்கற பையனு?'' பாடகன் வியப்புடனும் மகிழ்ச்சியுடனும் கேட்டான்.

"ஆமாங்க.''

பாடகன் இவ்வளவு பணிவான பதிலை அதற்குமுன் கேட்டதில்லை. இந்த மகிழ்ச்சியில் அவனுடைய நாக்கு வாய்க்கு வெளியே நீட்டிக்கொண்டது. நாக்கிலிருந்து மகிழ்ச்சி நீராகச் சொட்டியது.

''சாதுவும் சதியும் எங்கே இருக்காங்க?'' என்று பிஞகி கேட்டான்.

"ஒரு இடந்தான் எனக்குத் தெரியும்.''

''எந்த இடம்?''

"என்னேட இதயத்திலே!'' என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான் பாடகன். சிரித்த சிரிப்பில் அவனுக்கு இருமல் வந்துவிட்டது.

அங்கிருந்த இன்னெருவன் பிஞகியை, ''நீ அவங்களைக் கண்டுபிடிக்க வந்த ஒற்றனு?'' என்று கேட்டான்.

அவன் என்ன கேட்கிறனென்று பிஞகிக்குப் புரியவில்லை. கொள்ளைக்காரர்களை அரசாங்கம் பிடித்துக்கொள்ளும் என்ற நினைவே அவனுக்கு வரவில்லை.

அவன் பதில் பேசாதிருந்தது அங்கிருந்தவர்களுடைய சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. அவர்கள் சொல்லத் தொடங்கிஞர்கள். ''இந்தாப்பா, எங்களை ஏதாவது வம்பிலே மாட்டிவிட்டுடாதே! நாங்க மாலண் கிராமத்தைச் சேர்ந்த இடையங்க. ஏதோ கொஞ்ச நேரம் சந்தோஷமாப் பேசிக்கிட்டிருக்கோம், அவ்வளவுதான்!''

அவர்கள் பிஞகிக்கு முன்னல் கையைக் கூப்பிக்கொண்டு நின்றர்கள். அவனுக்கு வெட்கம் வந்துவிட்டது.

கஞ்சாவின் போதை ஏறியிருந்தது போல் சிவந்த பெரிய பெரிய கண்கள், பரந்த மார்புகள், நீண்ட துப்பாக்கிகள் போன்ற தோள்கள், நீண்ட தாடிகள், தூண்களையொத்த உறுதியான கால்கள், சிங்கத்துக்கும் சவால்விடும் வீரம்—இவ்வளவு இருந்தும் இந்த மக்கள் எவ்வளவு அப்பாவிகளாக, கள்ளங் கபடற்றவர்களாக இருக்கிறார்கள்!

பினாகி அங்கிருந்து நகர்ந்தான். கூட்டமும் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்துவிட்டது.

பாடகன் மட்டும் அங்கேயே உட்கார்ந்துகொண்டு சிதார் வாசித்துக் கொண்டிருந்தான். இதற்குள் அவன் இன்னொரு பாட்டும் தயார் செய்துவிட்டான்.

"அங்க்ரேஜ் தூனே அகல் நஹீ
டா யா தனோ தகால்
தேடாவத தத்கால
லாஜ் ராகவண் லக்ஷ்மணோ!
தமே மாஞ்ஜ்ரா மர்க்கடா
ஏ ரகுபத் நோ வீர்
ஜர்மர் பாந்தர்டா நமத்
ஐனே பனீ அதீர்."

(இங்கிலீஷ்காரர்களே, உங்களுக்கு மூளையில்லை! இருந்திருந்தால் உங்கள் மானத்தைக் காப்பாற்ற லக்ஷ்மணைத் துணைக்கு அழைத்திருப்பீர்கள். வெள்ளைக்காரர்களாகிய நீங்கள் குரங்குகள்! அவன் ராமனின் தம்பி. அவனுடைய வீரத்துக்கு முன் நீங்கள் பணிந்து விடுவீர்கள்.)

பினாகி அவனிடம் சென்று, "கவிராஜ்! உங்களுக்குப் பயமில்லையா?" என்று கேட்டான்.

"எனக்கு யார்கிட்டே பயம்?"

"அப்படியானா எனக்கு விலாசம் கொடுக்கறீங்களா?"

"யாரோட விலாசம்?"

"லக்ஷ்மண்-யோகினி இவங்களோட......"

"உனக்கு எதுக்கு?"

"நான் அவங்கக்கிட்டே போகப் போறேன்."

"என்னோட இந்தப் பாட்டெல்லாம் அவங்கக்கிட்டே குடுக்கறியா?"

"நிச்சயம்."

27

''இந்தா, நான் பாட்டெழுதி வச்சிருக்கற காயிதம்'' என்று சொல்லிப் பாடகன் பிஞகியிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தான். அது எண்ணெய்க் கறை பட்டு அழுக்காக இருந்தது. அதில் கோணல் மாணலான எழுத்துக்களில் பாட்டுகள் எழுதியிருந்தன.

ஆடி மாதத்தில் மயில் அகவும் ஒலியை ஒத்திருந்தது, பாடகனின் குரல். ''லக்ஷ்மண்பாயி கிட்டே சொல்லு, மோதி உனக்கு வணக்கம் தெரிவிச்சான்னு. மேலும் இந்தப் பாட்டையும் சொல்லு :

''மீதர் கீஜே மங்கணு
ஆவராம் ஆட பம்பாட்
ஜீவதடாம் ஜஷ் காவசே
முவாம் லடா வண்ஹார்''

(நீ வீரன், பிச்சைக்காரர்களென்று கருதப்படும் பாடகர்களுடனும் சாரணர்களுடனும் அன்பாக இரு. ஏனென்றால் அவர்கள் உன் வீரத்தைப் பாட்டுக்களில் பாடி உன் புகழைப் பரப்புவார்கள். நீ இறந்த பிறகும் அவர்கள் மூலம் உன் புகழ் நிலைக்கும். மற்றவர்களுடைய அன்பு நிலையற்றது. நீ இறந்தபின் அவர்கள் உன்னை மறந்து விடுவார்கள்.)

''நான் அவங்களை எங்கே பார்க்க முடியும்?'' என்று பிஞகி கேட்டான். அவர்கள் இருக்குமிடம் போக நேரான வழி இருக்குமென்று அவன் நினைத்தான்.

பாடகன் தூங்கி வழிந்துகொண்டே, ''இதோ பார், இங்கே இருந்து ஜமீன்தடேக்குப் போ; அங்கேருந்து துளசி சியாம்; அப்புறம் நாந்தீபேலா. அங்கே அவங்க இல்லேன்னு சாணுமலைக்குப் போ. அங்கேயும் இல்லேன்னு, சாசயிக் கோட்டை, ஜேசாதார், வேஜல் கோட்டா.. ...'' என்று சொல்லிக் கொண்டே தூங்க ஆரம்பித்து விட்டான்.

கொள்ளைக்காரர்கள் வசிக்கும் இடங்களின் 'நாமாவளி'யைக் கேட்டு ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தான் பிஞகி. அவன் கேட்டான்: ''நீங்க சொன்ன இடமெல்லாம் எங்கே இருக்கு?''

''நான் மட்டும் பார்த்திருக்கேனுக்கும்!'' என்று கூறிப் பாடகன் சிரித்தான்.

''அவங்க நிச்சயமா எங்கே இருப்பாங்கன்னு உங்களுக்குத் தெரியாதா?''

''தெரிஞ்சிருந்தா நானே போயிருக்க மாட்டேனு?'' பாடகனின் கண்களில் குறும்புத்தனம் தெரிந்தது. அவன் துப்பாக்கியில் குறி பார்ப்பவன் போல் ஒரு கண்ணைச் சற்று மூடிக் கொண்டான்.

பாடகன் உண்மையில் ஒரு போக்கிரி என்று பினுகிக்குத் தோன்றியது.

''சரி, சரி, என்னேட காயிதத்தைக் கொடு. நீ கொள்ளைக் காரங்கக்கிட்டே போய்க் கிழிச்சே!'' என்று சொல்லிக்கொண்டு பாடகன் பினுகியிடமிருந்து காகிதத்தைப் பிடுங்கிக் கொண்டான்.

''மூஞ்சியைப் பாரு, மூஞ்சியை!'' என்று பாடகன் பினுகியைக் கேலி செய்தான். ''பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படி, தம்பி!''

அவனுடைய தலை பறங்கிக் காயைப்போல் கீழே தொங்கியது.

பினுகிக்கு இப்போதுதான் பள்ளியின் நினைவு வந்தது. 'நேற்று ரகளை செய்த மாணவர்களைத் தலைமையாசிரியர் என்ன செய்வார்? இயற்கையிலே மிகவும் பயந்த சுபாவமுள்ள மாணவர்கள் ஏதோ உணர்ச்சி வசப்பட்டு அவரை எதிர்த்து விட்டார்கள். தூங்கி யெழுந்ததும் உணர்ச்சி வெறியெல்லாம் பறந்து போயிருக்கும். நானும் அங்கு இல்லாவிட்டால் அவர்கள் பேசாமல் அடி வாங்கிக் கொள்வார்கள்; பள்ளியிலிருந்து துரத்தப்பட்டாலும் படலாம். அவர்களுடைய பெற்றோரும் அவர்களை உதைப்பார்கள்!'

அவர்களுடைய பரிதாப நிலை அவனுடைய மனத்தில் தோன்றியது. உடனே திரும்பிவிடத் தோன்றியது அவனுக்கு. தான் வீட்டைவிட்டு ஓடி வந்தது பயங்கொள்ளித்தனம் என்று இப்போது அவன் நினைத்தான்.

அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான்: ''ஹெட்மாஸ்டர் என்ன வேணுமானுலும் செஞ்சுக்கட்டும்! நான் திரும்பிப் போகத் தான் போறேன். நான் இப்படிப் பயந்து போய் ஓடி வந்துட் டேன்னு கேட்டா மாமிக்கு என் மேலே வெறுப்பு உண்டாயிடும்!''

அவன் அடுத்த ரெயிலில் ராஜ்கோட் திரும்பினுன். ரெயில் வண்டி யின் ஜன்னல் வழியே சற்றுத் தூரத்தில் கிர் மலை தெரிந்தது. அதன்மேலே மேகங்கள் விளையாடிக் கொண்டிருந்தன. மலை மேலிருந்த வெள்ளை நிறக் கோயில் ஒரு கிழவனின் பொக்கை வாயில் எஞ்சியிருக்கும் ஓரிரு பற்களைப் போலக் காட்சியளித்தது.

அந்த மலைக்குப் பின்னுல் கிர் மலைத்தொடர் எவ்வளவோ தூரம் நீண்டு கொண்டு போகிறது. அங்கே ஏதோ ஓர் இடத்தில் கொள்ளைக்காரர்களுக்குப் புகலிடம் கிடைத்திருக்கிறது.

அந்த உயர்நிலைப் பள்ளி மாணவனின் மனத்தில் பல ஊர்களையும் சுற்றிப் பார்க்கும் ஆசை பிறந்தது. அவனுக்கு மட்டும் இறக்கைகள் இருந்தால்! குன்றுகளின் மேல் தவழும் மேகங்களைப் பிடிக்கலாம்! உதித்துக்கொண் டிருக்கும் சூரியன் அவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பனாகத் தோன்றினான். நவகட் ஸ்டேஷனின் பாலத்துக்குக் கீழே ஓடிக் கொண்டிருந்த பாதர் நதியில், ரெயில் தன்மேல் விழுந்து விடுமோ என்று கொஞ்சமும் பயப்படாமல் குழந்தைகள் பாண்டி விளையாடுவதற்காகச் சிறுசிறு சில்லுகளைத் தயாரித்துக் கொண்டிருந்தன. பாதர்நதி உயிருள்ள ஒரு ஜீவனாகத் தோன்றியது பிணாகிக்கு. 'இது எங்கே வருகிறது? எங்கே போகிறது? இதன் வீடு எங்கே? இதன் பெற்றோர் யார்? யாரைச் சந்திக்க இது இவ்வளவு வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது? எவ்வளவு கிராமங்களுக்கு இது நீரூட்டுகிறது? எவ்வளவு கன்னிகைகள் இதன் கரையில் நோன்பு நோற்கிறார்கள்? எவ்வளவு பெண்கள் இதன் தண்ணீரைக் குடங்களில் நிரப்பிக் கொண்டு போகிறார்கள்? இதன் கரையில் வளரும் தர்பூஜா, கர்பூஜாப் பழங்களுக்கு இதிலிருந்து எவ்வளவு சத்து கிடைக்கிறது?'—இவை போன்ற பல கேள்விகள் அவன் உள்ளத்தில் பிறந்தன. அவனுடைய கற்பனைக் குதிரை மலைகளுக்கு மேலே பறந்து திரிந்தது.

அவன் ராஜ்கோட் போய்ச் சேர்ந்தான்.

நெஞ்சை எப்படியோ திடப்படுத்திக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான். தாத்தாவின் பூண் போட்ட தடியைப் பற்றி அவனுக்குத் தெரியும்.

அவனுடைய தாத்தா ரிவால்வரின் குழாயைத் துடைத்துக் கொண்டிருந்தார். "நீ வந்துட்டியா?" என்று அவர் மிகவும் சாதாரணமாகக் கேட்டார்.

பிணாகி பதில் சொல்லவில்லை.

"நீ திரும்பி வராமே இருந்திருந்தா உன்னைக் கோழைன்னு நினைச்சிருப்பேன்" என்று சொல்லி விட்டு அவர் ரிவால்வருக்குள் தோட்டாக்களைப் போடத் தொடங்கினார். "விக்ரம்பூர் ராணி..." என்று சொல்லிக் கொண்டே அவர் ரிவால்வரை மூடி அதன் சேஃப்டி பின்னைப் போட்டார்.

பிணாகியின் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

தாத்தா வாக்கியத்தை முடித்தார். "ராணி உனக்கு மாசம் பதினஞ்சு ரூபா ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கா."

தான் கேட்பது நிஜந்தானா என்று பிணாகிக்குப் புரியவில்லை.

தாத்தா ரிவால்வரைத் தோற் பெட்டிக்குள் வைத்துக்கொண்டு சொன்னார்: ''நான் இப்போ கிளம்பறேன். நீயும் பாட்டியும் ஜாக்கிரதையா இருங்க! பெரிய தாத்தாவையும் கவனிச்சுக்குங்க. நான் கொள்ளைக்காரனைப் பிடிக்கப் போகிறேன். திரும்பி வருவேனோ இல்லையோ, எனக்குத் தெரியாது. குளிச்சு சாப்பிட்டு ஸ்கூலுக்குப் போ! ஹெட்மாஸ்டர் அடிச்சதுக்காக ஓடிப் போகணுமா? சின்ன வயசுலே நான் வாங்கின பிரம்படிகளோட தழும்பு இன்னும் என் முதுகிலே இருக்கு.''

பிஞுகிக்குத் தன் தாத்தாவின் கால்களில் விழுந்து அழுது விட வேண்டும்போல் இருந்தது.

பாட்டியும் அங்கு வந்து நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் நீர்த்துளிகள் பளபளத்தன. அவளைப் பார்த்துவிட்டுத் தாத்தா சொன்னார்: ''இவ உனக்காக அழுதுகிண்டிருந்தா. ஜோசியம் கேட்கப் பக்கிரிகள்கிட்டே ஓடினா; ஜாதகத்தை எடுத்துக்கிண்டு ஜோசியன்கிட்டே போனா. ராத்திரி முழுவதும் என்னைத் தூங்க விடல்லே. தைரியமாத் தனியா வெளியே கிளம்ப உனக்கு உறுதி ஏற்பட்டதேன்னு நான் சந்தோஷப் பட்டேன். கடைசியிலே எல்லாரும் தனியாத்தானே போகணும்.''

''ஆமா, பெரிய தத்துவஞானி பேசறார்!'' பாட்டியின் முகத்தில் வருத்தமும் மகிழ்ச்சியும் ஒருங்கே பிரதிபலித்தன.

''என்னோட தத்துவஞானம் இதில் அடங்கியிருக்கு'' என்று கூறியபடி தாத்தா ரிவால்வரைச் சுட்டிக் காட்டினார். ''எனக்கு அழப் பிடிக்காது; என் பேரன் அழறதும் பிடிக்காது. அப்பாவைக் கேட்டுப் பாரு! நான் அடி வாங்கிண்டு வந்தால் அவர் என்னை வீட்டுக்குள்ளேயே விடமாட்டார். எனக்கு வந்து வாய்ச்ச வாத்தியார் ரொம்ப முசுடு. ஒரு நாள் அவர் மேலே சிலேட்டைத் தூக்கி எறிஞ்சுட்டு வந்துட்டேன். அப்பா என்னைக் கூப்பிட்டுச் 'சபாஷ்'னு தட்டிக் கொடுத்தார்!''

வெளி வராந்தாவில் பெரிய தாத்தா சிரித்துக் கொண்டே இருமுவது காதில் விழுந்தது.

பிஞுகி வேறு அறைக்குப் போய் அவர்களுடைய ஆர்டர்லியான ஷேக் பருக்குடன் விளையாட ஆரம்பித்தான். ஷேக் பருக் ஒரு காலத்தில் போலி நாணயங்கள் தயாரித்ததற்காகத் தண்டிக்கப் பட்டவன். தன் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்காக அவனுக்கு இந்த வேலை கொடுக்கப்பட்டிருந்தது. அவன் இப்போது மிகவும் நல்லவனாக மாறிவிட்டான். அவன் ஒரு காலத்தில் போலி நாணயம் தயாரித்தவன் என்றால் இப்போது ஒருவரும் நம்பமாட்டார்கள்.

மகிபத்ராம் உடையணிந்து சொண்டு வெளியே புறப்பட்டார். தாம், 'வாழ்வா, சாவா?' என்ற போராட்டத்தில் குதிக்கப் போகிறோமென்ற கர்வம் சற்றும் அவருடைய முகத்தில் தோன்றவில்லை.

''அம்மனுக்கு முன்னாலே விளக்கேத்தி வைச்சிருக்கேன். நமஸ்காரம் பண்ணிட்டுப் போங்க'' என்று பாட்டி சொன்னாள்.

''போடீ பைத்தியமே! இந்த வேஷமெல்லாம் எதுக்கு?'' என்று சொல்லிக்கொண்டே அவர் திரும்பி உள்ளே வந்தார். பூட்ஸைக் கழற்றிவிட்டு அம்மனுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் பூட்ஸை மாட்டிக்கொண்டு கிளம்பி விட்டார்.

''ஒரு விஷயம் மறந்துடாதீங்க'' என்று அவருடைய மனைவி சொன்னாள்.

''என்ன?''

"நீங்க யாரைப் பிடிக்கப் போறீங்களோ, அவங்க நமக்கு ரொம்ப உபகாரம் பண்ணினவங்க."

''ஆமாமா! அவங்களுக்கு நெய்யிலே பண்ணின ரொட்டி சப்ளை பண்ணச் சொல்லிச் சர்க்காருக்குச் சிபாரிசு பண்றேன், சரிதானே? இந்த மாதிரி அசட்டுத்தனமா வேற யார்கிட்டேயாவது பேசாதே!'' அவருடைய குரலில் ஏளனம் நிறைந்திருந்தது.

அவருடைய மனைவி உள்ளே போய் அம்மனுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் பிரார்த்தனை செய்து கொண்டாள். "அம்மா தாயே! இவரோட மானத்தையும் காப்பாத்து! அவங்களையும் காப்பாத்து!''

இவ்விரண்டு உணர்ச்சிகளும் அவருடைய இதயத்தில் கொந்தளித்தன.

பினாகி பள்ளிக்குச் சென்றான். அங்கே வகுப்புகள் அமைதியாக நடந்து கொண்டிருப்பதைக் காண அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் பையன்களிடம் வழக்கமான மகிழ்ச்சியோ கவலையற்ற மனநிலையோ காணப்படவில்லை. 'ஏதோ ஒன்று நடக்கப் போகிறது; ஆனால் அது இன்னும் நடக்கவில்லை' என்ற எண்ணம் அவர்களிடையே பயத்தை உண்டாக்கியது. தலைமையாசிரியர் என்ன நினைத்துக் கொண்டிருந்தரோ, தெரியவில்லை. இருந்தாலும் அவரும் எதையோ எதிர்பார்த்துப் பயப்பட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. ஆனால் அப்போதைக்கு ஒன்றும் நிகழவில்லை.

28

சௌராஷ்டிரத்தில் இரண்டு இடங்களுக்குத் 'தாயின் வயிறு' என்று பெயர். ஒன்று ஜலவாசிகளுக்கு, இன்னொன்று நிலவாசிகளுக்கு.

துவாரகையிலுள்ள சங்கோத்தார் தீவுதான் ஜலவாசிகளுக்குத் 'தாயின் வயிறு.' மழைக் காலத்தில் புயல்கள் கிளம்பிப் படகுகளேயும் கப்பல்களேயும் செம்படவர்களேயும் ஆபத்துக்குள்ளாக்கும் போது கடலின் மூலம் ஜீவனம் செய்பவர்கள் தங்கள் படகுகளேயும் கப்பல்களேயும் இந்தத் தீவின் பாதுகாப்பான கடற்பகுதிக்குக் கொண்டுவந்து நங்கூரம் பாய்ச்சி விடுவார்கள். இந்தப் பகுதிக்கு வெளியே சமுத்திரம் கர்ஜித்துக்கொண் டிருக்கும் ஆனல் அதன் பெரிய அலேகள் அந்தக் கப்பல்களேயும் படகுகளேயும் தொடக்கூடச் செய்யாது. தாயின் வயிற்றில் பத்திரமாக இருக்கும் சிசுவைப் போல் அவை பத்திரமாக இருக்கும்.

நிலவாசிகளின் 'தாயின் வயிறு' கிர்ப் பிரதேசந்தான். நாட்டின் பயங்கரக் குழந்தைகள், திருடர்கள், கொள்ளேக்காரர்கள் எல்லாரும் இங்கேதான் புகலிடம் தேடிக்கொள்கிருர்கள். நதிகளின் உயர்ந்த கரைகள், மலேப் பள்ளத்தாக்குகள், அடர்ந்த காடுகள், ஒட்டகத்தையே மறைத்துவிடும் அளவுக்கு உயரமாக வளர்ந்த புல், கிர்வாசிகளின் சிறு சிறு குடியிருப்புக்கள் ஆகியவற்றில் ஒளிந்து கொள்ளும் மனிதர்களேப் பெரிய பெரிய சைனியங்களால் கூடப் பிடிக்க முடியாது.

லக்ஷ்மண்பாயியும் பூனுவும் போய்விட்ட பிறகு ரூக்கட் சேட்டின் விதவை காயமடைந்த வாசியாங்கைக் கிர்ப் பிரதேசத்து இடையர்களின் குடியிருப்புகளில் மாற்றி மாற்றிக் கொண்டு போய் வைத்துக் காப்பாற்றிச் சொஸ்தம் செய்தாள். அவன் நடமாட ஆரம்பித்ததும், ''சரி, நீ இப்போ எங்கே போகப் போறே?'' என்று அவனேக் கேட்டாள்.

''நீ வச்சுக்கறதாயிருந்தா உன்னேடயே இருக்கேன்.''

''இல்லேன்ன?''

''சாமி கிட்டே போயிடறேன்.''

''நீ ஏன் என் பின்னலேயே சுத்தறே?''

''வேற யார் பின்னலே சுத்துவேன்?''

''எனக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

"உனக்கு என்னோட சம்பந்தமில்லாமல் இருக்கலாம், எனக்கு உன்னோட சம்பந்தம் இருக்கு.''

"இடையனாப் பொறந்துட்டு இப்படிப் பொம்பளே மாதிரி பேசறியே?''

''நம்ம கல்யாணம் நடக்க இருந்தது. நீ என்னைப் பேடின்னு சொல்லி நம்ம கல்யாணத்தை நிறுத்திட்டே!''

"நான் உன்னை ஒண்ணும் 'பேடி'ன்னு சொல்லலலே. எனக்கு உன்மேலே ஆசையில்லேன்னு சொல்லிட்டுத்தான் ஓடிப் போனேன்.''

''உன் காலிலே விழுந்து மன்றாடினேனே?''

''அதனாலே தான்.''

"ஏன்?''

"ஒரு பொம்பளே காலிலே விழுந்து அழுது கண்ணீர் விடறவன் கிட்டே எனக்கு ஆசை ஏற்பட முடியாது. நான் ஓடிவந்து என்னோட அழகை மறைச்சுக்கிட்டு எங்கெங்கேயோ கூலி வேலே செஞ்சுக்கிட்டிருந்தேன். கடைசியிலே எனக்கு உண்மையான வீரன் புருஷனாகக் கிடைச்சான்.''

"நான் இப்போ உன்னைக் கண்டுபிடிச்சுட்டேன்.''

''அதை விடு! ஏழு வருஷம் ஆயிடுச்சு. என்னோட வாழ்க்கையே முடிஞ்சு போச்சு!''

"அப்படிச் சொல்லாதே! நாம மறுபடி வாழ்க்கை நடத்து வோம்.''

''இப்படிப் பேசற உன் நாக்கு அழுகல்லியே. மறுபடி வாழ்க்கையை நடத்தணுமின்னா சேட்டைவிட வீரமுள்ள ஒருத்தனோட, தைரியமாச் சாகவும் கொல்லவும் தெரிஞ்சவனோடேதான் நடத்துவேன். உங்க மூணு பேருக்கும் நான் சகோதரி, ஞாபகம் வச்சுக்கோ!''

பேசப் பேச அவளுடைய தோற்றம் பயங்கரமாக ஆகிக் கொண்டு வந்தது.

''நீ என்னை அடியோட நாசம் பண்ணிட்டே'' என்று அவன் சொன்னான்.

"அதெப்படி? உனக்குத்தான் குடும்பம் இருக்கே?''

''அதை எல்லாரும் வலுக்கட்டாயமா என் தலையிலே கட்டிப் பிட்டாங்க.''

"வலுக்கட்டாயமாகவா?'' அவள் ஏளனமாகக் கேட்டாள்.

"நீ கோழை மட்டுமில்லே, வேஷதாரி கூடத்தான். பொறத்தியாருக்காகத்தான் குடும்பம் நடத்தினியாக்கும்?''

''நான் இப்போ என்ன பண்ணறது?''

''திரும்பிப் போவியா?''

''ஆமா, வேற என்ன வழி?''

''ஆனா ரொம்பத் தாமதமாயிடுச்சே!''

''ஏன்?''

''ஏனா? யாராவது ஒரு தடவை இந்த வழியிலே வந்துட்டா, பிறகு திரும்பிப் போற வழி அடைபட்டுப் போயிடும்.''

''ஏன் அப்படி?''

''ஏன்னா நீ ஒரு கோழை! எதுக்கெடுத்தாலும் அழுதிடுவே, ரொம்பச் சுலபமா எங்களை எதிரிகள் கிட்டே மாட்டவச்சுடுவே.''

''நீ என்னைப் பலவந்தமாத் தடுக்கப் போறியா?''

''பலவந்தமா உனக்குக் கல்யாணமே பண்ணிவைக்க முடிஞ்சுதே! பலவந்தமாத் தடுத்து நிறுத்தறது தானா பிரமாதம்?''

''சரி, சரி! நான் சும்மா வேடிக்கைக்காகச் சொன்னேன். இங்கே இருந்து போய்த்தான் என்ன செய்யப் போறேன்? உன் நிழல்லே சாகிறது கூட எனக்கு இஷ்டந்தான்.'' வாசியாங் ஏதோ சொல்லி விட்டானே ஒழிய அவனுடைய பேச்சில் அவ்வளவு உறுதி இல்லை. அவன் பயந்து போயிருந்தான். அந்த மங்கையின் கண்கள் அவனுக்குப் பயங்கரமாகத் தோன்றின. ஒரு முதலையின் வாயில் அகப்பட்டுக்கொண்டுவிட்ட உணர்வு ஏற்பட்டது அவனுக்கு.

''தோண்கட்டாவோட மக்ராணியைக் கொல்லப் போறதாகச் சொன்னியே?'' அவள் தன் காவிநிறப் போர்வையின் நுனிகளை முடிந்து கொண்டே கேட்டாள். பிறகு ஒரு பச்சைக்குட்டையைத் தலையில் சுற்றிக்கொண்டாள்.

''ஆமா.''

''அப்படியானாக் கிளம்பு! மாமியார் வீட்டுக்குப் போன இடைச்சிப் பொண்ணைக் கெடுத்தவன் இஸ்மாயில் மக்ராணி. அவனைக் கொன்னுட்டு வா!''

வாசியாங்கின் நாடி தளர்ந்து விட்டது. முன்பு தன் அழகால் அவனைக் கவர்ந்த மங்கை இப்போது ஜன்னிஜுரம் போல் பயங்கர மாகத் தோற்றினாள்.

அப்போது அந்தப் பிரதேசம் விதவைக் கோலம் பூண்டிருந்தது. மலைகள் காவியுடை அணிந்த சந்நியாசிகள் போலத் தோற்ற மளித்தன. சூரியன் ஒரு வழிப்பறிக் கொள்ளைக்காரனைப் போல் மலைகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருந்தான்.

ஹீரன் நதியின் கரையில் இருவரும் போய்க் கொண்டிருந் தார்கள். மங்கை முன்னால் போனாள். பட்டம் விடுபவன் நிறைய

நூலை விட்டுப் பட்டத்தைத் தளர்த்துவதுபோல அவளும் அவனைச் சற்று நழுவ விட்டாள். ஓர் இடத்தில் ஒரு சிறிய பாதை பிரிந்தது. அவள் அந்த இடத்தைத் தாண்டிப் போனாள். இப்போது அவளுக்கும் அவனுக்குமிடையே ஒரு பெரிய பாறை இருந்தது. அவன் அங்கே சற்று நேரம் நின்றான்; பிறகு அந்தச் சிறிய பாதை வழியே ஓடத் தொடங்கினான். அவன் முதுகை ஏதோ தாக்கியது; பெரிய ஒலியும் கேட்டது. அவன் மார்பு சல்லடையாகி விட்டது. அவன் சுருண்டு கொண்டு ஒரு கள்ளிப் புதரின்மேல் விழுந்தான்.

அவள் பாறையின் மேல் நின்று கொண்டு சிரித்தாள். அவள் கையிலிருந்த துப்பாக்கி இன்னும் புகைந்து கொண்டிருந்தது.

அவள் வாசியாங்கின் சவத்துக் கருகில் சென்றாள். அவனுடைய வாயிலிருந்து எச்சில் ஒழுகிக்கொண் டிருந்தது. சற்று முன்னால் தங்கள் கூடுகளில் ஒடுங்கியிருந்த பறவைகள துப்பாக்கிச் சப்தம் கேட்டுக் கூடுகளிலிருந்து வெளியே வந்து கத்தத் தொடங்கின.

சற்று நேரத்தில் அங்கு அமைதி மறுபடி நிலவியது. காட்டு மரங்கள் தங்கள் உணர்ச்சிகளை ஒரு முறை வெளியே கொட்டி விட்டுச் சாந்தமாகி விட்டன போலும்!

அவள் தன் நெஞ்சின்மேல் கையை வைத்துக்கொண்டாள். அது படபட வென்று அடித்துக்கொண்டது. ஆனால் அவளுடைய கண்கள் சலனமற்று இருந்தன. ஒரு தடவை மட்டும் அவளுடைய உடல் நடுங்கியது, பிறகு நிதானமடைந்து விட்டது. இந்தக் கொடிய காரியம் ஒரு பெரிய சாதனைக்கு அஸ்திவாரம் என்ற பாவம் அவளிடம் தோன்றியது.

அவள் மேலே நடக்கத் தொடங்கினாள்.

''பாவம், அவனுடைய குழந்தைக் குட்டிகள்...'' என்று ஏதேதோ நினைக்க ஆரம்பித்த அவள் அந்த நினைவைக் குறிப்பிட்டு, ''உன்னையும் கொன்று விடுவேன்'' என்று சொன்னாள்.

அவள் கூறியது பக்கத்திலிருந்த மலைக்குக்கூடக் கேட்கவில்லை.

29

ஐரோப்பாவில் யுத்தத்தின் வேகம் அதிகரிக்க அதிகரிக்கச் சௌராஷ்டிரத்தில் மக்களின் மூளையும் வளர்ந்து கொண்டு வந்தது. நகரங்களின் தபாலாபீஸ் வராந்தாக்களில் 'விண்டோ

டெலிவரி'யில் கடிதம் பெறுபவர்கள் கூட்டமாகக் காத்திருந் தார்கள். வீட்டுத் திண்ணைகளிலும் முற்றங்களிலும் கோயில் மண்டபங்களிலும் மக்கள் செய்திப் பத்திரிகையை விரித்துக் கொண்டு படித்தார்கள். ஆமதாபாத்தைக்கூடப் பார்த்திராதவர் கள் ஐரோப்பாவில் சண்டை நடக்கும் இடங்களைத் தத்ரூபமாக வர்ணித்தார்கள்.

யுத்தத்தில் என்னென்ன தவறுகள் செய்யப்படுகின்றன என்பது யுத்தத்தை நடத்தும் படைத் தலைவர்களைவிடக் கத்தியவார்ப் பென்ஷனர்களுக்கு நன்ருகத் தெரிந்திருந்தது. அவர்களுடைய வாசாலகமான பேச்சைக் கேட்டால் அவர்கள் ஒரு காலத்தில் லீஜ், நாமுர், இபர்குன் கோட்டைகளில் பணிபுரிந்த இஞ்சீனீயர்கள் என்று தோன்றும்.

ஏஜென்சி சர்க்காரும் சும்மா இருக்கவில்லை. வெவ்வேறு பகுதி களிலிருந்த டெபுடி பொலிடிகள் ஏஜெண்டுகள், கிராமங்களுக்குச் சென்று அங்கங்கே கூட்டங்கள் கூட்டி யுத்தம் நடக்கும் இடங் களின் வரைபடங்களை மாட்டி யுத்தத்தின் போக்கை மக்களுக்கு விளக்கினுர்கள். இங்கிலாந்தும் நேசநாடுகளும் வெற்றி பெறும் இடங்களை வரைபடத்தில் பிரம்பால் அழுத்தமாகச் சுட்டிக் காட்டினுர்கள். ''சண்டைக்குப் போயிருக்கற நம்ம வீரர்கள் சாப்பிட லவங்கம், கிராம்பு, ஏலம், பாக்கு, டீ, எல்லாம் தேவைப் படுகின்றன. அதுக்காக நாம எல்லாரும் நன்கொடை சேர்த்து அவங்களுக்கு அனுப்பறது நம்ம கடமை'' என்று பிரசாரம் செய்தார்கள்.

நிதி வசூலும் பொருள்கள் நன்கொடையும் தொடங்கின. வியாபாரிகள் தங்களுக்குள் கண்களால் ஜாடை செய்து கொண் டார்கள். வெள்ளைக்காரர்களின் முன்னிலையில் அவர்கள் இந்த விஷயத்தில் மிகவும் தாராளமாக நடந்து கொண்டார்கள். ராத்தல் கணக்கிலும் மனுக் கணக்கிலும் லவங்கப் பட்டையையும், ஏலத்தையும் நன்கொடையாக அளித்தார்கள்.

ஆனுல் உள்ளூற அவர்கள் விரும்பியது அரசாங்க மாற்றத்தைத் தான்! 'கத்திக்குப் பிறகு தொப்பிக்காரன் வருவான். அவன் வெகுகாலம் பேஞவாலேயே ராஜ்யம் நடத்துவான்' என்று 'பிருத்விராஜ் ராஸோ' போன்ற பழைய நூல்களில் கூறப் பட்டிருப்பதை அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டார்கள். நூல்களில் சொல்லியிருப்பதுபோல் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படப் போவதாக நாடோடிப் பாடகர்கள் உறுதியாகச் சொன்னுர்கள்.

சுரேந்திர தேவின் ராஜ்யத்தில் பேடீ கிராமத்திலிருந்த அவருடைய மாளிகையில் அவரும் சுந்தர்பூரின் டாகுரும் அரசாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்து கொண்டிருப்பதாக மக்கள் நினைத்தார்கள்.

டாகுரின் வீட்டு ஸ்திரீகளுக்குக்கூடத் துப்பாக்கிச் சுடும் பயிற்சி இருந்தது. டாகுர் கொள்ளைக்காரர்களுக்கு ஆதரவு அளிப்பதாக ஏஜென்ஸி சந்தேகித்தது.

''அரசாங்கம் மாறப் போறது, சுரேந்திர தேவ்ஜி!'' என்று டாகுர் சொன்னார்.

''மாறுதல் எவ்வளவு தூரம் வந்திருக்கு? பம்பாய் வரைக்குமா?''

''வேடிக்கைப் பேச்சுக்கு இதுவா நேரம்?''

''நம்ம மாதிரி ராஜாக்களுக்கு எல்லா நேரமும் வேடிக்கையாப் பேசற நேரந்தான்.''

''நான் சொல்றதை ஒரு தடவை கேட்டுக்குங்க; அப்புறம் வேணும்னு சிரியுங்க.''

''சொல்லுங்க.''

''என்னோட மருமான் கிசோர் சிங் யுத்தத்துக்குப் போயிருக்கான், சீக்கிரம் நேசநாடுகள் தோத்துப் போயிடும்னு.''

''அதனாலே நமக்கென்ன? இங்கிலீஷ்காரனுக்குப் பதிலா நம்ம தேசத்தை ஆளர்றவன் கிட்டே நாம போய், 'நாங்கள்ளாம் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவங்க'ன்னு பெருமையடிச்சுக்குவோமே! இவ்வளவு நாள் சிங்கமும் குதிரையும் பொறிச்ச இங்கிலீஷ் மெடலைப் போட்டுக்கிட்டிருந்தோம். இனிமே கருடனோ, மயிலோ பொறிச்ச ஜெர்மன்காரனோட மெடலைப் போட்டுக்கிட்டுப் பெருமையா நடப்போம்; ஜெர்மன் பொலிடிகல் ஏஜண்டு சொல்றபடியெல்லாம் கேட்போம்; அவ்வளவுதானே?''

''அதெல்லாம் சரிதான். ஆனா, ஜெர்மன்காரன் வந்தால் நம்மை எந்த நிலைமையிலே ஏத்துக்குவான்?''

''எந்த நிலைமையிலேன்னா?''

''நாம எந்த நிலைமையை உண்டாக்கிக்கறோமோ அந்த நிலைமையிலே.''

''அப்படின்னா?''

''அதாவது நீங்க உங்க ராஜ்யத்துக்குப் பக்கத்திலேயுள்ள ராஜ்யத்திலேருந்து இருபத்தைஞ்சு கிராமங்களைப் பிடிச்சு உங்க ராஜ்யத்தோடே சேர்த்துக் கொண்டுவிட்டால், புதுசா வரப் போகிற அரசாங்கம் உங்களோட ராஜ்யத்தோடே புது எல்லைகளை ஏத்துக்கொண்டுவிடும்.''

''நீங்க என்ன சொல்றீங்க, டாகுர் சாகேப்?''

''உங்களுக்குப் புரியல்லியா? நாம் காத்துள்ளபோதே தூத்திக் கணும். நம்ம ராஜ்யங்களைப் பெரிசாக்கிக்க இதுதான் நல்ல சமயம்.''

''எனக்கு ராஜ்யத்தைப் பெருக்கிக்கற ஆசை இல்லே. பார்க்கப் போனால் ராஜ்யம் பெரிசா ஆக ஆக அடிமைத்தனமும் ஜாஸ்தி யாறது.''

''நீங்க சமயத்தை நழுவவிடாதீங்க! இங்கிலீஷ்காரன் அரசாங் கம் விழுந்ததும் நீங்க பேஜல் ஜில்லாவைப் பிடிச்சுக்கங்க.''

''நான் ஒரு வார்த்தை சொல்லவா?''

''சொல்லுங்க.''

''இருபத்தஞ்சு வருஷத்துக்கப்புறம் யாராவது எழுத்தாளன் உங்களோட திட்டத்தைப்பத்தி எழுதினால் எல்லாரும் உங்களைப் பைத்தியம்னு நினைப்பாங்க.''

''நீங்க என்னைப் பைத்தியம்னு சொல்றீங்க!''

''அப்படியெல்லாம் நினைக்காதீங்க. நீங்க போதைப் பொருள் ஒண்ணும் உபயோகிக்கறதில்லேன்னு எனக்குத் தெரியும்'' என்று குத்தலாகச் சொன்னார் சுரேந்திர தேவ்.

''சுரேந்திர தேவ்ஜி! உங்களுக்கு எப்போதுமே மத்த ராஜாக்கள் கிட்டே நட்போ பிரியமோ கிடையாது.''

''நட்பும் பிரியமும் ராஜாக்களுக்கு அழகில்லையே! சொந்தத் தம்பிக்கு விஷம் கொடுத்துக் கொல்றதுதானே ராஜாக்களோட பரம்பரை வழக்கம்.''

''நீங்க யாரைக் குறிப்பிட்டுச் சொல்றீங்க?''

''மகாபாரதக் காலத்திலேருந்து இந்தக் காலம்வரையிலே உள்ள சரித்திரத்தைத்தான் சொல்றேன்.''

''இப்படித்தானே வாழ வேண்டியிருக்கு.''

''ஆமா. வாழ்வு மட்டும் நம்ம இஷ்டப்படி நடக்கறதாயிருந் தால் தேசம் முழுதையும் நம்ம ஆதிக்கத்துக்குக் கொண்டு வந் திருப்போம். தலைமுறை தலைமுறையா அடிமைத்தனத்தைச் சுமந்துகிட்டிருப்பதே நம்மோட வழக்கமாயிட்டது.''

சுரேந்திர தேவின் இந்தப் பேச்சு ஒரு க்ஷத்திரியர் பேசும் பேச்சல்ல என்று டாகுர் சாகேபுக்குத் தோன்றியது. அவர் ஒளிவு மறைவில்லாமல் சொல்லிவிட்டார்: ''நீங்க உங்க ராஜ் யத்தை இழக்கப் போறீங்க! அதுமட்டுமில்லே, உங்க பிள்ளை களுக்குக் கப்பரைகூட விட்டு வைக்கப்போறதில்லே.''

''இதோ பாருங்க! நான் ராஜாவாப் பிறந்தது பிரம்மாவோட தவறு. நான் என்னை இந்தத் தேசத்தோட பிரஜைகளிலே ஒருத்தஞ நினைக்கறேன்.''

''அப்படியானு உங்களுக்கும் எங்களுக்கும் நடுவிலே ரொம்ப வித்தியாசம் ஏற்பட்டுடுத்து.''

''காலம் இந்த வித்தியாசத்தைப் போக்கிடும்.''

''நாம் ரெண்டு பேரும் காலேஜ் நாளிலேருந்து சிநேகிதர்களாக இருக்கோம்.''

''அந்தச் சிநேகம் எப்போதும் இருக்கும்.''

அப்போது மணி ஒன்பது அடித்தது. சுரேந்திர தேவ் எழுந்து, ''சரி, வாங்க, சாப்பிடப் போகலாம்'' என்று டாகுர் சாகேபிடம் சொன்னார்.

''குரங்கு வரவேண்டாமா?''

''யாரு? துரையா? அவன் பாட்டுக்கு வந்து படுத்துக் கட்டும்.''

''அவனுக்குச் சாப்பாடு?''

''என் வீட்டிலே சரியான வேளைக்கு வந்தாத்தான் சாப்பாடு. இல்லாட்டாக் கிடையாது.''

''பின்னே அவன் பட்டினியாப் படுத்துக்க வேண்டியதுதானு?''

''அவன் கூடாரத்துக்கு ரொட்டியும் பிஸ்கட்டும் அனுப்பியிருக் கேன். வேணுமானுச் சாப்பிட்டுக்கட்டும்!'' அமைதியாகப் பதில் சொன்னார் சுரேந்திர தேவ்.

''நீங்க பைத்தியமா ஆயிக்கிட்டிருக்கீங்க!'' வேடிக்கையாகப் பேசுவதுபோல் சொன்னார் டாகுர் சாகேப். ஆனுல் உள்ளூறத் திகிலாக இருந்தது அவருக்கு.

''ஊஹூம், நான் என் வழக்கத்தை மாத்திக்கப் போற தில்லே.''

இருவரும் எழுந்தார்கள்.

சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஊர் நாய்கள் குலைக்கத் தொடங்கின. துரை ஐந்து குதிரை வீரர்களுடன் கிராமத்துக்குள் நுழைந்தான். குரைத்துக் கொண்டிருக்கும் நாய்களை ஆங்கிலத் தில் திட்டினுன் அவன். நாய்கள் அவனுடைய திட்டுக்களைப் புரிந்து கொண்டுவிட்டன போலும்! ஏனென்றுல் அவை சற்றுத் தொலைவில் போய் நின்று கொண்டு இன்னும் பலமாகக் குரைக்கத் தொடங்கின.

தன் கூடாரம் வந்து சேரும்வரையில் துரை அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு வந்தான். சுரேந்திரதேவ் தன்னை வரவேற்க

வருவார் என்று எதிர்பார்த்தான் அவன். ஆனால் அவர் எங்கும் காணப்படவில்லை. அவனுடைய கூடாரத்தில் கூட அவர் அவனுக்காகக் காத்திருக்கவில்லை.

அவனை வரவேற்று உபசரிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அதிகாரி துரையிடம், ''தர்பார் வழக்கம் போல் தூங்கப் போயிட்டார். நாளைக்கு வந்து உங்களைப் பார்ப்பார்'' என்று தெரிவித்தான்.

''சரி, சாப்பாடு கொண்டு வா!''

உலர்ந்து குளிர்ந்து ஜில்லிட்டுப் போன உணவுப் பொருள்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டன. தான் மட்டு மின்றி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே இதனால் அவமானப்படுத்தப் படுவதாக நினைத்தான் துரை. ஆனால் அவன் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு சோடாவையும் சாராயத்தையும் கலந்து குடித்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

காலை வந்தது. சுரேந்திர தேவ் வரவில்லை.

துரை தானே அவருடைய மாளிகைக்குப் புறப்பட்டான். அப்போது அவருடைய சப்ராசி அங்கு வந்து துரையிடம், ''தர்பார் பூஜையில் உட்கார்ந்திருக்கார். ஒன்பது மணிக்கு உங்களைப் பார்க்க வருவார்'' என்று கூறினான்.

ஏஜென்சி அரசாங்கம் ஏற்பட்ட பிறகு வெள்ளைக்கார அதிகாரிகளின் நாய்கள் கூட இவ்வளவு அவமரியாதையாக நடத்தப்பட்டதில்லை. சுரேந்திர தேவின் கர்வம் எல்லை மீறிவிட்டது. துரை மனத்துக்குள்ளேயே கறுவிக் கொண்டான். அவனுடைய இடத்தில் வேறோர் இந்திய அதிகாரி இருந்திருந்தால் பெரிய ரகளையையே செய்திருப்பான். துரையோ தன் கோபத்தை அடக்கிக் கொண்டு வெளிப் பார்வைக்கு மிகவும் அமைதியாகக் காணப்பட்டான். அவன் இவ்வளவு தன்னடக்கத்தைக் கடைப்பிடித்தது சாம்ராஜ்யத்தின் நலனுக்காக. அவனுடைய இதயத்தில் கல்லும் மெழுகும் கலந்திருந்தன. சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்காக எப்போது எது தேவையோ அதைப் பயன்படுத்துவான் துரை.

சுரேந்திர தேவைச் சந்தித்தபோது அவன் தன் உணர்ச்சிகளைச் சற்றும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

தர்பாரின் மாளிகையில் சுவற்றின் மேல் ஓர் அழகிய வண்ணத்துப்பூச்சி உட்கார்ந்திருந்தது. அதைப் பார்த்து விட்டுத் துரை, ''லவ்லி லிட்டில் எஃப்பயர் யூ ஹேவ் மேட் யுவர் பெட்!'' என்றான்.

யுத்தத்துக்காக ஆட்கள் சேர்ப்பதுபற்றியும் யுத்தக் கடனுக நிதி வசூல் செய்வது பற்றியும் அவன் சுரேந்திர தேவுடன் பேச்சு வார்த்தை நடத்திஞன். இவ்விரண்டு விஷயங்களிலும் அவனுக்கு உதவ மறுத்துவிட்டார் அவர்.

அப்போதும் துரையின் முகத்திலிருந்த புன்சிரிப்பு மாறவில்லே. உள்ளுக்குள் கோபம் எரிமலேயாக வெடித்துக் கொண்டிருந்தாலும் உதடுகளில் புன்முறுவலேத் தவழவிடும் கடினமான யோகசாதனே அவனுக்குக் கைவந்திருந்தது. காரணம், அவனுக்குத் தன் சாம்ராஜ்யத்திடம் இருந்த பக்திதான்.

''சரி, தர்பார் சாகேப்! உங்க நிலே எனக்குப் புரியறது. நான் ஏஜென்சிக்கு உசிதம் போல ரிப்போர்ட் அனுப்பிடறேன். நீங்க கவலேப்படாதீங்க'' என்று சொல்லிவிட்டு அவன் புறப்பட்டான்.

* * *

இதே நேரத்தில் கிர்க் காட்டின் ஒரு பகுதியில் ஒரு கூடாரத்தில் துரைமார்களின் பாவர்ச்சி (சமையல்காரன்) க்கும் மகீபத்ராமுக்கு மிடையே சச்சரவு நடந்து கொண்டிருந்தது. வேட்டையாட வந்திருக்கும் துரைகள் தங்குவதற்காக அந்தக் கூடாரம் அமைக்கப் பட்டிருந்தது.

''ஊஹூம், முடியாது! உனக்கு ஆடு சப்ளே பண்ண என்ஞலே முடியாது'' என்று மகீபத்ராம் கத்திஞர்.

பாவர்ச்சிக்கு வந்த கோபத்துக்கு அளவில்லே. அவனுடைய இவ்வளவு வருஷ அநுபவத்தில் அவன் இன்று தான் முதல் தடவையாக 'ஆடு கிடையாது!' என்ற பதிலேக் கேட்கிருன்.

''சரி, அப்படியாஞ நான் துரைமாருக்குச் சமையல் பண்ணல்லே!'' என்று சொல்லிவிட்டுப் போஞன் பாவர்ச்சி.

மகீபத்ராமின் தாஞ அங்கிருந்து நான்கு மைல் தூரத்தில் இருந்தது. கொள்ளேக்காரர்களின் கொட்டத்தை அடக்கு வதற்காக அங்கே அனுப்பப்பட்டிருந்தார் அவர்.

முந்தின நாள் தான் கொள்ளேக்காரர்கள் மோஜணி கிராமத்தை தாக்கியிருந்தார்கள். இருந்தாலும் வேட்டைக்கு வந்திருந்த துரைகளின் சௌகரியத்தைக் கவனித்துக் கொள்வது தம் கடமை என்பதற்காக அவர் அவர்களுடைய கூடாரத்துக்கு வந்திருந்தார்.

வெள்ளேக்கார ராஜ்யத்தின் ஊழியன் என்ற முறையில் அவர் பாவர்ச்சியின் கோரிக்கைகளேப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அந்தக் காலத்தில் உத்தியோக உயர்வு பெற இரண்டே வழிகள் தாம் இருந்தன. ஒன்று துரையின் பாவர்ச்சி; இன்ஞென்று

துரைசானி அம்மா. இவ்விருவரிலும் பாவர்ச்சிக்கே செல்வாக்கு அதிகம்.

இருந்தாலும் பிராமணனின் இயற்கையான கர்வமும் பிடிவாதமும் மகீபத்ராமிடம் இன்னும் இருந்தன. அவர் துரைமார்களின் சாப்பாட்டுக்காக ஆடு கோழிகள் சப்ளை செய்ய மறுத்துவிட்டார். பாவர்ச்சி அவரிடம் இன்னும் என்னென்ன எதிர்பார்த்தானோ? அவரோ அவனுடைய முதல் தேவையையே பூர்த்தி செய்ய மறுத்துவிட்டார். அவருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமென்று தீர்மானித்தான் பாவர்ச்சி.

நடுப்பகலில் குதிரைகளின் குளம்பொலி கேட்டது பாவர்ச்சிக்கு ஆவேசம் வந்துவிட்டது.

30

இரண்டு உயர்ந்த அரபு ஜாதிக் குதிரைகள் வேர்வையில் நனைந்து கொண்டு மிக வேகமாக ஓடிவந்து சேர்ந்தன. இரண்டு வெள்ளை அதிகாரிகள் அவற்றிலிருந்து கீழே குதித்தார்கள். வேர்வை காரணமாக அவர்களுடைய பட்டுச் சட்டைகள் தோலுடன் ஒட்டிக் கொண்டு விட்டன. அப்படியும் அவர்கள் தங்கள் நிலையைப் பொருட்படுத்தாமல் குதிரைகளை அன்போடு தட்டிக் கொடுத்தார்கள். ஒரு தந்தை தன் பிள்ளையின் தலையைத் தடவிக் கொடுப்பதுபோல் அவர்கள் குதிரைகளைப் பிரியத்துடன் தடவிக் கொடுத்து அவற்றின் மூக்குகளை முத்தமிட்டார்கள்.

இருவரில் ஒருவன் பொலிடிகல் ஏஜண்டு; மற்றவன் அந்தப் பிரதேசத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த போலீஸ் அதிகாரி. பழைய போலீஸ் அதிகாரி மாற்றலாகிப் போய்விட்டான்.

இருவரும், ''சாப்பாடு கொண்டுவா, சீக்கிரம்!'' என்று உத்தரவிட்டுக்கொண்டே கூடாரத்திலிருந்த மேஜையின்மேல் உட்கார்ந்தார்கள்.

அப்போது பாவர்ச்சி அங்கு வந்து மகீபத்ராமின் நடத்தையைப் பற்றி அவர்களிடம் சொன்னான்.

துரைமார்கள் ஸ்தம்பித்துப் போனார்கள். பேட கிராமத்தில் கனிந்து கொண்டிருந்த தணல் இங்கே ஜ்வாலையாக எரியத் தொடங்கியது. சுரேந்திர தேவின் அடங்காப்பிடாரித்தனத்தைக் கூடப் பொறுத்துக்கொள்ள முடிந்த துரையால் பசியின் துன்பத்தைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

தங்கள் உடலை எவ்விதமான ஆபத்துக்கும் கஷ்டத்துக்கும் சோதனைக்கும் உட்படுத்திக் கொள்ளத் தயங்காத ஆங்கிலேயர் பசி வந்து விட்டால் குழந்தைகளைப் போல் தங்கள் வசமிழந்து விடுகிறார்கள். நன்றாகச் சாப்பிட்ட பிறகுதான் அவர்களுக்கு வீரமும் தைரியமும் ஏற்படுகின்றன. அதனால்தான் இந்தியர்கள் உபவாசம் இருப்பது பற்றிக் கேட்டு அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது. நல்ல சாப்பாட்டுக்குப் பிறகுதான் அவர்களால் நல்ல சொற்பொழிவுகள் நிகழ்த்தமுடியும்.

அவர்களுக்கு மகீபத்ராமின்மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவர் மட்டும் மனிதனாக இல்லாமல் மாடாக இருந்திருந்தால் அவரைப் பச்சையாகவே கடித்துக் குதறியிருப்பார்கள்.

''சரி, உடனே குதிரைச் சிப்பாயைக் கிராமத்துக்கு அனுப்பி ஆட்டுக் கறி வாங்கிக்கிட்டு வரச் சொல்லு!''

''அங்கே கசாப்புக்கடை மூடியிருக்கும்'' என்று சொன்னார் மகீபத்ராம்.

''ஏன்? யாரோட உத்தரவிலே?''

''என் உத்தரவிலே'' என்று மகீபத்ராம் பதிலளித்தார்.

''ஏன்?''

''கசாப்புக்கடைப் பகுதியிலேருந்து பருந்து மாமிசத் துண்டுகளை எடுத்துக்கிட்டுப் போய் இந்துக்களோட வீடுகளிலே போட்டுடறது. இதைத் தடுக்க ஏற்பாடு பண்ணும்படி கசாப்புக் கடைக்காரங்க கிட்டே சொன்னேன். அவங்க கேட்கல்லே. நேத்து ஒரு பருந்து எலும்புத் துண்டை எடுத்துக்கிட்டுப் போய்க் கோயிலுக்குள்ளே போட்டிடுத்து. ஆகையாலே நான் கசாப்புக்கடைகளையே மூடிட்டேன்.''

''யூ டேம் டாங்கீ!''

''தயவு செஞ்சு நாக்கை அடக்கிப் பேசுங்க!'' என்று உறுதியான குரலில் நிமிர்ந்த நெஞ்சுடன் சொன்னார் மகீபத்ராம்.

''என்ன?'' என்று கேட்டுக்கொண்டே இரண்டு வெள்ளையர்களும் எழுந்தார்கள். அவர்கள் அவரைத் திட்டுவதற்காக ஒரு பொருத்தமான வார்த்தையைக் கண்டுபிடிப்பதற்குள் மகீபத்ராம் தாம் அணிந்திருந்த பிச்சுவாவை இடுப்பிலிருந்து அவிழ்த்தார். அவருடைய செய்கை அவர்களைத் திகைக்கச் செய்தது.

அவர் பிச்சுவாவை அவர்களுக்கு முன்னால் வைத்துவிட்டு, 'துரைமார்களே! இன்னும் என்னைத் திட்டறதுக்கு முன்னாலே இதைத் திரும்ப வாங்கிக்கிட்டு என்னை உடனே டிஸ்சார்ஜ் செஞ்சுடுங்க!'' என்றார்.

காக்கி கோட், கால்சராய், தலைப்பாகை ஆகியவற்றை அணிந்து கொண்டு அடக்கமாக நின்று கொண்டிருந்த அந்த ஐம்பத்திரண்டு வயதுப் பிராமணன் துரைமார்களை வாய் திறக்க முடியாமல் செய்து விட்டான்!

வெள்ளையர்கள் ஒருகணம் தயங்கினார்கள்.

அந்தக் கணத்தைப் பயன்படுத்திக்கொண்டு மகீபத்ராம், "சர்க்கார் எனக்கு இந்தப் பிச்சுவா பரிசளித்தது ஆடு சப்ளை செய்ததற்காக அல்ல!'' என்றார் தைரியமாக.

''நீ உனக்குக் கொடுத்த பரிசை அவமானப்படுத்திட்டே'' என்று கத்தினான் ஒரு துரை.

''இப்போ உங்க உத்தரவு என்ன?''

''இன்றுமுதல் நீ பௌஜ்தார் இல்லே, இரண்டாவது கிரேடு ஜமாதார்தான்.''

சற்றும் சலனமின்றி இந்த உத்தரவை ஏற்றுக் கொண்டார் மகீபத்ராம். அவர் அப்போது துரைகளுக்குப் போட்ட சலாமைப் பார்த்தால் அவருக்கு உத்தியோக உயர்வுதான் கிடைத்திருக்கிறதோ என்று தோன்றும்.

''அட்டென்ஷன்! எபௌட்டர்ன்! க்விக் மார்ச்!'' என்று ஒரு துரை குரைத்தான்.

உத்தரவுக்கு இணங்கக் காலடிகளை அளவாக வைத்துக் கொண்டு கூடாரத்திலிருந்து வெளியேறினார் மகீபத்ராம். என்ன நடந்தது என்று அவருக்குப் புரியவில்லை. பௌஜ்தார்ப் பதவியை இழந்தது சாவுக்கொப்பானதாகத் தோன்றியது அவருக்கு. இந்த அவமானத்துக்குப் பிறகு உயிர் வாழ்வது எப்படி? இனி எப்படி வெளியுலகத்துக்குத் தம் முகத்தைக் காட்டுவார் அவர்.

அந்தக் காலத்து மனிதர்களுக்கு மான உணர்வு உயிரைக் காட்டிலும் மதிப்புள்ளதாக இருந்தது.

மகீபத்ராம் தாணாவுக்குத் திரும்பியபோது அங்கே வெள்ளையுடை அணிந்த ஒருவன் ஒரு குதிரையுடன் நின்று கொண்டிருந்தான். அவன் அவருடைய கையில் ஒரு சீல் வைத்த கடிதத்தைக் கொடுத்து விட்டுத் தணிந்த குரலில் சொன்னான்: "ஜாக்கிரதை! இதுக்குள்ளே ஒரு மனிசனோட தலை இருக்கு!''

மகீபத்ராம் இந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டார். அவர் கக்கூசுக்குள் நுழைந்து கொண்டு கடிதத்தைத் திறந்து படித்தார். அதில் எழுதப்பட்டிருந்தது:

''வீரச் சிப்பாயே!

"இந்த நாட்டின் துர்ப்பாக்கியம் ஒரு வீரன் மற்றொரு வீரனின் உயிரைப் போக்கத் தயாராயிருப்பதுதான். எல்லா வீரர்களேயும் சமாளிக்கக்கூடிய ஒரு மகாவீரன் இப்போது வெளியிலிருந்து வந்திருக்கிறுன். நீங்கள் கொஞ்சகாலம் அமைதியாக இருக்க முடியுமா? அப்படியிருந்தால் அதற்குள் லக்ஷ்மண் வேறு ஓர் இடத்துக்கு அனுப்பப்பட்டுவிடுவான். உங்கள் சேவை வீணுகாது.

இப்படிக்கு

இந்த நாட்டின் ஆண்மையை நேசிக்கும் ஒரு குர்ஜர்."

மகீபத்ராமின் உள்ளத்தில் ஆசைகள் வெள்ளமாக எழுந்தன. சுரேந்திர தேவைத் தவிர வேறு யாரும் இந்தக் கடிதத்தை எழுதியிருக்க முடியாது. ஏஜண்ட் துரை நான்கு மைல் தூரத்தில்தான் தங்கியிருக்கிறுன். அவனிடம் இந்தக் கடிதத்தைக் காட்டி இதன் மர்மத்தை வெளியிட்டு விட்டால் அவர் இழந்துவிட்ட பௌஜ்தார்ப் பதவி மறுபடி அவருக்குக் கிடைத்துவிடும். பிச்சுவா மறுபடியும் அவருடைய இடைக்கு அழகு செய்யும். ஏஜண்டும் மற்றத் துறைகளும் சுரேந்திர தேவின்மேல் மிகவும் கோபமாக இருக்கிறுர்கள். அவர்களுக்கு இந்தக் கடிதம் ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்.

இதில் குற்றம் என்ன இருக்கிறது? அரசாங்க ஊழியன் என்ற முறையில் அவருடைய கடமைதானே இது! கொள்ளேக்காரர்களே தப்புவிக்க முயற்சிகள் நடப்பதைத் துரையிடம் சொல்லாவிட்டால் அவர் தின்ற உப்புக்குத் துரோகம் செய்ததாகும்.

சுரேந்திர தேவுக்குத்தான் என்ன தைரியம்! மகீபத்ராமை நம்பிக்கைத் துரோகத்துக்குத் தூண்டுகிறுரே! தம்முடைய சதித் திட்டத்தில் அவரையும் அல்லவா சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறுர்!

ஆனுல் இதில் சுரேந்திர தேவின்மேல் என்ன குற்றம்? அவர் மகீபத்ராமின்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறுர். அந்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்யலாமா?

இதில் நம்பிக்கைத் துரோகம் என்ன இருக்கிறது? கொள்ளேக்காரர்களுடன் கூட்டுச் சேர்ந்தவரைக் காட்டிக் கொடுப்பதில் தவறு என்ன? யார் கண்டார்கள், இந்தக் கொள்ளேக்காரர்கள் தாங்கள் கொள்ளேயடித்த சொத்துக்களேயெல்லாம் சுரேந்திர தேவிடம் கொண்டு போய்க் கொடுக்கிறுர்களோ என்னவோ? இந்த ராஜா—மகாராஜாக்கள் எதற்கும் துணிந்தவர்கள். சுரேந்திர தேவும் சுந்தர்பூரின் டாகுரும் நேற்றுத்தானே சந்தித்துப்

பேசியிருக்கிறார்கள்! அவர்கள் நிச்சயம் சர்க்காருக்கு விரோதமாக ஏதோ சதி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மகீபத்ராம் சர்க்கார் கட்சியில் இருப்பதா, ,ராஜாக்களின் கட்சியில் இருப்பதா? அவருக்குச் சாப்பாடு போடுவது சர்க்கார் தானே! அவருடைய மேலதிகாரி அவர் மேல் கோபித்துக் கொண்டு அவருடைய பௌஜ்தார்ப் பதவியைப் போக்கிவிட்டான். அதிகாரியின் நிலையில் ஒரு ராஜா இருந்திருந்தால் என்ன செய் திருப்பான்? அவருக்குக் கெட்ட பெயர் சூட்டியிருப்பான். அதோடு விட்டு விடாமல் அவரை அணு அணுவாக வெட்டிச் சிதைத்திருப்பான்.

இந்த ராஜாக்களைவிட சர்க்கார் எவ்வளவோ மேல். சர்க்கார் நினைத்தால் அவருக்கு மறுபடியும் பௌஜ்தார்ப் பதவியைக் கொடுக்க முடியும். சர்க்கார் ஒரு சாதாரண சிப்பாய்க்குக் கூட எவ்வளவு சக்தியும் கௌரவமும் கொடுத்திருக்கிறது! அதனால் தான் பெரிய பெரிய ராஜா, மகா ராஜாக்கள்கூட ஒரு சாதாரண சிப்பாயிடம் நடுங்குகிறார்கள். அவர்களுக்கு முன்னால் அவன் நிமிர்ந்து நிற்கிறான். இது என்ன சாதாரண விஷயமா?

இந்தச் சதியைப் பகிரங்கப்படுத்திவிட வேண்டியதுதான். இதில் யோசிக்க என்ன இருக்கிறது? அவர் சுரேந்திரதேவின் பெயரையே எடுக்க வேண்டாம். கடிதத்தைத் துரையிடம் கொடுத்துவிட்டாலே போதும்

அவர் கக்கூசிலிருந்து வெளியே வந்து தன் குதிரையின்மேல் சேணத்தைக் கட்டினார். அவர் குதிரையின்மேல் ஏறப்போகும் போது ஒரு பிராமணன் பிச்சை கேட்பது காதில் விழுந்தது. இதற்குள் பிராமணனே அவரை அணுகிவிட்டான்.

''இப்போ உங்களோடே பேச எனக்கு நேரம் இல்லை. சரி, உங்களுக்கு ஜோசியம் தெரியுமா?''

''உம், தெரியும்.''

''கைரேகை பார்க்க?''

''அதுவும் தெரியும்.''

''சரி, உள்ளே வாங்க.''

இருவரும் உள்ளே போனதும் மகீபத்ராம், ''என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

பிராமண வேடதாரி, ''சீக்கிரம் கிளம்புங்க! அவனும் இன்னும் ஒம்பது பேரும் சந்தர்வர் குகையிலே மயக்கமாக் கிடக்காங்க'' என்று கூறினான்.

''ஏன் மயக்கமா இருக்காங்க?''

''ஏன்ணு? வயித்துக்குள்ளே லட்டு போயிருக்கே!''

''என்ன லட்டு?''

''அமிர்தத்திலே பண்ணின லட்டு இல்லே.''

''அப்படீன்ணு?''

''அதிலெ விஷம் கலந்திருந்தது.''

''ஜகு! யார் கலந்தாங்க?''

''அதைப்பத்தி உங்களுக்கு என்ன? நான்தான் அவங்களுக்குச் சாப்பிட லட்டு கொடுத்தேன். அவங்க சாப்பிடுட்டுத் தள்ளாட ஆரம்பிச்சதும் குதிரையிலே ஓடிவந்தேன்.''

மகீபத்ராமின் முகம் கறுத்துவிட்டது. ''அட பாவி, விஷமா கொடுத்தே?''

''ஆமா. நீங்க என்ன அவனைத் துப்பாக்கிச் சண்டை, கத்திச் சண்டை போட்டுக் கொல்லலாம்னு நினைச்சுக்கிட்டு இருந்தீங்களா?''

''ஆமா.''

''நல்லா இருக்கு, போங்க! சரி, இப்போ நேரத்தை வீணுக்கா தீங்க உடனே அங்கே போய்ச் சேருங்க.''

''எதுக்கு?''

''கொள்ளைக்காரங்க மேலே உங்க பாராக்கிரமத்தைக் காண்பிக்கத்தான்.''

''சீ, சீ! நீ என்ன இருந்தாலும் ரொம்பக் கோழைத்தனமா நடந்துக்கிட்டிருக்கே, ஜகுபகீ!''

''அதுக்காக நான் கவலைப்படல்லே. சரி, நீங்க உடனே கிளம்பறீங்களா இல்லையா? வேறே யாராவது உங்களுக்கு முன்ணலே அங்கே போய்ச் சேர்ந்துட்டா நீங்க கையைப் பிசைஞ்சுக்கிட்டு இருக்க வேண்டியதுதான்.''

''ஜகு பகீ, இதோ பாரு! நான் இந்த மாதிரி வீரத்தைக் காட்டிக்க விரும்பல்லே.''

''என்ன சொல்றீங்க, எஜமான்?''

''லக்ஷ்மணுக்கு விஷமா? அந்த வீரனுக்கா விஷம்? நான் அவனுக்குச் சொல்லிவிட்டு நேருக்கு நேர் சண்டை போட நினைச்சிருந்தேன். இந்த விவகாரம் எனக்கு வேண்டாம்! சிவ சிவா! ராம ராமா!''

ஜகு பகீக்கு எரிச்சலாக இருந்தது. அவன் தரையில் காறி யுமிழ்ந்து விட்டுச் சொன்ஞன்: ''அப்ப நீங்க என்னை இதிலே அநாவசியமா மாட்டிவிட்டுட்டீங்க, எஜமான்!''

''கவலைப்படாதே, ஜகு! நேரே தாந்த்லிச் சுழலுக்குப் போ! அங்கே ஏஜண்டு துரை, போலீஸ் துரை ரெண்டு பேரும் இருக்காங்க. அவங்க கிட்டே சமாசாரத்தைச் சொல்லு. கொள்ளைக்காரங்களுக்கு விஷம் கொடுத்து அவங்களைப் பிடிச்ச பெருமை துரைமார்களுக்கே சேரட்டும். நீ எங்கிட்டேயும் இந்தச் சமாசாரத்தைச் சொன்னது அவங்களுக்குத் தெரிய வேண்டாம்.''

'இந்த ஆள் பைத்தியமா இருக்கானே! நல்ல சந்தர்ப்பத்தை வேணுமின்னு நழுவவிடறானே?' என்று நினைத்தவாறே தாந்த்லிச் சுழலை நோக்கிப் புறப்பட்டான், பிராமண வேடதாரி ஜகு.

மகீபத்ராம் குதிரையிலிருந்து சேணத்தை அவிழ்த்தார். மாலை நேரமாகிவிட்டது. காலையில் அவர் பூஜை செய்யவில்லை. ஆகையால் அவர் இப்போது ஸ்நானம் செய்தார். ஸ்நானம் செய்யும்போது பயபக்தியுடன் சாந்தி சுலோகங்களை உச்சரித்தார்.

பூஜை மேடையில் நெய்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவர் அதன் ஜ்வாலையில் தனக்கு வந்திருந்த கடிதத்தை எரித்தார். எரிந்துபோன கடிதத்தைக்கூடப் படிக்க முடியுமென்று போலீஸ் அதிகாரியான அவருக்குத் தெரியும். ஆகையால் எரிந்த துண்டைக் கையால் கசக்கிச் சாம்பலாக்கினார். வக்கீலின் வாதத் திறமைக் காரணமாகத் தூக்குத் தண்டனையிலிருந்து விடுதலை பெற்று விட்ட கைதியின் மனநிலை அவருக்கு இப்போது ஏற்பட்டது. உசிதம், அனுசிதம், கடமை, துரோகம் என்பவை போன்ற பிரச்னைகள் அவரைத் துன்புறுத்தவில்லை.

பூஜைக்காக ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருந்த அவருடைய பிரும்மதேஜஸ் துரைமார்களின் சாப்பாட்டு மேஜைக்கு முன்னால் அவர் காட்டிய தேஜஸிலிருந்து வேறுபட்டிருந்தது.

எப்போதோ இடி விழுந்ததால் பிளந்து போயிருந்த மலைப் பகுதியைச் சந்தர்பா குகை என்று அழைத்தார்கள். அங்கே லக்ஷ்மண் விழுந்து கிடந்தான். அவனுடைய கண்கள் திறந்திருந்தன. ஐந்தாறு வருஷங்களுக்கு முன்னால் மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மண பாயி இல்லை அவன். இரண்டு வருடங்களுக்கு முந்தைய சாதுத்தன்மையும் மென்மையுங் கொண்ட ஒரு ஸ்திரீயின் சகோதரனுமல்ல இப்போது. அவன் நெஞ்சில் இப்போது வீரம் ஊற்றாகப் பெருகிக் கொண்டிருந்தது. அவனுடைய குரல் ரணபேரிகைபோல் முழங்கிக் கொண்டிருந்தது. சில மியாணு வீரர்கள் அவனுடைய கூட்டாளிகளாக இருந்தார்கள். அவனுடைய குழுவில் எல்லாரும் ஜாடேஜி

மொழியையே பயன்படுத்தினர்கள். அவர்களில் யாருமே ஆண்மைக்கும் வீரத்துக்கும் பொருந்தாத வார்த்தைகளை உபயோகப்படுத்துவதில்லை.

ஜகு பகீ லக்ஷ்மணுக்கு மிகவும் நம்பிக்கையான ஒரு கோலி. லக்ஷ்மண் கொஞ்சமும் தயக்கமில்லாமல் ஜகு கொடுத்த விஷம் கலந்த லட்டுக்களைச் சாப்பிட்டுவிட்டான். வெயில் சுட்டுப் பொசுக்கும் நண்பகலில் இவ்வாறு லக்ஷ்மணையும் அவனுடைய சகாக்களையும் விஷத்தால் மயங்கச் செய்துவிட்டு மகீபத்ராமிடம் ஓடி வந்திருந்தான் ஜகு.

மயக்கம் ஏற்பட்டபோது லக்ஷ்மணுக்கு மட்டும் ஏதோ சந்தேகம் தோன்றியது. அவன் விரலைத் தொண்டைக்குள் விட்டுக் கொஞ்சம் வாந்தியெடுத்தான். அவன் உண்ட நஞ்சு கலந்த உணவு கொஞ்சம் வெளியேறியது. அவன் சற்று மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்தபோது எதிர்ப்புறத்துக் குன்றின்மேல் இரண்டு துரை மார்கள் துப்பாக்கியுடன் நிற்பதையும் அவர்களுக்குப் பின்னல் சுமார் இருபத்தைந்து போலீஸ்காரர்கள் நின்றிருப்பதையும் கண்டான்.

லக்ஷ்மணுல் அசைய முடியவில்லை. பக்ஷவாதம் ஏற்பட்டதுபோல் அவனுடைய உடலுறுப்புக்கள் செயலிழந்து கிடந்தன. அவனுடைய இரண்டு கைகள் மட்டும் சற்று அசைந்தன. அவனுல் துப்பாக்கியைச் சரியாகப் பிடித்துக் கொள்ளமுடியவில்லை.

''ஒரு குண்டுகூடச் சுடாமே நான் செத்துப் போகணுமா? நான் உசிரோடே இருக்கேன்னு இவர்களுக்குக் காண்பிக்க வேண்டாமா? என் சகாக்களிலே ஒருத்தனுவது எழுந்திருந்து என் கையிலே துப்பாக்கியை வைச்சு நல்லாப் பிடிச்சுக்க மாட்டானு? யாராவது எழுந்திருங்களேன்!'' என்று அவன் கத்தினன்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அவன் பின்னுலிருந்து யாரோ அவன் கையில் தோட்டா போட்டு நிரப்பிய துப்பாக்கியை வைத்து அழுத்தினர்கள். லக்ஷ்மண் பின்னல் திரும்பிப் பார்க்க முயற்சி செய்தான். ஒரு மனித உருவம் மட்டும் அவனுக்குப் புலப்பட்டது. ஆனல் முகத்தை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

''யாரது?'' என்று லக்ஷ்மண் திணறிக் கொண்டே கேட்டான்.

''உன்னேட தங்கை!''

இந்த வார்த்தைகள் லக்ஷ்மணனின் காதில் விழவில்லை. அவன் துப்பாக்கியின் குதிரையில் விரலை வைத்தான். அவன் அருகில் இருந்தவள் குறி வைத்துச் சுட அவனுக்கு உதவியவாறு,

''உன் சகோதரிகளைக் கெடுக்கும் வெள்ளைக்காரங்களைச் சுட்டுக் கொல்லு!'' என்றாள்.

குன்றின் உச்சியில் குண்டின் ஒலி கேட்டது. ஆனால் யாரும் குண்டு பட்டு விழவில்லை.

லக்ஷ்மணனுக்கு அருகில் நின்று கொண்டிருந்த ஸ்திரீ துப்பாக்கியில் தோட்டாக்களை நிரப்பி நிரப்பி அவனுடைய கையில் கொடுத்துக் கொண்டிருந்தாள். துப்பாக்கியால் சுட்டவாறே லக்ஷ்மண் உயிர் விட்டான். சாகும் நேரத்தில் அவன், ''வா, தங்கச்சி! நாம் மாடு மேய்க்கப் போகலாம். இந்தச் சங்கடமெல்லாம் நமக்கு வேண்டாம்'' என்று அவளிடம் சொன்னான்.

நாற்புறமும் குண்டுகள் விழும் ஓசையைக் கேட்டுத் துரைமார்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''எல்லாரும் செத்துப் போயிட்டாங்கன்னுன்னு நினைச்சோம்! இந்தக் குண்டெல்லாம் போடறது யாரு?''

குண்டுச் சத்தம் ஒய்ந்ததும் துரைகள் முன்னால் வந்து பார்த்தார்கள்.

காவியுடை அணிந்திருந்த ஒரு ஸ்திரீ லக்ஷ்மணனின் உடலைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவனுடைய தோளின் மேல் துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தது.

ஒரு துரை, ''இன்னும் உசிரோடே இருக்கான், சுடு!'' என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கியால் குறி வைத்தான்.

இன்னொரு துரை, ''வேண்டாம்? சுடாதே! அவனுக்குப் பின்னாலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கா. குண்டு அவ மேலே பட்டுடும்!'' என்று கூறித் தடுத்தான்.

''அந்தப் பிசாசுக்காக ஏன் கவலைப்படறே?'' என்று சொல்லிக் கொண்டே முதல்வன் சுட முற்பட்டான். ஆனால், மற்றவன் அவனுடைய கையை வேறு பக்கமாகத் தள்ளி விடவே குண்டு கறுப்பும் பழுப்புமாகப் புகையைக் கக்கிக் கொண்டு வெட்ட வெளியில் பாய்ந்தது.

கொள்ளைக்காரனின் கைகளிலிருந்த துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டும் வெளிப்படவில்லை. அவன் யோகத்தில் ஆழ்ந்திருப்பவனைப் போல் அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

துரைமார் இன்னும் அருகில் வந்து பார்த்தார்கள். லக்ஷ்மண் இறந்து போயிருந்தான். அவனுடைய உடல் குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து பல இடங்களில் ரத்தம் வந்து கொண்டிருந்தது.

பெரிய துரை தன் குதிரையிலிருந்து கீழே குதித்து ஓடி வந்து தன் பூட்ஸ் காலால் லக்ஷ்மணனின் உடலை உதைத்துத் தள்ளி விட்டான்.

தன் பூஜைப் பொருள்களையே அவன் உதைத்துத் தள்ளி விட்டானென்ற பாவனையில் அந்த ஸ்திரீ அவனை உறுத்துப் பார்த்தாள். கீழே உருண்டு கிடந்த லக்ஷ்மணனின் தலையைத் தாங்கிக் கொள்ள அவள் முன்னே நகர்ந்தபோது துரையும் ஏதோ திட்டிக் கொண்டே முன்னால் வந்தான். ஸ்திரீ பரிதாபமாக அருகிலிருந்த போலீஸ் படையைப் பார்த்தாள்.

''எஜமான்!'' சிப்பாய்களின் ஹவில்தார் கூப்பிட்டான். ''உங்களைக் கும்பிடறோம்! பொணத்தை அவமரியாதை செய்யாதீங்க!'' என்றனர்.

பெரிய துரைக்குக் கோபம் வந்து விட்டது. ''நீ வாயை மூடு!'' என்று கத்தினன் அவன்.

சிறிய துரை தன்னுடைய காக்கித் தொப்பியைத் தலையிலிருந்து எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான்.

சற்றுத் தூரத்திலிருந்த குதிரை வீரர்கள் இப்போது குதிரைகளிலிருந்து இறங்கினர்கள். அவர்களில் ஒருவன், நரைத்த தாடியுடைய நாயக், ''எஜமான்! என் பேர் சையது. நான் சர்க்கார் வேலையிலே மௌவர், வாலா, ராய்தே இன்னும் எவ்வளவோ இடங்களிலே சண்டை போட்டிருக்கேன். வெள்ளைக்கார அதிகாரிகளும் எங்க கூட இருந்தாங்க. யாரும் செத்துப் போனவங்களை அவமரியாதை செய்யறதில்லே. உசிரோட இருக்கறவரையிலே சண்டை போடலாம், பகைமை பாராட்டலாம். ஆனல் செத்துப் போனப்பறம் எதிரிகூட அல்லா மடியிலே போய்ச் சேர்ந்துடறான். இந்தப் பாடத்தைத்தான் எங்க மதம் சின்ன வயசிலிருந்தே எங்களுக்குச் சொல்லிக் கொடுக்கறது. செத்துப் போனவனுக்கு மரியதை கொடுத்து, செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்யறது தான் முறை'' என்று கூறினன்.

''இந்த ஸ்திரீ உன்னைத் தூண்டி விடறா போலேயிருக்கு'' என்று துரை சொன்னன்.

''அவ மேலே ஒரு குத்தமும் இல்லே. மனிசன் உசிரோடே இருக்கறபோது நாய் மாதிரி புழுதியிலே புரண்டுக்கிட்டு இருக்கலாம். ஆனா, செத்தப்பறம் அவனைப் புழுதியிலே புரட்ட யாருக்கும் உரிமை இல்லே!'' என்றான் சையது.

சிறிய துரை நாயக்கைச் சமாதானப்படுத்தினன். ''நீ சொல்றது வாஸ்தவந்தான். ஒரு மாட்டு வண்டி கொண்டு வா. நாம இந்தப்

பொணத்தை அதிலே போட்டு ராஜ்கோட்டுக்குக் கொண்டு போவோம். மத்த பொணங்களையும் தூளிகளில் போட்டுக் கொண்டு போகலாம்.''

பெரிய துரை சிறிய துரையிடம், ''வில்லியம்ஸ், இந்த நாய்கள் இங்கே இல்லேன்னு இந்தப் பொம்பளையைக் காலாலே உதைச்சு மிதிச்சிருப்பேன். அதிலே எனக்குத் திருப்தி ஏற்பட்டிருக்கும்'' என்று ஆங்கிலத்தில் சொன்னான்.

''வாட்சன், நீ பசியாலே நிதானந் தவறிப் போயிருக்கே! அரசாங்க நிர்வாகிங்கற முறையிலே நம்ம கடமையை மறக்கலாமா?''

பெரிய துரை உடனே அடங்கி விட்டான்.

சிறிய துரை சொன்னது உண்மைதான். இரண்டு வேளைகளாக அவர்கள் சரியாகச் சாப்பிடவில்லை. பசி ஏற்பட்டால் நிதானம் தவறி விடுகிறது.

சிப்பாய்கள் தூளிகளில் பிணங்களைத் தூக்கியபோது பெரிய துரையும் தன் தொப்பியைத் தலையிலிருந்து கழற்றிக் கையில் எடுத்து வைத்துக் கொண்டான்.

எல்லோரும் புறப்பட்டார்கள். அந்த வீர மங்கையும் அவர்களுடன் சென்றாள்.

இதற்குள் பறவைகள் அநேகமாகத் தங்கள் தங்கள் கூடுகளில் அடைந்து விட்டன. ஒரு காகம் கொள்ளைக்காரர்களில் ஒருவனுடைய கறுப்புக் கைக்குட்டையைக் கொத்திக் கொண்டு பறந்தது. கைக்குட்டை அதன் கால்களில் சிக்கிக் கொள்ளவே அது தத்தளித்தது. விஷயம் புரியாத மற்றக் காகங்கள், 'கா, கா' என்று கத்திக் கொண்டு அதைக் கொத்த வந்தன.

31

விக்ரம்பூர்க் கடலில் ஒரு விசாலமான துறைமுகம் இருந்தது. அதன் வலது பக்கத்தில் பெரிய பெரிய கறுப்புப் பாறைகள் தண்ணீரில் பாதி அமுங்கிக் கிடந்தன. அவற்றைப் பார்த்தால் எருமைக் கூட்டம் தண்ணீருக்குள் மூழ்கியிருப்பது போல் தோன்றும். ஆகையால் ஜனங்கள் அந்த இடத்துக்குப் 'பேன்ஸ்லா' என்றே பெயர் வைத்திருந்தார்கள்.

நாள் முழுதும் அங்கு மோதிக் கொண்டிருக்கும் அலைகளால் நுரை உண்டாகிக் கொண்டே இருந்தது. பிரும்மாண்டமான மகிஷாசுரன் அசை போட்டுக் கொண்டிருப்பது போல, எருமைகளின் கூட்டமொன்று அந்த வழியே சென்றுகொண் டிருந்தபோது அவற்றின் மேல் சமுத்திரம் பொங்கி வந்து சில எருமைகள் வெளியே ஓடி வந்து விட்டாற்போலும் சில அமுங்கிப் போனாற் போலவும் அந்த இடம் காட்சியளித்தது. பாறைகளின் வரிசை ஐந்தாறு மைல்களுக்குத் தண்ணீருக்குள் நீண்டு போயிருந்தது. ஒரு கப்பல் அந்த இடத்தில் மோதி உடைந்து போனதாகச் சொல்லிக் கொண்டார்கள்.

மாலை நேரத்தின் மஞ்சள் வெயிலில் ‘பேன்ஸ்லா’ பாறைகளைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான் பிளுகி. அரசாங்க அதிகாரிகள் அவனிடம் துறைமுகத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஒரு படகுக்காரன் கப்பல் மோதி உடைந்த சம்பவத்தைப் பெரிதுபடுத்தி விவரித்துக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் மீனைப்போல் பளபளத்தன. சற்றுத் தூரத்தில் அரசாங்க வண்டி ஒன்று நின்று கொண் டிருந்தது.

தேவுபாவை நான்காம் மனைவியாகக் கல்யாணம் செய்து கொண்டிருந்த கிழட்டு டாகுர் தம் இளம் மனைவியின் ஒவ்வொரு விருப்பத்தையும் நிறைவேற்றி வைக்கத் தயாராயிருந்தார். அப்படிச் செய்யா விட்டால் இந்தக் கல்யாணத்தின் சந்தோஷமே போய்விடும் என்று அவருக்குத் தெரியும். அவருடைய பழைய திருமணங்களின் அநுபவம் இப்போது அவருக்குக் கைகொடுத்தது.

ஆகவேதான் தேவுபாவின் விருப்பத்தை அறிந்ததுமே அவர் பிளுகியை விக்ரம்பூருக்கு வரவழைத்தார். அவன் அரசாங்க விருந்தாளியாக நடத்தப்பட்டான். அவன் தங்கியிருந்த விருந்தினர் விடுதிக்கு ஒவ்வொரு நாளும் நான்கு பெரிய அல்பான்ஸோ மாம்பழங்கள் அனுப்பப்பட்டன.

விக்ரம்பூர் வந்ததுமே பிளுகி டாகுர் சாகேபையும் ராணியையும் சந்தித்தான். பிளுகி பாரிஸ்டராக வேண்டுமென்பது ராணியின் விருப்பம். பிளுகி பள்ளியில் நடித்திருந்த நாடகத்திலிருந்தே அவனிடம் வக்கீலுக்குத் தேவையான பேச்சுத் திறமையும் நடிப்புத் திறமையும் இருப்பதைப் புரிந்து கொண்டிருந்தாள் அவள்.

“அரசாங்கத்திலேருந்து உனக்கு உதவி கிடைக்கும்” என்று பிளுகிக்கு உற்சாகமூட்டினாள். பிறகு பக்கத்திலிருந்த கணவனை, “என்ன, நான் சொல்றது சரிதானே?” என்று கேட்டாள்.

''நிச்சயமாக! இந்த உதவி சரியான பாத்திரத்துக்குத்தான் போய்ச் சேருகிறதென்பதில் சந்தேகமே இல்லை'' என்ருர் டாகுர் சாகேப். ''வக்கீல் வேலை என்ன? படிப்பிலே கெட்டிக்காரஞ யிருந்தா ஜட்ஜ் வேலையே கொடுக்கலாமே!''

பிஞகியின் உள்ளத்தில் பற்பல ஆசைகள் பிறந்தன. தன் வாழ்வில் இப்போதே பல சாதனைகள் நிகழ்ந்து விட்டாற்போலத் தோன்றியது அவனுக்கு.

''ஆஞ, அந்த வேலைக்குத் தயாராகக் குறைஞ்சது அஞ்சு வருஷ மாவது ஆகும்'' என்று டாகுர் சாகேப் சொன்னபோதுதான் அவன் கனவிலிருந்து விடுபட்டு நிஜ உலகத்துக்கு வந்தான்.

படிப்பு விஷயத்தில் அநுமார் பாய்ச்சல் உபயோகப்படாது.

"பாரிஸ்டர் ஆகத்தான் வேணுமா? அரசாங்கத்திலே நீதி இலாகாவிலே வேலை பார்க்க இந்த ஊர்ப் படிப்பு போதாதா?'' என்று ராணி கேட்டாள்.

"ஏன் போதாது? பேஷாப் போதும்!" என்று டாகுர் சொன்ஞர். "ராஜ்யம் என்னுடையதுதானே! நான் சொன்ஞல் சரிதான். எதுக்கும் முதல்லே மெட்ரிக் படிப்பு முடியட்டும்.''

ராணியும் பிஞகியும் சிறு வயதில் சகோதர சகோதரிகள்போல் ஒன்ருக வளர்ந்து விளையாடிஞர்கள் என்பதும் அதஞல் ராணி பிஞகிக்கு உதவ விரும்புவதும் அவருக்குத் தெரியும். அவரிடம் பொருமை கிடையாது. இது அவருடைய ஒரு நல்ல குணம். அதஞல்தான் அவர் துணிவுடன் பர்தா முறையைக் கைவிட்டிருந் தார். பிஞகியின் நடத்தையும் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருடைய பார்வையில் அமைதி நிலவியது, நடத்தையில் மென்மை இருந்தது. எதிலும் நிதானமாகச் செயல்பட முடிந்தது அவரால்.

'இங்கே தேவுபா சௌக்கியமாக இருக்கிருள். அவள் விரும்பிய தெல்லாம் இங்கே கிடைக்கிறது. இதைத் தவிர எனக்கு வேறென்ன வேண்டும்?' என்று நினைத்தான் பிஞகி.

* * *

யுத்த நிலைமை காரணமாக ஓர் இரவு விக்ரம்பூர்த் துறை முகத்தின் கலங்கரை விளக்கு அணைக்கப்பட்டது.

விளக்கு அணைக்கப்பட்ட செய்தி வீட்டுக்கு வீடு பரவியது. ஊர்க் காரர்கள் பயந்துபோய் விட்டார்கள். ''இங்கிலீஷ்காரன் ஆட்சி முடிஞ்சு போச்சு; ஜெர்மன்காரன் வந்துவிட்டான்!'' என்று தீர்மானித்து விட்டார்கள் அவர்கள்.

கலங்கரை விளக்கு அணைவது அவர்களுக்கு ஓர் அபூர்வமான நிகழ்ச்சி. எவ்வளவு வருஷங்களாக அது எரிந்து கொண்டிருந்தது! ராஜாக்கள் இறந்தபோது கூட அது அணைக்கப்படவில்லை. இப்போது மிகவும் பெரிய ஆபத்து ஒன்று நேர்ந்திருக்க வேண்டும். அதனால்தான் விளக்கை அணைத்துவிட வேண்டியதாகி விட்டது.

'எம்டன்' என்ற ஒரு ஜெர்மன் கப்பல் சமுத்திரத்தில் ரகளை செய்து கொண்டிருந்தது. அது பெரிய பெரிய ஆங்கிலக் கப்பல்களை உடைத்துப் பொடி செய்து கொண்டிருந்தது. துறைமுகங்களுக்குள் புகுந்து நாசம் விளைவித்துக் கொண்டிருந்தது. பம்பாயில் எல்லா இடங்களிலும் விளக்குகளை அணைத்து விட்டார்கள். அங்கிருந்த ஜனங்கள் எம்டனுக்காகப் பயந்து கொண்டிருந்தார்கள். 'கடல்களின் ராணி' என்று தன்னைச் சொல்லிக் கொண்ட இங்கிலாந்தால் அந்த ஒரு கப்பலை ஒடுக்க முடியவில்லை. சௌராஷ்டிரத்தின் மூலை முடுக்குகளில் கூட மக்கள் சர்க்காரைக் கேலி செய்தார்கள். சதுரங்க விளையாட்டில் ஜெர்மன் கட்சியில் விளையாடுபவர்கள் தங்கள் மீசைகளை முறுக்கி விட்டுக்கொண்டார்கள். சூர்யபூரின் டாகுருக்குத் தன் ராஜ்யத்தை ஒட்டியிருந்த பகுதியை விழுங்க இது நல்ல தருணமாகத் தோன்றியது.

ஆங்கில அரசாங்கம் அப்படியொன்றும் பலம் பொருந்தியதல்ல என்ற விஷயம் பினாகியின் அரைகுறை அறிவுக்குக் கூடப் புலப்பட்டது. இங்கிலீஷ்காரர்களையும் தோற்கடிக்கக் கூடியவர்கள் உலகத்தில் இருந்தார்கள் என்பது தெளிவாகி விட்டது. இங்கிலீஷ்காரனின் தொப்பியைக் கண்டதும் ஓடிய ஆள் இப்போது இங்கிலீஷ்காரனை இளப்பம் செய்ய ஆரம்பித்தான். இந்தச் சூழ்நிலை பினாகியையும் பாதிக்காமல் விடவில்லை. பள்ளியின் சுவரில் தொங்கவிட்டிருந்த சக்ரவர்த்தி-சக்ரவர்த்தினியின் படங்கள் அவனுடைய மனத்தில் அருவருப்பை உண்டாக்கின. அவன் தன்னுடைய இங்கிலாந்து சரித்திரப் பாடப் புத்தகத்திலிருந்த ஆண்களின் படங்களுக்குக் கறுப்பு வர்ணம் பூசினான், பெண்களின் படங்களில் மீசையைத் தீட்டினான்.

ஒரு நாள் அவன் விக்ரம்பூர் ரெயில்வே ஸ்டேஷனில் கண்ட காட்சி அவனுக்கு வேதனையைத் தந்தது. தர்பாரின் சிப்பாய்கள் அடங்கிய ஒரு குழு ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களுடைய கழுத்தில் மாலைகள் போடப்பட்டிருந்தன. அவர்களுடைய ஈட்டிகளில் ரக்ஷைக் கயிறுகள் கட்டப்பட்டிருந்தன. அவர்களுடைய நெற்றிகளில் குங்குமப் பொட்டு இடப்பட்டிருந்தது. அவர்களுடைய குழந்தைகள் பிளாட்பாரத்தில் கண்ணீர் விட்டுக்

கொண்டு நின்றார்கள். சற்றுத் தூரத்தில் முகத்திரை அணிந்த மனைவிமார் நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜபுத்திர சிப்பாய்களின் முகங்களில் போருக்குப் போகும் உற்சாகம் சற்றும் இல்லை. தாங்கள் எதைக் காப்பாற்றுவதற்காக யுத்தத்துக்குப் போகிறோமென்று அவர்களுக்குத் தெரியவில்லை. முரசுகளின் ஒலியும் போருக்கான ஆயுதங்களுங்கூட அவர்களுக்கு ஆவேச மூட்டவில்லை. வீர முழக்கம் அவர்களிடமிருந்து வெளிப் படவில்லை.

கடைசியில் ரெயில் வண்டி அவர்களை ஏற்றிக்கொண்டு புறப் பட்டது. சுமார் இரண்டு மணி நேரம் அங்கு நிகழ்ந்த செயற்கை யான கொண்டாட்டம் முடிந்தபின் ஒரு வெறுமை அந்த இடத்தை ஆட்கொண்டது. வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்கள் திரும்பும்போது, "பாவம், ஆடு வெட்டற மாதிரி சண்டையிலே இவங்களைக் கொன்னுடப் போறாங்க!" என்று சொல்லிக் கொண்டே போனார்கள்.

இன்னொரு நாள் விக்ரம்பூரில் இன்னொரு காட்சியும் காணப் பட்டது. ஸ்ரீமதி அன்னிபெசண்ட் அங்கு விஜயம் செய்திருந்தார். 'ஹோம் ரூல்' மந்திரத்தை உபதேசித்த அந்த எழுபது வயதுத் தலைவியை இந்திய இளைஞர்கள் தங்கள் தாயாகப் போற்றினார்கள். அவர் இந்திய முறையில் புடைவையும் செருப்பும் அணிந்திருந்தார். கழுத்தில் மாலையணிந்து கொண்டு பகவத்கீதை சுலோகங்களைச் சொல்வார்; இந்து தர்மத்தின் தத்துவங்களைப்பற்றிச் சொற் பொழிவாற்றுவார். பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கே சவால்விடுவார்.

அவர் மூன்று மாதங்கள் அரசாங்கத்தின் கட்டுக் காவலிலிருந்து விட்டுப் பிறகு விடுதலையாகி நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவர் செல்லுமிடங்களில் எல்லாம் இளைஞர்கள் வண்டி மாடுகளை அவிழ்த்து விட்டுவிட்டுத் தாங்களே அவர் ஏறியிருந்த வண்டியை இழுத்தார்கள். அவருடைய காலடியில் உட்காருவதைப் பெரிய கௌரவமாக மக்கள் கருதினார்கள்.

விக்ரம்பூரும் அவரை வரவேற்பதில் ஒரு குறையும் வைக்கவில்லை. அவருடைய முழக்கத்தைக் கேட்கப் பெருங்கூட்டம் கூடியிருந்தது.

அவர் மிகவும் உறுதியாக அறிவித்தார்: "பிரபஞ்சத்தில் தெய்வ சக்திகளுக்கும் அசுர சக்திகளுக்கும் இடையே எப்போதும் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த உலகத்திலும் அந்த யுத்தம் பிரதிபலிக்கிறது. இந்த யுத்தத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷியா ஆகிய நாடுகள் தெய்வ சக்தியையும், ஜெர்மனி, துருக்கி

ஆகிய நாடுகள் அசுர சக்தியையும் பிரதிபலிக்கின்றன. கடைசியில் வெற்றி நிச்சயம் தெய்வ சக்திக்குத்தான் கிடைக்கும்.''

இதைக் கேட்க மிகவும் அதிர்ச்சியாக இருந்தது பிஞகிக்கு. அன்னி பெஸண்டிடம் அவனுக்கு இருந்த மரியாதை ஆட்டம் கண்டது. நல்ல பானம் நிறைந்த கோப்பை கீழே விழுந்து உடைவதுபோல் அவனுடைய உள்ளமும் உடைந்து போயிற்று. மெட்ரிக் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த அம்மாணவன் எவ்விதத் தவறும் செய்ய விரும்பவில்லை. தேசத் தலைவர்கள் சொன்னாலும் தவறு செய்யத் தயாராயில்லை அவன்.

உடைந்துபோன விளையாட்டுச் சாமானின் துண்டுகளைக் கையில் எடுத்துக்கொண்டு வருத்தத்துடன் நடந்து செல்லும் சிறுவனைப் போல் பிஞகி அன்னிபெஸண்டின் பொதுக்கூட்டத்திலிருந்து எழுந்து சென்றான். மறுநாளே அவன் ராஜ்கோட்டுக்குப் புறப் பட்டான்.

32

லக்ஷ்மண் இறந்த செய்தி பிஞகிக்கு ரெயிலில் பிரயாணம் செய்யும்போதே தெரிந்துவிட்டது. 'மாமி' - ரூக்கட்சேட்டின் விதவை-யை ராஜ்கோட்டுக்குக் கூட்டிக்கொண்டு போயிருக்கும் விஷயமும் தெரிந்தது. பிரயாணிகள் யாவரும் இதைப்பற்றியே பேசி கொண்டிருந்தார்கள்.

"கடைசியில் கொள்ளைக்காரங்களைக் கொன்னது ரெண்டு துரைமார்களாம்! நம்ம ஊர்ப் போலீஸ்கார அதிகாரி கொள்ளைக் காரங்கக்கிட்டே பயந்துகிட்டு வீட்டிலே பூஜை பண்ணிக் கிட்டிருந்தானும்!"

அவர்கள் தன் தாத்தாவைப் பற்றிப் பேசுகிறார்களோ என்று நினைத்தான் பிஞகி. தாத்தாவா பயப்படுபவர்?

''அப்படி ஒத்தரும் வீரத்தாலே கொள்ளைக்காரங்களைப் பிடிச் சுடல்லே, தம்பி!'' என்று ஒரு கிழவி சொன்னாள். ''அவங்களுக்கு அபினி கலந்த சாப்பாட்டைக் கொடுத்தாங்க. அவங்க மயங்கிக் கிடந்தப்போ அவங்களைக் கொன்னுட்டாங்க.''

'ஐயோ, இதென்ன கோரம்! தாத்தா இந்த மாதிரி அநியாயம் செய்வாரா?' என்ற எண்ணம் பிஞகியைத் துன்புறுத்தத் தொடங்கியது.

பிரயாணிகளின் பேச்சு தொடர்ந்தது.

''அந்தப் பொம்பளையை என்ன செய்யப் போறுங்களோ? நிச்சயம் ஆயுள் தண்டனையாவது கிடைக்கும்.''

''ஜெயில்லே போட்டா, அவ கதவை உடைச்சிக்கிட்டு வெளியே வந்துடுவா!''

''அவளைத் தூக்குப் போடலாமே!''

''அதெல்லாம் போடமாட்டாங்க. யார் கண்டாங்க, கொள்ளைக்காரன் குழந்தை அவ வயித்திலே வளருதோ என்னவோ?''

''சீ, சீ, அப்படி எல்லாம் இருக்காது. பாம்பாக்கும், பாம்பு! ஓர் இளவட்டம் அவகிட்டே ஆசையாப் போனுன். அவ அவனைச் சுட்டுக் கொன்னுட்டா!''

''வழக்கு நடக்கறபோது எல்லா விஷயமும் வெளியே வரும்.''

வழக்கு நடக்குமென்று கேட்டுப் பிணுகி சற்று ஆறுதலடைந்தான். மாமி கோர்ட்டுக்கு வந்தால் அவன் அவளைச் சந்திக்கலாம். இந்தக் கொள்ளைக்காரச் செயல்களின் நெருப்பில் வெந்துபோய் மாமி இப்போது எப்படி ஆகியிருக்கிருளோ? அவளுடைய ஒழுக்கத்துக்கே களங்கம் கற்பிக்கிருர்களே, எவ்வளவு பெரிய பாவம் இது! இருநூறு பீகா மேய்ச்சல் நிலத்துக்காக எவ்வளவு பெரிய அனர்த்தம் ஏற்பட்டு விட்டது. எவ்வளவு உயிர்கள் அழிந்து விட்டன! மாமி எவ்வளவு சோதனைகளுக்குள்ளாளுளோ? அவள் இன்னும் எவ்வளவு கஷ்டங்கள் அநுபவிக்க வேண்டுமோ?

வீடு போய்ச் சேர்ந்ததும் அவன் தாத்தாவைப் பற்றியும் அவர் ஏன் கொள்ளைக்காரர்களைப் பிடிக்கப் போகவில்லை என்பது பற்றியும் விசாரித்தான். அவனுடைய கேள்விகளுக்கு விடை கிடைக்கவில்லை. துரைமார்கள் தம்மை நடத்திய விதம் பிடிக்காமல், மகீபத்ராம் தமக்குப் பரிசளிக்கப்பட்டிருந்த பிச்சுவாவைத் திருப்பிக் கொடுத்து விட்டாரென்றும், அவர் துரைமார்களுக்கு ஆட்டுக்கறி சப்ளை செய்யாத காரணத்தால் பௌஜ்தார்ப் பதவியிலிருந்து விலக்கப்பட்டு விட்டாரென்றும் அவன் கேள்விப் பட்டான்.

பாட்டி இரவும் பகலும் கண்ணீர் விட்டுக்கொண் டிருந்தாள். அவள் அம்மனுக்கு முன்ஞல் விளக்கை ஏற்றி வைத்துவிட்டு அங்கேயே நாள் முழுதும் நின்ருள். சாப்பிடுவதையே நிறுத்தி விட்டாள் அவள்.

''அம்மா தாயே! உனக்கு விளக்கேத்திக் கும்பிட்டுத் தானே அவர் கொள்ளைக்காரங்களைப் பிடிக்கப் போனுர்! அவர் சிங்கம்

மாதிரி வீரமுள்ளவர். அவருக்குப் பயமே கிடையாது. கடமை யிலே தவறுபவரும் இல்லே. இதிலே ஏதோ மர்மம் இருக்கு. நான் உன்னேத்தான் நம்பியிருக்கேன். எங்களுக்குக் கஷ்டம் வராமே நீ தான் காப்பாத்தணும்'' என்று கூறி, அம்மனே வேண்டினுள்.

இதற்கிடையில் விசாரணைக்காக ஆஜராகும்படி மகீபத்ராமுக்கு உத்தரவு வந்தது. அவர் தம்முடைய நடத்தைக்குக் காரணம் காட்டப் போய் விட்டு இரவு மூன்று மணி வண்டியில் திரும்பி வந்தார். அவருக்காக விழித்துக்கொண்டு காத்திருந்த மனேவி யிடம், ''உன்னுேட அம்மன் என்னேக் காப்பாத்திட்டா!'' என்ருர் வந்ததும்.

''பொய் சொல்றீங்க நீங்க!''

''இல்லே, நிஜந்தான். நாளேக்கு நாம வீட்டைப் பார்க்கப் புறப்பட வேண்டியதுதான். இன்னெருரு எஜமான் கிடைச்சுட் டான்!''

''யாரு?''

''பகவான்தான்! நான் அவன்கிட்டேதான் வேலே பார்க்க ணும்னு அவனுேட கட்டளே போலேயிருக்கு! இல்லாட்டா நான் ஒத்தனு இந்த இக்கட்டைச் சமாளிச்சிருப்பேனு?''

மனேவி பேசாமல் இருந்தாள். ஒழுக்கத்தைப் பற்றிய போராட் டத்தில் தன் கணவன் வெற்றி பெற்றிருப்பது அவளுக்குப் புரிய வில்லே. அதைப்பற்றி அவளுக்கு அக்கறையும் இல்லே.

அம்மனின் சக்தி எங்கே போயிற்று? அம்மனுக்கு நெய்விளக்குப் போட்டதெல்லாம் வீணு? திரி திருப்பதற்காக உள்ளங்கையையும் தொடையையும் வருத்திக் கொண்டதுதான் மிச்சமா?

தன் கணவன் வலுவில் வந்த ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உதறி விட்டதாகவே அவளுக்குத் தோன்றியது. உலகத்தில் வாழ்ப வர்கள் ஒழுக்கத்துக்காகவும் நீதிக்காகவும் உயிரை விடமுடியுமா?

''உங்க உண்மையைப் பத்தி, ஒழுக்கத்தைப்பத்தி யார் கேட்கப் போருங்க? எல்லாரும் உங்களேப் பைத்தியம்னு நினேச்சுப்பாங்க. ஒத்தரும் உங்களேப் பாராட்டமாட்டாங்க'' என்ருள் அவள்.

''நீ கூடவா?'' என்று அவர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''நானும் இந்த உலகத்தைச் சேர்ந்தவ தானே! நீங்க எல்லா ருக்கும் முன்னுலே தலே நிமிர்ந்து நடக்கணுமிங்கறதுதான் என் னுேட ஆசை. நமக்கு இங்கே நாலு ஆர்டர்லி இருக்காங்களே, அவங்கள்ளே ஒத்தனேக்கூட நாளேயிலேருந்து பாக்க முடியாது. சிப்பாய்களோட மனேவிகள் இனிமே முந்தி மாதிரி என்னுேட பேசவரமாட்டாங்க. பப்படம், சேவை இதெல்லாம் பண்றதுக்கும்

மாங்காய் ஊறுகாய் போடறதுக்கும் அவங்க உதவி கிடைக்காது எனக்கு.''

அவர் மனைவியைத் தேற்றிக் கொண்டே, ''நாமதான் இங்கே இருக்கப் போறதில்லையே!'' என்றார்.

''கடைசிக் காலத்திலே இதென்ன ஆபத்து? இனிமே நாம எங்கே போனாலும் கெட்ட பேர் நம்ம பின்னாலேயே வந்துகிண்டு இருக்கும். நம்ம பான்ஜாவுக்கு நல்ல வேலைகூடக் கிடைக்காது.''

பாவம், அவளுடைய வாழ்க்கையின் ஆசைகளெல்லாம் கணவனின் உத்தியோக உயர்வையே மையமாகக் கொண்டிருந்தன. கணவனின் உத்தியோக வாழ்வைத் தவிர அவளுக்கு வேறெந்த ஆசையோ, குறிக்கோளோ, மகிழ்ச்சியோ இல்லை. ஒவ்வொரு வருஷமும் கோடைக் காலத்தில் தங்க நிற ஊறுகாய்கள் போட்டு மற்றச் சிப்பாய்களின் மனைவிகளுக்கு ருசி பார்க்கக் கொடுப்பதை விட மகிழ்ச்சிகரமான விஷயம் எதுவும் அவளுக்கில்லை. கணவனின் கட்டிலிலிருந்து மூட்டைப் பூச்சி எடுப்பது, படுக்கையைச் சரி செய்து போர்வையை விரிப்பது போன்ற சாதாரண விஷயங்களில் அலட்டிக் கொள்வது இவையெல்லாம் அவளுக்கு மிகவும் முக்கியமான காரியங்கள்.

கணவனின் உத்தியோக வீழ்ச்சியின் நியாய அநியாயங்களைப் பற்றி இப்படிப்பட்ட மங்கைக்குப் புரியவில்லை என்பதில் ஆச்சரியம் என்ன?

இன்னும் பொழுது புலரவில்லை. ஆனால் அதற்குள் மகீபத்ராமின் மனைவி படுக்கையை விட்டு எழுந்து விட்டாள். பினாகி தாத்தாவின் கட்டிலில் வந்து உட்கார்ந்தான். அவனுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. தாத்தாவின் குறட்டை அவனுக்கு ஷண்டிங் செய்யும் ரெயிலின் ஒலியை நினைவுறுத்தியது. அவ்வொலி சற்றுக் குறைந்ததும் பினாகி தாத்தாவின் பக்கத்தில் ஒண்டிக் கொண்டு விட்டான். சிறு வயதிலிருந்தே அவனுடைய பழக்கம் இது.

''பான்ஜாவா? எப்போ வந்தே?'' மகீபத்ராம் அவனுடைய முதுகில் தடவிக் கொடுத்தார். இளமைப் பருவம் அவனுடைய தேகத்தில் தோற்றுவித்திருந்த பூரிப்பை அவரால் தன் கையாலேயே உணர முடிந்தது.

''தாத்தா, நீங்க கொள்ளைக்காரங்களுக்கு அபினி கொடுத்தீங்களா?'' என்று பினாகி கேட்டான்.

''இல்லையப்பா.''

''நல்ல வேளை! நானும் நம்பல்லே அதை!''

''இப்போ நீ என் கட்சி தானே?''

''நிச்சயமா!''

''உன் பாட்டிக்கு என் மேலே கோபம்.''

''அப்படியானு நான் அவளுக்கெதிராச் சத்தியாக்கிரகம் பண்ணு வேன்!''

''என்ன பண்ணுவே?''

''சத்தியாக்கிரகம்! அதாவது பால், நெய் சாப்பிடறதை விட்டுடுவேன்.''

''இது யார் சொல்லிக் கொடுத்தா உனக்கு?''

''காந்திஜி!''

''காந்திஜி பள்ளிக்கூடத்துப் பசங்களைக் கூடக் கிளப்பிவிட ஆரம்பிச்சுட்டாரா?''

தாத்தாவின் பேச்சு பினுகிக்குப் பிடிக்கவில்லை.

காந்திஜி வந்த பிறகு நாட்டில் ஒரு புதிய காற்று அடிக்கத் தொடங்கியது. வீட்டுக்கு வீடு 'சத்தியாக்கிரகம்' என்ற வார்த்தை ஒலித்தது. ஒவ்வொரு வீட்டிலும் ஒர் இளைஞனாவது இந்தப் புதிய இயக்கத்தால் கவரப்பட்டிருந்தான். தங்கள் விருப்பப்படி ஏதாவது நடக்காவிட்டால் சிறுவர்கள் பட்டினி கிடந்து சத்தியாக்கிரகம் செய்யப் போவதாகச் சொல்லித் தங்கள் பெற்றோர்களைப் பயமுறுத்தினார்கள். இந்த மாதிரி சிறு விஷயங்களுக்குக் கூட இப்போது சத்தியாக்கிரகம் பயன்பட்டது.

மாட்டுக்கொட்டிலிலிருந்து வந்து கொண்டிருந்த பாட்டிக்கு அவர்களுடைய உரையாடல் கேட்டது. ''நீ சத்தியாக்கிரகம் செய்ய வேண்டிய அவசியமில்லை. பாலும் நெய்யும் தானாவே நின்னுடும்'' என்று அவள் சொன்னாள்.

''ஏன்?'' என்று மகீபத்ராம் கேட்டார்.

''ஏனா? யானை மாதிரி இருக்கற நம் எருமையை இனிமே வச்சுத் தீனி போட முடியுமா நம்மாலே?''

''போடி போ, பைத்தியக்காரி! நம்ம மாடு, கன்னு ஒண்ணும் நம்மை விட்டுப் போகாது. நம்ம எருமை, ரெண்டு பசுக்கள், என் குதிரை இதெல்லாந்தான் நம்ம வீட்டிலே முக்கியமா இருக்கும். அதுக்கப்பறந்தான் நீயும் பான்ஜாவும், புரிஞ்சதா?''

''நாலு ஜீவனோட வயித்தையும் எப்படி ரொப்புவீங்க?''

''எப்படியோ ரொப்பறேன். திருடித்தான் ரொப்பறேன்னு வச்சுக்கோயேன்!''

''சரிதான்! நல்ல சந்தர்ப்பம் கிடைச்சபோது நியாயத்துக்காக இதை நழுவ விட்டுட்டீங்க! இப்போ மாடு கன்னுகளுக்குத் தீனி போடறதுக்காகத் திருடனுகப் போறீங்களாக்கும்! உங்களை நன்னுத் தெரியுமே எனக்கு.''

33

அன்று மகீபத்ராம் விசாரணைக்காகத் தன் மேலதிகாரியால் தனியாக அழைக்கப்பட்டார்.

''கொள்ளைக்காரங்களைப்பத்திச் செய்தி கிடைச்சதும் நீ ஏன் அவங்களைப் பிடிக்கப் போகல்லே?'' என்று அதிகாரி கேட்டான்.

மகீபத்ராம் பதில் சொல்லவில்லை.

''பயந்து போயிட்டியா?''

மார்பை விறைத்துக்கொண்டு ''இல்லை, ஐயா!'' என்று பதில் சொன்னுர் மகீபத்ராம்.

''இல்லை ஐயா!'' அதிகாரி வாயைக் கோணிக்கொண்டு மகீபத்ராமின் பதிலைத் திருப்பிச் சொன்னுன்.

''பிராமணு, நீ பயந்து போயிட்டே!''

''ஒரு போதும் இல்லை!'' அமைதியாக, ஆனுல் அழுத்தமாகப் பதில் வந்தது.

''கொள்ளைக்காரங்க கிட்டேயிருந்து எவ்வளவு லஞ்சம் வாங்கினே?''

''நீங்களே விசாரிச்சுக்குங்க! நான் லஞ்சம் வாங்கியிருந்தா என் கையிலே விலங்கு போடுங்க.''

''சுரேந்திர தேவோட பேச்சைக் கேட்டுக்கிட்டுப் பேசாமே இருந்துட்டியா?''

''இல்லை!''

''சுரேந்திர தேவ் உனக்கு ஏதோ உபதேசம் பண்ணினுர் இல்லையா.''

மகீபத்ராம் மௌனம் சாதித்தார்.

அதிகாரி காலால் தரையில் உதைத்தான். ''சரி, நீ கிழவனுப் போயிட்டே! இனிமே நீ உபயோகமில்லை. உன்னை உத்தியோகத்திலிருந்து விலக்கியிருக்கோம்.''

மகீபத்ராம் பதில் பேசாமல் ஒரு சலாம் வைத்துவிட்டு வந்து விட்டார்.

*　　　　*　　　　*

மகீபத்ராம் வேலையிலிருந்து நீக்கப்பட்ட செய்தி விரைவில் சௌராஷ்டிரம் எங்கும் பரவி விட்டது. அவர் உத்தியோகத்தில் இருந்த காலத்தில் எவ்வளவோ ராஜாக்கள் அவரைத் தங்கள் சம்ஸ்தானங்களில் உத்தியோகத்துக்கு அழைத்ததுண்டு. அவர் தான் அந்த அழைப்புக்களை ஏற்றுக் கொண்டதில்லை. ஏஜென்ஸி நிர்வாகமும் அந்தச் சமயத்தில் அவரை விட்டுவிட விரும்பவில்லை. இப்போது யாராவது ஒரு ராஜாவிடம் உத்தியோகம் பார்க்க நினைத்தார் மகீபத்ராம். பல ராஜாக்களுக்கு அவர் கடிதம் எழுதினார்.

ஒரு ராஜா அவருக்குப் பதில் எழுதிவிட்டார், ஏஜென்ஸியால் விலக்கப்பட்ட ஆசாமியைத் தான் வேலையில் வைத்துக் கொள் வது தனக்கே ஆபத்தாக ஆகிவிடும் என்று. சில ராஜாக்கள் பதிலே எழுதவில்லை.

சுரேந்திர தேவ் மட்டும் எழுதியிருந்தார்: ''என் ராஜ்யம் ஒரு கிண்ணம் மாதிரி, அவ்வளவு சிறியது. இருந்தாலும் உங்களை வைத்துக் கொண்டு பராமரிக்க என்னால் முடியும்.''

மகீபத்ராம், ''நீங்கள் என்னை ஆதரித்தால் சர்க்கார் உங்களை நசுக்க முனையும்'' என்று அவருக்குப் பதில் எழுதினார்.

சுரேந்திர தேவ் மகீபத்ராமைத் தம்மிடம் அழைத்து அவருடன் பேசினார். ''சர்க்கார் என்னை என்ன செஞ்சுடும்?'' என்று கேட் டார் அவர்.

''இல்லையில்லே. என்னாலே உங்களுக்கு ஆபத்து ஏற்படுவதை நான் விரும்ப மாட்டேன்'' என்று மகீபத்ராம் சொன்னார்.

*　　　　*　　　　*

மகீபத்ராம் ராஜ்கோட்டில் மோர்வி ஸ்டேஷனுக்கருகில் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கே தம் மாடு, கன்றுகளுடன் வசிக்கத் தொடங்கினார். பிணுகியின் படிப்பை உத்தேசித்து அவர் ராஜ்கோட்டை விட்டுப் போகவில்லை. அவர் ஒரு நீண்ட காக்கிக் கலர் கோட்டும் காக்கித் தலைப்பாகையும் அணிந்து கொண்டு, கையில் தடியுடன் ராஜ்கோட்டில் உலாவப் போவார். கொஞ்ச நாட்கள் உத்தியோகஸ்தர்களின் கோஷ்டி களில் அவருக்கு வரவேற்பு இருந்தது. போலீஸ் வேலை பார்த்த ஆசாமி எந்தக் கோஷ்டியிலும் எளிதில் இடம் பெறமுடியும். ஆனால்

பேசுவதற்கு அவரிடம் ஒரே மாதிரி விஷயந்தான் இருந்தது. ஜண்டுரியா, காசுடா, போலி நாணயம் தயாரித்த தஸ்தகீர், பேத்தா, லதா மியாஞு, ஜீண் வாகரண், மியான்மேராணி பற்றிய செய்திகள் தாம். இந்தச் சரக்கு வெகு விரைவில் தீர்ந்து போய் விட்டது. அவர் நாலைந்துதடவை கூறிய, காட்டில் வேட்டையாடிய கதைகளும் நாளடைவில் நன்ருகச் சப்பித் தின்னப்பட்ட மாம் பழம்போல் சக்கையாகப் போய் விட்டன. வக்கீல், ஆசிரியர், ஆபீஸ் உத்தியோகஸ்தர் ஆகிய பதவிகளில் இருந்த மற்றவர் களுக்கு மகீபத்ராமின் பேச்சு அலுத்துப் போய்விட்டது. மகீபத் ராம் வந்தாலே அவர்கள் மெதுவாக நழுவத் தொடங்கினுர்கள்.

மகீபத்ராம் தம் நண்பனுன வியாபாரி ஒருவனின் கடையில் உட் கார்ந்து கொண்டு தானியம், கற்கள், பஞ்சு முதலிய சாமான் களின் வியாபரத்தில் ஈடுபட முயற்சி செய்தார். ஆனுல் சிறு சிறு குற்றவாளிகளின் முக ஜாடைகளைக்கூட இருபது வருஷங்கள் கழித்தும் மறக்காமலிருக்க முடிந்த அவரால் முதல்நாள் கோதுமை விற்ற விலையைக்கூட நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை. பத்ராஸரில் கொள்ளையடித்தவனின் கன்னத்தில் எந்தமாதிரி மச்சம் இருந்தது என்பதை அவர் இன்னமும் ஞாபகம் வைத்திருந் தார். ஆனுல் நேற்று எந்த மாதிரி எள் கொள்முதலாயிற்று என்ற விஷயத்தை அவரால் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

ஆகவே அவர் வியாபாரத்தில் ஈடுபடும் எண்ணத்தைக் கை விட்டார். பிறருக்கு விண்ணப்பங்கள் எழுதிக் கொடுக்கலாம் என்று நினைத்தார் அவர். ஆனுல் துப்பாக்கியுடனும் கத்தியுடனும் விளையாட விரும்பும் விரல்கள் விண்ணப்பப் பத்திரங்கள் எழுத வணங்குமா? அவருடைய கையெழுத்தைப் பார்த்தவர்கள் மிரண்டுபோய் ஓடத் தொடங்கினுர்கள்.

இப்போது மகீபத்ராமுக்குக் கஷ்டகாலம் ஆரம்பமாகிவிட்டது. நான்கு மாடு கன்றுகளுக்குத் தீனி வாங்கிப் போட வேண்டும். கையிலோ காசு இல்லை. குதிரைக்குப் போட புல் இல்லை. அவருடைய மனைவி சமையலறையில் உட்கார்ந்து கொண்டு அழுகிருள். மாடுகளை மேய்த்து வரும் வேலைக்காரன் கூட அயர்ந்து போய் உட்கார்ந்திருக்கிருன். விக்ரம்பூரிலிருந்து மணியார்டரில் வந்த பிஞகியின் உபகாரச் சம்பளம் குதிரைக்குப் புல் வாங்குவதில் செலவாகி விட்டது.

மகீபத்ராம் வெளியிலிருந்து வந்து வீட்டுக்குள் நுழைந்ததும் நேரே கொல்லைப் பக்கம் போய் மாடு கன்றுகளைக் கவனிப்பது வழக்கம். அன்றும் அவர் அப்படியே போய் அவற்றின் முதுகை

யும் முகத்தையும் தடவிக் கொடுத்தார். அவருடைய கண்களில் பரிவு நிரம்பியிருந்தது. மாடுகளும் மகிழ்ச்சியுடன் அவருடைய கையை நக்கத் தொடங்கின.

“இதுகளுக்கு ஏன் புல் போடல்லே? இதுகளுக்கு அஷ்டமி உபவாசமா? இந்தப் புண்ணியவதி எங்கே போயிட்டா?” என்று மகீபத்ராம் கத்தினார்.

யாரும் பதில் சொல்லவில்லை. மகீபத்ராம் தானே புல் வைத்திருக்கும் இடத்துக்குப் போனார். அங்கே ஒரு துணுக்குப் புல்கூட இல்லை.

“புல் எங்கே?” என்று அவர் மறுபடியும் கத்தினார்.

இதற்கும் பதில் இல்லை.

அவர் உள்ளே போனார். அவருடைய மனைவி அழுது கொண்டிருந்தாள். “புல் எங்கே?” என்று அவளைக் கேட்டார்.

அவள் முதல் தடவையாகத் தன் வலது கையை உயர்த்தி வானத்தைச் சுட்டிக் காட்டினாள்.

இதுவரை மாடு கன்றுகளுக்குத் தீனி ஒழுங்காகக் கிடைத்துக் கொண்டிருந்தது. அவற்றைத் தவிர வேறு எதிலும் மகீபத்ராமுக்குக் கவனம் இல்லாததால் இதுவரை அவருக்கு வீட்டின் உண்மை நிலை கண்ணில் படவில்லை. மாடுகளுக்குத் தீனி சரியாகக் கிடைத்துக் கொண்டிருந்த வரையில் அவர் தம் இலையில் என்ன சாப்பாடு பரிமாறப் படுகிறது, தம் உடைகள் எந்நிலையில் இருக்கின்றன என்பனவற்றையெல்லாம் கவனிக்காமலே இருந்தார். கொஞ்ச காலமாகத் தனக்குப் பாலுக்குப் பதில் மோர் கொடுக்கப்படுவதைக்கூட அவர் கவனிக்கவில்லை. அவருடைய மெத்தை கிழிந்து போய் அதிலிருந்து வெளியே தெரிந்த பஞ்சு அவரைப் பார்த்து எள்ளி நகைப்பது போலிருந்தது. அவருடைய உடைந்து போன நாற்காலி வீட்டின் நோயாளிப் பெண்போல் ஒரு மூலையில் கிடந்து முனகிக் கொண்டிருந்தது.

அப்போது அவருடைய மனம் ஒரு நிலையில் இல்லை. அவர் தம் கோட்டையும் தலைப் பாகையையும் கழற்றி வைத்தார். மாடு கன்றுகளை வெளியே கொண்டு போய் அவற்றுக்குத் தண்ணீர் காட்டி விட்டு அவற்றைப் புல் வெளியில் மேய விட்டார். குதிரையின் கடிவாளக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அதையும் மேய்க்கத் தொடங்கினார்.

மாடுகள் ஆனந்தமாக மேய்வதைப் பார்த்து மகீபத்ராமுக்கு நிம்மதி ஏற்பட்டது. தாம் சிறுவயதில் ஈடர்ப் பிரதேசத்து மலைகளில் சுற்றித் திரிந்தது அவருடைய நினைவுக்கு வந்தது. சியாமளா

தேவியின் திருவிழா, மாடு மேய்த்தே தம் நீண்ட கைம்பெண் வாழ்க்கையைக் கழித்த திரிவேணி, புரோகிதரின் பெண் கங்கா இவர்களுடைய நினைவும் வந்தது. கங்காவை அவருக்கு மணம் செய்து கொடுப்பதாகப் பேச்சு வார்த்தைகள் நடந்ததையும் அவர் நினைவு கூர்ந்தார்.

'சீ, சீ, அதையெல்லாம் இப்போ நினைக்கக் கூடாது. அது பாவம்!' என்று நினைத்து, அவர் தம் இளம்பிராயத்து நினைவுகளை மனத்திலிருந்து ஒதுக்கினுர்.

கடைசியில் அவருக்கு லக்ஷ்மணனின் ஞாபகம் வந்தது. 'லக்ஷ்மணும் ஓர் இடையன்தான். மாடு கன்றுகளிடம் அவனுக்குத்தான் எவ்வளவு பாசம்! அத்தனை பசுமாடுகளை மேய்ப்பதில் அவனுக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கும்! மேய்ச்சல் நிலத்துக்காகத் தானேதாரைக் கொல்வதென்றுல் அவனுக்கு எவ்வளவு கோபம் வந்திருக்கும்?'

இரண்டு மூன்று மணிநேரம் மாடுகளையும் குதிரையையும் மேய்த்து விட்டு அவர் வீடு திரும்பியபோது தபால்காரன் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தான்.

''உங்களுக்கு ரிஜிஸ்தர்க் கடிதம் வந்திருக்குங்க'' என்றுன் அவன்.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்த அவர் பிணுகியைக் கூப்பிட்டார். ''பான்ஜா! இது என்னன்னு வந்து பாரு! கடுதாசு இங்கிலீஷிலே எழுதியிருக்கு. அதோட நூறு ரூபாய் நோட்டு இருக்கு. யாரோட கடிதம் இது? கையெழுத்தைப் பார்த்தா எப்பவோ பரிசயமானது போலத் தெரியறது, யாரோடதுன்னு நினைவுக்கு மட்டும் வரல்லே.''

''இது உங்க பழைய துரையோட கடிதம், தாத்தா!'' என்றுன் பிணுகி, வந்து பார்த்துவிட்டு.

''ஆமா, ஆமா! அவரோட கையெழுத்துதான்! எழுத்தெல்லாம் எப்படி வளைஞ்சிருக்கு, பார்த்தியா! எவ்வளவு அழகான கையெழுத்து! சரி, என்ன எழுதியிருக்கார்?'' மேகத்தைப் பார்த்துவிட்டு நடனமாடும் மயிலின் மகிழ்ச்சியைப் போல் மகீபத்ராமுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை.

பிணுகி கடிதத்தைப் படித்தான்.

''அன்புள்ள மகீபத்ராம், நீ வேலையிலிருந்து விலக்கப்பட்டதாக ஒரு செய்தி காதில் விழுந்தது. நீ ஏதாவது தவறு செய்து இருப்பாய் என்று என்னுல் நம்ப முடியவில்லை. ஏதோ குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் உனக்கு உதவ முடியாதது பற்றி

எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. உன்டைய புதிய அதிகாரிகளுடன் எனக்குப் பரிசயமில்லை. காலம் கெட்டுப் போயிருக்கிறது. எதற்கும் வருத்தப்படாதே! என் ஞாபகார்த்த மாக இதை ஏற்றுக்கொள். நான் அவ்வப்போது அனுப்புவதை ஏற்றுக்கொண்டு பான்ஜாவை நன்றாகப் படிக்க வை.''

இதைக் கேட்டு விட்டு மகிபத்ராம் பைத்தியம் பிடித்தவர்போல் சிரிக்க ஆரம்பித்தார். மகிழ்ச்சியில் அவருடைய தொண்டை அடைத்துக் கொண்டது. ''ஒரு வெள்ளைக்காரன்—அதுவும் இங்கிருந்து மாற்றலாகிப் போய்விட்ட ஒரு வெள்ளைக்காரன்—என்னிடம் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறான்! துரை எவ்வளவு நல்லவன்!''

''துரை ஒரு பின் குறிப்பும் எழுதியிருக்கிறார்.''

''என்ன?''

''உன் தந்தை சொல்லிய ஜோசியம் பலிக்கும் போலிருக்கிறது. இன்னும் சில தினங்களில் எனக்குப் பம்பாயின் கமிஷனராகப் பதவி உயர்வு கிடைக்கப் போகிறது. உன்னுடைய தந்தை உண்மையிலேயே ஒரு பெரிய ஜோசியர்தான்!''

இதைக் கேட்டு அவருக்குச் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடிய வில்லை.

''என்ன தாத்தா?'' என்று பிஞ்கி கேட்டான்.

''ஒரு நாள் துரையைக் கோட்டா பண்ணினேன். என்னோட அப்பா பெரிய ஜோசியன் என்றும், துரைக்குப் பெரிய பதவி கிடைக்கும்னு சொன்னதாகவும் சும்மா சொல்லிவச்சேன். எங்க அப்பாவுக்கு ஜோசியமும் தெரியாது, கீசியமும் தெரியாது. நான் சும்மா சொல்லி வச்சது நிஜமாவே நடந்துடுத்தே!''

அவர் தம் மனைவியிடம் போய்ச் சொன்னார். ''பார்த்தியா? அந்தக் காலத்துத் தொரைமார்கள் எவ்வளவு பெரிய மனுஷங்க, பாரு! அவன் எங்கே, நான் எங்கே? இருந்தாலும் அவன் என்னை மறக்கல்லே. இப்பவும் இருக்காங்களே துரைகள்! சரி, நீ ஒரு காரியம் பண்ணு. நல்ல பப்டம், சேமியா, வடாம் எல்லாம் தயார்ப் பண்ணு. துரைக்கு அனுப்பலாம். அவருக்கு இதெல்லாம் ரொம்பப் பிடிக்குமே, உனக்கு ஞாபகமிருக்கா?''

''சரி. அதோடே ஊறுகாயும் பண்ணி அனுப்பலாமே! நல்ல தங்கம் மாதிரி மஞ்சள் மஞ்சளா ஊறுகாய்.''

''நீயே தனியா இதெல்லாம் செய்ய முடியுமா?''

''பின்னே என்ன பண்றது? இப்போ சிப்பாய்களோட வீட்டுக் காரிகள் எனக்கு ஒத்தாசை பண்ண வருவாங்களா?''

''பான்ஜாவோட பெண்டாட்டி வந்து உனக்கு ஒத்தாசை பண்ணிட்டுப் போரு, சரிதானே?'' இப்போதுதான் மகீபத்ராம் முதல் தடவையாகப் பிஞகியைப் பற்றித் தமாஷாகப் பேசிஞர்.

பிஞகிக்குச் சற்றுத் திகைப்பாக இருந்தது. மகீபத்ராம் எப்போதாவது சற்றுக் குஷியாக இருந்ததுண்டு. ஆனல் அவருடைய சந்தோஷம் ஒருபோதும் இன்று மாதிரி எல்லே கடந்து போனதில்லே.

பிஞகி அங்கிருந்து மெல்ல நழுவிஞன். ஆனல் அவனுடைய இதயமாகிய மாங்கிளேயின் மேல் உட்கார்ந்திருந்த மைஞ ஒன்று 'பான்ஜாவுக்குப் பொண்டாட்டி வரப்போகிருள்!' என்று கூவி அவனேக் கோட்டா செய்து கொண்டே இருந்தது.

34

பள்ளிக்குச் சென்ற பிறகும் பிஞகியால் தாத்தாவின் வார்த்தைகளே மறக்க முடியவில்லே. 'பெண்டாட்டி' என்ற வார்த்தையே அவனுக்கு எரிச்சலேத் தந்தது. ஏதோ இனம் புரியாத வேதனே அவனேக் கவ்விக் கொண்டது. வகுப்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லே அவனுல்.

தாத்தாவின் கேலிப் பேச்சு அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லே. ஒரு சிறிய மாஞ்செடியில் ஒரு பொம்மை மாம்பழத்தைக் கட்டித் தொங்க விட்டால் எப்படி இருக்கும்? அது போல் அந்தப் பதினேழு வயது இளேஞனுக்குக் கல்யாணமும் பெண்டாட்டியும் பொருத்தமற்றவையாகத் தோன்றின. தாத்தாவின் கேலிப் பேச்சு அவனுக்குப் பிடிக்கவில்லே.

மாலேயில் கிரிக்கெட் விளேயாடும்போது அவன் 'மனேவி'யின் நினேவையே உதைத்துத் தள்ளுவதாக நினேத்துக் கொண்டு பந்தைப் பலமாக அடித்தான்.

அவனுக்கு இவ்வளவு வேதனே ஏற்படுவானேன்? மனேவியின் நினேவு அந்த இளேஞனேச் சஞ்சலப்படுத்துவானேன்? ஏனென்ருல் இந்த இளவயதிலேயே அவனுடைய மனத்தில் களங்கம் புகுந்து விட்டது. அவன் சில நாட்களுக்கு முன்புதான் தேவுபாவைச் சந்தித்துவிட்டு வந்திருந்தான். மாட்டின் வாசனேயை மோப்பம் பிடித்துச் சலனமடையும் புலியைப் போல் ஏதோ ஒரு போதை புணர்வால் அவனுடைய மனமும் சலனமடைந்தது.

பதினேழு வயது நிரம்பிய இளைஞன், இருபதாம் நூற்றாண்டில் வாழும் வாலிபன், வேத காலத்தில் வாழ்ந்து கொண்டு, சாம கானம் செய்து கொண்டு, கடுங்குளிரிலும் சூரியோதயத்துக்கு முன் கங்கையில் ஸ்நானம் செய்து அதிலேயே தன் ஆசாபாசங்களை யெல்லாம் கழுவிப் போக்கிக் கொள்ளும் பிரம்மசாரியாக இருக்க முடியுமா?

இதற்கிடையில் ராஜ்கோட்டில் ரூக்கட் சேட்டின் விதவையின் வழக்கு விசாரணை ஆரம்பித்தது.

பிஞகி பள்ளிக்குப் போகவில்லை. அவன் நேரே கோர்ட்டுக்குப் போய் விட்டான். கோர்ட்டில் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்தைப் பார்த்தால் அங்கே சௌராஷ்டிரத்தின் பலவகை மீசைகளின் கண்காட்சி நடத்தப்படுகிறதோ என்று தோன்றியது. எத்தனை வித மீசைகள்! வாயையே முற்றிலும் மறைத்து விடும் மீசை தாடி, கத்தரித்து விடப்பட்டு, முறுக்கி விடப்பட்ட மீசை, தேளின் கொடுக்கைப் போல் விறைத்துக் கொண்டு நிற்கும் மீசை, அணிலின் வாலை நறுக்கி உதட்டில் ஒட்டிவிட்டாற் போல் தோற்றமளித்த மீசை, இரும்புக் கம்பி போல் நீண்ட மெல்லிய மீசை இந்த மாதிரி பலவகைப்பட்ட மீசைகள் அங்கே காட்சி யளித்தன. சில கிழவர்கள் தங்கள் நரைத்த மீசைகளை வளைத்துத் தங்கள் கன்னங்களில் ஒட்டி வைத்திருந்தார்கள். அவை வெள்ளித் தகடுகள் போலப் பளபளத்தன. சிலருடைய தாடிகள் நன்ருகச் சீப்பால் சீவப்பட்டு வகிடு எடுத்து, உழப்பட்ட வயல்போல் மடிப்பு மடிப்பாகக் காட்சியளித்தன.

கிர்ப் பிரதேசத்து மக்கள் இவ்வாறு கோர்ட்டில் குழுமியிருந் தார்கள். பருத்த தொந்தியுடைய பௌஜ்தார் ஓர் உடைந்த மூக்குக் கண்ணுடியைப் போட்டுக் கொண்டு பழுப்பேறிய காகிதத் தைப் படித்துக் கொண்டிருந்தான். சில அதிகாரிகள் கிராமவாசி களை மிரட்டிக் கூட்டிக் கொண்டு வந்து அவர்களைக் கோர்ட்டில் சாட்சியம் சொல்லத் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு குழுவிலிருந்தும் பௌஜ்தார், ஜமாதார் அல்லது வேருேர் அதிகாரியின் குரல் தெளிவாகக் கேட்டது. ''பாஞ்சியா, 'பாண்கெட்டில் நடந்த கொள்ளையில் இந்தப் பொம்பளை சம்பந்தப்பட்டிருந்தா'ன்னு நீ சாட்சி சொல்லணும்.''

"ஆஞ" கிராமவாசி தயங்கியபடி, ''இந்தப் பொம்பளை தானுங்க அந்தக் கொள்ளையைத் தடுத்து நிறுத்தினது'' என்ருன்.

"அடே முட்டாள்! உன் கெட்டிக்காரத்தனத்தை உன்கிட் டேயே வச்சுக்கோ! நான் என்ன சொல்லித் தரேனே அதை

மட்டும் கோர்ட்டிலே சொல்லணும், தெரியுமா?'' என்று அதிகாரி கத்தினுன்.

''ஐயா! அந்த அம்மாகிட்டே ஐந்நூறு ஆளுங்க இருக்காங்க. அவங்க என்னைச் சும்மா விடுவாங்களா?''

''நான் சொல்றபடி நீ சாட்சி சொல்லல்லேன்ஞ என்ன நடக்கும், தெரியுமா?'' என்று அதிகாரி மிரட்டினுன்.

கம்பளிப் போர்வையைப் போர்த்துக்கொண்டிருந்த கிராமத்துப் பெண்கள் அதிகாரிகள் சொல்லிக் கொடுத்த சாட்சியத்தை மனப் பாடம் செய்து கொண்டிருந்தார்கள். அதிகாரிகள் தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் கொள்ளை வழக்கில் சம்பந்தப்படுத்தி அவர்களைப் பழி வாங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

கோர்ட்டின் வராந்தாக்களிலும் அதன் முன்னுலிருந்த மைதானத்திலும் கவலையும் பயமும் நிறைந்த, அல்லது எவ்வித உணர்ச்சியும் இல்லாத நூற்றுக்கணக்கான முகங்கள் காணப் பட்டன. சிலர் ஒருவரையொருவர், ''இன்னும் எவ்வளவு நாள் இங்கேயே தங்கணும்?'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஒரு சில அப்பாவிகள் அதிகாரிகளிடம், ''ஐயா, உங்க காலிலே விழுந்து கும்பிடறேன். என்னை வீட்டுக்குப் போகவிடுங்க! வீட்டிலே மாடு கன்னுகளைக் கவனிக்க ஆள் இல்லே'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

சிலர் அழுது கொண்டிருந்தார்கள். ''இன்னும் எவ்வளவு நாள் இந்த மாதிரி கடலையையும் வெல்லத்தையும் தின்னுக்கிட்டு இங்கேயே உட்கார்ந்திருக்கணும்? இதுக்கே தினம் ரெண்டணு செலவாறதே?''

''அது மட்டுமா? அதிகாரிகளோட சாப்பாட்டுக்கும் நாம செலவு செய்ய வேண்டியிருக்கே!''

கோர்ட்டுன்னு என்னன்னே தெரியாம இருந்ததே அந்தக் காலம், அது எவ்வளவோ தேவலை! கொள்ளைக்காரங்க கூட நமக்கு அவ்வளவு தொல்லையா இல்லே. நாமே சொந்த பலத்துலே அவங்களைச் சமாளிச்சுக்கிட்டோம், அல்லது அவங்களோடே சமாதானம் பண்ணிக்கிட்டோம். அப்ப எல்லாம் இந்தக் கோர்ட் வந்து மென்னியைப் பிடிக்கல்லே.''

''மெதுவாப் பேசுடா, மூடா! யார் காதிலேயாவது விழுந்தா உன்னை ஜெயில்லே போட்டுடுவாங்க. இது என்ன உன்னுடை மாமஞர் வீடா?''

என்ன என்ன காரியங்களுக்குச் சிறைத் தண்டனை கிடைக்கும் என்று கூட அந்த அப்பாவிக் கிராமவாசிகளுக்குத் தெரியவில்லை.

அவர்கள் கோர்ட்டில் பொய் சாட்சியம் சொல்வதற்காகக் கட்டாயமாக அழைத்துக் கொண்டு வரப்பட்டவர்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. இந்த இடத்தில் அவர்கள் திக்குத் திசை தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உலகமே அலாதியானது. நியாயம் என்ற பெயரில் அவர்களுக்குப் பரிமாறப்பட்ட உணவு விஷம் போலத் தோன்றியது அவர்களுக்கு.

இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் வெள்ளைக்கார நீதி நிர்வாக அதிகாரிக்குத் தோன்றாத எண்ணம் பதினேழு வயதுப் பையனான பிணுகிக்குத் தோன்றியது: ''இந்த வழக்கை இங்கே நடத்த வேண்டிய அவசியம் என்ன? இதை ஏன் ஒரு கிராமத்தில் அல்லது சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் நடத்தக்கூடாது? உழைத்துப் பிழைக்கும் நிலையிலுள்ள நூற்றுக்கணக்கான கிராமவாசிகளை இழுத்தடிப்பதற்குப் பதிலாக நாலைந்து நீதிபதிகளும் அதிகாரிகளும் பட்டினத்திலிருந்து கிராமத்துக்குப் போய் வழக்கை நடத்தக் கூடாதா?''

திடீரென்று நீதி மன்றத்தில் அமைதி நிலவயது. அங்கே கூடியிருந்த எல்லோருடைய பார்வையும் வாயிற்பக்கம் திரும்பியது. போலீஸ்காரர்களின் துப்பாக்கிச் சனியன்கள் பளபளத்தன. இரண்டு மூன்று சங்கிலிகளால் கட்டப்பட்ட சில கிராமவாசிகளும் ஒரு மங்கையும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பதினைந்து போலீஸ்காரர்கள் தங்கள் பூட்ஸுகள் ஒலிக்க நடந்து வந்தார்கள்.

அறையிலிருந்தவர்கள் ஸ்தம்பித்துப் போய்ப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அணி வகுத்து வந்த போலீஸ் படை அந்த மங்கையைக் காவல் காக்கிறதா அல்லது அவளுக்கு மரியாதை செலுத்துகிறதா என்று அவர்களுக்குப் புரியவில்லை. இந்தக் குழப்பத்துக்குக் காரணம் இருந்தது. மங்கையின் நெடிய அழகிய தோற்றம் கம்பீரத்தில் ராணிகளைக் கூடத் தோற்கடிக்கக் கூடியதாயிருந்தது. அவளுடைய முகத்தோற்றம், பார்வை, நடை, பாவனை எல்லாவற்றிலும் பயமின்மையும் கம்பீரமும் குடிகொண்டிருந்தன. அவளிடம் எந்தவிதமான போலித்தனமான பாவனையும் இல்லை. அவள் மிகவும் இயற்கையாக நடந்து கொண்டாள். அவளுடைய முகத்தில் சோகம் நிழலாடிக்கொண்டிருந்தது. அழுக்கான காவி நிறத்துணி அவளுடைய அடர்ந்த கேசத்தை மூடியிருந்தது. அவளுடைய கைகள் நிதானமாக அசைந்த விதம் அவற்றில் துப்பாக்கி இருக்கிறாற் போன்ற பிரமையை உண்டாக்கியது.

அங்கே கூடியிருந்த மக்களில் தனக்குப் பரிசயமானவர்களைப் பார்த்தவாறே அவள் அறையைச் சுற்றிப் பார்வையை ஓட்டினாள். அவளுக்குப் பழக்கமாயிருந்தும் இப்போது அவளுடைய பார்வையைச் சந்திக்க விரும்பாத சில கிராமவாசிகள் அவளிடமிருந்து தங்கள் பார்வையைத் திருப்பிக் கொண்டார்கள். அவளுடைய நிர்ப்பயமான பார்வையைச் சந்திக்கும் திராணி அவர்களுக்கு இல்லை.

குறுகிய இடைகழியில் குழுமியிருந்த கூட்டம் அவளுக்காக வழி விட்டது. ஓர் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த பிணகி இதற்குள் எழுந்து நின்று தன்னையறியாமலேயே, ''மாமி!'' என்று கூவி விட்டான்.

''யாரது?'' என்று கேட்டுக் கொண்டே திரும்பிய மங்கை அவனை அடையாளம் கண்டு கொண்டாள். ''அடே, பான்ஜாவா? த்வஜாதாரிக்கு ஜே! அடேயப்பா! நீ எவ்வளவு பெரியவனு ஆயிட்டே! குரல்கூட மாறிப்போயிடுச்சே! நீ நன்னு இருக்கணும்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே அவள் பிணகியைத் தொட்டுத் திருஷ்டி கழித்தாள். இதைப் பார்த்த போலீஸ் நாயக் மிகவும் பயந்துபோய் விட்டான். அவன் மெதுவாக, ''இல்லேம்மா! இங்கே அதெல்லாம் கூடாது! பான்ஜா! ஊஹூம்!'' என்றான்.

நாயக்குக்கு அந்த மங்கையிடம் மரியாதை இருந்தது. மேலும் அவன் அந்தக் காலத்தில் மகீபத்ராமின் கீழ் வேலை பார்த்தவன். பான்ஜா குழந்தையாக இருந்தபோது அவனைத் தன் மடியில் வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டியவன். ஆகையால் அவனுக்குப் பான்ஜாவிடமும் பிரியம் இருந்தது.

''கொஞ்சம் இரு, அண்ணே!'' என்று சொல்லிக் கொண்டே மங்கை பிணகியின் கழுத்தைத் தடவிக் கொடுத்தாள். பிறகு நாயக்கிடம், ''இவன் என் குழந்தை. இவனை நான் ரொம்ப வருஷத்துக்கப்பறம் பார்க்கறேன்'' என்று கூறினாள்.

அவள் தன்னைக் 'குழந்தை' என்று அழைப்பதைக் கேட்டுப் பிணகியின் உள்ளம் உருகியது. அவள் தன் கழுத்தைத் தடவியபோது அவளுடைய கையிலிருந்து அமுதம் அவனுடைய உடலுக்குள் இறங்கி நாடி நரம்புகளில் பரவுவதாகத் தோன்றியது அவனுக்கு.

அவன் அவளைக் கூர்ந்து கவனித்தான். அவனது கறுத்த முகத்தில் ஆபத்தின் நிழல் படர்ந்திருந்தது. அதில் களைப்பும் பரபரப்பும் தென்பட்டன. அவளுக்கு ஒரு குழந்தையும் பிறக்கவில்லைதான். ஆனால் தாய்மையின் அழகு அவளிடம் பரிபூரணமாக இடம் பெற்றிருந்தது.

எல்லா மக்களும் அங்கே வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த இந்த அழகான பையன் ஒரு கொள்ளைக்காரியை 'மாமி' என்று அழைப்பது ஏன் என்று அவர்களுக்குப் புரியவில்லை. அவன் ஏன் கண்ணீர் விடுகிறான்? அவன் அவளுடைய முகத்தில் எதைத் தேடுகிறான்?

பப்ளிக் பிராசிக்யூடர் ஒரு முஸ்லீம். அந்த மங்கைக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் அவளுடைய உடலை இஸ்லாமிய முறையில் புதைப்பதா அல்லது அவள் ஓர் இந்துவின் மனைவியாக இருந்த காரணத்தால் உடலை எரிப்பதா என்ற பிரச்னையை அவர் மற்ற அதிகாரிகளுடன் விவாதித்துக் கொண்டிருந்தார். இடைகழியில் ஏற்பட்ட அரவத்தைக் கேட்டு அவர் ஓடிவந்து, ''ஏ முட்டாள்! அங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கே?'' என்று நாயக்கை அதட்டினார்.

''ஏன் அண்ணே இவ்வளவு கோவிச்சுக்கறே?'' என்றாள் மங்கை.

பிராசிக்யூடர் அவளுக்குப் பதில் சொல்லாமல் நாயக்கிடம், "குற்றவாளியைக் கூண்டிலே கொண்டுபோய் நிறுத்து. அவ யாரை 'அண்ணே'ன்னு கூப்பிடறா?" என்று கேட்டார்.

"அப்படியா!'' மங்கை அவர் பக்கம் திரும்பினாள். இப்போது அவளுடைய தோற்றமே மாறிவிட்டது. அவளுடைய பேச்சில் தீப்பொறி பறந்தது. ''அப்படீன்னா உன்னைப் 'புருசன்'னு கூப்பிடணுமா? ஏ மியான்! என்னை ஒரு தடவை நிமிர்ந்து பாரு! நிமிர்ந்து பார்த்துப் பதில் சொல்லு, உன்னை என்னன்னு கூப்பிடணுமின்னு! உம்! கூடப் பிறந்தவளைக் கல்யாணம் பண்ணிக்கறவனே!''

ஊதினால் கொழுந்து விட்டு எரியும் தீப் போல அவளுடைய குரல் உயர்ந்து கொண்டே போயிற்று. அவள் பிராசிக்யூடரை நெருங்கினாள். அவர் பயந்து போய் விட்டார். எங்காவது ஓடிப் போய் ஒளிந்து கொள்ள விரும்புபவர் போல் அவர் இங்குமங்கும் பார்வையைச் சுழற்றினார்.

துரைமார்களின் வளர்ப்புத் தாய்களையும், செக்கிழுக்கும் எருதுகளையும் போல் பருத்த, மீசைக்கார பௌஜ்தார்கள் தூரத்தில் நின்றுகொண்டே வேடிக்கை பார்த்தார்கள். அவர்களில் யாரும் அருகில் வரவில்லை. வழக்கில் சாட்சியம் சொல்ல வந்திருந்த பெண்களும் கிழவிகளும் அங்கு ஓடி வந்து தங்கள் கிழிந்த முன்றானைகளை மங்கையின் முன்னால் விரித்து அவளிடம் வேண்டிக் கொண்டார்கள். "கோபத்தைத் தணிச்சுக்குங்க, மாதாஜி! நீங்க தெய்வம்! இவங்க அசட்டுத்தனமாப் பேசினதை மன்னிச்சுடுங்க!''

மங்கையின் கோபம் தணிந்தது. அவளுக்கு உள்ளூறச் சிரிப்பு வந்து விட்டது. 'இந்த அப்பாவிகள் என்னை யாருன்னு நினைச்சுக் கிட்டிருக்காங்க? நான் தெய்வமாமே! முப்பது வயசான என்னை இவ்வளவு பெரியவங்க எல்லாம் 'மாதாஜி'ன்னு கூப்பிடறுங்களே! அவங்களோட இந்த மரியாதைக்குத் தகுதியானவளா நான்?'

இந்த நினைவால் விளைந்த பொறுப்புணர்ச்சி அவளுடைய மனத்தில் சுமையாக அழுத்தியது.

போலீஸ் நாயக் அவளைக் கெஞ்சியழைத்துக் கொண்டு போனுன். அவள் வளர்ப்புச் சிங்கம் போல் அடங்கிப் போய்க் குற்றவாளிக் கூண்டில் நின்றுள். இதற்குள் ஒருவன் பிராசிக்யூடரைச் சமாதானப் படுத்தி அவருடைய நாற்காலிக்கு அழைத்துச் சென்று விட்டான். அவர் தம் மீசையைத் தடவி விட்டுக் கொண்டு ஓரக்கண்களால் குற்றவாளிக் கூண்டைப் பார்த்துக் கொண்டார். அந்த மங்கையை நேருக்கு நேர் பார்க்கும் துணிவு அவருக்கு இல்லை.

ஒரு வக்கீல் அவரிடம் வந்தார்; தம் உள்ளங்கையில் புகையிலையை வைத்துப் பொடி செய்து கொண்டே, ''உங்களுக்குப் புரிஞ்சுதா, கான் சாகிப்?'' என்று அவர் கேட்டார்.

''என்ன?''

''அவ சொன்னுளே உங்களை, 'கூடப் பிறந்தவளைக் கல்யாணம் பண்ணிக்கறவன்'னு?''

''விட்டுத் தள்ளு, அப்பா! அவ என்ன பெரிய மனுஷி! பட்டிக் காட்டுப் பொம்பளைதானே! ஏதோ உளறியிருக்கா.''

''அவளை வம்புக்கு இழுக்கறதுக்கு முன்னுலே இது தோணியிருக் கணும் உங்களுக்கு'' என்றுர் பக்கத்திலிருந்த ஒரு முஸ்லீம் வக்கீல்.

''இல்லேயில்லே, கான்சாகிப்! அவ சொன்னது சரிதான். உங்க ளிலே தான் சித்தப்பா—பெரியப்பாவோட, பிள்ளை—பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கற வழக்கம் உண்டே! அதைத்தான் சொல்லி யிருக்கா அவ'' என்று முதல் வக்கீல் சொன்னுர்.

''சரி, சரி, விட்டுத்தள்ளு!'' என்று பிராசிக்யூடர் எரிந்து விழுந்தார்.

''இப்போப் புரிஞ்சிட்டது, இல்லையா?'' என்று கேட்டுக் கொண்டே அந்த வக்கீல் புகையிலைத் தூளைத் தம் கையில் போட்டுக் கொண்டார்.

''சரி, சரி, நகர்ந்துக்கோ! புகையிலைத் தூளைக் கண்ணிலே தூவறியே?'' என்றுர் பிராசிக்யூடர்.

இதற்குள் வெள்ளைக்கார நீதிபதியின் கம்பீரமான உருவம் அறைக்குள் நுழைந்தது. குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்

டிருந்த ஸ்திரீ தன் பாதி நெற்றியைப் போர்வையின் தலைப்பால் மூடிக்கொண்டாள்.

அவள் இவ்வாறு தமக்கு மரியாதை காட்டியதை நீதிபதி கவனித்தார். அவர் தலைமைக் குமாஸ்தாவிடம், "இவள்தான் கொள்ளைக் கூட்டத்தின் தலைவியா?" என்று கேட்டார்.

அவர் பாரத தேசத்தின் பெண்களைப்பற்றி ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருந்தார். சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த வீரமுள்ள ஜாதிகளைப் பற்றியும் நாட்டுப் பாடல்களைப் பற்றியும் தகவல்கள் சேகரித்துக் கொண்டிருந்தார். அவர் சேகரித்துக் கொண்டிருந்த தகவல்களே அந்த மங்கையாக உருவெடுத்து அவர்முன் நின்று கொண்டிருந்தன. கொள்ளைக்காரத் தலைவியின் மரியாதையான நடத்தை அவருடைய கவனத்தைக் கவர்ந்தது. அந்த மரியாதையில் பயம் இல்லை. தன் செய்கைகளைக் குறித்துப் பச்சாத்தாபம் இல்லை, தன் நடத்தைக்காக வெட்கம் இல்லை, கோர்ட்டின் அதிகாரத்துக்கு முன் கூச்சமும் இல்லை. இயற்கையாகிய பறவை பெண்ணுருவம் எடுத்து நாணமாகிய சிறகுகளைச் சிலிர்த்துக் கொண்டு இதயத் தடாகத்தின் கரையில் நின்று கொண்டிருப்பது போல் தோற்றம் அளித்தாள் அவள்.

'இவளை என் புத்தகத்தின் கதாநாயகியாக்கி விடலாம்' என்று நினைத்தார் நீதிபதி. இந்த நினைவில் அவருக்கு அவள்மேல் பரிவு ஏற்பட்டது.

பின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிணுகிக்கு அவள் வீரத்தின் உருவமாகத் தோற்றினாள்.

பள்ளிப் பையன்கள் பள்ளிகளைக் காலி செய்து விட்டுக் கோர்ட்டுக்கு வந்து விட்டார்கள். ஊசிப் போன சரித்திரத்தைப் பள்ளியில் படிப்பதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் கண்முன் நிகழும் சரித்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு சில ஆசிரியர்களும் அங்கு வந்து பிறர் தங்களைக் கவனிக்காதபடி தலையைக் குனிந்து கொண்டு கூட்டத்தின் நடுவில் உட்கார்ந்து கொண்டார்கள்.

விசாரணை ஆரம்பமாயிற்று. தான்சிங் பௌஜ்தார் முதல் சாட்சியாக வந்து நின்றார். அவருடைய காக்கித் தலைப்பாகையின் நீண்ட முனை மேற்குக் காற்றில் அசைந்தாடியது. அவருடைய மீசை ராணா பிரதாப்பின் மீசையைப் போல் இருந்தது. அவர் தம்மைச் சிசோதியா ராஜவம்சத்தைச்சேர்ந்தவரென்று சொல்லிக் கொண்டார். ஆனால் அவரது விரோதிகள் அவர் ஓர் அரண்மனை வேலைக்காரனின் பிள்ளை என்று வதந்தியைப் பரப்பினார்கள்.

சாட்சியைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த பிராசிக்யூடர் சற்று நிறுத்தினார். அப்போது மங்கையின் குரல் கேட்டது.

"தான்சிங் தர்பார்?"

பௌஜ்தாரும் மற்ற ஜனங்களும் அவள்பக்கம் திரும்பினார்கள்.

"தர்பார், என்னைத் தெரியறதா உங்களுக்கு?" மங்கை சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"தெரியுமே! நீதான் கொள்ளையடிச்ச சாமானையெல்லாம் சேர்த்து வச்சிருந்தே!"

"அதில்லே, இன்னொரு விஷயம். ஜிந்தர் வாய்க்கால்லே நாம சந்திச்சோமே, ஞாபகம் இருக்கா?"

தான் சிங்கின் முகம் வெளிறிப் போயிற்று. "கோர்ட்டார் எனக்குப் பாதுகாப்பு அளிக்கணும்" என்று அவர் நீதிபதியிடம் சொன்னார்.

பிராசிக்யூடர் சொன்னார்: "கோர்ட்டார் குற்றவாளியை அடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவள் ஏதோ உளறுகிறாள்."

"கோர்ட்டார் அவர்களே! நான் ஒன்றும் உளரவில்லை. தோலுபா என்ற கொள்ளைக்காரனை அவர் எப்போதாவது சந்தித்திருக்கிறாரா என்றுதான் நான் அவரைக் கேட்க விரும்புகிறேன்."

"தோலுபாவா? தோலுபா என்ற பெயருள்ள கொள்ளைக்காரன் இப்போது இந்தக் குழுவில் இல்லை. அவன் கராச்சிப் பக்கம் ஓடிப் போய் விட்டதாகச் செய்தி கிடைத்திருக்கிறது."

"நீங்க சொல்றது பிசகு, தான்சிங்ஜீ! முன் காலத்திலே காது மக்ராணி, இன்னும் வேறே மக்ராணிகள் கராச்சிப் பக்கம் ஓடிப் போயிடுவாங்க. ஏன்னா இது அவங்களோட சொந்த ஊர் இல்லே. அவங்க வெளியூர்க்காரங்க. இந்த ஊர் மண்ணு அவங்களுக்கு ஒத்துக்காது. நாங்க சௌராஷ்டிரத்திலேயே பிறந்து, அதோட பாலேயே குடிச்சு வளர்ந்தவங்க, இதோட மடியிலேயே சாகப்போறவங்க. தோலுபா அவனோட சொந்த நாட்டை விட்டுட்டு ஏன் ஓடணும்? தோலுபா ஓடல்லே, ஜிந்தர் வாய்க்கால்லே உங்களோடே சண்டை நடந்தபோது, சாயங்கால நேரம், தோலுபா அவனோட தார்க்குச்சியாலே உங்களை அடிச்சுக் குதிரையிலேயிருந்து கீழே தள்ளிட்டான். உங்களோட துப்பாக்கி, பதக்கம், கத்தி எல்லாம் கீழே விழுந்து சிதறிப்போச்சு. அப்போ நீங்க தோலுபாவைக் கும்பிட்டுக் கெஞ்சினீங்க. 'தோலுபா, தயவு செஞ்சு என்னை விட்டுடு! நான் செத்துப் போனா என் குழந்தைகுட்டிகள் அநாதையாப் போயிடும்; என்னோட நிலத்தைப்

பார்த்துக்கக் கூட ஆள் இல்லே'ன்னு. தோலுபா போனுப்போற துன்னு உங்களை உசிரோட விட்டுட்டான். நீங்க இந்த விஷயத்தை டயரியிலே எழுதிச் சர்க்காருக்குத் தெரியப்படுத்தினீங்களா? இதோ பார், உங்க முன்னுலே தோலுபா நிக்கருன்!'' என்று மங்கை தன்னேயே சுட்டிக் காட்டினுள்.

அவளுடைய பேச்சுப் பெருக்கைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்தார் பிராசிக்யூடர். நீதிபதி புன்சிரிப்புடன் அவருக்கு ஜாடை காட்டி அவரை உட்காரச் சொன்னுர். மயில் தானியத்தைப் பொறுக்கிப் பொறுக்கிச் சாப்பிடுவதுபோல் அவர் குற்றவாளியின் வார்த்தைகளை ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் சிரித்தபோது கூடியிருந்த ஜனங்களும் சிரித்தார்கள்.

சாட்சியங்கள் தொடர்ந்தன. சாட்சிகள் ஒருவருக்குப் பின் ஒருவராகத் தோலுபாவைப் புகழ்ந்து சாட்சியமளித்தார்கள். "தோலுபா எப்போதும் ஸ்திரீகளைக் காப்பாற்றினுன். அநாதையான விதவைகளைக் கொடுமைப்படுத்துபவர்களைத்தான் அவன் கொள்ளையடித்தான். கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு அந்த அநாதைகளுக்கு உதவி செய்தான். அநாதரட்சகன் அவன்.''

இரவின் மங்கிய ஒளியில் தோலுபாவை முன்பு பார்த்திருந்த கிராமவாசிகளுக்கு இப்போது அந்த ஸ்திரீயின் அங்க அடையாளங்களில் தோலுபாவைக் கண்டுகொள்ள முடிந்தது. 'இவள்தான் தோலுபா!' என்று உணர்ந்த கிழவிகள் திறந்த வாயை மூடாமல் உட்கார்ந்திருந்தார்கள். தங்கள் குழந்தைகளோடு வந்திருந்த கிராமப் பெண்கள் உணர்ச்சி மேலிடத் தோலுபாவைத் தங்கள் குழந்தைகளுக்குக் காட்டினுர்கள். "இதுதான் உன்னுேட தோலுபா மாமா!'' என்று.

சிலர் தூரத்திலிருந்தே அவளுக்குத் திருஷ்டி கழித்தார்கள்.

''ஆண் வேஷம் இவளுக்கு அழகாய் இருந்தது!'' என்று சில ஸ்திரீகள் சொல்லிக் கொண்டார்கள்.

நீதிபதிக்குத் தம் காதுகளையே நம்பமுடியவில்லை. நாம் இருபதாம் நூற்றுண்டில்தான் இருக்கிருேமா என்ற சந்தேகம் ஏற்பட்டது அவருக்கு. உடலைப் புல்லரிக்கச் செய்யும் இத்தகைய மர்மச் சம்பவங்கள் இந்தக் காலத்திலுமா நடக்கின்றன? தான் ஏதோ பழங்கால உலகில் சஞ்சரிப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது அவருக்கு.

* * *

ஒவ்வொரு நாளும் கோர்ட்டில் கூட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது. பப்ளிக் பிராசிக்யூடர் எவ்வளவு வாதித்தும் அவருடைய வாதத்துக்கு நேர்முரணான திசையில் இருந்தது, வழக்கின் போக்கு. போலீஸ் அதிகாரிகள் கவனமாகச் செய்திருந்த ஏற்பாடுகள் சீர்குலைந்து போய்விட்டன.

குற்றவாளியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் சாட்சிகள் உளறிக் கொட்டினார்கள். கொள்ளை நடந்த கிராமங்களில் அதிகாரிகள் பொதுமக்களிடமிருந்து பணம் கட்டாயமாக வசூல் செய்யும் விஷயமும் வெளியே வந்துவிட்டது.

கைதி ஒரு சாட்சியைக் கேட்டாள்—''திரிபுவன் பௌஜ்தார் அவர்களே! ரோட் கிராமத்திலே கொள்ளை நடந்தப்பறம் எவ்வளவு நேரங்கழிச்சு நீங்க அங்கே போய்ச் சேர்ந்தீங்க? அங்கே போய் நீங்க கீர் பண்ணிச் சாப்பிடறதுக்காக எல்லாரையும் பால் கொடுக்கச் சொன்னீங்களா, இல்லியா? இடையன் அம்ரா, இடைச்சி டபுடீ இவங்களோட பால் சட்டிகளை அப்படியே தூக்கிக் கிட்டு வந்துட்டீங்களா, இல்லியா? கீர் பண்றதுக்காகக் கோம்டி கிராமத்து மிட்டாய்க் கடைக்காரனைக் கூப்பிடல்லே? கடைசிலே மக்கன்ஜீ சேட்கிட்டே இருந்து எவ்வளவு லஞ்சம் வாங்கினீங்க? சரோதட் முள்காட்டிலே உங்களோடு சண்டை போடத் தயாராக் காத்துக்கிட்டு இருக்கிறதாக் கொள்ளைக்காரங்க சொல்லியனுப்பினங்களே, நீங்க ஏன் அங்கே போகல்லே?''

கொள்ளையடிக்கப்பட்ட கிராமங்களில் கொள்ளைக்குப் பின் நடக்கும் 'சாவு விருந்துகள்' பற்றி விவரமாக அறிந்து கொள்ள விரும்பினார் நீதிபதி. இவற்றைத் தம் புத்தகத்தில் குறிப்பிட ஆசை அவருக்கு. ஆகவே கைதி தன் பேச்சில் குறிப்பிட்ட ஆட்களையெல்லாம் வழக்கில் சாட்சியம் கூற அழைக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

கைதி சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்து போலீஸ் அதிகாரிகளின் கொடுமைகளை அம்பலப்படுத்தினாள். அவளுடைய சாமர்த்தியத்தைக் கண்டு நீதிபதியின் உதடுகளில் புன்சிரிப்பு மலர்ந்தது. ஆவேசத்துடன் பேசிக் கொண்டே வந்த கைதிக்குத் தன் தலையை மூடியிருந்த சால்வை கீழே நழுவி விட்டது கூடத் தெரியவில்லை. பேச்சுக்கிடையில் அவளுடைய பார்வை தன் முன்னால் ஓர் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒருவர்மேல் விழுந்தது' அவரை அடையாளம் கண்டு கொண்டதுமே அவளுடைய பேச்சு தடைப்பட்டது. அவள் தன் சால்வையை நன்றாக இழுத்து விட்டுக்கொண்டு தலையையும் நன்றாக மூடிக் கொண்டாள்.

நாணத்தால் அவளுடைய குரலும் சற்றுத் தாழ்ந்து ஒலித்தது. அவளுடைய பார்வையும் சற்றுத் தாழ்ந்தது.

அந்தக் கொள்ளைக்காரி அங்கு வந்திருந்த ஒரு மனிதரிடமிருந்த மரியாதை காரணமாக நாணம் நிறைந்த ஒரு குடும்பப் பெண்ணாக மாறிவிட்டாள்.

அதிகாரிகள் வியப்புடன் அவளிடம் ஏற்பட்ட திடீர் மாற்றத்தைக் கவனித்தார்கள்.

இந்த மர்மத்தை அறிய நீதிபதியும் ஆவலாக இருந்தாரென்பது கைதிக்குப் புரிந்தது. "துரை அவர்களே! என்னோட பான்ஜாவின் தாத்தா அதோ உட்கார்ந்திருக்கிறார். அவர் என் மரியாதைக்குரியவர். எங்களாலேதான் அவருக்கு இந்தக் கஷ்டம் ஏற்பட்டு விட்டது" என்று கூறியபோது உணர்ச்சி மிகுதியால் அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

எல்லாரும் அந்த மூலைப்பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அங்கு உட்கார்ந்திருந்த மனிதரின் கண்கள் சற்றுச் சிவந்திருந்தன. அவரது உடைகள் கொஞ்சம் அழுக்காக இருந்தன. அவருடைய கன்னங்களிலும் கழுத்திலும் சதை மடிப்பு மடிப்பாகத் தொங்கியது. அவருடைய பார்வை தரையில் பதிந்திருந்தது.

அங்கிருந்தவர்களில் சிலர் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். அவர்கள் கண்டது ராவ் சாகிப் மகீபத்ராம் அவர்களின் மிச்சம். ஆனால் அவருடைய கரடுமுரடான உள்ளங்கையும் விரல்களும் அவை துப்பாக்கி பிடித்தவை என்ற விஷயத்தை நினைவுபடுத்தின.

தலைமைக் குமாஸ்தா அவரைப் பற்றிய விவரங்களை நீதிபதியிடம் கூறினான்.

மேலும் சில நிமிஷங்கள் மகீபத்ராம் அங்கு உட்கார்ந்திருந்தார். அங்கிருப்பவர்களின் கவனம் தம மீதே திரும்பியிருப்பதையும் தாம் அங்கு இருப்பதால் கைதிக்குக் கூச்சம் ஏற்பட்டிருப்பதையும் கவனித்த அவர் எழுந்திருந்து மெதுவாகக் கிளம்பி வெளியே சென்றார்.

கோர்ட்டில் இருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். இடையிடையே சில வார்த்தைகள் வெளியே கேட்டன. "பெரிய வீரர், கொள்ளைக்காரங்களுக்கு விஷம் கொடுக்க இஷ்டப்படல்லே. வேலையை விட்டுட்டார். ரொம்பத் தைரியசாலி. காட்டி தர்பாருக்கு விலங்கு போட்டு இழுத்துக்கிட்டு வந்தார் இவர்!"

35

இருபதாம் நாள் வழக்கின் தீர்ப்புக் கூறப்பட்டது. அதில் ஓரிடத்தில் சொல்லப்பட்டிருந்தது.

"இந்த மங்கை மறைந்து வரும் பழைய கத்தியவாரின் ஓர் அபூர்வமான பாத்திரம். இவளுடைய வாழ்வு உடலைச் சிலிர்க்க வைக்க வல்லது. இவள் பர்டா பிரதேசத்தைச் சேர்ந்த குஞ்ச்டா கிராமத்தில் பிறந்தவள்; மேர் என்ற ஜாதியைச் சேர்ந்தவள். இவளுடைய இயற்பெயர் டேலி. இவருடைய பெற்றோர்கள் ஓர் உதவாக்கரைப் பையனுக்கு அவளைக் கல்யாணம் செய்து கொடுக்க முயன்றதால் அவள் வீட்டிலிருந்து ஓடிவந்து விட்டாள். ஒருவரும் தன்னைக் கண்டு பிடிக்காதிருக்கும்பொருட்டுச் சிபாரண் போல வேடமணிந்து கொண்டாள். காட்டில் டபேர் இனத்தவரிடம் அகப்பட்டுக் கொண்ட இவளைத் தேவகி கிராமத்தின் பனியாவான ரூக்கட் சேட் காப்பாற்றினான். சேத்ருஞ்சி நதியின் இடுக்குகளில் இரண்டு டபேர்களின் பிணங்கள் கிடைத்தன. அவர்களைக் கொன்றவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கொன்றவன் ரூக்கட் சேட்தான். இந்த மங்கையைக் காப்பாற்றுவதற்காகவே சேட் அந்தக் கொலைகளைச் செய்தான். சட்டப்படி சேட் செய்தது குற்றமாகும். சரியாகப் புலன் விசாரித்துக் குற்றவாளியைக் கண்டு பிடிக்காத போலீஸ் இலாகா கண்டனத்துக்குரியது.

"ரூக்கட், டேலியைத் தன் தங்கையைப்போல் நடத்தத் தயாராயிருந்தான். ஆனால் டேலிக்கு அவன்மேல் காதல் ஏற்பட்டு அவனுடைய மனைவியாகி விட்டாள். அவள் ரூக்கட் சேட்டின் மனைவி என்ற முறையில் ஒரு நல்ல குடும்பப் பெண்ணாக நடந்து கொண்டாள் என்பது கோர்ட்டில் சொல்லப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரியவருகிறது. தன்னுடைய உறவினர்களிடமிருந்து தப்புவதற்காக இவள் ஒரு முஸ்லீம் மங்கைபோல் வேடமணிந்து கொண்டாள்.

"பிறகு வேறொரு கொலைக்காக ரூக்கட்சேட்டுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது. இவள் பதிவிரதையாகத்தான் நடந்து கொண்டாள். சேட்டின் மரணத்துக்குப் பிறகு விதவையாக வாழ்க்கை நடத்தவும் தயாராக இருந்தாள். இருந்தாலும் ஒரு பனியாவுடன் ஒரு மேர் ஜாதிக்காரியின் திருமணத்தைச் சட்டம் ஏற்றுக்கொள்ளவில்லை. இவளோ சட்டத்தைச் சற்றும் பொருட்

படுத்தாமல் சேட்டின் சொத்துக்களை அநுபவித்து வந்தாள். ஏராளமான நிலத்தைச் சட்ட விரோதமாக மேய்ச்சல் நிலமாகத் தானம் செய்துவிட்டாள். பசுக்களுக்கு இந்த நாட்டு மக்கள் காட்டும் மூட பக்தியால் நாட்டுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுகிறது. டேலியின் செய்கையால் சேட்டின் மற்ற உறவுக்காரர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைத் தடுப்பது சர்க்காரின் கடமையாயிற்று. ஆகவே தானேதார் ஒரு போலீஸ் படையுடன் சம்பந்தப்பட்ட நிலத்துக்கு வந்தார். லக்ஷ்மண் என்ற பெயருள்ள ஒரு காட்டி, டேலியால் தூண்டப்பட்டுத் தானேதாரைக் கொன்றுவிட்டான்.

"டேலியின் தூண்டுதலால் லக்ஷ்மண் இன்னும் சில போக்கிரிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சட்டத்தை மீறிச் சில ஜமீந்தார்களின் நடவடிக்கைகளில் தலையிட்டான். அவர்களுடைய குடும்பங்களைச் சேர்ந்த விதவைகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகச் சொல்லிக் கொண்டு லக்ஷ்மணனின் கூட்டம் மூன்று ஜமீந்தார்களைக் கொலை செய்துவிட்டது.

"ஆனால் கடைசியில் இந்தக் கொள்ளைக் கூட்டம் சர்க்காரிடமிருந்து தப்ப முடியவில்லை. கொள்ளைக்காரர்கள் அழிந்தார்கள். இரண்டு வீரமுள்ள ஆங்கிலேயர் டேலியைப் பிடித்துவிட்டார்கள்.

"கொள்ளைக் கூட்டத்தின் முக்கிய பலம் இந்த வீரப் பெண்தான் என்பது சாட்சியங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆனால் இவளே ஏதாவது கொலை செய்திருக்கிறாள் என்று நிரூபிக்கப்படவில்லை. ஆகவே இவளுக்கு ஏழு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்."

தீர்ப்பின் மேற்கண்ட பகுதி முழுமையாகப் படிக்கப்பட்டது.

நீதிபதியின் உத்திரவுப்படி தலைமைக் குமாஸ்தா, "நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?" என்று கைதியைக் கேட்டான்.

"ஆமா."

"சொல்லு."

"பைரவ் கட்டின் தானேதார் குண்டுபட்டு இறந்த நிலத்தைச் சர்க்கார் மேய்ச்சல் நிலமாக ஒதுக்கிவிட வேண்டும். அதன் நடுவில் ஒரு மேடை கட்டி அதில் இரண்டு நினைவுத் தூண்கள் ஸ்தாபிக்க வேண்டும். ஒன்று தானேதாரின் நினைவாக; மற்றொன்று என் சகோதரன் லக்ஷ்மண் பட்கரின் ஞாபகத்துக்காக."

"லக்ஷ்மண் இவளோட சகோதரனுமே! நல்ல வேடிக்கை" என்று சிரித்தார் பப்ளிக் பிராசிக்யூடர். அவருடைய குரல் அவருடைய அடர்ந்த தாடிக்குள்ளேயே அழுங்கிப் போய்விட்டது. ஆனால் அருகிலேயே நின்றுகொண் டிருந்ததால் அவர்

சொன்னது அவள் காதில் விழுந்து விட்டது. கோபத்தில் அவளுடைய கண்கள் வெளியே துருத்திக் கொண்டு வந்தன ''மியான்! இதைக் கேட்டுக்கோ! ஏழு வருஷம் கழிய ரொம்ப நாளாகாது! அப்புறம் கவனிச்சுக்கறேன்'' என்று அவள் சீறினள்.

இதைக் கேட்டுத் தலைமைக் குமாஸ்தா விக்கித்துப் போய் நின்ருன். பாராக்காரர்கள் அவளை அதட்டினர்கள். நீதிபதிக்கும் கோபம் வந்துவிட்டது.

''உன்னுடைய கோரிக்கையின்மேல் இந்தக் கோர்ட் ஒன்றும் செய்வதற்கில்லை'' என்று அவர் சொன்னர்.

''பின்னே நீங்க ஏன் கேட்டீங்க, நான் ஏதாவது சொல்லணு மான்னு?''

''இதுதான் கோர்ட்டின் வழக்கம்.''

''ரொம்ப நல்லது. இந்த ஏழு வருஷம் நான் எங்கே இருக்கணு மின்னு சொல்லிடுங்க. இருங்க! இங்கே இருக்கற அதிகாரிகள், திரிபுவன் பௌஜ்தார், இன்னும் மற்ற எல்லாருக்கும் முன்னலே சொல்லிவிட்டுப் போயிடறேன். நான் ஏழு வருஷத்துக்கப்புறம் உசிரோட வெளியே வந்தேன்ன அந்தத் தேவகி கிராமத்து நிலத்தைப் பசுக்களுக்கு மேய்ச்சல் நிலமாக்கித் தான் தீருவேன். செத்துப் போயிட்டேன்னுப் பிசாசாப் போயி அங்கேயே போய் உட்கார்ந்திடுவேன். இந்த ரெண்டுக்குள்ளே ஒண்ணு நிச்சயம் நடக்கும்!'' இதைச் சொல்லிவிட்டு அவள் போலீஸ்காரரோடு வெளியே நடந்தாள்.

வழியில் எல்லாரும் அவளுக்கு மரியாதை செலுத்தினர்கள்.

''ஏதாவது தவறு நடந்திருந்தால் எங்களை மன்னிச்சுடு, தாயே!''

''சகோதர சகோதரிகளே! நீங்க நல்லாயிருங்க! என்னலே உங்களுக்கு எவ்வளவு கஷ்டம் ஏற்பட்டிருக்கு. நீங்க என்னை மன்னிக்கணும்!''

''அப்படியெல்லாம் சொல்லாதே அம்மா! உன்னேட கட்டளை என்ன?''

''கட்டளை ஒன்னுமில்லே, ஒரே ஒரு வேண்டுகோள்! லக்ஷ்மணும் அவனேட கூட்டாளிகளும் இறந்து போன இடத்தில் அவங்க நினைவா ஒரு தூணை நிறுத்துங்க! அவங்க இறந்துபோன திதியிலே பசுக்களுக்கு நிறையப் பருத்திக் கொட்டை போடுங்க!''

சிறையின் கதவுகள் அவளுக்காகத் திறந்தன. அவள் அதற்குள் நுழைந்து விட்டாள்.

வெளியே இருந்த ஜனங்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்:

''சுவரெல்லாம் எவ்வளவு உசரமா, பயங்கரமா இருக்கு, கறுப்பா ஒரு மலைப் பாம்பு சுருண்டு கிடக்கிறுப்பலே!''

''இல்லையில்லே, முதலை மாதிரிதான் இருக்கு.''

ஒரு கிழவி தன் பொக்கை வாயைத் திறந்து சொன்னாள். ''ஆமா ஆமா! கதவு திறந்தபோது ஆளை முழுங்கற முதலை வாயைத் திறக்கற மாதிரி தான் இருந்தது!''

''ஜெயில் இவளை முழங்கிடிச்சு!''

''இனிமே எங்கே உசிரோடே வெளியே வரப்போறா?''

''நிச்சயம் வருவா. சபதம் பண்ணியிருக்காளே!''

''பாவம், அந்தப் பிராசிக்யூடர்! இன்னும் ஏழு வருஷத்துக்குத் தூங்க மாட்டான்.''

இவ்வாறு பேசிக்கொண்டும், ஜூனாகாட் முதலிய பழைய நகரங்களின் சிறைகளுடன் ராஜ்கோட்டின் இந்தப் புதிய சிறையை ஒப்பிட்டுக்கொண்டும் கிராமவாசிகள் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பினார்கள்.

சிறையின் பின் பக்கச் சுவர்களில் இருந்த இடுக்குகளில் கூடு கட்டிக்கொண் டிருந்த சீபரீப் பறவைகள் ஏதேதோ கூவிக் கொண்டிருந்தன. அந்தப் பக்கம் ஓர் இடத்தில் குங்குமம் தடவிய ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது. ஒரு பஞ்ச காலத்தில் தண்ணீர் இல்லாமல் பட்டுப் போன இரண்டு மரங்கள் அங்கே கட்டையாக நின்று கொண்டிருந்தன. சில வருடங்களுக்கு முன்னால் அந்த இடத்தில் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு ராஜபுத்திர சிப்பாய் தற்கொலை செய்து கொண்டுவிட்டான். அன்றிலிருந்து அங்கிருந்த பாரா அகற்றப்பட்டு விட்டது. இறந்து போன சிப்பாய் பிசாசாக ஆகிவிட்டா னென்றும், ஓரிரண்டு கைதிகளையும் இழுத்துக் கொண்டு போய் விட்டானென்றும் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். யாரோ ஒரு வெள்ளைக்கார அதிகாரியின் பெண்ணிடம் அவனுக்குக் காதல் ஏற்பட்டு விட்டதென்றும், அது நிறைவேறாததால் தான் அவன் தற்கொலை செய்து கொண்டான் என்றும் வதந்தி நிலவியது.

36

மாமியின் வழக்கு நடந்து கொண்டிருந்தவரையில் பினாகி ஒரு ஆவேசத்துக்கு ஆட்பட்டிருந்தான். வழக்கின் ஒவ்வொரு கணமும் அவனுக்குப் பானகம் போல் இருந்தது. மாமி தன் பேச்சால்

அதிகாரிகளையும் வக்கீல்களையும் திணற அடிப்பதைக் கண்டு உற்சாகம் அவனுடைய நரம்புகளில் கரைபுரண்டு ஓடியது. மாமி கோர்ட்டில் தன் தாத்தாவுக்கு மரியாதை காண்பித்ததைப் பார்த்து அவனுக்கு அவளிடம் அன்பு அதிகரித்தது.

இவ்வளவு வீரமுள்ள ஸ்திரீயைப் பாராட்டி நீதிபதி விடுதலை செய்து விடுவார், பிறகு அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்லலாம், மாமி பாட்டிக்குத் துணையாக இருப்பாள், ஊறுகாய், பப்படம், சேமியா தயாரிக்கப் பாட்டிக்கு உதவி செய்வாள் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தான் பிஞுகி.

பதினேழு என்பது உலகம் அறியாத வயது தான். ஓர் ஆங்கிலேயனுக்குள் ஒரு மனிதனல்ல, பல மனிதர்கள் இருக்கிருர்கள். ஒருவன் கலை, இலக்கியம், ஆச்சரியகரமான சம்பவங்கள் இவற்றில் ஈடுபாடு உடையவன்; இன்னொருவன் சட்டத்தை மதித்துச் செயற்படும் அதிகாரி. இந்த உண்மை பிஞுகிக்குத் தெரியாது.

மாமியை விசாரித்த நீதிபதிக்குள்ளேயும் இவ் விரண்டு வகை மனிதர்கள் இருந்தார்கள். அவருக்குள்ளிருந்த அதிகாரி மாமியின் சட்டவிரோதமான நடத்தைக்காக அவளுக்கு ஏழு வருடத் தண்டனை கொடுத்தான். அவனுக்குள்ளிருந்த கலாரசிகனே இரவில் வீடு திரும்பியதும் மாமியின் வீர வாழ்க்கையை வர்ணித்துப் புத்தகம் எழுதினன்.

மறுநாள் பிஞுகி பள்ளிக்குச் சென்ருன். ஆனுல் படிப்பில் அவன் மனம் செல்லவில்லை. அவனுக்கு உடம்பெல்லாம் அலுப்பாக இருந்தது, கொட்டாவி வந்து கொண்டிருந்தது.

பள்ளியில் ஒரு வேடிக்கை நடந்தது. வகுப்பிலிருந்த முப்பது பையன்களில் ஐந்து பேர் மட்டும் வகுப்பை விட்டுக் கோர்ட்டுக்கு வந்து விடவில்லை. தலைமையாசிரியர் அவர்களுக்குப் பள்ளியின் ஆண்டு விழாவன்று நன்னடத்தைப் பரிசுகள் வழங்குவதாக உறுதியளித்திருந்தார். அந்தப் பரிசுகளை மீண்டோல்கட்டின் மகாராணி தன் கையால் வழங்குவாள் என்றும் அவர்களுக்கு ஆசை காட்டியிருந்தார். அந்த ஐந்து பையன்களும் பரம சாதுக்களாக வேஷம் போட ஆரம்பித்தார்கள். அவர்கள் பள்ளியின் மேஜை நாற்காலிகளிடங்கூடத் தங்கள் நன்னடத்தையைக் காட்டிக் கொள்ள விரும்பினர்கள். பள்ளியின் பியூனைக்கூட மரியாதையாக அழைக்கத் தொடங்கினர்கள்.

''ஐயா, ஸ்ரீதேவ்ஜி! எங்கள் வகுப்பில் ஓர் அணில் செத்துக் கி க்கிறது. தயவு செய்து அதை எடுத்து எறிகிறீர்களா?'' என்பார்கள் அவர்கள்.

அந்த ஐவரில் ஒருவஞன ஹரிகிருஷ்ணனுடைய தோளைப் பிடித்துக் குலுக்கினுன் பிஞகி. ''டேய் பொணமே!''

ஹரிகிருஷ்ணன் தன் பணிவைக் கைவிடவில்லை. அவனுடைய மனக்கண்ணில் பள்ளியின் ஆண்டு விழா தோன்றிக் கொண்டிருந்தது.

''இந்தச் சாது வேஷத்தை விட்டுடு! பெரீய்ய துருவன்னு நினைப்போ உனக்கு?''

''என்னைக் கேலி பண்ணுதே, பிஞகி! நான் ஹெட்மாஸ்டர் கிட்டே சொல்லிடுவேன்.''

''சொன்னு ரெண்டு அறை கொடுப்பேன். மாமியோட வழக்கைப் பார்க்க ஏன் வரல்லே நீ? வந்திருந்தா உனக்கும் கொஞ்சம் ரோசம் வந்திருக்கும். சரி, நீ ரொம்ப நல்ல பையன்; அன்னிக்கு என்ன என்ன பாடம் நடந்தது? அதையெல்லாம் கொஞ்சம் சொல்லிக்குடேன்.''

''மாட்டேன்! ஹெட்மாஸ்டர் கூடாதுன்னு சொல்லியிருக்கார்.''

இவ்வாறே மற்ற நால்வரும் நடந்த பாடத்தைச் சொல்லிக் கொடுக்க மறுத்து விட்டார்கள்.

பிஞகியைப் போல் வகுப்புக்கு வராமல் கோர்ட்டுக்குப் போய் விட்ட மற்றப் பையன்கள் கூச்சலிடத் தொடங்கினுர்கள்.

''பிஞகி, நாம் வாத்தியார்கிட்டே போயி அவரை மறுபடியும் பழைய பாடத்தை நடத்தச் சொல்லுவோம்.''

''ஆமா! மறுபடி பாடத்தை நடத்தித்தான் ஆகணும்! நடத்தாமே எங்கே போவார், பார்க்கலாம்!''

''அப்படியாஞ நாம எல்லாருமா வாத்தியார் கிட்டே போய்ச் சொல்லணும்.''

''ஆஞ இந்த அஞ்சு நல்ல பிள்ளைகளும் வரமாட்டங்களே!''

பிஞகி அவர்களிடம் போஞன். ஒருவனைத் தன் கையால் கட்டிப் பிடித்துக்கொண்டு அவன் மேல் மெதுவாக ஒரு குத்து விட்டான். கண்களை உருட்டி விழித்துக்கொண்டு, ''சொல்லு, நீ எங்களோடே வருவியா?'' என்று கேட்டான்.

பையன் பேசாமல் நின்ருன்.

பிஞகி சிரித்துக்கொண்டே அவன்மேல் இன்னெரு குத்து வைத்து, ''பதில் சொல்லு'' என்ருள்.

பிஞகியின் தோழர்கள் மற்ற நால்வரையும் இவ்வாறே கட்டிப் பிடித்துக்கொண்டு அவர்களைக் கிள்ளத் தொடங்கினுர்கள். கிள்ளுகளால் அவர்களுடைய உடம்பில் ஏற்பட்ட புண்கள் அழகிய

கோலங்களாகக் காட்சியளித்தன. அப்படியும் அந்தப் பையன்கள் மசியவில்லே.

பிஞகி அவர்களிடமிருந்த புத்தகங்கங்களேப் பிடுங்கிஞன்.

இதற்குள் தலேமையாசிரியர் புயல்போல் அங்கு வந்து சேர்ந்தார். பிஞகி கோஷ்டி செய்த துஷ்டத்தனத்தை அவர் கவனித்து விட்டார். அவருடைய புருவங்கள் சுருங்கின. அவர் பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டார். பிறகு அந்த ஐவர் பக்கம் திரும்பிஞர்.

"ஹரிகிருஷ்ணு! என்ன சமாசாரம்?'' என்று கேட்டார்

பிஞகி கோஷ்டியினர் ஐவரையும் உறுத்துப் பார்த்தார்கள்.

ஹரிகிருஷ்ணன் புத்தகத்திலிருந்து முகத்தை நிமிர்த்தாமலே, ''ஒண்ணுமில்லே, சார்!'' என்று பதில் சொன்ஞன்.

"ஆமா, சார்! ஒண்ணுமில்லே, சார்! இவங்க சும்மா வேடிக்கை பண்ணிக்கிட்டிருந்தாங்க, சார்!'' என்று மற்ற நால்வரும் ஒத்துப் பாடிஞர்கள்.

அதிக நேரம் சாப்பிடாமலிருந்தால் பசி மந்தித்துப் போவது போல் தலேமையாசிரியரின் பிரம்பின் பசியும் மந்தித்துப் போய் விட்டது.

ஆஞல் அவர் பிஞகியை இலேசில் விட்டுவிட விரும்பவில்லே. ''நீ ஏன் பதினஞ்சு நாளா வகுப்புக்கு வரல்லே?'' என்று கேட்டார்.

"கொள்ளே வழக்கு விசாரணேயை பார்க்கப் போயிருந்தேன்.''

"ஏன்? உன் அத்தை மேலே அல்லது சித்தி மேலே வழக்கு நடந்ததா?''

''என் மாமிமேலே வழக்கு நடந்தது.''

''என்ன, வேடிக்கை பண்றியா?''

"இல்லே, நிசமாத்தான் சொல்றேன்.''

அந்தத் தலேமையாசிரியருடைய பிரம்படி கத்தியவாரின் பெயர் பெற்ற பள்ளிகளிலெல்லாம் பிரபல மாயிருந்தது. அவருடைய கடுமை மிகவும் பிரசித்தமாயிருந்தது. அப்படிப்பட்டவர் இப்போது பிரம்பை உபயோகப்படுத்தத் தயங்குவானேன்? அதற்குக் காரணம் இருந்தது. அவர் கடுமையானவர்தான்; இருந்தாலும் சுதேச சமஸ்தானங்களின் பள்ளிகளில் பல ஆண்டுகள் வேலே பார்த்த அநுபவத்தால் அவர் பெரிய தந்திரசாலியாகவும் ஆகியிருந்தார்.

கடந்த பள்ளி ஆண்டு விழாவில் அவர் ஓங்கிய பிரம்பைக் கையால் பிடித்துத் தடுத்திருந்தான் பிஞகி. அவன் தன்மேல் விழுந்த அடிகளே ஏற்றுக்கொண்டு பிறர்மேல் விழவிருந்த பிரம்படி

களைத் தடுத்தான். இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவர் ஜாக்கிரதை யாகி விட்டார். ஒரு நாள் பிரம்பைப் பிடித்துத் தடுத்தவன் மறு நாள் அதைப் பிடுங்கிக்கொள்ளவோ அல்லது அதைக் கொண்டே திருப்பியடிக்கவோ செய்யலாம் அல்லவா? நாணமும் கௌரவமும் மிகவும் மிருதுவான பொருள்கள். கொசுவின் இறகுகளைவிட மெல்லியவை அவை. அவை ஒரு தடவை சிதைந்தால் சிதைந்தது தான்; அவற்றை மறுபடி செப்பனிட முடியாது.

ஈசான மூலையில் மின்னல் மின்னுவதுபோல் பிளுகியின் கண் களில் ஆவேசம் ஒளிவிடுவதைத் தலைமையாசிரியர் கண்டுவிட்டார். மாணவன் ஒருவன் தம் மேல் கையை நீட்டிப் பிரம்பால் அடித்து விட்டால் தம்முடைய மானம் பறிபோய் விடுமென்பதும் அதன் விளைவாகத் தம் வேலையையே இழக்க நேரிடுமென்பதும் அவருக்குத் தெரியும். அதன் பிறகு கத்தியவாரில் யாரும் அவரை லட்சியம் செய்ய மாட்டார்கள். அவருக்கு மறுபடியும் ஆசிரியர் வேலை கிடைக்காது. அவர் பையன்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்தோ அல்லது வேறு ஏதாவது வேலை பார்த்தோ தான் வயிறு வளர்க்கவேண்டும்.

இதெல்லாம் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே அவர் பிளுகியைத் தண்டிக்க வேறு வழியைப் பின்பற்ற முனைந்தார். "வகுப்புக்கு வராதவங்களுக்கு மெட்ரிக் பரீட்சைக்கான நுழை வுத்தாள் கொடுக்க மாட்டோம்!'' என்று அவர் சொன்னார்.

''பூர்வாங்கப் பரீட்சையில் நல்ல மார்க் வாங்கியவங்களுக்குக் கூடக் கொடுக்க மாட்டீர்களா?'' என்று பிளுகி கேட்டான்.

''அந்தப் பரீட்சையில் எப்படிப் பாஸ் பண்றீங்க, பார்ப்போம்!''

''பரீட்சைக்கு முன்னாலேயே யார் யாருக்குப் பாஸ் போடறது, யார் யாருக்குப் போடறதில்லேன்னு தீர்மானிச்சிட்டிங்களா?'' என்று கேட்க நினைத்த பிளுகி, கஷ்டப்பட்டுத் தன்னையடக்கிக் கொண்டான்.

* * *

மறுநாள் பள்ளியில், குடி தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கும் பாண்டே தலைமையாசிரியரிடம் சென்று பிளுகி தண்ணீர் குடிக்கு மிடத்தில் ரகளை செய்வதாகப் புகார் செய்தான். ஆசிரியர் பிரம்பை எடுத்துக் கொண்டு அங்கே சென்றார். பிளுகி ஒரு டம்ளர் தண்ணீரை எடுத்து அவரிடம் காட்டினான். அதில் பச்சைப் பாசி யும் சில நுண்ணிய புழுக்களும் நெளிந்து கொண்டிருந்தன. வார்த்தைகளுக்குத் தேவையே இருக்கவில்லை.

நாற்புறமும் மாணவர்கள் தாகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள்.

''உனக்கு ரகளை பண்ண ஏதாவது சாக்கு வேண்டியிருந்ததாக்கும்!'' என்றார் ஆசிரியர்.

''இது சாக்கா?'' என்று கேட்டுப் பிஞகி சிரிக்கத் தொடங்கினான்.

இதற்குள் பாண்டே கூவினான்: ''இதோ பாருங்க, ஐயா!''

அறைக்குள் தண்ணீர்ப் பானைகள் உடைந்து கிடந்தன.

''பானைகளை உடைச்சது யார்?''

''நான்தான்!'' என்று பிஞகி பொய் சொன்னான். உண்மையில், உடைத்தவன் வேறொரு மாணவன்.

''ஏன் உடைச்சே?''

''நீங்களே இந்தத் துண்டுகளைப் பாருங்களேன்!''

பாம்பின் விஷம்போல் அந்தத் துண்டுகளில் பச்சைப் பசேலென்று பாசி பிடித்திருந்தது.

தலைமையாசிரியரின் கோபம் இப்போது மற்ற மாணவர்கள் மேல் திரும்பியது. ''இவன்தான் கொள்ளைக்காரனாப் போகப் போறான். நீங்க ஏன் அவனோடே சேர்ந்து குட்டிச்சுவராப் போறீங்க? அப்பா அம்மாவோட பணத்தை ஏன் பாழாக்கறீங்க? தண்ணி குடிக்கல்லேன்னா செத்தா போயிடுவீங்க? வீட்டிலேயே நிறையத் தண்ணி குடிச்சுட்டு வந்து தொலையறதுதானே! போங்கடா கிளாசுக்கு!'' என்று அவர் கத்தினார்.

தாகத்தால் பீடிக்கப்பட்ட அந்தச் சிறுவர்கள் வேறு வழியின்றி மெதுவாக வகுப்புக்களுக்குச் சென்றார்கள்.

பிஞகி மட்டும் அங்கே தனியாக நின்று கொண்டிருந்தான். தன்னுள்ளே எஃகின் உறுதி உருவாவதாக அவனுக்குத் தோன்றியது. ஏதோ ஒரு சக்தி வாழ்க்கையாகிய பட்டறைக் கல்லில் அவனுடைய உயிரை எஃகாகச் சமைத்துக் கொண்டிருந்தது.

37

தலைமையசிரியர் அடுப்பிலேற்றப்பட்ட அரிசிப் பானைபோல் ஒரு பெருமூச்சு விட்டார். ''நான் உன்னோட தாத்தாவுக்காகப் பார்க்கறேன். உன்னை ஸ்கூல்லேயிருந்து துரத்திட்டா, பாவம்,

அவர் ரொம்ப வருத்தப்படுவார். இல்லாட்டா உன்னை என்ன பண்ணியிருப்பேன், தெரியுமா?''

அவருடைய வார்த்தைகள் கந்தக அமிலத்தின் துளிகள் போல் பிஞுகிக்கு எரிச்சலூட்டின. அவர் பேசிய வார்த்தைகளை விடப் பேசாமல் விட்ட வார்த்தைகள் இன்னும் எரிச்சலைத் தந்தன, வைசூரிக் கொப்புளங்களைப் போல. பேசப்படாத வார்த்தைகளுக்கு எப்போதுமே வீர்யம் அதிகந்தான்.

பிஞுகி கண்களை உருட்டித் தலைமையாசிரியரை உறுத்துப் பார்த்தான்.

பதினெட்டு வயதுப் பையன் கண்ணீர் விட விரும்பவில்லை. கண்ணீர் விட்டாலும் அதன் பொருளை உணர்ந்து கொள்வது கடினந்தான். பிஞுகியின் கண்களில் நீர் துளித்தது. ஆனால், அதன் பொருளை ஆசிரியர் அறிந்த கொள்ளவில்லை. அது தம் அதட்டலின் விளைவு என்று அவர் நினைத்துக் கொண்டார். அவர் நயமாகப் பேச ஆரம்பித்தார். ''நீ முன்னே எல்லாம் எனக்கு எவ்வளவு பிடித்தமான பையனு இருந்தே! இப்போ உனக்கு என்ன வந்துடுத்து? உன் தாத்தா அநாதையாப் போயி எவ்வளவு கஷ்டப்படறார். அவர் நிலையை நீ புரிஞ்சுக்க வேண்டாமா?''

பிஞுகி தன் நடத்தைக்காக வருந்துவதாக நினைத்த அவர் அவனை அன்புடன் தட்டிக் கொடுக்கும் எண்ணத்துடன் அணுகினார். அவர் அவனுடைய முதுகின்மேல் வைக்க நீட்டிய கையைப் பிஞுகி சட்டென்று தட்டி விட்டு விட்டு ஒரு வார்த்தையும் பேசாமல் அங்கிருந்து போய் விட்டான். அவன் வெளி வாசலையடையும் வரையில் அவனுடைய விம்மல் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

'என்னோட தாத்தா அநாதையாப் போயிட்டாரரா? யார் சொல்றா அவர் அநாதைன்னு? அவர் மேலே இரக்கம் காட்ட இவர் என்ன பெரிய கர்ணன்! என் தாத்தா இவர் கிட்டே யாசகம் கேட்டாரா? ரிசாலா வாய்க்கால் கரையிலே உலாவப் போறவங்க எல்லாரும் என் தாத்தாவுக்கு வணக்கம் செலுத்திட்டுப் போறாங்க. பிருத்வீபூர்ப் பழைய திவான் தினம் வாய்க்கால் பாலத்துக்கு மேலே அவரோடே உட்கார்ந்துகிண்டு வெவ்வேறு கிராமங்களோட எல்லைகளைப் பத்தியெல்லாம் விசாரிச்சுத் தெரிஞ்சுக்கறார். கிர்லே இருக்கற நொண்டிச் சிங்கத்தோட குகை எங்கே இருக்குன்னு விசாரிக்க ஜோராவர்கட் ராஜா எங்க வீட்டுக்கே வரார். அந்தச் சமயத்திலே தாத்தா மயிர் வெட்டிக் கொண்டிருந்தால் ராஜா தம் வண்டியிலேயே உட்கார்ந்து அவருக்காகக் காத்திருப்பார். யார் இந்த ஆளு, தாத்தாவை அநாதைன்னு சொல்ல?

தாத்தா யார் வீட்டுக்காவது டீ குடிக்கற சுமயத்திலே போன துண்டா? யார்கிட்டேயாவது காசு கடன் கேட்டிருக்காரா? என்னோட ஸ்கூல் சம்பளம் கட்ட ஒரு நாளாவது தாமதம் பண்ணியிருக்காரா?

'இந்த ஆள் ஏன் இப்படியெல்லாம் உளறிக்கிண்டே இருக்கிறார்? நான் ஏன் அவர் வாயிலே அடிக்கல்லே? அவரோட கழுத்தைத் திருகல்லே? நான் எதுக்காக இவ்வளவு கொழுத்து வளர்ந்திருக்கேன்? நான் என்ன வெறும் மாமிசப் பிண்டந்தானா?'

இவ்வாறு ஏதேதோ எண்ணிக் கொண்டே அவன் நடைபாதையில் சென்று கொண்டிருந்தான். எண்ண எண்ண அவனுடைய விம்மல்களின் தீவிரமும் அதிகமாகியது. தான் விம்மியழுவதை யாரும் கவனித்துவிடக் கூடாதென்று அவன் தன் விம்மல்களை அடக்கிக் கொள்ள முயற்சி செய்தான். ஆயினும் தலைமையாசிரியரைச் சும்மா விட்டு விட்டோமே என்ற கோபம் அவனுடைய நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது. அவன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளவும் விம்மல்களை அடக்கிக் கொள்ளவும் அடிக்கடி கையை முகத்துக்குக் கொண்டு போனான். கைக்குட்டையை வீட்டில் விட்டு வந்திருந்தது அவனுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. மூக்கைத் துடைத்துக் கொள்ளும் பாவனையில் கண்களைத் துடைத்துக் கொண்டான் அவன்.

ஆனால் எவ்வளவு ஜாக்கிரதையாகத் திருடர்கள் இருந்தாலும் சில சமயங்களில் அவர்களுடைய திருட்டை யாராவது பார்த்து விடுகிறார்கள். பாதையைக் கவனிக்காமல் கண்களைத் துடைத்துக் கொண்டே வந்த பிநாகி எதிரில் வந்த யார் மேலோ மோதிக் கொள்ள இருந்தான். யாருடனோ மோதப் போகும் உணர்வு ஏற்பட்டது அவனுக்கு. கூடவே ஒரு குரல் கேட்டது, "கொஞ்சம் பார்த்துப் போ, தம்பி!'' என்று

அது ஒரு மங்கையின் குரல். நடைபாதைப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தப் போலீஸ்காரனா நின்று கொண்டிருப்பான்? ஒரு மங்கை அவனை எச்சரிப்பதென்றால் நிச்சயம் அவன் ஏதோ தவறு செய்திருக்க வேண்டும். சரியான நடுப்பகலில் ராஜ்கோட் நகரத்தின் சூனிய வீதிகளில் சரியாக நடக்காதவர்கள் மேல் பெண்கள் சற்றுக் கடுமையாகத் தான் இருப்பார்கள்.

பிநாகிக்குக் கோபம் வந்தது. யாரோ ஒருத்தி அவனைக் குருடன் என்று சொல்லாமல் சொல்லி அவமானம் செய்கிறாளே! தலைமையாசிரியரின் வாயை மூட அவன் தவறிவிட்டான். தன்னை அவமானம் செய்த இந்தப் பெண்ணின் வாயையாவது அடைக்க வேண்டும்.

அவன் கோபத்துடன் பின் பக்கம் திரும்பினான். அவனுடைய கால்கள் தாமாகவே நின்றுவிட்டன. கண்கள் ஒருநிலையில் நின்றன. கோபம் அடங்கிவிட்டது. அவனுடைய பார்வையில் குளிர்ச்சியும் அடக்கமும் வந்து சேர்ந்தன.

இரண்டு பேர் அவன் கண்ணில் பட்டார்கள். இருவரில் ஒருத்தி ஒல்லியாக, கறுப்பு உடையணிந்திருந்தாள். அவளுடைய கைகளில் வளையல்கள் இல்லை. அவளுடைய கண்களில் ஒரு பாண்டேஜ் துணி கட்டப்பட்டிருந்தது. இன்னொருத்தி பதினாறு பதினேழு வயதுப் பெண். சுமார் இருபதாண்டுகளுக்கு முன் சௌராஷ்டிரத்தின் இளம்பெண்களிடம் இயற்கையாகத் தோன்றும் நளினம் அவளிடம் பரிபூரணமாகக் குடிகொண் டிருந்தது. குஞ்சம் வைத்த சீட்டிப் பாவாடைக்குமேல் அவள் தாவணி அணிந்திருந்ததிலிருந்தே அவள் திருமணமாகாதவள் என்பது தெரிந்தது. அந்தக் காலத்தில் ஃப்ரில் வைத்துத் தைத்த கைகளுடைய ரோஜாக் கலர் ரவிக்கைதான் ராஜ்கோட்டில் பாஷனாக இருந்தது. அந்த மாதிரி ரவிக்கைதான் அவள் அணிந்திருந்தாள். தொளதொளவென்று வளையல் அணியும் வழக்கம் அப்போது சௌராஷ்டிரத்தில் பரவவில்லை. ஆகையால் வளையல்கள் மணிக்கட்டுடன் இரவும் பகலும் சண்டை போடுவதில்லை. எப்போது பார்த்தாலும் குரங்குக் குட்டிமாதிரி கைகளில் ஏறி இறங்குவதும் இல்லை. ஆகவே பினாகியின் பார்வை முதலில் கைகளுடன் ஒட்டிக் கொண்டிருந்த வளையல்கள்மேல் விழுந்தது. மேலும் பார்வையை உயர்த்தினான் அவன். காட்டில் தன்னிச்சையாக விளையாடிக் கொண்டு திரியும் அணிலைப் போன்ற அந்தப் பெண்ணின் கண்களை அவனுடைய கண்கள் சந்தித்தன.

''ஏன், ஏன் நின்னுட்டே? யார் அது?'' கண்களில் பாண்டேஜ் கட்டிக்கொண் டிருந்த ஸ்திரீ தன் பெண்ணிடம் கூறினாள்: ''சரி, சரி, வா போகலாம். யாராவது காலிப் பயலுகள் சாலையிலே போயிக்கிண்டுதான் இருப்பாங்க.''

''இரு, அம்மா! இது யாரோ தெரிஞ்ச பையன் மாதிரி இருக்கு'' என்று சொல்லிய பெண் அவனைக் கவனமாகப் பார்த்தாள், சிப்பாய் ஒரு கைதியைப் பார்வையிடுவதுபோல.

பினாகியின் விம்மல்கள் எப்படியோ மறைந்துபோய்விட்டன.

''உங்க பேர் என்ன?'' என்று பெண் கேட்டாள்.

கேட்ட கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''எனக்குந்தான் உங்களைப் பார்த்தமாதிரி இருக்கு'' என்றான் பினாகி.

இப்போது தான் பினாகியின் குரலும் மாறியிருந்தது. அதாவது, சிறுபையனின் மென்மையான குரல் மறைந்து வாலிபத்தின்

கிண்கிணி நாதம் பிறந்திருந்தது. ஆனுல் பழைய குரலின் மென்மை முற்றும் போய்விடவில்லே. புதுக்குரலின் இடை யிடையே அதுவும் அவ்வப்போது தன் இருப்பையும் காட்டிக் கொண்டிருந்தது.

''நீ...நீ பான்ஜா இல்லே?''

''ஓஹோ? நீ புஷ்பான்னு! நீ இங்கே எப்படி வந்தே?''

''அம்மா, இதுதான் பைரவ்கட் ஜமாதார் வீட்டுப் பையன் பான்ஜா!'' என்று பெண் தன் தாயிடம் சொன்ஞள்.

''அடேடே, பான்ஜாவா? நாங்க இப்போ இங்கேதான் இருக் கோம், பான்ஜா! அந்த நாசமாப் போற காட்டிகள் புஷ்பாவோட அப்பாவைக் கொன்னுட்டாங்க. நாங்க எங்கே போறது? இங்கே தான் எங்க வீடு.''

பிஞகி மௌனமாக இருந்தான். புஷ்பாவின் தந்தை, பைரவ் கட்டின் தானேதார், பீப்பாய் மாதிரி பருமஞக இருப்பார். பாட்டி அவரைக் குறிப்பிடுவதென்ருல் பெயரைச் சொல்ல மாட்டாள், வயிற்றுக்கு முன்ஞல் இரண்டு கைகளேயும் விரித்துக் காட்டுவாள். மாமியின் வழக்கிலும் தானேதாரின் பெயர் அடிபட்டது.

''என்ன பான்ஜா! உங்க தாத்தாவோட வேலே போயிடுத் தாமே?'' என்று பெண் கேட்டாள். 'நௌகரீ' (உத்தியோகம்)ன்னு 'நோ—கரீ' (ஒன்றுக்கும் ஆகாதது) என்றுதான் அர்த்தம். எங்க விஷயத்திலேயும் சரி, உங்க விஷயத்திலேயும் சரி, அப்படியேதான் ஆச்சு! நமக்குச் சர்க்கார்லே மூட்டையா கட்டிக் கொடுத்தாங்க?''

'நௌகரீ'யை 'நோ-கரீ' என்று கேலியாகப் பேசுவது அந்தக் காலத்துச் சௌராஷ்டிரப் பிரதேசத்தில் வழக்கமாக இருந்தது. அதேபோல் 'பென்ஷனர்,' 'சாது', 'சாஸ்திரி' போன்ற வார்த்தைகளுக்கும் மோசமான அர்த்தங்கள் கற்பிக்கும் வழக்க மும் இருந்தது.

''ஆனு அந்தக் கொலேகாரப் பாவியும் அழிஞ்சு போயிட்டான். அந்த விதவைப் பிசாசும் ஜெயிலுக்குப் போயிட்டா. எப்படியும் கடவுள்னு ஒருத்தர் இருக்காரே! புஷ்பாவோட அப்பா ஒரு தெய்வம். அவரைக் கொன்னுட்டு ஒருத்தன் சௌக்கியமா இருக்க முடியுமா?''

இவ்வாறு தன் ஈசுவர ஞானத்தை அளந்து விட்டுக் கொண் டிருந்தவளுடைய கண்களில் துணி சுட்டப்பட்டிருந்ததால் அவளுக்குத் தனக்கு எதிரிலேயே நடக்கும் நாடகம் தெரியவில்லே. பிஞகியோ புஷ்பாவோ ஒன்றும் பேசவில்லே. ஆனுல் புஷ்பாவின்

அம்மா பாவத்தையும் புண்ணியத்தையும் பற்றிச் செய்த வியாக்கியானத்தை அவர்கள் இருவருமே கேட்கவில்லை. அவர்களுடைய காதுகள் தங்கள் இயக்கத்தை மறந்து விட்டிருந்தன. அவர்கள் ஒருவருக்கொருவர்மேல் பார்வையாகிய அமுதத்தைப் பொழிந்து கொண்டிருந்தார்கள். அருகருகே நின்று கொண்டிருந்த அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் உடலின் ஆழ்ந்த, இனிய, போதை தரும் மணத்தை நுகர்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு குறிப்பிட்ட நிலையில் ஓர் ஆணும் பெண்ணும் இரும்பும் காந்தமும்போல் பரஸ்பரம் ஆகர்ஷிக்கப்படும்போது அவர்களிடமிருந்து இத்தகைய மணம் பிறக்கிறது.

''அம்மாவுக்கு என்ன ஆச்சு?'' என்று பிஞகி கேட்டான். அவனுடைய குரலில் சிறுவனின் மென்மையும் வாலிபனின் அழுத்தமும் ஒருங்கே ஒலித்ததைக் கேட்கப் புஷ்பாவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அவள் சிரித்துவிட்டாள்.

புஷ்பாவின் தாயே பதில் சொன்னாள்: ''பான்ஜா, என் பார்வை குறைஞ்சுகிண்டே வரது. ஆகையாலே தினம் ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து போட்டுக்கிண்டு வரேன்.''

பிஞகி இன்னுங் கொஞ்சம் பெரியவனாக இருந்திருந்தால், ''அடேடே! ஏன் இப்படி ஆயிடுத்து?'' என்று கேட்டிருப்பான். ஆனால் அவன் கவனித்தது 'தினம்' என்ற ஒரு வார்த்தையைத் தான்!

''தினமா?''

புஷ்பா 'ஆம்' என்ற பாவனையில் தலையை அசைத்தாள். அவளுடைய கவனமும் அந்த வார்த்தையில் தான் பதிந்திருந்தது.

''இதே வழியாகவா?'' என்று பிஞகி சுற்றி வளைக்காமல் நேரிடையாகக் கேட்டு விட்டான்.

புஷ்பா மறுபடி தலையை அசைத்தாள். அதற்குப் பிறகுதான் அவளுடைய தாயின் பதில் பிஞகியின் காதுகளில் விழுந்தது. ''ஆமாப்பா! நாங்க இங்கே பக்கத்திலேதானே இருக்கோம்.''

புஷ்பா நாணம் காரணமாகப் பிஞகிக்குப் பதில் சொல்லவில்லையாக்கும் என்று நினைத்துக்கொண் டிருந்தாள் அவளுடைய அம்மா.

''உன் பாட்டி எப்படி இருக்கா, பான்ஜா? பாவம், அவளுக்கும் என் மாதிரி தான் கஷ்டம்.''

''நான் உங்களைப்பத்திப் பாட்டி கிட்டே சொல்றேன்.''

''நிச்சயம் சொல்லு! ஒரு நாள் வீட்டுக்குக் கூட்டிக்கிண்டு வா!''

''உம்! நிச்சயம்!'' இந்த அழைப்பு பிஞகிக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆனால் புஷ்பா குறும்புத்தனமாக முகத்தைக் கோணிக்

கொண்டாள். அவள் முன்னைப் போல் இல்லை, மிகவும் குறும்புக்காரி ஆகிவிட்டாள்.

புஷ்பாவின் தாய் சொன்னாள்: ''உன் தாத்தாவையும் நான் ரொம்ப விசாரித்ததாகச் சொல்லு, பான்ஜா! அவருக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்காக நான் ரொம்ப வருத்தப்படறேன்னு சொல்லு. எவ்வளவு உயர்ந்த உத்தியோகத்திலே இருந்தார் அவர். புஷ்பாவோட அப்பாவுக்கும் அவருக்கும் என்னிக்குமே ஒத்துக் கல்லே. ஆனால் எங்க எல்லார் மேலேயும் அவருக்கு எவ்வளவு அக்கறை இருந்தது? எங்க சம்பக் குதிரையிலேருந்து விழுந்தபோது அவர் அவனுக்கு வைத்தியம் செய்யறதுக்காக எவ்வளவு அலைஞ்சார்! லட்சத்திலே ஒருவர் அவர். அப்படிப்பட்ட மனுஷருக்கு எவ்வளவு கஷ்டம் வந்துடுத்து! பாவம்! 'நௌகரீ'யிலே எவ்வளவு விசுவாசமா உழைச்சாலும் அது கடைசீலே 'நோ-கரீ'யாகத்தான் போயிடறது?''

பிஞகி தன் மனத்துக்குள் தன் தாத்தாவிடம் தலைமையாசிரியர் காட்டிய அநுதாபத்தைப் புஷ்பாவின் தாய் காட்டிய அநுதாபத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தான். பின்னது அவனுக்கு எரிச்சலை உண்டாக்கவில்லை. புஷ்பாவின் தந்தைக்கும் அவனுடைய தாத்தாவுக்குமிடையே விரோதம் இருந்தது. அப்படியும் புஷ்பாவின் தாய் வெளியிட்ட அநுதாபம் உள்ளத்தைத் தொட்டது. அவளுடைய அநுதாபத்துக்கும் தலைமையாசிரியரின் அநுதாபத்துக்குமிடையே ஆகாயத்துக்கும் பாதாளத்துக்குமிடையேயுள்ள வித்தியாசம் இருந்தது. தலைமையாசிரியரின் வார்த்தைகள் பைரவ்கட்டில் தீபடியா ஆற்றின் மறுகரையில் வளரும் தாரூடிச் செடியின் விஷப் பூக்கள் மாதிரி இருந்தன; புஷ்பாவின் தாயின் பேச்சோ ஜீராவில் ஊறப் போட்ட குலாப் ஜாமுன் போல் இனித்தது.

''சரி, தாத்தா கிட்டேயும் சொல்றேன்.''

''நீ இப்போ எங்கேயிருந்து வந்துகிண்டிருக்கே?''

''பள்ளிக் கூடத்திலிருந்து.''

''பள்ளிக்கூடம் விட்டாச்சா? அதுக்குள்ளேயா? யாராவது துரை கிரை செத்துப் போயிட்டானா?''

''இல்லையில்லே.''

பிஞகியால் சரியான பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் புஷ்பா எதையோ புரிந்து கொண்டவள் மாதிரி மெல்லச் சிரித்தாள். சப்பாத்திக் கள்ளியின் பூவைப் போல் செக்கச் செவேலென்றிருக்கும் கண்களுடன் நடுப்பகலில் பள்ளியிலிருந்து செல்லும்

பையன் வெளிப்பார்வைக்கு எவ்வளவு முதிர்ந்தவனாகக் காணப் பட்டாலும் உண்மையில் அவன் சிறுபிள்ளைதான் என்பதைப் பருவப் பெண்கள் கண்டு பிடிக்காவிட்டால் வேறு யாரால் கண்டு பிடிக்க முடியும்?

' பிநாகி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றான். புஷ்பா பலதடவை திரும்பித் :திரும்பி அவனுடைய முதுகைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அப்படிப் பார்க்கும்போதெல் லாம் •அவளுக்கு அவனுடைய பூரித்திருந்த முதுகைத் தட்டிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது.

38

ஜங்ஷனுக்கு எந்த ரெயிலும் வரும் சமயம் அல்ல அப்போது. ஆனால் அங்கு ஒரு பெரிய பி-கிளாஸ் எஞ்சின் நின்று புகை விட்டுக் கொண்டிருந்தது. யானையின் பாதம் போல் சிறிய மூன்று ரெயில் பெட்டிகள் அந்த எஞ்சினுடன் இணைக்கப்பட்டிருந்தன. துப்பாக்கி ஏந்திய போலீஸ் கோஷ்டி ஒன்று ஒரு பெட்டியில் உட்கார்ந்து கொண்டிருந்தது.

ஜங்ஷனிலிருந்த ஹெட்கான்ஸ்டபிள் போலீஸ் கோஷ்டியின் ஹவில்தாரைக் கேட்டான், "என்ன, ரொம்பச் சம்பிரமமோ?" என்று. கூடவே அவன் லட்டு செய்வதுபோல் கைகளால் அபிநயம் செய்தான்.

''ஆமா, ஆமா! இதுதான் அதிருஷ்டம்னு சொல்றது. இன்னிக்குக் காலையிலே குவார்டர் கார்டு ட்யூடியிலேருந்து விடுதலை கிடைச்சிட்டது'' என்று ஹவில்தார் உத்தரப் பிரதே சத்து மொழியில் பதில் சொன்னான்.

முதல் வகுப்புப் பெட்டியில் பிரம்பாலும் தோலாலும் ஆன பெட்டிகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. சில பெட்டிகள் இங்கிலாந்திலிருந்து வந்ததிலிருந்து திறக்கப்படவேயில்லை. அவற்றில் வெளிநாட்டுக் கப்பல்களின் சீட்டுக்கள் இன்னும் ஒட்டப்பட்டிருந்தன. இந்த அச்சடித்த சீட்டுக்களுக்கு மதிப்பு அதிகம். வெளிநாடுகளுக்குப் போய்விட்டு வருவதால் உள்ளூர்த் துரைமார்களுக்கு ஏற்படும் மதிப்பை இந்தச் சீட்டுக்களும் இவை ஒட்டப்பட்டிருந்த பெட்டிகளுக்கு அளித்துக் கொண்டிருந்தன.

ஒரு தலைமைக் குமாஸ்தா, இரண்டு குமாஸ்தாக்கள், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆகியோர் ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தை விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்தக் கனமான விவாதத்துக்கிடையிலும் தலைமைக் குமாஸ்தாவின் முகத்தில் ஒரு புன்சிரிப்பு காணப்பட்டது.

ஒரு பக்தனுக்குத் தீர்த்த யாத்திரை செய்வதில் இருக்கும் விருப்பம் இவர்களுக்கும் இந்தப் பிரயாணத்தில் இருந்தது.

''கப் கப், கப் கப்!'' ஸ்டேஷனுக்கு வெளியே கோச்சு வண்டியை இழுத்துவரும் குதிரைகளின் குளம்பொலி கேட்டது. எல்லாரும் ஜாக்கிரதையானார்கள்.

''பிராந்த் துரை வந்துட்டார்!''

எஞ்சின் ஒரு பெரிய நீராவி மூச்சுவிட்டது. வெளியே நின்று கொண்டிருந்த கிறிஸ்துவ டிரைவர் எஞ்சினுக்குள் ஏறிக்கொண்டான். பொலிடிகல் ஏஜண்ட் துரை அகல அகலமாகக் கால் வைத்துக் கொண்டு மெதுவாக நடந்தவாறே அங்கு வந்து சேர்ந்தார். அவரை ஏற்றிக்கொண்ட ரெயில் ஒரு சிறிய விசில் அடித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டது. ரெயில் போன பிறகு சூனியமாகிவிட்ட ஸ்டேஷனில் ஏதோ ஒரு சதித் திட்டத்தின் காற்று மட்டும் மிஞ்சி நின்றது.

அந்தப் பிரகாசமான பகல் நேரத்தில் கூட அச்சிறிய ரெயில் வண்டி அங்கே இரவின் இருளைக் கொண்டு வந்திருந்தது.

பினாகி ஜங்ஷனின் வேலியோரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைப் பார்த்து, ''துரையோட ஸ்பெஷல் எங்கே போயிக் கிட்டிருக்கு?'' என்று கேட்டான்.

ஒரு மியாணா இனத்தைச் சேர்ந்த பையன், ஒரு போலீஸ் காரனின் மகன், ''யாரோ ராஜா செத்துப்போயிட்டாராம். அங்கே தான் போறார் துரை!'' என்று பதில் சொன்னான்.

சற்று நேரத்துக்குப் பிறகு எங்கும் செய்தி பரவியது. விக்ரம் பூரின் டாகுர் இறந்து போய் இரண்டு நாட்களாகி விட்டனவாம். ஆனால் ஏஜென்சிக்கு இப்போதுதான் செய்தி கிடைத்ததாம். டாகுரின் சவத்தைப் படுக்கையில் கிடத்தி வைத்துவிட்டு அவர் நோய்வாய்ப்பட்டிருப்பதாக வதந்தி பரப்பப்பட்டதாம்!

அந்தக் காலத்தில் ராஜாக்களின் சாவு எப்போதும் ஒரு பரபரப்பான, மர்மம் நிறைந்த நிகழ்ச்சியாகும். சாவைப் பற்றிய செய்தி ஒரு சில தினங்களுக்கு மறைத்து வைக்கப்படும். அந்த இடைவெளியில் அரண்மனைப் பெட்டகங்களிலுள்ள நகை நட்டுக்களும், கஜானாவிலுள்ள பணமும் திருட்டுத்தனமாக அகற்றப்பட்டுவிடும்.

ஆகையால் ராஜாக்களின் சாவு பற்றிய செய்தி கிடைத்ததும் பொலிடிகல் ஏஜண்டுகளின் ரெயில்கள் அரண்மனைக் கஜானுவைப் பூட்டிச் சீல் வைப்பதற்காகச் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விரைந்து செல்லும்.

இந்தக் குழப்பத்தில் பலர் திடீர்ப் பணக்காரர்களாகி விடுவார்கள். அரண்மனையில் ஒழுங்காக உண்மையாக உழைத்து வந்த பணியாட்கள் பொய்க் குற்றம் சாட்டப்பட்டுத் துன்புறுத்தப்படுவார்கள்.

பதினெட்டே வயது நிரம்பிய தேவுபாவின் நிலை எப்படியிருக்கும்? அவள் அழுது விம்மிக் கொண்டிருப்பாள். அவளுக்கு யார் ஆறுதல் கூறுவார்கள்? அவளுடைய விரோதிகள் அவளுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்தால் அவள் என்ன செய்வாள்?

இதே சிந்தனையில் ஜங்ஷனில் இங்குமங்கும் உலாவினுன் பிஞுகி. அவனுடைய மனப்பறவை தன் சிறகுகளையடித்துக் கொண்டு விக்ரம்பூரின்மேலே வட்டமிடத் தொடங்கியது.

*　　　*　　　*

இதற்கு மூன்று மணி நேரத்துக்குள்ளேயே பிராந்த் துரையின் வழுக்கைத் தலை விக்ரம்பூர் அரண்மனைக்குள் நுழைந்து கொண்டிருந்தது. பெட்டிகளுக்குச் சீல் வைப்பதற்காக மெழுகுவர்த்திகளும் அரக்குத் துண்டுகளும் கொண்டு வரப்பட்டன. இறந்த ராஜாவின் பட்டமகிஷி, ராஜாவின் ஒரே வாரிசான தன் பத்து வயதுப் பையனைக் காவல் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். அன்று காலையிலேயே அவனுக்கு முடிசூட்டப்பட்டு விட்டது.

''அவனுக்கு ஏன் அதற்குள் முடிசூட்டினீர்கள்?'' என்று இரைந்தான் துரை.

புதிய ராஜாவின் மாமா அமைதியாகப் பதில் சொன்னுர். ''வாரிசுக்கு முடிசூட்டிய பிறகுதான் இறந்த ராஜாவின் சடலத்தை எடுக்க வேண்டும். இதுதான் எங்கள் வழக்கம்!''

''புதிய ராஜா பட்டமகிஷியின் வயிற்றில் பிறந்த மகன் இல்லை.''

''இளையராணி தேவுபாவின் வயிற்றில் இரண்டு மாத கர்ப்பம் இருக்கிறது.'' இம்மாதிரி பலவித முன்னுக்குப் பின் முரணுன விஷயங்கள் துரையின் காதில் விழுந்தன. இவற்றைக் கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தான் துரை.

அரண்மனைப் பெட்டகத்திலிருந்த பெட்டிகள் திறக்கப்பட்டு அவற்றிலிருந்த பொருள்களின் ஜாபிதாக்கள் தயாரிக்கப்பட்டன.

ஒரு பெட்டி சற்றுத் தூரத்தில் வைக்கப்பட்டிருந்தது. யாரோ அதைத் துரைக்குச் சுட்டிக் காட்டினார்கள். துரை பெட்டகத்தின் தலைமை அதிகாரியைத் திரும்பிப் பார்த்தான். பெட்டியை அப்போதுதான் கவனிப்பவன் போல் வியப்புத் தெரிவித்தான் அதிகாரி.

''வெளியே போ!'' என்று கோபங் கொண்ட துரை உடனே உத்தரவிட்டான்.

அரண்மனையின் முக்கிய அதிகாரி ஒருவன் ஒரு விநாடியில் திருடனாக்கப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட்டான். துரையின் செல்வாக்கு அதிகரித்தது. அதிகாரி டைப் அடித்த ஒரு நீண்ட விண்ணப்பத்தை எடுத்துக் கொண்டு துரையிடம் வந்தான். துரை அதைப் பிடுங்கித் தூக்கி எறிந்தான். தான் நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ளக் கூட அவனுக்கு வாய்ப்பு அளிக்கப் படவில்லை.

இந்த நிகழ்ச்சியால் துரையின் நோக்கம் நிறைவேறி விட்டது. அவனுடைய இந்தக் கெடுபிடி அரசாங்கத்தின் மற்ற அதிகாரிகளை உஷாராயிருக்கச் செய்துவிட்டது. துரையின் பேச்சைக் கேட்டதும் எல்லாரும் நடுங்கத் தொடங்கினார்கள். நிர்வாகத்திலிருந்த தளர்ச்சியில் பெரும் பகுதி தானாகவே மறைந்துபோய் விட்டது.

கெடுபிடி செய்வது, மிரட்டுவது, அதிகாரிகளைப் பயமுறுத்தி வைப்பதற்காக மிகவும் அநியாயமான காரியத்தையும் தயங்காமல் செய்வது, இவை போன்ற உபாயங்களைக் கடைப்பிடித்ததனால் தான் பெரும்பாலான ஆங்கிலேய அதிகாரிகள் கெட்டிக்காரர் களாகக் கருதப்படுகிறார்கள்.

பிராந்த் துரையும் இந்தத் தந்திரத்தையே கடைப்பிடித்தான். அவன் ராஜ்யத்தின் நிர்வாகப் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொண்டு நடத்தத் தொடங்கினான். அரசாங்கச் சிப்பந்திகளும் எண்ணெய் போடப்பட்ட சக்கரங்களைப் போல் சீராக இயங்க ஆரம்பித்தார்கள்.

39

''உங்களைக் கைகூப்பிக் கும்பிடறேன், என்னை இந்தச் சிக்கல்லே இழுத்துவிடாதீங்க!''

''நீ ராணி இல்லையா? நான் சொல்ற மாதிரி செஞ்சா உனக்கு லாபம் உண்டு.''

''என்ன லாபம்?''

''பிள்ளை பிறந்திருக்கறதாகச் சொன்னா நாலு கிராமம் ஜாகீ ராகக் கிடைக்கும். இல்லேன்னா, உனக்கு வயிறு நிறையச் சாப் பாடு கூடக் கிடைக்காதுடீ, பைத்தியக்காரி!''

''நீங்க என்ன சொல்றீங்க? சாப்பாடு கூடக் கிடைக்காதா?''

''ஆமா, நான் நிசந்தான் சொல்றேன். உன்னோட விரோதிகள் எல்லாருமாச் சேர்ந்து உனக்குக் கெட்ட பெயர் சூட்டி உன்னை விரட்டி விட்டுடுவாங்க!''

''ஏன் இப்படி அசட்டுத்தனமாப் பேசறீங்க? என்னை யார் விரட்டுவாங்க? நான் என்ன ராஜாவோட வைப்பா இருந்தேனா? நீங்க என்னை இந்த மாதிரி வேஷம் போடச் சொல்லாதீங்க? வேஷம் போட்டாலும் அதைச் சரியா நடிக்கத் தெரியாது எனக்கு. எனக்குப் பிள்ளை பிறக்கணும்னு இருந்தால் இதுக்குள்ளே பிள்ளை யைக் கொடுத்திருக்க மாட்டானா பகவான்?''

இந்த உரையாடல் தேவுபாவுக்கும் அவளுடைய தாய்க்கு மிடையே நடந்தது.

விக்ரம்பூரின் இளைய ராணி, ராஜபுத்திர ஜாதியைச் சேர்ந்த யுவதி தேவுபா அழுது கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் அடிக்கடி சுவர்களில் மாட்டப்பட்டிருந்த படங்களின்மேல் சென்று நிலைத்தன. டாகுர் சாகிபையும் தேவுபாவையும் சித்திரித்த படங்கள் அவை. டாகுர் சாகிபுக்கு டீ கொடுத்துக் கொண்டிருக்கும் தேவுபா, சாராயக் கோப்பையை எடுத்துக் கொடுக்கும் தேவுபா, அவருடைய கோட்டுக்குப் பித்தான் போட்டுக் கொண்டிருக்கும் தேவுபா, தன் பெயரிடப்பட்ட பசுப் பண்ணையைத் திறந்து வைக்கும் தேவுபா, ஆஸ்பத்திரியைத் திறந்து வைக்கும் தேவுபா, தேவுபா மகாதேவரின் கோயிலுக்கு அஸ்திவாரக் கல் நாட்டும் காட்சி, பெண்களுக்குப் பரிசுகள் வழங் கும் காட்சி, ஆண் உடையில் வேட்டைக்குச் செல்லும் காட்சி... இன்னும் எவ்வளவோ படங்கள். அவற்றைப் பார்க்கப் பார்க்க அவளுடைய துக்கம் அதிகரித்தது. அவள் தன் தலையிலும் வயிற் றிலும் அடித்துக் கொண்டாள்; சுவரின் மேல் தலையை மோதிக் கொண்டாள். ''என்னருமை டாகுர் சாகிப்!'' என்று கத்திக் கொண்டு, பழைய நினைவுகளால் தூண்டப்பட்டு விம்மி விம்மி அழுதாள்.

தேவுபா ஏதாவது ஒரு குழந்தையை எடுத்து வைத்துக்கொண்டு அது தன் பிள்ளை என்று வேஷம் போடவேண்டுமென்பது தான் தேவுபாவின் தாய் கூறிய யோசனை. இப்படி நாடகமாடுவது கள்ளங்கபடற்ற அந்தப் பதினெட்டு இருபது வயதுப் பெண்ணால் இயலாத காரியம். ஆனால் அவளுடைய உறவினர்களும், அரசாங்கச் சிப்பந்திகள் சிலரும் தங்களுக்குள்ளே ஒரு கோஷ்டியை உருவாக்கிக் கொண்டு தேவுபாவின் மூலம் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முயற்சி செய்தார்கள். ஆனால் தேவுபா இந்தக் கபட நாடகத்துக்கு இணங்கவில்லை.

''நீங்க என்னை அழக் கூட விடமாட்டீங்களா? ஏன் எப்போது பார்த்தாலும் என்னையே சுத்திக்கிண்டு உட்கார்ந்திருக்கீங்க?'' என்று கத்தினாள் அவள்.

அவள் தனிமைக்காக ஏங்கினாள். ஆனால் அரண்மனையில் தனிமை எங்கே கிடைக்கும்? அவளுடைய அந்தப்புரத்தில் எப்போதும் கூட்டம் நிறைந்திருந்தது. துரையின் உத்தரவுப்படி அதன் வாயில்வரை காவல் போடப்பட்டிருந்தது. துக்கம் விசாரிக்க வருபவர்களில் தனது நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்று புரிந்து கொள்ள முடியாமல் குழம்பினாள் தேவுபா.

துரையின் உத்தரவுப்படி அவளுடைய நகைகளும் பறி முதலாகத் தொடங்கியபோது, அங்கிருந்து ஓடிப்போய் விடலாமா என்ற எண்ணம் தோன்றியது அவளுக்கு. அவளுடைய மனம் பயங்கரக் கற்பனைகளில் ஈடுபட்டது.

அவள் பாலைவனத்தில் ஓடிக் கொண்டிருக்கிறாள். அவளுடைய உடம்பு பாலைவனத்தின் உஷ்ணக்காற்றில் தீய்ந்து கொண்டிருக்கிறது. வெள்ளைக்காரத் துரை, வேடுவர்களும் வேட்டைக்கார நாய்களும் சூழ அவளுடைய காலடிச் சுவடுகளைப் பின்பற்றிக் கொண்டு அவளைத் தொடர்ந்து வருகிறான். இலந்தைச் செடிப் புதர்களும் கள்ளிமர வரிசைகளும் அவளுடைய வேகத்தைத் தடைப்படுத்துகின்றன.

அவள் மட்டும் ஓர் ஏழைப் பிராமணனின் விதவையாக இருந்தால் எவ்வித இடையூறுமின்றித் தன் வைதவ்ய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கலாம். அதில் அவளுக்கு அமைதி கிட்டியிருக்கும். அவள் தன் விருப்பப்படி பூமியின் மடியில் உட்காரலாம், காட்டுக்குப் போய்ப் புல் வெட்டிக் கொண்டு வரலாம், வரட்டி தட்டலாம், மாடுகளை வளர்த்துப் பராமரிக்கலாம், துளசி வளர்க்கலாம். அக்கம்பக்கத்துக் குழந்தைகளுடன் விளையாடி ஆறுதல் பெற்றிருக்கலாம்.

ஆனால் அவள் ராஜாவின் விதவையாயிற்றே? அவள் இப்போது யாருடைய ராணியுமல்ல, யாருடைய தாயுமல்ல, பெண்ணுமல்ல, சகோதரியுமல்ல. அவள் இப்போது ஒரு கைதி, சந்தேகத்துக் குரியவள், சதித் திட்டங்களுக்கு மையம், சூழ்ச்சிக்காரர்களின் கைப்பொம்மை. அவளுடைய ஒவ்வொரு காரியமும் சந்தேகத்தைக் கிளப்பும். ராஜவம்சத்தைச் சேர்ந்த யாரும் அவளுடைய வீட்டில் சாப்பிட வரமாட்டார்கள். அவள் தங்களுக்கு விஷமூட்டிக் கொன்று விடுவாளென்று அவர்கள் பயப்படுவார்கள். அவள் பூஜை, விரதம் முதலியவற்றில் ஈடுபட்டால் மற்றவர்கள் அவள் பில்லி, சூனியம் வைக்க முயற்சி செய்வதாகச் சந்தேகப் படுவார்கள். அவளுக்குத் தலையோ, கண்ணோ வலித்தால் அவள் ஏதோ ஒரு ரகசிய நோயால் பீடிக்கப்பட்டிருப்பதாக வதந்தி பரவும். அவள் எங்கே போவாள்? யார் வீட்டுக்குப் போவாள்?

தேவுபா பயந்து போயிருந்தாள்.

அவளுக்குப் பிஞகியின் நினைவு வந்தது. 'என் பழங்கால நண்பன் பிஞகி. அவனால் இந்தச் சூழ்ச்சி வலையிலிருந்து என்னை விடுவிக்க முடியுமா? எப்படி விடுவிப்பான்? அவனுக்கு வயது எவ்வளவு? அநுபவந்தான் எவ்வளவு? அவனால் என்னை விடுவிக்க முடிந்தாலும் என்னை எங்கே கொண்டுபோய் வைத்திருப்பான்?'

இவ்வாறு பல் வேறு சிந்தனைகளில் மூழ்கியவாறே சுவரின்மேல் சாய்ந்தபடி தூங்கிவிட்டாள் தேவுபா.

* * *

ஒரு வாரகாலத்துக்குள் வெள்ளைக்காரத் துரை மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துவிட்டான். அதிகாரிகளுடைய பிரியத்துக்கும் பாத்திரமானான். அவன் இறந்துபோன டாகுர்சாகிப் நடத்தி வந்த தர்ம காரியங்களைத் தொடர்ந்து நடத்தினான். கூடவே பல நல்ல காரியங்களும் செய்தான். ஸ்நான கட்டங்கள் கட்டினான். டாகுர் சாகிபின் ஈமச்சடங்குகளை விமரிசையாகச் செய்தான். அவருடைய சமாதியில் ஒரு கோயில் கட்டினான். சிப்பந்திகளின் விடுமுறை, சம்பளம் முதலியவற்றை நிர்ணயித்து விதிகளைச் செய்தான். போலீஸ்காரர்களுக்கும் குமாஸ்தாக்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தான்.

இவ்வாறெல்லாம் செய்து மக்களின் நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொண்ட பிறகு அதை அஸ்திவாரமாகக் கொண்டு அவன் மகாயுத்தத்துக்கு வேண்டிய போர்வீரர்களைச் சேகரிக்க ஓர்

ஆபீசைத் திறந்தான். ராஜ்யத்தின் பெரும்பாலான அதிகாரிகளை ஆள் சேகரிப்பு அதிகாரிகளாக நியமித்து அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்தினுன். புத்தாண்டு விழாவில் அவர்களுக்குப் பட்டங்களும் பதக்கங்களும் தருவதாக ஆசை காட்டினுன்.

ஒரு மாதத்துக்குள் நாட்டில் வேலையில்லாமல் உட்கார்ந்திருந்த வீர இனங்களைச் சேர்ந்த வாலிபர்கள் ஆள் சேகரிப்பு ஆபீஸ்களில் செம்மறியாடுகளைப்போல் வந்து கூடத் தொடங்கினுர்கள். அதிகாரிகள் இனிய வார்த்தைகளால் அவர்களைக் குஷிப்படுத்தினுர்கள்.

''ஓடா, குமா, தேவ் ராஜியா, பீத்தல், ஹோத்தி, பிரம் ஆகிய வீர இனங்களைச் சேர்ந்த இளைஞர்களே! நீங்க அங்கே சண்டை போட வேண்டிய அவசியமே இல்லை. வெள்ளைக்காரங்க சண்டைப் போடுவாங்க! நீங்க போய்ச் சும்மா மஜா பண்ண வேண்டியது தான்'' என்றனர்.

பிரம் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் மட்டும் அதிகாரியைச் சந்தேகப் பார்வையுடன் பார்த்தான். மற்றவர்கள் அதிகாரியின் பேச்சில் மயங்கி அண்ணுந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதிகாரியின் பேச்சு தொடர்ந்தது: ''அங்கே உங்களுக்கு வேண்டிய மட்டும் பீடி, சிகரெட், பாக்கு, சாப்பாடு அப்புறம் சாராயம். அது மட்டும் இல்லே...'' அதிகாரி கண்ணைச் சிமிட்டிக் கொண்டே பிரம்மின் முதுகைத் தடவிக் கொடுத்தான். ''அங்கே போன பிறகு உனக்கு வீட்டு ஞாபகம் வரும்னு சர்க்காருக்குத் தெரியாதா? அதுக்கும் சர்க்கார் ஏற்பாடு பண்ணுவாங்க. இந்த வெள்ளைக்காரங்க சும்மா சண்டை போடத்தான் அங்கே போருங்கன்னு நினைக்கிறியா?''

அதிகாரியின் பேச்சு அவர்களை மயக்கியது. இப்போது அதிகாரி தான் சொல்ல விரும்பியதை, ''நீங்க எப்பவாவது அரபுப் பொண்களையும், யூதப் பொண்களையும் பார்த்திருக்கீங்களா?'' என்று தெளிவாகச் சொன்னுர்.

கூடியிருந்தவர்கள் 'இல்லை' என்று தலையை ஆட்டினுர்கள்.

''அப்படியாளு சாமி பேரை நினைச்சுக்கிட்டுக் கப்பல்லே ஏறி உட்காருங்க. உங்களுக்குக் கிடைச்ச அதிருஷ்டத்தை விட்டுடாதீங்க! இங்கே உட்கார்ந்துக்கிட்டு ஏன் வாழ்வைப் பாழாக்கிக்கிட்டு இருக்கீங்க?''

''நீங்களும் எங்களோடே வருவீங்களா?'' என்று பேத்தா குறும்பாகக் கேட்டான்.

''அடே முட்டாள்! என் மாதிரி பனியாக்களையும் பட்டாளத்திலே சேர்த்துக்கறதாயிருந்தா நான் இங்கே உட்கார்ந்துக்கிட்டு

இருப்பேனு? அப்படீன்னு நான் வீட்டிலே கூடச் சொல்லிக்காமே ஓடிப் போயிருப்பேனே!''

அந்தக் காலத்தில் சோரட்டைச் சேர்ந்த பல வீர இன இளைஞர்கள் வேலையில்லாமல் சோர்ந்து போயிருந்தார்கள். இதுவரை விக்ரம்பூரின் சமுத்திரக்கரை தான் அவர்களுடைய வாழ்க்கையின் எல்லையாக இருந்தது. அதற்கு அப்பாலும் அவர்களுக்கு வாழ்வு உண்டு என்று அவர்கள் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இப்போது அவர்களுடைய மனக் கண்ணுக்கு முன்னே பெரிய கப்பல்கள், கடலின் பரந்த மார்பின்மேல் பிரயாணம், பாக்தாத், பாஸ்ரா போன்று புதிய இடங்கள், பாலஸ்தீனத்தின் சிவந்த அழகிகள் ஆகியவை யெல்லாம் வரிசையாகத் தோன்றின. இவற்றின் கவர்ச்சி தவிர்க்க முடியாததாக இருந்தது.

இப்போது ஆள் சேகரிப்பு அதிகாரி தன் பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகித்தான். அவன் தன் மேஜையின்மேல் ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய சில கட்டுக்களைப் போட்டான். ''இதோ பாருங்க! இந்தாங்க, உங்க குழந்தை குட்டிகளுக்காகப் பணம். இனிமேலும் உங்களுக்குச் சைனியத்திலே சேரத் தயக்கமா?''

அந்தச் சோரட் இளைஞர்களின் மனத்தில் எஞ்சியிருந்த தயக்கமும் ரூபாய் நோட்டுக் கட்டுக்களைக் கண்டதும் மறைந்து போய்விட்டது. தாங்கள் சண்டைக்குப் போன பிறகு தங்கள் குடும்பங்களின் நிலை என்னவாகும் என்பது தான் அவர்களுடைய கவலையாக இருந்தது. சிங்கம்போல் வீரமுள்ளவர்களானாலும் குடும்பக் கவலையால் அவர்கள் வெள்ளாடு போல் பயங்கொள்ளிகளாகி விட்டிருந்தார்கள். குடும்பப் பிரச்னைக்குத் தீர்வு ஏற்பட்ட பிறகு அவர்களிடம் எவ்விதத் தயக்கமும் இல்லை.

''எப்போக் கிளம்பணும்?'' என்று பண்வீர் கேட்டான்.

''நாளை மறுநாள்.''

''சரி!'' என்று சொல்லி விட்டு எல்லாரும் எழுந்தார்கள்.

''சரி, இதை எடுத்துக்கங்க! எவ்வளவு வேணுமோ எடுத்துக்கங்க தாராளமா!'' என்று அதிகாரி அவர்களுக்கு முன் நிறையப் பீடிக் கட்டுகளைப் போட்டான்.

இந்தத் தாராளத்தில் அந்த இளைஞர்கள் சொக்கிப் போய் விட்டார்கள். தங்கள் காதலிகள் தங்கள் மேல் காதல் மழை பொழிவது போலிருந்தது அவர்களுக்கு. ஆளுக்குக் கொஞ்சம் பீடிகளை எடுத்துக் கொண்டு அவர்கள் பரமத் திருப்தியுடன், ''போதும்! போதும்!'' என்று சொன்னார்கள்.

''பரவாயில்லே, இன்னும் நிறைய எடுத்துக்கங்க! வீட்டிலே இருக்கறவங்களுக்கும் கொண்டு போய்க் குடுங்க!'' என்று அவர் களுக்கு உற்சாக மூட்டிஞன் அதிகாரி.

மூன்ரும் நாள் விக்ரம்பூரின் கடற்கரையிலிருந்து பட்டாளக் காரர்களே ஏற்றிக் கொண்டு சிறு படகுகள் தூரத்தில் கடலில் நின்று கொண்டிருந்த பாஸ்ராக் கப்பலே நோக்கிப் புறப்பட்டன.

நடுக் கடலில் வெள்ளேப் பட்டை போல் காணப்பட்ட அந்தக் கப்பலில் கண்களேப் பதித்தவாறு மங்கைகளும் கூட்டங்கூட்ட மாகக் கரையில் மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

40

மகீபத்ராம், ''பான்ஜா! நம்ம குதிரையைக் கொண்டு போய்ச் சுரேந்திர தேவ்ஜியிடம் விட்டுவிட்டு வா! இனிமேல் இங்கே இருந் தால் இதுக்குக் கஷ்டந்தான்!'' என்று படுக்கையிலிருந்தவாறே சொன்ஞர்.

மகீபத்ராமின் வாழ்க்கையில் இதுதான் அவருடைய முதல் தோல்வி. வாழ்க்கையாகிய 'சடுகுடு' விளேயாட்டில் இப்போது தான் முதல் தடவையாக அவர் தாம் தோற்றதாக ஒப்புக் கொண்டிருக்கிஞர்.

சோரட் பையன்கள், சடுகுடு விளேயாட்டில் எதிர்க்கட்சி எல்லேக் காரர்களால் பிடிக்கப்பட்டு மூச்சுத் திணறிஞல் கூடத் 'தோற்று விட்டேன்!' என்று சொல்லமாட்டார்கள்.

ஆஜீ நதி அசல் சோரட் மங்கையைப் போல் நம்பத்தகாதது, பயங்கரமானது. மகீபத்ராம் ஒரு நாள் தம் பலவீனமான நிலேயில் குதிரையை நதியில் குளிப்பாட்டிக் கொண்டிருந்தபோது அவரு டைய கால் வழுக்கி, அதன் விளேவாக நெஞ்சின் வலது பக்கம் வலி ஏற்பட்டு விட்டது. பல வருஷங்களுக்கு முன் அவர் ஒரு தடவை வெள்ளேக்காரத் துரையுடன் வேட்டைக்குச் சென்றிருந்தார். துரை துப்பாக்கியால் சுட்டுவிட்டுச் சட்டென்று பின்பக்கம் நகர்ந்தபோது அவனுடைய துப்பாக்கியின் கட்டை அவருடைய மார்பில் இடித்தது. அப்போது இந்த அதிர்ச்சியை அவருடைய இளம் ரத்தம் தாங்கிக் கொண்டு விட்டது. ஆஞல் இப்போது அவருடைய பலம் குறைந்த பிறகு அந்த வலி அவரைத் திட

றென்று தாக்கியது. ஒளிந்திருந்து சமயம் பார்த்துப் பாயும் மோசக்காரச் சிறுத்தை போல. அவர் படுத்த படுக்கையாகி விட்டார். வாழ்க்கையுடன் அவர் செய்து வந்த யுத்தத்தில் அவருக்குத் தோல்வி ஏற்பட்டு விட்டது.

தாம் அருமையாக வளர்த்த கால்நடைகளுக்கு நல்ல ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார் அவர்.

சுரேந்திரதேவ் ராஜ்கோட்டில்தான் இருந்தார். அவர் தம் மாளிகையின் மாடியிலிருந்து சாலையில் குதிரையின் மேல் சவாரி செய்து கொண்டு வந்த இளைஞனைக் கண்டார். குதிரையின்மேல் சவாரி செய்யும் இளமையைப் போன்ற அழகான காட்சிகள் உலகத்தில் மிகவும் குறைவுதான்.

''என்னுடை தாத்தா இந்தக் குதிரையை உங்ககிட்டே விட்டுட்டு வரச் சொன்னுர்'' என்றான் பினுகி. இதற்குமேல் அவனுக்கு எதுவும் புரியவில்லை.

சுத்தியவாரின் இந்த வழக்கம் சுரேந்திர தேவுக்குத் தெரியும். அந்தக் காலத்தில் அதிகாரிகள் வேறு இடத்துக்கு மாற்றலாகிப் போகும்போது தங்கள் குதிரைகளையும் மாடுகளையும் தங்களுக்கு வேண்டிய டாகுர்களிடம் காணிக்கையாகக் கொடுத்து விடுவார்கள். இப்படி அளிக்கப்பட்ட கால்நடைகளின் சாதாரண விலைக்குச் சற்று அதிகமாகவே டாகுர்கள் அதிகாரிகளுக்குப் பணம் கொடுத்து விடுவார்கள்.

ஆனல் மகீபத்ராம் பணம் எதிர்பார்ப்பவர் அல்லவே! அவருடைய முடிவு நெருங்கி விட்டதோ என்று நினைத்தார் சுரேந்திர தேவ்.

அவர் பினுகியின் பையில் நானூறு ரூபாய் நோட்டுக்களை வைத்தார்.

அவருடைய மிருதுவான கைபட்டதும் குதிரை தன் உடலைச் சிலிர்த்துக் கொண்டது. அதை லாயத்தில் கொண்டு போய்விட்டு விட்டுப் பினுகி சந்தோஷமாக வீடு திரும்பினன்.

அவன் தாத்தாவின் படுக்கையின் மேல் ரூபாய் நோட்டுக்களைப் போட்டான். ''இந்தாங்க! சுரேத்திர தேவ்ஜி ரொம்பச் சந்தோஷப்பட்டார்'' என்றான்.

ஆடி மாத மழையில் அவருடைய குதிரையின் கால்கள் மலைகளின்மேல் நர்த்தனமாடியது போல் இப்போது பினுகியின் முகத்தில் மகிழ்ச்சி நர்த்தனமாடுவதைக் கவனித்தார் மகீபத்ராம்.

படுத்திருந்த அவர் மிகவும் கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்தார். பினுகி அவரைத் தாங்கிக் கொள்ள முன்னே வந்தான். ஆனல்,

அவர் அவனுடைய உதவியை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் கண்களை உருட்டிக்கொண்டு, "நான் உன்னைக் குதிரையை வித்துட்டு வரவா சொன்னேன்?" என்று கத்தினர்.

பினுகி பதில் சொல்ல வாயைத் திறப்பதற்குள் அவனுடைய கன்னத்தில் பளாரென்று அறைந்து விட்டார் அவர். புதிய புல்லை நிறையத் தின்ற கன்றுக்குட்டி தன் பின்னங்கால்கள் கயிற்றல் கட்டப்பட்டிருந்தாலும் பாதையில் நேராக ஓடுவதுபோல் பினுகியின் கன்னத்தில் சிவப்புக் கோடுகள் ஓடின.

பினுகியை அறைந்து விட்டு அந்தச் சிரமத்தைத் தாங்க முடியாமல் படுக்கையில் விழுந்தார் மகீபத்ராம். அவர் என்றுமே அழுததில்லை. ஆனல் இன்று கண்ணீர் தாரை தாரையாக அவருடைய கண்ணிமைகளை நனைத்துக் கொண்டு காதுகளிடம் ஏதோ ரகசியம் சொல்வதற்கு ஓடியது. அவர் தம் நெஞ்சைக் கையால் பிடித்துக் கொண்டு புரண்டு படுத்தார்.

பினுகி அழுது கொண்டே அவருடைய கால்களைப் பிடித்துக் கொண்டு, "என்னை மன்னிச்சுடுங்க, தாத்தா!" என்று கெஞ்சினன்.

மகீபத்ராம் ஒன்றும் பேசாமல் காலை ஆட்டினர். அவனை அங்கிருந்து போகச் சொல்வதற்கான சமிக்ஞை அது.

அங்கு மௌனமாக நின்று கொண்டிருந்த அவனுடைய பாட்டி அவனை அறைக்கு வெளியே கூட்டிக் கொண்டு போனள்.

சற்று நேரத்துக்குப் பிறகு வெளியே ஒரு சிறிய குதிரை வண்டியின் அரவம் கேட்டது. வண்டியோட்டி கையில் சாமரத்துடன் உள்ளே நுழைந்து, "தர்பார் சுரேந்திரதேவ்ஜீ தங்களைப் பார்க்க உள்ளே வரலாமா?" என்று கேட்டான்.

பினுகிக்குத் தாத்தாவின் அருகே செல்லவே பயமாக இருந்தது. "தர்பார் சாகிப் வந்திருக்கிறர்!" என்று பாட்டியே அவரிடம் போய்ச் சொன்னள்.

"கூட யார் வந்திருக்கிறர்?"

"டெபுடி சூபரிண்டெண்ட் போலிருக்கிறது."

"உம், நான் காலை இழுத்து இழுத்து நடக்கிறதைப் பார்க்கறதுக்காக வந்திருக்கானுக்கும் டெபுடி சூபரிண்டெண்ட்! சரி, கோட்டு, தலைப்பா, தடி எல்லாம் கொண்டுவா! எனக்கு உடை அணிந்து விடு!"

எங்கிருந்தோ அவருக்கு உடலில் பலம் வந்து விட்டது. அவர் பற்களைக் கடித்துக்கொண்டு தொண்டையின் கரகரப்பை அடக்கிக் கொண்டார். முழு உடையையும் அணிந்து கொண்டு அவர்

நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தார். கையில் தடியை வைத்துக் கொண்டார்.

படுக்கையின்மேல் புதிய சால்வையை விரித்து விருந்தாளிகள் உட்கார இடம் தயாரிக்கப் பட்டது.

புரட்டாசி மாதத்தில் அகவும் மயிலைப்போல் கம்பீரமான குரலில் சுரேந்திரதேவ், ''என்ன சமாச்சாரம்?'' என்று கேட்டார்.

மகீபத்ராம் அவர்களை வரவேற்க நாற்காலியிலிருந்து எழுந்தார்.

''பரவாயில்லே, உட்கார்ந்திருங்க, உட்கார்ந்திருங்க!'' என்று சொல்லிக் கொண்டே சுரேந்திரதேவ் அவரிடம் ஓடி வந்தார். ''அடே, தேவலையே! நீங்க நல்லா ஆரோக்கியமாத்தானே இருக்கீங்க! இல்லையா, சுக்லா சாகிப்?'' என்று சொல்லிக் கொண்டே சுரேந்திரதேவ், காக்கிக் கால்சராயும் பொட்டுப் போட்ட கோட்டும் அணிந்திருந்த தம் கூட்டாளியின் பக்கம் திரும்பினார்.

''உங்க விஷயம் வேறு. இருந்தாலும் இவர் வரதுக்கு அவசியமே இல்லைதான். நான் நன்னாத்தான் இருக்கேன்!'' என்று திணறிக் கொண்டே சொல்லிவிட்டு மகீபத்ராம் டெபுடி சூபரிண்டெண்டை ஓரப் பார்வை பார்த்தார்.

சூபரிண்டெண்ட் நன்றாகக் கடித்துத் துப்பப்பட்ட கரும்புச் சக்கைபோல் முகத்தை வைத்துக்கொண்டு, ''அதெல்லாம் இல்லே. உங்களைப் பார்க்க வர்ரது என் கடமை'' என்றான்.

சுரேந்திரதேவ் ஒரு மணிநேரம் அங்கேயே உட்கார்ந்துகொண்டு ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசியதன் கருத்து இது தான்: ''இந்த அரசாங்கம் அழிந்து விடப் போகிறது. அது தன் பாவங்களாலேயே நாசமாகி விடப் போகிறது.''

போலீஸ் அதிகாரி அவர் பேசியதையெல்லாம் கூர்ந்து கவனித்துத் தன் மனத்தில் குறித்து வைத்துக் கொண்டான்.

விருந்தாளிகள் புறப்பட்டார்கள். சுரேந்திரதேவ் குதிரையைப் பற்றிய பேச்சை எடுப்பாரோ என்று பயந்து கொண்டே இருந்தார் மகீபத்ராம். அத்தப் பேச்சு வந்தால் அவருக்கு எவ்வளவு இக்கட்டாக இருக்கும்? நல்ல வேளையாகச் சுரேந்திரதேவ் எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேசியும் குதிரையைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. அவர் விடைபெறும்போது மகீபத்ராமிடம், ''என்னை ஒருபோதும் அந்நியமா நினைச்சுக்காதீங்க!'' என்று மட்டும் சொன்னார்.

அவருடைய வண்டியை ஓட்டிச் சென்ற குதிரைகளின் குளம்பொலி வெகு தொலைவுக்குப் போன பிறகு மகீபத்ராம் தம்

உடலின் மேல் இதுவரை வைத்திருந்த பிடிப்பைத் தளர்த்தினர். சோர்ந்து போய்ப் படுக்கையில் விழுந்தார் அவர்.

மறுநாளே அவருடைய உயிர் பிரிந்து விட்டது. ஆனால், கடைசி வரையில் அவர் பிணுகியை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. ஏழெட்டுப் பிராமணர்கள் அவரது உடலை எடுத்துக் கொண்டு போய்த் தகனம் செய்து விட்டு வந்தார்கள். அவர் இறந்த செய்தி கேட்டுத் துக்கம் விசாரிக்கக் கூட நிறையப் பேர் வரவில்லை.

41

விக்ரம்பூர் நகரத்துக்கு அழகு தந்தது எது? அதன் உயரமான மணிக்கூண்டா? கோபுரங்களால் சூழப்பட்ட விசாலமான அம்ரூ சௌக்கா? நிலாக் கால இரவுகளில் படகோட்டிப் பெண்களின் ராஸக்கிரீடைகள் இடம் பெறும் மொட்டை மாடிகளா?

இல்லை, இல்லை, இவற்றில் ஒன்றும் இல்லை, விக்ரம்பூருக்கு அழகு தந்தவை. அதன் வீடுகளின் முன்புறம் அமைந்திருந்த உயரமான வராந்தாக்கள் தாம்.

ஒவ்வொரு நாளும் காலையில் வீடுகளின் சொந்தக்காரர்கள் அந்த வராந்தாக்களில் சப்பணம் கட்டிக் கொண்டு உட்கார்ந்து பல் தேய்ப்பார்கள். சூரியன் அடிவானத்திலிருந்து இரண்டு மூன்று மூங்கில் உயரத்துக்கு ஏறும் வரையில் அதிகாரிகளும் தங்கள் தங்கள் வீட்டு வராந்தாக்களில் உட்கார்ந்தவாறே பேசிக் கொண்டிருப்பார்கள்.

இந்த வராந்தாக்களிலிருந்து எழுந்திருக்கவே யாருக்கும் மனம் வராது. அவற்றில் ஏதாவது துணியை விரிக்கத் தேவையில்லை. அரசாங்கத்தின் பெரிய பெரிய அதிகாரிகள் கூடக் காலை வேளைகளில் ஒரு பனியனை மட்டும் அணிந்து கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். அப்போது அவர்களிடம் காணப்படும் கம்பீரம் அவர்கள் முழு உத்தியோக உடையுடன் தங்கள் ஆபீஸ் நாற்காலிகளில் உட்கார்ந்திருக்கும்போது கூடக் காணப்படாது. உயர்ந்த வராந்தாக்களில் அமர்ந்திருக்கும் மனிதர்கள் யானைகளின் மீது அமர்ந்துள்ளவர்களைப் போல் கம்பீரமாகக் காட்சியளிப்பார்கள். தண்ணீர் நிரம்பிய வெள்ளி லோட்டாக்கள் அவர்களுக்கருகே வைக்கப்பட்டு, வராந்தாக்களுக்கு இன்னும் அழகு செய்யும். பல் தேய்ப்

பவர்கள் நிதானமாக, சாஸ்திர முறைப்படி தொண்டையைக் காறிக்கொண்டு நாக்கை வழித்துக்கொள்ளும் காட்சிக்கு ஈடானது உலகத்தில் வேறெதுவும் இருக்க முடியாது. புதிய, பச்சையான பல் குச்சித்துண்டு பாதித் தொண்டைக்குள் சென்று அங்கிருந்து கோழையை வெளிப்படுத்தும்போது சிம்ம நாதத்துக்கொத்த ஒலி கேட்கும். பல்குச்சி விற்பவர்கள் ஒரு நீளக்குச்சியை இரண்டாகத்தான் வெட்டி விற்பார்கள். ஆகவே பல் குச்சிகள் நீளமாக இருக்கும். இதைத் தவிர ஒவ்வொரு வராந்தாவுடனும் சரித்திரத்தின் ஒரு பகுதி இணைந்திருக்கும். அடுத்த வீட்டுக்காரனின் நிலத்திருந்தோ பொது வழியிலிருந்தோ அரை அடி, ஒரு அடி நிலத்தை விழுங்கி விடுவது சாதாரண சமாசாரமா? அதற்கும் ஒரு சரித்திர முக்கியத்துவம் உண்டல்லவா? இவை சம்பந்தப்பட்ட விவாதங்களும் சச்சரவுகளும் விக்ரம்பூர் முனிசிபாலிடியின் ஷெல்புகளில் உள்ள காகிதக் கட்டுக்களில் நிறைந்து கிடக்கின்றன.

அப்படிப்பட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வராந்தா ஒன்று. சூரிய கிரணங்கள் இன்னும் அந்த இடத்தை எட்டவில்லை. வீட்டுக்காரர் கண்களைக் கசக்கிக்கொண்டு அதில் உட்கார்ந்திருந்தார். அவருக்கருகில் தண்ணீர்ப் பாத்திரம், பல்குச்சி, ஒரு கோப்பையில் உப்பு-எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் ஓர் அத்திமரம் இருந்தது. அதற்கடியில் நின்று கொண்டிருந்த ஒரு யுவதி தன் மூன்று வயதுக் குழந்தை சாலைக்கு ஓடிப் போய் விடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் இடையர் குல முறைப்படி உடையணிந்திருந்தாள். அவளோடு சுமார் அறுபது வயதுக் கிழவி ஒருத்தியும் இருந்தாள். கிழவியின் வாயிலும் அத்திக்குச்சி இருந்தது.

''இங்கே வா, குழந்தை! இதோ பார், சாகிப் உட்கார்ந்திருக்கார்! இவருக்குச் சலாம் பண்ணு பார்ப்போம்!'' என்று சொல்லிக் கிழவி குழந்தையின் கைகளைப் பிடித்து அதன் தலைமேல் வைத்தாள்.

அவளுடைய நோக்கம் நிறைவேறியது. வீட்டுக்காரரின் கவனம் அவர்கள் பக்கம் திரும்பியது. அவருக்கு மிகவும் பழக்கமானவர்கள் போல் ஸ்திரீகள் இருவரும் அவரைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார்கள். ''என்ன எசமான், சௌக்கியமா இருக்கீங்களா?'' என்று அவருக்கருகே சென்று கேட்டார்கள்.

அவர்கள் யாரென்று அதிகாரியால் ஓரளவு ஊகிக்க முடிந்தது. ''என்ன விஷயம்?'' என்று அவர் கேட்டார்.

''எங்க பிரம்மோட சமாசாரம் ஒண்ணுமே தெரியல்லியே! அது விஷயமா விசாரிக்கத்தான் வந்தோம்.''

''பிரம் யாரு?''

''அன்னிக்கு அவனுக்குக் கட்டுக் கட்டாப் பீடி கொடுத்தீங்க, கட்டுக் கட்டா ரூபா கொடுத்தீங்க. அவனுக்கு மஞ்சள் உடுப்புப் போட்டுக் கப்பல்லே ஏத்திவிட்டீங்க. அவனை ஞாபகமில்லையா உங்களுக்கு? முகத்திலே அம்மைத் தழும்பு இருக்குமே அவனுக்கு!''

"இப்படிச் சொன்னு எனக்கு எப்படி ஞாபகம் வரும்? மத்தியானம் கச்சேரிக்கு வா; பிரம்மோட நம்பரை எடுத்துக்கிட்டு வா, கிழவி. வெறும் பேர் இருந்தாப் போருது. நம்பர் இருந்தாத்தான் எல்லா விவரமும் தெரியும்.''

நல்ல வேடிக்கைதான்! ஒரு மனிதன், உயிரோடு நடமாடிக் கொண்டிருக்கும் மனிதன், அம்மைத் தழும்புகளுள்ள முகத்தோடு கூடிய மனிதன், பிரம் என்ற பெயருள்ளவன் அவனைப் பெயரைக் கொண்டு தெரிந்து கொள்ளமுடியாதாம்! ஒரு நம்பரைக் கொண்டுதான் தெரிந்துகொள்ள முடியுமாம்! என்ன விசித்திர மான உலகம் இது.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை

யுவதி தன் இடுப்பில் செருகிக்கொண் டிருந்த சிவப்புத் தாவணி யின் முனையை வெளியே எடுத்து அதில் போடப்பட்டிருந்த முடிச்சை அவிழ்க்கத் தொடங்கினுள். விரல்களால் முடிச்சை அவிழ்க்க முடியாததால் பல்லால் அதைக் கடித்து அவிழ்த்தாள்.

அப்போது அதிகாரி அவளுடைய பற்களைக் கவனித்தார். அழுக்கும் கறுப்புமாயிருந்த அந்த யுவதியின் பற்கள் மட்டும் இவ்வளவு வெண்மையாக இருப்பதன் ரகசியம் அதிகாரிக்குப் புரியவில்லை. பற்கள் வெண்மையாக இருக்கக் காரணம் புதிய பல் குச்சியல்ல, சுத்தமான வயிறுதான் என்பது அதிகாரிக்குத் தெரியவில்லை.

முடிச்சுக்குள்ளிருந்து ஒரு காகிதத் துண்டு வெளிப்பட்டது. பல மடிப்புக்களாக மடிக்கப்பட்டிருந்த அதில் ஒரு நம்பர் எழுதப் பட்டிருந்தது. யுவதி அந்தக் காகிதத்தைக் கிழவியிடம் கொடுத்தாள்.

அதைத் தம்மிடம் கொடுக்க வந்த கிழவியைக் கையால் ஜாடை காட்டி நிறுத்திய அதிகாரி, ''இப்போ கொடுக்க வேண்டாம், கிழவி. இதைக் கச்சேரிக்கு எடுத்துக்கிட்டு வா!'' என்ருர்.

"சரி, எசமான்? அங்கே வந்தா என் பிரம்மோட சமாசாரம் தெரியுமில்லே?''

"தெரியும், தெரியும்!''

''பேத்தாபூர்க்கார அம்ரா திரும்பி வந்திருக்கான். அவன் எங்களுக்கு ரொம்பப் பயத்தைக் கிளப்பி விட்டுவிட்டான்.''

''அம்ரா யாரு?''

'பைத்தியம் பிடிச்சுத் திரும்பி வந்திருக்கானே, அவன் தான். ஏதாவது உளறிக்கிட்டே இருக்கான் அவன்.''

அதிகாரி பேசாமல் இருந்தார்.

''எசமான்! அங்கே போற மனுசங்கல்லாம் ஏன் பைத்தியமாப் போயிடறுங்க! எங்க பிரம் நல்லா இருப்பாளு?'' என்று கிழவி கேட்டாள்.

''எல்லா விவரமும் கச்சேரியிலே கிடைக்கும். அங்கே வா!''

''அது சரி, நம்ம சமுத்திரக் கரையை ஏன் இருட்டாக்கிட்டாங்க? நான் அறுபத்தொம்பதாம் வருசத்துப் பஞ்சத்தின் போது பிறந்தேன். நாலு வயசிலே எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலேருந்து ஒரு நாள்கூட இந்தச் சமுத்திரக்கரை இருட்டாயிருந்ததில்லே. சமுத்திர தேவதையோட கண்ணுமாதிரி விளக்கு எப்போதும் எரிஞ்சுக்கிட்டே யிருக்கும். எவ்வளவோ பெரிய பெரிய வியாதிகள் வந்தது, ஏழு ஏழு வருசம் பஞ்சம் ஏற்பட்டுது. அப்போ எல்லாங்கூட விளக்கு எரிஞ்சுக்கிட்டுத் தான் இருந்தது. இப்போ அந்த விளக்கையே அணைக்கும்படியா என்ன வந்துடுச்சு, எசமான்?''

''பா...ப...ப...'' என்று நாக்கால் ஒலி எழுப்பிக் கொண்டு கிழவியின் பேரன் தரையிலிருந்து கூழாங்கல் பொறுக்கிக் கொண்டிருந்தான்.

''இப்போ என்ன ஆபத்து வந்திடுச்சு? எங்க பிரம்முக்கு ஒரு ஆபத்தும் வந்திருக்காதே?''

கிழவிக்கு விஷயத்தைத் தெளிவாக்கிவிட வேண்டுமென்று அதிகாரிக்குத் தோன்றியது. ''அடி போடி, பைத்தியக்காரி! நம்ம எதிரிகளை ஏமாத்தி அவங்களைப் பிடிக்கறதுக்காகத்தான் விளக்கை அணைச்சு வச்சிருக்கோம். உங்களுக்கு இதெல்லாம் புரியாது. அதனுலே தான் இந்த ரகசியமெல்லாம் உங்களுக்குச் சொல்றதில்லே. இந்த ரகசியம் வெளிவந்து விட்டால் எதிரிக்கும் நம்ம தந்திர மெல்லாம் தெரிஞ்சுபோய் அவன் உஷாரா யிடுவான்! இந்த விஷயத்தை நீ யாருகிட்டேயும் சொல்லாதே! உன் பிரம் அங்கே மஜா பண்ணிக்கிட்டிருப்பான், யாராவது ஒரு அரபுப் பொம்பளையோட'' என்று அவர் சொன்னுர்.

அதிகாரி வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினுர். அரபு, யூதப் பெண்களைப் பற்றிய பேச்சைக் கேட்டுச் சாப்பாட்டையும் தண்ணி

ரையும் விட்டு விடக்கூடிய ஒரு பெண் அருகிலிருப்பது அவர் நினைவுக்கு வந்தது.

அவர் பேச்சை மாற்றினர்: "உன்னோட பிரம்முக்காக இங்கேயிருந்து மூட்டை மூட்டையாச் சாமான்கள் அனுப்பிக்கிட்டிருக்கோம், தெரியுமா? பீடி, பாக்கு, ஏலம், கிராம்பு, லவங்கப் பட்டை, அப்புறம் பொட்டி பொட்டியா டீ."

"நீங்கதான் எங்க கடவுள்! ஆனு ஒண்ணு, தயவு பண்ணி எங்க பிரம் கள்ளு மட்டும் குடிக்காமே பார்த்துக்கிடுங்க! கள்ளுக் குடிச்சா அவனுக்கு ரொம்பப் போதை ஏறிட்டால் பெண்டாட்டியை அடிச்சுக் கொன்னுடுவான் அவன்."

"ஏ கிழவி! பிரம் மொதல்லே திரும்பி வரட்டும். அப்புறம் பாரு! அவன் நெஞ்சிலே பளபளன்னு நெறையத் தங்க மெடல் தொங்கும். அவனை வரவேற்கப் பெரிய பெரிய அதிகாரிகள் வருவாங்க. அவனுக்குச் சர்க்கார்லே நல்ல வேலை கிடைக்கும். அவனோட இந்தப் பையன் இந்த மாதிரி மண்ணிலே விளையாட மாட்டான்; குதிரை வண்டியிலே ஏறிக்கிட்டுச் சுத்துவான்."

"உங்க வாயிலே சக்கரை போடணும், எசமான்!" என்று சொல்லி ஆசீர்வாதம் செய்தாள் கிழவி. அவளுக்கு மிகவும் சந்தோஷம்.

பிரம்மின் மனைவி எதிரிலிருந்த வீடுகளின் வரிசைக்குப் பின்னல் எல்லையற்றுப் பரவியிருந்த கடலைக் கற்பனையில் கடந்து கொண்டிருந்தாள்.

பிரம்மை நேரே சந்தித்து விட்டாற்போன்ற உணர்வுடன் இரண்டு மங்கைகளும் வீடு திரும்பினர்கள்.

சற்றுத் தூரம் சென்ற கிழவி திரும்பி வந்து வராந்தாவில் உட்கார்ந்திருந்த அதிகாரியின் பெண் குழந்தையின் கையில் எதையோ வைத்துவிட்டுக் கைகளைக் கூப்பிக்கொண்டு, "இது இந்தக் குழந்தைக்காக! நீங்க மறுக்கக்கூடாது. எங்க பிரம் மோட பிள்ளை மேலே ஆணை!" என்று அதிகாரியிடம் கூறினர்.

இரக்கமே உருவான அதிகாரி கிழவியின் வேண்டுகோளை மறுக்கவில்லை.

42

இரண்டு பெண்களும் புறப்பட்டுப் போன பிறகு அதிகாரியின் குழந்தைகளிடையே கிழவி கொடுத்துவிட்டுப் போன எட்டணாவைப் பங்குபோட்டுக் கொள்வது குறித்துச் சண்டை ஏற்பட்டது.

அதிகாரி க்ஷவரம் செய்து கொள்ள உட்கார்ந்தார். அவருடைய கையிலிருந்த கண்ணாடியில் பிரதிபலித்த சூரிய ஒளி சாலையில் தண்ணீர்க் குடத்துடன் போய்க் கொண்டிருந்த பெண்களின் மேலே விழுந்தது.

பிரம்மின் மனைவி தன் மாமியாரிடம், ''அத்தை! இவ்வளவு தூரம் வந்திருக்கோமே! வாங்க, சமுத்திரத்துக்குத் தேங்காய் உடைச்சிட்டுப் போகலாம்'' என்று சொன்னாள்.

''சரி, வா! இந்தக் குழந்தைக்கும் ரத்னுகரத்தைக் காண்பிச்ச மாதிரி இருக்கும்.''

மங்கைகள் இருவரும் ஒரு கடைவாசலில் நின்று கொண்டு தேங்காய்களைக் குலுக்கிக் குலுக்கி அவற்றில் இளநீர் இருக்கிறதா என்று பார்த்தார்கள். நிறைய இளநீருள்ள தேங்காய் அவர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. பிரம்மின் பிள்ளை அவர்களுக்கு அருகில் நின்று கொண்டு ஒரு கூடையிலிருந்த உளுந்தைக் கைகளால் அளைந்து கொண்டிருந்தான்.

அப்போது மூன்று நான்கு போலீஸ்காரர்கள் ஓடி வந்தார்கள். ''ஏ கிழவி! அப்பறம் தேங்காய் வாங்கிக்கலாம்! இப்போ எங்களோடே வா ஸ்டேஷனுக்கு! ஜல்தி வா!'' என்று அவர்களில் ஒருவன் சொன்னான்.

''ஏம்பா?''

''ஏன், என்னத்துக்கு அப்படீன்னெல்லாம் நீ கேட்க வேண்டிய தேவையில்லை. வா உடனே! அங்கே வந்து நீ பூசை பண்ண வேண்டாம்!'' போலீஸ்காரன் அவளுடைய கையிலிருந்த தேங்காயை வாங்கிக் கீழே வைத்து விட்டான்.

''அண்ணே! நாங்க இந்த ஊர் இல்லே, கிராமத்திலேருந்து வந்திருக்கோம்'' என்றாள் யுவதி.

''உங்க மூஞ்சியைப் பார்த்தாலே அது தெரியுதே! அதனால்தான் உங்களைக் கூட்டிக்கிட்டுப் போக வந்திருக்கோம்'' என்று போலீஸ்காரன் தன் கெட்டிக்காரத்தனத்தைக் காட்டிக் கொண்டான்.

ஒரு சிப்பாய் குழந்தையைத் தூக்கிக் கொண்டு நடந்தான். கன்றுக் குட்டியைத் தொடர்ந்து ஓடும் பசுக்கள் போல் மங்கைகள் இருவரும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

தூரத்திலிருந்து ஸ்டேஷனின் அரவங்கள் அவர்களுக்குக் கேட்டன. ஸ்டேஷனுக்கு வெளியே கோவேறு கழுதை வண்டிகளிலிருந்து பெட்டி, படுக்கை முதலிய சாமான்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்தன. ஸ்டேஷனில் ஒரு ரெயில் நின்று கொண்டிருந்தது.

சர்க்காரின் சாமான்களைத் தூக்கிக்கொண்டு போய் ரெயிலில் ஏற்றுவதற்காகத்தான் போலீஸ்காரர்கள் தங்களை இழுத்து வந்தார்களென்று மங்கைகளுக்குப் புரிந்தது.

இன்னும் சில சாலைகளிலிருந்தும் சிப்பாய்கள் மேலும் சில அப்பாவி ஜனங்களை ஸ்டேஷனுக்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள்.

சமுத்திரக் கரையில் சிதறிக் கிடந்த உப்பை அங்கிருந்தே பார்க்க முடிந்தது. அதன் மேல் ஓர் எருமையின் செத்த உடலும் கிடந்தது. சவத்துக்குமேல் கழுகுகள் கூட்டங் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. இதற்கிடையில் ஓரிரு நாய்களும் சில காக்கை களும் சவத்தை அணுக முயற்சி செய்து கொண்டிருந்தன.

''நீங்க ரெண்டு பேரும் கச்சை கட்டிக்கிட்டுச் சாமானைத் தூக்குங்க!'' என்று சிப்பாய் சொன்னான்.

''இல்லே அண்ணே! எம் மாமியாராலே தூக்க முடியாது. அவங்களுக்கு ஆஸ்துமா, நானே தூக்கறேன். குழந்தையை அவங்க கிட்டே குடுத்துடு'' என்று யுவதி சொன்னாள்.

''ஆமா ஜமாதார்!'' கிழவி தன் ஆஸ்துமாவின் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். ''போன வருசம் வரையிலே எனக்கு ஒரு நோய், நொடி இல்லே. எங்க பிரம்மோட அப்பா செத்துப் போனப்பறந்தான்...''

சிப்பாய்க்கு அவளுடைய கதையைக் கேட்கப் பொறுமை இல்லே. ''ஏ கிழவி, சமுத்திரக் கரையிலே வேலை பார்த்தா ஆஸ்துமா சொஸ்தமாயிடும். சாமானைத் தூக்கு! எனக்கும் வைத்தியம் தெரியும்'' என்றான்

அவன் நாவித ஜாதியைச் சேர்ந்தவன்.

''எங்களுக்கு உன் வைத்தியம் ஒண்ணும் வேண்டாம். ஜல்தியாக் குழந்தையை எம் மாமியார் கிட்டே குடுத்துடு. நான் ரெண்டே நடையிலே எல்லாச் சாமானையும் எடுத்துக்கிட்டுப் போயிட றேன்'' என்றாள் யுவதி.

கிழவி குழந்தையை எடுத்துக் கொள்ள முன்னே வந்தாள். சிப்பாய் பின்னால் நகர்ந்துகொண்டே, ''உன் குழந்தை ஒண்ணும் செத்துப் போயிடாது. உம், சாமானைத் தூக்கு, கிழவி!'' என்றான்.

தான் அந்நியனின் கையில் இருப்பது குழந்தைக்குத் தெரி யாதா? அந்நியனுக்கு அவன்மேல் என்ன உரிமை? அவன் அழுது கொண்டே சிப்பாயிடமிருந்து இறங்க முயற்சி செய்தான்.

சிப்பாயும் கிழவியும் இவ்வாறு சச்சரவு செய்து கொண்டிருந்த போது சில அதிகாரிகள் அங்கு வந்து சிப்பாயை அதட்டினார்கள்.

''ஏன் தாமசம் பண்ணிக்கிட்டிருக்கே? சாகிப் வர்ர நேரமா யிடுச்சு!'' என்று ஹவில்தார் கத்தினுன்.

பூட்ஸ் சர் சர்ரென்று ஒலிக்க ஜமாதார் அங்கு வந்து சேர்ந்தான். அவனுடைய இடுப்பிலிருந்து ஒரு மெல்லிய பிரம்பு தொங்கிக் கொண்டிருந்தது. அது அவனுடைய தொடையின்மேல் படும்போது 'பட் பட்'டென்று ஒலி எழும்பியது. அவன் தன் தொப்பி யின் கறுப்பு வாரை மோவாயின் மேல் இழுத்து விட்டுக் கொண்டு, ''என்ன வேலே செய்யறேப்பா நீ? வாத்தியார் வேலேயா பார்க்கறே? ஜல்தி சாமானேத் தூக்க ஏற்பாடு பண்ணு! உம்!'' என்று சிப்பாயை அதட்டினுன்.

இதற்குள் பௌஜ்தாரின் வண்டி அங்கு வந்து விட்டது. இப்போது குழந்தை சிப்பாயின் இடுப்பிலிருந்து தொங்கிக் கொண் டிருந்தான். சிப்பாய் குழந்தையைக் கீழே இறக்கி விட்டுக் கிழவி யின் தலேயில் ஒரு பெரிய மிலிடரி டிரங்கை ஏற்றினுன். கிழவியால் அதன் பாரத்தைத் தாங்க முடியவில்லே. பெட்டி ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமுமாக விழுந்தாள்.

பௌஜ்தார் ஹவில்தாரையும் ஜமாதாரையும் மிரட்டினுன். ''நீங்க என்ன க்ஷவரமா பண்றீங்க இங்கே? கட்டாய வேலேக்கு நல்ல ஆளாப் பாத்துப் பிடிச்சுக்கிட்டு வரத் துப்பில்லாமே,சாகாத பொணங்களேயெல்லாம் பிடிச்சுக்கிட்டு வரீங்களே! கிடுகிடுன்னு வேலே செய்ய முடியல்லேன்ஞ, வேலேயை விட்டுட்டுத் தொலேயுங்க ளேன்! இதோ வந்துடுவான் என் பெரியப்பன்! வந்து குதிகுதின்னு குதிப்பான்!''

பௌஜ்தார் கொஞ்சதூரம் போய்த் திரும்பி வந்து சிப்பாயிடம், ''இந்தக் கண்காட்சியை முதல்லே இங்கேருந்து அப்புறப்படுத்து. அநாவசியமாக் கூட்டம் கூடிப் போயிடும்'' என்று சொன்னுன்.

அவன் 'கண்காட்சி' என்று குறிப்பிட்டது தரையில் விழுந்து கிடந்த கிழவியை. குழந்தை அவளுடைய மார்பில் தலேயை வைத்துக் கொண்டு உரக்கக் கத்திக் கொண்டிருந்தான்.

* * *

பின்னிரவில் ஏதோ ஒரு ரெயிலில் வந்திறங்கிய ஒரு பிரயாணி முகம் கழுவிக் கொண்டு ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தான். அவன் கிழவியின் நிலேமையைக் கண்டு குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டான். இதற்குள் யுவதி சாமான்களேத் தூக்கிக் கொண்டு போய் வைத்து விட்டுத் திரும்பி வந்தாள்.

''இதென்ன? எம் மாமியாரைக் கீழே தள்ளினது யாரு?'' என்று அவள் கூச்சலிடத் தொடங்கினுள். ''தள்ளினவன் நாசமாப் போக! அவன் வீட்டுலே எல்லாரும் சுடுகாட்டுக்குப் போக!''

போலீஸ் அதிகாரிகள் தூரத்தில் நின்று கொண்டிருந்தார்கள். கோட்டும் கால்சராயும் அணிந்திருந்த ஒரு மேல் ஜாதி இளைஞன் அந்த மங்கைகளுக்கு உதவிக் கொண்டிருப்பதைக் கவனித்தார்கள்.

''ஏ மிஸ்டர்! நீ வாலன்டியர்தானே?'' அதிகாரி ஒருவன் தன் இயற்கையான அதிகாரக் குரலில் பேசத் தொடங்கினுன். ''இந்தக் கிழவியை இங்கேயிருந்து தூக்கிக்கிட்டுப் போய், யாராவது பெரிய மனுஷன் கிட்டேயிருந்து ஏதாவது காசு வாங்கிக் கொடு!''

இளைஞன் பதில் சொல்லாமல் கோபத்துடன் அந்த அதிகாரியை உறுத்துப் பார்த்தான். பிறகு மங்கைகளிடம் சொன்னுன். ''வாங்க, உங்களை உங்க ஊரிலே கொண்டு போய் விடறேன்.''

''நீ யாரு, மிஸ்டர்?'' என்று ஒரு போலீஸ்காரன் கேட்டான்.

அந்தக் காலத்தில் சௌராஷ்டிரத்துப் போலீஸ்காரர்கள் 'மிஸ்டர்' என்ற வார்த்தையை உபயோகிக்கத் தொடங்கியிருந் தார்கள். மேல் ஜாதிக்கார வாலிபர்களை அழைக்க அவர்கள் இந்த வார்த்தையை உபயோகித்தார்கள். இந்த வார்த்தையை உச்சரிக் கும்போது அவர்களுடைய நாக்கு நுனி தேளின் கொடுக்கைப் போல் வெளியே வந்து நெருப்புப் பொறியை உதிர்த்துக் கொண்டு போகும்.

''மனுஷன்தான்!'' என்று இளைஞன் பதில் சொன்னுன்.

''நீ மிருகமில்லேன்னு முன்னலேயே புரிஞ்சுடுத்து. உம் பேர் என்ன?''

''பிஞகி தேவ்.''

''இப்போ எங்கே போறே?''

''ராணி தேவுபா வீட்டுக்கு.''

போலீஸ்காரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண் டார்கள். ''சரி, இவர் போகட்டும்'' என்று பௌஜ்தார் சொன்னுர்.

''நான் இந்த மங்கைகளையும் கூட்டிக்கிட்டுப் போகப் போறேன்.''

''கிழவியை வேணுமானுக் கூட்டிக்கிட்டுப் போ! இவளுக்கு இன்னும் இங்கே வேலை இருக்கு.''

''எங்களுக்கு உடனே கிராமத்துக்குப் போகணும். மறுபடி மத்தியானம் கச்சேரிக்கு வரணும். எங்களைப் போக விடுங்க'' என்ருள் யுவதி.

''சரி சரி, போகச் சொல்லு!'' என்று அதிகாரி புல்டாக் மாதிரி உறுமினன்.

''எங்களுக்குக் கூலி?''

''கூலியா?'' அதிகாரி கேலியாகச் சிரித்தான். ''இவ்வளவு சீக்கிரம் உன்னை விட்டுட்டோமே, அதுதான் உனக்குக் கூலி!''

''ஏன்? இவங்க செஞ்ச வேலைக்குக் கூலி கொடுக்க மாட்டீங்களா?'' என்று பிஞகி வியப்புடன் கேட்டான்.

''மிஸ்டர்!'' பௌஜ்தார் பிஞகிக்கு அருகில் வந்து, அவனுடைய தோள்களைப் பிடித்து உலுக்கினன். ''யுத்தத்துக்காகச் சாமான்கள் சேர்த்து அனுப்பற காலம் இது. இந்த நேரத்திலே யாருகிட்டேயும் தயவு தாட்சண்யம் காட்ட முடியாது. நீ இங்கேயே நின்னுக்கிட்டு இருந்தா உன்னையும் கட்டாய வேலைக்குப் பிடிச்சுப் போட்டுடுவோம். ராப் பகலா எங்களுக்கு இதே வேலை, புரிஞ்சுதா? தப்பிச்சுக்கணும்னு இப்பவே இங்கேயிருந்து நகர்ந்துடு, ஆமா!''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இவங்க கூலியைக் கொடுத்துடுங்க!''

''படிச்சுக்கிட்டிருக்கியா?'' என்று அதிகாரி கேட்டான்.

''ஆமா.''

''மூக்கணுங்கயிறு இல்லாமே கன்னுக்குட்டி ரொம்பத் துள்ளுது, இல்லியா?''

''அந்தப் பேச்செல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். முதல்லே இவங்களோட கூலியைக் கொடுங்க.''

''அப்போ உட்கார்ந்திரு. பொட்டியைத் திறந்துகொடுப்போம்.''

சற்று நேரம் சென்றது.

''நீ யாருக்குக் கூலி கொடுக்கச் சொல்றே, மிஸ்டர்?'' என்று போலீஸ் அதிகாரி பிஞகியைக் கேட்டான்.

''இந்த மங்கைகளுக்கு'' என்று சொல்லிவிட்டுப் பின்னல் திரும்பினன் பிஞகி.

ஆனல், அங்கு ஒருவருமில்லை. அவர்கள் அங்கிருந்து சப்தமில்லாமல் நழுவி விட்டிருந்தார்கள். போலீஸ்காரர்களுடன் தகராறு செய்து ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள அவர்களுக்கு விருப்பம் இல்லை. தங்களுக்குப் பரிந்து கொண்டு வந்த இளைஞனிடங்கூட அவர்களுக்கு நம்பிக்கையில்லை. முன்பின் தெரியாதவர்களை ஏமாற்றி மோசம் செய்யும் மோசடிக்காரர்கள் நல்ல உடையணிந்து கொண்டு ரெயில்களில் பிரயாணம் செய்வதுண்டு என்று அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். 'பம்பாய்ப் போக்கிரிகள்' என்று அவர்களுக்குப் பெயர்.

அந்தக் காலத்தில் 'பம்பாய்ப் போக்கிரிகள்' என்ற வார்த்தை களுக்குப் பின்னால் பயங்கரம் ஒளிந்து கொண்டிருந்தது, சில தடி களுக்குள் கத்தி செருகி வைக்கப்பட்டிருப்பதுபோல்.

பிஞகியின் முகம் நசுங்கிய சோற்றுத் தவலை போலாகி விட்டது.

''கவலைப்படாதே, மிஸ்டர்! இந்த ஆளுகளை வச்சுக்கிட்டு எவ்வளவோ காலமா மாரடிக்கறோம் நாங்க. நீ ஒரு நாள் விருந் தாளியா இங்கே வந்திருக்கே. அவங்க உன்னிஷ்டப்படி நடப்பாங் களா? நீயே யோசிச்சுப் பாரு'' என்று அதிகாரி அவனுக்கு ஆறுதல் சொன்னான்.

இதற்குள் அங்கே குதிரைப்படை அணி வகுத்து வந்தது. பாண்டு மாரு ராகம் வாசிக்கத் தொடங்கியது. கூட்டமும் சேரத் தொடங்கியது.

இந்தக் கூட்டத்தில் பலவித முகங்களைப் பார்த்தான் பிஞகி. அழகிய, கள்ளங் கபடற்ற முகங்களுடைய ஒரு கூட்டம் இருந்தது. கடுமையிம் கபடமும் நிறைந்து, சுருக்கம் விழுந்த முகங்களுடைய வர்களும் இருந்தார்கள். பின்னால் குறிப்பிடப்பட்டவர்கள் படைக்கு ஆள் சேகரிக்கும் அதிகாரிகள். அவர்கள் பல்வேறு ராஜ்யங்களில் வேலை பார்த்து, கெட்ட பெயர் வாங்கி, வேலையை விட்டு விட்டு இரவோடிரவாக ஓடிவந்தவர்கள். இப்போது அவர்கள் யுத்த காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு சர்க்காரை அண்டி, படைக்கு ஆள் சேர்க்கும் அதிகாரிகளாகப் பதவி பெற்று விட்டார்கள். அவர்கள் முன்பு செய்த குற்றங்கள் மன்னிக்கப் பட்டு விட்டன. அவர்களில் ஓரிருவர் பிஞகிக்குப் பழகியவர் களாகத் திகழ்ந்தார்கள். அவனுடைய தாத்தா வேலை பார்த்த காலத்தில் ஏஜென்சியிலிருந்து துரத்தப்பட்டவர்கள் அவர்கள். இப்போது அவர்கள் பெரிய பெரிய வெள்ளைக்கார அதிகாரி களுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்தார்கள்.

'பாவம், தாத்தா!' என்று நினைத்துக் கொண்டான் பிஞகி.

* * *

அவன் குதிரை வண்டியில் ஏறிக்கொண்டான்.

வண்டிக்காரன் போக வேண்டிய இடத்தைக் கேட்டபோது தான் பிஞகிக்குத் தன் நினைவு வந்தது.

அவன் எப்படித் தேவுபாவின் வீட்டுக்குப் போய்த் தன் பெட்டி படுக்கைகளை வைப்பான்? அவன் விருந்தாளியாகப் போய்க் கொண்டிருக்கும் இடம் தான்சிங் பெரியப்பாவின் வீடல்லவே! அது அரண்மனையாயிற்றே! விருந்தாளிகள் நினைத்தபோது

அரண்மனைக்குள் போய்விட முடியுமா? சாதாரண வீடுகளில் ஒரு முற்றம் இருக்கும். அதில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பார்கள். யாராவது விருந்தாளி வந்தால், ''விருந்தாளி வந்திருக்கார், விருந்தாளி வந்திருக்கார்!'' என்று சந்தோஷச் செய்தியைச் சொல்ல உள்ளே ஓடுவார்கள். சந்துக்குள் நுழைந்த விருந்தாளி வீட்டு வராந்தாவை அடைவதற்குள் வீட்டில் அவனுக்கு ஓர் இடம் ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய விருந்தோம்பும் குணம் அரண்மனையில் ஏது? அரண்மனையில் முற்றங்கூடக் கிடையாதே!

''தேவுபா வீட்டுக்குப் போகணுமா?'' என்று வண்டிக்காரன் ஆச்சரியத்துடன் கேட்டான். ''உன்னைக் கூட்டிக்கிட்டுப் போக வண்டி வரல்லியா?''

''கொஞ்சம் இரு, அப்பா!'' என்று பிஞகி சிந்தனையில் ஆழ்ந்தான்.

''ஏன் தம்பி, இப்பத்தான் முதல் தடவையா இங்கே வர்றியா?''

பிஞகி பேசாமல் இருக்கவே, வண்டிக்காரன் தொடர்ந்து பேசினன். ''அரசாங்க விருந்தாளியாகணும்னு, முதல்லேயே ஒரு தந்தி கொடுக்கணும். அப்பறம் ஒரு ஸ்டேஷன் முன்னலேயே ரெண்டாம் வகுப்பு டிக்கெட் வாங்கிக்கணும். புரிஞ்சுதா, தம்பி? அந்த மாதிரி ரெயில்லே இறங்கிஞ நீ சர்க்கார் விருந்தாளியா ஆறு மாதம் தங்கினலும் ஒருத்தரும் ஒண்ணும் சொல்ல மாட்டாங்க! இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகல்லே. திரும்பிப் போய் நான் சொன்னபடி செஞ்சு பாரு! அப்புறம் என்னை எப்பவாவது பார்த்தா 'காந்தட்! நீ சொன்ன தந்திரம் பலிச்சுட்டது'ன்னு எனக்கு ஜாடை காட்டு, போதும்!''

வண்டிக்காரக் காந்தட் வண்டியை மெதுவாக ஓட்டியவாறே ஒரே மூச்சில் பிஞகிக்கு உபதேசம் செய்து கொண்டே போனன். ''சமீபத்திலே இந்த ஊர்லே ஒரு வேடிக்கை நடந்தது. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பெரிய ராஜ்யத்தோட யுவராஜா இங்கே வந்து தங்கியிருந்தார். ரொம்ப நாள் தங்கியிருக்கல்லே, சும்மா ரெண்டு வருஷந்தான். இப்போ செத்துப் போனரே அந்த டாகுரோடேயே சாப்பிடுவார், வேட்டையாடப் போவார், உலாவப் போவார், தேவுபா சமைச்ச சாப்பாட்டையும் ஒருகை பார்ப்பார். பள்ளிக்கூடமெல்லாம் திறந்து வைப்பார். கடைசியிலே தௌலத்சிங் சாகிப் அவரோட குட்டை வெளிப்படுத்திட்டார். விருந்தாளி சொல்லிக்கிட்ட பேரிலே ஒரு ராஜ்யமே இல்லையாம்! அந்த வேஷதாரி யுவராஜா தன் மோசடியை ஒப்புத்துக்கிட்டார். அப்புறம் என்ன பண்றது?

அவருக்குப் பட்வான் ஜங்ஷன் வரையிலே முதல் வகுப்பு டிக்கட் வாங்கிக் கொடுத்து அனுப்பினுங்க. எப்படி வேடிக்கை?''

"நான் ஒரு மாணவன். எனக்கு ராணி தேவுபா ஸ்காலர்ஷிப் கொடுக்கருங்க. அது சம்பந்தமாத்தான் அவங்களைப் பார்க்கப் போறேன்.''

''அப்படியாளு நீ அவங்களைப் பார்த்த மாதிரிதான், போ. அவங்க இன்னிக்குச் சாயங்கால வண்டியிலே புறப்பட்டு யாத் திரைக்குப் போருங்க. அரண்மனையிலே யாரும் உன்னை லட்சியம் பண்ணி விசாரிக்க மாட்டாங்க. விசாரிச்சா எம்பேரு காந்தட் இல்லே!''

"அப்படியாளு என்னை ஒரு சத்திரத்துக்கு கூட்டிக்கிட்டுப் போ!''

"அதுதான் சரி! தேவுபா இப்போ யாத்திரையைப் பத்திக் கவலைப்பட்டுக்கிட்டிருப்பாங்க. அதைத் தவிர இன்னும் ஆயிரம் கவலே அவங்களுக்கு. இந்தச் சமயத்துலே உன்மாதிரி ஒரு பள்ளிக் கூடத்துப் பையனைக் கவனிக்க முடியுமா அவங்களாலே? இப்போ ரொம்ப இக்கட்டான நிலைமையிலே இருக்காங்க அவங்க.''

"என்ன விஷயம்?''

''டாகுர் சாகிப் உயிரோடே இருந்தா இப்படியெல்லாம் நேர்ந்திருக்காது.''

''எப்படி நேர்ந்திருக்காது?''

''அதெல்லாம் உனக்குப் புரியாது, தம்பி! தேவுபா யாத்திரை கிளம்ப வேண்டியதுதான்னு எங்களுக்கு முன்னலேயே தெரிஞ்சு போச்சு.''

வண்டிக்காரக் காந்தட்டுக்கு ஏதோ ஒரு ரகசியம் தெரிந்திருந் தது. அதைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்ள முடியவில்லை. அதை யாரிடமாவது சொல்லத் துடித்தான் அவன். இந்த ரஜ்வாடி களின் நாக்கு எப்போதும் சுற்றி வளைத்துக் கொண்டுதான் போகும். நேராகப் போகவே அதற்குத் தெரியாது.

வண்டிக்காரன் மெதுவாகத் தன் ரகசியத்தை வெளியிட்டான்.

''தேவுபா ஏதோ பாவம் செய்து விட்டாளாம்! அதற்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளவே தீர்த்த யாத்திரை போகிருளாம்!''

பிளுகியின் வாழ்க்கையில் விழுந்த இடி இது. அவன் ஸ்தம்பித்துப் போய் விட்டான். அவன் சத்திரத்தில் போய் இறங்கியதும் ஒரு மூலையில் தன் படுக்கையைப் போட்டுவிட்டு அதிலேயே முகத்தைப் புதைத்துக்கொண்டு வெகு நேரம்வரை படுத்துக் கிடந்தான்.

43

சத்திரத்தில் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த பிருகியின் பார்வை எதிரே சுவற்றில் பதித்திருந்த பளிங்குக் கல்லின் மேல் விழுந்தது. ''அன்னை ஸ்ரீ தேவுபாவின் புத்திரன் சுவர்க்கவாசி குமார் பல்வந்த்சிங்ஜீயின் நினைவாக'' என்று அதில் செதுக்கப் பட்டிருந்தது.

கல்லில் செதுக்கப்பட்டிருந்த ஒவ்வோர் எழுத்தும் பிருகியின் மனக்கண்ணில் ஒரு சிறிய ஆண் குழந்தையாக உருவெடுத்தது. ஒவ்வொரு குழந்தையின் வயதும் பதினைந்தே நாட்கள்தான். அழகும் மென்மையுமே உருவெடுத்தாற் போன்ற அந்தக் குழந்தைக் கூட்டம் ஆடிப் பாடிக் கொண்டு அந்த வழுவழுப்பான சலவைக் கல்லின் மேல் தவழ்ந்து விளையாடியது.

சுவரில் எழுதியிருந்த இன்னும் சில வாசகங்கள் மேலும் அவனுடைய பாாவையில் விழுந்தது. அவற்றைப் படித்ததும் கோபங்கொண்ட புலியின் கண்களைப் போல் அவனுடைய கண்கள் சிவந்தன.

கரி, செங்கல் துண்டு, பென்சில், சுண்ணும்பு, ஆணி, கத்தி ஆகிய பலவகைப் பொருள்களால் சுவரில் எழுதப்பட்ட அல்லது கீறப்பட்ட வாசகங்கள் அவை. எளிதில் அழித்துவிட முடியாதபடி அவ்வளவு அழுத்தமாக இருந்தன அவை. நேற்று வரை ராணி யாக இருந்தவளைப் பற்றி இன்று நாட்டில் பரவியிருந்த மோசமான வதந்திகள் அவற்றில் இடம் பெற்றிருந்தன. அவற்றில் சில் கவிதை வடிவிலும் இருந்தன. ஒரு போக்கிரிக் கவிஞன் தேவுபாவைப் பற்றிக் கீழ்த்தரமாக ஒரு சிறு காவியமே எழுதி அந்தச் சத்திரத்துச் சுவரை அலங்கரித்திருந்தான்!

சற்று நேரத்துக்குப் பின் அங்கே ஓர் ஆள் வந்தான். அவன் சுண்ணும்பும் பிரஷ்ஷும் கொண்டு அந்த வாசகங்களை அழிக்கத் தொடங்கினன்.

அங்கே பாராவிலிருந்த போலீஸ்காரன் அந்த ஆளிடம், ''இன்னும் நிறையச் சுண்ணும்பு அடி, தம்பீ! இதோ பாரு, எழுத்தெல்லாம் இன்னும் தெரியறது'' என்ருன்.

சுண்ணும்பு அடிப்பவன் தானே இயற்றிய ஒரு கவிதையாலேயே போலீஸ்காரனுக்குப் பதில் சொன்னன்.

''தோயா ந தோவாய
லுயான் லோவாய நஹீன்
ஜால் யாம் பால் யாம் ஜ ஜாய
பாதக் தாராம் பிராணி யான்!''

(ஓ ஜந்துவே! உன்னுடைய பாவங்கள் கழுவினால் போய் விடாது, துடைத்தாலும் அழிந்துவிடாது, நெருப்பால் சுட்டால் தான் அவை பொசுங்கும்.)

''ஆகா! உன் கவிதை அபாரம்! பவேஸ்வர்த் திருவிழாவிலே நீ பெரிய பெரிய கவிகளைக்கூடத் தோற்கடிச்சு விடுவே!'' என்று சொல்லிக்கொண்டே போலீஸ்காரன் தொண்டையைக் காறித் துப்பினான்.

சத்திரத்து வாசலிலிருந்த வேப்ப மரத்தில் பாக்கு அளவேயுள்ள ஒரு பறவை பாடியது. அந்தப் பாட்டில் அருவியின் ஓட்டம் இருந்தது, மேகத்தின் கருமை இருந்தது.

பினாகி இந்தப் பறவையைப் பல வருடங்களுக்குப் பிறகு பார்க்கிறான். ஏழெட்டு வருடங்களுக்கு முன் அவனும் தேவுபாவும், தீபடியா அருவியின் மறு கரையில் இலந்தைப் பழம் பொறுக்கப் போயிருந்தபோது இந்தப் பறவையை அவன் பார்த்திருக்கிறான். பைரவ் கட்டின் போலீஸ் ஸ்டேஷன் இருந்த மேட்டிலிருந்து பொழுது சாயும் நேரத்தில் பத்துப் பதினைந்து கோச தூரத்தில் கிர் மலையின் சரிவில் பெரியதாகக் காட்டுத் தீ எரிந்து கொண்டிருந்தது, அவர்களுக்குத் தெரிந்தது அப்போது. இப்போது இந்தச் சிப்பாய் பீடி பிடிப்பதுபோல் யாரோ ஒருவன் பிடித்துவிட்டு எறிந்த பீடித் துண்டே அந்தக் காட்டுத் தீக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

* * *

பதினொரு மணிக்குப் பினாகி துரையின் ஆபீசுக்குச் சென்று, ''எனக்குக் கொடுக்கப்பட்டு வரும் ஸ்காலர்ஷிப் பணம் இந்த மாதம் கொடுக்கப்படவில்லையே, ஏன்?'' என்று தலைமைக் குமாஸ்தாவைக் கேட்டான்.

தலைமைக் குமாஸ்தா பினாகியை ஒரு பெஞ்சியில் உட்காரச் சொல்லிவிட்டு அவனுடைய விண்ணப்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டான். பிறகு தன் கோட்டின் பொத்தான்களைச் சரிசெய்து கொண்டு, தொண்டையைக் கனைத்துச் சரிசெய்து கொண்டு துறையின் அறைக்குள் நுழைந்தான்.

துரையும் அவனும் ஏதோ பேசிக்கொள்வது பிஞுகிக்குக் கேட்டது. ஆனால் என்ன பேசுகிறார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரியவில்லை.

''நீ துரையைப் பார்க்க முடியாது. முதல்லே நீ எழுதிக் கொடுக்கணும்!'' என்று தலைமைக் குமாஸ்தா வெளியே வந்து பிஞுகியிடம் சொன்னான்.

''என்ன?''

'' 'இனிமேல் சர்க்காருக்கோ சக்ரவர்த்திக்கோ விரோதமா எந்த இயக்கத்திலும் சேர மாட்டேன்'னு எழுதிக் கொடுக்கணும்.''

''ஏன்?''

''நீ ஒரு கலகக்காரனா ஆகக் கூடியவன்னு ஹெட்மாஸ்டர் ரிப்போர்ட் அனுப்பியிருக்கார்.''

''என்ன?''

''ஆமா! யுத்தத்துக்குப் போயிருக்கிற சிப்பாய்களுக்காக நிதி சேகரிக்க ராஜ்கோட் ஜூபிலிப் பூங்காவிலே ஆகாய விமானங்களைக் கண்காட்சியா வச்சு, பார்க்கவர்ரப் பையன்கள் கிட்டே ஒவ்வோரணா வசூல் பண்ண ஏற்பாடு செஞ்சிருந்தாங்களே, அப்போ அதைப் பார்க்கப் போக வேண்டாம்னு சொல்லிப் பையன்களைக் கிளப்பி விட்டியாமே?''

''இதிலே கிளப்பி விடறத்துக்கு என்ன இருக்கு? ஹெட் மாஸ்டரே நோட்டீசில் எழுதியிருந்தாரே, பார்க்கப் போறதும் போகாததும் பையன்களோட இஷ்டம்னு!''

''கண்காட்சியைப் பார்க்கப் போக வேண்டாம்னு நீ இயக்கம் நடத்தினியா, இல்லையா?''

''இல்லையே, நான் பார்க்கப் போகல்லேன்னு தான் சொன்னேன்.''

''நீ சொன்னது மற்றப் பையன்களைக் கெட்ட முறையிலே பாதிச்சிருக்கு.''

பிஞுகிக்குப் பேச வாயெழவில்லை.

''என்ன சொல்றே? எழுதிக் குடுக்கறியா?'' என்று தலைமைக் குமாஸ்தா கேட்டான்.

சரி என்றோ, முடியாது என்றோ தெளிவாகப் பதில் சொல்ல முடியாமல் குழம்பித் தவித்தான் அவன். எதுவும் பேச முடியாமல் அவன் தொண்டையை ஏதோ அடைத்தது.

அவனால் தன் முகத்தைப் பரிதாபமாக வைத்துக்கொள்ளவும் முடியவில்லை, விறைப்பாக வைத்துக்கொள்ளவும் முடியவில்லை. அந்தக் குழப்பத்தில் அந்தப் பதினெட்டு வயதுச் சிறுவனால், தான்

என்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ''நான் யோசிச்சுப் பார்த்துவிட்டு மறுபடி வரேன்'' என்று மட்டும் சொல்லிவிட்டு வெளியே வந்தான் அவன்.

அவனுக்குத் தலைமையாசிரியர்மேல் கோபம் கோபமாக வந்தது. துரையை நினைத்துப் பற்களைக் கடித்துக் கொண்டான். தலைமைக் குமாஸ்தா தன்னிடம் காட்டிய அலட்சியத்தை நினைத்து அவன் மேலும் எரிச்சல் வந்தது பிஞுகிக்கு. தேவுபா தன்னை மோசம் செய்து விட்டாளென்று அவள் மேலும் எரிச்சல் ஏற்பட்டது. தாத்தா தான் இவ்வளவு சீக்கிரத்தில் ஏன் செத்துப் போக வேண்டும்?

உலகம் முழுதுமே தனக்கு எதிரியாகி விட்டதாகத் தோன்றியது அவனுக்கு. எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு அவனை நசுக்கப் பார்க்கிறார்கள். அவன் கோபத்துடன் வெட்ட வெளியில் கையை ஆட்டினான். அவனுடைய மூக்கின்மேல் வந்து உட்கார்ந்த ஈ கூடத் தனக்கு விரோதமாகச் சதி செய்வதாக நினைத்தான் அவன். சாலையில் செல்லும்போது அவனுக்குக் கால் இடறியது. இதுவும் எதிரியின் சூழ்ச்சியாக அவனுக்குத் தோன்றியது.

மனிதனின், குறிப்பாக அநுபவத்திலும் வயதிலும் குறைந்த வாலிபனின், கற்பனை கட்டுமீறி ஓட ஆரம்பித்தால் பிரும்மாண்டமே தன்னைச் சுற்றிச் சுழல்வதாக நினைத்து விடுவான் அவன்.

44

பிஞுகி காலையில் ராஜ்கோட் திரும்பியபோது அவன் வீட்டுக் கொல்லையில் ஓர் இடைச்சி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையில் ஒரு பிண்ணாக்குத் துண்டும், ஒரு கூடைப் பருத்திக்கொட்டையும் இருந்தன. பாட்டி, பசுவை முளையிலிருந்து அவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தாள்.

''வா, இங்கே வா, அம்ம்ம்மா. இந்தா! இதைத் தின்னு! என்று இனிமையாகப் பேசிப் பசுவுக்கு ஆசை காட்டிக் கொண்டிருந்தாள் இடைச்சி.

ஆனால் பிண்ணாக்கும் பருத்திக் கொட்டையும் பசுவை மிகவும் கவர்ந்ததாகத் தெரியவில்லை.

''இது என்ன?'' என்று பிஞுகி கேட்டான்.

''நம்ம பசுவை இந்த இடைச்சிக்கு வித்துட்டேன்'' என்று பொக்கை வாய்ப் பாட்டி பதில் சொன்னாள்.

''நீங்க கொஞ்சங்கூடக் கவலைப்படாதீங்க, அம்மா! மாட்டுக்குக் கட்டிலும் மெத்தையுந்தான் ஏற்பாடு செய்ய முடியாது. மத்த எல்லா வசதியும் கொடுத்து வளப்பேன். அதுக்கு ஒருவித கஷ்டமும் இருக்காது'' என்று இடைச்சி கூறினுள்.

''நானும் வாரா வாரம் போய் அதைப் பார்த்துட்டு வருவேன், பான்ஜா!'' என்று சொல்லிச் சோர்ந்து போயிருந்த பிஞுகியைத் தேற்றினுள் பாட்டி.

பிஞுகியின் கவலை இடைச்சிக்குப் புரிந்தது. "நீங்க என்கிட்டேயே பால் வாங்கிக்கங்க, அம்மா! தம்பி, இந்த மாட்டுப் பாலையே குடிக்கலாம்'' என்று அவள் சொன்னுள்.

"நீ போயிட்டு வாம்மா! சந்தோஷமாப் போயிட்டு வா!'' என்று மாட்டைப் பிரியத்துடன் தடவிக் கொடுத்தாள் பாட்டி.

ஆனுல் மாடு அசையவில்லை. பருத்திக்கொட்டை கூடையில் வாயைக்கூட வைக்கவில்லை.

கடைசியில் இடைச்சி அதன் ஒரு மாதக் கன்றுக்குட்டியைக் கையில் தூக்கி வைத்துக்கொண்டு புறப்பட்ட பிறகுதான் பசுவும், 'பா...ங்...பா...ங்' என்று முக்கார மிட்டுக்கொண்டே அவளைப் பின் தொடர்ந்தது.

வீட்டுக்குள் போன பிஞுகி சிறு குழந்தை போல் அழத் தொடங்கினுன். தாத்தா போனுர், அம்மா போனுள், குதிரை போச்சு. ஆனுல் அப்போதெல்லாங்கூட அவனுக்கு இவ்வளவு துக்கம் ஏற்படவில்லை. பசுவை விட்டுப் பிரிந்த துக்கத்தை அவனுல் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

''அடே, யார் அழறது?'' என்று கேட்டுக்கொண்டே வீட்டு வாசலில் வந்து நின்றுன் ஒரு குடியானவன். அவன் கையில் ஒரு மண்வெட்டி இருந்தது. அவன் தன் வாயை ஒரு துணியால் கட்டிக்கொண் டிருந்தான். உரத்துக்காக வண்டியில் குப்பை ஏற்றிக் கொண்டிருந்தான் அவன். ஒரு குரங்கின் தேகத்தில் வளர்ந்துள்ள ரோமங்கள் அதற்கு எவ்வளவு பாதுகாப்பு அளிக்குமோ அந்த அளவுக்கு அதிகமாக அவன் அணிந்திருந்த கிழிந்த உடைகள் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை.

''ஏன் தம்பி அழறே? யாராவது......?'' உறவினர் யாராவது இறந்து விட்டாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டது குடியானவனுக்கு. சாவு ஒன்றுதான் அழுகைக்குக் காரணமாயிருக்கமுடியும் என்று அவன் நினைத்தான்.

''இல்லை, தம்பி!'' பாட்டி விஷயத்தை விளக்கினுள். அவளுடைய கண்களும் ஈரமாயிருந்தன. ''மாட்டை வித்துட்டேனுல்

லியோ! அதுக்காக அழுறான். மாட்டுமேலே உசிரையே வச்சிருந்தான் குழந்தை!''

''இவ்வளவுதானு?'' உயர்வகுப்பைச் சேர்ந்தவர்களின் இந்தப் பலவீனம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. ''தன் பொண்டாட்டி, புள்ளேகளேக்கூட விற்கிறவங்களேப் பான்ஜா பார்த்ததில்லே. அதனுல்தான் அழுறான்.''

படித்த பையனுன பிஞகி, கல்வி வாசனே இல்லாத கந்தல் உடை அணிந்த இந்தக் குடியானவனின் கேலியால் சற்று வெட்கமடைந்தான். பெண்டாட்டி பிள்ளேகளே விற்றவர்களின் கதையைக் கேட்க அவனுக்கு ஆவல் ஏற்பட்டது.

''என்ன சொல்றே, தம்பி?'' என்று பாட்டியும் கேட்டுக் குடியானவனேக் கதை சொல்லத் தூண்டினுள்.

குடியானவன் கையை வீசிக்கொண்டே சொன்னுன்: ''உங்களுக்கு விஷயம் தெரியாதா? முந்தாநாள்தான் நம்ம தேவ்ராஜியோட பொண்டாட்டியைச் சிந்திக்காரங்க விலேகொடுத்து வாங்கிக்கிட்டுப் போனுங்க. நான் வீர்சந்த் சேட்கிட்டே வாங்கின கடனுக்கு அடமானமா என் பத்து வயசுப் பெண்ணே அவன் கிட்டே விட்டிருக்கேன். என்னிக்காவது பார்க்கப் போனு அவ மூஞ்சியைக் கூடப் பார்க்க முடியறதில்லே!''

''ஏன்?''

''சேட்டோட பொண்டாட்டி அப்படி வேலே வாங்கரு அவளே. என் பையன் வியாதியாப் படுத்துக் கிடந்தபோதுகூட அவளே ஒரு தடவை வீட்டுக்கு அனுப்பிவைக்க மாட்டேன்னுட்டா!'' குடியானவன் தன் மூக்கு நுனிவரை இறங்கிவந்த நீர்த்துளியைத் தன் மணிக்கட்டால் துடைத்துக்கொண்டான்.

ஆயினும் அவனுடைய குரலில் வேதனேயின் ஜாடையே தெரியவில்லே பிஞகிக்கு.

''பொண்ணு நல்லா வாட்டசாட்டமா இருப்பாளா?''

''வாட்டசாட்டமா எப்படியிருப்பா? அவளோட அம்மாவும் என்னுேட எருமை மாடும் செத்துப் போய் அஞ்சு வருஷமாச்சு. தாயில்லாப் பொண்ணு எப்படியிருப்பா? ஆனு, பத்துவயசுப் பொண்ணு ஒல்லியா இருந்தாலும் சரி, தடியா இருந்தாலும் சரி, அவளேச் சின்னப் பொண்ணுன்னு யாரு சொல்லுவாங்க? அவளுக்காகப் பார்த்திருக்கிற பையனுேட அப்பன் கூச்சல் போட்டுக்கிட்டிருக்கான், 'சீக்கிரம் கல்யாணம் பண்ணு, சீக்கிரம் கல்யாணம் பண்ணு'ன்னு!''

''கல்யாணமா? அதுக்குள்ளேயா?''

''பின்னே? அவனைச் சொல்லியும் குத்தமில்லே. பத்து வயசானாலும் மாட்டுப் பொண்ணு வீட்டிலே ரொட்டி சுடலாம், வீடு பெருக்கலாம். அவனோட சம்சாரத்துலே அவளாலே அம்பது, நூறு ரூபா மிச்சமாகலாம். ஆனா, வீர்சந்த் சேட் விட்டாத்தானே? பொண்ணைத் திருப்பிக் கேட்டேன்னா, கொடுத்த கடனை வசூல் பண்ணக் கோர்ட்டிலே கேஸ் போட்டுடுவான் சேட்!''

குடியானவன் சிரித்தான்.

பிஞ்சுகியின் கண்ணீர் வற்றிவிட்டது. அது வழிந்த இடத்தில் அதன் அடையாளம் மட்டுமே மிஞ்சியிருந்தது. ஜனங்கள் தங்கள் பொண்டாட்டி, பிள்ளைகளையே பிரியவேண்டிய நிலையைப் பார்த்துவிட்ட அவனை இப்போது மாட்டைப் பிரிந்த துக்கம் அவ்வளவாக வருத்தவில்லை.

கதையைச் சொன்ன குடியானவனே சிரித்துக்கொண்டே போய் விட்டான். அவனுடைய உள்ளத்தின் வேதனை அவன் கொண்டு போன குப்பையுடன் கலந்துபோய் விட்டது போலும்.

45

1918-ஆம் ஆண்டு, பதினோராம் மாதம், பதினோராம் தேதி, பதினோரு மணிக்குப் பீரங்கிகள் பதினோரு முறை முழங்கின. குண்டுச் சத்தங்களாலும் மணியோசைகளாலும் வானமே அதிர்ந்தது.

யுத்தம் முடிந்து விட்டது. உலகம் ஆயுதங்களைக் கீழே வைத்தது, கத்திகளை உறைகளுக்குள் போட்டது. யுத்தத்தில் பிழைத்துவந்த வீரர்கள் ஜயபேரிகைகளின் ஒலிக்கேற்பக் கால்வைத்து அணி வகுத்துக்கொண்டு வீடு திரும்பினார்கள். யுத்தத்தில் இறந்து போனவர்களுடைய பெற்றோர்களின் மடிகளில் மெடல்களும் பதக்கங்களும் விளையாடிக்கொண்டிருந்தன. பெயரில்லாத லட்சக் கணக்கான வீரர்களின் நினைவில் உயரமான ஸ்தம்பங்கள் நிறுவப் பட்டன. அவற்றுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

யுத்தம் முடிந்துவிட்டது. முடிவுபற்றி மக்கள் கிளப்பிக்கொண்டிருந்த ஹேஷ்யங்களும், போட்டுக்கொண்டிருந்த பந்தயங்களும் நின்றுவிட்டன. கெய்சரின் மீசையில் மயங்கிப் போய் ஜெர்மனியின் கட்சியை ஆதரித்த கிழவர்கள் எதுவுமே அறியாதவர்கள்

போல் மௌனமாகத் தங்கள் தங்கள் காரியங்களில் ஈடுபட்டார்கள். இவர்களுக்கு எதிராக மொட்டைக் கடிதம் எழுதிப்போடும் புதிய வேலையொன்று கிராமங்களின் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைத்துவிட்டது.

விழாக்கள் நடைபெற்றன. சர்க்கார் அதிகாரிகள் அவற்றுக்குத் தலைமை வகித்தார்கள். வக்கீல்கள் ராஜபக்தியைப் பற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள். வெள்ளைக்கார அதிகாரிகள் யுத்தத்தில் பங்கு கொண்ட இந்திய வீரர்களுக்குப் புகழ்மாலைகளைச் சூட்டினுர்கள்.

இத்தகைய ஓர் ஆடம்பரமான விழாவில் ஏஜண்ட் துரையே தலைமை வகித்தார். எல்லா ராஜாக்களும் மகாராஜாக்களும் அங்கு வந்திருந்தார்கள்.

பள்ளியின் தலைமையாசிரியர் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, முழங்கத் தொடங்கினுர். ''தேசத்துக்காகத் தங்கள் உயிரையே தரத் தயாராக இருந்த நம் வீரர்கள்......''

''அவங்கள்ளே ஒருத்தரை இங்கே கூப்பிடுங்க! நாங்க அவனைப் பார்க்கணும்'' என்று இடையில் ஒரு குரல் கேட்டது. டாகுர்கள் உட்கார்ந்திருந்த பகுதியிலிருந்து வந்த அந்தக் குரலில் பாதி கேலி கலந்திருந்தது.

எல்லாரும் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு இங்குமங்கும் திரும்பிப் பார்த்தார்கள். ஏஜண்ட் துரை சற்றுப் பயந்துவிட்டார். தலைமையாசிரியரின் சொற்பெருக்கு ஓய்ந்துபோய் விட்டது.

அமைதியான நீர்ப்பரப்பில் ஒரு சிறு கல்லைப் போட்டால் அதைச் சுற்றி நூற்றுக்கணக்கான சிற்றலைகள் பிறப்பதுபோல, ''வீரர்களைக் கொண்டுவா!'' என்ற அந்தக் குரல் கூடியிருந்தவர்களின் மனத்தில் பரபரப்பையும் குழப்பத்தையும் தோற்றுவித்தது.

தலைமையாசிரியர் குழம்பிப் போய்த் திணறினுர். ஏஜண்ட் துரை டாகுர்கள் உட்கார்ந்திருந்த பக்கம் ஓரக்கண்ணுல் பார்த்தார். அந்தக் கூரிய பார்வையைச் சந்திக்கத் துணியாத டாகுர்கள் தலையைக் குனிந்துகொண்டார்கள். அவர்கள் தாழ்ந்த குரலில், ''பேசினது யார்?'' என்று ஒருவரையொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

''நான்தான் பேசினேன்!'' என்று சொல்லி எழுந்திருந்தார் ஒரு டாகுர்.

அவர்தாம் சுரேந்திரதேவ். அவருடைய ஆடையலங்காரம் முன்னைவிட விநோதமாக இருந்தது. ஒரு கத்தியவார்க் குடியா

னவனைப் போலவே தோற்றமளித்தார் அவர். முரட்டுத் துணியா லான உடை, அடிக்கடி துவைத்துத் துவைத்து நைந்து போயிருந்தது குடியானவர்கள், பாய்மரக் கப்பலின் துணியைப்போல் ஒரு மேலாடையைச் சுற்றிக் கொண்டிருப்பார் கள். சுரேந்திர தேவ் அதற்குப் பதிலாக ஒரு நீண்ட கோட் அணிந் திருந்தார்.

''துரையிடம் என்னுடைய பிரார்த்தனை என்னவென்றால்...'' அவர் புன்சிரிப்புடன் ஏஜண்ட் துரைபக்கம் திரும்பிப் பேச ஆரம்பித்தார்.

இப்போது அவருடைய குரல் சற்று நடுங்கியது. கால்கள் வலு விழந்து போய்விட்டன போல் உணர்வு ஏற்பட்டது அவருக்கு. ஏஜண்ட் துரையின் கண்களைத் தவிர வேறு ஒரு ஜோடிக் கண்கள் அவரைத் துளைத்தன. சுரேந்திரதேவ் அவற்றை அடையாளம் கண்டுகொண்டார். அவை அவருக்களித்த தைரியத்தைத் துணையாகக் கொண்டு, தான் பேசவந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்தார். ''இவ்வளவு ராஜவிசுவாசம் காட்டிச் சண்டை செய்த சௌராஷ்டிர வீரர்களை எங்களுக்குக் காட்டுங்கள்! நாங்கள் அவர்களைத் தரிசித்துப் புனிதம் பெறுவோம்!''

கடைசி வார்த்தை தேள் கொட்டியதைப் போல் கடுமையாக ஒலித்தது.

இந்தச் சமயத்தில் மற்ற டாகுர்களுக்குத் தங்கள் மீசைகளை முறுக்கிவிட்டுக் கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்யத் தோன்றவில்லை. எட்டு அல்லது பத்துக் கிராமங்களுக்கே சொந்தக் காரராகிய சுரேந்திரதேவ்ஜீ கேலி செய்வதில் கெட்டிக்காரர் என் பது அவர்களுக்குப் புரிந்தது. அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை.

விழாவுக்குத் தலைமை வகித்த ஏஜண்ட் துரை அசம்பாவிதமாக எதுவுமே நடக்காதது போல், சர்வ சாதாரணமாகத் தம் முடிவுரையை நிகழ்த்தினர். அவரைப் பொறுத்த வரையில் சுரேந்திர தேவின் குறுக்கீடு ஒரு பைத்தியக்காரனின் உளறல் என்ற பாவம் தொனித்தது. துரை பேசும்போது ஒரு தடவைகூடச் சுரேந்திர தேவ் இருந்த பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை. அவர் தம் இடது பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிராந்த் துரையை வானளாவப் புகழ்ந்தார். ''ராஜ விசுவாசத் துடன் உழைத்துச் சேவை செய்த ராஜ்யங்களுள் முதலிடம் வகிப்பது விக்ரம்பூர் ராஜ்யந்தான். நம்முடைய திறமை வாய்ந்த நண்பர் அதைச் சரியான முறையில் நடத்திச் செல்வார் என்று முழுநம்பிக்கை நமக்கு இருக்கிறது'' என்றார்.

இந்தப் புகழுரையைச் சொன்னபோது பிராந்த் துரையின் கண்கள் கோபத்துடன் சுரேந்திரதேவை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவனுக்கு ஏஜண்ட் துரையின் புகழுரையில் ஒரு ருசியும் இல்லே. ''வீரர்கள் எங்கே?'' என்ற சுரேந்திர தேவின் கேள்வி அவனுடைய மகிழ்ச்சியைக் கெடுத்து விட்டது.

விழாத் தலைவர், ''நாட்டு மக்கள் யாவரும் இந்த விசாலமான சாம்ராஜ்யத்தின் குழந்தைகள்!'' என்று சொல்லிக்கொண்டிருந் தார்.

வக்கீல்கள், ''கேளுங்கள், கேளுங்கள்!'' என்று சொல்லிக் கரகோஷம் செய்தார்கள்.

இதே சமயத்தில் வாசலில் ஏதோ அரவம் கேட்டது. முதலில் தெளிவின்றிருந்த அவ்வரவம் கொஞ்சங் கொஞ்சமாகத் தெளி வாகக் கேட்கத் தொடங்கியது. விழாவில் கூடியிருந்தவர்கள் நிதானித்து யோசிப்பதற்குள் மாடிப்படிகளில் பெரிய கூச்சல் கேட்கத் தொடங்கியது: ''ஏழை பங்காளியே, எங்களேச் சவுக்கால் அடிக்கிருங்களே? எங்கள் குறைகளேக் கேட்பாரில்லேயா? சர்க்கார் இருக்கா, இல்லே செத்துப் போச்சா?''

46

ஒரு நிமிஷத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களின் கூட்டம் ஜுபிலிப் பூங்காவின் கனுட் ஹாலின் வாயிலுக்கு வந்து விட்டது. போலீஸ் வரிசையையும் மீறிக்கொண்டு பதினேந்து இருபது பேர் வாசலுக் குள் நுழைந்து விட்டார்கள்.

சபையோர்களும் ஏஜண்ட் துரையும் எழுந்து விட்டார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களின் கூச்சல் இப்போது தெளிவாகக் கேட்டது.

''எசமான், நாங்க போறபோது எங்க மடி நிறையப் பேரீச்சம்பழம் கொடுத்து அனுப்பினீங்க. நாங்க திரும்பி வந்தப் புறம் இப்படி நடத்தறீங்களே?''

''இதென்ன?'' விக்ரம்பூரின் துரை ஒரு பெரிய மரத்தை ரம்பம் அறுப்பது போல் சப்தம் செய்து கொண்டு முன்னுல் வந்தார். ''என்ன இது! யார் இப்படிக் கூச்சல் போடறது?''

''எசமான்!'' கந்தலுடையுடுத்த அவ்விருபது ஆட்களுக்கும் தலைமை தாங்கி வந்தவன் போலீஸ் முறையில் சலாம் போட்டுக் கொண்டு விறைப்பாக நின்றான். அவனுடைய வலது கை தலையைத் தொட்டபோது சட்டையின் வலக்கை கிழிந்து போய்த் தொங்கியது. ''நாங்க உங்களைத் தான் தேடிக் கிட்டு வந்தோம், எசமான்! எங்களைப் பாஸ்ராவுக்கு அனுப்பின சமயம் நாங்க சர்க்காரோட செல்லப் பிள்ளைகளா இருந்தோம். ஆனால் இப்போ, திரும்பி வந்தப்புறம் பிச்சைக்காரங்களை விரட்டற மாதிரி இங்கேயும் அங்கேயும் அலைக்கழிக்கறாங்களே! யாரும் எங்களைச் சீந்தமாட்டேங்கறாங்களே! மூன்று மாசமா எங்களுக்குப் பென்ஷன் கிடைக்கல்லேயே!'' என்று அவன் சொன்னான்.

அவன் பைத்தியத்தைப் போல் பேசிக் கொண்டே போனான்.

போலீஸ்காரர்களும் ஏஜண்ட் துரையும் டாகுர்களும் இன்னும் மற்றச் சபையோரும், இவர்களைப் பின்பக்க வழியாக வெளியே அனுப்பினார்கள்.

விக்ரம்பூர் துரை மட்டும் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சமாளித்துக் கொண்டு நின்றான். ''நீங்க எங்கேயிருந்து வரீங்க?''

''எங்களைத் தெரியலீங்களா? நாங்க விக்ரம்பூர்க்காரங்க தான். நான் தான் பிரம், இவன் பாணு, இவன் பேத்தா.'' பேச்சாளன் எல்லோரையும் அறிமுகப்படுத்தினான்.

துரை இங்குமங்கும் பார்த்தான். இடதுபுறம் கொஞ்ச தூரத்தில் சுரேந்திர தேவ் நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் அவனுக்கு அவருடைய கழுத்தைக் கைகளால் நெறித்து மாம்பழத் தைப்போல் பிழிந்து எறிய வேண்டுமென்று ஆத்திரம் ஏற்பட்டது. ஆனால் அவன் கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டு, ''நீங்க இங்கே கூச்சல் போடாதீங்க! உங்க ஊருக்குப் போங்க! அங்கே என்னை வந்து பாருங்க'' என்று அந்த ஆட்களிடம் சொன்னான்.

இவ்வாறு சொல்லி விட்டுத் துரை வெளியேறினான்.

சுரேந்திரதேவ் அந்த ஆட்களுக்கு முன்னால் போய் அவர்களைக் கை கூப்பி வணங்கினார். ''கத்தியவார் வீரர்களே! உங்களைப் பார்க்கத்தான் ஆசைப்பட்டேன் நான்!''

வெளியே போய்க் கொண்டிருந்த துரையின் காதில் தாம் சொல்வது விழவேண்டுமென்றுதான் சுரேந்திரதேவ் திட்டமிட் டிருந்தார். துரை அவரை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டுப் போனான்.

''நீங்க எங்களை ஏன் கோட்டா பண்றீங்க, எசமான்? எல்லாருந் தான் எங்களை மூதேவிகளா நினைக்கறுங்களே!'' என்று அந்த ஆட்களில் ஒருவன் சொன்ஞன்.

''நாங்க சண்டையிலே சேர்ந்து வண்டியிலேயும் கப்பல்லேயும் புறப்பட்டபோது எங்களைப் பார்த்திருக்கணும்'' என்று இன்னொருவன் ஆத்திரத்துடன் சொன்ஞன்.

மூன்ருமவன் அந்த ஹால் சூனியமாகி விட்டதைக் கவனித்து விட்டுச் சொன்ஞன். ''சரி, சரி, போகலாம் வாங்க! இங்கே மாட்டியிருக்கே தாடிக்காரப் படங்க, இதுக்கு முன்ஞலே புகார் பண்ணவா நாம இங்கே வந்தோம்?''

ஹால் காலியாகி யிருப்பதை அப்போது தான் எல்லாரும் கவனித்தார்கள். சௌராஷ்டிரத்தின் பழங்கால ராஜா-மகாரா ஜாக்களின் படங்கள் மட்டும் சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தன. ஒரு சப்ராசி ஹாலைப் பெருக்கத் தொடங்கியிருந்தான்.

''இல்லேயில்லே, நீங்க உட்காருங்க!'' என்று ஒரு போலீஸ் காரன் அவர்களிடம் கேலியாகச் சொன்ஞன்.

''நீயும் எங்கமாதிரி பட்டாளத்திலே சேர்ந்திருந்தா இந்தமாதிரி எங்களை அவமானம் பண்ணமாட்டே'' என்று தலைவன் சொன்ஞன்.

போலீஸ்காரன் இதைக் கண்டு வெட்கிஞன்.

''நான், நீ எல்லாருமே முட்டாள்கள் தான்! யாராவது நம்ம முதுகைத் தட்டிக் கொடுத்தா நாம உச்சி குளிர்ந்து போய் அவனுக்காகக் கழுத்தைக் கொடுக்கக் கூடத் தயாராயிடறேம்'' என்று ஒருவன் போலீஸ்காரனிடம் சொன்ஞன்.

போலீஸ்காரனுக்கும் இப்போது ரோசம் வந்து விட்டது. ''ஆமா, நீ சொல்றது நிசந்தான்'' என்றுன் அவன்.

''இந்தா, பீடி குடி!'' என்று ஒருவன் தன் காக்கித் தலைப்பா கையைக் கழற்றி அதற்குள்ளிருந்து ஒரு கட்டுப் பீடியை எடுத்துப் போலீஸ்காரனிடம் நீட்டிஞன்.

போலீஸ்காரனுக்குப் பீடியை எடுத்துக்கொள்ளத் தயக்கமா யிருந்தது. ஏனென்றல் அவன் பீடி கொடுக்க வந்தவனை அடை யாளம் கண்டு கொண்டு விட்டான். பதினைந்து நிமிஷங்களுக்கு முன்ஞல் தான் அந்த ஆளை, ஹாலுக்குள் நுழையாமல் தடுக்க அவனைச் சவுக்கால் அடித்திருந்தான் போலீஸ்காரன். சவுக்கு அவனுடைய கன்னத்தில் பட்டு அடி விழுந்த இடத்தில் இரத்தம் கட்டிக் கறுப்பாகி விட்டது. அந்த ஆள் நல்ல சிவப்பு. ஏதோ ஒரு புழு அவனுடைய கன்னத்தில் தோலுக்கு அடியில் புகுந்து விட்டாற்போலத் தோற்றமளித்தது அடிபட்ட இடம்.

"இந்தா, எடுத்துக்கோ! இது பாஸ்ரா பீடியாக்கும்!" என்று அந்த ஆள் வலுக்கட்டாயமாகப் போலீஸ்காரனுக்குப் பீடியைக் கொடுத்தான். பின்பு தானே தீக்குச்சியைப் பற்ற வைத்து அந்த நெருப்பால் தன்னுடைய பீடியையும், போலீஸ்காரனுடைய பீடியையும் இன்னும் இரண்டு மூன்று தோழர்களுடைய பீடிகளையும் பற்ற வைத்தான்.

தன் பேச்சால் மனவருத்தம் அடைந்த அந்தப் பட்டாளக்காரர்களிடமிருந்து நகர்ந்து போய்ச் சற்றுத் தூரத்தில் நின்றார் சுரேந்திரதேவ். ஒரு பட்டாளக்காரன் தன் தீக்குச்சியாலேயே போலீஸ்காரனின் பீடியைப் பற்ற வைப்பதைத் தூரத்திலிருந்தே கவனித்த அவருக்கு இந்தச் சிறு சம்பவம் எதிர்கால நடப்புக்கு ஓர் அறிகுறியாகத் தோன்றியது. ஒரே தீக்குச்சியால் வெறும் பீடிகள் மட்டுமா பற்றிக் கொண்டிருக்கின்றன? அவர்களுடைய உள்ளங்களும் பற்றிக் கொள்ளவில்லையா?

சுரேந்திரதேவ் ஹாலுக்கு வெளியே பூங்காவில் கூடியிருந்த மக்களையும் அவர்களுக்கு அருகில் நின்று கொண்டு கவனித்தார். அவர்கள் தங்களுக்கு அருகிலிருந்தவர்களிடம் தீக்குச்சி கேட்டு வாங்கித் தங்கள் ஹுக்காக்களைப் பற்ற வைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு ஹுக்காவும் பத்துப் பதினைந்து ஜோடிக் கைகளிடையே சுற்றத் தொடங்கியது. ஒரு குழாயிலிருந்து கிளம்பிய புகையிலைப் புகை பலருடைய வாய்களை நிறைத்தது. ஒரு சிறிய ஹுக்காக் குழாய் இவ்வளவு பேர்களுக்கிடையே இருந்த வேற்றுமையுணர்வைப் போக்கி ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டியது. புகையின் ஒவ்வோர் இழுப்பும் அவர்களது பரஸ்பர வேற்றுமையை, விரோதத்தைப் போக்க உதவியது. சவுக்கால் அடித்தவன், சவுக்கடி பட்டவன், ஒருவருக்கொருவர் பழக்கமில்லாத மக்கள் எல்லாரும் இப்போது ஒன்றாகி விட்டார்கள். அவர்களுடைய முகங்களில் ஒரே பாவம் தெரிந்தது.

தனியாக நின்று கொண்டு அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த சுரேந்திரதேவ் எதிர்காலமாகிய எல்லையற்ற சமுத்திரத்தில் தன் சிந்தனைப் படகை ஓட்டிக் கொண்டிருந்தார்.

"இந்தக் கிழவன் யாரு? வக்கீலா?" என்று ஒருவன் போலீஸ்காரனைக் கேட்டான். இப்போது அவன் போலீஸ்காரனிடம் பயப்படவில்லை.

போலீஸ்காரன் பாஸ்ரா பீடியின் அபூர்வ ருசியை அநுபவித்துக் கொண்டே, "அவர் ஒரு தர்பார்!" என்று பதில் சொன்னான்.

"எங்களைக் கேலி பண்றான்!"

''இல்லையில்லே. உனக்குப் புரியலே. அவர் மத்த தர்பார்கள் மாதிரி இல்லே. அவர் சர்க்காரை லட்சியம் பண்றதில்லே.''

''ராஜாவாயிருந்தா ஏன் இப்படிக் குடியானவன் மாதிரி துணி உடுத்தியிருக்கான்? ஏன் சர்க்காரை லட்சியம் பண்றதில்லே?''

''அவர் 'ராஜாவுக்கும் பிரஜைக்கும் வித்தியாசமில்லே, எல்லாரும் சமம்'ங்கருரு?''

''அதெப்படி? ஈயுறிஞ்சியா இருப்பான். கருமியா இருந்து நிறையப் பணம் சேர்த்துக்கிட்டிருப்பான். இந்த மாதிரி ரொம்ப ஆளுக இங்கே பணம் சேர்த்துச் சீமைக்குப் போயி அங்கே பங்களாவும் தோட்டமும் வாங்கிக்கருங்க. நிசமாத்தான் அண்ணே! கப்பல்லே போறபோது நாங்க இதெல்லாம் கேள்விப்பட்டோம்.''

''ஆனு இவர் அப்படிப்பட்டவர் இல்லே.''

''என்ன இருந்தாலும் தர்பார்தானே இந்த ஆள்? அவன் மனசுக்குள்ளே என்ன நினைச்சுக்கிட்டு இருக்கானே, ஒனக்கு என்ன தெரியும்?'' அவன் தான் மிகவும் அநுபவப்பட்டவனைப்போல் போலீஸ்காரனிடம் சொன்னுன்.

''சரி, சரி, நாம் கிளம்பலாம். ரொட்டியாவது சாப்பிடலாம்'' என்று ஒருவன் சொன்னுன்.

''வாங்க, ஹோட்டலுக்குப் போய் டீ குடிக்கலாம்'' என்று போலீஸ்காரன் சொன்னுன்.

''வேண்டாம் அண்ணே! நாங்க இவ்வளவு பேர் இருக்கோம்.''

''அதனுலே என்ன? பரவாயில்லே! பகவான் கிருபை எங்கே இருக்கோ, அங்கே நிறைய ஜனங்களும் இருப்பாங்க!''

போலீஸ்காரன் அவர்களை வற்புறுத்தி ஹோட்டலுக்கு அழைத்துக்கொண்டு போய், க்ஷவரம் செய்யப்படாத தன் தாடியைக் கையால் தடவிக்கொண்டே இருபத்தொரு 'டபிள் கப்' டீக்கு ஆர்டர் கொடுத்தான்.

47

''நீங்க செஞ்ச காரியம் சரியில்லே! ரொம்ப அவசரப்பட்டுட்டீங்க. இந்த ஜனங்களை நீங்க இன்னும் புரிஞ்சுக்கல்லே! நீங்க யாரோட தைரியத்திலே இந்தக் காரியத்திலே குதிக்கறீங்க?''

சுரேந்திரதேவின் வீட்டுக்குள்ளிலிருந்து மேற்கண்ட வார்த்தைகள் அடிக்கடி காதில் விழுந்தன. அவருடைய வக்கீல் நண்பர்களும், அரசாங்க அதிகாரிகளாக இருந்த நண்பர்களும் அவருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். போலீஸிலிருந்த கீழ் மட்ட அதிகாரிகளும் அவருக்குப் புத்திமதி சொல்ல வந்தார்கள். "எங்களுக்கெல்லாம் தேசபக்தி இல்லேன்னு நீங்க நினைக்கிறீங்களா?'' என்று அவர்கள் கேட்டார்கள்.

வெள்ளியாலான ஹுக்காக் குழாயை வாயில் வைத்துக் கொண்டிருந்த சுரேந்திரதேவ், ''நீங்க என்ன இப்படிப் பேசறீங்க?'' என்றார் புன்சிரிப்புடன்.

''உங்களுக்கு ராஜதந்திரம் தெரியாது!'' என்று ஒரு வக்கீல் சொன்னார். அவர் பேசிய முறையைப் பார்த்தால் எல்லா ராஜ தந்திரமும் அவருக்குள்ளே ஒளிந்து கொண்டு ஏதோ எதிர்கால வாய்ப்புக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

"பிரும்மா என்னைச் சௌராஷ்டிரத்திலே பிறக்க வைச்சானேன்னு நினைச்சா எனக்கு ரத்தம் கொதிக்கிறது. சரித்திரம் எழுதறவங்க சௌராஷ்டிரத்தோட வீரத்தைப் பற்றிப் பெரிய பெரிய புத்தகம் எழுதறாங்க. ஆனா இந்த வீரர்களுக்குத் தலைமை வகிக்கக் கூடிய தலைவன் ஒருத்தனைக் கூடக் காணோம்'' என்று சுரேந்திரதேவ் சொன்னார்.

''நீங்க தலைமையை ஏத்துக்குவீங்களா?'' என்று ஒரு போலீஸ் அதிகாரி கேட்டார்.

"ஏன் கூடாது? இதோ பாருங்க, நான் உங்க கிட்டேயிருந்து ஒண்ணும் ஒளிக்கல்லே. நீங்க ஒளிஞ்சிருந்துகிட்டுப் பார்த்தோ ஒட்டுக் கேட்டோ எதையாவது நினைச்சுக்கறதைவிட என் எண்ணங்களை ஒளிவு மறைவு இல்லாமே சொல்லிடறது எவ்வளவோ மேல். அதைத் தவிர ஓரப்பார்வை பார்த்து என்னைச் சரியாப் புரிஞ்சுக்க முடியாது. என்னை நேருக்கு நேரே பாருங்க!''

''அடே, நீங்க என்ன சொல்றீங்க?'' சுரேந்திர தேவின் குத்தலான பேச்சால் சங்கடப்பட்டுக் கொண்டு போலீஸ் அதிகாரி குறுக்கிட்டார்.

''நான் உங்களைக் குத்தம் சொல்லல்லே! நான் உங்களை ஒரு சிநேகிதனா நினைச்சு, நீங்களும் என்னைப்போல ஒரு கத்தியவார்க்காரர் என்கிற பாவத்திலே தான் சொல்றேன், என்னை நேருக்கு நேரே பாருங்கன்னு. இதோ பாருங்க! ஜாம் நகர்லே அரசாங்கப் பாதுகாப்பிலே வளர்ர சிறுத்தையோட வெறுங் கையாலே சண்டை போட்டு அதைக் கொன்ன வீரர் வக்துபா இப்போ என்

முன்னாலே நிக்கறார். சிறுத்தையைக் கொன்ன குத்தத்துக்காக அரசாங்கம் அவரை ஜெயில்லே போட்டது. இப்போ அவர் எங்கிட்டே வந்திருக்கார். நான் அவருக்குக் குடியானங்களோட வயல்களைப் பாதுகாக்கற பொறுப்பைத் தந்திருக்கேன். வேணு மானா இந்த விஷயத்தை உங்க டயரியிலே எழுதிக்கங்க. அவரோட போட்டோ வேணும்னாலும் எடுத்துக்கங்க!''

வக்துபா என்ற பெயருள்ள வாலிபன் ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தான். அவன் சிறுத்தையால் கடிக்கப்பட்ட தன் கையில் துணியைச் சுற்றிக் கொண்டிருந்தான்.

''சபாஷ்!'' என்று சொல்லிக்கொண்டே போலீஸ் அதிகாரி வக்துபா பக்கம் திரும்பினார். ''நீ எந்த ஊர், தம்பி?'' என்று கேட்டார்.

''நீங்க எந்த ஊரைச் சேர்ந்தவர்?'' என்று சுரேந்திர தேவ் மிகவும் மரியாதையுடன் வக்துபாவைக் கேட்டார்.

தம்மைக் குத்திக் காட்டவே அவர் இப்படிப் பேசுகிறாரென்று போலீஸ் அதிகாரிக்குப் புரிந்தது.

''என் ஊர் சடோதர்'' என்று வக்துபா சுரேந்திர தேவுக்குப் பதில் சொன்னான்.

''ஆமா, அந்த ரகுவீர்கூட உங்ககிட்டே வந்தப்பறம் திருந் திட்டான்'' என்று சொல்லிய போலீஸ் அதிகாரி தம் கழுகுப் பார்வையை நிரூபித்தார்.

''ஏன் திருந்த மாட்டான்? நான் ஒரு போதும் அவனோட பூர்வ சரித்திரத்தை விசாரிக்கறதில்லே. அவன் அரசாங்க ஒற்றன்னு சில பேர் சொல்றாங்க; சர்க்கார் தண்டித்து, தப்பியோடி வந்துவிட்ட கைதின்னு சில பேர் சொல்றாங்க. ஊர் ஊராய்ப் போய்க் குஸ்தி கத்துக் கொடுக்கற காரியத்தை அவனிடம் ஒப்ப டைச்சிருக்கேன். ஒரு வருஷம் முன்னாலே குடியானவங்க போலீஸ் கெடுபிடிக்குப் பயந்து கட்டாய வேலை செஞ்சாங்க. அதுக்குப் பதிலாகப் போலீஸ்காரங்க கிட்டே திட்டும் வசவும் வாங்கிக் கிட்டாங்க. இப்போ அவங்க போலீஸ்காரங்களை எதிர்த்துப் பேசறாங்க. இதுக்குக் காரணம் ரகுவீர்தான்! உம், இப்போ நினைவு வந்தது. வக்துபா, நாளைக்குக் காலையிலே நம்ம ஜாகீருக் குப் போற வழியிலே மகீபதராம் வீட்டுக்குப் போய்ப் பான்ஜா வைப் பார்த்துட்டுப் போகணும். ஞாபகம் வச்சுக்குங்க!''

''சரிங்க.''

''அந்தப் பையனும் 'ஒரு மாதிரி' யாத்தான் இருக்கான். அவனைக் கொஞ்சம் சரிப்படுத்தினீங்கன்னா தேவலை'' என்று போலீஸ்

அதிகாரி மிகவும் அநுதாபத்துடன் பேசுவதுபோல் பாவனை செய்தார்.

''பார்க்கறேன்.''

"உங்க கூட்டம் பூராவுமே 'ஒரு மாதிரி' ஆட்கள் தான்!'' என்று ஒரு வக்கீல் சொன்னார்.

"மகீபத்ராம் கிட்டே அந்த மாப்பிள்ளை ஜாதி சிப்பாய் இருந்தானே, அவனும் உங்ககிட்டேதான் இருக்கானா?''

"ஆமா! அவனுக்குத் திருட்டு நாணயம் அச்சடிக்கற வித்தை தெரியும். அதுக்காக அவனையும் வச்சுக்கிட்டிருக்கேன். தேவைப் பட்டா உபயோகப்படுத்திக்கலாமே!''

''தர்பார் நாணயச் சாலை வேற ஆரம்பிச்சிருக்கீங்களா?'' என்று வக்கீல் நண்பர் குத்தலாகக் கேட்டார்.

''இவரைக் கேளுங்க!'' சுரேந்திரதேவ் போலீஸ் அதிகாரியைக் கண்ணால் சுட்டிக் காட்டினார். "என்னோட காரியங்களைப்பத்தி என்னைவிட நல்லா இவருக்குத் தெரியும்.''

''என்னை நீங்க அவ்வளவு மோசமாகவா நினைக்கறீங்க?'' என்று போலீஸ் அதிகாரி கேட்டார்.

''இல்லையில்லே! உங்களை ரொம்பக் கெட்டிக்காரர்னு மதிக்கிறேன் நான். ஆனா எனக்கு வருத்தம் என்னன்னா உங்க திறமையெல்லாம் மட்டமான ஆட்களுக்காக உபயோகப்படுத்தப்படறதேங்கறது தான்!''

"உங்களோட இந்த மாதிரி படபடப்பாலே இந்த வருத்தத்தைப் போக்கிவிட முடியுமா?''

"வரப்போற ஒரு நிகழ்ச்சியை நினைச்சு நான் பயப்பட்டுக்கிட்டு இருக்கேன்'' என்று போலீஸ் அதிகாரி சொன்னார்.

''என்ன நிகழ்ச்சி?''

'வைசிராய் துரையோட தர்பார்!''

''அதிலே பயப்படறதுக்கு என்ன இருக்கு?''

''தர்பாருக்கு நீங்க போகணுமே!''

''உம், போறேன்.''

''என்ன உடை போட்டுக்கிட்டுப் போவீங்க?''

''உடையைப்பத்தி என்ன? நான் இப்போ என்ன போட்டுக்கிட்டு இருக்கேனோ அதையே போட்டுக்கிட்டுப் போவேன்.''

''இதோ பாருங்க!'' என்று போலீஸ் அதிகாரி ஏதோ பேசத் தொடங்கினார்.

''நான் நாடகத்துலே வேஷம் போட்டுக்கற மாதிரி டிரஸ் பண்ணிக்கிட்டுத் தர்பாருக்குப் போகணுமா?''

வக்கீல் மேஜையின்மேல் கையால் அடித்துக்கொண்டே சொன்னார். ''லெனின் தன் சகாக்கள்கிட்டே என்ன சொல்லியிருக்கான், தெரியுமா?''

''என்ன?''

'''நமக்குக் காரியம் ஆறதுக்குப் பாவாடை கட்டிக்கிட்டுப் போகணும்னு அதுவும் செய்யத் தயாராயிருக்கணும். அப்படீன்னு சொல்லியிருக்கான்.''

''உண்மை தான்! நமக்குக் காரியம் ஆறதுக்குத்தானே? இப்படி வேஷம் போட்டுக்கிட்டுப் போனு என்ன காரியம் ஆகப்போறது?''

''சௌராஷ்டிரத்து வீரர்களை ஒண்ணு சேர்க்கறதுக்கு!'' என்று போலீஸ் அதிகாரி சொன்னார். ''உங்க ஜாகீர் உங்க கையிலே இருந்தாத்தானே நீங்க உங்கள் இஷ்டப்படி காரியம் செய்ய முடியும்!''

''ஜாகீரா? ஜாகீர் கையை விட்டுப் போயிடுமா?''

''உத்தரவுப்படி உடையணிந்து கொண்டு தர்பாருக்குப் போகாட்டா ஜாகீர் கையை விட்டுப் போயிடும்!''

''ஒகோ! அவ்வளவு தூரம் நடந்துடுமா?''

''ஆமாங்க, தர்பார்!''

''நானும் ஒரு குடியானவன் தானே! வேணும்னுச் சொல்லுங்க, 'பெரிய குடியானவன்'னு! ஒரு குடியானவன் அவனுக்கேத்த உடையைப் போட்டுக்கக் கூடாதா?''

''அதென்னவோ! எதுக்கும் முன்னலே இது சம்பந்தமா எழுதி விசாரிச்சுக்கங்க. இல்லாட்டா, தர்பார் வாசல்லே உங்களை நிறுத்தி வச்சுட்டான்னு, ரொம்ப ரசாபாசமாப் போயிடும்.''

''அழைப்பு வரட்டும் முதல்லே, அப்பறம் பார்த்துக்கலாம்!''

''நீங்க ரெண்டு வருஷத்துக்கு முன்னலே கத்தியவாருக்கு வந்திருந்தீங்கன்னு... !''

''ஏன்?''

''அப்போ நாலு வீரர்களுக்குக் கெட்ட காலம் வந்திருக்காது.''

''நாலு பேர் யாரு?''

''அவங்கள்ளே ஒருத்தரும் உசிரோட இல்லே. ஒண்ணுவது ரூக்கட் பனியா, ரெண்டாவது சுமாரியா, மூணுவது லக்ஷ்மண், நாலாவது ரூக்கட்டோட விதவை!''

''அவ செத்துப் போகல்லியே! ஜெயில்லேன்னு இருக்கா!''

''அவ உசிர் உள்ள சவந்தான்!''

''பார்ப்போம்!'' என்று கூறிய சுரேந்திரதேவ் ஒரு கஷ்டமான கணக்கைப் போட்டுக்கொண் டிருக்கும் ஜோசியனைப் போலக்

காட்சியளித்தார். அவருடைய முகத்தில் தோன்றி மறையும் சிந்தனைக் கோடுகளில் எதையோ கண்டு பிடிக்க முயன்று கொண் டிருந்தார் போலீஸ் அதிகாரி.

சுரேந்திர தேவிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்ட வக்கீல் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டு, "நீங்க என்ன கடிதம் எழுதினாலும் எனக்குக் காண்பிக்காமே அனுப் பிடாதீங்க, ஆமா!'' என்றார்.

"அப்பறம் என்னோட உதவி ஏதாவது தேவைப்பட்டா, கொஞ் சங்கூடத் தயங்காமே சொல்லுங்க!'' என்றார் போலீஸ் அதிகாரி.

''என்ன நடக்கணுமோ அது நடக்கும். அதைப்பத்தி இப்போ முதலே ஏன் கவலைப்படணும்?'' என்று கூறி நண்பர்களுக்கு விடை கொடுத்தார் சுரேந்திரதேவ்.

கட்டிலின்மேல் ஒரு ஜமக்காளத்தை விரித்துப் படுத்துக் கொள்வது அவருடைய வழக்கம். அப்படியே அவர் படுத்துக் கொண்டார். ஒரு சிறு குழந்தையைப் போல் ஒரே நிமிஷத்தில் தூங்கிப் போய்விட்டார்.

48

ஹாலாரி ஆறு மூன்றாவது நான்காவது தடவையாகப் பிரச விக்கும் இடைச்சிபோல உடலைப் பரப்பிக்கொண்டு கிடந்தது. ஐந்நூறு அறுநூறு கஜ அகலமும் சுமார் எட்டடி ஆழமும் கொண்ட அந்நீர்ப்பரப்பு அமைதியாக இருந்தது, வந்த இடத்தில் நேரம் கடந்து போனதால் இரவுக்குத் தங்கிவிட நேர்ந்த விருந்தாளியைப் போல.

ஆற்றின் பிரவாகம் வடக்கு நோக்கிச் சென்றுகொண் டிருந்தது. அந்தத் திசையில் ஓர் உயரமான கல்லணை இருந்தது. ஆற்றுத் தண்ணீர் அந்த அணைக்குமேலே வெள்ளைச் செம்மறியாட்டுக் கூட்டம்போல் வழிந்து கீழே விழுந்துகொண் டிருந்தது. இரு புறமும் நின்றுகொண் டிருந்த கறுத்த பயங்கரமான குன்றுகளின் அணிவகுப்புக்கு நடுவே பயந்தவாறே ஆற்றுநீர் கடலை நோக்கி ஓடிக்கொண் டிருந்தது.

ஒரு மலையின் தொடைபோல் காணப்பட்ட அந்த அணை சுற்றிலு மிருந்த குன்றுகளைத் தன் பார்வையால் துளைத்துக்கொண்டு,

கீழே ஓடிக்கொண் டிருக்கும் தண்ணீரை அழைத்துக்கொண் டிருந்தது. 'ஓடாதீங்க, ஓடாதீங்க! குழந்தைகளே, ஓடாதீங்க!'

அணையின் ஒரு பகுதியைத் தண்ணீர் எட்டவில்லை. அந்தப் பகுதியில் அணையின்மேல் ஒருவன் நின்றுகொண் டிருந்தான். அவன் காக்கி நிறத்தில் வேட்டையுடை அணிந்திருந்தான். அவன் பணியாக்கள் அணியும் மடிப்புள்ள தலைப்பாகையும் உயரமான பூட்ஸுகளும் அணிந்திருந்தான். அவனுடைய தோளில் ஓர் இரட்டைக் குழல் துப்பாக்கி இருந்தது.

அதிகாலை நேரம். அதன் மங்கிய ஒளியில் அவனுடைய உருவத் தோற்றத்தின் அம்சங்கள் தெளிவாகத் தெரியவில்லை. அவன் சித்திரம் போல், அசையாமல், மௌனமாக நின்றுகொண் டிருந்தான்.

அவனுக்கு இடப் பக்கத்தில் இரண்டு இரண்டரைக் கோச தூரம் வரையில் பூதேவியின் ஐசுவரியம் பசுமையான அடர்ந்த காடாகப் பரவியிருந்தது. அந்தப் பாஞ்சால் மலை பிரதேசத்தில் இங்குமங்கும் காணப்பட்ட சோள வயல்களும், கம்பு வயல்களும், வசதியாக வாழ்ந்து வந்து, பிறகு திடீரென்று வறுமையில் விழுந்துவிட்ட ஒரு பெண்ணின் புடைவையின் கிழிசல்கள்போலத் தோற்றம் அளித்தன.

சற்று நேரத்தில் காலை நேரத்து ஒளி எங்கும் பரவியது. அணையின்மேல் நின்றுகொண் டிருந்த மனிதன் தன் தோளிலிருந்த துப்பாக்கியை இறக்கி மார்புடன் பொருத்திக்கொண்டான். அதிலிருந்து ஒரு குண்டு வெளிப்பட்டது. தண்ணீரில் ஒரு கல் விழுந்தால் நூற்றுக்கணக்கான அலைகள் கிளம்புவதுபோல் துப்பாக்கிக் குண்டும் காற்றில் அலைகளைத் தோற்றுவித்தது. அதன் சத்தத்தால் பயந்து போய்ப் பறவைகள் கூவத் தொடங்கின. கரும்பு வயலின் முள்வேலிக்கருகில் ஒரு பெரிய பற்களுள்ள பன்றி குண்டுபட்டுத் தடாரென்று விழுந்தது. அது எழுந்திருத்து ஆற்றங் கரையை அடைய முயன்றபோது அதன்மேல் மற்றொரு குண்டும் பாய்ந்து, அதைத் தண்ணீருக்கு வெகு தொலைவில் கொண்டு போய்த் தள்ளியது.

மனிதன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு, கரும்பு வயலின் பின் பக்கத்திலிருந்த கள்ளி வேலியோரமாக ஓடினான். அவனுக்கு முன்னால் ஒரு முள்ளம்பன்றி ஓடிக்கொண் டிருந்தது.

அவன் 'ஓ ஓ ஓ ஓ!' என்று மேகம் கர்ஜிப்பதுபோல் பலமாக ஒலியெழுப்பினான். இதைக் கேட்ட முள்ளம்பன்றி தன்னை ஒரு படையே நாற்புறமும் சூழ்ந்து கொண்டதுபோல் நடுங்கிப்

போய்விட்டது. அது பயத்தால் ஸ்தம்பித்து நின்று, பின்னுல் திரும்பியது. அதன் முதுகிலிருந்த முட்கள் விறைத்து நின்றன. அவற்றிலிருந்து 'ஸம்ம்ம்' என்று ஒலி கிளம்பியது.

ஆயிரக்கணக்கான, கூர்மையான அம்புகளடங்கிய ஒரு மூட்டை போல் தன் உடம்பை ஆக்கிக்கொண்டு, மஞ்சள் நிறமுள்ள தன் பிசாசுக் கண்களைச் சுழற்றிக்கொண்டு, தன் சிவந்த வாயிலுள்ள பற்களைக் கடித்துக்கொண்டு முள்ளம்பன்றி போராடத் துணிந்து விட்டால், அதன் எதிரிலிருக்கும் பெரிய பெரிய வேட்டைக்காரன் கூடப் பயந்து நடுங்கத் தொடங்கிவிடுவான்.

துப்பாக்கி காலியாகிவிட்டது. புதுக் குண்டு நிரப்ப நேரம் இல்லை. அவன் அதற்கு முன் பாய்ந்து துப்பாக்கிக் குழாயால் அதன் வாயில் பலமாக அடித்தான். முள்ளம்பற்றி இறந்து விட்டது.

இறந்துபோன இரண்டு மிருகங்களையும் ஏளனமாகப் பார்த்து விட்டு அம்மனிதன் திரும்பினுன். மறுபடியும் நதிக்கரைக்கு வந்து தடியை ஊன்றிக்கொண்டு அதன்மேல் சாய்ந்துகொண்டு நிற்கும் இடையனைப்போல் தன் துப்பாக்கியின்மேல் சாய்ந்துகொண்டு நின்ருன். இதற்குமுன் அவன் துப்பாக்கியில் தோட்டாக்களைப் போட்டுவிட்டான். தோட்டாக்கள் அடங்கிய பெட்டி அவனு டைய வலது பக்கத்திலிருந்து நழுவி நெஞ்சுக்குமேல் தொங்கியது.

இடுக்கியால் பாம்பைப் பிடிப்பதுபோல் அவனுடைய பார்வை நாற்புறமும் திசைகளைக் கவ்விக்கொண் டிருந்தது.

அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். 'அந்தக் காட்டுப் பன்னி தண்ணீர் குடிக்க இங்கே வரட்டும்! ஒருகை பார்க் கறேன் அதை. நான் மத்தவங்கமாதிரி கட்டாயத்துக்காக வேலை செய்யறவன் இல்லே. கூலிக்காரனும் இல்லே. நான் உழவனுக்கும், உழவன்! பூமியோட குடலுக்குள்ளேயிருந்து பயிரைக் கொண்டு வரேனுக்கும்!'

அவன் தன் கைவிரல்களைப் பார்த்துவிட்டுச் சொல்லிக்கொண் டான்: 'பனியாவோட அடையாளம் ஒண்ணுகூட எங்கிட்டே மிஞ்சலலே!'

அவனுடைய பார்வை நாற்புறமும் பாய்ந்தது. விசாலமான அணையின்மேல் ஏரியாகத் தேங்கிக் கிடந்த நீர்ப்பரப்பின்மேல், தொலைவில் கறுப்புக் கற்களை உடைத்துக்கொண்டு ஓடிவரும் ஹாலாரி ஆற்றின் கோணல்மாணலான பாதையின்மேல் அவன் பார்வை சென்றது.

பிறகு அவனுடைய பார்வை தன் வயல்களின் பக்கம் திரும்பியது. ஆயிரக்கணக்கான மாமரங்கள் அடங்கிய தோப்பு, இருபத்தைந்து பீகா நிலத்தில் செழித்து வளரும் கரும்பு தரையில் படர்ந்து கிடக்கும் காய்கறிச் செடிகள், பூந்தோட்டம் ... அவன் தன் பத்து விரல்களால் எவ்வளவு வகை ஒட்டு வகைகளைத் தயாரித்திருக்கிறான்! சௌராஷ்டிரத்தில் இதுவரை யாரும் கண்டிராத புதிய மணமும், புதுவகை ருசியும் கொண்ட எவ்வளவு வகைப் பழங்களை விளைவித்து மகிழ்ந்திருக்கிறான்!

தன் கண்முன்னே பரந்து கிடந்த பசுந்தோப்புகளையும் அவற்றில் உயரமாக வளர்ந்திருந்த ஆல, அரச மரங்களையும் பார்த்து மகிழ்ந்தவாறே அவன் சொல்லிக்கொண்டான்; 'இந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் என்னை அடிக்கவந்தாங்க; 'நம்ம ஆத்தங்கரையிலே இந்தப் பனியா விவசாயம் செய்யறதாவது?' என்றாங்க. நான் கட்டின அணையை உடைக்கப் பார்த்தாங்க. முழு முழு நீளம் மிளகாய் விளையற என் செடிகளைப் பிடுங்கி எறிஞ்சாங்க! இப்போ அவங்களுக்கு எவ்வளவு வசதியாப் போச்சு! அணை கட்டினது நான். ஆனா அதிலே சேர்ந்த தண்ணி அவங்க வயல்களுக்குத்தான் போறது. இப்போ அவங்க என்கிட்டே மரியாதையா இருக்காங்க. எனக்கு மட்டும் அவ்வளவு சக்தி இருந்தால் சௌராஷ்டிரத்திலே இருக்கற இந்தச் சின்னச் சின்ன ராஜ்யங்களையெல்லாம் ஒண்ணு சேர்த்து ராவல்ஜிமாதிரி ஒரு ராஜாவுக்குக் கீழே கொண்டு வந்துடுவேன். அப்பறம் கத்தியவாரிலே இருக்கற எல்லா நதிகளேயும் அணைகட்டி சமுத்திரத்துக்குப் போற அவ்வளவு தண்ணியையும் தடுத்து நிறுத்தி விவசாயத்துக்கு உபயோகப்படுத்துவேன். பால் பிரதேசம் ஏன் இப்படித் தண்ணியில்லாமே காஞ்சு போறது? அங்கே இருக்கற ஏழைகள் இத்தனூண்டு தண்ணியை வச்சுக்கிட்டுத் தவிக்கறாங்களே! சீ, கத்தியவார் ஒரு கோழை! நானுயிருந்தா ஒவ்வொரு மலையிலேருந்தும் வர தண்ணியைத் தேக்கி வைப்பேன்!'

சூரியன் வானத்தில் மிகவும் உயரே ஏறியிருந்தான்.

அம்மனிதன், ''இதுதான் என்னோடே பூணூல்'' என்று சொல்லிக் கொண்டே தன் துப்பாக்கியைக் கட்டியிருந்த நாடாவைக் கழுத்தில் போட்டுக்கொண்டான். பிறகு பிரவாகத்துக்கு எதிர்த் திசையில் ஆற்றங்கரையோரமாக நடக்கத் தொடங்கினான்.

'யாரோட குதிரைவண்டி வந்துக்கிட்டிருக்கு? மாமா வராரோ? வந்தா அவரோட வழக்கமான புராணத்தை ஆரம்பிச்சுடுவாரே! ஜீவஹிம்சை, ஜீவனோட ஆறுபிறவிகள், பதினெட்டுப் பாவ

ஸ்தானங்கள், பர்யூஷண் திருவிழாவிலே பஞ்சமிப் பிரதக்ஷிணத்துக்கு ராஜ்கோட் வர்ரது இதைப்பத்தியெல்லாம் பேச ஆரம்பிச்சுடுவாரே!'

அவனுக்கு வலதுபக்கத்தில் ஏதோ அரவம் கேட்டது.

அவன் தன் துப்பாக்கியை எப்போது கழுத்திலிருந்து எடுத்துக் கொண்டான், எப்போது குறிவைத்தான், எப்போது சுட்டான், குண்டுபட்டு என்ன பிராணி விழுந்தது என்பவைபற்றி யெல்லாம் சொல்வது கடினந்தான்.

பழத் தோட்டத்துக்கு வெளியே குண்டுபட்டு விழுந்து கிடந்த கறுப்பு மானைப் பார்த்துவிட்டு அவன் சொன்னான். 'என்னோட தித்திப்பு மிளகாயையும் திராட்சையையும் தின்னுட்டுப் போக வந்தியா? தினமும் வந்துகிட்டிருந்தியோல்லியோ? இது என்ன உன் அப்பனோட வயலா?'

அவன் மானின் சவத்தை ஒரு குழியில் தள்ளி விட்டுச் சிரித்தான். 'குண்டு சத்தத்தைக் கேட்டதுமே நான் எவ்வளவு பாவம் பண்றேன்னு நல்லாப் புரிஞ்சுக்கிட்டிருப்பார் மாமா. எனக்குப் பிராயச்சித்தம் பண்ணி வச்சுக் கரையேத்தறதுக்காக அவர் ஒரு சாமியாரைக் கொண்டு வந்தார்னு என் விசுவாசம் மண்ணாப் போக வேண்டியதுதான்.'

கொஞ்ச நேரத்துக்காகவாவது மானோட உடலை மண்ணாலே மூடி வைக்க வேண்டியதுதான். அதைப் பார்த்துட்டா மாமாவுக்குச் சாப்பாடு வேண்டியிருக்காது.

அவன் வண்டியில் வந்து கொண்டிருந்த விருந்தாளியை வரவேற்கத் தயாரானான்.

''ஜுஹார்! ஜுஹார்!'' வண்டிக்குள்ளிலிருந்து ராஜபுத்திர வழக்கப்படி வாழ்த்தொலி கேட்டது. குரலும் ஓர் இடையனுடையதாகவோ அல்லது உழவனுடையதாகவோ தோன்றியது.

'இது மாமா இல்லே' என்று நினைத்துக் கொண்டே துப்பாக்கிக்கார மனிதனும் வாழ்த்தொலி எழுப்பினான். ''அடே, தர்பார் சுரேந்திர தேவ்ஜின்னு!'' அவன் விருந்தாளியை அடையாளம் கண்டு கொண்டான்.

பொன்னிற ஆதவன் ஆகாயத்தில் உதித்துவிட்டான். துப்பாக்கிக்காரன் விருந்தாளியை வரவேற்க ஓடினான். ஓடும்போது ஒரு பையன் போலவே காணப்பட்டான் அவன்.

''வாங்க, ஐயா! என்ன இப்படித் திடீர்னு? அதுவும் இந்த உடையிலே!'' என்று கேட்டுக் கொண்டே அவன் சுரேந்திர

தேவைத் தழுவிக் கொண்டான். பிறகு புன்சிரிப்புடன் அவருடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே நின்முன்.

''கடைசித் தடவையா உன் வெல்லத்தை ருசி பார்க்க வந்திருக்கேன்.''

''வெல்லந்தானே? இப்போ உங்களுக்கு அந்தக் கறுப்பான அவலட்சண வெல்லம் கொடுக்க மாட்டேன். தங்கக்கட்டி மாதிரி வெல்லம் தரப்போறேனுக்கும்! இந்த வெல்லத்தைச் சௌராஷ்டிரம் முழுதும் சப்ளே பண்ணப் போறேன். இப்போ நான் ஜெயிச்சுட்டேன்.''

''சீகுடி எப்படி இருக்கு?''

''அதுக்கு மாமியார் வீடு பிடிச்சுப் போச்சு. அதோட குழந்தைகள் இருக்கு, காமிக்கறேன், வாங்க!''

அவன் சுரேந்திர தேவின் கையைப் பிடித்துக் கொண்டு தன் வீட்டுப் பக்கம் நடந்தான். சுரேந்திர தேவ் தம்முடன் வந்த இளைஞனை நோக்கி, ''வா, பான்ஜா!'' என்முர்.

''இது யாரு?''

''பான்ஜா! மகீபத்ராமோட பேரன். உங்கிட்டே விட்டுட்டுப் போகப் போறேன் இவனை.''

''அடேயப்பா! கத்தியவார்ப் பையன்கள் பம்பாய், ஆமதாபாதிலே இருக்கற காலேஜ்களேன்னு அலங்கரிக்கணும்'' என்று சொல்லிக் கொண்டே துப்பாக்கிக்காரன் பிளுகியைத் தலைமுதல் கால் வரை உற்றுப் பார்த்தான். அவனுடைய பார்வையில் இகழ்ச்சியோ ஏளனமோ இல்லை.

துப்பாக்கிக்காரனின் தோற்றம் பிளுகியின் மனத்தில் வேறு ஒரு தோற்றத்தை நினைவுக்குக் கொண்டு வந்தது. யாருடைய தோற்றம் அது? மனசிலே இருக்கு, ஆனு சொல்லத் தெரியல்லே! ஆமா, ரூக்கட் மாமாதான்!

சோரட்டின் இந்தப் பிரஜையை இயற்கை இரும்பால் வார்த்திருக்கிறதா?

49

ஓர் அரசனின் ஊர்வலத்தில் செல்லும் குதிரையைப் போல் அந்த ஆஜானுபாகுவான துப்பாக்கிக்காரன் தன் வலப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த சுரேந்திரதேவையும், தன் இடப் பக்கம்

சற்றுப் பின்னல் நடந்து கொண்டிருந்த பினகியையும் அடிக்கடி ஓரக்கண்ணுல் பார்த்துக் கொண்டான்.

புத்தம் புதிய நல்லெண்ணெய் போல் பளபளக்கும் கண்களால் சுரேந்திர தேவைப் பார்த்தவாறே, ''நீங்க அடியோடு மாறிப் போயிட்டீங்க!'' என்று அவன் சொன்னான்.

''இதுக்கு முன்னே கடைசியா என்னை எப்போப் பார்த்தே, சேட்?'' சுரேந்திர தேவ் சற்றுச் சங்கோசத்துடன் கேட்டார்.

''ராஜ்கோட் நாடக அரங்கிலே. ராஜ சிம்மன் நாடகம் நடந்துகிட்டிருந்தது. அன்னிக்கு ராணி வேஷம் போட்ட பையனுக்கு நீங்க பரிசு கொடுத்தீங்க. ஞாபகம் இருக்கா?''

''ரொம்ப நாளைக்கு முந்தின சமாசாரம் அது.''

''ஏழு வருஷத்துக்கு முன்னலே. அப்போ உங்க டிரஸ்...'' தம் உடையைப் பற்றிய பேச்சைச் சுரேந்திர தேவ் அவ்வளவாக ரசிக்க வில்லை என்று கண்ட அவன், ''இப்போ வாசுகி சட்டை உரிச்சுக் கிட்டு இருக்கு'' என்று பேச்சை மாற்றினான்.

''அவ்வளவு தானே! உள்ளூறப் பாம்பாத்தானே இருக்கேன்!'' என்று கூறிச் சுரேந்திர தேவ் சிரித்தார்.

''நீங்க உங்க எதிரிகளுக்குப் பாம்பா இருக்கலாம். நான் காட்டிலேயே சுத்தறவன். பாம்பகளோடேயே வசிக்கறவன். பாம்பாட்டியோட மந்திரத்துக்குக் கூடக் கட்டுப்படாத பாம்புகளை எனக்குப் பிடிக்கும்.''

''மந்திரம் எல்லாம் போயிடுத்து, சேட்!

''என் காதிலேயும் விழுந்தது விஷயம்.''

''அதுக்காகத்தான் சொன்னேன், 'கடைசித் தடவையா உன் வெல்லத்தை ருசி பார்க்க வந்திருக்கேன்'னு!'' என்று கூறிய போது சுரேந்திரதேவின் முகம் சற்று இருண்டது.

''எதுக்காக நீங்க இப்படிப் பலி ஆடு ஆகறீங்க?''

''என்ன பண்றது? இப்போ சௌராஷ்டிரத்திலே வாழணும்னு, களங்கத்தைத் திலகமாக இட்டுக்கிண்டுதான் வாழ முடியும்.''

'திலகம்' என்ற வார்த்தையைக் கேட்டதும் சேட்டின் பார்வை தானகவே விருந்தாளியின் நெற்றியிலிருந்த சிவப்புத் திலகத்தின் மேல் விழுந்தது. அவன் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான். ''இல்லையில்லை, ஐயா! உங்க சிவப்புத் திலகம் எப்போதும் போலவே இருக்கு. முன்பு இருந்த மாதிரியே இன்னும் பிரகாசமா இருக்கு! இரண்டு யுகங்களும் சந்திக்கறபோது கூட அது இப்படியே பிரகாசமாகத்தான் இருக்கும்.''

தோப்பின் அடர்ந்த மரங்களுக்குக் கீழே மூவரின் முகத்திலும் உதயசூரியன் செம்பஞ்சுக் குழம்பை அப்பிக்கொண் டிருந்தான். வயலிலிருந்த கரும்பு, தோட்டத்திலிருந்த காய்கறிகள், பப்பாளி, திராட்சை, வாழை, சிக்கு முதலியவற்றின் மணங்களின் போதை தரும் கலவை ஒன்று காற்றில் அலை அலையாக வந்து கொண்டிருந்தது.

வீட்டுக்கு வந்ததும் சேட் துப்பாக்கியை இறக்கி வைத்துவிட்டு முகத்தைக் கழுவிக் கொண்டே வேலைக்காரனிடன், ''படுக்கையைச் சுருட்டி வை!'' என்றான்.

விரிக்கப்பட்டிருந்த படுக்கை சுருட்டி வைக்கப்பட்டது.

''யாருக்குப் படுக்கை விரிச்சிருந்தது?'' என்று சுரேந்திர தேவ் கேட்டார்.

''எனக்காகத்தான்!'' என்று சேட் சொன்னான். ''என்னோட வாழ்க்கை மிருகத்தோட வாழ்க்கை மாதிரிதான். எல்லாரும் தூங்கற சமயம் நான் கையிலே துப்பாக்கியை எடுத்துக்கிட்டு ராப்பூரா வயல்லே சுத்தறேன். எல்லாரும் முழிச்சிக்கிட்டு இருக்கறபோது நான் ஓய்வு எடுத்துக்கறேன்.''

''மிருகம் மாதிரி இல்லே; ரிஷி மாதிரி!''

''வேறே வழி? நான் முழிச்சிக்கிட்டிருக்காட்டா இந்தக் குழந்தைகளை யார் காப்பாத்துவா?'' சேட்டின் பார்வை ஒரு தாயின் பாசத்துடன் பத்தடி உயரம் வளர்ந்திருந்த கரும்புப் பயிரையும் தோட்டத்தின் பழ மரங்களையும் தழுவிக் கொண்டது.

''எவ்வளவு பெரிய கரும்பு வளர்ந்திருக்கு!''

''நேத்து நிறுத்துப் பார்த்தேன். பூரா இருபத்துமூணு ராத்தல்!''

''மிளகாய்?''

''பதினோரு தோலா!''

''என்ன சொல்றே நீ?''

''நிசந்தான், ஐயா! இது பூமியோட சக்தி, என் சக்தி இல்லே. ஆனா, நான் என்ன செய்வேன்? உம், நான் சொல்றதுக்கு மன்னிக்கணும். உங்க மாதிரி எழுபது, எழுபத்தஞ்சு தர்பார்கள் இந்தப் பூமியைத் தங்கள் காலால் நசுக்கிக்கிட்டு இருக்காங்க! இதோ பாருங்க, நான் இங்கே ஒரு லட்சம் கருவேல மரம் பயிர் பண்ணியிருக்கேன். ராஜ்கட் பட்டணம் இங்கேயிருந்து அஞ்சு கோச தூரந்தான் இருக்கு. இருந்தும் என்ன பிரயோசனம்?'' அவனிடமிருந்து ஒரு பெருமூச்சு வந்தது.

''ஏன்?''

''ராஜ்கட் பட்டணத்திலே எல்லாப் போக்குவரத்தும் சர்க்கார் கையிலே இருக்கு. நான் என் சாமான்களை என் வண்டிகளிலே போட்டு எடுத்துக்கிட்டுப் போக முடியாது. இது என்னோட சொந்த நாடு, இந்த ராஜா என்னோட ராஜா. இவரோட குட்டை உடைக்கிறதும் நானே என்றால் அது என்னோட காலை நானே வெட்டிக்கறதா ஆகும். ஆகையாலே பேசாமே இருக்கேன்.''

சேட் கோட்டைக் கழற்றி விட்டுத் தன் கழுத்தைத் தடவிக் கொண்டான். அதிலிருந்த பெரிய தழும்பைப் பார்த்த சுரேந்திர தேவ் ''இது எப்படி வந்தது?'' என்று கேட்டார்.

''இதுவா? கொள்ளைக்காரங்க கொடுத்த பரிசு! அவங்க ரொம்ப ஏழைங்க, பாவம்! ஒரு நாள் அதிகாலையிலே நான் தூங்கிக்கிட்டு இருக்கற சமயத்திலே வந்தாங்க. அவங்களோட குண்டு கொஞ்சம் கழுத்துச் சதையை ருசி பார்த்துட்டுப் போயிடுத்து. இதெல்லாம் சகஜந்தானே!''

இதற்குள் மண் கோப்பைகளில் கரும்புச்சாறு வந்துவிட்டது. திராட்சை, சிக்கு முதலிய, கத்தியவாரில் சாதாரணமாகக் கிடைக்காத பழங்கள் வாழையிலைகளில் பரிமாறப்பட்டன.

பினுகியோ இந்த அதிசய மனிதனின் ஒவ்வொரு கோணத்தையும் மெய்ம்மறந்து போய் அநுபவித்துக் கொண்டிருந்தான். கரும்பில் நிறைந்திருக்கும் சாறுபோல் அம்மனிதனின் ஒவ்வொரு செய்கையிலும், அவன் உட்காருவது, துப்பாக்கியை ஒரு பக்கம் வைப்பது, கத்தியை எடுத்துக் கரும்பைச் சீவுவது ஆகிய எல்லாக் காரியங்களிலும் வாழ்க்கையின் ரசம் நிறைந்து தளும்பிக் கொண்டிருந்தது.

சேட்டின் கிண்ணத்தில் மட்டும் சாறு குடிக்கப்படாமல் அப்படியே இருந்தது.

''நீயும் சாப்பிடேன்'' என்று சுரேந்திரதேவ் சொன்னார்.

''வேண்டாம்.''

''ஏன்?''

''பிடிக்கவில்லை. எனக்கு வாயுக் கோளாறு.''

வயல்களிலும் தோப்புக்களிலும் இரண்டு மணி நேரம் சுற்றிய பிறகு சுரேந்திரதேவ் பினுகியின் கழுத்தைத் தடவிக் கொடுத்தவாறு, ''என்ன பான்ஜா, இதெல்லாம் உனக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டார்.

''ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''எது ரொம்பப் பிடிச்சிருக்கு உனக்கு?''

பிஞகிக்கு வெட்கம் வந்துவிட்டது. அவனுடைய பதிலைக் கேட்க விரும்பிய சேட்டும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஏன் கூச்சப்படறே? சொல்லு! உனக்கு என்ன விஷயம் ரொம்பப் பிடிச்சிருக்கு?''

''துப்பாக்கியிலே குண்டை ரொப்பிக்கொண்டு ராத்திரி பூராக் காவல் காக்கறது.''

''தாத்தா ஞாபகம் வருதோ?''

சேட் சிரித்துக் கொண்டு சொன்னான். ''இந்தப் பையன் இங்கே இருக்கலாம். இதுவரையிலே நாலு பேர் வந்திருந்தாங்க. சௌராஷ்டிரத்திலே எல்லா இடங்களிலேருந்தும் நல்ல நல்ல இளைஞர்களைப் பொறுக்கி இங்கே அனுப்பச் சொல்லி வேண்டு கோள் விடுத்திருக்கேன். அவங்களுக்குச் சாப்பாடு போட்டு ஆளாக்கறது என் பொறுப்பு! ஆனா, வந்த நாலு பேரும் தினம் நியூஸ் பேப்பர் படிக்கத் தவிச்சாங்க. தபால்காரனுக்காக வழி மேலே விழி வச்சுக்கிட்டு உட்கார்ந்திருந்தாங்க. எப்போது பார்த் தாலும் நாவல் படிச்சுக்கிட்டு இருந்தாங்க. கடைசியிலே ஓடியே போயிட்டாங்க.''

''இவன் ஓடமாட்டான்!''

''எனக்கும் அப்படித்தான் தோன்றது. வாழ்க்கையோட உண்மையான ரசத்தை இவன் கண்டுபிடிச்சுட்டான்.''

''அப்போ இவனை உன்கிட்டே விட்டுட்டுப் போறேன்.''

''பேஷா!''

சுரேந்திரதேவும் சேட்டும் பிற்பகல் இரண்டு மணி வரை உரை யாடிக் கொண்டிருந்தார்கள்.

பிஞகியின் ரத்தத்தில் உற்சாகம் பிரவகித்தது. அவன் ஹாலாரி ஆற்றின் அணையின் மேல் நின்று கொண்டு பாஞ்சால் மலைகளின் அழகைப் பருகிக் கொண்டிருந்தான். அவனுடைய தாத்தாவின் உற்சாகம் அவனையும் பற்றிக் கொண்டது. ராணிக் குதிரையின் மேல் அமர்ந்திருக்கும் ரூக்கட் சேட் அவனது மனக்கண் முன்னே தோன்றினர். மலைகளைத் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும் வாயுவின் மயக்கம் கண் மைபோல் அவன் கண்களில் அப்பிக் கொண்டிருந்தது.

இடையிடையே சில வேறு வகையான எண்ண அலைகளும் வீசின. 'பாட்டி தனியாக இருக்க நேருமே! தேவுபா என்ன ஆவாள்? புஷ்பாவை இனிச் சந்திக்க முடியுமா?'

மாலையில் சுரேந்திரதேவ் புறப்பட்டு விட்டார். புறப்படுமுன் பிஞகியிடம், ''பான்ஜா, நீ உன் பாட்டிக்காகக் கவலைப்படாதே!

அவளைக் கவனிச்சுக்கறது என் பொறுப்பு. நீ கவனமா எல்லாம் கத்துக்கோ. இதுதான் உன்னுடை சர்வகலாசாலை; இவர்தாம் உன்னுடை குரு. நீ இங்கே இருக்கறதாலே என்ன ஆகறியோ, ஆகல்லியோ, அடிமையா மட்டும் ஆக மாட்டே; இது நிச்சயம்!'' என்று கூறிச் சென்றார்.

50

பிணுகியின் சர்வகலாசாலைப் பயிற்சி அன்றிரவே ஆரம்பமாகி விட்டது. இளமையும் பலமும் பொருந்திய அவனுடைய தோற்றம் சேட்டின் உள்ளத்தைக் கவர்ந்தது. சேட் அவனை இராக் காவலுக்குத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

பிணுகி தன் குருவுக்கு உதவும் நோக்கத்துடன் ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த துப்பாக்கியை எடுத்தான், அதற்குள் சேட்டே அதைக் கையில் எடுத்துக் கொண்டு அதிகம் பேசாமல் புறப்பட்டு விட்டான். பிணுகியிடம் அவன் சொல்லிய ஒரே வார்த்தை, ''கிளம்பு!'' என்பதே.

தன் குரு தனக்கு மௌனம் மூலமே பாடம் கற்றுத் தருகிறு ரென்று கண்டுகொண்டான் பிணுகி.

மறுநாள் நண்பகலில் ராஜ்வாடாக் கிராமத்துக்குப் பின் புறத்தில் புகைப் படலங்கள் எழுந்தன. டாங்கா மலைக்கும் ஹாலாரி நதிக்கும் இடையிலுள்ள பகுதியில் ஒரு கோச தூரத் துக்கு வைக்கோல் போர் எரிந்து கொண்டிருந்தது.

இந்த அமளியில் சேட் விழித்துக் கொண்டு, ''யாரோட வைக்கோல் நெருப்புப் பிடிச்சுக்கிட்டிருக்கு?'' என்று கேட்டான்.

''நம்மோடது இல்லே.''

''யாரோடது? எந்தக் கிராமத்தைச் சேர்ந்தது?''

''ரண்கலா கோலி குத்தகை எடுத்துச் சேர்த்து வச்சிருக்கற போர்.''

''நம்மளது இல்லேன்னாலும் நம்ம பக்கத்து ஊர்க்காரனுது தானே!'' என்று சொல்லிய சேட் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பிணுகியுடன் புறப்பட்டான்.

நெருப்பு எரிந்து கொண்டிருந்த இடத்தை நோக்கிச் சாதாரண மனிதர்களும் போலீஸ்காரர்களும் கால்நடையாகவும் குதிரைகளி

லும் வேகமாகப் போய்க் கொண்டிருந்தார்கள். இந்த அமளியும் பரபரப்பும் அந்த மலைப் பிரதேசம் ஒரு குறைப் பிரசவத்துக்கு உள்ளாகியிருப்பது போன்ற பிரமையைத் தோற்றுவித்தன.

ஒரு மங்கையும் இரண்டு பையன்களும் மிரண்டுபோய் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் எழுப்பிய அழுகையொலி உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது

''என்ன பையா?'' என்று சேட் கேட்டான்.

''எங்க வைக்கப் போரை எரிச்சுட்டார்!''

''யாரு?''

''பாபுதான்!''

''யாரு? பாபுவா? நம்ம ராவல் பாபுவா?''

''ஆமா.''

''ஏன்?''

''அவர் வேட்டையாடிக்கிட்டிருந்த பன்னி போருக்குள்ளே நுழைஞ்சுடுத்து, அதுக்காக.''

''அப்படியா?''

சேட் ஒரு சில நிமிஷங்கள் ஸ்தம்பித்துப் போய் நின்றான். அவனுடைய கால்கள் திரும்பிப் போய்விட விரும்பின. ஆனால் அவன் எப்படியோ தன்னைச் சமாளித்துக் கொண்டு முன்னே நடந்தான்.

அவர்கள் சற்றுத் தூரம் போவதற்குள், நவல்கா நகரத்திலிருந்து வேட்டைக்காகக் கிளம்பி வந்திருந்த ராஜா ராவல்ஜியின் மோட்டாரை வழியில் கண்டார்கள்.

சேட், ராஜாவுக்கு வணக்கம் தெரிவித்தான்.

மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த ராவல்ஜி தம் முக்கியப் பிரஜையான சேட்டைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார்.

''ரொம்பப் பெரிய வேட்டையாடிட்டீங்களே, பாபுஜி!'' என்ற சேட்டின் பேச்சில் மரியாதையின் அறிகுறிகூட இல்லை.

''ஆமா, ரொம்பக் கஷ்டப்பட்டு......'' என்று உற்சாகத்தோடு பேசத் தொடங்கிய ராவல்ஜி பேச்சை முடிக்காமல் குழறத் தொடங்கினார். தன் உற்சாகம் சேட்டின் முகத்தில் பிரதிபலிக்கவில்லை என்பதை அவர் கவனித்தார்.

இப்போது உழவன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, ''ஆமா! ரொம்ப நல்லா வேட்டையாடியிருக்கீங்க! நவல்காவோட ராஜாவுக்குக் கௌரவத்தைக் கொடுக்கற வேட்டை தான்!''

''என்ன சொல்றே நீ? நீ யாரோடே...''

''நான் யாரோட பேசிக்கிட்டிருக்கேன்னு எனக்கு நல்லாத் தெரியும். ராவல்ஜியோட பிரஜையான நான் சாட்சாத் ராவல் ஜியோடே பேசிக்கிட்டிருக்கேன், இந்த ஆயிரத்துத் தொள்ளா யிரத்து இருபதாம் வருஷத்திலே!''

''சரி, என்ன சொல்றே நீ?''

''நீங்க ஒரு மிருகத்தை வேட்டையாடறபோது, கூடவே மூணு மனிசங்களையும் வேட்டையாடிட்டீங்க!''

ராவல்ஜியின் முகம் கோபத்தால் சிவந்தது.

''நீங்க யாரோட போரிலே நெருப்பு வச்சீங்களோ, அவங்க மூணு பேரும் அழுதுக்கிட்டு ஓடிக்கிட்டிருக்காங்க. கொஞ்சம் காரை ஓட்டுங்க. நான் அவங்களை உங்களுக்குக் காண்பிக்கறேன்.''

ராவல்ஜியின் முகம் இறங்கிவிட்டது. அவர் வண்டியிலிருந்து இறங்கி உடைந்த குரலில், ''போர் முழுதும் எரிஞ்சு போச்சா?'' என்று கேட்டார்.

அவர் திரும்பிப் பார்த்தார். புகை மண்டலம் வானத்தை எட்டிக் கொண்டிருந்தது. அதனுள்ளிருந்து வெளிக் கிளம்பிய தீப்பிழம்புகள் பாயும் சிறுத்தைகளை நினைவூட்டின.

''எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும்?'' என்று ராவல் பச்சாத் தாபத்துடன் கேட்டார்.

''எனக்குத் தெரியாது, பாபு.''

''நீ போய் நஷ்டத்தை மதிப்பிட்டுப் பார்த்துச் சொல்லு. நான் அந்தப் பணத்தைக் கொடுத்துடறேன்.''

இதன் பிறகு யாரும் பேசவில்லை. ராவல்ஜியின் கோஷ்டி மயான ஊர்வலம் போல் சென்று சேட்டின் வீட்டை அடைந்தது. ராவல்ஜி அங்கு ஒரு மணி நேரம் தங்கியிருந்தார். அவருடைய முகத்தில் தாம் செய்த பாவத்தின் நிழல் படிந்திருந்தது.

இந்தச் சம்பவத்திலிருந்து பிஞுகிக்குப் பல பாடங்கள் கிடைத்தன. தூக்கிலிடப்பட்ட ரூக்கட் மாமா புதிய யுகத்துக் கேற்ற புதிய உணர்வுகளுடன் இங்கே பிறந்திருக்கிறாரென்று அவனுக்குத் தோன்றியது.

இரவு வேளைகளில் சாவைப் பொழிந்த அதே விரல்கள் பகல் வேளைகளில் உயிரை அளித்தன. சிக்குச் செடிகள், திராட்சைப் பந்தல்கள், செங்குத்தாக நிற்கும் மரங்களின் மேல அணிலைப் போல ஏறும் வெற்றிலைக்கொடிகள்—இவை எல்லாவற்றுக்கும் அமுத மூட்டின அவ்விரல்கள். சேட்டின் ஒவ்வொரு வாக்கியத் திலும் பிஞுகிக்கு இதுவரை கேட்டிராத மொழியின்பம்

கிடைத்தது. தன் நண்பர்களுடன் உரையாடும்போது ரசமாக வும் அழுத்தமாகவும் பேசினுன் சேட்.

''வாழையோட கன்னுகள் விளையாடக் கிளம்பிவிட்டன. வாழை ரொம்பக் கஷ்டப்பட்டு ஈன்ற கன்னுகள்.''

''சிக்குச் செடிக்கு இந்த மண் பிடிக்கல்லே. அதுக்குக் காட்டிலே ருந்து எலும்பு பொறுக்கிக்கிட்டு வந்து அதை அரைச்சு உரமாக் கொடுக்கணும்.''

''இந்த வாதா மரத்துக்குக் கழுத்து எப்படி உடைஞ்சது?''

''ஜமாதாரியா மாஞ்செடிக்கும் சிந்துரியா மாஞ்செடிக்கும் ஒட்டுப் போட்டாச்சு. ஆனு அதுகளோட குடும்பம் நல்லபடியா நடக்கறதாத் தெரியலியே! இதுக்கு என்ன காரணம்னு கண்டு பிடிக்கணும். ஒரு குடும்பம் பாழாப் போறதைப் பார்த்துக்கிட்டு இருக்க முடியுமா?''

சேட்டின் இம்மாதிரி பேச்சினுல் பிஞகியின் கண்களில் மரஞ் செடி கொடிகள் கூட உயிர் பெற்றுவிட்டன. பிரபஞ்சத்தின் மூடிக் கிடந்த கதவுகள் திறந்து கொண்டன. புழு பூச்சிகளையும் சின்னஞ்சிறு பறவைகளையும் சாப்பிடும் சீபரி, கோரையா முதலிய பறவைகளிலிருந்து சிறுத்தை, புலி வரையிலுள்ள எல்லா ஜீவராசி களிடையேயும் ஒரு விசேஷ உறவு மலர்ந்திருப்பதைப் பிஞகி உணர்ந்தான். இந்த உறவின் சங்கிலிப் பிணைப்பைப் பற்றி மேலும் மேலும் அறிய அறிய அவனுக்கு இந்த ஜீவ உலகம் மனி தனின் எல்லையற்ற சாம்ராஜ்யமாகக் காணப்படத் தொடங்கியது. மனிதனின் ஆண்மையின் பெருமை அவன் பார்க்குமிடமெல்லாம் பரவியிருந்தது. குளிர்காலத்தில் அவனுடைய தோலையும் தசை யையும் ரம்பம் போல் அறுத்த குளிர் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. கோடைக்காலத்தின் வெப்பம் அவனை வறுத்து விழுங்க முயற்சி செய்தது; அவனுடைய சரீரம் சுடப்பட்ட தாமிரம்போல் சிவந்தது. ஆனுல் அவன் சற்றும் தளரவில்லை. ஒவ்வொருநாளும் காலையில் அவன் கடந்துபோன இரவைப் பயமு றுத்திக் கொண்டு அணைக்கட்டின் முகட்டில் உறுதியாக நின்றுன்.

பிஞகிக்கு இப்போது தன் படிப்பைத் தொடர விடாமல் செய்த தலைமையாசிரியரின் கழுத்தைப் பிடித்துத் திருக வேண்டுமென்ற ஆசை இல்லை.

அவன் அங்கு வந்து ஆறு மாதங்களாகிவிட்டன. ஆனுல் அவன் ஒரு தடவை கூடத் தான் ராஜ்கோட் போய்வர விருப்பம் தெரி விக்கவில்லை. சேட் இதைக் கவனிக்கத் தவறவில்லை. சேட்டும் இதைப்பற்றிப் பிஞகியிடம் பேச்செடுக்கவில்லை.

ஒரு நாள் பிஞுகிக்கு அவனுடைய பாட்டியிடமிருந்து கடிதம் கிடைத்தது.

அஸ்தமித்து விட்ட சூரியன் வானத்தில் தான் தோற்றுவித்த நிழலால் காட்டின் ஜடப்பொருள்களையும் சேதனப் பொருள்களை யும் பயமுறுத்திக் கொண்டிருந்தான்.

அந்த அந்தி வேளையில் பிஞுகி சேட்டிடம் தான் வீடு செல்ல அநுமதி கேட்டான்.

''ரெயில் போயிருக்குமே! நாளைக்குப் போயேன்!''

''இல்லே, இன்னிக்கே போறேன்.''

''எப்படி?''

''நடந்து!''

''அவ்வளவு தூரம் நடந்துபோக உனக்குத் தைரியம் இருக்கா? ஏழு கோச தூரமாச்சே!''

''பாட்டிக்கு என்ன ஆயிருக்குமோ, தெரியல்லே. நான் இப்பவே போறேனே!'' பிஞுகி பார்வையை வேறுபக்கம் திருப்பித் தொண்டையைச் சற்றுக் கனைத்துக் கொண்டான்.

''அப்படீன்ஞ உடனே கிளம்பு! கையிலே ஒரு தடி எடுத்துக்கோ!''

சேட்டின் குரலில் அநுதாபம் ஒலிக்கவில்லை. அவனிடம் எவ்வளவு ஆட்கள் இருக்கிறார்கள்! எவ்வளவு மாடுகள், குதிரைகள், ஒட்டகங்கள், வண்டிகள் இருக்கின்றன! பிஞுகிக்கு ஒரு வண்டி கொடுக்கக் கூட மனம் இல்லையா சேட்டுக்கு?

''மூணும் நாள் இங்கே திரும்பி வந்துடு!'' என்று உலர்ந்த குரலில் சேட் சொன்ஞன்.

பிஞுகி சென்றபிறகு சேட் தன் குதிரைக்குச் சேணம் அணிவித்தான். பிறகு தன் மியாணு சௌகீதாரைக் கூப்பிட்டுச் சொன்ஞன். ''தமாசீ! நீ இது மேலே ஏறிக்கோ! பையனை ரெண்டு வயல் முன்ஞலே விட்டுட்டு நீ பின்ஞலேயே போ! அவன் வீடு போய்ச் சேர்ர வரையிலே அவனுக்குக் காவலாப் போ! ஆஞ நீ வரது அவனுக்குத் தெரியக்கூடாது. அப்பறம் இன்ஞெரு விஷயம். நீளநீளமா அம்பது கரும்பு, ஒரு கூடை காய்கறி, ஒரு மூட்டை சிக்கு எல்லாம் குதிரை மேலே ஏத்திக்கிட்டுப் போய் நாளைக் காலையிலே அவஞேட பாட்டிகிட்டே கொடு. அவனுக்குத் தெரியாம அந்த அம்மாகிட்டே சொல்லிட்டுவா, 'அவங்க பான் ஜாவைப்பத்திக் கொஞ்சங்கூடக் கவலைப்படவேண்டாம்'ஞு.''

''உம், இன்ஞெரு விஷயம்.'' சேட்டுக்கு இன்னும் ஏதோ நினைவுக்கு வந்தது. ''வழியிலே அவஞேட தைரியத்தைச் சோதனை பண்ணிப் பாரு!''

இந்தக் கடைசிக் கட்டளை தமாசிக்கு மிகவும் பிடித்திருந்தது. அவன் குதிரையில் ஏறிக் கொண்டு புறப்பட்டான்.

சேட் இராச் சாப்பாட்டுக்குப் பிறகு ஹுக்கா பிடித்துக் கொண்டே தன் குமாஸ்தாவிடம் கூறினன்: ''வஜா பாயி, புதுக் கோதுமை அறுவடையானதும் ஒரு வண்டி கோதுமை, ஒரு டின் நல்ல நெய், ஒரு பானை வெல்லம், இதெல்லாம் ராஜ்கோட்டுக்கு அனுப்பணும்.''

''எங்கே?''

''ராஜ்கோட்டுக்குத்தான்...''

''ராஜ்கோட்டிலே எங்கே?''

''எங்கேங்கறதை அப்பறம் சொல்றேன். ஆனு இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது.''

அன்று இராக் காவலுக்குப் புறப்பட்டபோது சேட்டுக்கு முதல் தடவையாகத் தன் தனிமை பிடிக்கவில்லை.

வேறு கவலையும் ஏற்பட்டது அவனுக்கு. 'நான் பிசகு பண்ணிட்டேனே? தமாசி பையனை ரொம்பப் பயமுறுத்திடுவானே? வயசானலும் நல்ல முரடன்னு தமாசி! எப்பேர்ப்பட்ட ரத்தினங்களையெல்லாம் நான் சேர்த்து வச்சிருக்கேன்! கொள்ளையடிச்சவன், திருடன் இவங்களுக்கெல்லாம் புகலிடம் கொடுத்து அவங்களை வீரர்களாக்கியிருக்கேன். இதிலே நான் கர்வப்பட என்ன இருக்கு? பூமின்னு அவங்களுக்குப் புகலிடம் கொடுத்திருக்கு. அவங்க ஒரு நாள் அதை விட்டுட்டு ஓடிப் போனுங்க, இப்போ திரும்பி அதுகிட்டேயே வந்திருக்காங்க. அமைதியாக வாழ அவங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைச்சிருக்கு. அமைதி ஏன் இருக்காது? இங்கே அவங்களோட எல்லா விருப்பங்களும் பூர்த்தியாறது. தமாசிக்கு வேட்டையிலே ரொம்ப ஆசை. அவன் தன் கிராமத்து எல்லையிலே ஒரு காலியார் மானைக் கொன்னதுக்காகப் பிடிபட்டான். அடி தடி பண்ணிட்டு ஜெயிலுக்குப் போனன். இங்கே அவன் மிருகங்களை எவ்வளவு வேணும்னுலும் வேட்டையாடலாம். வயலைக் காவல் காக்கறதுதானே அவன் வேலை! அவன் சந்தோஷமா இருக்கான் இப்போ. உம், ஒவ்வோர் உழவன் கையிலேயும் ஒரு துப்பாக்கியை என்னிக்குக் கொடுக்க முடியுமோ அன்னிக்குத் தான் நான் வயிறு நிறையச் சாப்பிடுவேன். இப்போ வெறும் எலும்புக் கூடுகளுக்கு நடுவிலே நான் மட்டும் மனிசனு உலாவிக்கிட்டிருக்கேன்.'

51

பிஞகி ராஜ்கோட்டின் எல்லையை நெருங்கியபோது மணிக் கூண்டின் கடிகாரம் ஒலித்தது. அதைத் தொடர்ந்து 'ஆல் வெல்' என்ற குரல் ஐந்து முறை ஒலித்தது.

மணி பத்து ஆகிவிட்டதென்று அவனுக்குத் தெரிந்தது. அப்போது அவனுக்கு முன்னே மயானத்தின் கூரை தெரிந்தது. அதற்குப் பின்ஞல் ஒரு குதிரை வீரனின் உருவம் தோன்றியது. குதிரைப் பறந்து கொண்டு வானத்தை நோக்கிப் பாய்வது போலிருந்தது. அதில் உட்கார்ந்திருந்தவனின் கால்களோ நீண்டு தொங்கிக் கொண்டிருந்தன.

ஒரு கணம் அதிர்ந்து போஞன் பிஞகி. தன் உடல் முழுதும் தண்ணீராக உருகிப் போய்க் கொண்டிருப்பது போல் தோன்றியது அவனுக்கு. ஆஞல் மறு நிமிஷமே அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டான். அவனுக்கு நினைவு வந்தது. 'இங்கே தான் தாத்தாவோட உடல் எரிக்கப்பட்டது. இங்கே தான் ரூக்கட் மாமாவோட தேகமும் தகனம் செய்யப்பட்டது' என்று எண்ணிஞன். உடனே அவனுக்கு அந்த இடம் பழக்கமானதாகத் தோன்றியது. அவன் மேலே நடந்தான். ஒரு சாதாரண ஆள் குதிரை மேலே சவாரி செய்து கொண்டு 'காப்பி' ராகத்தை ஆலாபனை செய்தவாறே சற்றுத் தூரத்தில் போய்க் கொண்டிருந் தான்.

அவன்தான் கிழவன் தமாசி. பிஞகியின் தைரியத்தைச் சோதித்துப் பார்த்து விட்டான் அவன்.

பிஞகி தன் வீட்டையடைந்து கதவைத் தட்டிஞன். அதே சமயத்தில் வீட்டின் ஓரத்திலிருந்து ஓர் ஆள் நழுவி மறைவதை அவன் கவனித்தான்.

கிழவி பேரனை உள்ளே அழைத்துக் கொண்டு போய்த் தன் கையால் அவனுடைய முகத்தைத் தடவிக் கொடுத்தாள். நாக்கால் உச்சரிக்கப்பட இயலாத விஷயங்களை அந்த ஸ்பரிசம் சொல்லியது.

''உன் மூஞ்சியிலே ஏதாவது கொப்புளம் வெடிச்சிருந்ததா?'' என்று கேட்டாள் அவள்.

அவன், அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு சென்ற அன்று அவனுடைய மிருதுவான முகத்தைத் தன் கையால்

தடவிக் கொடுத்திருந்த அவள் அந்த ஸ்பரிசத்தின் மென்மையை இன்னும் மறக்கவில்லை. அவளுடைய கைவிரல்கள் தாம் முன்பு அநுபவித்த மென்மையை இப்போது சோதித்துப் பார்த்தன, புதிய பாராக்காரன் பழையவனிடமிருந்து பெற்றுக் கொண்ட பெட்டிச் சாவிகளைச் சோதித்துப் பார்த்துக் கொள்வதைப்போல.

''பருவா இருக்கும்'' என்று பிஞகி பதில் சொன்னுன்.

பருக்கள் வளர்வது இளமையின் அடையாளங்கள். கிழவி புரிந்து கொண்டு விட்டாள். பிஞகியின் முகத்தில் வாலிபம் கண்ணுமூச்சி விளையாடிக்கொண் டிருந்தது.

''பாட்டி! இங்கே யாராவது வந்திருந்தாளு?'' என்று பிஞகி தாழ்ந்த குரலில் கேட்டான்.

''இங்கேயா?''

''வாசல் வராந்தாவில்.''

''ஏன், யாரையாவது பார்த்தியா?''

''ஆமா, யாரோ ஒருத்தன் நின்னுகிண்டு இருந்தான்.''

''போலீசாயிருக்கும்.''

''ஏன்?''

''உனக்குத் தெரியாதா?''

''என்ன?''

''உன்னோட மாமி ஜெயில்லேருந்து தப்பிச்சுக்கிண்டு ஓடிப் போயிட்டா!''

''எப்போ?''

''முந்தா நாள் ராத்திரி. நேத்துக் காலையிலேயிருந்தே நம்ம வீட்டுப் பக்கம் போலீஸ் நடமாட்டம் ஆரம்பமாயிடுத்து. அதுக்காகத்தான் உன்னை வரச்சொல்லி லெட்டர் எழுதினேன். இந்த வயசிலே நானே ரெயில் ஸ்டேஷனுக்குப் போயி லெட்டரைப் போட்டுட்டு வந்தேன்.''

பிஞகி மௌனமாயிருந்தான்.

''உன்னோட தாத்தா காலத்துப் போலீசுக்கும் இந்தக் காலத்துப் போலீசுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு, பான்ஜா! இவங்களோட அட்டகாசம் என்னுலே பொறுக்க முடியல்லே. அவங்க இங்கே சுத்தும்படியா என்ன இருக்கு இங்கே? கட்டாலே போறவங்களுக்கு வெட்கமே கிடையாது.''

துக்கம் தொண்டையை அடைத்தது கிழவிக்கு. இடையிடையே கோபமும் வந்தது, சூடான இரும்புச் சட்டியில் நீர்த்துளிகள் விழுவது போல.

அவள் பிஞகியை உள்ளறைக்கு அழைத்துச் சென்ருள். அறை இருட்டாக இருந்தது. ஜன்னல் கதவுகளும் மூடியிருந்தன. அப்படியும் அவள் இங்குமங்கும் ஒரு தடவை ஜாக்கிரதையாகப் பார்த்துவிட்டுத் தாழ்ந்த குரலில், "தானேதாரோட பொண்ணு புஷ்பா உனக்கு லெட்டர் போடறதுண்டா?" என்று கேட்டாள்.

பிஞகி வியப்புடன், "இல்லேயே!" என்ருன்.

"பின்னே அவ எங்கே?" கிழவியின் கேள்வி அவனே அதிரச் செய்தது.

"என்னே ஏன் கேக்கறே? எங்கே அவ? எங்கே போயிட்டா அவ?"

கிழவி தலேயை ஆட்டிஞள். "எங்கேயோ போயிட்டா!"

"நிசமாவா?"

"ஆமா! நேத்து ராத்திரியிலேருந்து அவளேக் காணேம். அவளோட அம்மா அவளேத் தேடிக்கிண்டு இங்கே வந்திருந்தா. என்னே ஒரு மூலேக்குக் கூட்டிக்கிண்டு போயி என்ன என்னவோ சொன்ஞ. புஷ்பா உங்கிட்டே போயிருப்பான்னு அவளுக்குச் சந்தேகம்."

"எங்கிட்டேயா? அதெப்படி?"

"அவ உன் பேருக்கு எழுதின கடிதம் ஒண்ணு அகப்பட்டிருக்கு."

"அதஞலே?"

"அவளோட அம்மாவும் அண்ணனும் அவளே நன்ஞ உதைச்சாங்களாம். போலீசிலேயும் உன்னேப்பத்தி ரிப்போர்ட் பண்ணியிருக்காங்க."

தான் இந்த உலகத்தில் தான் இருக்கிருேமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது பிஞகிக்கு. அவன் தன் கையிலிருந்த தடியைக் கீழே வைக்கக்கூட மறந்து போய்விட்டான். தனக்குத் தாகம் எடுத்திருப்பதுகூட அவனுக்கு ஞாபகமில்லே.

"பாட்டி, நான் இப்பவே அங்கே போறேன்."

"எங்கே?"

"புஷ்பா வீட்டுக்கு."

"ஊஹூம்! போகாதே! அவங்க ஏற்கனவே ரொம்பக் கோவமா இருக்காங்க உன் மேலே. நீ இப்போ அங்கே போறது சரியில்லே, பான்ஜா!"

அவன் அவளுடைய பேச்சைக் காதில் போட்டுக் கொள்ள வில்லே. கையில் தடியுடனேயே அவன் வெளியே கிளம்பி விட்டான்.

இன்று முதல் தடவையாக அவனுக்குத் தோன்றியது; வானத்துத் தாரகைகள் புஷ்பாவின் கண்களைப் போல் மௌனமாகச் சிமிட்டிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் கோபம், பரிதாபம் முதலிய உணர்ச்சிகள் நிறைந்திருக்கின்றன.

அவன் திடீரென்று சுரேந்திர தேவுடன் ராஜ்வாடாவுக்குப் புறப்பட்டுச் சென்ற அன்று புஷ்பாவைச் சந்திப்பதாக அவளிடம் சொல்லியிருந்தான். அன்று முதல் அவளது நினைவு அவனுடைய உள்ளத்தில் ஒளிந்து கொண்டிருந்தது.

அவனுக்காக அவள் அடி வாங்கினாளா? அவள் ராஜ்வாடாவுக்குத்தான் போகப் புறப்பட்டாளா? அப்படியானால் அங்கே ஏன் வரவில்லை? வழியிலும் அவளைக் காணவில்லையே! எங்கே போனாள் அவள்? அவள் எங்கே போனாலும், என்ன ஆனாலும், உயிரோடிருந்தாலும் இறந்து போய் விட்டாலும் அவனுக்குச் சொந்தமானவளாகவே கருதப்படுவாள்.

பினாகி புஷ்பாவின் வீட்டுக்குப் போய், ''சித்தி!'' என்று கூப்பிட்டான்.

''யாரு? பான்ஜாவா?'' புஷ்பாவின் தாய் ஓடி வந்தாள். ''புஷ்பாவைக் கூட்டிக்கிண்டு வந்தியா? அவ எங்கே?''

''எனக்கு ஒண்ணுமே தெரியாது, சித்தி!''

''அப்படிச் சொல்லாதே, குழந்தே!'' என்று சொல்லிக் கொண்டே அவள் பினாகியின் முகத்தைக் கையால் தடவிக் கொடுத்தாள். ''இப்படியெல்லாம் சொல்லி என்னைச் சாக அடிக்காதே, பான்ஜா! நீ கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம். என்னோட புஷ்பா இனிமே உனக்கோட புஷ்பாதான். நான் அவளை உனக்குக் கொடுத்துட்டேன். அவளை உசிரோட ஒரு தடவை எனக்குக் கொண்டு வந்து காட்டு அப்பா! ஒரே ஒரு தடவை!''

அந்த நள்ளிரவில் பெண்ணை இழந்த அந்தத் தாயின் தோற்றமும் பேச்சும் உள்ளத்தைப் பிளப்பனவாக இருந்தன. பினாகிக்குப் பேச நாவெழவில்லை.

புஷ்பாவின் தாய் பைத்தியம் போல் பேசிக் கொண்டே போனாள். ''எனக்குப் பதில் சொல்லு, குழந்தே. நீ அவளை எங்கேயாவது ஒளிச்சுவச்சிருக்கியா? இல்லே, வாசல்லே நிறுத்திவச்சுட்டு வந்திருக்கியா? திடீர்னு வந்து என் கழுத்தைக் கட்டிக்குவாளா அவ? அவ உன்கிட்டே வந்தபோது பசியா இருந்தாளா? பசியாத்தான் இருந்திருப்பா. அவளுக்கு நான் பால் கொடுத்து எவ்வளவு வருஷமாயிடுத்து. அதுக்கப்புறம் பால் கொடுக்கவே மறந்து போயிட்டேன்! சே, எவ்வளவு மறதி எனக்கு! ஹிஹிஹி!''

புத்தி பேதலித்துப் போன அவள் கீழே உட்கார்ந்துகொண்டு தன் மார்புப் பகுதியில் புடைவையைச் சற்று விலக்கிக்கொண்டு, வாயிற்பக்கம் திரும்பி ஒரு குழந்தையை அழைப்பதுபோல் அழைக்கத் தொடங்கினுள். ''ஏ புஹ்பீ! புஹ்பீ! ஓடிவா குழந்தே! பா ஆ.. ஆ.. ஆ ல் குடிக்கவா!''

அதிக நேரம் அங்கே பினுகியால் நிற்கமுடியவில்லை. அவனுக்குத் தன் தாயின் நினைவு வந்தது. ஒரு குழந்தையினுடைய தாயின் உள்ளமாகிய உலகம் எப்படி இருக்கும் என்று அவனுக்கு இவ்வளவு காலம் தெரியாமல் இருந்தது. அவ்வுலகம் பரிதாபமாக இருந்தது; அதே சமயத்தில் பயங்கரமாகவும் இருந்தது.

அவன் அங்கிருந்து புறப்பட்டபோது புஷ்பாவின் தாய் ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு பிதற்ற ஆரம்பித்தாள். ''இதோ பார், பான்ஜா! நாம வெவ்வேறு ஜாதியா இருந்தா என்ன? ஜாதி கீதி எல்லாம் நெருப்பிலே விழட்டும். எனக்கு அதைப் பத்திக் கவலையில்லே. நான் அவளை உனக்குக் கொடுத்துட்டேன். நான் பழைய காலத்து ஆள் இல்லே. ஆனு ஒண்ணே ஒண்ணுமட்டும் உன்னைக் கேட்டுக்கறேன், கள்ளுக் குடிக்காதே, மாமிசம் சாப்பி டாதே! இந்தக் கெட்ட பழக்கமெல்லாம் எப்படியோ புஷ்பா வோட அப்பாவுக்கு ஏற்பட்டுடுத்து. இந்த ரகசியத்தை நான் உன் ஒருத்தன்கிட்டேதான் சொல்லியிருக்கேன், புரிஞ்சுதா?''

அவளுடைய இந்தப் பிதற்றலால் தன் ஆண்மையே அவமானப் படுத்தப்படுவதாக நினைத்தான் பினுகி. தான் புஷ்பாவை ஒளித்து வைத்திருப்பதாக அல்லவா நினைக்கிறுள் அவள்! யாரோ தன்னைச் செருப்பால் அடிக்கும் உணர்வு ஏற்பட்டது அவனுக்கு.

வாசலில் இரண்டு போலீஸ்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் கிழவனுன சங்கர் பாரோட். அவன் பினுகியை அடையாளம் கண்டுகொண்டு தனியே அழைத்துக்கொண்டு போய்ச் சொன்னுன். ''அந்தப் பொண்ணு உங்கிட்டேபோகத்தான் கிளம்பினுன்னு தெரியுது. ஹாலாரி ஆத்தோரமா 'நாக்தரா' வரையிலே அவ போய்ச் சேர்ந்ததுக்கும் தடயங்கள் இருக்கு. அதுக்கப்பறம் அவ என்ன ஆனுங்கறதுதான் தெரியல்லே, அது தான் பயமா இருக்கு.''

''என்ன பயம்?''

''அவ ஒருவேளை ரெவீண்கட் யுவராஜாகிட்டே மாட்டிக்கிட் டிருப்பாளோன்னுதான் பயம். அவனேட ராஜ்யம் பக்கத்திலே தானே இருக்கு. அவன் பெரிய ஸ்திரீலோலங்கற விஷயம் எல்லாருக்கும் தெரியும்.''

''போலீஸ் அவளைக் கண்டுபிடிக்க முயற்சி பண்ணுதா?''

''அதெல்லாம் ஒண்ணும் நடக்காது.''

''ஏன்?''

''போலீஸ் அதிகாரிகளோட வாயைக் காகிதத்தாலே அடைச்சாச்சு!'' (கரன்சி நோட்டுக்களை லஞ்சமாகக் கொடுப்பதை இப்படித்தான் குறிப்பிடுவது வழக்கம்.) ''தவிர, அந்தக் கொள்ளைக்காரச் சிங்கம் ஜெயில்லேருந்து தப்பி ஓடிப் போயிடுச்சே; அதைக் கண்டுபிடிக்கறதுலே தீவிரமா முனைஞ்சிருக்காங்க, போலீஸ்காரங்க.''

பிஞகியின் தலை கிறுகிறுத்தது. அதற்குள் ஏதோ பஞ்சு அடிக்கும் இயந்திரம் இயங்கிக்கொண் டிருந்தாற் போன்ற உணர்வு ஏற் பட்டது அவனுக்கு. சற்றும் உலக அநுபவமில்லாத அந்த இளைஞனின் உள்ளத்தில் பற்பல கேள்விகள் எழுந்தன. ''இந்த இருபதாம் நூற்றாண்டின் இருபதாம் வருஷத்தில்கூட ஒரு யுவ ராஜா வழியில் போகும் ஒரு பெண்ணை அபகரிக்க முடியுமா? இது என்ன யுகம்? இது என்ன அரசாங்கம்? இங்கே சட்டம் இருக் கிறதா? ஒரு பெண் இழுத்துக்கொண்டு போகப்பட்டிருக்கிறாள்; அப்படியும் இந்த ராஜ்கோட் நகரம் கவலையில்லாமல் உறங்கிக் கொண்டிருக்கிறதே! ஏஜண்ட் நன்றாகத் தூங்குகிறானே? காற்று வழக்கம்போல் வீசுகிறதே! வக்கீல்கள் தங்கள் தொழிலை வழக்கம் போல் செய்து கொண்டிருக்கிறார்களே! என்ன அநியாயங்கள் நடந்தாலும் இப்படித்தான் உலகம் வழக்கம்போல, எவ்வித மாறுதலுமின்றி, இயங்கிக்கொண் டிருக்குமோ?''

52

பிஞகியின் நாடிநரம்புகளில் மூன்றுவித உணர்ச்சிகள் கொந்தளித்துக்கொண் டிருந்தன. புஷ்பா தன்னை யடைவதற்காக, தன்னுடையவளாக ஆவதற்காகத் தாயையும் உதறித் தள்ளி விட்டு, சற்றும் பழக்கமில்லாத இடத்துக்குத் தன்னந்தனியே கிளம்பிவிட்டாள் என்ற நினைவு அளித்த உற்சாகம்; புஷ்பா அடித்துத் தண்டிக்கப்பட்டாள் என்பது குறித்து வேதனை; சுரேந்திரதேவ், ராஜ்வாடாவிலுள்ள சேட், இறந்துவிட்ட தன்

தாத்தா, ரூக்கட் மாமா இவர்களுடைய ஆசீர்வாதமும் ஆதரவும் தனக்கு இருக்கிறது என்ற கர்வம்; இம்மூன்று உணர்வுகளும் அவனுக்குத் தெம்பை அளித்துக்கொண் டிருந்தன. இந்தத் தெம்புடன் அவன் புஷ்பாவைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டான். பாட்டியின் அநுமதிக்காககூடக் காத்திருக்கவில்லை அவன். களைப்பால் அவனுடைய ஒவ்வோர் அவயவமும் பொடிப் பொடியாகிக்கொண் டிருந்தது. ஆனுல் பலூனுக்குள்ளிருக்கும் காற்று அதை உயரே கொண்டு செல்வதுபோல் அவனுடைய ஆவேசம் அவனை அலையவைத்தது.

புஷ்பாவின் வீடு இருந்த சந்தின் முனையில் பூதநாதர்கோயில் இருந்தது. அங்கு அப்போதுதான் ஏதோ உபந்நியாசம் முடிந்து பக்த கோடிகள் வெளியே வந்துகொண் டிருந்தார்கள். அவர்கள், சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து பேசிக்கொண்டே போனுர்கள். அவர்களின் பேச்சு பிஞுகியின் காதில் விழுந்தது.

''அவ நடத்தை கெட்டவ, பெரியப்பா! தானு ஓடிப் போயிருக்காளே!''

''யாரோடே ஓடிப்போயிட்டா?''

''வேறே யாரா இருக்கும்? ஒரு வளைச்செட்டியா இருக்கும், அல்லது ஒரு பட்டாணியனு இருக்கும்?''

''இவங்கள்ளாம் ஏன் ஓடிப்போறுங்க? ஒண்ணுமே புரியல்லே!''

''ஏன், நீ இழுத்துக்கிட்டுப் போகலாம்னு நினைச்சுக்கிட் டிருந்தியா அந்தக் குட்டியை, குலாப் சங்கர்பாயி!''

''ஹா...ஹா!...'' நடுத்தர வயதை அடைந்துவிட்ட குலாப் சங்கர்பாயி பெருமூச்சுவிட்டான். பிறகு வருத்தம் தோய்ந்த குரலில், ''உம், எங்களுக்கும் ஒரு காலம் இருந்தது, அப்பா! எங் களுக்கும் ஒரு காலம் இருந்தது!'' என்றுன்.

அவர்களுக்குப் பின்னுல் போய்க்கொண் டிருந்த பிஞுகியின் நடையின் வேகம் குறைந்தது. அவன் கையில் தடி இருந்தது. அவர்களுடைய பேச்சைக் கேட்டு அவனுக்கு ஆத்திரம் ஏற்பட்டது. தடியைப் பிடித்திருந்த அவனுடைய உள்ளங்கை கொதித்தது. புஷ்பாவைப்பற்றிக் கேவலமாகப் பேசும் இவர்கள் எல்லாரையும் தடியால் அடிக்கத் துடித்தான் அவன். ஆனுல் இப்படிச் சண்டை போட இது சமயம் அல்லவே!

அவன் மேலே நடந்தான்.

மறுபடியும் அதே மயானம், சாம்பல்மேடு, நிச்சப்தமான இரவு, முடிவில்லாததுபோல் தோன்றிய சூனியமான சாலை, அசை போட்டுக்கொண் டிருக்கும் பசு, மரத்தில் உட்கார்ந்திருக்கும்

ஆந்தையின் ஓலம், உயரமாக, அடர்ந்து வளர்ந்த புற்களுக்கிடையே ஓடிக் குதித்துக் கொண்டிருக்கும் சிறுசிறு ஜந்துக்களின் அரவம்... எலியை வேட்டையாடும் பூனே, அதனேச் சற்று ஓட விட்டு வேடிக்கை பார்த்துவிட்டுக் கடைசியில் கவ்விக்கொள்வது போல் கருமேகங்கள் சுக்கிலபட்சத்து அஷ்டமிச் சந்திரனே அடிக்கடி மூடித் திறந்துகொண் டிருந்தன. மேகங்களால் பாதி மூடப்பட்ட சந்திரன் காக்கைகளால் கடித்துக் குதறப்பட்டவன் போல் தோற்றம் அளித்தான். பல வருடங்களாகத் தண்ணீரில்லாமல் உலர்ந்து கிடந்த வயல்களின்மேல் வீசிக்கொண் டிருந்த காற்று கற்பழிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயைப் போல மெல்ல முனகிக்கொண் டிருந்தது.

பழுப்பு நிறப் பொட்டுப் பொட்டாகக் காலேயொளி பரவியது. மேகங்களும் சந்திரனும் சூரியனுகிய தோட்டியின் வரவை எதிர் பார்த்துக்கொண்டு வான வீதியில் அழுகிக்கொண் டிருந்தன.

வயல்களிலிருந்து சில உழவர்கள் திரும்பி வந்துக்கொண் டிருந் தார்கள். பிஞகி அவர்களிடம் புஷ்பாவைப்பற்றி விசாரித்தான். வயல்களின் நடுவே இருந்த குடிசைகளிலும் சென்று விசாரித்தான். அவனுடைய விசாரணே உழவர்கள் மனத்தில் சந்தேகத்தைத் தோற்றுவித்தது. அவர்கள் தங்களுக்குள் ஜாடை காட்டிக் கொண்டு மெதுவாகக் கிசுகிசுத்துக்கொண்டார்கள். ''யாரோ ஒற்றன் போலேயிருக்கு! நமக்கு ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லிடுவோம்!'' அவர்கள் தங்கள் தங்கள் வேலேகளேக் கவனிக் கப் போய்விட்டார்கள்.

பிஞகி தனக்குப் பின்னுல் அவர்கள் உதிர்த்துக்கொண் டிருந்த அபிப்பிராயங்களேக் கேட்டுக்கொண்டே நடந்தான். ''இவங்க உசந்த ஜாதிக்காரங்கன்னு சொல்லிக்கறுங்க, ஆனு உள்ளூற மோசமானவங்க! நம்மவீட்டுப் பெண்கள் ஓடிப் போகுமா? உசந்த ஜாதிக்காரங்களோட லட்சணம் இதுதான், பார்த்தியா!''

''அண்ணே, என் பொண்ணுகூடத்தான் ஓடிப்போனு. அங்கே நாதியத்துப் போய் மறுபடி என்கிட்டேயே வந்து அழ ஆரம்பிச்சா. நாங்க அவளே ஒரு வார்த்தை கூடச் சொல்லல்லே. பொழுது விடிஞ்சதும் அவளாப் போயி ஏந்திரத்துக்கிட்டே அரைக்க உட்கார்ந்தா. வெயில் வந்தப்பறம் அவகிட்டே களேக்கொட்டைக் கொடுத்துக் களே பிடுங்க அனுப்பினேன். இப்படியே கொஞ்ச காலமாச்சு. அவளோட நடத்தையைப் பத்தி இப்போ யாரும் கேட்கறதில்லே. அவளுக்குக் கலியாணம் ஆயி ரெண்டு குழந்தை கூட இருக்கு இப்போ.''

''இவங்கள்ளாம் கௌரவப்பட்ட ஆளுகள்! இனிமே இந்த ஓடிப் போன பொண்ணை யாரும் ஏறெடுத்துக்கூடப் பார்க்க மாட்டாங்க. அவளோட அப்பா அம்மாவைப் பகிஷ்காரம் பண்ணுவாங்க. அவளோட புருசன் இனிமே அவளைச் சேர்த்துக்க மாட்டான்.''

''பின்னே அந்தப் பொண்ணு ஏதாவது ஒரு கிணத்தைத் தேடிக் கிட்டுப் போக வேண்டியதுதான்!''

முன்றுவது போகத்துப் பருத்தியைப் பொறுக்கிக் கொண்டே இவ்வாறு பேசிக் கொண்டார்கள் குடியானவர்கள். பேச்சுச் சுவாரசியத்தில் தங்கள் குரல் உயர்ந்து விட்டதைக்கூட அவர்கள் கவனிக்கவில்லை.

அவர்களுடைய பேச்சு டமாரத்தின் மேல் விழும் அடிகளைப் போல் பிஞுகியின் உள்ளத்தைத் தாக்கின. 'அந்தப் பொண்ணை யாரும் ஏறெடுத்துக்கூடப் பார்க்க மாட்டாங்க. புருசன்கூட அவளைச் சேர்த்துக்க மாட்டான். இனிமே அவ குளம், கேணியைத் தேடிக்கிட்டுப் போக வேண்டியதுதான்!'

உயர்ந்த ஜாதிக்காரர்களுக்கு வேலை வெட்டியைப் பற்றிக் கவலை கிடையாது. அவர்களுக்குத் தங்கள் கௌரவத்தைப் பெட்டியில் பத்திரமாகப் பூட்டி வைத்துக் கொண்டு வாழ வேண்டும். ஆகையால் அவர்கள் வீட்டை விட்டு ஓடிப்போன புஷ்பாவை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவள் கிணறு குளம் எதையாவது தேடிக் கொண்டு போக வேண்டியதுதான். இந்த விஷயங்களைப் பிஞுகி ஒரு புத்தகத்திலும் இது வரைப் படித்ததில்லை.

புஷ்பா கிணற்றில் விழுந்து விடுவாள்! அப்படி ஓர் அசட்டுக் காரியத்தைச் செய்து விடுவாளோ? இந்தக் கற்பனை அவனை நடுங்கச் செய்தது. அவன் சாலையை விட்டு விட்டு அந்தப் பகுதியிலிருந்த கிணறு குளங்களிலும் புஷ்பாவைத் தேடிக் கொண்டு அலையத் தொடங்கினுன்.

* * *

வயல்களில் அலைந்து கொண்டிருந்த அவனுக்கு ஒரு நாள் பெரிய சாலையிலிருந்து பெருத்த அரவம் கேட்டது. அவன் சாலையை நோக்கிச் சென்றுன். முதலில் அவன் கண்ணில் பட்டவை காக்கி உடைகளும் மூன்று துப்பாக்கிகளுந்தான். பிறகு ஒரு வண்டி பார்வையில் விழுந்தது.

வண்டி அருகில் வந்தது.

பிஞ்கியின் தலையின் நரம்புகள் தெறித்தன. வண்டிக்குள் இருந்தது புஷ்பாவா, அல்லது அவளது சடலமா?

பிஞ்கியைப் பார்த்ததும் புஷ்பாவின் நெஞ்சு வெடித்தது. அவளுடைய வாயிலிருந்து ஒரு பெரிய ஓலம் வெளிப்பட்டது. கந்தலாகிப் போயிருந்த தன் புடைவைத் தலைப்பால் அவள் தன் வாயை அடைத்துக் கொண்டாள்.

பிஞ்கி வண்டியை நிறுத்தி அதனுடன் சென்று கொண்டிருந்த போலீஸ்காரனைக் கேட்டான். "எங்கே கொண்டு போறீங்க இவளை?"

"ராஜ்கோட்டுக்கு. இவ என்ன உங்க வீட்டுப் பொண்ணு? கன்னிப் பொண்ணை இந்த மாதிரி தனியா வெளியே விடலாமா? யாரோ கெடுத்துக் கர்ப்பமாக்கியிருக்கான் இவளை! இவ கிணத்திலே விழப் போனு, இவளைத் தடுத்துக் கூட்டிக்கிட்டுப் போறோம்."

"நீங்க எந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவங்க?"

"பிரவீண்கட்."

"இவளை விட்டுடுங்க, நான் கூட்டிக்கிட்டுப் போறேன்!"

"இப்படியே எப்படி விட முடியும்?"

"பின்னே எப்படி விடுவீங்க?"

"ராஜ்கோட் போலீஸ்கிட்டே கொண்டு போய் ஒப்படைக்கணும்."

பிஞ்கி மௌனமானுன். அவனுடைய உள்ளத்தில் ஒரு பெரும் போர் நிகழத் தொடங்கியது.

போலீஸ் நாயக் பீடி பற்ற வைத்துக் கொண்டே, "உனக்கு இந்தப் பெண்ணோடே என்ன சம்மந்தம்?" என்று கேட்டான்.

பிஞ்கி எதிர்கொள்ள வேண்டிய போருக்கு ஓர் அறைகூவலாக இருந்தது, போலீஸ்காரனின் இந்தக் கேள்வி. ஒரு புறம் புஷ்பா. கீரியால் கடித்துக் குதறப்பட்டு உடலெங்கும் ரத்தம் வழியும் பாம்பைப் போல் அவள் வண்டிக்குள் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள். இன்னொரு புறம் அவனுடைய பாட்டி, குருவான சேட், அவர்களுடைய சமூகம், போலீஸ், வழக்கு, அவமானம்...பிறகு என்றாவது ஒரு நாள் மாமி இந்தச் செய்தியைக் கேட்டால் அவளுடைய திரஸ்காரம்.

பிஞ்கி குழம்பித் தவித்தான்.

'இந்தப் புஷ்பா யார்? அவ எப்படிப்பட்டவ? அவ செஞ்ச தவறுக்குத் தானே தண்டனை அநுபவிக்கறு? நன்னு அநுபவிக்கட்டுமே!'

'இல்லையில்லே! அவ கஷ்டப்படக்கூடாது. என்னோட உசிர் அவ, என்னோட வாழ்க்கையின் ஒளி, என்னோட ஆசைகளின் லட்சியம்! அவளோட கண்கள் யாரைப் பார்க்கின்றன? என்ன நினைச்சுக் கிண்டிருக்கா அவ?'

பிஞகி தன் மார்பை விறைப்பாக வைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து போலீஸ்காரனிடம், "நான் இவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவன்! இவளை விட்டுடுங்க!" என்ருன்.

புஷ்பா திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

பிஞகியின் பேச்சை ஆமோதிப்பதுபோல் மரத்திலிருந்த பறவை ஒன்று கூவியது.

"அப்படியாஞ நீயும் எங்களோடே வா! ராஜ்கோட்டிலே ஏஜென்சி போலீஸ் இவளை உன்கிட்டே ஒப்படைச்சா அழைத்துப் போ!" என்று போலீஸ் நாயக் சொன்னுன்.

பிரயாணம் தொடர்ந்தது.

"இந்தப் பொண்ணு இந்த நிலையிலே :இருக்கறதுக்கு நீதாஞ காரணம்? உன்னோட ஆண்மைதாஞ?" என்று போலீஸ் நாயக் பிஞகியை ஏளனமாகக் கேட்டான்.

வண்டியைச் சுற்றிலும் வழிப்போக்கர்களின் கூட்டம் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டது. புஷ்பாவின் நிலை எல்லாருடைய வேடிக்கைக்கும் இளப்பத்துக்கும் உள்ளாயிற்று.

சில கோச தூரம் பிஞகி வண்டிக்குச் சற்றுத் தூரத்திலேயே நடந்து வந்து கொண்டிருந்தான். இப்போது அவன் வண்டியை நெருங்கி அதைப் பிடித்துக் கொண்டு நடக்கத் தொடங்கினுன்.

ராஜ்கோட் நகரத்தின் பங்களாக்கள் கண்ணுக்குத் தெரியத் தொடங்கின. புஷ்பாவின் புலம்பல் உரக்க ஒலித்தது. பிஞகி முதல் தடவையாக அவளுடன் பேசினுன்: "புஷ்பா, பயப்படாதே! என்னுடையவளாக ஆக உனக்கு இஷ்டந்தானே? அப்படீன்ஞ நாம சாகற வரையிலே ஒண்ணுவே இருப்போம். நம்மளை யாரும் பிரிக்க முடியாது. நடந்து போனதைப் பத்தி ஒண்ணும் நான் கேட்க மாட்டேன் உன்னை!"

புஷ்பா மௌனமாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"இப்போ நீ தைரியமாயிரு, புஷ்பா! ராஜ்கோட் வந்துடுத்து. நான் உன் கூடவே இருக்கேன்" என்று அவளுக்குத் தைரியம் சொன்னுன் பிஞகி.

பொழுதுபோக்கை விரும்பிய நகரவாசிகளுக்கு அன்று கொண்டாட்டந்தான். போலீஸ்காரர்களுடைய ரசமில்லாத, வறட்டு

வாழ்க்கையில் இத்தகைய அபூர்வ நிகழ்ச்சிகள் நேர்ந்தால் அவற்றை முழுமையாக அநுபவிக்கத் தவறுவதில்லை அவர்கள். அவர்கள் போலீஸ்காரர்களாக இல்லாமல் தேச பக்தர்களாக இருந்தால் இந்த ஆனந்தத்தை வேறு வகையில் பெற்றிருப்பார்கள். பெருந்தலைவர்கள் ஊர்வலமாக வரும்போது அவர்களுடைய மோட்டார்களின் புட்போர்டின்மேல் நின்று கொண்டு போகும் போது அவர்களுக்கு இத்தகைய ஆனந்தம் கிடைத்திருக்கும்.

ஏஜென்சி போலீஸ் ஸ்டேஷனில் பிஞகி அதிகாரிகளின் கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில்கள் அளித்தான். ''புஷ்பாவுக்கும் எனக்கும் உறவு இருந்தது. நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறோம். மனத்தளவில் எங்கள் கல்யாணம் நடந்து விட்டது'' என்று கூறினான்.

''எப்படி? சூரிய சந்திரன் சாட்சியாவா? நீ என்ன 'சதைவத சாவலிங்கா' வோட மறு அவதாரமா?'' என்று அவனைக் கிண்டி விட்டார் போலீஸ் அதிகாரி.

ஸ்டேஷனுக்குச் சற்றுத் தொலைவில் ஏதோ கூக்குரல் கேட்டது.

''நீ நாசமாப் போக! நாசமாப் போ! உன் வாயிலே கொள்ளி வைக்க!''

இந்தச் சாபங்களைப் பொழிந்து கொண்டு வந்தவள் புஷ்பாவின் தாய்தான்.

இதைத் தாங்க முடியாமல் தவித்தாள் புஷ்பா. ''பயப்படாதே, தைரியமாயிரு!'' என்று பிஞகி அவளுக்குத் தைரிய மூட்டினான்.

சற்று நேரத்தில் இன்னொரு கிழவியும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. அவள் விரும்பியதை யெல்லாம் அவளுடைய கண்களே சொல்லிக்கொண்டிருந்தன. அவளுடைய பொக்கை வாய் துடித்துக் கொண்டிருந்தது. அவளுடைய முகத்திலிருந்த சுருக்கங்கள் இன்னும் ஆழமாகி விட்டிருந்தன.

அவளை அடையாளம் கண்டுகொண்ட போலீஸ்காரர்கள் மரியாதையுடன் அவளை ஒரு பெஞ்சியில் உட்கார வைத்தார்கள்.

தன் பேரன் பிஞகி என்ன செய்கிறானென்று அவளுக்குப் புரியவில்லை.

''என்ன, பெண்ணே! நீ எங்கே போவே? அம்மா வீட்டுக்கா?'' என்று போலீஸ் அதிகாரி கேட்டார்.

''இல்லை யில்லே! அவள் என்னோட வரப்போறா!'' என்று சொல்லிக்கொண்டே பிஞகி புஷ்பாவின் கையைப் பற்றினான்.

''அப்போ இவ வயத்துலே வளர்ர குழந்தையும் உன்னோடது தானா?''

"பின்னே என்ன?"

"கவனிச்சுப் பிரசவம் பாரு! சாமியே அவதாரம் எடுக்கப் போறார்!"

"எல்லாம் உங்க அநுக்கிரகம்!" என்று பதில் சொல்லிவிட்டுப் பிறகி புஷ்பாவை அழைத்துக் கொண்டு சென்றான்.

சுரங்கப் பாதையில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரெயில்கள் ஓடிக் கொண்டிருப்பது போன்ற உணர்வைத் தன் கை நரம்புகளில் அநுபவித்தாள் புஷ்பா.

சௌராஷ்டிரத்தின் சரித்திரத்தில் இத்தகைய நிகழ்ச்சி இது வரை நடந்ததில்லை. எந்த இளைஞனும் இதுவரை இந்த மாதிரி துணிவை மேற்கொண்டதில்லை.

பிறகியும் புஷ்பாவும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் அவளுடைய தாயும் அண்ணனும் அவர்களை அசிங்கமாகத் திட்டிக் கொண்டே போனார்கள். தங்கள் ஜாதியின் காவலர்களாகச் சொல்லிக் கொண்ட சிலர் கலகம் செய்யும் நோக்கத்துடன் கூட்ட மாகக் கூடினார்கள். ஆனால் பிறகியின் கையிலிருந்த தடியைக் கண்டதும் அவனுடன் சண்டை போடப் பயந்துகொண்டு அவனைப் போக்கிரி, அயோக்கியன் என்று திட்டுவதோடு நிறுத்திக் கொண்டார்கள்.

பிறகி ஒரு கூண்டு வண்டியை வாடகைக்கு எடுத்துக் கொண்டு புஷ்பாவுடன் ராஜ்வாடாவுக்குப் பிரயாணமானான்.

வண்டி ஊருக்கு வெளியே வந்தபோது பிறகியின் பாட்டி ஓடி வந்து கொண்டிருப்பதை அவர்கள் கவனித்தார்கள். பிறகி வண்டியை நிறுத்தி அவளுடைய கால்களில் விழுந்தான். "நீயும் பாட்டியைக் கும்பிடு!" என்று புஷ்பாவிடம் சொன்னான்.

கிழவி ஒரு கணம் பின் வாங்கினாள். ஆனால் மறுகணமே தன்னைச் சமாளித்துக் கொண்டு புஷ்பாவின் நமஸ்காரத்தை ஏற்றுக் கொண்டு, அவளுடைய முதுகைத் தடவிக் கொடுத்தாள். வணங்கி எழுந்த புஷ்பாவை அவள் இறுகத் தழுவிக் கொண்டாள். பிறகு தன் புடைவைக்குள் மறைத்து எடுத்து வந்திருந்த வெல்லப் பொரியை எடுத்துக் கொடுத்து, "இதை நீங்க ரெண்டு பேரும் எடுத்துக்கங்க. வேறே என்ன பண்ண முடியும் என்னாலே? எனக்கு ஒண்ணும் தோணல்லே" என்று பிறகியிடம் சொன்னாள்.

"நீ ஒண்ணும் செய்ய வேண்டாம்! எனக்கு ஆசீர்வாதம் பண்ணு, அதுவே போதும், பாட்டி! நான் சீக்கிரம் வந்து உன்னையும் கூட்டிக்கிண்டு போறேன்."

சோகம் கப்பிய முகத்துடன் அவர்களுக்கு விடை கொடுத்தாள் கிழவி.

''பாட்டி, உனக்குப் பயமா இருக்கா இந்த ஜனங்கள் கிட்டே?'' என்று அப்போது பிஞுகி அவளைக் கேட்டான்.

''பயமா? எனக்கா? நான் இவங்களைப் பச்சையாவே கடிச்சுத் தின்னுடுவேனுக்கும். நீ என்னைப்பத்திக் கவலைப்படாதே!''

மழைக்காலத்தில் தண்ணீர் நிரம்பி வழியும் வாய்க்கால்கள் போல் கிழவியின் இரு கன்னங்களிலும் வெப்பமான கண்ணீர் வழிந்து ஓடியது.

பிஞுகி புஷ்பாவின் பக்கம் திரும்பி, ''புஷ்பா, நீ எங்கிட்டே வர்ரதுக்காகத்தான் வீட்டை விட்டுக் கிளம்பினியா?'' என்று கேட்டான்.

புஷ்பா தலையாட்டினுள்.

''ரொம்பப் பயந்து போயிருந்தியா நீ?''

புஷ்பா பயந்து கொண்டே வேறுபக்கம் திரும்பினுள். பிஞுகியின் மூன்ருவது கேள்வி, 'நீ எங்கே, யார்கிட்டே ஆம்பிட்டுக்கிண்டே? பிரவீண் கட்டிலே உனக்கு என்ன நேர்ந்தது?' என்பதாக இருக்கு மென்பதுதான் அவளுடைய பயம்.

ஆனல் பிஞுகி அந்தக் கேள்வியைக் கேட்கவில்லை. ''ரொம்பக் களைப்பா இருக்கு'' என்று சொல்லிவிட்டு அவன் படுத்துக் கொண்டான். தற்செயலாக அவனுடைய தலை புஷ்பாவின் மடிக்கருகில் இருந்தது. புஷ்பா அதைத் தூக்கித் தன் மடியின் மேல் வைத்துக் கொண்டாள்.

பிஞுகியை ஆழ்ந்த உறக்கம் ஆட்கொண்டது.

53

'என் மடியில் எப்படிக் கவலையில்லாமல் தூங்குகிருன் இவன்! இவனுக்கு யாரிடமும் பயமில்லை. களங்கப்பட்டு விட்ட என்னைத் தன் தலைமேல் வைத்துக் கொண்டிருக்கான். என்னேட உறவு காரணமா இவனை எல்லாரும் ஆதரிக்க மறுத்துட்டா இவன் என்ன பண்ணுவான்? என்னேட அண்ணன் இவனேட உசிரை எடுக்கக் கூடத் தயங்க மாட்டானே! போலீஸ்காரங்களும் சும்மா இருக்கமாட்டாங்களே! இவ்வளவு பெரிய சுமையைத் தாங்கிக்

கிட்டு எவ்வளவு அமைதியாத் தூங்கருன்?' இவ்வாறு புஷ்பாவின் சிந்தனை ஓடியது.

பிணுகியின் தலை அவளுடைய மடியிலிருந்து சற்றுச் சரிந்து விழுந் திருந்தது. அவள் அதை எடுத்து மறுபடி தன் மடிமேல் வைத்துக் கொண்டாள். அப்போது அவளுடைய இரு கைகளுக்குமிடையே அவனுடைய தலை ஒரு தேங்காய் போலத் தோற்றமளித்தது. அவனுடைய மூடிய கண்களின் ஓரங்களில் படிந்திருந்த தூசியை அவள் தன் புடைவைத் தலைப்பால் ஒத்தித் துடைத்து விட்டாள். புதிதாக மணமான பெண் தன் அறையை அக்கறையோடு சிங்காரிப்பதைப் போல் அவள் அவனுடைய காதுகளைத் துடைத்துச் சுத்தம் செய்தாள். மாட்டு வண்டியின் ஆட்டமும் குலுக்கலும் அவர்களை ஒருவரோடொருவர் நெருங்கிவரச் செய்தது.

வண்டிக்காரன் சற்று அசடு. அதனால் அவன் நாணயமான வனுகவும் ஒழுங்காகவும் இருந்தான். தன் வண்டியில் பிரயாணம் செய்பவர்களின் சேஷ்டைகளை அவன் பார்ப்பது வழக்கமில்லை. ஆனால் இந்தக் கட்டுப்பாடு அவனுக்கு இப்போது மிகவும் சிரமத் தைத் தந்தது. ராஜ்கோட் நகரத்தையே சலசலக்கச் செய்து விட்ட இந்த இளந்தம்பதியரின் முகங்களைக் கூட அவன் சரியாகப் பார்க்கவில்லை. அவர்கள் இப்போது அவனுக்கு வெகு அருகில் இருந்தும் தன் சொந்தக் கட்டுப்பாடு காரணமாக அவனுல் அவர் களைக் கவனிக்க முடியவில்லை. இந்த இயலாமையால் ஏற்பட்ட கோபத்தில் அவன் மாடுகளின் வால்களைப் பிடித்துத் திருகினுன்.

கடைசிவரையில் அவனுல் தன் ஆவலை அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. தன் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்ள அவனுக்கு ஒரு காரணமும் கிடைத்துவிட்டது. ''ஜாக்கிரதை, தம்பி! ஒரு பெரிய பள்ளம் வருது!'' என்று சொல்லிக் கொண்டே அவன் திரும்பிப் பார்த்தான். அப்போது புஷ்பாவின் உதடுகள் பிணுகியின் கன்னத்தை நெருங்கும் நிலையிலிருந்தன. வண்டிக் காரன் திரும்பிப் பார்த்தபோது அவை சட்டென்று விலகிக் கொண்டன. ஆற்றுக்குப் போய்த் தண்ணீரில் வாய் வைக்க இருந்த மான், வேட்டைக்காரன் அருகில் இருக்கிருன் என்ற சந்தேகம் ஏற்பட்டதும் தண்ணீர் குடிக்காமல் ஓடிவிடுவதுபோல அவள் நகர்ந்தாள்.

அடுத்த நிமிஷம் வண்டிச் சக்கரங்கள் பள்ளத்தில் அமிழ்ந்தன. அப்போது ஏற்பட்ட குலுக்கலில் புஷ்பாவின் இதழ்கள் பிணுகி யின் கன்னத்தில் பதிந்தன.

இரண்டு மூன்று மோட்டார்கள் புழுதிப் படலத்தைக் கிளப்பிக் கொண்டு வண்டியைக் கடந்து சென்றன. அப்போதும் பிஞகியின் உறக்கம் கலையவில்லை.

*　　　*　　　*

அஸ்தமிக்கும் சூரியனின் காவிநிறச் சால்வை ஹாலாரி நதியின் தண்ணீரில் நனைந்தபோது வண்டி ராஜ்வாடாவுக்கு மூன்று கோச தூரத்தில் வந்துகொண் டிருந்தது.

அதே சமயத்தில் அந்த மோட்டார்கள் ராஜ்வாடாவில் சேட்டின் வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்த எருமைகளை மிரளச் செய்து கொண்டிருந்தன. 'பூம், பூம்' என்று குரைக்கும் வண்டிகள் கிராமவாசிகளுக்கு வியப்பைத் தரும் பொருள்களாக இருந்தன. அவர்கள் கூட்டங் கூடி இந்த அதிசயத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

சேட் விருந்தாளிகளை அழைத்துக் கொண்டு போய் ஓர் ஆல மரத்து நிழலில் உட்கார்ந்தான்.

விருந்தாளிகளில் ஒருவன் சொன்னான்: "நீங்க இந்தப் பிரஷ்டர் களுக்கு இடங் கொடுக்க மாட்டீங்க என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு." இன்னும் என்ன என்னவோ சொல்லிக் கொண்டே போனான் அவன்.

சேட் அவன் பேசுவதையெல்லாம் ஆமோதிப்பது போலப் புன்முறுவலுடன் கேட்டுக்கொண் டிருந்தான். "அந்தப் பொண் ணுக்கு என்ன வயசு இருக்கும்?" என்று கடைசியில் அவன் கேட்டான்.

"வயசு பதினெட்டு ஆச்சு, ஆனா அவ ஒரு மிருகந்தான்!"

"வயசு பதினெட்டு ஆச்சா? அப்படியானா அவ இஷ்டப்படி நடந்துக்கட்டுமே!" சேற்றின் மேல் எறிந்த கல்போல் சேட்டிட மிருந்து வார்த்தைகள் வெளிவந்தன.

விருந்தாளிகள் இதைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். "நீங்களா இப்படிச் சொல்றீங்க, சேட்ஜி? அப்படியானா பிரளமே வந்துடுத் துன்னு அர்த்தம்!" என்றனர்.

"பிரளயமெல்லாம் அவ்வளவு சுலபமா வந்துடாது, அண்ணன் மாரே! நீங்களும் காலத்தைப் புரிஞ்சுக்கக் கத்துக்கங்க. இளைஞர் களை இந்த மாதிரி துன்புறுத்தறது சரியில்லே. அவங்க ரெண்டு பேருக்கும் ஒரு புகலிடம் கிடைச்சிருக்கிறது நல்லதுதானே?" என்று சேட் அமைதியாகப் பேசினான்.

''அப்படியானு அவங்களுக்கு இங்கே இடம் கொடுக்கப் போறீங்களா?''

''நான்தான் கொள்ளைக்காரங்க, கொலைகாரங்களுக்குக் கூட இடம் கொடுத்து உதவறவனுச்சே!''

''இவங்க செஞ்ச குத்தம் கொலை, கொள்ளையைவிட மோசமான தாச்சே!''

''இதோ பாருங்க! நான் செடி, மரங்களோட உலகத்திலே வசிச்கிறவன். நான் என் கையாலே ஒரு செடியை இன்னொரு செடியோடே, ஒரு ஜாதியை இன்னொரு ஜாதியோடே, 'ஒட்டு'ச் சேர்த்துப் புதுப் புது ரகங்கள், புதுப் புது நிறங்கள், புதுப் புது மணங்களை உண்டாக்கியிருக்கேன். இந்த மாதிரி பரிசோதனை களுக்கு நான் பயப்படறதில்லே. என்னுடை உலகமே தனி. நான் மனுஷனுடை உலகத்தைச் சேர்ந்தவன் இல்லே. சொல்லப் போனு நானும் ஒரு செடி மாதிரி. செடிமாதிரி இங்கே வர்ரவங்களோடே உறவுக்காரன். ஆகையாலே நீங்க இந்த விஷயத்திலே தலையிட்டுக் குழப்பாமே இருந்தால் எல்லாருக்கும் நல்லது.''

வக்கீல் போலத் தோற்றமளித்த ஒருவர் கடுமையான குரலில், ''இங்கே பாருங்க சேட், நான் சொல்றதைக் கேளுங்க!'' என்றார்.

''சொல்லுங்க, கேக்கறேன்.''

''ராஜ்கோட்டிலே பாதிக்கு நீங்கதான் காய்கறி சப்ளை செய்ய றீங்க, இல்லையா?''

''ஆமா.''

''அதுகளை அவங்க வாங்கிக்கல்லேன்னு நீங்க களஞ்சியத்திலே போட்டுச் சேமிச்சு வச்சுக்க முடியாது, தெரியுமா?''

''அப்படியா? அந்த நிலைமை ஏற்பட்டால் காய்கறிகளை மாடு களுக்குப் போடறேன். நீங்க ராஜ்கோட்டிலே போய்ச் சொல் லிடுங்க, அவங்க என் மேலே இரக்கம் காட்ட வேண்டிய தில்லேன்னு! என் காய்கறிகளைப் பகிஷ்காரம் செஞ்சுக்கங்க, எனக்கு அக்கறை இல்லே!'' என்று கூறிய சேட் அவர்களிடமிருந்து முகத்தைத் திருப்பிக்கொண்டு, தன் வயல்களில் உயர்ந்து வளர்ந் திருந்த கரும்புகளைப் பார்க்கத் தொடங்கினுன்.

''உம்!'' ஒரு நகரவாசி பெருமூச்சு விட்டான். ''உங்க கிட்டே வேறே என்ன மாதிரி நடத்தையை எதிர்பார்க்க முடியும்?''

இன்னொருவன் இன்னும் சற்று விளக்கமாக, ''எப்போ பார்த்தாலும் மண்ணுங்கட்டிகளோடேயே காலங் கடத்தறீங்க இல்லையா? ஆகையாலே உங்க மூளையும் மண்ணுங்கட்டி மாதிரி யாயிடுச்சு'' என்றுன்.

''நீங்க ஒரு விஷயத்தை மறந்துட்டீங்க'' என்று சேட் சொன்ஞன். ''ராஜ்கோட்டின் குழந்தைகள் என்னிக்குமே காலத்தோட போக்கை அறிஞ்சு நடக்கறதிலே கெட்டிக்காரங்க. சௌராஷ்டிரம் முழுதும் ராஜ்கோட் பெண்களை இளப்பம் பண்ணித்து. ஆஞ அவங்க அதைப் பொறுத்துக்கிட்டு முதல் முதல்லே பள்ளிக்கூடம் போக ஆரம்பிச்சாங்க. ராஜ்கோட்டைச் சேர்ந்த மோகன் தாஸ் கடல் பிரயாணம் செஞ்சதுக்காக அவனைத் திட்டின சௌராஷ்டிரம் அவன் மகாத்மாவாகித் திரும்பி வந்தப்பறம் அவனுேட வீட்டுத் தூசியைக்கூடத் தலையிலே வச்சுக்கிட்டுக் கூத்தாடுது! நான் ஒரு காலத்திலேயும் ராஜ்கோட்டுக்கு அவமானம் ஏற்பட காரணமாயிருக்க மாட்டேன். நீங்க பெரிய மீசை வச்சுக்கிட்டுத் திவான் வேலையெல்லாம் பார்க்கறீங்க. கோர்ட் சுவரெல்லாம் அதிர்ந்து போய் விடும்படியாக் கர்ஜனை பண்றீங்க. வெளியே வந்து உங்க ஆண்மையைக் காண்பியுங்க. உங்களிலே யாராவது பிரவீண்கட்டுக்குப் போகத் தயாரா? அவன் கையிலே என்னுேட ரெட்டைக்குழல் துப்பாக்கியைக் கொடுக்கறேன். ஒரு கன்னிப் பெண்ணைக் கற்பழிச்ச அந்தப் போக்கிரி, பிரவீண்கட் யுவராஜாவோட வாயிலே ஒரு பிடி மண்ணை அள்ளிப் போட்டுட்டு வர்ர தைரியம் உங்களிலே யாருக்காவது இருக்கா? அல்லது அப்படிக் கற்பழிக்கப்பட்ட அந்த அப்பாவிப் பெண்ணைத் தன் வீட்டுக்கு மருமகளா ஏத்துக்கற தைரியமாவது இருக்கா? யாருமே அபயம் கொடுக்கத் துணியாத அந்தப் பொண்ணை ஆதரிக்க ஓர் இளைஞன் தைரியமா முன் வந்திருக்கான்! அப்படிப்பட்டவனுக்கு இடங் கொடுக்கக் கூடாதுன்னு சொல்ல வந்திருக்கீங்களே, நீங்களா மனுஷங்க? நுனியிலே ஓர் எலுமிச்சம்பழத்தை நிறுத்தி வைக்கற அளவுக்குத் தடித்தடியா மீசை வளர்த்துக்கிட்டிருக்கீங்களே, தைரியமிருந்தா பிரவீண்கட்டுக்குப் போங்க! இந்தத் துப்பாக்கியை எடுத்துக்கிட்டுப் போங்க! அதிலே என் பேரு செதுக்கியிருக்கு. அந்தப் போக்கிரிக்கு உரிய தண்டனை கொடுங்க. நான் கோர்ட்டிலே வந்து நெஞ்சை நிமிர்த்திச் சாட்சியம் சொல்றேன், 'யுவராஜாவைச் சுட்ட ராஜ்கோட் வீரனுக்கு நான் துப்பாக்கி கொடுத்தேன்'னு! 'எனது துப்பாக்கியிலே அந்தப் போக்கிரியோட ரத்தம் படிஞ்சதிலே நான் கர்வப்படறேன்'னு சொல்றேன். அப்படிப்பட்ட ஆண்மையுள்ளவன் யாராவது இருக்காஞ இங்கே?''

சேட் துப்பாக்கியை எடுத்து முன்னே நீட்டிஞன். யாரும் அதை வாங்கிக் கொள்ள முன்வரவில்லை ஒருவருக்கும் சேட்டின் கண்களைச் சந்திக்கத் துணிவு இல்லை.

சேட்டின் ஊழியர்கள் சற்றுத் தூரத்தில் குழுமி நின்றுகொண்டு இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் எஜமான் இவ்வளவு உணர்ச்சி வசப்பட்டுப் பார்த்ததே இல்லை.

சேட் சாதாரணமாக ஒரு மாதம் முழுதும் உபயோகப்படுத்தும் வார்த்தைகளை அந்த ஒரு தடவையிலேயே உபயோகப்படுத்தி விட்டான்.

அவன் மெதுவாகத் துப்பாக்கியைத் தன் மடி மேல் வைத்துக் கொண்டான். அவன் கண்கள் ஈரமாயின. அவற்றைத் துடைத்துக் கொண்டே அவன் தாழ்ந்த குரலில் சொன்னான். ''எனக்கு எல்லாம் தெரியும். தெரிஞ்சும் இதுக்காகக் கவலைப் படறேனே, நான் முட்டாள்தான்! நான் என்னோட ஆயுதங் களுக்கு அவமானமாயிருக்கேன். என்னோட முன்னோர்கள், அவர்களுக்குச் செய்யப்பட்ட தீங்குகளுக்குப் பழி வாங்கச் சொல்றாங்க என்னை. ஆனா நான் இந்த என் குழந்தைகளோட பாசத்துக்குக் கட்டுப்பட்டு ஒண்ணும் பண்ணாமே உட்கார்ந்திருக் கேன். நான் பிறத்தியார் கிட்டேயிருந்து, என்னோட சகோதரிகள், ஏழை விதவைகள், கிழவிகள் இவங்க கிட்டேயிருந்து பணம் வாங்கி இந்த மண்ணிலே போட்டிருக்கேன். அவங்க என் மேலே வச்ச நம்பிக்கையைக் காப்பாத்தி, அங்கே கொடுத்த கடனைப் பாலாலே, காய்கறிகளாலே தீர்த்தாகணும்! அது வரையிலே இந்தக் கரும்பை நறுக்கித் தின்னக்கூட எனக்கு மனசாகல்லே. என்னோட கண்ணியத்தைக் காப்பாத்திக்கறதுக்காக, என்னை நம்பினவங்களோட கைதியாயிருக்கேன் நான்! இப்போ நான் ஒரு கையாலாகாதவன், சுதந்தர மனுஷன் இல்லே! ஏன் கையாலாகாதவன்னு கேட்டா, நான் இந்த ரெண்டு குழந்தை களுக்கும் ஒண்ணும் அதிகமாகச் செய்ய முடியலேன்னு தான். ஆனா இந்தப் பூமி என் ஒருத்தனுக்கு மட்டுமா அம்மா? அது அவங்களுக்கும் நிழல் கொடுத்து நிச்சயம் காப்பாத்தும்.''

''சேட்ஜீ! நீங்க என்ன என்னவோ பேசறீங்க. சரி, போகட்டும், நாங்க போயிட்டு வரோம்'' என்று சொல்லிக் கொண்டு விருந்தாளிகள் எழுந்தார்கள்.

வெளியே அவர்கள் ஏதோ சொல்லிக் கொள்வது சேட் காதில் விழுந்தது. அவன் வெளியே வந்து அவர்களுக்கு விடையளிக்கும் போது சொன்னான்: ''இது சம்பந்தமா உங்களுக்கு ராவல்ஜியைச் சந்திக்கற எண்ணம் இருந்தா, இதுதான் நவல்கா போற வழி! இங்கே இருந்து இருபது கோச தூரம். கொஞ்சம் தொலைவுதான்

பாதையும் நேரா இருக்காது. வேணும்னு என்னோட சௌக்கீதாரைத் துணைக்கு அனுப்பறேன். இல்லே, ராத்திரி இங்கேயே தங்கி விட்டு நாளைக் காலையிலே போக விரும்பினுல் ராத்திரிச் சாப்பாட்டுக்கு உடனே ஏற்பாடு பண்றேன்: படுக்கப் படுக்கையும் தரேன்.''

''இல்லே, இல்லே! நாங்க ராஜ்கோட்டுக்கே திரும்பிப் போயிடறும்.''

''நீங்க என்கிட்டே இரக்கமோ, தாட்சண்யமோ காட்ட வேண்டிய அவசியம் இல்லே. ராவல்ஜி என்னை அவரோட ராஜ்யத்தை விட்டு விரட்டலாம். ஆனு என்னை நசுக்கி விட முடியாது!''

இந்த வார்த்தைகள் அவர்களைச் சுட்டுப் பொசுக்கின. சேட் மேலும் பேச இடம் அளிக்காமல் அவர்கள் உடனேயே திரும்பி விட்டார்கள்.

மோட்டார்கள் பிணுகியின் வண்டியைக் கடந்தன.

''அவங்க ரெண்டு பேரும் வராங்க!''

''அவங்களோட எலும்பை முறிச்சுப் போட்டா என்ன?''

''கொஞ்சம் கல் எடுத்துக்கிட்டு வந்திருந்தா மோட்டாரிலேருந்தே கல்லெறிஞ்சு அவங்க மண்டையை உடைச்சிருக்கலாம்.''

''போதும், போதும்! நிறுத்திக்கங்க!'' உள்ளேயிருந்து ஒரு கிழவரின் குரல் கேட்டது.

''என்ன விஷயம், பெரியப்பா?''

''நாம எல்லாரும் கோழைகள். சேட் சொன்னது நிசந்தான்! நாம கோழைகள்! இந்தப் பையன்தான் உண்மையிலேயே ஆண் பிள்ளை! நாம பொம்பளைகள் மாதிரி முணுமுணுக்கறதை விட்டுடணும்.'' என்றுர் பெரியவர்.

இதன் பிறகு யாரும் எதுவும் பேசவில்லை.

54

''நான் தூங்கிக்கிண்டிருந்தபோது இந்த மோட்டாரெல்லாம் போச்சா?'' என்று பிணுகி புஷ்பாவைக் கேட்டான்.

புஷ்பா மௌனமாகத் தலையசைத்தாள்.

மோட்டார்களில் சென்றவர்கள் ராஜ்வாடாவுக்குப் போன காரணம் பிணுகிக்குப் புரிந்தது. அவன் சற்று நேரம் பேசாமல்

இருந்தான். பிறகு புஷ்பாவைக் கேட்டான், "அங்கே நமக்கு ஆதரவு கிடைக்கல்லேன்னு...?"

புஷ்பாவிடமிருந்து பதிலாகக் கிடைத்தது ஒரு புன்முறுவல் தான்.

"அப்படீன்னு எங்கே போறது?"

மறுபடியும் முறுவல்தான் புஷ்பாவிடமிருந்து வந்தது.

"ஏன் பதில் சொல்லமாட்டேங்கறே? சும்மா சிரிக்கிறியே!"

"என்னை ஏன் கேக்கறே? எங்கே போறதுங்கற கவலை எனக்குக் கிடையாது."

"அப்படீன்னு?"

"நான் உங்கிட்டே வந்துட்டேன். இனிமேல் எனக்கு எங்கே போகணும்? நீயும் இதைப் பத்தி இப்பவே ஏன் கவலைப்படறே?"

"இப்பவேயா? கிராமம் இதோ வந்துடுத்து. ராஜ்கோட்டிலே ருந்து போனவங்க எல்லாத்தையும் முடிவு பண்ணிட்டுத்தானே திரும்பியிருப்பாங்க."

"நான் உன்னைச் சங்கடத்துக்கு உள்ளாக்கிட்டேன்." பச்சாத் தாபப்பட்டாள் புஷ்பா. "சரி, நான் இங்கேயே இருக்கேன். நீ உள்ளே போய் நிலைமையைப் பார்த்துவிட்டு வா! சேட் அனுமதிச்சா நானும் வரேன்"என்றாள்.

"அனுமதிக்கல்லேன்னு?"

பதில் அளிக்க முடியாமல் சூனிய வெளியை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள் புஷ்பா.

பிஞகி வெட்கினான். 'நான் ஏன் இந்த அப்பாவிப் பொண்ணைச் சங்கடப்படுத்தணும்? பாவம், அவ என்னை அண்டி வந்துட்டா. அவளைக் காப்பாத்த வேண்டியது என் கடமை. சேட் என்னைக் கை விட்டுட்டாக்கூட எனக்கும் அவளுக்கும் உள்ள உறவு அறுந்து போகாது' என்று எண்ணினான்.

"புஷ்பா, உன்னாலே குடியானவனோட வாழ்க்கையை வாழ முடியுமா?"

"குடியானவனோட வாழ்க்கை என்னுடைய இப்போதைய வாழ்க்கையைவிட மோசமாகவோ கஷ்டமாகவோ இருக்க முடியாது."

"கொஞ்ச காலம் கழிச்சு அந்த வாழ்க்கை உனக்குப் பிடிக்காமே போச்சுன்னு?"

"இவ்வளவு பெரிய ஆபத்தை நீயாவே விலைக்கு வாங்கிக்கிண் டிருக்கே! 'பின்னாலே என்ன ஆகும், என்ன ஆகும்'னு இப்பவே ஏன் வீணாக் கற்பனை பண்ணிக்கிண்டு கவலைப்படணும்?"

''நீ எவ்வளவு உறுதியா இருக்கே, புஷ்பா? எனக்குக் கூடன்னு தைரியம் சொல்றே!''

''அப்போ வீணுக் கவலைப்படாதே!''

இருவரும் கருவேலமரங்களின் நீண்ட கிளைகளை விலக்கிக் கொண்டு நடந்தார்கள். கீழே வளைந்து வந்திருந்த கிளைகள் அவர்களுடைய கன்னங்களைக் குத்தின. சற்றுத் தூரத்தில் ஹாலாரி நதி ஓடிக்கொண்டிருந்தது.

கையில் துப்பாக்கியுடன் சேட் எதிரில் வருவதை அவர்கள் கண்டார்கள்.

பிணுகி தலையைக் குனிந்து கொண்டு நின்ருன்.

''மோட்டார்க்காரங்க உங்களுக்குத் தொந்தரவு செய்யலியே?'' என்று கேட்டுக்கொண்டே சேட் பிணுகியின் கழுத்தில் குத்தியிருந்த ஒரு கருவேல முள்ளை எடுத்து எறிந்தான்.

பிணுகி தலையை ஆட்டினுன்.

''அது தான் கவலையாயிருந்தது எனக்கு. சரி, வா!'' என்று சேட் அவர்களைக் கூட்டிக்கொண்டு நடந்தான்.

ஆகாயத்தின் நெற்றியில் குங்குமத் திலகம் போலத் திருதீயைச் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். ஆற்றின் மறுபுறத்தில் நீண்ட கொம்புகளுடைய ஒரு காலியார் மான் நிறையப் பெண் மான்களைக் கூட்டிக் கொண்டு, கழுத்தைச் சாய்த்தவாறு போய்க் கொண்டிருந்தது. சிறையிலிருந்து தப்பி ஓடிவந்த கைதிகளைத்துப் போய் விழுவதைப் போல் இருளும் பூமியின் மடியில் அடைக்கலம் புகுந்தது.

55

சேட் தன் சமையற்காரனைக் கூப்பிட்டுச் சொன்னுன். ''டேடா மகாராஜ்? முகூர்த்தம் ஒண்ணும் பார்க்க வேண்டாம். நான் இப்பவே கன்யாதானம் பண்ணப்போறேன். நாளைக் காலம் பற சர்க்காரோ அல்லது வேறே யாராவதோ தகராறு பண்றதுக்கு முன்னுலே நான் காரியத்தை முடிச்சுட ஆசைப்படறேன். உனக்குத் தைரியம் இருக்கா?'' என்று கேட்டான்.

''அதுக்கென்ன? செஞ்சுட்டாப் போச்சு!'' என்ருன் சமையற்காரக் கிழவன், தன் பொக்கை வாயில் எச்சிலைத் தேக்கிக் கொண்டு.

''உனக்கும் ஜெயில் தண்டனை கிடைக்கலாம்.''

''உங்க கூடத்தானே?''

''ஆமா, ஆமா! என்னைத்தான் முதல்லே பிடிப்பாங்க!''

''அப்போ எனக்குக் கவலையில்லே. நான் உங்களுக்கு ஜெயில்லே எல்லா வசதியும் பண்ணித்தரேன்.''

''சரி சரி! இப்போ எனக்குப் புரியறது, நீ ஏன் பயப் படல்லேன்னு!''

டீடா மகாராஜ் ஏழு வருடம் சிறைத் தண்டனை அநுபவித்தவன். அவன் தன் கையாலேயே கல்யாண மண்டபத்துக்கு அலங்காரம் செய்தான். ஷெஹ்னாய் - கொட்டுமேள வாத்திய இசையுடன் விமரிசையாகக் கல்யாணம் நடைபெற்றது.

சேட் கன்னிகாதானம் செய்துவிட்டுப் பிஞகியிடம் சொன்னான்: ''இதோ பார்? இவ இப்போ முதல் என் பொண்ணு! இவளுக்குக் கஷ்டம் கொடுக்கறவன் எவனும் உசிரோடே இருக்க முடியாது. புரிஞ்சுதா?''

பிஞகி தலையைக் குனிந்து கொண்டான். புஷ்பாவின் முகம் முகத்திரைக்குள் மறைந்திருந்தது. முகத்திரைக்குள்ளே ஏதோ சலனம் தெரிந்தது.

* * *

நாட்கள் கழிந்தன. குளிர்காலத்தின் தொடக்கத்தில் மரங் களின் இலைகள் காற்றில் அசைவதுபோல, புஷ்பாவின் வயிற்றில் ஐந்து மாதக் குழந்தை அசையத் தொடங்கியது. அதை வர வேற்கும் முறையில் பிஞகியின் கை புஷ்பாவின் வயிற்றைத் தடவிக் கொடுத்தது. புஷ்பாவின் கண்கள் கண்ணீரால் கழுவப் பட்டுக் காலை வெயிலில் பளபளத்தன.

தோட்டத்து வேலிகளிலும் தரையிலும் படர்ந்து விளையாடிக் கொண்டிருந்த பலவகைக் கொடிகளையும் செடிகளையும் பிஞகிக்கு அறிமுகப்படுத்தினான் சேட். ''இதோ பார், இதை அரைச்சுத் தடவினா, உடம்பிலே ஏற்படற வீக்கம் சொஸ்தமாயிடும். எலும்பு மூட்டு முறிஞ்சு போச்சுன்னா இந்த இலையைத் தண்ணியிலே கொதிக்க வச்சு, அந்தத் தண்ணியிலே குளிக்கணும்.''

தன் குரு தனக்கு அளிக்கும் வைத்தியப் பயிற்சி கர்ப்பிணியா யிருக்கும் புஷ்பாவை உத்தேசித்துத்தான் என்பது பிஞகிக்குப் புரிந்தது.

சேட் வருத்தத்துடன் சொல்லிக்கொண்டான். ''ஜயகிருஷ்ணன் எவ்வளவு பெரிய அறிவாளி! செடிகொடிகளைப்பற்றி எவ்வளவு

தெரியும் அவனுக்கு! இவ்வளவு பெரிய சௌராஷ்டிர நாடு அந்த அறிவாளியை ஆதரிக்க விரும்பல்லே! அவனை யாரு திரும்பிப் பெறமுடியும்? அவனுடைய அறிவுக்கு வாரிசு யாரு? செடிகொடிகளோட செய்தியை வேறே யாரு நமக்குக் கற்றுக் கொடுக்க முடியும்?''

சேட் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது அங்கு மூன்று விருந்தாளிகள் வந்திருப்பதைக் கண்டான். முரட்டுத் துணியாலான பைகள் அவர்களுடைய தோள்களிலிருந்து தொங்கிக் கொண்டிருந்தன.

அதிதிகளில் ஆஜானுபாகுவாக இருந்த ஒருவர் கஞ்சிரா ஒலிப்பது போல், ''நல்ல சமாசாரம்! ஒரு நல்ல பலி நிறைவேறி விட்டது. துஷ்டர்களுக்கு முடிவு காலம் நெருங்கிவிட்டது'' என்றார் மகிழ்ச்சியுடன்.

''என்ன விஷயம்?'' என்று சேட் கேட்டான்.

''ரொம்பச் சந்தோஷ சமாசாரம்! சுரேந்திர தேவ் தம் ராஜ்யத்தைத் துறந்துட்டார். அவர் சர்க்காருக்கு எத்தனை உணர்ச்சி நிறைந்த கடிதம் எழுதியிருக்கார், தெரியுமா? ஆகா! அவரோட வீரமே வீரம்!......சௌராஷ்டிர தேசத்தோட ராணா பிரதாப் அவர்!''

''அப்படியா?'' என்று அமைதியாகச் சொல்லிக் கொண்டே சேட் துப்பாக்கியைக் கீழே வைத்தான்.

''ஜ்வாலை எரிய ஆரம்பிச்சுடுத்து!'' என்று கூறி விருந்தாளிகள் ஆர்ப்பரித்தார்கள்.

சேட்டுக்கு அவர்களுடைய பேச்சில் அக்கறை ஏற்படவில்லை. அவன் தன் கண்களுக்குத் தெரியாத எதையோ பார்க்க முயற்சி செய்பவன்போல் கண்களைத் தேய்த்துக்கொண்டான்.

''நாங்க உங்ககிட்டே ஒரு பிரார்த்தனை பண்ண வந்திருக்கோம். நீங்க இந்தப் பந்தத்தையெல்லாம் உதறிப்பிட்டு எப்போ வரப் போறீங்க? உங்ககிட்டே இருந்து அனுகூலமான பதில் கிடைக்கற வரைக்கும் நாங்க அன்னத்தையும் ஜலத்தையும் தொடப் போறதில்லே'' என்று அவர்கள் சொன்னார்கள்.

சேட் பதில் சொல்லவில்லை.

அவர்கள் தங்கள் பைகளிலிருந்த செய்திப் பத்திரிகைகளை எடுத்துச் சேட்டிடம் கொடுத்தார்கள். ''இதைப் படிங்க! என்னென்ன கொடுமைகள் நடக்கறது பாருங்க! விக்ரம்பூர் ராணி தேவுபாவை அவமானப்படுத்தி விரட்டிட்டாங்க! அவங்க அழுதுக்கிட்டு, நெஞ்சிலே அடிச்சுக்கிட்டு ஊரைவிட்டுப் போனாங்க! இதைக் கேட்டும் உங்களுக்கு ஆவேசம் வரவில்லையா?''

விருந்தாளிகளின் சொற்பெருக்குத் தொடர்ந்தது. ஆனால் சேட்டின் கவனமோ செய்திப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்த வேறு சில செய்திகளிலேயே பதிந்திருந்தது.

பிரவீண்கட் ராஜாவுக்கு 'ஸர்' பட்டம் கிடைத்திருக்கிறது.

சேட் அந்தச் செய்தியைப் பிஞகிக்குக் காட்டினன். வெள்ளைக் குல்லாய்களும், கதர் உடைகளும் அணிந்திருந்த விருந்தாளிகள் சாப்பாட்டு விஷயத்தில் மிகவும் பிகுச் செய்து கொண்டார்கள். நிலக்கடலை, பேரீச்சம்பழம், முந்திரிப்பருப்பு இவற்றைத்தான் அவர்கள் சாப்பிட்டார்கள்.

ஆனால் அவர்கள் வந்த காரியம் நிறைவேறவில்லை. அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்ப நேர்ந்தது.

''நான் விதவைகளையெல்லாம் ஒண்ணு சேர்த்து ஆசிரமம் வச்சு நடத்தத் தயார் இல்லை'' என்று சேட் சொல்லிவிட்டது அவர்களுக்குக் கோபமூட்டி விட்டது.

*　　　*　　　*

பயங்கர இரவு, வானத்தின் மார்பில் பாய்ந்த வாள்களைப்போல் நட்சத்திரங்கள் பிரகாசித்துக்கொண் டிருந்தன.

பிஞகி அணைக்கட்டின் மேல் தனியே உட்கார்ந்திருந்தான். அவனுக்கு மன அமைதியில்லை.

''என்ன விஷயம்?'' என்று அப்போது அங்கு வந்த சேட் அவனுடைய முதுகைத் தடவிக் கொடுத்தவாறு கேட்டான்.

சேட்டைத் திரும்பிப் பார்த்த பிஞகியின் முகத்தில் வேதனை தெரிந்தது.

''புஷ்பா எப்படி இருக்கா?'' என்று சேட் கேட்டான்.

''அவளுக்கு ரொம்ப வலியா இருக்கு.''

''இங்கே ஏன் உட்கார்ந்திருக்கே? வீட்டுக்கு வா!''

''அவ பிழைக்காட்டா?''

''என்ன?''

''நான் என்ன பண்ணுவேன், தெரியுமா?''

''என்ன பண்ணுவே, சொல்லு!''

''பிரவீண் கட்டுக்குப் போய் அந்தப் பாவியைப் பழி வாங்குவேன்!''

''அந்த நிலை ஏற்பட்டால் நான் உன்னைத் தடுக்க மாட்டேன். ஆனா, அந்த நிலை ஏற்படக்கூடாதுங்கறதுதான் என்னோட ஆசை.

ஆகையாலே நான் உன் மனைவியைக் காப்பாத்தப் போறேன். எழுந்திரு, வா!''

பிணுகியை முன்னுல் போகச் செய்து பின்னுல் நடந்தான் சேட்.

நிலவு பரவியிருந்த வழியில் சேட்டின் பிரும்மாண்டமான நிழல் பிணுகியின்மேல் படிந்தது. ஓடும் ஆற்று நீரில் நிலவு ஜலதரங்கம் இசைத்துக் கொண்டிருந்தது.

சேட் அணைக்கட்டின்மேல் சற்று நின்று பிணுகியைக் கேட்டான்: ''சுரேந்திர தேவ்ஜீ உன்னை என்கிட்டே அடமானமா வச்சிருக்கார்; தெரியுமா உனக்கு? அவர் இப்போ இங்கே இல்லே!''

''என்னைச் சேர்ந்தவங்களும் ரொம்பப் பேர் போயிட்டாங்க'' என்று பிணுகி சொன்னுன்.

சேட் பிணுகியை உற்றுப் பார்த்தவாறு, ''அவர் திரும்பி வர்ற வரையிலே நாம அவருக்காகக் காத்திருக்கணும். காத்திருக்கக் கத்துக்கோ, பிணுகி! அதுதான் நான் கத்துக்கிட்ட படிப்பினை!'' என்ருன்

இருவரும் நடந்தார்கள். அவர்களுடைய காலடி அரவம் அணைக் கட்டின் ஆழத்தில் அமுங்கிப் போயிற்று.

நிறைந்தது

Scanned by Muthu_Vijayan



'சோரட், உனது பெருகும் வெள்ளம்' வெறும் நாவல் மட்டும் அல்ல; சமூக வாழ்க்கையின் மலர்ச்சி, தேசிய உணர்வு, பிரபுத்துவ ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு மக்களுரிமையை நோக்கி அடி எடுத்து வைக்கும் முன்னேற்றம் ஆகியவற்றைச் சித்திரிக்கும் சரித்திரம்-சௌராஷ்டிரத்து மக்களின் சரித்திரம். தாமே அறிந்து அநுபவித்த சமூகத்தின் சுக துக்கங்களை ஆசிரியர் பிணகியின்மூலமாக வெளியிடுகிறார். இந்த நாவலில் நாம், கவி, கதாசிரியன், விமரிசகன், வீரத்தையும் காதலையும் பாடுபவன், எல்லாவற்றுக்கும் மேலாகத் தேச சேவகன், தத்துவ ஞானி, சரித்திர ஆசிரியன் என மலர்ச்சி பெற்ற மேகாணீயின் வளர்ச்சியின் சாயலைக் காண்கிறோம்.

ரூ. 13-00

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா